"திரு.வி.க. தமிழைக் கடினத் தன்மையிலிருந்து விடுதலை செய்து, தமிழ் உரைநடையை மக்கள் உரைநடையாக மாற்றியவர். பேச்சுத் தமிழுக்கும், எழுத்துத் தமிழுக்கும் மறுமலர்ச்சியை தந்தவர். இவரின் உரைநடைப்பாங்கு 'தமிழர் எழுச்சியின் திறவுகோல்."

- பு.சி.கணேசன்

தமிழ்மண் பதிப்பகம்
2, சிங்காரவேலர் தெரு
தியாகராயர் நகர்
சென்னை - 600 017
தொ.பேசி: 24339030

13

திரு.வி.க. தமிழ்க்கொடை

# திரு.வி.க.

## தமிழ்க்கொடை

13



தமிழ்மண்

# திருக்குறள் விரிவுரை
## (பாயிரம்)

# திரு.வி.க. தமிழ்க்கொடை

## 13

*ஆசிரியர்*

**திருவாரூர்-வி. கலியாணசுந்தரனார்**

*தொகுப்பாசிரியர்*

**இரா. இளங்குமரனார்**

*பதிப்பாளர்*

**கோ. இளவழகன்**

தமிழ்மண் பதிப்பகம்

*நூற் குறிப்பு*

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **திரு.வி.க. தமிழ்க்கொடை - 13** |
| ஆசிரியர் | : | **திருவாரூர்-வி. கலியாணசுந்தரனார்** |
| தொகுப்பாசிரியர் | : | **இரா. இளங்குமரனார்** |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 2006 |
| தாள் | : | 18.6 கி வெள்ளைத் தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 22+290=312 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. 290/- |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | இ. இனியன் |
| அச்சிட்டோர் | : | வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>ஆயிரம் விளக்கு, சென்னை - 6. |
| வெளியீடு | : | **தமிழ்மண் பதிப்பகம்**<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர்நகர்,<br>சென்னை - 600 017.<br>தொ.பே. 2433 9030 |

# நுழைவுரை

*தமிழக வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு பல்வேறு நிலைகளில் சிறப்பிடம் பெறத்தக்க குறிப்புகளை உடையது. பன்னூறு ஆண்டுகளுக்குப் பின் மொழியுணர்ச்சியும், கலை யுணர்ச்சியும் வீறுகொண்டெழுந்த நூற்றாண்டு. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்நாட்டின் வரலாற்றை - பண்பாட்டை வளப்படுத்திய பெருமக்களுள்* ***தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனாரும்*** *ஒருவர். இவர் உரைநடையை வாளாக ஏந்தித் தமிழ்மண்ணில் இந்தியப் பெருநிலத்தின் விடுதலைக்கு உன்னதமான பங்களிப்பைச் செய்தவர்; வணங்கத் தக்கவர்.*

*நினைவு தெரிந்த நாள்முதல் பொதுவாழ்வில் ஈடுபாடுடை யவன் நான். உலகை இனம் காணத் தொடங்கிய இளமை தொட்டு இன்றுவரை தொடரும் என் தமிழ் மீட்புப் பணியும், தமிழர் நலம் நாடும் பணியும் என் குருதியில் இரண்டறக் கலந்தவை. நாட்டின் மொழி, இன மேன்மைக்கு விதைவிதைத்த தமிழ்ச் சான்றோர்களின் அருந்தமிழ்ச் செல்வங்களைத் தமிழருக்குக் கொண்டுசேர்க்க வேண்டும் எனும் தளராத் தமிழ் உணர்வோடு* ***தமிழ்மண் பதிப்பகத்தைத்*** *தொடங்கினேன்.*

***தமிழ்த்தென்றல் திரு.வி.க.*** *தமிழ் வாழ்வு வாழ்ந்தவர்.* ***54 நூல்களைப்*** *பன்முகப்பார்வையுடன் எழுதித் தமிழர்களுக்கு அருந்தமிழ்க் கருவூலமாக வைத்துச்சென்றவர். இவற்றைக் காலவரிசைப்படுத்தி, பொருள்வழியாகப் பிரித்து வெளியிட் டுள்ளோம். தமிழறிஞர் ஒருவர், தம் அரும்பெரும் முயற்சியால் பல்வேறு துறைகளில் எப்படிக் கால்பதித்து அருஞ்செயல் ஆற்ற முடிந்தது என்பதை உலகெங்கும் வாழும் தமிழர்கள் அறிந்து கொள்ள வேண்டும் எனும் பெருவிருப்பத்தால் இத்தொகுப்பு களை வெளியிட்டுள்ளோம்.*

*திரு.வி.க. வின் வாழ்க்கைச் சுவடுகளும், அறவாழ்க்கை நெறியும், குமுகாய நெறியும், இலக்கிய நெறியும் , சமய நெறியும், அரசியல் நெறியும், இதழியல் நெறியும், தொழிலாளர் நலனும், மகளிர் மேன்மையும் பொன்மணிகளாக இத் தொகுப்பு*

களுக்குப் பெருமை சேர்க்கின்றன. இவர்தம் உணர்வின் வலிமை யும், பொருளாதார விடுதலையும், தமிழ் மொழியின் வளமையும் இந் நூல்களில் மேலோங்கி நிற்கின்றன. இந்நூல்களைத் தமிழ் கற்கப் புகுவார்க்கும், தமிழ் உரைநடையைப் பயில விரும்பு வார்க்கும் ஊட்டம் நிறைந்த தமிழ் உணவாகத் தந்துள்ளோம்.

திரு.வி.கலியாணசுந்தரனார் இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் மூலவர்; தமிழ் உரைநடையின் தந்தை; தமிழ் நிலத்தில் தொழிற்சங்க இயக்கத்துக்கு முதன்முதலில் வித்தூன்றிய வித்தகர்; தமிழர்கள் விரும்பியதைக் கூறாது, வேண்டியதைக் கூறிய பேராசான்; தந்தை பெரியார்க்கு **வைக்கம் வீரர்** என்று பெயர் சூட்டி மகிழ்ந்த பெருமையர்; தமிழ்ச் சிந்தனை மரபிற்கு அவர் விட்டுச்சென்ற சிந்தனைகள் எண்ணி எண்ணிப் போற்றத் தக்கவை. இன்றும், என்றும் உயிர்ப்பும் உணர்வும் தரத்தக்கவை.

சமயத்தமிழை வளர்த்தவர்; தூய்மைக்கும், எளிமைக்கும், பொதுமைக்கும் உயிர் ஓவியமாக வாழ்ந்தவர்; அன்பையும், பண்பையும், ஒழுங்கையும் அணிகலனாய்க் கொண்டவர்; தன்மதிப்பு இயக்கத்துக்குத் தாயாக விளங்கியவர்; பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக இருந்தவர்; எல்லாரையும் கவர்ந்து இழுத்த காந்தமலையாகவும்; படிப்பால் உயர்ந்த இமயமலை யாகவும்; பண்பால் குளிர் தென்றலாகவும், தமிழகம் கண்ணாரக் கண்ட காந்தியாகவும், அவர் காலத்தில் வாழ்ந்த சான்றோர் களால் மதிக்கப்பெற்றவர். .

சாதிப்பித்தும், கட்சிப்பித்தும், மதப்பித்தும், தலைக்கு ஏறி, தமிழர்கள் தட்டுத் தடுமாறி நிற்கும் இக்காலத்தில் வாழ்நாள் முழுதும் தமிழர் உய்ய உழைத்த ஒரு தமிழ்ப் பெருமகனின் அறிவுச் செல்வங்களை வெளியிடுகிறோம். தமிழர்கள் எண்ணிப் பார்ப்பார்களாக. தமிழரின் வாழ்வை மேம்படுத்தும் அனைத்துத் துறைகளிலும் தமிழ் இடம்பெற வேண்டும் எனும் தொலை நோக்குப் பார்வையோடு எம் பதிப்புச் சுவடுகளை ஆழமாகப் பதித்து வருகிறோம். தமிழர்கள் அறியாமையிலும், அடிமைத் தனத்திலும் கிடந்து உழல்வதிலிருந்து கிளர்ந்தெழுவதற்கும், தீயவற்றை வேரோடு சாய்ப்பதற்கும், நல்லவற்றைத் தூக்கி நிறுத்துவதற்கும் **திரு.வி.க.வின் தமிழ்க்கொடை** எனும் செந்தமிழ்க் களஞ்சியங்களைத் தமிழர்களின் கைகளில் தவழ விடுகிறோம். கூனிக்குறுகிக் கிடக்கும் தமிழர்களை நிமிர்த்த முனையும் நெம்புகோலாகவும், தமிழர்தம் வறண்ட நாவில் இனிமை தர வரும் செந்தமிழ்த்தேன் அருவியாகவும் இத்

தமிழ்க் கொடை திகழும் என்று நம்புகிறோம். இதோ! பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரும், தமிழ்ப் பதிப்புலக மேதையும் செந்தமிழைச் செழுமைப்படுத்திய செம்மலைப் பற்றிக் கூறிய வரிகளைப் பார்ப்போம்.

> *"தனக்கென வாழ்பவர்கள் ஒவ்வொருவரும் கலியாண சுந்தரனார் அவர்களைப் படிப்பினையாகக் கொள்வார்களாக"*
>
> **- தந்தை பெரியார்.**

> *"திரு.வி.க. தோன்றியதால் புலவர் நடை மறைந்தது; எளிய நடை பிறந்தது. தொய்வு நடை அகன்றது; துள்ளு தமிழ் நடை தோன்றியது. கதைகள் மறைந்தன; கருத்துக்கள் தோன்றின. சாதிகள் கருகின; சமரசம் தோன்றியது."* **- ச. மெய்யப்பன்.**

தமிழர் அனைவரும் உளம்கொள்ளத்தக்கவை இவை.

தாய்மொழியாம் தமிழ்மொழி மீது அளப்பரிய காதல் கொண்டவர் திரு.வி.க. இவர் பேச்சும் எழுத்தும் தமிழ் மூச்சாக இருந்தன. தமிழ்நாட்டு அரசியல் மேடைகளில் ஆங்கிலமே பேச்சுமொழியாக மதிக்கப்பட்ட காலத்தில் தமிழுக்குத் தென்ற லாக வந்து மகுடம் சூட்டிய பெருமையாளர். தமிழின் - தமிழனின் எழுச்சியை அழகுதமிழில் எழுதி உரைநடைக்குப் புதுப்பொலி வும், மேடைத் தமிழுக்கு மேன்மையும் தந்த புரட்சியாளர்.

கலப்பு மணத்துக்கும், கைம்மை மணத்துக்கும் ஊக்கம் தந்தவர்; வழுக்கி விழுந்த மகளிர் நலனுக்காக உழைத்தவர்; பெண்களின் சொத்துரிமைக்காகப் பேசியவர்; ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமஉரிமை என்று வாதிட்டவர்; பெண்ணின எழுச்சிக்குத் திறவு கோலாய் இருந்தவர்; 'கற்பு' என்பது பெண்களுக்கு மட்டுமன்று ஆண்களுக்கும் உண்டு என்று வலியுறுத்தியவர்; மாந்த வாழ்வியலுக்கு ஓர் இலக்கியமாக வாழ்ந்து காட்டியவர்; இளமை மணத்தை எதிர்த்தவர்; அரசியல் வானில் துருவ மீனாகத் திகழ்ந்தவர்; தமிழர்களுக்கு அரசியலில் விழிப்புணர்வை ஊட்டியவர்; சமுதாயச் சிந்தனையை விதைத்தவர்; ஒழுக்க நெறிகளைக் காட்டியவர்.

சங்கநூல் புலமையும், தமிழ் இலக்கண இலக்கிய மரபும் நன்குணர்ந்த நல்லறிஞர், ஓய்வறியாப் படிப்பாளி, சோர்வறியா உழைப்பாளி, நம்மிடையே வாழ்ந்துவரும் செந்தமிழ் அந்தணர் இரா. இளங்குமரனார் அவர்கள், **'தீந்தமிழ் அந்தணர்'** திரு.வி.க.வின் நூல் தொகுப்புகளில் அடங்கியுள்ள பன்முக மாட்சிகளை - நுண்ணாய்வு நெறிகளை ஆய்வு செய்து, அவர்தம் பெருமையினை மதிப்பீடு செய்து நகருக்குத் தோரணவாயில்

போன்று இத்தொகுப்புகளுக்கு ஒரு **கொடையுரையை** அளித்துள்ளார். அவர்க்கு எம் நெஞ்சார்ந்த நன்றி.

தமிழர் பின்பற்றத்தக்க உயரிய வாழ்க்கை நெறிகளைத் தாம் படைத்தளித்த நூல்களின்வழிக் கூறியது மட்டுமின்றி, அவ்வரிய நெறிகளைத் தம் சொந்த வாழ்வில் கடைப்பிடித்துத் தமிழர்க்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டினார் திரு.வி.க. என்பதை வாழும் தலைமுறையும், வருங்காலத் தலைமுறையும் அறிந்துகொள்ள வேண்டும் - பயன்கொள்ள வேண்டும் எனும் விருப்பத்தோடு இந்நூல்களை வெளியிட்டுள்ளோம்.

**தமிழ்த்தென்றல் திரு.வி.க.** நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து , உவந்து உவந்து எழுதிய படைப்புகளைத் தொகுத்து ஒருசேர வெளியிட்டுத், தமிழ்நூல் பதிப்பில் மணிமகுடம் சூட்டி உள்ளோம். விரவியிருக்கும் தமிழ் நூல்களுக்கிடையில் இத் தொகுப்புகள் தமிழ் மணம் கமழும் ஒரு பூந்தோட்டம்; ஒரு பழத்தோட்டம். பூக்களை நுகர்வோம்; பழங்களின் பயனைத் துய்ப்போம். தமிழ்மண்ணில் புதிய வரலாறு படைப்போம். வாரீர்! இந்நூல் உருவாக்கத்திற்கு துணை நின்றோர் அனை வருக்கும் எம் நன்றியும் பாராட்டும்.

***திரு.வி.க. வெனும் பெயரில் திருவிருக்கும்;***
***தமிழிருக்கும்! இனமிருக்கும்!***
***திரு.வி.க. வெனும் பெயரில் திருவாரூர்ப்***
***பெயரிருக்கும்! இந்தநாட்டில்!***
***திரு.வி.க. வெனும் பெயரால் தொழிலாளர்***
***இயக்கங்கள் செறிவுற்றோங்கும்!***
***திரு.வி.க. வெனும் பெயரால் பொதுச்சமயம்***
***சீர்திருத்தம் திகழுமிங்கே!***

- பாவலரேறு **பெருஞ்சித்திரனார்**

**– கோ. இளவழகன்**
*பதிப்பாளர்*

# கொடையுரை

திரு.வி.க. பல்வேறு ஆசிரிய நிலைகளில் ஒளி செய்தவர். மாணவர்களுக்குக் கற்பிக்கும் போதக ஆசிரிய நிலை, பொது மக்கள் ஊடகமாக விளங்கும் இதழாசிரிய நிலை, நூல் இயற்றும் நூலாசிரிய நிலை, நூல் பதிப்பிக்கும் பதிப்பாசிரிய நிலை, நூல் உரைகாணும் உரையாசிரிய நிலை எனப் பல்வேறு ஆசிரிய நிலைகளில் கடமை புரிந்தார். எழுத்தாளும் நிலை போலவே, பொழிவாளும் நிலையும் பெற்றார். பேச்சும் எழுத்தும் ஒருமை யாய்த் திகழும் பெற்றியும் பெற்றார். தாம் பொழி வாளராகவும், போதகாசிரியராகவும் திகழ்ந்த சீர்மையால் பொதுமக்கள் நலம் கருதித் திருக்குறள் வகுப்புகளும் நடத்தினார். அவற்றின் பயிற்சி யும் உந்துதலும் திருக்குறள் விரி வுரையாகித் தமிழுலகம் பெருங் கொடையாகக் கொள்ள வாய்த்ததாம்.

சென்னை இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்த சபையில் - நக்கீரர் கழகச் சார்பில் நிகழ்ந்த தமிழ் வகுப்பில் நடத்திய திருக்குறள் பாடம் (1915) சென்னைத் திருவல்லிக்கேணி தியோசாபிகல் சங்கக் கிளையில் நடத்திய திருக்குறள் வகுப்பு (1928) ஆகியவற்றைக் கண்டு கேட்ட அன்பர்களின் வேண்டல் திருக்குறள் உரை வரைய வேட்கையை ஆக்கிற்று. தென்காசித் திருவள்ளுவர் கழக விழாவுக்குச் சென்ற காலை (1936) குற்றாலச் சாரல் உரையாடலில் அது தூண்டப்பெற்று, நவசக்தியில் வாரந்தோறும் வரையச் செய்தது.

திருக்குறள் உரைவரையத் தொடங்குதற்கு முற்படத் தாம் இயற்றிய பெண்ணின் பெருமையிலே தம் குறட்காதல் வெளிப் பாட்டைச் சுட்டுகிறார் (1927)

பெண்ணின் பெருமை திருக்குறளை அடிப்படையாகக் கொண்டெழுந்த ஓர் ஆராய்ச்சி நூல். அதன்கண் 'இயற்கை யறம்' என்றொரு பகுதியிருக்கிறது. நூலின் உயிர்நாடி ஓடும் இடம் அப்பகுதியே. அது திருக்குறளின் உள்ளத்தைக் குறிக் கொண்டு நிற்றல் வெள்ளிடை மலை என்று இந்நூல் அணிந் துரையில் வரைந்துள்ளமை காண்க.

திருக்குறள் மேல் தமக்குண்டாகிய காதலின் காரணத்தை அணிந்துரையில் குறிக்கிறார் திரு.வி.க.

1) திருவள்ளுவர் முப்பால் கூறி வீட்டுப்பால் விடுத்தது;

2) அறப்பேற்றுக்கு இல்வாழ்க்கையைக் குறித்தது;

3) பெண்ணை வெறுத்தல் முதலிய போலித் துறவுகளைக் கடிந்தது;

4) மனமாசகற்றலே துறவு என்று இயற்கை நுட்பத்தை விளக்கியது;

5) இயற்கைப் பொது நெறியை அறிவுறுத்தியது; இன்ன பிற என்கிறார்.

திருக்குறளுக்குப் புத்துரை காணவேண்டும் என்னும் வேட்கை தம் முப்பத்தொன்றாம் அகவையில் எழுந்ததென்றும், உரை எழுத வாய்த்தது ஐம்பத்து மூன்றாம் அகவையில் என்றும் குறிப்பிடும் அவர், "யான் அந்நாளைய கலியாண சுந்தரனா யில்லை. அந் நாளைய கலியாண சுந்தரன் பெரிதும் ஏடுகளையே கட்டி அழுதவன்; ஏட்டுப் புழுவாய் இருந்தவன். இப்பொழுது ஏட்டுக்கல்வி அவனை விடுத்து ஒருவுகிறது. இயற்கையின் உள்ளுறையாயுள்ள இறைக்கல்வியை அவன் வேட்டு நிற்கிறான்" என்கிறார் (தோற்றுவாய்).

இதனால் ஏட்டுக் கல்வியால் மட்டும் திருவள்ளுவர் நெஞ்சங்கண்டு உரை வரைய இயலாது என்பதை வெளிப்படுத்து கிறார்! மேலும் ஓர் அரிய குறிப்பை வாழ்க்கைக் குறிப்புக்களில் குறிக்கின்றார்:

"யான் திருக்குறள் படித்தவன். என்பால் பிடிவாதம், வன்மம், முன்கோபம் முதலிய தீக்குணங்கள் துதைந்திருந்தன. வெறுந் திருக்குறள் படிப்புத் தீக்குணங்களை அறவே களைய வில்லை. கமலாம்பிகையின் ( தம் துணைவியாரின்) சேர்க்கை அக்குணங்களைப் படிப்படியே ஒடுக்கியது. அவள் திருக்குறள் படித்தவள் அல்லள். எனக்கு அவளே திருக்குறளாக விளங்கி னாள். மனைவாழ்க்கையில் ஈடுபடப் படத் திருக்குறள் நுட்பம் விளங்குவதாகிறது. திருவள்ளுவர் உள்ளத்தை உணர்தற்கு மனை வாழ்க்கை இன்றியமையாததென்பது உள்ளங்கை நெல்லிக் கனியாயிற்று. யான் பின்னாளில் எழுதிய திருக்குறள் விரிவுரைக்கு இல்வாழ்க்கையின் அனுபவம் பெருந்துணையாய் நின்றது." என்பது அது.

ஈரடிக்குறளுக்கு இத்துணைப் பாரிய விரிவுரை வேண்டுமோ என எவரும் வினவார். பனித்துளியில் பனைத்

தோற்றமும், பளிங்காடியில் பனிமலையும் அடங்குவதெனத் தேர்ந்துரைக்கப்பட்ட நூல் திருக்குறள். கடுகைத் துளைத்தும் அணுவைத் துளைத்தும கடலைப்புகுத்தி வைத்த பெற்றியது என்றாரும் உளர். ஈரடி தானே என்று தூய நீரின் ஆழம் காணக் கைவிட்டு ஈராயிரம் அடியாக விருத்தலைக் கண்டு எய்த் தமையை எடுத்துக்காட்டினார் உளர். (முதற்குறள் உவமை)

திரு.வி.க. இவ்வுரை விரிவை நோக்கும் நோக்கு என்ன?

"திருவள்ளுவர் நூல், குறள் வெண்பாக்களால் ஆக்கப் பட்டது. ஒவ்வொரு குறளிலும்ஒவ்வொரு கடலுண்டு என்று கூறல் மிகையாகாது. ஒவ்வொரு பாவில் ஒவ்வொரு கடலைப் புகுத்த வந்தவர் வெறும் இசை நிரப்புதற் பொருட்டு வெற் றொலியையும் வெற்றெழுத்தையும் வெற்றுச் சொல்லையும் பெய்வரோ? ஒரு போதும் பெய்யார். அவர்தம் வாய்மையி னின்றும் பிறந்துள்ள ஒவ்வோர் ஒலியும், ஒவ்வோர் எழுத்தும் , ஒவ்வொரு சொல்லும் பொருளுடையனவாகவே இருக்கும். அவற்றை வெறும் இலக்கிய இலக்கணக் கண்கொண்டு பார்த்தல் மட்டும் போதாது. இயற்கைக் கண்கொண்டும் அவற்றை உற்று நோக்கல் வேண்டும். இயற்கை நோக்குக்கு நுண்பொருள் புலனாகும். அளபெடை அசைநிலை என்று பிறரால் கூறப் படுவன எல்லாம் திருவள்ளுவர் மொழியில் பொருளுடையன வாகவே திகழும்" என்கிறார். இந்நோக்கே இவ்விரிவுரை மூலமாம்.

முடிக்கல அளவில் (கிரௌன்) பாயிரத்திற்கும் இல்லற வியல் ஆறு அதிகாரங்களுக்கும் ஆக நூறு குறள்களுக்கு எண்ணூறு பக்கம் உரை வரைந்துள்ளார். ஏறக்குறைய ஒரு சீருக்கு ஒரு பக்கம் எனக் குறிக்கலாம். அவர் இவ்விரிவுரை கண்ட நாளில் உரைக்களஞ்சியம், உரைக்கொத்து, உரைவேற்றுமை என்னும் தொகைகள் வரப்பெறவில்லை. திருக்குறள் மேற்கோள், சொல்லடைவு இன்னவகை நூல்களும் எழுந்தில. ஆகவே, இவ்வுரைப் பெருக்கம் திரு.வி.க. அவர்களின் கல்விப்பரப்பு, ஆழிய சிந்தனை, இயற்கை நோக்கு, இல்வாழ்க்கைப் பேறு, பொதுத்தொண்டு, தொழிலாளர் இயக்கம் இன்னவற்றின் திறங்களுக்குச் சான்றாகித் திகழ்கின்றமை புலப்படும்.

இவ்விரிவுரையின் சீர்த்திமைக்கு ஓர் அளவுகோல், இவ் வகையிலேயே காணல் வேண்டும். அதற்கு இரண்டு சான்றுகள் காணலாம். ஒன்று:

இராவ்சாகேப் கு. கோதண்டபாணியார் 'முதற்குறள் உவமை' என்றோர் அரிய நூல் கண்டார். 'அகரமுதல' என்னும் குறளுக்கு 216 பக்க அளவில் உரைவிளக்கம் கண்ட நூல் அது. 1956இல் வெளிவந்தது. வெளியிட்டது சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்.

இன்னொன்று: திருக்குறள் மணி விளக்கவுரை. பன் மொழிப்புலவர் கா.அப்பாத்துரையாரால் வரையப்பட்டது. திருக்குறள் முதல் நான்கு அதிகாரங்களுக்கு முடிக்கல அளவில் (கிரௌன்) 960 பக்கம். வெளிவந்த ஆண்டு 1967.

அதன் இரண்டாம் பகுதி இல்வாழ்க்கை முதலாய நான்கு அதிகாரங்கள். 862 பக்கம். ஆண்டு 1968.இச்சான்றுகளைக் காட்டிய நோக்கம் என்னை எனின், திருக்குறள் உரைவிரிவாக்கத் தூண்டல் எவர் வழிப்பட்டது என்பதைக் குறிக்கவேயாம்.

'திருக்குறள் ஒரு சிறந்த அகப்புற நூல்' என்னும் திரு.வி.க. "இந்நூலாசிரியர் அகப்புற ஆராய்ச்சியில் கைபோனவர் என்பது இவர் நூலால் தெரிகின்றது." என்கிறார். (கடவுள் 7) தமிழர் பொருளியல் வாழ்வு அகம் புறம் ஆகிய இரு கூறுபட்டு இலங்குதலையும் அவற்றின் வழியில் திருவள்ளுவர் வாழ்வு இலங்குதலையுக் குறிக்கிறார். புனைவிலா மெய்ம்மை வாழ்வு அஃதாம்.

திருவள்ளுவர் கற்பன கற்றார்; கேட்பன கேட்டார்; அவர், தாம் கற்றனவும் கேட்டனவும் வாழ்வில் ஒன்றப் பெறுதற்கு இல்வாழ்க்கையேற்று இயற்கையோடு இயைந்த வாழ்வு நடாத்தி, அவ்வழியில் நின்று, தொழில் புரிந்து, பொருளீட்டி, இன்பந் துய்த்து நன்மக்களைப் பெற்று, அன்பராய், விருந்தோம்பி, எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தண்மை எய்தி, மனமாசகன்ற அறவோரால், தாம் பெற்ற இன்பத்தை உலகமும் பெறுதல் வேண்டித் திருக்குறள் என்னும் தனிநூலை அருளி னார்" என்கிறார். இல்வாழ்வைச் சுட்டியது ஏன்? இல்வாழ்வைத் தமிழரும் கற்பாரும் எய்துதல் வேண்டும் என்றும் வேட்கையால் குறித்தாராம். ஆனால் அவர் கண்ட தமிழக நிலை என்ன?

சிறந்த அகப்புற நூலாம் திருக்குறளை ஈன்ற பெருமை வாய்ந்த தமிழ்நாடு. இந்நாளில் எந்நிலை உற்றிருக்கிறது. தற்காலத்தில் தமிழ்நாடு, திருவள்ளுவரின் சொல்லையும் சொற்றொடரையும் உருட்டிக் கொண்டிருக்கிறது. பின்னாளில் தமிழுலகில் நுழைந்த கதை நூல்கள் பலவும் போலித் துறவு நூல்கள் பலவும் நாட்டின் அகக்கண்ணைத் தூர்த்து விட்டன.

அதனால் புறக்கண்ணொளியும் மங்கலாயிற்று என அவலமுறு கிறார்.

இவற்றால் திரு.வி.க. திருக்குறள் விளக்கம் எழுதியதன் நோக்கம் தமிழர் அகவாழ்விலும் புறவாழ்விலும் சிறந்தோங்க வேண்டும் என்பதற்கேயாம் என்பது புலப்படும்.

இனி, இவ்விரிவுரை நடையிடும் முறையை அறியலாம். திருக்குறள் விரிவுரைக்கு ஓர் அரிய தோற்றுவாய் வரைகின்றார். அதன் பிழிவு, "திருவள்ளுவர் உலகையே திருக்குறளாக எழுதி னார். உலகின் எழுத்தோவியம் திருக்குறள் என்று கூறலாம்" என்பது அது. அதன் விரிவே தோற்றுவாய்.

திருக்குறள் பொது நிலையம் எனக் கூறும் திரு.வி.க. "அதனுள் புக முயல்வோம்; முயன்று புகுந்தால் திருவள்ளுவரைக் காணலாம். திருவள்ளுவர் இறந்து பட்டாரில்லை; அவர் உயிருடன் திருக்குறள் நிலையத்தில் வீற்றிருக்கிறார். உலகீர்! அவரைக் காண எழுக! எழுக! " என அறைகூவல் விடுக்கிறார்.

தம் நிலையையும் உரைக்கிறார்: " யான் இப்பொழுது ஏட்டுக்கும் இறைக்கும் இடையில் நிற்கிறேன். இறையருள் கூடின் திருவள்ளுவரை நேரே காணும் பேறு பெறுவேன். மற்றவர்க்கும் அவரைக் காட்டுவேன். இறையருள் எனக்குக் கிட்டுமோ? கிட்டாதோ? அறிகிலேன்" என்பது அது.

அடுத்து 'நூல்' பற்றி எழுதுகிறார். முப்பால் விளக்கம் கூறி வீடு பற்றியும் எழுதுகிறார். வீடு என்பது விடுதலை; கட்டற்றது என விளக்கும் அவர், வீடு என்பது தனியே இருப்பது அன்று என்பதையும், வீடு பற்றித் தனித்த நூல்களால் உலகம் உற்ற அல்லல் போதும்! போதும்! என்பதையும் விரித்தெழுதிப் பாயிரம் வரைகிறார். கடவுள் வாழ்த்தைப் 'பாயிரத்துக்கும் பாயிரம்' என்கிறார்.

நூலுக்கு விரிவுரை வரையும் திரு.வி.க. முதற்கண் அதிகாரப் பெயரைத் தக்காங்குப் பகுத்துக் கொண்டு ஆய்கிறார். அதன் நிறைவில் 'உள்ளுறையும் அமைவும்' என்னும் தலைப்பில் அவ்வதிகாரப் பொருண்மையையும் குறள் வைப்பு முறையையும் தெளிவிக்கிறார். எடுத்துக்கொண்ட குறளுக்கு முதற்கண் பொருள் பொதிந்த தலைப்பு ஒன்றனைக் குறிக்கிறார். பின்னர்க் குறளைப் பொறிக்கிறார். மேலே பொருள், கருத்து, விருத்தி என மும்மை வரன் முறையில் உரைவிளக்கம் புரிகிறார். விருத்தியில் சொல்லையும் சொற்றொடரையும் பகுத்தும் தொகுத்தும் விரித்தும் இணைத்தும் ஒப்பிட்டும் ஆய்கிறார். முதற்குறளுக்கு

வரைந்த உரைபோல் எல்லாக்குறள்களுக்கும் உரைவிளக்கம் வரையப் பெற்றிருப்பின் இந்நூல் இருமடங்கும், மும்மடங்கு மாய்ப் பெருகியிருக்கும்.

இரண்டாம் குறள் கற்றதனால் ஆய என்பதன்றோ! அக்குறள் ஐந்தாம் இடத்தில் கொள்ளப் படுகிறது. ஏன்? திரு.வி.க. கொள்ளும் பொருண்முறை வைப்புமுறை அஃதாம்! மணக் குடவர் வைப்புமுறையைப் பரிமேலழகர் தம் முறைக்குக் கொண்டு சென்றார் அல்லரோ! அதனை நினைக. பிற உரையாசிரியர் வைப்புமுறைகளையும் காண்க.

இவ்வைப்புமுறை மாற்றங்கள் என்ன செய்யும்? திருக்குறள் மூல வைப்பை வரிசையுறக்காண வைக்காது. ஆதலால் பெருகப் பரவியதும், முதற்கண் அச்சீடு பெற்றதுமாம் பரிமேலழகர் வைப்பு முறையையே பலரும் பற்றினர் என்க. உரைநிறைவில் மேலும் சில குறிப்புகளைப் பொறித்தலை மேற்கொள்கிறார். இம்முதற் குறள் நிறைவில், 'பாட்டின் மாண்பு', 'ஓர் இனிய குளிர் தரு' என்பவை. அன்னவை அவை.

ஒருபாடல் நிறைவித்து அடுத்த பாடல் விருத்தி எழுதத் தொடங்குங்கால் முடிந்த பாடல் கருத்தை எடுத்துரைத்துத் தொடர்ச்சிச் சிறப்பை வெளிப்படுத்துகிறார். பொறிவாயில் ஐந்தவித்தான் என்னும் பாடல் விருத்தியில் "முதற்பாட்டு விருத்தியில் கடவுளுக்குரிய மூன்றுநிலை சொல்லப்பட்டன. அவற்றுள் கடவுள் குருவைக் கோயிலாக் கொண்டு கடனாற்றுவது இப்பாட்டிற் குறிக்கப் பெற்றிருக்கிறது" என்கிறார்.

அவித்தல் அழித்தல் அன்று; அடக்கல்; நாவடக்கம், கையடக்கம் போல என விளக்கும் திரு.வி.க. அவித்தான் என்னும் சொல்லை மேலாய்வு செய்கிறார்.

ஐந்தவித்தான் எவன்? இறைவன் என்று சிலர் கூறுப. இறைவனுக்கு ஐந்து உண்டோ?

இறைவன் பிறப்பு இறப்பு இல்லாதவன். உருவம், அருவம், அருவுருவம் முதலிய எல்லாவற்றையும் கடந்தவன். மாற்ற மனம் கழிய நின்றவன். அவனுக்கு ஐம்புலனே இல்லை. புலனே இல்லா ஒருவனைப் புலனை அவித்தவன் என்று எப்படிச் சொல்வது? என வினாவி விளக்கும் திரு.வி.க. கடவுள் நிலைகளுள் ஒன்றான குருவன் நிலையே ஐந்தவித்த நிலை எனத் தெளிவிக்கிறார்.

கோளில் பொறியில் என வரும் பாடலில் உள்ள, எண்குணத்தான் என்பதற்கு, " எண்ணும் குணத்தான்; அன்பன் எண்ணுங் குணங்களையுடையவன்" என்று பொருள் கூறும்

திரு.வி.க.'' எண்குணத்தான் என்பதற்கு எட்டுக் குணங்களை யுடையவன் என்றுங் கூறலாம்'' என்று பிறர் உரையையும் குறிக்கிறார்.

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்'' என்னும் பாடமே பலரும் கொண்டதாம். ஆனால் திரு.வி.க., "ஐந்தவித்தான் ஆற்றற் ககல்விசும்புளார் கோமான்'' எனப் பாடம் கொள்கிறார். இப்பாடம் எவருடையது எனச் சுட்டினார் அல்லர்.

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளியைக் கணப்பொழுதும் காக்க முடியாது என்று உரைகள் பலவும் கூற, திரு.வி.க.

"வெகுளி கணமேயுங்காத்தல் அரிது'' என்பது வெகுளி எழாமையை உணர்த்துவது. குணமென்னுங் குன்றேறி நின்றார்க்கு வெகுளி எங்கிருந்து பிறக்கும்? அவர்கட்கு வெகுளி ஏது? வெகுளியினின்றும் விடுதலை அடைந்தவரே, குண மென்னும் குன்றேறி நின்றவர். அவரே நீத்தார்'' என மெய்யுரை காட்டு கிறார்.

"வீழ்நாள் படாஅமை'' என்னும் குறளில் வரும் 'வழி யடைக்கும் கல்' என்பதன் பொருளாய்வில் 'வழியமைக்கும் கல்' என்கிறார்.

பழங்காலத்தில் குகைக் குடியிருப்பையும், கொல்லைப் புறத்தையும் கல்லால் அடைத்தல் உண்டு. 'கல்லடார்' என்பது அதன் பெயர். 'வழியடை' என்பது வழியில் வைக்கும் தடுப்பையும், அணைக்கட்டையும் குறிப்பது. ஆக, அடைக்கும் என்பதற்கு அமைக்கும் எனப் பொருள் காட்டிய திரு.வி.க. அவ்வளவில் அமையாராய், "அடைக்கும் என்பதற்கு மூடும், தடுக்கும் என்று பொருள் கூறுவோருமுளர். உண்மை காண அறிஞர் முயல்வா ராக'' என்கிறார்.

அறத்தாறு இதுவென வேண்டா என்னும் பாடல் விளக்கத்தில், "அறநெறி 'இதுவா, அதுவா' என்று ஆராய்ந்து சொல்ல வேண்டுவதில்லை. அறநெறி 'அதுவாகவும், இதுவாக வும் விளங்கி எங்கும் என்றும் பொதுவாக நிற்கும் தன்மை வாய்ந்தது'' என்றும், பல்லக்கைச் சுமந்து செல்வோரும் அறநெறி நின்றால் அறவோராகலாம். பல்லக்கில் ஊர்ந்து செல்வோரும் அறநெறி நின்றால் அறவோராகலாம். அறவோராகும் வாய்ப்பு இருவர்க்கும் உண்டு. ஒருவர்க்கு மட்டும் அவ்வாய்ப்பு இல்லை'' என்றும் கூறுகிறார். "உண்மை காண அறிஞர் முயல்வாராக''

என்றது போல் திரு.வி.க. இவண் பொறிக்க வில்லை எனினும், உண்மை காணவேண்டியதாகவே உள்ளது.

திரு.வி.க. நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டதன் பயன்பாட்டால் அவர்தம் நூல்கள், கட்டுரைகள் ஆகிய அனைத்துப் படைப்புகளும் 'திரு.வி.க. தமிழ்க் கொடை' என்னும் வரிசையில் வெளிப்படுகின்றன.

திரு.வி.க. நூல்களையும் கட்டுரைகளையும் ஒருமொத்த மாகப் பெறும்பேறு இதுகாறும் தமிழ்மண்ணுக்கு வாய்க்க வில்லை. அவர்வாழ்ந்த நாளிலேயே சிலநூல்கள் கிட்டும்; சிலநூல்கள் கிட்டா! 'தேசபக்தன்' 'நவசக்தி' யில் வந்த கட்டுரை களுள் பொறுக்கி எடுக்கப்பட்ட சிலவற்றையன்றி முற்றாகப் பெறும் பேறோ அறவே வாய்த்திலது. திரு.வி.க. வழங்கிய வாழ்த்து, அணிந்துரை முதலியனவும் தொகுத்தளிக்கப் பெறவில்லை. இவற்றையெல்லாம் தனிப்பெருஞ் சீரிய பதிப்பில் ஒருமொத்தமாக வழங்கும் பெருமையைக் கொள்பவர் **தமிழ்மண் பதிப்பக நிறுவனர் கோ.இளவழகனார் ஆவர்.**

பாவாணர் நூல்கள், ந.சி.க.நூல்கள், அப்பாத்துரையார் நூல்கள், இராகவனார் நூல்கள், அகராதிப் பதிப்புகள் எனத் தொகுதி தொகுதிகளாக வெளியிட்டு, அவ்வெளியீட்டுத் துறையின் வழியே தமிழ்மொழி, தமிழின மீட்சிப் பணிக்குத் தம்மை முழுவதாக ஒப்படைத்துப் பணியாற்றும் இளவழகனார் திரு.வி.க. தமிழ்க் கொடைத் தொகுதிகளை வெளியிடுதல் தமிழகம் பெற்ற பெரும் பேறேயாம். வாழிய அவர்தம் தொண்டு! வாழியர் அவர்தம் தொண்டுக்குத் துணையாவார்!

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்.**

# அணிந்துரை

உலகைப் பண்படுத்துங் கருவிகள் சிலவே. அவற்றுள் சிறந்தன நூல்கள்; அற நூல்கள்.

நூல்களை ஈரினமாகப் பிரிக்கலாம். ஒன்று அறவோர் வழிப்பிறப்பது; இன்னொன்று மற்றவர் வழிப் பிறப்பது. முன்னையதால் மன்பதைக்கு நலம் விளைந்தே தீரும்; பின்னையதால் தீங்கு விளைதலும் உண்டு.

அறவோர் இன்னாரென்று எப்படி உணர்தல் கூடும்? ஒருவரது அகநிலையை அளந்து காண்டல் அருமை; புறக் குறிப்புக் களால் அவர்தம் அகநிலையை ஒரோவழி உணர்தல் கூடும். அறவோர் இன்னார் என்று உணர்த்தும் புறக் குறிப்புக்கள் சில உள. அவை இன்ன இன்ன என்று நூலினுள் விருத்தியில் சில இடங்களில் எடுத்துக் காட்டப்பட்டிருக் கின்றன.

புறக் குறிப்புக்களைவிட நிலைமையை நன்கு விளக்க வல்லது ஒன்றுளது. அது நன்னூல். 'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து - மறைமொழி காட்டி விடும்' எனவரூஉம் திருவள்ளுவர் வாய்மொழியை நோக்குக.

திருவள்ளுவர் வெறுங் கலைப்புலமையளவில் நின்றவரல்லர்; அவர் இயற்கைப் புலமை என்னும் தெய்வப் புலமை பெற்றவர்; அறவோர்.

திருவள்ளுவர் அறவோரென்பது அவர்தம் தெய்வப் புலமையினின்றும் முகிழ்ந்த வாடா மலராகிய திருக்குறளால் நனி விளங்கும். திருவள்ளுவரின் அறத்தில் நின்று, பொருளில் புகுந்து, இன்பத்தில் இயைந்தால் அவர்தம் உள்ளம் புலனாகும்.

திருவள்ளுவரைப் பற்றியும் அவரது நூலைப்பற்றியும் தோற்றுவாயிலும்,வேறு சில இடங்களிலும் என் கருத்தை வெளியிட்டுள்ளேன். ஆதலின், இங்கே அவரைக் குறித்தும், அவரது நூலைக் குறித்தும் விரித்துக் கூறுதல் வேண்டுவதில்லை.

திருவள்ளுவர் அருளிய திருக்குறள் என்னும் தெய்வ மறையினிடத்தில் எனக்குத் தணியாக் காதலுண்டு. காரணம் பலப்பல. சிலவருமாறு: திருவள்ளுவர் முப்பால் கூறி வீட்டுப்

பால் விடுத்தது; அறப்பேற்றுக்கு இல்வாழ்க்கையைக் குறித்தது: பெண்ணை வெறுத்தல் முதலிய போலித் துறவுகளைக் கடிந்தது: மனமாசகற்றலே துறவென்று இயற்கை நுட்பத்தை விளக்கியது; இயற்கைப் பொது நெறியை அறிவுறுத்தியது; இன்னபிற.

எனது குறட்காதல், முன்னே 1927-ம் ஆண்டில் 'பெண்ணின் பெருமை' என்னும் நூலாகத் திரண்டது; இப்பொழுது திருக்குறள் விரிவுரையாக உருக்கொண்டு வருகிறது.

'பெண்ணின் பெருமை', திருக்குறளை அடிப்படையாக் கொண்டெழுந்த ஓர் ஆராய்ச்சி நூல். அதன்கண் 'இற்கை அறம்' என்றொரு பகுதியிருக்கிறது. நூலின் உயிர்நாடி ஓடும் இடம் அப்பகுதியே. அது திருக்குறளின் உள்ளத்தைக் குறிக் கொண்டு நிற்றல் வெள்ளிடைமலை.

விரிவுரை எண்ணம் எங்ஙனம் தோன்றி வளர்ந்த தென்பதையுஞ் சிறிது சொல்கிறேன்.

சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணி பக்தஜன சபையில் - நக்கீரர் கழகச் சார்பில் - சிலகாலம் தமிழ் வகுப் பொன்று என்னால் நடத்தப்பட்டது. அவ்வகுப்பில் 1915-ம் ஆண்டில் திருக்குறள் பாடஞ் சொல்லத் தொடங்கினேன் . அதனால் திருவள்ளுவர் வாய்மொழியில் ஒன்றி ஒன்றிப் படிந்து பொருளை நோக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. அவ்வேளை யில் திருக்குறளுக்குக் காலத்துக் கேற்ற முறையில் விரிவுரை யொன்று காண்டல் வேண்டும் என்ற விருப்பம் என்பால் எழுந்தது.

சென்னைத் திருவல்லிகேணியில் தியோசாபிகல் சங்கக் கிளையொன்றுண்டு. அதன் தலைவராயிருந்தவரும், ஹிந்து அறநிலையப் பாதுகாப்புக் கூடத்தில் அமைச்சராயமர்ந்து நேர்மைத் தொண்டாற்றியவரும், எனது உள்ளங் கவர்ந்த கெழுதகை நண்பருள் ஒருவரும் ஆகிய திருவாளர்-ஸி. எஸ். சாமிநாத முதலியார் தமது சங்க மண்டபத்தில் வியாழக்கிழமை தோறும் திருக்குறள் வகுப்பு நடத்துமாறு அடிக்கடி என்னைக் கேட்டுவந்தர். அவர்தம் நட்பும் விருப்பும் என்னை இணங்கச் செய்தன. 1928-ம் ஆண்டில் ஆங்கே திருக்குறன் வகுப்புத் தொடங்கப்பட்டது. அவ்வகுப்பில் யான் சொல்லி வந்த முறை யில் பொருளையும் விருத்தியையும் எழுத்துருவில் நல்குதல் வேண்டுமென்று நண்பர் சாமிநாத முதலியாரும் மற்றவரும் வலியுறுத்துவர். அவ்வலியுறுத்தல் இராயப்பேட்டைக் கழகத் தில் எழுந்த விருப்பதை வேட்கையாக முதிரச் செய்தது.

தென்காசியில் திருவள்ளுவர் பெயரால் ஒரு கழகம் நடை பெற்று வருகிறது. அக்கழத்தின் ஆண்டுவிழாக் கூட்டத்துக்குத்

தலைமை பூணுதற்கு 1936-ம் ஆண்டில் முதல் முதலாக அழைக்கப்பெற்றேன். விழா முடிந்த பின்னர்க் கழகத்தார் சிலரும் யானும் 'வண்டு யாழ் செய்' குற்றாலமலை நோக்கினோம். அம் மலையின் சண்பகாடவியில் கழகக்தாரும் யானும் உறவு கொண்டு பேசிய பேச்சுக்கள், திருவல்லிகேணிச் சங்கத்தில் முதிர்ந்தெழுந்து நிலவிக்கொண்டிருந்த வேட்கையை மீக்கூரச் செய்தன.

தென்காசியினின்றும் சென்னை திரும்பியதும் வாரந் தோறும் 'நவசக்தி'யின் முதற் பக்கத்தில் திருக்குறள் விரிவுரை வரைந்து வரலானேன்; பின்னே அதைப் பலவழியிலும் நூல்முறையில் ஒழுங்குபடுத்தினேன்.

அவ்விரிவுரை பாயிரப் பகுதி இந்நூல் வடிவாக இது போழ்து வெளியிடப்பட்டது. மற்றொரு பகுதி (இல்லற இயல் - முதல் ஆறு அதிகாரம்) தனியே வெளியிடப்பட்டது.

நூலாசிரியன்மார்க்கு முதலாவது மன அமைதி வேண்டும். மன அமைதிக்குப் பலதிற வாய்ப்புக்களிருத்தல் வேண்டும். வாய்ப்புக்களில் இடம் பொருள் ஏவல் இன்றியமையாதன. இவற்றில் ஒன்றையேனும் எனக்கு ஆண்டவன் பொருந்திய முறையில் அருளவில்லை அமைதியைப் பலவழியிலுங் குலைக்குஞ் சூழலிடை நின்றே எனது சிறிய தொண்டை ஆற்றி வருகிறேன்.

மற்றுமொன்று ஈண்டுக் குறிக்க விரும்புகிறேன். அது, யான் நூல்களை யாக்கப் புகும்போதும், அவற்றைப் பதிப்பிக்கப் புகும்போதும் பெரிதும் விளைவது. அதைச் சுருங்கச் சொல் கிறேன்.

நூலாய்தல், நூல் யாத்தல், பத்திரிகை நடத்தல் ஆகிய தொண்டுகளில் மட்டும் என் வாழ்வு ஈடுபட்டு நிற்கவில்லை. வேறு பலதிறத் தொண்டுகளிலும் என் வாழ்வு ஈடுபட்டு நிற்கிறது. அவற்றுள் ஒன்று தொழிலாளர்க்குச் சேவை செய்வது. நூற்றொண் டில் யான் நுழையும்போதெல்லாம் பெரிதும் தொழிலாளர் தொல்லை எப்படியோ மூண்டுவிடுகிறது இஃதோர் அற்புதம்

திருக்குறளுக்கு விரிவுரை காணப்புகுந்த சில வாரத்துக்குள் வேலை நிறுத்தம், சென்னை'கர்நாட்டிக்' ஆலையில் நேர்ந்தது; பின்னே 'பக்கிங்காம்' ஆலையில் நிகழ்ந்தது; தொடர்ந்து சூளை ஆலையில் விளைந்தது. இப் பாயிரப்பகுதியைப் பதிப்பிக்க முயன்றபோதும் சூளை ஆலையே அடைக்கப்பட்டது. அதனால் தொழிலாளர் மூவாயிரவர்- அவர் சார்பினர் ஏறக்குறைய ஏழா யிரவர்-ஆகப் பதினாயிரவர் தொல்லையில் மூழ்கினர். இவர் தந்

தொல்லை படியும் மனம் எந்நிலையிலிருக்கும் என்று சொல்ல லும் வேண்மோ? திருவள்ளுவர் அறம் உலகிடை- ஆட்சியிலும் குடிமையிலும்-பரவிநின்றால், இத்தகைத் தொல்லைகளின் தோற்றத்துக்கே இடம் இராது.

இடம் பொருள் ஏவல் இன்மையும், அமைதி குலைக்குஞ் சூழலும், தொழிலாளர் தொல்லையும் மனத்தை அமைதியில் நிறுத்துமா? இதை அகத்திணை (Psychology) ஆராய்ச்சி யாளர்க்கு விடுத்துச் செல்கிறேன்.

தொல்லை நோய்க்கு மருந்துண்டோ? மருத்துவர் என்ன விடை இறுப்பரோ அறிகிலேன். எனக்கொரு மருந்து துணை செய்து வருகிறது. அஃதென்னை? அஃது எனது தாய்மொழி; அமிழ்தினும் இனிய தாய்மொழி. என்போன்றார்க்கென்று தமிழ்க் கலைகள் தோன்றினவோ என்று யான் அடிக்கடி நினைப்பதுமுண்டு.

தொல்காப்பியனார், நக்கீரனார், நல்லந்துவனார், திரு வள்ளுவர், இளங்கோ, சாத்தனார், திருத்தக்கதேவர் மாணிக்க வாசகனார், நம்மாழ்வார், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதியார் முதலிய தமிழ் மருத்துவர் யான் நூலெழுதும் சிற்றறையிலும் வீற்றிருக்கின்றனர். அவர் முன்னே தொல்லை அணுகி எங்ஙனம் நோய் செய்யும்?

***'அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்***
***சிறுகை அளாவிய கூழ்'***
***'மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்***
***சொற்கேட்டல் இன்பம் செவிக்கு'***
***'குழலினிது யாழினிது என்ப தம்மக்கள்***
***மழலைச்சொல் கேளா தவர்'***

இப்பாக்களின் சொல்லிலும் பொருளிலும், இரண்டுங் கலந்த ஒருமையிலும் ஒன்றி ஒன்றித் திளைக்கும் மனம் எந்நிலை எய்தும்? அம்மனத்தைத் தொல்லை உறுத்துங்கொல்?

தொல்லை விளையும்போதெல்லாம் பெரிதும் நூலை எழுதும் அல்லது பதிப்பிக்கும் வாய்ப்பை அடியேனுக்குக் கூட்டும் ஆண்டவன் அருட்டிறத்தை என்னென்று வியந்து கூறுவேன்! இல்லையேல் தொல்லை என்னை என்செய்யுமோ?

எனது வாழ்வில் தொல்லை ஒரு பக்கம்! அதைத் தகையும் மருந்து மற்றொரு பக்கம்! தொண்டு இன்னொரு பக்கம்! இது நிற்க.

திருவள்ளுவர், திருக்குறள் வாயிலாக உலகுக்கு விடுத்துள்ள நற்செய்தியைத் தற்கால ஆராய்ச்சியால் விளக்குவது ஒருமுறை. இதனினும் சிறந்தது, திருக்குறளுக்கு விரிவுரை காணும் வாயிலாக ஆசிரியரது நற்செய்தியை விளக்குவது.

இவ்விரிவுரை, பொருள் -கருத்து- விருத்தி என்னும் முக் கூறு களைக் கொண்ட ஓர் ஆராய்ச்சியேயாகும். பொருள், பாட்டை விளக்குவது; கருத்து, பொருளின் நுண்மையைத் தெரிப்பது; விருத்தி, இரண்டையும் பருமையில் தெளியச் செய்வது.

பாட்டு உயிர்; பொருள் உள்ளம்; கருத்து மெல்லிய கரணம்; விருத்தி உடல்.

விருத்தி கட்டுரை போன்றது. அதைக் கட்டுரையாக் கொண்டு பாட்டின் உள்ளங் காண முயலுமாறு அன்பர்களை வேண்டுகிறேன்.

விருத்தியில் கூறியது கூறல் மல்குவதுபோல் தோன்றும். அதைக் கூர்ந்து நோக்கின் அது வழிமொழிதல் என்னும் அநுவாதமாகக் காணப்படும்.

பாட்டின் ஒரே சொல்லோ சொற்றொடரோ கருத்தோ மீண்டும் மீண்டும் வருமிடங்களில் அதை அதை அவ்வவ் விடத்துக் கேற்ற முறையில் விளக்கஞ் செய்தற்கு வழிமொழிதல் இன்றியமையாததாகிறது. முன்பின் கூட்டிக் கருத்தைத் தெளிவு செய்து கொள்வது நல்லது.

விருத்தியில் மனிதப் பிறவியின் விழுப்பம், கூர்தல் அறம், தநுகரண புவன போகப் பேறு, அறம் மனத்துக்கண் மாசிலனாதல் என்பது, இன்ன பிற சில இடங்களில் காட்சியளிக்கும். இவை ஒவ்வோரிடத்தில் ஒவ்வொருவித வடிவாகக் காட்சியளித்தல் நோக்கற்பாலது.

இவ்விரிவுரை காணுதற்கு ஊக்கமூட்டிய நண்பருக்கும், கழகத்தார்க்கும், எவ்விதப் பயனுங் கருதாது தமிழன்பு ஒன்றே கொண்டு அச்சுப்பிழை திருத்துவதில் துணைபுரிந்த திருவாளர் - மாங்காடு துரைசாமி முதலியார்க்கும் எனது நன்றி உரியதாக.

யான் மனிதன்; அடிக்கடி தொல்லையில் மூழ்குவோன்; குறைபாடுடையவன். குறைபாடுடையவன் உரையில் குறைபாடி ருத்தல் இயல்பு. புலவோர் குற்றங் குறைகளைப் பொறுத் தருள்வாராக.

சென்னை
1-8-1939 **திருவாரூர் – வி.கலியாணசுந்தரன்**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| நுழைவுரை | v |
| கொடையுரை | ix |
| அணிந்துரை | xvii |
| **நூல்** | |
| தோற்றுவாய் | 3 |
| நூல் | 10 |
| பாயிரம் | 15 |
| 1. கடவுள் வாழ்த்து | 19 |
| 2. வான் சிறப்பு | 126 |
| 3. நீத்தார் பெருமை | 173 |
| 4. அறன் வலியுறுத்தல் | 241 |
| பாட்டு முதற் குறிப்பு | 290 |

# திருக்குறள் விரிவுரை

## (பாயிரம்)

(1939)

# தோற்றுவாய்

*திருவள்ளுவர் என்னும் நினைவு .தோன்றும்போதே உலகமும் உடன் தோன்றுகிறது. இவ்வாறு தோன்றுதற்குக் காரணமென்னை? காரணத்தைத் திருவள்ளுவர் அருளிய நூல் உணர்த்தும். அந்நூலே திருவள்ளுவரை உணர்த்துதற்குரிய கருவியுமாகும்.*

*திருக்குறளை ஆராய்ந்தால், அதன்கண் உலகமிருத்தல் நன்கு புலனாகும். திருவள்ளுவர், உலகையே திருக்குறளாக எழுதினர். உலகின் எழுத்தோவியம் திருக்குறள் என்று கூறலாம்.*

*திருவள்ளுவர்உலகுக்கென்றே பயின்றார்; உலகுக்கென்றே வாழ்ந்தார். அதனால் அவர்தம் உள்ளத்தில் உலகம் நின்றது. அவர் உலகமாயினர்; உலகம் அவராயிற்று. இத்தகைய ஒருவரிட மிருந்து பரிணமித்த ஒரு நூல் எந்நினைவை யூட்டும்? அஃது உலக நினைவை யூட்டுதல் இயல்பே. ஆகவே, திருவள்ளுவர் நினைவு தோன்றும்போது, உலகமும் உடன் தோன்றுவதில் வியப்பொன்றுமில்லை யென்க.*

**உலகம்**

*உலகம் எது? இவ்வினாவிற்குச் செவ்வனிறை இறுத்தல் அரிது. உலகம் இதுவே என்று அறுதியிட்டுக் கூறல் இயலாது. உலகம் பலவிதம். ஒவ்வொருவர்க்கு ஒவ்வோர் உலகம் உண்டு. ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொருபோது ஒவ்வோர் உலகம் உண்டு என்று கூறல் மிகப் பொருத்தம்.*

*ஒருவர் தம் வாழ்வில் எத்துணையோ முறை பிறக்கிறார்; எத்துணையோ முறை இறக்கிறார். நொடிக்கு நொடி பிறப்பும் இறப்பும் உறுகின்றன. இந்நிகழ்ச்சியை உணர்ந்து நடப்போர் சிலரே.*

*ஒருவர் ஒன்றைப் பற்றி ஒருபோது ஒருவித எண்ணங் கொள்கிறார். அவரே அதைப் பற்றி வேறுபோது வேறுவித எண்ணங் கொள்வோராகிறார். இவ்வாறு எண்ணங்கள் தோன்றி நின்று மறைந்து வருகின்றன. தோற்றம் மறைவு என்றால் என்ன? பிறப்பு இறப்பு என்றால் என்ன? இரண்டும் ஒன்றே. ‘நாளுநாள்*

சாகின் றாமால் நமக்குநாம் அழாததென்னே' என்றார் வளையா பதியாரும்.

பருவுடல் தோன்றுவதும் மறைவதும் மட்டும் பிறப் பிறப் பாகா.எண்ணங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் பிறப் பிறப்பின் பாற்பட்டனவே. இப்பிறப்பிறப்பு, மெய்யுணர்வு தோன்றும்வரை நிகழ்ந்து கொண்டே போகும். முகிழ்க்கும் ஒவ்வோர் எண்ணமும் ஒவ்வோர் உலகமென்க. ஆதலால், உலகம் எது என்று எங்ஙனம் அறுதியிட்டுக் கூறுவது?

எண்ணமே உடலும் உலகுமாம். அடிப்படை எண்ணம். எண்ணத்தின்படியே எல்லாம் உருக்கொள்ளும். எண்ணம் நுண்மை; உரு பருமை.

## நாடு

உலகைப் பற்றிப் பலர் பலவாறு கூறுப. அவர்தங் கூற்றுக்களை எடுத்த பொருளுக்கேற்ப இங்கே முக்கூறுபடுத்திக் கொள்கிறேன். ஒன்று, உலகம் பூதங்களால் ஆக்கப்பட்ட தென்பது; இன்னொன்று, உலகம் நாடுகளால் (Nations) ஆக்கப் பட்டதென்பது; வேறொன்று, உலகம் கலைகளால் ஆக்கப்பட்ட தென்பது. இம்மூன்றனுள் சிங்க நோக்காக நிற்பது நாடு. நாடு ஒருவகையில் முன்னையதிலும், மற்றொரு வகையில் பின்னைய திலும் ஒன்றும். நாட்டை வெறும் பௌதிகமாகப் பார்ப்பது ஒருவகை; அதைக் கலையாக நோக்குவது இன்னொரு வகை.

நாடு என்பது வெறும் நிலப்பரப்பு மட்டுமன்று. அது கல்வி, தொழில், அரசு, நாகரிகம், வாழ்வு முதலியவற்றையுங் கொண்டது. நிலப்பரப்பு, பூதகாரியம். கல்வி, நாகரிகம், வாழ்வு முதலியன கலையின் பாகுபாடுகள். இவ்விரண்டையுங் கொண்ட ஒன்றே நாடு என்பது.

## தமிழ்நாடு

உலகில் பல நாடுகளிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டுக்கு ஒவ்வொரு பெயருண்டு. நாட்டுப் பெயர்கள் பெரிதும் அவ்வந் நாட்டு மொழியினின்றும் அரும்பியன.

திருவள்ளுவர் தமிழ்நாட்டிற் பிறந்தவர்; தமிழ்மொழியில் நூல் செய்தவர். அவர் நினைவு தோன்றும்போது தமிழ் நாட்டின் நினைவன்றோ தோன்றுதல் வேண்டும்? உலக நினைவு தோன்றுவதென்னை?

ஈண்டுத் தமிழ்நாடென்றது இப்போதுள்ள 'தமிழ் நாட்'டைக் குறிப்பதன்று. அது பழந்தமிழ்நாட்டைக் குறிப்பது.

தமிழ்நாட்டுக்கு அடிகோலி, அதை ஆக்கிய பேரறிஞர் பரந்த நோக்குடையவர். அவர் உலகியலை நன்குணர்ந்தவர் உலகியலில் இரு விதச் சிறப்புக்களுண்டு. ஒன்று சிறியது; மற்றொன்று பெரியது. உலகியல், சாதி மதம் நிறம் மொழி நாடு முதலியவற்றிற் கலந்தும், இவற்றைக் கடந்தும் விளங்குவது. சாதி மதம் மொழி நிறம் நாடு முதலியன கலந்த நிலை சிறியது; இவற்றைக் கடந்தநிலை பெரியது. சிறிய நிலை பன்மை; பெரிய நிலை ஒருமை. பன்மையில் ஒருமை காண முயல்வது அறிவுடைமை. பன்மையைப் பிரிவுக்கும் பிணக்குக்கும் இரையாக்குவது அறியாமை.

### பழந் தமிழர்

பழந்தமிழறிஞர் கருத்து, சிறிய பன்மையில் படியவில்லை. அவர்தம் நோக்கு, பெரிய ஒருமையில் சென்று ஒன்றியது. வேற்றுமை அவர்க்குப் புலனாகவில்லை; ஒற்றுமையே அவர்க்குப் புலனாகியது. அவர் நடாத்திய வாழ்வு அத்தகையது.

பழந்தமிழர் மொழியில் ஈண்டு ஒன்று நினைவிற்கு வருகிறது. அது வருமாறு:-

[1]**'யாதும் ஊரே யாவருங் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா**
**நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன**
**சாதலும் புதுவ தன்றே வாழ்தல்**
**இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்**
**இன்னா தென்றலு மிலமே மின்னொடு**
**வானந் தண்டுளி தலைஇ யானாது**
**கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று**
**நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்**
**முறைவழிப் படூஉ மென்பது திறவோர்**
**காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்**
**பெரியோரை வியத்தலு மிலமே**
**சிறியோரை இகழ்த லதனினு மிலமே.'**

இப் புறப்பாட்டை உற்று உற்று நோக்குக; நோக்கி நோக்கி உன்னுக; உன்னி உன்னி அதில் ஒன்றுக. பாட்டுப் பொருளில் வேற்றுமைக்கு இடமுண்டோ? பிணக்குக்கு இடமுண்டோ? எல்லாம் ஒருமை! யாதும் ஊர், யாவருங்கேளிர் (சுற்றத்தார்).

பழந்தமிழரது பரந்த நோக்கு என்னே! என்னே! அப் பழந்தமிழர் நாடு எங்கே? தமிழ் நாடே! உலகாக விளங்கிய தமிழ்

1. புறநானூறு : 192.

*நாடே! நீ யாண்டுச் சென்றனை! மீண்டும் எழுவையோ? பழந் தமிழே! உன் நாடு சிறுமண்ணாய்க் கிடக்கிறது; பிரிவுக்கும் பிணக்குக்கும் இரையாகிறது. அஃது உலகாக மீண்டும் விளங் குதல் வேண்டும்; திருவள்ளுவர் நாடாதல் வேண்டும்; 'யாதும் ஊரே-யாவரும் கேளிர்' என்ற உனது விழுமிய கொள்கைக்கோர் இலக்கியமாக நிற்றல் வேண்டும். 'யாதும் ஊரே - யாவரும் கேளிர்' என்ற உனது உள்ளுறையன்றோ இந்நாளில் 'சமதர்மம்' 'சமதர்மம்'* (Socialism) *என்று விரித்துப் பேசப்படுகிறது? பல்லாயிரம் ஆண்டு கட்கு முன்னரே நீ சமதர்மம் பேசினை; சமதர்மத்தில் நின்றனை; வாழ்ந்தனை. இந்நாளில் உன்னிலை இரங்கத்தக்கதாயிருக்கிறது. உனது பழமையைக் குறிக்கோளாக் கொண்டு இக்காலத்தவர் வாழ்வு நடாத்துவாராக.*

### திருவள்ளுவர்

*திருவள்ளுவர் யார்? 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சீரிய கொள்கை பிறந்த பெருந்தமிழ்க் குடியில் தோன்றியவர். அவர் நெஞ்சம், சாதி மதம் நிறம் மொழி நாடு முதலிய சிறுமைக் கட்டுகளில் படிந்து கிடக்கவில்லை. அவர் நெஞ்சில் பரந்த உலகே படிந்து கிடந்தது. அது திருக்குறள் என்னும் நூலாக உருக் கொண்டது. இத்தகைய நூல் ஒர் இனத்துக்குரியதாகுமா? உலகுக்குரியதாகுமா? இப்பெருநூலை அருளிய ஒருவர் ஓர் இனத்துக்குரியராவரா? உலகுக்குரியராவரா? எனவே, திருவள்ளு வர் நினைவு தோன்றும் போது உலகமும் உடன் தோன்றுதல் இயல்பே. இதில் வியப்பொன்றுமில்லை.*

### மொழியும் பொருளும்

*திருவள்ளுவர் தமிழ்நாட்டிற் பிறந்தவர். அவர்தந் தாய் மொழி தமிழ்; அவர் தமிழில் நூல் செய்தனர். நூலின் மொழி தமிழ்; பொருளோ உலகுக்குரிய ஒன்று. இது வெள்ளிடைமலை. இவ்வாறு நூல் செய்தோர் அரியர்; செய்வோரும் அரியர். இதுபற்றியே தமிழ்நாட்டுச் சமதர்மப் புலவராய், இற்றை ஞான்று நமது நடுவண் வாழ்ந்த பாரதியார், 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று வீறுகொண்டு மகிழ்ச்சியுடன் ஓதியருளினார்.*

### வரலாறு

*உலகுக்கு ஒரு நூலை அருளிய திருவள்ளுவரது உண்மை வரலாறு நமக்குத் தெரியவில்லை. [1]இப்போது வழங்கி வரூஉம் அவர்தம் வரலாறு பின்னே புனையப்பட்டது. பல தமிழாசிரி யரது வரலாறுகள் சரித்திர முறையில் நமக்குக் கிடைக்கவில்லை.*

இது நாடு செய்த பாவம். 'சரிதம்' என்னும் பெயரால் புனைந் துரைகளே பெரிதும் நாட்டில் உலவுகின்றன. அவரவர் அருளிய நூலைக் கொண்டே அவரவர் நிலையை ஊகித்து உணர வேண்டுவது அறிஞர் கடமை.

திருவள்ளுவர் யாத்த திருக்குறள் என்னும் தமிழ்ப் பொது நிலையம் எல்லார்க்குங் காட்சி வழங்குகிறது. அந்நிலையத்தைப் பார்ப்போம்; அதனுள் புக முயல்வோம்; முயன்று புகுந்தால் திருவள்ளுவரைக் காணலாம். திருவள்ளுவர் இறந்துபட்டா ரில்லை. அவர் உயிருடன் திருக்குறள் நிலையத்தில் வீற்றிருக் கிறார். உலகீர்! அவரைக் காண எழுக; எழுக.

## வைப்புகள்

ஒரு நிலையத்தில் புகுந்து, அதன்கண் வாழ்வோரைக் காணுதற்குப் பல வாயில்களைக் கடத்தல் வேண்டும். திருக்குறள் நிலையத்துக்கும் பல வாயில்களுண்டு. அவையே திருக்குறளி லுள்ள வைப்புகள். அவற்றைப் பார்ப்பதால், போற்றுவதால், அல்லது ஓதுவதால் மட்டும் அவை திறந்து வழிகாட்டா. அவற்றைப் பயின்று பயின்று, அவற்றின் பொருளை உணர்ந்து உணர்ந்து, அவற்றின்படி வாழ்வு நடாத்தல் வேண்டும். இவ்வாழ் வினரை வரவேற்க வாயில்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. வாயில்கள் வழிகாட்டும்; திருவள்ளுவரிடஞ் சேர்க்கும்.

## உரையாசிரியர்

திருவள்ளுவரைத் தாங் காணவும், பிறர்க்குக் காட்டவும் உழைத்தவர் பலர். பலருள் குறிக்கத்தக்கவர் பதின்மர். அப்பதின்மர் பெயர்களை,

***'தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்***
***பரிமே லழகர் பரிதி – திருமலையர்***
***மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்***
***கெல்லை யுரையெழுதி னோர்'***

எனவரூஉம் வெண்பா தெரிவிக்கிறது.

---

1. இப்பொழுது வழங்கப்படும் திருவள்ளுவர் வரலாறு 'கபிலரகவ'லை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இக்கபிலரகவல், பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடக்கத்தில் வாழ்ந்த திருத்தணிகை – வீரசைவப் புலவர் – சரவணப் பெருமாள் ஐயராலும் விசாகப் பெருமாள் ஐயராலும் செப்பஞ் செய்யப்பட்டதென்று சொல்லப்படுகிறது. இதை முதல் முதல் எனக்குச் சொன்னவர் பாம்பன் – குமரகுருதாச சுவாமிகள். சுவாமிகள் அருளிய 'செவியறிவுறூஉ' என்னும் நூலில் 67–ம் பக்கத்தில், இதைப் பற்றிய குறிப்புச் சுருங்கிய முறையில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

   பத்திரகிரியாரால் குறிக்கப் பெற்ற 'கபில காவியம்' வேறு; இங்கே குறிக்கப் பெற்ற 'கபில ரகவல்' வேறு.

பதின்மருள் முதல் முதல் உரை கண்டவர் தருமர். அவர்க்கே எல்லா வாழ்த்தும் வணக்கமும் உரியன.

இப்பொழுது அச்சாகி வெளிவந்துள்ள உரைகள் இரண்டு. ஒன்று மணக்குடவருடையது; மற்றொன்று பரிமேலழ கருடையது.

பழைய உரைகளுள் இறுதியது பரிமேலழகருடையது. இதுவே பெரிதும் போற்றப்படுவது. பரிமேலழகர் பெருங் கல்வியாளர்; வடமொழி தென்மொழிப் புலவர். அவர்தம் உரையில் அவரது காலத்துக்கேற்ற பொருள்களும், எக்காலத்துக்கு முரிய பொருள்களுமாக இரண்டுஞ் செறிந்து கிடக்கின்றன.

வேறு மொழிப் புலவர் சிலரும் திருவள்ளுவரைக் காண முற்பட்டனர். இன்னும் பலர் முற்படுதல் வேண்டும். திருவள்ளுவர் ஒளி, உலகம் முழுவதும் காலும் நாளே நன்னாளாகும். அந்நாள், யாதும் ஊராகவும் யாவருங் கேளிராகவும் பொலியுந்த திரு நாளாகும்.

திருக்குறளை யான் இளமையில் ஒருவாறு பயின்றேன். பின்னே மணக்குடவரும் பரிமேலழகரும் உதவியுள்ள உரை களைத் துணையாக் கொண்டு ஆய்ந்து ஆய்ந்து பார்த்தேன். இவ் விருவரும் தமிழ்த்தாய்க்கு ஆற்றியுள்ள தொண்டை எம்மொழியால் வழுத்தவல்லேன்! மனமொழி மெய்களால் இருவரையும் போற்றுகிறேன்.

**காலத் திறவு**

திருக்குறள் நிலையத்துக்கு இக்காலத்துக்குரிய திறவு ஒன்று வேண்டும் என்னும் உணர்வு பலரிடை எழுந்ததையான் அறிவேன். இவ்வுணர்வு அடிக்கடி என்பாலுந் தோன்றி நின்ற ழிந்ததுண்டு.

திருக்குறளுக்கு ஒரு புத்துரை காண்டல் வேண்டும் என்ற எண்ணம் முதல் முதல் எழுந்த போது எனக்கு வயது முப்பத் தொன்றிருக்கும். இவ்வுரை எழுதப் புகுந்தபோது எனது வயது ஐம்பத்துமூன்று. இந்நாளில் யான் அந்நாளைய கலியாண சுந்தரனாயில்லை; அந்நாளைய கலியாணசுந்தரன் பெரிதும் ஏடுகளையே கட்டி அழுதவன்; ஏட்டுப்புழுவாயிருந்தவன். இப்பொழுது ஏட்டுக் கல்வி அவனை விடுத்து ஒருவுகிறது; இயற்கைக் கல்வி அவனைப் புல்குகிறது. இயற்கையின் உள்ளுறை யாயுள்ள இறைக் கல்வியை அவன் வேட்டு நிற்கிறான்.

## இயற்கை வாழ்வு

யான் இப்பொழுது ஏட்டுக்கும் இறைக்கும் இடையில் நிற்கிறேன். இறையருள் கூடின் திருவள்ளுவரை நேரே காணும் பேறு பெறுவேன்; மற்றவர்க்கும் அவரைக் காட்டுவேன். இறையருள் எனக்குக் கிட்டுமோ? கிட்டாதோ? அறிகிலேன்.

இயற்கை அன்னையின் திருவருளையாதல் யான் முற்றும் பெற்றேனா? இல்லை. நகர வாழ்வு அதைத் தகைந்து நிற்கிறது. நகர வாழ்வை விடுத்தால் சில சேவைகளுக்குத் தடைநேரும். என் செய்வேன்! பலதிற வேலைச்சூழலிடை மூழ்கி நிற்குஞ்சிறியேன், இயற்கை அன்னையின் திருவருட்டுணை கொண்டு, திருவள்ளுவரைக் காண ஒல்லும்வகை முயல்வேன்; வழுக்கியும் வீழ்வேன். யான் மனிதன்; குறையுடையேன்; சிறுமையுடையேன்; அறியாமையுடையேன்.

ஏட்டினின்றும் இயற்கையினிடமும், இயற்கையினின்றும் அதன் உள்ளுறையான இறையினிடமுஞ் செல்லுதல் வேண்டும். இஃதொருவித ஒழுங்கு முறை. இம்முறையைத் தொல்காப்பியனார் செவ்வனே கோலியுள்ளனர்.

தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களால் ஆக்கப் பெற்றது. மூன்றனுள் எழுத்துஞ் சொல்லும் ஏட்டுக் கல்விக்குத் துணை செய்வது. இயற்கை வாழ்வு இறைவாழ்வைக் கூட்டுதல் இயல்பு. இம்முறை ஈண்டுக் கருதற்பாலது. இம்முறையால் திருவள்ளுவரை வழிபட முயல்கிறேன். இயற்கை அன்னையின் துணை வேண்டும்.

# நூல்

*திருவள்ளுவர் அருளிய நூல் திருக்குறள். திரு+குறள்= திருக்குறள். திரு, பல பொருள் ஒரு சொல். இங்கே இரண்டு பொருள் குறிக்கத்தக்கன. ஒன்று செல்வம்; மற்றொன்று அழகு. செல்வம்: அறம், பொருள், இன்பம். அழகு: கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கம்; இது பேராசிரியர் கூறியது. குறளில் முச்செல்வமென்னும் அறம்- பொருள் - இன்பம் உண்மையானும், கண்டோரால் விரும்பப்படுந் தன்மை நோக்க மாகிய அழகு உண்மையானும் அது, திரு என்னும் பொருந்திய அடைபெற்றுத் திருக்குறள் என்று அழைக்கப்படலாயிற்று. திருவையுடைய குறள் என்று விரிக்க.*

*குறள் - குறுமை; குறுகியது. குறுகிய பா - குறட்பா. இது குறுவெண்பாட்டு என்றும், குறள் வெண்பா என்றுஞ் சொல்லப் படும். முதல் அடி நான்கு சீரும், இரண்டாம் அடி மூன்று சீருமாக ஏழு சீர் கொண்டது குறள் வெண்பா.*

[1]***'குறுவெண் பாட்டிற் களவெழு சீரே'***

*குறள் வெண்பாக்களால் ஆக்கப்பட்ட ஒரு நூல், 'குறள்' என்னும் பெயர் பெறலாயிற்று.*

*குறள் - குறுமை; பண்புப் பெயர்.*

*குறள், ஈரடி வெண்பாவுக்காம்போது பண்பாகு பெயராய், இவ்வெண்பாக்களால் ஆக்கப்பட்ட நூலைக் குறிக்கும் போது கருவியாகு பெயராய், இருமடியாகு பெயராதல் காண்க.*

## முப்பால்

*திருக்குறள் முப்பாலுடையது. முப்பால், அறம் - பொருள் - இன்பம் என்பன. 'வீடு எங்கே? வீட்டைத் திருவள்ளுவர் தனியே வகுத்துக் கூறாது விடுத்த தென்னை?' இதற்குக் கூறப் படுங் காரணம் பலப்பல. திருவள்ளுவர் வீட்டையுங் கூறினார் என்பதை நிறுவிக் காட்டுதற்கு, 'வீட்டுப் புலவோர்' படும்பாடு என்னே! அவர், 'கடவுள் வாழ்த்து' 'துறவு' 'நிலையாமை'*

---

1. தொல் – செய் – 158.

'மெய்யுணர்வு' 'அவாவறுத்தல்' முதலிய அதிகாரங்களை எடுத்துக் காட்டுவர்; மூலை முடுக்களிலுள்ள சில குறட்பாக்களையும் சொற்றொடர்களையும் சொற்களையும் எடுத்துக் காட்டுவர். திருவள்ளுவர்மீது அவர் கொண்டுள்ள அன்பு பாராட்டற்குரியது. அவர் எடுத்துக் காட்டும் அகச் சான்றுகளெல்லாம் திருவள்ளுவர் வீட்டுண்மையில் உறுதியுடையார் என்பதை வலியுறுத்துவன வாகவேயிருக்கின்றன. திருவள்ளுவர் வீட்டுண்மையில் உறுதி யுடையார் என்பதை மறுப்பார் யார்? 'திருவள்ளுவர் வீட்டுக்கெனத் தனிப்பால் வகுத்துக் கூறாமைக்குக் காரண மென்னை' என்னும் வினாவிற்கு எடுத்துக்காட்டுக்களில் யாண்டாயினும் விடை யிருக்கிறதா என்பது சிந்திக்கத்தக்கது.

### வீடு

வீடு, வாக்கு மனங்கட்கு எட்டாதது. அத்தகைய ஒன்றை எவ்வாக்கால் விளம்புதல் கூடும்? இதுபற்றியே பரிமேலழகரும், '* * * வீடென்பது சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத் தாகலின், துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது, இலக்கண வகையாற் கூறப்படாமையான், நூல்களாற் கூறப் படுவன ஏனைய மூன்றுமே யாம்' என்று ஒருவாறு விளக்கிப் போந்தனர்.

அறவழி நின்று, பொருளாக்கி, இன்பம் நுகர்வோர் வீடு அடைதல் ஒருதலை. அறம் பொருள் இன்ப வாழ்வின் பயன் வீடு. அடைவாகவும் பயனாகவுமுள்ள ஒன்றை எப்படிச் சொல்லால் அறுதியிட்டுச் சொல்வது? வீடு, அறம் பொருள் இன்பங்க ளினின்றும் வேறுபட்டு நிற்பதன்று. அது மூன்றினும் விரவி நிற்பது. திருக்குறளிலுள்ள ஒவ்வொரு பாலிலும் வீடு விரவியே நிற்கிறது.

வீடு, விடு என்னும் அடியினின்றும் பிறந்தது. விடுதலை வீடு. கட்டினின்றும் விடுதலையடைவது வீடு. வீடு எங்கிருப்பது? அதற்கென ஒரு தனியிடம் உண்டோ? கட்டுடையார்க்கு அது புலனாகாமையால், அவர் அதற்கென ஒரு தனியிடம் வகுத்தனர் போலும்! வீட்டை மறைத்திருப்பது கட்டு. கட்டு அறுந்ததும் வீடு பொருளாகும்.

### கட்டு

கட்டும், கட்டின் பாகுபாடுகளும் திருக்குறளில் சில விடங்களில் புகுந்திருக்கின்றன. 'இருள்சேர் இருவினை', 'அழுக்கா றவா வெகுளி இன்னாச்சொல்', 'பிறப்பென்னும் பேதைமை,' 'சார்புகெட', 'காமம் வெகுளி மயக்கம்', 'பற்று விடற்கு' எனவரூஉந் திருக்குறள் மொழிகளை நோக்குக.

கட்டறுந்தால் மனம் மாசிலதாகும். மாசற்ற இடம் வீடாய்ப் பொலியும். இந்நிலையுற்றார்க்கு எல்லாம் வீடே. 'எந் நாளும் இன்பமே துன்பமில்லை' என்று அப்பரும், 'அருநரகவை யும் நீ' என்று நம்மாழ்வாரும், 'பரலோகராச்சியம் உம்முடைய உள்ளத்திலிருக்கிறது' என்று கிறிஸ்து பெருமானும் அருளிய செம்மொழிகளை உன்னுக. இம்மொழிகளை இப்பெரியார் யாண்டிருந்து அருளினர்? இவ்வுலகத்திலிருந்தே அருளினர். இவருக்கு இவ்வுலகம் எவ்வாறு தோன்றிற்று? வீடாகவே தோன்றிற்று. ஆதலால், வீடு என்பது ஓரிடத்தில் தனியே இருப்பதன்றென்க.

### பழமை

கட்டையறுத்தற்கு அறவழியில் நின்று, கல்வி பயின்று, தொழில் புரிந்து, பொருளீட்டி, இன்பம் நுகர்தல் வேண்டும். இச்செந்நெறியே வாழ்வுக்குரியது. இதுவே இயற்கை வாழ்வு. இந்நுட்பமுணர்ந்த அறிஞர், அறம் பொருள் இன்ப வாழ்வையே உலகுக்கு அறிவுறுத்தினர். இம்மூன்றிற் கலவாத வீடு ஒன்று தனித்திருப்பதாக அவ்வறிஞர்க்குத் தோன்றவில்லை. அறம் பொருள் இன்ப வாழ்வில் வீடு பொலிதல் அவர்க்கு நனிவிளங் கிற்று. உண்மை கண்டவர் உண்மை உரைத்தல் இயல்பு.

அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றில் வீடும் விரவி வருமாறு கூறுவது பழைய முறை. பழைய நூல்கள் யாவும் இம் முறை வழியே பிறந்தன. இடைக்காலத்தில் தோன்றிய நூல் களும் உரைகளும் பழங் கொள்கையைக் கலக்கிவிட்டன. இதற்குக் காரணம் காலப் போக்கென்று கூறுவது பொருத்தம். திருவள்ளுவர் முப்பாலே வகுத்தருளினர்.

### போலி வீடு

நாளடைவில் வீட்டைப் பற்றிய தனி நூல்கள் பெருகின. இவற்றுள் மிகச் சிலவே பழங் கொள்கைக்குத் துணை போவன. பல, அறம் பொருள் இன்ப வாழ்வில் பொருளற்ற நிலையா மையையும், இயற்கையை வெறுத்தல் - பெண்ணை வெறுத்தல் - என்னும் போலித்துறவையும் நுழைத்து நல்வாழ்வுக்கு இடர் செய்தன. இந்நூற் பெருக்கால், அறம்- பொருள் - இன்ப வாழ்வு அருகுவதாயிற்று. மக்கள் எண்ணம், அறம் பொருள் இன்பக் கலப்பற்ற போலி வீட்டில் - வெறும் பாழில் - படிந்தது. அதனால் மன்பதையில் தீயொழுக்கம் புகுந்தது. இந்நாளில் உலகம் எக்காட்சி வழங்குகிறது? கொலையுங் களவுங் கள்ளுங் காமமும் பொய்யுந் தாண்டவம் புரியாத இடமும் உளதோ?

தனித்த வீடென்று அறம் பொருள் இன்ப வாழ்வை வெறுக்க ஏவும் நூல்களை இயற்றுவது பாவம். அறம் பொருள் இன்ப வாழ்வின் பயன் வீடாயிருத்தலான், வீட்டைத் தனியே பிரித்துக் கூறுவது எற்றுக்கு? இது வெறும் பாழைக் கூறுவதாக வாக்கு மனமுடைய மக்களால் கொள்ளப்படும். அறம் பொருள் இன்ப வாழ்வுக்குரிய நூல் செய்வோரே உலகுக்கு நலஞ் செய்வோராவர்.

அறம் - பொருள் - இன்பம் - அற்ற தனித்த வீட்டு நூல் களால் உலகம் உற்ற அல்லல் போதும்; போதும். அறம் பொருள் இன்ப வாழ்வு, வீட்டை உணர்த்தவல்லது. ஆதலால், இந்நாளில் அறம் பொருள் இன்ப வாழ்வு அதாவது இயற்கை வாழ்வு பெருகுதல் வேண்டும். இதற்கு உறுகருவியாகத் துணைபுரிய வல்லது திருவள்ளுவரது முப்பால் நூல்.

### மரபு

திருவள்ளுவர் அருளியது முப்பால் நூல். (முப்பால், அறம்-பொருள்-இன்பம் என்பன). அறமும் பொருளும் புறத்தில் அடங்குவன; இன்பம் அகத்தில் அடங்குவது. அகம் புறம் என்னும் இரண்டும், அறம் பொருள் இன்பம் என்று மூன்றாக விரிந்தன.

'அகம் புறம்' தமிழ் மரபென்றும், 'அறம் பொருள் இன்பம்' வடமொழி மரபென்றும் சொல்வோரும் உளர். 'எதனின்றும் எது பிறந்தது? எது முன்னையது? எது பின்னையது?' என்று போரிடுவோரும் உளர். போராட்டத்துக்கும் திருவள்ளுவர் நூலுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பது எனது கருத்து. திருவள்ளுவர் நூல், மரபு கடந்தது. அது மன்பதைக்குரியது. அதை 'மரபு' என்னுஞ் சிறையில் புகுத்த முயல்வது அறமாகாது.

உண்மை எவருடைமை? அது தமிழருடையதா? மற்ற வருடையதா? ஓர்க. தமிழறிஞரிடை 'அகம் புறம்' என்று தோன்றிய உண்மை, மற்றவரிடை 'அறம் பொருள் இன்ப'மாகத் தோன்றியிருக்கலாம். இவரிடை 'அறம்பொருளின்ப'மாகத் தோன்றி உண்மை, அவரிடை 'அகம் புற' மாகத் தோன்றியிருக் கலாம். ஒவ்வொரு நாட்டறிஞரிடை ஒவ்வொருவித உண்மை தோன்றும். அஃது அவ்வந்நாட்டாருடைமை என்று நினைப்பது தவறு. அறிஞர் எந்நாட்டவராயினும் அவர் காணும் உண்மை உலகுக்கு உரியதாகும். அதை, மரபின்பாற்படுத்திப் போரிடுவது அறியாமை. அறிஞர் உலகுக்கு உரியவர்; அவர் பிறந்த நாட்டுக்கு மட்டும் உரியவராகார்.

திருவள்ளுவர் தமிழ்நாட்டிற் பிறந்தவர்; தாய்மொழியை நன்கு பயின்றவர். அவர் அந்நாளில் தமிழ் நாட்டிற் புகுந்த பிராகிருதம், பாலி, சமஸ்கிருதம் முதலிய மொழிகளிலுள்ள நூல்களையும் பயின்றிருப்பர். திருவள்ளுவர் தாம் பெற்ற கலைப்புலமை யளவில் நின்று திருக்குறளை யாத்தனர் என்று சொல்வதற்கில்லை. இதனை அவர்தம் நூலை ஆராய்வதால் தெளிதல் கூடும்.

திருக்குறளை ஆய்ந்து பார்த்தால், அது கலைப் புலமை கடந்த இயற்கைப் புலமையால் முகிழ்த்த தெள்ளறிவினின்றும் பிறந்ததென்பது விளங்கும். ஆராய்ச்சியாளர், சாதி வெறி மதவெறி மொழிவெறி முதலிய வெறிகளற்றவராயிருத்தல் வேண்டும்.

திருவள்ளுவர், கற்பன கற்றார்; கேட்பன கேட்டார். அவர், தாம் கற்றனவும் கேட்டனவும் வாழ்வில் ஒன்றப் பெறுதற்கு இல்வாழ்க்கையேற்று, இயற்கையோ டியைந்த வாழ்வு நடாத்தி, அறவழியில் நின்று, தொழில் புரிந்து, பொருளீட்டி, இன்பந் துய்த்து, நன்மக்களைப் பெற்று, அன்பராய், விருந்தோம்பி, எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தண்மை எய்தி, மனமா சகன்ற அறவோராய், தாம் பெற்ற இன்பத்தை உலகமும் பெறுதல் வேண்டித் 'திருக்குறள்' என்னுந் தனி நூலை அருளினர்.

நாடு, தனது பழங் கொள்கையினின்றும் வீழ்ந்து, சாதி வெறி மதவெறி மொழிவெறி முதலிய சிறுமைகட்கு இரையான போது, அவ்வவ் வெறியர் திருவள்ளுவரைப் பற்றிப் பலப்பல வாறு கீறலாயினர். வெறி ஏறிய மதியில் உண்மை விளங்குங் கொல்? வெறியற்ற மதிகொண்டு திருக்குறளை ஆராய்க; ஆராய்ந்தால் திருக்குறள், மரபு கடந்த ஒரு நூலாகவே விளங்கும்.

# பாயிரம்

'ஆயிர முகத்தான் அகன்ற தாயினும் - பாயிரமில்லது பனுவ லன்றே' என்பது ஆன்றோர் மொழி. பாயிர இயல், இலக்கண நூல்களிலும் உரைகளிலும் விரித்துப் பேசப்பட்டிருக்கிறது.

பாயிரத்துக்குப் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்று நூன்முகம் என்பது. நூலின் முகம் பாயிரம் எனில், அதன் சிறப்புக்கு விளக்கவுரை வேண்டுவதில்லை.

**நூன்முகம்**

முகம் யாக்கையின் ஓர் உறுப்பு; அது சிறந்த உறுப்பு. முகமில்லா உருவம் உருவம் ஆகாது. அஃது உருவம் என்னும் பெயரை இழக்கிறது. முகம் அகத்தை உணர்த்துவது. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது பழமொழி. 'முகம்போல முன்னுரைப்ப தில்' என்றார் பெரியார்.

பாயிரம் முகம் போன்றது. நூலின் அகத்தைப் பாயிர முகத்திற் காணலாம். நூலின் பொருளடக்கத்தை உணர்த்துவது நூன்முகம். பாயிரத்துக்குப் 'பொருளடக்கம்' என்றொரு பொருளும் உண்டு. 'பாயிரத் திலக்கணம் பகருங் காலை- நூனுதல் பொருளைத் தன்னகத் தடக்கி - யாசிரிய மானும் வெண்பா வானும் - மருவிய வகையான் நுவறல் வேண்டும்' என்பது சூத்திரம்.

முப்பால் கொண்ட திருக்குறளுக்கு முகம்போன்றது பாயிரம். பாயிரம் - கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்னும் நான்கு அதிகாரங்களால் ஆகியது. இந்நான்கனுள் கடவுள் வாழ்த்துப் பொது; ஏனைய மூன்றும் சிறப்பு. நூலின் பொருண்மை இம்மூன்றிலும் அடங்கிக் கிடக்கிறது. எல்லாம் கடவுள் வாழ்த்தில் அடங்கும். கடவுள் வாழ்த்தைப் பாயிரத்துக்குப் பாயிரம் என்று கொள்க.

**அறம் – பொருள் – இன்பம்**

அறம் - பொருள் - இன்பம் என்னும் மூன்றனுள் அரிமா நோக்குடையது பொருள். பொருள், இன்பத்துக்கும் அறத்துக்

கும் இன்றியமையாதது. பொருளில்லையேல் இன்பத்துக்கும் அறத்துக்கும் ஆக்கம் ஏது?

பொருள் ஆக்கமுடையதாயினும் அதனடியிலும், அதன் வழி நிகழும் இன்பத்தினடியிலும் அறம் நிலவுவதாயிருத்தல் வேண்டும். அறமற்ற பொருள் பொருளாகாது; அஃதற்ற இன்பமும் இன்பமாகாது. பொருளுக்கும் இன்பத்துக்கும் அறத்தின் சார்பு தேவை. இரண்டுக்கும் அடிப்படை அறம்.

அறம் மரம் போன்றது; பொருளும் இன்பமும் கவடுகள் போன்றன. இஃது 'அறன் வலியுறுத்த'லில் தெளிவு செய்யப் படும். அறம் தனித்தும், பொருளின்பங்களில் ஒன்றியும் நிலவுவது. இப்பெற்றி அறத்திலுண்மையால் அது முதலில் வைக்கப் பட்டது. அறமும் இன்பமும் பொருளால் நிகழ வேண்டு மாதலின் பொருள் நடுவண் வைக்கப்பட்டது. பயன் இன்பமா தலின் அஃது இறுதியில் வைக்கப்பட்டது.

**நடைமுறை**

அறம் பொருள் இன்பம் என்னும் வழக்குத் தொன்று தொட்டது. இவ்வழக்குப் பற்றியே திருவள்ளுவர் நூல் யாத்தனர். நடைமுறையில் இவ்வழக்கு மாறுபடும். மாறுபாட்டைப் பாயிரத்திற் காணலாம்.

அறம் பொருள் இன்பம் என்ற வழக்கு நடைமுறையில் [1]பொருள் இன்பம் அறம் என்று மாறிவரும். இன்பமும் அறமும் நிகழ்தற்குப் பொருட்டுணை வேண்டுமாதலின், பொருள் முதலில் நிற்கலாயிற்று.

***'வடுவிலா வையத்து மன்னிய மூன்றின்***
***நடுவண தெய்த இருதலையு மெய்தும்***
***நடுவண தெய்தா தானெய்தும் உலைப்பெய்***
***தடுவது போலுந் துயர்'***

எனவரூஉம் நாலடியார் பாட்டைப் பார்க்க.

**வைப்பு**

பொருள் வழி நிகழ்வது இன்பம். இரண்டுக்கும் அடிப் படை அறம். இம்முறைப்பாட்டை உளங்கொண்டு, 'வான் சிறப்பு' 'நீத்தார் பெருமை' 'அறம் வலியுறுத்தல்' ஆகிய பாயிர அதிகாரங்களில் படிக; படிந்து திளைக்க. இவை முறையே

1 பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம்.தொல்.

*பொருள் - இன்பம் - அறம் - ஆகிய மூன்றற்கும் அறிகுறியாக நிற்றலை உணர்தல் கூடும்.*

*அரசு, கல்வி, தொழில், செல்வம் முதலியன பொருளின் பாற்பட்டன. [1]இவையெல்லாம் வான் வறண்டால், அறவழியில் நடைபெறுங்கொல்? பொருள் நலத்துக்கு மழை வேண்டற் பாலது. இதனால் வான்சிறப்பு, பொருட்பாலை உணர்த்துவ தென்றறிக.*

*'நீத்தார் பெருமை' என்ன கூறுகிறது? குணமென்னுங் குன்றேறி நின்றார் பெருமை கூறுகிறது. குணமென்னுங் குன்றேறி நின்றார் செயலென்னை? எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண் டொழுகல். இந்நிலை, தலைவனுந் தலைவியுஞ் சேர்ந்து வாழ்ந்து நுகரும் இன்ப அன்பின் பெருக்காலும் பயனாலும் கூடுவது. தனித்தனியே வாழ்வு நடாத்துவோர்க்கு இன்ப அன்பு நிகழ்தல் அரிது. கலப்பிலேயே அன்பு எழும். அன்பு மனமாசைக் கழுவுவது.*

*மனமாசுக்கு ஊற்று எது? முனைப்பு. முனைப்புள்ள இடத்தில் எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அன்பு கிளந்தெழாது. முனைப்பைச் சாய்க்கும் ஆற்றல் கலப்பால் நிகழும் அன்புக்கு உண்டு. இந்நுட்பம், 'நீத்தார் பெருமை'யில் சிறிதும், நூலிடைப் பெரிதும் விளக்கப்படும். 'நீத்தார் பெருமை' காமத்துப்பாலின் தெளிவு என்பது எனது ஆராய்ச்சியிற் போந்த உண்மை. மனமாசை நீத்த அறவோரே நீத்தாரெனப்படுவர்.*

*'அறன் வலியுறுத்த'லில் அறமிருத்தல் வெளிப்படை, இதற்கு விரிவுரை வேண்டுவதில்லை.*

*பொருளும் இன்பமும் அறவழியில் நிகழ்தற்குக் கடவுள் உண்மையில் உறுதி தேவை. இவ்வுறுதி இல்வழி அறநெறிக்கு இடர் விளையும். இதனால் 'கடவுள் வாழ்த்து' முதலில் அமைக்கப்பட்டது.*

*பொருளும் இன்பமும் அறத்தில் அடங்கும்; எல்லாம் கடவுளில் அடங்கும்.*

*'மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறம்.' இது கடவுள் நிலை. எனவே, திருவள்ளுவர் முப்பால் வாயிலாக ஒரு சிறந்த அற நூல் உலகுக்களித்தனரென்க. இதனை விரிந்த முறையில் நூலின் வாயிலாகவும், சுருங்கிய முறையில் பாயிரத்தின் வாயிலாகவும் உணரலாம்.*

---

1 **வானம் சுருங்கத் தானம் சுருங்கும்.**

**பாயிரத்தின் விழுப்பம்**

பர்னார்ட்ஷா என்றோர் ஆங்கிலப் புலவர் இருக்கிறார். அவர் உலகறிந்த ஒருவர். அவரால் பன்னூல்கள் எழுதப்பட்டன. அந்நூற்களின் பாயிரங்களைக் கொண்ட ஒரு திரட்டு நூல் வெளிவந்திருக்கிறது. அப்பாயிர நூற்கொரு பாயிரம் பர்னார்ட்ஷாவால் வரையப்பட்டது. அதில் அவர், நூலின் பாயிரம் அறிஞர்க்கென்றும், நூல் மற்றவர்க்கென்றுங் குறித்துள்ளனர். இக்குறிப்புப் பாயிரத்தின் விழுப்பத்தை உணர்த்துவது. நூலின் உள்ளுறையைப் பாயிரத்தில் நுண்மையாகத் திகழ வைப்பதற்குக் காரணம் அறிஞர்க்கு நூலின் உள்ளுறை எளிதில் விருந்தாதற் பொருட்டேயாம்.

# பொது

## 1. கடவுள் வாழ்த்து

*திருக்குறள் அதிகாரத் தலைப்புக்கள், பெரிதும் ஒவ்வோர் அதிகாரத்தின் முதற்பாட்டிலுள்ள அதிகாரப் பொருண்மை குறிக்குஞ் சொல்லையோ சொற்றொடரையோ கொண்டன வாயும், சிறிது அதிகாரப் பொருண்மையைக் கொண்டன வாயும் அமைந்திருத்தல் வெள்ளிடைமலை.*

*இவ்வதிகாரத்தை நோக்குழி, இஃது 'ஆதிபகவன்' அல்லது 'உலக முதல்' என்னுந் தலைப்புடையதா யிருக்கலாம் என்று தோன்றுகிறது. திருவள்ளுவர் அணிந்த தலைப்பு எதுவோ தெரியவில்லை.*

*'கடவுள் வாழ்த்து' என்ற தலைப்பே ஏடுகளில் மிளிர்கிறது. இத்தலைப்பே பழையதாயின், இஃது அதிகாரப் பொருண்மை கொண்டு சூட்டப்பெற்றதெனக் கோடல் வேண்டும். ஆதிபகவன் - உலக முதல் - கடவுள் - இவை யாவும் பொருண்மையில் வேற்றுமையுடையனவல்ல; எல்லாம் ஒன்றே.*

### கடவுள்

*கடத்தலையுடையது கடவுள் என்றும், எல்லாவற்றையுங் கடந்து நிற்பது கடவுள் என்றும், உள்ளமாகிய உயிரைக் கடவுவது (செலுத்துவது) கடவுள் என்றும் பலவாறு கூறுப. அவரவர் அறிவாற்றலுக்குத் தக்கவாறு கடவுள் பொருளாகிக் கொண்டே போகும். மெய்யுணர்வு விளங்கியதும் கடவுளின் உண்மைநிலை புலனாகும்.*

*கடவுளை அது என்றும், அவள் என்றும், அவன் என்றும் சொல்வது உலக வழக்கு. ஊர் பேரில்லா ஒன்றை எப்படிச் சொன்னாலென்ன?*

### மூவித நிலை

*கடவுள் ஒன்றே. அதன் இயல்கள் பல. பல இயல்களைத் திரட்டி மூவகைப்படுத்தலாம். ஒன்று எல்லாவற்றையுங் கடந்து தனித்து நிற்கும் நிலை; மற்றொன்று எல்லாவற்றிலும் நீக்கமறக்*

கலந்து நிற்கும் நிலை; இன்னொன்று குருவினுள் கூர்ந்து விளங்கும் நிலை. முன்னையது வழிபாட்டுக்குரியதாகாது; பின்னையன வழிபாட்டுக்குரியனவாய்த் துணைபுரிவன.

மனமுடைய மக்கள் - வாக்குடைய மக்கள் - எல்லா வற்றையுங் கடந்து நிற்கும் ஒன்றை எப்படி நினைத்தல் கூடும்? எப்படி வாழ்த்தல் கூடும்?

எல்லாமாயுள்ள நிலை நினைத்தற்குரியது; வாழ்த்தற் கரியது. இதுவே கடவுள் இயற்கையை உடலாக் கொண்ட நிலை. இயற்கை உடல்; கடவுள் உயிர்.

இயற்கையில் இறை நீக்கமறக் கலந்துள்ள நுட்பம், இயற்கை வழிபாட்டாலேயே சிலர்க்கு இயல்பாக விளங்கும். பலர்க்கு அஃது அவ்வழிபாட்டால் விளங்குவதில்லை. இப்பலர்க்குக் குருநாதன் அருள் தேவை. கடவுள் குருநாதன் உள்ளத்தையுங் கோயிலாக்கொண்டு உயிர்கட்கு அருள் செய்தலால் கடவுள் நிலைகளுள் குருநாதன்நிலையும் ஒன்றாகும். குருநிலை அதி காரத்துள் விளக்கப்படும். (குருநிலையைத் தனியாக் கொள்ளாது, இயற்கை நிலையுடன் ஒன்ற வைப்பதும் ஒருவகை.)

**வாழ்த்து**

தலைப்பு, ‘கடவுள்’ என்றிராமல், ‘கடவுள் வாழ்த்து’ என்றிருத்தலால், அதிகாரத்துள் வாழ்த்து யாண்டுளது என்று சிலர் கருதலாம். முதற்பாட்டில் வாழ்த்துக்குரிய கடவுள் உண்மையும், மற்றப் பாக்களில் வாழ்த்தும் சொல்லப்பட்டி ருத்தலைச் சிந்தித்துப் பார்த்தால் ‘கடவுள் வாழ்த்து’ என்பதன் நுட்பம் இனிது விளங்கும்.

வாழ்த்து, முன்னிலை - படர்க்கை - வழி நிகழ்வதுண்டு. இங்கே சொல்லப்பட்ட வாழ்த்துப் படர்க்கையின்பாற்பட்டது.

**உள்ளுறையும் அமைவும்**

‘கடவுள் வாழ்த்’தில் கடவுள் எல்லாவற்றையுங் கடந் துள்ளமை, இயற்கையை உடலாக் கொண்டமை, குருவினுள் கோயில் கொண்டமை, திருவடி போற்றல் ஆகிய நான்கு பொருள் பொலி தருகின்றன. முதல்நிலை வழிபாட்டுக் குரிய தன்றாதலின், அதை முதற்பாட்டில் நுண்மையாகவும், இரண்டாவது வழிபாட்டுக்குரியதாயினும் அதன் பயன் சிலர்க்கே விளைவதாதலின் அதை இரண்டாம் பாட்டில் குறிப்பாகவும், மூன்றாவது பலர்க்கும் பயன்படுவதாதலின் அதை மூன்றாம் பாட்டில் விளக்கமாகவும், நான்காவது செயலுக்குரிய

*தாதலின் அதை ஏழு பாக்களில் விரிவாகவும் திருவள்ளுவர், 'கடவுள் வாழ்த்'தில் அருளியுள்ளதை ஆழ நினைந்து தெளிவு பெற வேண்டுவது மக்கள் கடமை.*

**(i) கடவுள் உண்மை**

**1**

***அகர முதல எழுத்தெல்லாம் ஆதி***
***பகவன் முதற்றே உலகு.***

**பொருள்**

*எழுத்து எல்லாம் அகரம் முதல - (உலகிலுள்ள) எழுத்துக் களெல்லாம் (ஆதி) அகரத்தை முதலாக உடையன, (அது போல) உலகு ஆதிபகவன் முதற்றே - உலகம் முழு முதற் கடவுளை முதலாக உடையது.*

**கருத்து**

*உலகம் முழுமுதற் கடவுளை முதலாக உடையது.*

**விருத்தி**

**எழுத்தெல்லாம் அகரம் முதல**

*எழுத்து - தொழிற் பெயர்; நாதத்தினின்றும் ஒலியாகவும் வரியாகவும் எழுவது; முகிழ்ப்பது: ஆகுபெயர்.*

*எழுத்து எல்லாம் - உலக மொழிகளிலுள்ள எழுத்துக் களெல்லாம்.*

*அ - ஆதி நாதம்.*

*கரம் : எழுத்துச் சாரியை.*

*முதல - முதல் என்னும் பெயரினடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று; பன்மை. முதல் - காரணம்.*

**எழுத்தெல்லாம்**

*எழுத்தெல்லாம் என்றது, உலகிலுள்ள எல்லா மொழிகளின் எழுத்துக்களையுமென்க. உலகிலுள்ள மொழிகள் இவ்வளவின என்று அறுதியிட்டுக் கூறுதல் இயலாது. ஆராய்ச்சியாளர் மொழிகளின் தொகையை ஒருவாறு கணக்கெடுத்துள்ளனர். அவர்தங் கணக்கில் அகப்படாத மொழிகளுமிருக்கலாம். இது காறும் கணக்கில் அகப்பட்டுள்ள மொழிகளின் தொகை மூவாயிரம். இவற்றிற் பல வரிவடிவம் பெற்றன; சில வரிவடிவம் பெறாதன.*

### அகரம்

உலகிலுள்ள மொழிகளின் எழுத்துக்களெல்லாம் அகர ஒலியையே முதலாகக் கொண்டியங்குகின்றன. இஃதென்ன வியப்பு? பல்வேறு நாடு - பல்வேறு வகுப்பு - பல்வேறு நாகரிக முடைய மக்கள் பேசும் பல்வேறு மொழிகள் அகர ஒலியை முதலாகக் கொண்டிருத்தல் வியப்பே. இஃது உயிர்கட்கெல்லாம் பிறப்பிடம் ஒன்றே என்னும் உண்மையைக் குறிப்பாக உணர்த்து வதாகும். இதனின்றும் அறியக்கிடப்பது உலக சகோதரநேயம் (Universal Brotherhood).

எழுத்துக்கட்கெல்லாம் முதலாக உள்ள அகர ஒலி அளவில் ஆசிரியர் நிற்கிறாரில்லை. அவர் அகர ஒலியின் வழியே அகரத்தின் அடியிற் செல்கிறார்.

அகரம் ஒவ்வொரு மொழியில் ஒவ்வொரு வித வடிவம் பெற்றிருக்கிறது. அவ்வடிவத்தில் வேறுபாடிருத்தல் கண்கூடு. வேறுபாடுடைய வடிவகரம் எங்ஙனம் எல்லா மொழி எழுத்துக் களின் அடிப்படையாகும்?

### வடிவம்

வடிவம் இருவகைத்து, அவை ஒலி வடிவம், வரி வடிவம் என்பன. ஒலி வடிவம் கண்ணுக்குப் புலனாகாதது; வரி வடிவம் கண்ணுக்குப் புலனாவது.

ஒலிக்கும் வடிவம் உண்டு. இது விஞ்ஞானிகளால் நிறுவப் பெற்ற உண்மை. 'ஒலி வடிவம் வரி வடிவம்' என்னும் நீண்டகால ஆட்சியை ஓர்க.

> [1]'இவ்வெழுத்தெனப்பட்ட ஓசையை அருவென்பார் அறியாதார். அதனை உருவென்றே கோடும். அது செறிப்பச் சேறலானும், செறிப்ப வருதலானும், இடையெறியப்படுத லானும், செவிக்கட் சென்று உறுதலானும், இன்ப துன்பத்தை ஆக்குதலானும், உருவும் உருவுங் கூடிப் பிறத்தலானும், தலையும் மிடறும் நெஞ்சுமென்னும் மூன்றிடத்தும் நிலைபெற்றுப் பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உறப் பிறக்கு மென்றமையானும் உருவேயாம். அருவேயாயின் இவ்விடத்திற் கூறியன இன்மை உணர்க. அல்லதூஉம், வன்மை மென்மை இடைமை யென்று ஓதினமையானும் உணர்க. உடம்பொடு புணர்த்தலென்னும் இலக்கணத்தான் இவ்வோசை உருவாதல் நிலைபெற்ற தென்று உணர்க'

எனவரூஉம் நச்சினார்க்கினியத்தையும் உன்னுக.

1. தொல் – எழுத்து – சூ : 1. உரை.

வடிவம் வேறுபாடுடையதாதலின், அதன்பாற்பட்ட அகரம், எல்லா மொழி - எழுத்துக்கட்கும் மூலமாகாது. ஆசிரியர் குறிப்பிட்ட அகரம் வடிவங் கடந்தது. அஃது, எல்லா மொழி - எழுத்துக்கட்கும் அடிப்படையாக நிலவுவது; எல்லா வற்றிற்கும் பொதுவாயிருப்பது; வேறுபாடில்லாதது. அஃது எது?

**காரண ஒலி**

வரி வடிவத்துக்குப் பிறப்பிடம் ஒலி வடிவம். ஒலி வடிவத் துக்குப் பிறப்பிடம் எது? நாதம். ஒலி, தன் வடிவத்தை இழக்கும் போது அது நாதத்தில் ஒடுங்கும்.

ஒலி இருவிதம். ஒன்று காரண ஒலி; மற்றொன்று காரிய ஒலி. இவை முறையே அகத்திசையொலி, புறத்திசை யொலி எனப்படும். இதனை,

> [1]***'எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து***
> ***சொல்லிய பள்ளி யெழுதரு வளியிற்***
> ***பிறப்பொடு விடுவழி யுறழ்ச்சி வாரத்***
> ***தகத்தெழு வளியிசை யரிறப நாடி***
> ***அளபிற் கோட லந்தணர் மறைத்தே***
> ***அஃதிவ ணுவலா தெழுந்துபுறத் திசைக்கு***
> ***மெய்தெரி வளியிசை யளவுநு வன்றிசினே'***

என்று தொல்காப்பியனார் கூறுமாற்றானறிக.

காரண ஒலி விகாரமற்றது. காரிய ஒலி விகாரமுறுவது. காரண ஒலியே நாதம் என்பது. நாதம் சூக்குமைக்குஞ் சூக்குமை யாயிருப்பது. நாதம், எல்லா ஒலிகட்கும் மூலம். நாதமூலமே ஆசிரியர் குறிப்பிட்ட அகரமென்க. இதுபற்றியே அதற்கு ஆதி அகரம் என்று பொருள் கூறப்பட்டது.

**ஆதி அகரம்**

ஆதி அகரம் இயல்பாயுள்ளது; விகாரமற்றது; நாத மாத்திரையாய்த் திகழ்வது; ஒலி வடிவம், வரி வடிம் என்னும் இரண்டையுங் கடந்தது; எழுத்துக்கட்கெல்லாந் தாயகமா யிருப்பது.

ஆதி அகரத்தினின்றும் அகர ஓசை எழுகிறது. அகர ஓசை பல வகை எழுத்துக்களாகிறது. இப்பலவும் அகர ஓசையும், ஆதி அகரமின்றேல் இல்லை யென்க.

ஆதி அகரம், தனித்து நின்றும், அகர ஓசையாகியும், மற்ற எழுத்துக்க ளெல்லாமாகியும், அவற்றை இயக்குவதாகியும் விளங்கும் பண்பு வாய்ந்தது. இது கூர்ந்து உன்னத்தக்கது.

1. தொல் – எழுத்து – சூ : 102.

'யானே எழுத்துக்களில் அகரமாகின்றேன்' என்று கண்ணபிரானும், 'அக்கரங்க ளின்றாம் அகரவுயி ரின்றேல்' என்று மெய்கண்டாரும் அருளிய மொழிகளை நோக்குக.

**அகமே புறம்**

அகரத்தினூடு புகுந்து, அதன்கண் ஒன்றினால், அஃது எழுத்துக்கட்கு மட்டும் ஆதியா யிருப்பதுமன்றிப் பிறவற்றிற்கும் ஆதியாயிருப்பதும் புலனாகும். அகத்தை ஆராய்ந்து சென்றாலும், புறத்தை ஆராய்ந்து சென்றாலும் இரண்டினடியி லும் ஆதி அகரம் ஒன்றே பொலிதலை உணரலாம். ஆதி அகர உணர்வு பெறுவோர்க்கு அகமே புறம் என்பதன் நுண்மை இனிது விளங்கும்.

குருநாதன் அருளால் ஒருவன் நாட்டத்தை உட் செலுத்தும் பயிற்சியில் அமர்கிறான். அவனது பயிற்சி மிக மிக அவன்றன் பொறிபுலன்கள் மனத்தில் ஒடுங்கும். மேலும் மேலும் நாட்டம் ஊடுருவிச் செல்லச் செல்ல மனமும் ஒடுங்கும். மனம் ஒடுங்க ஒடுங்க உயிர்ப்புணர்வு தோன்றும். இந்நிலை கடந்தால் ஒருவித ஒலி பொருளாகும். அதைக் கடந்தால் வேறு ஒருவித ஒலி எழும். அதையுங் கடந்தால் இன்னொருவித ஒலி தோன்றும். அதுவே காரண ஒலி; தாயொலி; நாதம்; ஆதி அகரம்.

புறத்தே நானாவித உருவங்கள் காட்சியளிக்கின்றன. அகம் ஒன்றஒன்றப் புறத்தின் நானாவிதம் பொன்றிப் பொன்றி ஒருமையாகும். ஒருமை ஓங்க ஓங்க ஒலியே விளங்கும். இவ்வொலி நுணுகி நுணுகிக் காரண ஒலியாகிய தாயொலியிற்சேரும். தாயொலியே நாத மென்பது; நாதமே ஆதி அகரம்.

**கருவில்**

புல்லோ கொடியோ செடியோ புழுவோ புள்ளோ விலங்கோ மன்பதையோ எதை ஆராய்ந்தாலும், அதன் கரு முதலில் ஆதி அகரம் பொலிந்து கொண்டிருக்கும். அண்ட பிண்டம் எதை ஆராய்ந்தாலும் அதனடியில் ஆதி அகரம் ஒளிரும். ஆதி அகரமே ஓங்காரத்தின் முதன்மை. அகரத்தைப் பற்றித் திரு. மாணிக்க நாயக்கர் செய்த ஆராய்ச்சிகளடங்கிய நூல்களைப் பார்க்க.

**ஓங்காரம்**

எல்லாவற்றிற்கும் தோற்றுவாய் ஓமென்னும் ஓங்காரம். இது பெரியோர் கண்ட உண்மை. ஓங்காரம் எல்லாவற்றிற்கும் மூலம் என்று எவருங் கூறுவர்; எம்மறையும் முழங்கும்.,

***'ஓங்காரத் துள்ளே உதித்தஐம் பூதங்கள்***
***ஓங்காரத் துள்ளே உதித்த சராசரம்***
***ஓங்கார தீதத் துயிர்மூன்றும் உற்றன***
***ஓங்காரஞ் சீவ பரசிவ ரூபமே'***

என்பது திருமந்திரம்.

ஓம் என்பது அ-உ-ம் என்னும் மூன்றொலியால் ஆகியது. இம்மூன்றனுள் முதலது அகரமே யாகும்.

அகரம் அங்காத்தலை யுடையது; அதாவது தோற்றத்துக்கு நிலைக்களனா யிருப்பது.

அகரம் தோற்றத்துக்கும், உகரம் நிலைக்கும், மகரம் ஒடுக்கத்துக்கும் அறிகுறிகள். தோன்றும் ஒன்று எழுந்து நின்று மீண்டும் ஒடுங்கும். அஃது ஒடுங்குவது எங்கே? அது தோன்றிய இடத்திலேயே ஒடுக்கமுறல் இயல்பு. எவ்வகைத் தோற்றத்துக்கும் முதலாயிருப்பது ஆதி அகரம்; தோன்றிய வழியே எல்லாம் ஒடுங்குதற்கு நிலைக்களனாயிருப்பதும் அவ்வாதி அகரமே. '* * * அந்தம் ஆதி என்மனார் புலவர்'- சிவஞானபோதம் : 1.

இளங் குழந்தையினின்றும் எழும் ஒலி எது? உன்னுக. அஃறிணை உயிர்களின் ஒலியிலும் அகரமிருத்தல் ஊகித்துணரற் பாற்று.

எல்லாவற்றிற்கும் அடிப்படை ஆதி அகரம் என்று சுருங்கச் சொல்லலாம். இதுபற்றிய விரிவுரை ஈண்டைக்கு வேண்டுவ தில்லை.

[1]***'அகாரம் உயிரென் றறையலு மாமே'***
[1]***'அகார முதலாய் அனைத்துமாய் நிற்கும்'***

**ஒளி**

ஆதி அகரம் என்னும் புணையைப் பற்றினால், அஃது இறையடி என்னுங் கரையைச் சேர்த்தல் ஒருதலை. ஈண்டு இறையடி என்றது அருளொளியை என்க. அகரத்துக்கு அணித்தே ஒளியிருக்கிறது.

அமல யோகத்தில் நாதங் கடந்ததும் சோதி தோன்றுதல் இயல்பு. அந்நாதமே அகரம்; ஆதி அகரம்.

***'அற்ற விடத்தே அகாரம தாவது***
***உற்ற விடத்தே யுறுபொருள் கண்டிடச்***

1. திருமந்திரம் – 975; 1753.

***செற்றம் அறுத்த செழுஞ்சுடர் மெய்ப் பொருள்***
***குற்றம் அறுத்தபொன் போலும் குளிகையே'***

என்றார் திருமூலரும்.

அகரம், ஒளிக்கும் உலகுக்கும் இடையில் சிங்கநோக்கா நிற்கிறது. ஒளியின் துணையால் அகரம் நானாவிதக் கலை களாகவும் உலகங்களாகவுமாகிறது.

ஒளி கடந்த நிலையும் இறைக்கு உண்டு. அது சொல்லுக்கு அடங்காதது. அதைச் சொல்லால் சொல்லப் புகுவது அறியாமை.

இறையொளிக்கு அணித்தே நின்று, எல்லாவிதத் தோற்றங் கட்கும் நிலைக்களனாயுள்ள ஆதி அகரத்தையே ஆசிரியர் நூலின் முதற்கண் வைத்தோதினர். ஆசிரியர் ஆழ்ந்து சென்று ஆதி அகரத்தைப் பற்றியது கருதத்தக்கது. 'கடவுளுண்மையை நிறுவுதற்கு அவ்வகரத்தை ஆசிரியர் எடுத்துக்காட்டாகக் கொண்டதும் ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கற்பாலது.

**உலகு ஆதிபகவன் முதற்றே**

***உலகு - எல்லா உலகங்களையுங் கொண்டது.***
***ஆதிபகவன் - முழுமுதற் கடவுள்***

ஆதிபகவன் - இருபெயரொட்டுப் பண்புத் தொகை; ஆதியாகிய பகவன் என்று விரியும். வடநூல் மரபுப்படி ஒற்று மிகவில்லை; தமிழ் முடிபாயின் செய்யுள் விகாரமாம்.

முதற்றே - முதல் என்னும் பெயரினடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று; ஒருமை.

ஏகாரம் : தோற்றம் ; பிரிநிலையுமாம்.

**உலகு**

உலகு என்பது பலபொருள் ஒருசொல். இங்கே உலகு தொகையாக நின்று பல வகையை உணர்த்துகிறது. 'உலகம் பலவிதம்' என்பது பழமொழி. 'ஒவ்வொருவர்க்கு ஒவ்வோர் உலகம் ஒவ்வொரு போதுண்டு' என்பது அநுபவ மொழி. இது பற்றித் தோற்றுவாயிலுஞ் சிறிது கூறியுள்ளேன்.

எல்லாவித உலகையும் இங்கே இரு கூறுபடுத்திக் கொள்ள லாம். அவை, உயிர் - உயிரல் பொருள் என்பன. இவ்விரண்டின் தொகுதியையே ஈண்டு உலகம் என்றது. பல வகை மரங்கள் கொண்ட ஒன்று, தோட்டம் என்று வழங்கப்படு வதுபோலப், பலவித உயிர்களையும் பலவித உயிரல் பொருள் களையுங் கொண்ட ஒன்று உலகம் வழங்கப்படுகிறது.

[1]"உலகம் என்பது ஈண்டு மக்கட் டொகுதியை* * * * * * உலகமென்பது இடத்தையும் ஆகுபெயரான் இடத்து நிகழ் பொருளாகிய மக்கட் டொகுதியையு முணர்த்து மாகலான், இருதிணைக்கண்ணுஞ் சென்றதன்றோ வெனின்: - அற்றன்று: வடநூலுள் உலகமென்பது இருபொருட்கு முரித்தாக ஓதப் பட்டமையின், மக்கட் டொகுதியை யுணர்த்தும் வழியும் உரிய பெயரேயாகலின் ஆகுபெயரன்று; அதனால் ஒருசொல் இரு பொருட் கண்ணுஞ் சென்ற தெனப்படாது இருபொருட்கு முரிமையான இரண்டு சொல்லெனவே படுமென்பது. வேறு பொருளுணர்த்தலின் வேறு சொல்லாதலே துணிவாயினும், பல பொருள் ஒரு சொல் லென்புழி எழுத்தொப்புவமை பற்றி ஒரு சொல்லென்றார் * * ' - சேனாவரையம்

[1]"உலகமென்பது பல பொருள் ஒரு சொல்லாய் நிலத்தை யும் உயிர்களையும் ஒழுக்கத்தையும் உணர்த்தி நிற்குமேனும்* *' -நச்சினார்க்கினியம்

ஈண்டு உலகு என்றது, உயிரையும் உயிரல் பொருளையுங் கொண்ட ஒன்றை யென்க.

**ஆசிரியர் உலகு**

நாம் காணும் ஞாயிறும், அதைச் சுற்றி இயங்கும் மண்டி லங்களுஞ் சேர்ந்த ஒன்று ஓர் உலகம். இவ்வாறு பல ஞாயிறு களும் பல மண்டிலங்களுஞ் சேர்ந்த உலகங்கள் பல உள. இன்னும் பல பெரிய பெரிய மண்டிலங்களிருக்கின்றன. மக்கள் ஆராய்ச்சிக்கு எட்டாத மண்டிலங்களும் இருக்கும். இவற்றை யெல்லாங் கொண்ட ஒன்றே ஈண்டு ஆசிரியர் கூறியுள்ள 'உலகு' என்பது.

**மண்டிலங்களும் உயிரும்**

மண்டிலங்கள் சிலவற்றில் உயிர்களிருக்கின்றன என்றும், சிலவற்றில் உயிர்களில்லை என்றும் இக்கால வானநூலார் கூறுகின்றனர். எல்லா மண்டிலங்களிலும் உயிருண்டு என்பது பண்டை மூதறிஞர் கொள்கை.

உயிர்கட்கு முத்திற உடலங்களுண்டு. அவை பருவுடல் (ஸ்தூல சரீரம்), நுண்ணுடல் (சூட்சும சரீரம்), முதலுடல் (காரண சரீரம்) என்பன. இவற்றுள் பருஉடலற்ற உயிர்கள் வாழும் மண்டிலங்களை உயிர்கள் வாழாதன என்று இக்கால வானநூலார் கூறுகின்றனர் போலும். (விஞ்ஞான உலகம் சிறைப்பட்டுக் கிடப்பதன்று. அஃது எப்பொழுதும் வளர்ந்து

1. தொல் : சொல் : 56 : உரை.

போகுந் தன்மையது. அது வளர வளர இன்னும் பல நுட்பங்கள் காணப்படலாம்.)

**உலகமும் கடவுளும்**

உலகம் ஆராய்ச்சிக்குக் கருவியாகத் துணைபுரிவது. கடவுளோ ஆராய்ச்சிக்கு எட்டாதது. ஆராய்ச்சிக்கு எட்டாத ஒன்றன் உண்மையை, ஆராய்ச்சிக்கு எட்டும் ஒன்றைக் கொண்டே நிறுவிக்காட்டுதல் வேண்டும். கடவுளுண்மை கூறப்புகுந்த ஆசிரியர், நேரே அதைக் கூறாது, உலகம் ஒரு கடவுளையுடையது என்று உலகை முன்னிலைப்படுத்தி அதைக் கூறியவாறு காண்க. கண்ணுக்குப் புலனாகும் உலகை விடுத்து, கண்ணுக்குப் புலனாகாத கடவுளுண்மையைக் காணவோ காட்டவோ முயல்வது முயற்கொம்பு நாடி அலைந்தவன் கதையாக முடியும். உலகைக் கொண்டே கடவுளுண்மை கூறு வது அறிவுடைமை. இம்முறை ஆசிரியரால் கடைப் பிடிக்கப் பட்டது.

**ஆதிபகவன்**

கடவுள் ஒன்று. அஃது ஊர் பேரில்லாதது. அதற்குப் பலதிற இயல்களுண்டு. இயல்களிற்சில வருமாறு:- ஒன்றா யுண்மை, எல்லாவற்றையுங் கடந்தமை, எங்கும் நிறைந்தமை, இயற்கையை உடலாக் கொண்டமை, குருவின் உள்ளத்தில் கூர்ந்து விளங்கிக் கோயில் கொண்டமை, எல்லாம் தோன்று தற்கும் நிற்றற்கும் ஒடுங்குதற்கும் நிலைக்களனா யுண்மை, தான் ஒன்றினுந் தோன்றி நின்று ஒடுங்காமை, எல்லாவற்றிற்குந் தான் ஆதியாயுண்மை, தனக்கோராதியின்மை, அறிவுடைமை, அன்புடைமை அருளுடைமை, முறையீட்டுக்கு இரங்குந் தகைமை, பாவமன்னிப்புடைமை முதலியன. இவ்வொவ்வோ ரியலுக்கும் ஒவ்வொரு பெயர் புலவரால் புனையப்பட்டது. ஒவ்வோ ரியலையோ அததற்குரிய பெயரையோ பற்றி ஒவ் வொன்றையும் ஒவ்வொரு கடவுள் என்று கொள்வது அறியாமை. சில விடங்களில் இவ்வாறு கொள்ளப்பட்டி ருக்கிறது. அக் கொள்கையை மாற்ற முயலவேண்டுவது அறிஞர் கடமை. 'ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரந் - திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ' என்றார் மாணிக்கவாசகனார்.

கடவுளுக்குரிய பல பெயர்களுள் ஆதிபகவன் என்பதும் ஒன்று.

## ஆசிரியரும் ஆதி பகவனும்

ஆசிரியர் காலத்தில் கடவுளுக்குரிய பெயர்களில் ஆதி பகவன் என்பது மன்பதையில் பெரிதும் ஆட்சி பெற்றிருக்கும். அதனால் ஆசிரியர் பொதுமைபற்றி அதை ஆண்டிருக்கலாம். இஃது ஆசிரியரது பொதுநோக்கைப் புலப்படுத்துவது.

ஆசிரியர், செவ்விய தீந்தமிழ் அரசு வீற்றிருந்த காலத்தில் வதிந்தவர். இதற்கு அவர் அருளிய நூலே சான்று கூறும். அவர் காலத்தில் பிராகிருதமும் பாலியும் வடமொழியும் அறிஞரிடை வாழ்வு பெற்றிருந்தன. அந்நாளில் சமயக்கணக்கர், இறைவனுக்கு வழங்கப்பட்ட பல பெயர்களுள், 'ஆதி பகவன்' என்பதையே பெரிதும் ஆண்டிருப்பர். அவ்வாட்சி ஆசிரியருள்ளத்தைக் கவர்ந்திருக்கும்.

ஒரு நாட்டில் ஒருவிதப் புதுமை புகும்போது, அது நாட்டவர் நெஞ்சைக் கவர்வது இயல்பு. இவ்வியல்பு, தமிழ் மக்களிடைச் சிறந்து விளங்குவதைச் சரித்திர உலகம் நன்கு அறியும். காலப்போக்கில் ஆக்கம் பெறும் பிறமொழிச் சொற் களையும், சொற்றொடர்களையும், கருத்துக்களையும் பொருந்திய முறையில் எடுத்தாள்வது தவறாகாது.

தனக்கோர் ஆதியின்றி, எல்லா உலகும் தோன்றி நின்று ஒடுங் குதற்குத் தானே ஆதியாய் நிற்றலால் இறைவன் 'ஆதிபகவன்' எனப்படுகிறான்.

## ஆதி

ஆதி என்பது தோற்றம், தொடக்கம், முதல், பழமை ஆகிய பொருளுடைத்தா யிருத்தல் வெளிப்படை. ஆதிக்கு வேறு சில பொருள்களும் உண்டு. அச்சிலவற்றுள் இரண்டைச் சிறப்பாக இங்கே குறிக்கலாம். அவை ஞாயிறு, நேர்ச்செலவு என்பன. நேர்ச்செலவை நெடுஞ்செலவென்பர் சிலர்.

[1]***'ஆதி பழமையும் அரனும் மாலும்***
***முதலும் நேரோட்டமும் மொழியப் பெறுமே'***
[2]***'ஆதி........வெயின்மணிப் பீடம் போன்றான்'***
***(ஆதி - ஞாயிறு)***
[3]***'ஆதிக்கொளீஇ யசையினை'***
[4]***'அடிபடு மண்டிலத் தாதி போகிய***
***கொடிபடு சுவல விடுமயிர்ப் புரவியும்'***
*(ஆதி - நேரோட்டம்: ஐவகைக் குதிரைக் கதிகளுள் ஒன்று.)*

1. பிங்கலந்தை : 3032. 2. பாரதம் – கிருட் – 144. 3. கலித்தொகை – 96 : 20.
4. மதுரைக் காஞ்சி – 360 ; 261.

**பகவன்**

*பகவன் என்னுஞ் சொற்குக் கடவுள் என்று எவரும் பொருள் கூறுவர்.*

*பகவன் - அறுகுணங்களை யுடையவன்: பகம் + அன் =பகவன் ; பகம் - அறுகுணங்களுடைமை.*

*அறுகுணங்கள் : அறிவு, திரு, ஆட்சி, ஆற்றல், அவாவின்மை, புகழ் (விட்டுணு புராணம்).*

*பகவன் என்பதற்கு வேறு சில பொருள்களு முண்டு. ஈண்டைக்கு ஞாயிறு, குரு (குரு - சித்தன் அல்லது கேவலஞானி) என்பன சாலும்.*

*'பட்டாரகன் மால் பங்கயன் பரமன் - இரவி அருக்கன் புத்தனும் பகவன்'*

*என்பது [1]பிங்கலந்தை. (பட்டாரகன் - ஞானகுரு அல்லது சித்தன். இரவி - ஞாயிறு, சூரியன்.)*

***'செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்'***

*என்றார் [2] இளங்கோவடிகள்.*

*பகவன் - கேவலஞானி என்பர் அடியார்க்கு நல்லார். (கேவலஞானி - திரிகாலமுணர்ந்தவன்).*

*பகவன் என்னும் பெயர் பலபொருளுடையதாயினும், அது சிறப்பாகக் கடவுளுக்கே வழங்கப்படுகிறது. அப்பெயர் சமயத்தவர் எல்லாராலும் பொதுமையில் வழங்கப்பெற்று ஆட்சியில் வந்திருக்கிறது.*

*இது,*

***'பகவனே ஈசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்'***

*எனவரூஉம் மண்டலபுருடர் வாய்மையால் விளங்குகிறது.*

*பகவன் என்னும் பெயர் கடவுளுக்கும், வேறு பிறர்க்கும் பிறவற்றிற்கும் வழங்கப்படுதலின், ஈண்டு அது கடவுளின் மேலது என்பார் 'ஆதிபகவன்' என்றார்.*

**மண்டிலங்கள்**

*நாம் வாழும் மண்டிலம் நமக்குப் பெரியதாகத் தோன்று கிறது. இதைப் பார்க்கிலும் பெரிய பெரிய மண்டிலங் களிருக்கின்றன. அவையெல்லாம் ஞாயிற்றைச் சுற்றி வருகின்றன. இவ்வாறு ஒவ்வொரு ஞாயிற்றையுஞ் சுற்றி வரூஉம் மண்டிலங்*

1. 2744. 2. சிலப்பதிகாரம் : 10 :177.

கள் பற்பல உள்ளன. அவையல்லாத மண்டிலங்களு முண்டு. அவை யாவும் நேர்பட இயங்குகின்றன. அந்நேரிய இயக்கத்தில் சிறிது பிறழ்வு நேருமாயின், மண்டிலங்களின் கதி என்னாகும்?

மண்டிலங்களெல்லாவற்றையும் நேர்பட இயக்குவது எது? இறைவன் துணை. இவ்வாணையை என்னென்று விளக்கு வது! மண்டிலங்களையெல்லாம் நேர்படச் செலுத்தும் ஆற்றலுடையவன் இறைவன் ஆதலின், அவன் 'ஆதிபகவன்' என்று போற்றப்படுகிறான். (ஆதி - நோரோட்டம்; நேர்ச் செலவு).

## ஞாயிறுகளுக்கெல்லாம் ஞாயிறு

ஆதிக்கும் ஞாயிறு என்றொரு பொருளிருக்கிறது: பகவனுக்கும் ஞாயிறு என்றொரு பொருளிருக்கிறது. இதனால் ஞாயிறுகளுக்கெல்லாம் ஞாயிறாக விளங்குவோன் ஆதிபகவன் என்னும் உண்மையை ஆசிரியர் விளக்கினர் என்க.

மக்கள், இயற்கைக் கூறு ஒவ்வொன்றையும் கடவுளாக் கொண்டு கொண்டு, பின்னே அவைகட் கெல்லாம் அரசாக வுள்ள ஞாயிற்றைக் கடவுளாக் கொண்டு, அதன் பின்னே ஞாயிற்றுக்கும் ஒளிவழங்கும் பெருஞாயிற்றைக் கடவுளாக் கொண்ட வரலாறு ஈண்டுச் சிந்திக்கற்பாலது.

[1] ***'அருக்கனிற் சோதி அமைத்தோன்'***

திருமந்திரம் - 'அண்டாதித்தன்', 'பிண்டாதித்தன்', 'மனவாதித்தன்', 'ஞானாதித்தன்', 'சிவாதித்தன்' - பார்க்க.

## ஞான குரு

ஞானகுருநாதன் உள்ளத்தில் கடவுளையன்றிப் பிரிதொன் றின்மையால், அவன் உடல் கடவுளுக்குரிய கோயிலாகிறது. அக்குருநாதன் மூலமாகக் கடவுளை யுணர்தல் மரபு. ஞான குருக்களுக்கெல்லாம் ஆதி ஞான குருவாக இறைவனிருத்தலான், அவன் ஆதிபகவன் என்று சொல்லப்படுகிறான். (பகவன் - ஞானகுரு).

## கடவுளின் மூன்று நிலை

கடவுள் தனித்து நிற்கும் நிலை ஒன்று. இது வாக்கு மனங் கடந்தது. இது வழிபாட்டுக்கு உதவாதது.

கடவுள், இயற்கையை உடலாக்கொண்டு தான் உயிராக நிற்கும் நிலை வேறொன்று. இது வழிபாட்டுக்குக் கொழு கொம்பு போன்றது.

---

1. திருவாசகம் – திருவண்டப் பகுதி – 20.

*இயற்கை வழிபாட்டால் அதன் உள்ளுறையாகிய இறை எளிதில் விளங்குவதில்லை. ஒரோவழி அது விளங்குவது முண்டு. இயற்கை வழிபாடு முதிர முதிரக் குருநாதன் காட்சி தோன்றும். குருநாதன் அறிவுறுத்தலால் இயற்கையின் உள்ளு றையாகிய இறையை உணரலாம். அதற்குமேல் இறையின் தனி நிலை விளங்கும்.*

*குருநாதன் எவன்? தனக்கென ஒன்றின்றித் தானற்றுக் கடவுள்வழி நின்று கடவுளை யன்றிப் பிறிதொன்று விளங்கப் பெறாத உள்ளமுடையவன் குருநாதன். குருநாதன் வழிக் கடவுளின் அருட்செயல் நிகழ்தலால், குருநாதன் செய லெல்லாம் கடவுளின் செயலாகும். குருநாதன் உள்ளத்தைக் கடவுள் கோயில் கொண்டு கடனாற்றுவதும் ஒரு நிலை. இதனை மூன்றா வதாகக் குறிக்கலாம். குருநாதன் நிலையைப் பற்றிச் 'சன்மார்க்க போதமும் திறவும்' என்னும் நூலில் ஒல்லும் வகை விளக்கி யுள்ளேன். விளக்கம் ஆண்டுப் பார்க்க.*

*ஆகவே, கடவுளின் நிலை மூன்றாதல் காண்க. அவை தனித்த நிலை, இயற்கையை உடலாக் கொண்ட நிலை, குருவைக் கோயிலாக் கொண்ட நிலை என்று சுருங்கிய முறையில் நினை வூட்டிக் கொள்க.*

### ஆதி பகவனில் மூன்றாம்

*இம்மூன்று நிலையும் ஆசிரியர் குறித்தருளிய ஆதிபகவனி லிருத்தல் கருதற்பாலது.*

(i) *ஆதிபகவன் தனக்கோராதியின்றி எல்லாவற்றிற்கும் தானே ஆதியாய் நிற்கும் நிலையொன்று, இது வாக்கு மனங் கடந்தது; வழிபாட்டுக் குரியதன்று.*

(ii) *ஆதியும் பகவனும் ஞாயிறாகப் பொருளுணர்த்துங் கால், அஃது ஆதிபகவன் இயற்கை வடிவினன் என்பதைக் குறிப்பதாகும். இந்நிலை வழிபாட்டுக் குரியது.*

(iii) *ஆதிபகவன் ஞானகுரு என்னும் பொருளில் நிற்கும் போது, அவனது குருநிலை விளங்குவதாகிறது. இது வழி பாட்டுக்கு எளியது.*

*எனவே, ஆதிபகவனில் மூன்று நிலை யிருத்தலை ஆராய்ந்து பார்க்க.*

### பொதுமை

*இம்மூன்று நிலையுள், மூன்றையும் அல்லது இரண்டை யும் அல்லது ஒன்றையுங் கொள்ளாத சமயமில்லை.*

கடவுள் உண்மையை மறுக்கும் இனத்தார்க்கு மூன்றில் யாண்டாயினும் இடமுண்டா என்று சிலர் வினவலாம். அவர்க்கும் இடமுண்டு என்று விடையிருக்க. இயற்கைநிலை அவர்க்கும் உரிய ஒன்றென்க.

இயற்கை வழிபாட்டில் இருவித நோக்குண்டு. ஒன்று, 'இயற்கை உடல்; இறை உயிர்' என்னும் எண்ணத்துடன் வழிபடுவது; மற்றொன்று, உயிரின் எண்ணமின்றி வழிபடுவது. இவ்வினத்தில் கடவுளுண்மையில் உறுதியில்லாதார் சேர்வர். ஆகவே, ஆசிரியர் எல்லார்க்கும் உரியதாய்ப் பயன் படத்தக்க ஒரு பெரும் ஓத்தினை அருளினரென்க.

**உவமை**

'எழுத்தெல்லாம் அகரத்தை முதலாக உடையன; (அதுபோல) உலகம் ஆதிபகவனை முதலாக உடையது' என்றார். முன்னது பின்னதற்கு எடுத்துக்காட்டாய் நிற்றல் காண்க. இதனை எடுத்துக்காட்டுவமை என்பர் பரிமேலழகர். உவமைக் கும் பொருளுக்கும் இடையில் உவம உருபின்றி வருவது எடுத்துக்காட்டுவமை.

'காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர் * * * *' என்னுந் திருக்கோவைப் பாட்டுக்கு உரைகண்ட பேராசிரியர், "'கலந்தாரிருவர்' என்பது பாடமாயின், 'காகத்திருகண்ணிற் கொன்றே மணி' என்பதனை எடுத்துக்காட்டாக உரைக்க" என்றதும் ஈண்டு உன்னற்பாலது.

'வேறுபட வந்த உவமத் தோற்றங் - கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்' என்னுந் [1]தொல்காப்பியச் சூத்திர விரிவுரைக்கண், " 'அகர முதல வெழுத்தெல்லா மாதி- பகவன் முதற்றே யுலகு' என்ற வழி, இரண்டு பொருள் வேறு வேறு கூறியதன்றி அகர முதல எழுத்தெல்லாம் அதுபோல என்றானும், ஆதிபகவன் முதற்று உலகம் அது போல என்றாலும் ஒன்றாகத் துணியுமாற்றான் உவமையும் பொருளுங் கூறாமையின் அதுவும் வேறுபடவந்த உவமமாயிற்று. பிறவும் அன்ன. இவை ஏனையுவ மத்திற்கெல்லாம் பொதுவிலக்கணம்" என்று பேராசிரியர் குறித்திருத்தல் காண்க.

'அவை தாம் - தத்தங் குறிப்பினெச்சஞ் செய்யும்' என்னுந் [2]தொல்காப்பியச் சூத்திரத்துக்கு விளக்கஞ் செய்யப் புகுந்த சேனாவரையர், 'அகர முதல வெழுத்தெல்லாமாதி - பகவன்

1. பொருள் : உவமவியல் : சூ : 32. 2 சொல் : எச்சவியல் : சூ : 44.

*முதற்றே யுலகு', 'அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற் - றேறியார்க் குண்டோ தவறு' என்ற வழிமுறையானே அது போல எனவும், 'நீத்தார்க்கே தவறு எனவும் வருவன எஞ்சிய இசைப்பொரு ளுணர்த்தலான் இசையெச்சமாயின' என்று கூறியிருத்தலை ஒர்க.*

## ஆதி அகரமும் ஆதி பகவனும்

*[1]அகரம் தனித்தும், அகர ஒலியா யெழுந்தும், மற்றெழுத் துக்க ளெல்லாமாகியும், அவற்றை இயக்கியும் வருவதுபோல, ஆதிபகவனும் தனித்தும், உலகெலாமாகியும், அவற்றை இயக்கியும் வருகிறான்.*

### பன்மை ஒருமை

*எழுத்தெல்லாம் பன்மை; உலகு ஒருமை. உவமை பன்மை; பொருள் ஒருமை.*

*எழுத்து - பால்பகா அஃறிணைப் பெயர். அதனைப் பன்மைப்படுத்தி 'எழுத்து அகர முதல' என்று கூறினும் வழுவா காது.*

*உலகு என்பதும், உலகங்களெல்லாவற்றையுங் குறிப்பதே. பன்மைத் தொகுதியை ஒருமையாகக் கூறல் மரபு. காரிய உலகைப் பன்மையாகக் கூறின், காரணத்தையும் பன்மையாகக் கொள்ளுதற்கு இடமுண்டாதல் பற்றியும், அநேகேச்சுரவாதம் உலகில் இருத்தல் பற்றியும் காரணமாகிய கடவுளின் ஒருமையை வலியுறுத்தற் பொருட்டுக் காரியத்தையும் ஒருமையாக உரைத்தனர். உயிரும் உயிரல் பொருளுஞ்சேர்ந்த ஒன்றைப் பன்மையாகக் கூறுவது பொருத்தமாகாது.*

*'எழுத்தெல்லாம்' பன்மை; அதற்கேற்ப, அது 'முதல' என்னும் பன்மை முடிபு பெற்றது. 'உலகம்' ஒருமை; அதற்கேற்ப, அது 'முதற்றே' என்னும் ஒருமை முடிபு பெற்றது.*

---

1. 'மெய்யினியக்கம் அகரமொடு சிவனும்'– தொல் : எழுத்து : 46. ' ***இங்ஙனம் மெய்க்கண் அகரங்கலந்து நிற்குமாறு கூறினாற் போலப் பதினோருயிர்க்கண்ணும் அகரங்கலந்து நிற்குமென்பது ஆசிரியர் கூறாராயினார். அந்நிலைமை தமக்கே புலப்படுதலானும் பிறர்க்கு இவ்வாறு உணர்த்துதல் அரிதாகலானுமென்று உணர்க. இறைவன் இயங்கு திணைக்கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல அகரமும் உயிர்க்கண்ணுந் தனி மெய்க்கண்ணுங் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்குமென்பது சான்றோர்க் கெல்லாம் ஒப்பமுடிந்தது. 'அகரமுதல' என்னுங் குறளான் அகரமாகிய முதலையுடைய எழுத்துக்களெல்லாம். அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து உலகமென வள்ளுவனார் உவமை கூறியவாற்றானும், 'கண்ணன் எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே' எனக் கூறியவாற்றானும், பிற நூல்களானும் உணர்க' – நச்சினார்க்கினியம்.

### எல்லாம்

'எல்லாம்' என்பது பெய்யப்பட்டிருத்தல் வெறுஞ்செய்யு ளோசை நிரப்பலுக்கு மட்டுமன்று. எழுத்தெனக் கூறின், தாம் தமிழில் நூல் யாக்கப் போந்தமையான், மக்கள் 'எழுத்து' என்பதைத் தமிழெழுத்தென்று கொள்ளுதற்கு, இடமுண்டாகு மென்று கருதி, அதைத் தகையவும், உலகிலுள்ள மொழிகளின் எழுத்துக்களையெல்லாங் குறிக்க வேண்டியும் ஆசிரியர் 'எழுத்தெல்லாம்' என்று விளக்கமாகக் கூறினர்.

### ஏகாரம்

'முதல' என்பதில் ஏகாரமில்லை. 'முதற்றே' என்பதில் ஏகாரமிருக்கிறது. எழுத்துக்களைக் காரியமென்று கொள்வதில் வாதம் நிகழ்வதில்லை. உலகு காரியமா காரணமா என்ற வாதம் இன்னும் நிகழ்ந்து வருகிறது. ஆதலால், அதற்குத் தேற்றந் தேவை யில்லை; இதற்குத் தேற்றந்தேவை. 'உலகம்' காரியம்; அதற்கொரு காரணம் உண்டு என்பதை வலியுறுத்தற்கு 'முதற்றே' என்று தேற்றங் கூறினார்.

### கடவுளுண்மையில் உறுதி

இம் முதற்பாட்டில் கடவுளுக்கு வாழ்த்தோ வணக்கமோ கூறப்பட்டில்லை. ஏன்? வாழ்த்து வணக்கங்கட்கு முன்னர் கடவுளுண்மையில் உறுதி வேண்டுமாதலின். உறுதியின்றி வெறுமையில் 'கடவுள்' 'கடவுள்' என்று வாழ்த்துவதாலும் வணங்குவதாலும் பயன் விளையாது. உறுதியற்ற வாழ்த்தும் வணக்கமும், நீராட வேட்கை கொண்ட ஒருவன், கானலை நீரெனக் கருதி, அதில் மூழ்கச் சென்றதுபோல முடியும். முதலாவது வேண்டற்பாலது கடவுளுண்மையில் உறுதி. இவ்வுறுதி முதற்பாட்டில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

### பெண் – ஆண்

கடவுளுக்குப், 'பெண் ஆண்' என்னும் வேற்றுமையில்லை. கடவுள் எல்லாமாய் அல்லவுமாயிருக்கும் ஒன்று. இங்ஙனமாக ஆசிரியர் கடவுளை, 'ஆதி பகவன்' என்று ஆண்பாலால் மட்டுங் கூறியதென்னை என்று இக்கால மக்களிற் சிலர் ஐயுறலாம்.

'ஆதி' என்பதற்கு மேலே சில பொருள்கள் சொல்லப் பட்டன. அவற்றுடன் 'ஆதி' என்பது, சத்தியை - பெண்ணை - உணர்த்தும் ஒரு சொல்லாகவும் மிளிர்கிறது.

***'பன்னிரண் டாங்கலை ஆதி வயிரவி'***

***'ஆற்றலொ டாய்நிற்கும் ஆதி முதல்வியே'***
***'ஆதி வயிரவி கன்னித் துறைமன்னி'***

எனவரூஉந் [1]திருமூலர் திருவாக்குக்களை நோக்குக.

'ஆதி', 'பெண்கூறுங் கடவுளுக்கு உண்டு' என்பதையும் அறிவுறுத்துவது. பகவனின் தாய்மைக் கூறே பெண்மை என்பது. இதுபற்றிப் 'பெண்ணின் பெருமை' என்னும் நூலில் விரித்துக் கூறியுள்ளேன். விரிவு ஆண்டுக் காண்க.

'தோடுடைய செவியன்' என்பதும் இதுபோன்றதே. 'தோடு' பெண்ணின் காதணி. 'தோடுடைய செவியன்' என்றருளிய ஞான சம்பந்தரே, பிறாண்டும், 'பெண்ணாணாய வார்சடை அண்ணல் பேணு பெருந் துறையே' என்றருளியுள்ளதையும் நோக்குக.

### பாட்டின் மாண்பு

திருக்குறள் முப்பால் நூலென்றும், நூலுக்குப் பாயிரமா யிருப்பன வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்னும் மூன்றதிகாரங்களென்றும், பாயிரத்துக்குப் பாயிரமா யிருப்பது கடவுள் வாழ்த்தென்றும் முன்னர்ச் சொல்லப்பட்டன. இம்மாண்பு வாய்ந்த 'கடவுள் வாழ்த்'தின் இம்முதற்பாட்டுள் எல்லாம் நுண்மையாகவும் குறிப்பாகவும் பொலிந்து திகழ்கின்றன.

### ஓர் இனிய குளிர்தரு

திருக்குறள், 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி - பகவன் முதற்றே உலகு' என்னும் விதையினின்றும் எழுந்த ஓர் இனிய குளிர்தரு.

முதற் பாட்டு விதை. பாயிரம் முளை. அறம் - பொருள் - இன்பம் - என்னும் முப்பாலுங் கவடுகள். இயல் அதிகாரம் முதலியன. கோடு துணர் முதலியன. திருக்குறள் நூல் தரு.

[2]***'அந்தமில் ஆதியம் பகவன்'***
[3]***'ஆதிபகவனை அருகனை மாதுயர் நீங்க வழுத்துவம் பலவே'*** (1)

### (ii) கடவுளின் இயற்கை நிலை

**2**

***இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்***
***பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.***

---

1. திருமந்திரம் : வயிரவி மந்திரம் : 1, 24, 25. 2. நம்மாழ்வார், 3. திருக்கலம்பகம்.

### பொருள்

*இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு - கடவுள் இயற்கையைச் சேர்ந்துள்ள புகழை விரும்பினாரிடம், இருள்சேர் இருவினையுஞ் சேரா - அறியாமை (அவிழ்ந்து) ஒன்றும் வினை இரண்டும் சென்றடையா.*

### கருத்து

*இயற்கை இறையை விரும்பினாரிடம் இருவினையுஞ் சென்றடையா.*

### விருத்தி

*முதற் பாட்டின் விருத்தியில் கடவுள் நிலை மூன்று என்பது சொல்லப்பட்டது. அம்மூன்றனுள் ஒன்று, கடவுள் இயற்கையை உடலாக் கொண்டது. அஃது இக்குறளில் விளங்குதல் காண்க.*

**இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு**

*இறைவன் - எங்குந் தங்கியுள்ளவன்.*

*பொருள் - பொருளை, பொருளுடன் (பொருட்சேர் என்று பாடங் கொள்வோருமுளர்).*

*பொருள் - இயற்கை; மாயை.*

*சேர் - சேர்ந்துள்ள, கலந்துள்ள.*

*சேர்புகழ் - வினைத்தொகை.*

*இறைவன் பொருள்சேர் புகழ் - கடவுள் இயற்கையைச் சேர்ந்துள்ள புகழை, கடவுள் இயற்கையுடன் கலந்துள்ள புகழை, கடவுள் இயற்கையை உடலாக் கொண்ட புகழை. 'தலைவன தாகிய மெய்ப்பொருள் சேர்ந்த புகழ்ச்சிச் சொற்களை' என்பது மணக்குடவர் உரை; இறைவனது மெய்மை சேர்ந்த புகழை' என்பது பரிமேலழகர் உரை.*

*புரிந்தார் - விரும்பினார்; 'கூடினர் புரிந்து குணனுணப் பட்டோர்' - கலித்தொகை : 23 : 12.*

*'புரிந்தார்' என்பதற்கு, 'பொருந்தினார்' என்று மணக்குடவர் பொருள் கொண்டனர்.*

*புரிதல் - 'இடைவிடாது சொல்லல்' என்றனர் பரிமேலழகர்.*

*மாட்டு - இடத்து; பக்கத்திலும் என்னலுமொன்று; ஏழனுருபுமாம்.*

### இறைவன்

இறை என்னுஞ் சொல் தொன்மை வாய்ந்தது; பொருள் பொதிந்தது.

இறை - இறுத்தல்; தங்குதல்.

[1]'வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கை'

[2]'குடைநீழற் பதிபடர்ந் திறைகொள்ளுங் குடிபோல'

[2]'அடலேற் றெழுந்திறுத் தார்க்கு'

ஈண்டு இறை கடவுள்மேலது; அரசன்மேல தன்று. அரசன் ஆணை ஒரெல்லைக்குள் தங்குவது. கடவுள் ஆணை எங்குந் தங்குவது. கட்டின்றி எங்குந் தங்கும் ஒருவனே 'இறைவன்' என்க.

'இறைவன் எப்பொருளிலுந் தங்குகிறவன்' என்பர் அடியார்க்கு நல்லார். (சிலப்பதிகாரம் - 10 : 184 : உரை)

### பொருள்

'எங்கும்' என்பது அண்டபிண்ட சராசரங்கள் எவ்வளவு உண்டோ அவ்வளவிலும் அடங்குவது. அண்டபிண்ட சராசரங் களெல்லாம் மாயா காரியங்கள். மாயையும், அதன் காரியங்களும் அடங்கிய ஒன்றே ஈண்டுப் பொருள் என்னப் பட்டது.

மாயை - மாயா ; மா - ஒடுங்குதல் ; யா - வருதல்.

எல்லாக் காரியங்களும் ஒடுங்குதற்கும், ஒடுங்கிய வழியே தோன்றுதற்கும் நிலைக்களனாயிருப்பது மாயை. மாயையின் உள்ளும் புறமும் கலந்தும், அதைக் கடந்தும் நிற்பது கடவுள்.

மாயை - சடம்; மாறுதலடைவது. கடவுள் - அறிவு; மாறுத லடையாதது.

மாயை, பிரகிருதி - அசுத்தம் - சுத்தம் என்று மூவகைப்படும். இவை முறையே பருமை - பருநுண்மை - நுண்மையாயிருப்பன. மாயையின் வகை இரண்டென்போருமுளர்; மூன்றுமில்லை இரண்டுமில்லை ஒன்றே என்போருமுளர்.

'எங்கும்' என்பது, மாயா சம்பந்தம் வரை நிலவுவது. அதைக் கடந்தது கடவுளின் தனித்த நிலை.

மாயை - மாயா: வடமொழி. இதற்குத் தமிழ் இயற்கை.

ஆகவே, 'எங்கும்' என்பது மாயையை - அதாவது இயற்கையைக் குறிப்பதென்க.

1. மதுரைக் காஞ்சி : 253. 2. கலித்தொகை : 71 : 5–6; 102 : 20.

*இறைக்கு எங்குந் தங்குதல் என்னும் பொருளுண்மையான், அதுவே கடவுள் இயற்கையை உடலாக்கொண்ட நிலையை உணர்த்துவதாகிறது.*

*இறை எங்கும் நீக்கமறத் தங்கியிருப்பதைப் பற்றி உலகின் நானாபக்கங்களிலுமுள்ள மறை மொழிகளெல்லாம் முழங்கு கின்றன. அம்மொழிகள் கடலெனப் பரந்து கிடக்கின்றன. அக் கடலெல்லாம், 'இறை' என்னும் ஈரெழுத்துச் சொல்லில் அடங்கியுள்ளன.*

***'எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்***
***அங்கங் கிருப்பதுநீ யன்றோ பராபரமே'***

*என்றார் தாயுமானார். இது மறைமொழிகளின் சாரம்.*

*'இறைவன்' எங்கும் அதாவது இயற்கையில் தங்குவோன் என்னும் உண்மையை, 'பொருள் சேர்புகழ்' என்று ஆசிரியர் தெளிவு செய்துள்ளனர்.*

*'பொருளு'க்குள்ள பல பொருளில் ஒன்று, 'பதார்த்தம்'* (Matter) *என்பது. பதார்த்தம் மாயா காரியம்.*

*[1]'பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்' என்றும்,*

*[2]'தோன்றியவை விளக்கத்தால் உண்மையாம்*

*ஐம்பொறிக்குந் தொடர்பால் நிற்கும்*

*ஆன்றபதார்த் தங்களெலாம் * *' என்றும்*

*ஆன்றோர் அருளியிருத்தல் காண்க.*

*ஈண்டுப் 'பொருள்', பதார்த்தம் - மாயை - இயற்கை - என்னும் பொருளின் மேற்று.*

### சேர்புகழ்

*சேர் - சேர்ந்துள்ள, கலந்துள்ள; இறைவன், பொருளில் - இயற்கையில் - கலந்திருப்பது எள்ளளும் எண்ணெயுஞ் சேர்ந்தாற் போல என்க. 'கொள்ளும் * * * * * * நள்ளுங்கீழுளும் மேலுளும் யாவுளும் - எள்ளும் எண்ணெயும் போனின்ற எந்தையே' என்பது திருவாசகம்.*

*இறைவன் இயற்கையுடன் கலந்துள்ள நிலையே புகழுக் குரியது. 'எல்லாப் புகழும் ஆண்டவனுக்கே' என்று கிறிஸ்து முதலிய பல பெரியோர் அருளிப் போந்தனர். இயற்கை கடந்த*

---

1. சிவஞானசித்தியார் : 11 : 2. 2. ஞானவாசிட்டம் : உற்பத்திப் பிரகரணம் : 68.

இறைநிலை, வாக்கு மனங் கடந்ததாய், வழிபாட்டுக்கு உதவாத தாயிருத்தலின், ஆங்கே புகழுக்கு இடமில்லை.

[1]***'புகழ்ச்சியைக் கடந்த போகமே'***

என்பது மணிவாசகம்.

புகழ்ச்சிக்குரியது இறைவன் இயற்கையுடன் கலந்த நிலையே யாகும்.

இயற்கை உடல்; இறை உயிர். இயற்கையை உடலாக் கொண்ட இறைநிலையே வழிபாட்டுக்குரியது. மனம் வாக் குடையார், இயற்கை - இறையையே வழிபாட்டுக்குக் கொழு கொம்பாகக் கோடல் வேண்டும். இவ்வழிபாடு குருநாதனைக் கூட்டும். குருநாதன் அருள், இயற்கையிற் கலந்துள்ள இறை நிலையையும், பின்னே இயற்கையைக் கடந்துள்ள தனித்த இறை நிலையையும் உணர்த்தும்.

**தருக்க வாதம்**

இயற்கை - இறைநிலை பிரித்தற்கரியது. இயற்கை என்றும் இறை என்றும் இரண்டையுஞ் சொல்லாற் பிரித்துக் கூறலாம்; பொருளால் இரண்டையுந் தனித்தனியே வெவ்வேறாகப் பிரித்தல் இயலாது. இதனால் இயற்கையும் இறையும் ஒன்றா வேறா என்னும் பலதிற ஐயப்பாடுகள் நிகழ்வதுண்டு. இயற்கை யும் இறையும் ஒன்றென்போரும் உளர்; வேறு வேறு என்போரும் உளர்; கலப்பால் ஒன்று - பொருளால் வேறு என்போரும் உளர். இக்கொள்கைகளினின்றும் பிறந்த கவடுகள் பல; கோடுகள் பல. அவரவர் தத்தங்கோளைத் தருக்க வாதங்களால் நிறுவுவர். அவை அறிவுக்கு நல்விருந்தாகும். ஆனால் தருக்க வாதங்களில் கருத்திருத்து மட்டும் உண்மை விளங்குதல் அரிது. தருக்க வாதங்களே பல மதங்களாக உலகில் நிலவுகின்றன.

மனத்தைத் தருக்க வாதங்களில் செலுத்துவதைப் பார்க்கினும் வழிபாட்டிற் செலுத்துவது சிறப்பு. ஆசிரியர் தருக்க வாதங் கடந்த அறம் - பொருள் - இன்பம் என்னும் இயற்கைச் செந் நெறியை அறிவுறுத்தியவர்.

இறைவன் இயற்கையை உடலாக்கொண்ட நிலையே உடலோடு கூடியுள்ள உயிர்களின் வழிபாட்டுக் குரியது. இயற்கை - இறையை, உயிர்கள் மனமார நினைக்கலாம்; வாயார வாழ்த்தலாம். இயற்கைக் கூறுகளிற் படியும் நினைவும் வாழ்த்தும் புலவர் வாயிலாகப் பலதிறக் காவியங்களாகவும், ஓவியங்களாக

1. திருவாசகம் : 37 : 4

வும், கதைகளாகவும், நாடகங்களாகவும், பிற வாகவும் பரிணமித்திருக்கின்றன.

**புரிந்தார்**

'இறைவன் பொருள் சேர்ந்த' நிலையே வழிபாட்டுக் குரியதாதலின். 'புகழ் புரிந்தார்' என்றனர். 'இறைவன் பொருள் சேர் புகழை' விரும்பி நினைத்தலும், விரும்பிச் சொல்லுதலும் வேண்டும். விருப்பின்றி நினைத்தலுஞ் சொல்லலும் போலியாம். அடிப்படை விருப்பம் என்பார், 'புரிந்தார்' என்றனர்.

'இறைவன் பொருள்சேர் புகழை' விரும்பாது, தன் புகழை விரும்பிப் பேசுவது மடமை. முன்னதால் இன்பம் விளையும்; பின்னதால் துன்பம் விளையும்.

**மாட்டு**

'மாட்டு' என்பது, இருள்சேர் 'இருவினையுஞ் சேரா' என்பதை அவாவி நிற்கிறது. இறைவன் பொருள்சேர்புகழ் புரிந்தார் மாட்டு, இருள்சேர் இருவினையுஞ் சேரா என்றபடி. இதை ஆராய்வோம்.

**இருள்சேர் இருவினையுஞ் சேரா**

இருள் - அறியாமை, அஞ்ஞானம், அவித்தை, ஆணவம்.

அறிவை ஒளி என்றும், அறியாமையை இருள் என்றுஞ் சொல்வது மரபு. ஈண்டு இருளுக்கு மயக்கம், பிறவி முதலிய பொருளும் உரைக்கலாம்.

சேர் - ஒன்றும், பொருந்தும்.

சேர் இருவினை - வினைத்தொகை.

இருவினை - நல்வினை, தீவினை.

நல்வினை - புண்ணியம்; தீவினை - பாவம்.

உம் - முற்றும்மை; இனைத்தென்று அறிபொருளில் வந்தது.

சேரா - அடையா, அணுகா.

**இருள்சேர் இருவினை**

இருள் உள்ளவரை வினையுண்டு. இருளற்றால் வினையும் அறும். எல்லாவற்றிற்கும் மூலம் இருள்.

உயிர், இருளில் கட்டுப்பட்டுக் கிடப்பது. இருள் ஒடுங்கி னாலன்றி உயிர் விடுதலை பெறாது. உயிருக்கு விடுதலை நல்க இறைவன் அதற்குத் தனு கரண புவன போகங்களை வழங்கு கிறான். தனு கரண புவன போகங்கள் மாயா காரியங்கள். மாயை

உயிரின் இருளை விலக்கி விளக்கஞ் செய்வது. இதனால் மாயையை [1]'மாயா தனு விளக்காம்' என்று பெரியோர் கூறிப் போந்தனர். மாயா காரியமாகிய தனு முதலியவற்றை உயிர் அடைந்ததும், அது சிற்றறிவும் சிறு தொழிலும் விளங்கப் பெறுகிறது. மாயையின் கூட்டுறவால் இருள் சிறிது விலகுதலால் சிற்றறிவு அரும்புகிறது. இந்நிலையில் மாயையிலுள்ள கர்ம சூக்குமம் காரியப்பட்டு வினை (தொழில்- செயல் -கர்மம்) புரிவதாகிறது. மாயையின் கூட்டுறவுக்கும், அதன்வழி வினை நிகழ்தலுக்கும் மூலமாயிருப்பது இருள் என்பதை மறத்தலாகாது. இருட்கட்டு மாயையால் அவிழ்ந்து, மாயையிற் கரந்து வெளிப் படுங் கர்ம சூக்குமத்தின் முகிழ்ப்பில் சேர்க்கை பெறுகிறது. அச்சேர்க்கையால் இருவினை நிகழ்கின்றன. இருள், மூலமாக நின்றெழுந்து சேர, இருவினை நிகழ்தலால், 'இருள்சேர் இரு வினை' என்றார். இருள் சேர்தற்குரிய இருவினை என்று தெளிவு செய்துகொள்க.

கருமை பூசப் பெற்ற ஒரு பளிங்குருண்டையை நினைந்து கொள்வோம். உருண்டை வெண்ணிற முடையது. வெண்மை கருமையால் மறைந்து கிடக்கிறது. ஒரு சிற்றுளியால் ஒருவன் கருமையைச் சிறிது கீறினால் அவ்வளவில் வெண்மை புலனாகும்; முற்றுஞ் செதுக்கினால் முழு உருண்டையும் வெண்மை மயமாக விளங்கும்.

பளிங்குருண்டை, உயிர். கருமை, இருளென்னும் அறியாமை. சிற்றுளி, மாயை. ஒருவன், இறைவன்.

**இறையருள்**

[2]'காரிட்ட ஆணவக் கருவறையில் யான் கண்ணிலாக் குழவியைப் போல் கட்டுண்'டிருந்தேன். அறியாமை இருட் கட்டால் எனது அறிவு விளங்கவில்லை. இக்கட்டை அவிழ்த்துத் தன்னைப் போல் என்னை ஆக்க இறைவன் திருவுள்ளங் கொள்கிறான். இறைவன் கட்டில்லா முற்றறிவுடையனாதலின், அவன்பால் அழுக்காறு முதலிய தீமைகளில்லை. அவன் அருளே வடிவா யிலங்குவோன்.

நெருப்பில் வெம்மை இயல்பாயிருக்கிறது. நீரில் தண்மை இயல்பாயிருக்கிறது. இவைபோல இறைவனிடத்தில் அருள் இயல்பாயிருக்கிறது.

1. சிவஞானபோதம் : 4 : 5. 2. தாயுமானார்.

அருளின் செயலென்னை? பிறர்க்கு உதவ லன்றோ? இறைவன் அருள், கட்டிலுள்ள உயிர்கட்குத் துணை புரிய எழுகிறது.

கட்டிலுள்ள எனக்கு, இறைவன் மாயையை எடுத்துப் பலதிற உடலங்களைத் தருகிறான். அதனால் யான் படிப்படியே அறிவு விளக்கம் பெறுகிறேன்.

உயிர் அறியாமைக் கட்டில் தன்னிலை யுணராது கிடத்த லான், அது தானே சென்று உடல் பெறுதல் இயலாது. அறியா மைக் கட்டுச் சடமாதலின் அதுவுந் தானே சென்று உடல் மாயையுஞ் சடமாதலின் அதுவும் தானே உடலாகாது. இவை களை ஒன்றுபடுத்தற்கு ஒருவன் வேண்டற் பாலன். அவன் எப்படிப்பட்டவனா யிருத்தல் வேண்டும்? அவன் உயிரைப் போலக் கட்டுடையவனாய், மாயையைப் போலச் சடமயமாய் இருத்தல் கூடாது. அவன் கட்டில்லாதவனாய் முற்றறிவுடைய வனா யிருத்தல் வேண்டும். குருடனுக்குக் குருடன் எங்ஙனம் வழிகாட்ட வல்லவனாவன்?

இறைவன் மாயையை உயிருடன் கூட்டுகிறான். மாயை, பலதிற உடலங்களாகியாகி அவ்வவ்வளவில் உயிரின் அறிவு விளங்கத் துணைபுரிகிறது.

இப்பொழுது (உயிராகிய) யான் மனிதப்பிறவி தாங்கி யுள்ளேன்; 'நானார்? உலகம் எது? இறை எது?' என்று ஆராய் கிறேன். இவ்வாராய்ச்சிக்குக் கருவியாயுள்ளது ஆறாவது அறிவு. இவ்வறிவு விளங்குதற்குரிய கரணங்கள் மனிதப் பிறவியில் அமைகின்றன.

**சீர் புகழல்**

இருளில் கிடந்த எனக்கு இறைவன் செய்த நன்றி என்னே! அந்நன்றியை நினைந்து நினைந்து, அவனருளை வியந்து வியந்து, அவன்சீர் புகழ வேண்டுவது எனது கடமையன்றோ? அவன் சீர் புகழாது, என் சீர் புகழ்ந்து வருவேனாயின், யான் எத்தகைய நன்றி கொன்ற பாவியாவேன்! யான் எங்ஙனம் உய்யுநெறி காண்பேன்?

இறைவன் சீர் புகழ்ந்தால் அவனது அருட்குணம் என்பால் பதியும். யான் உய்வேன். என் சீர் புகழ்ந்தால் என்பால் மருட்குணங்களே மீக்கூரும். இக்குணங்கள் என்னைப் பிறவிப் பெருங்கடலில் உய்க்கும். ஆதலால், அவன் புகழ் விரும்புதலே அறிவுடைமை.

இந்நுட்பம் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தில் - சிவபுராணத்தில் - நன்கு விளங்குகிறது.

***'கண்ணுதலோன் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி***
***எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி***
***விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்***
***எண்ணிறந்த தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்***
***பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்'***

*(அதனால்)*

***'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்***
***பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்***
***கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்***
***வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்***
***செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்***
***எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்***
***மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்.'***

இம் மணிமொழி இத்திருக்குறளுக்கு விரிவுரை போன்றதா யிருத்தலை உன்னுக.

'இருவினையுள் தீவினை (பாவம்) சேராதிருக்க முயல்வது நல்லதே. நல்வினை (புண்ணியம்) சேராதிருக்க ஏன் முயலல் வேண்டும்' என்று கருதற்கு இடனுண்டாகலாம். நல்வினை நல்லுலகும், நல்லுடலும், நல்வாழ்வுங் கூட்டும்; ஆனால் பிறவிநோயை நீக்காது. அதனால் இருவினையும் ஆசிரியரால் குறிக்கப் பெற்றன. நல்வினை பொன்விலங்கு போன்றதென்றும், தீவினை இரும்பு விலங்கு போன்றதென்றும் கூறுப.

### பலதிறக் கருத்துக்கள்

இருள் - அறியாமை. வினை - கர்மம். பொருள் - மாயை இப்பாட்டில் மும்மலம் பேசப்பட்டிருத்தல் காண்க. மும்மலம் உள்பொருளென்றும், இல்பொருளென்றும், அநிர்வசனிய மென்றும் வழங்கப்படுகின்றன. மூன்றையுங் கொள்வோருளர்; இரண்டை மட்டுங் கொள்வோருளர்; ஒன்றையே கொள்வோ ருளர்; இவை யாவும் பொய்யென்போரு முளர்.

இப் பலதிறக் கருத்துக்களை வெளியிட்டோர் அனைவரும் பேரறிஞரே யாவர். பேரறிஞரிடைக் கருத்து வேற்றுமைகள் எழுதற்குரிய மூலகாரணம் காலதேச வர்த்தமானப் போக்கேயாகும்.

**சேரா**

உயிரின் இருளை நீக்க ஆண்டவன் மாயா உடலையும் உலகையும் அளிக்கிறான். உயிர், உடல் தாங்கி உலகில் வாழும் போது, மாயையுள் ஒடுங்கி மறைந்து நின்ற கர்ம சூக்குமம், தூலம் பெறுகிறது; பெற்றதும் இருவினை நிகழ்கின்றன. இருவினையும் மாய்தல் வேண்டும். இதற்கு இறைவன் பொருள்சேர் புகழைப் புரிதல் வேண்டுமென்று ஆசிரியர் வழிகாட்டியுள்ளனர். அவ்வழியே நடந்தால் இருவினை மீண்டும் சேரா என்றபடி.

'இருவினையுஞ் சேரா' என்பது, மாயை நீக்கத்தையும் இருள் ஒடுக்கத்தையுங் குறிப்பதென்க. மும்மலமும் அறும் என்றவாறு.

'இருவினையுஞ் சேரா' என்று கர்ம மல அழிவை மட்டுங் குறித்ததென்னை என்று சிலர் கருதலாம். கர்மவேர் அறுந்தால் மற்றவை காய்ந்து உலர்ந்து நீறாகுமாதலின் என்க. கர்ம மூலம் உள்ளவரை மற்ற இருமலமும் வாலசைத்துக் கொண்டே யிருக்கும். இதனால் கர்மமாகிய வினைமீது ஆசிரியர் கருத்துச் சென்றது போலும்.

இருவினையுஞ் சேராமையே பிறப்பிறப்பு அற்ற நிலை.

இருவினை, இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் பக்கமும் அணுகாதென்பார், 'மாட்டு' என்றார். இதனால் இருவினையின் சிறுமையையும், இறைவன் பொருள்சேர் புகழ் புரிதலின் பெருமையையும் விளக்கியவாறாம்.

இப் பாட்டால் இருள்சேர் இருவினையுஞ் சேராதிருப்ப தற்குரிய வழி, இயற்கை - இறையின் புகழில் நாட்டஞ்செலுத்து வது என்பது விளக்கப்பட்டது.

இறைவன் புகழில் நாட்டஞ் செலுத்தினால், வினை என் செய்யும்? பிற என் செய்யும்? எல்லாப் புகழ்ச்சிகட்கும் உரியவன் ஆண்டவனே. இவ்வாறு கிறிஸ்துவும், முகம்மது நபியும் அருளியுள்ளனர்.

[1]***'வேதவேள்வியை....ஞால நின்புகழே மிகவேண்டும் * * *'***
[2]***'அப்பா...... எப்பாரும் எப்பதமும் எங்கணுநான் சென்றே***
***எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்'***
[3]***'இருள்புரி வினைகள் சேரா***
***இறைவன தறத்தை எய்தின்'*** (2)

---

1. சம்பந்தர். 2. இராமலிங்கர். 3. யசோதர காவியம்.

## (iii) கடவுளின் குருநிலை

**3**

*பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கம்*
*நெறிநின்றார் நீடுவாழ் வார்.*

### பொருள்

*பொறிவாயில் ஐந்து அவித்தான் - ஐம்பொறிகளையும் வரியாகவுடைய ஐம்புலனையும் அடக்கினவனது, பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார் - பொய்யற்ற ஒழுக்க வழியில் நின்றவர், நீடு வாழ்வார் - நீண்ட காலம் வாழ்வர்.*

### கருத்து

*குருநாதன் வாயிலாகக் கடவுள் அறிவுறுத்திய ஒழுக்க நெறியில் நின்றவர் நீண்ட காலம் வாழ்வர்.*

### விருத்தி

*முதற்பாட்டு விருத்தியில் கடவுளுக்குரிய மூன்று நிலை சொல்லப்பட்டன. அவற்றுள் கடவுள் குருவைக் கோயிலாக் கொண்டு கடனாற்றுவது இப்பாட்டிற் குறிக்கப் பெற்றிருக்கிறது.*

### பொறிவாயில் ஐந்தவித்தான்

*பொறி - ஐம்பொறி : மெய், வாய், கண், மூக்கு, செவி,*

*வாயில் - வழி*

*ஐந்து - ஐம்புலன்: ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை (ஸ்பரிசம், ரசம், ரூபம், கந்தம், சப்தம்).*

*ஐம்பொறிக்கும் ஐம்புலனுக்குமுள்ள தொடர்பு:- மெய்யில் நிகழ்வது ஊறு; வாயில் சுவை; கண்ணில் ஒளி, மூக்கில் நாற்றம்; செவியில் ஓசை.*

*ஐந்து - தொகைக் குறிப்பு.*

*அவித்தான் - அடக்கினான்; 'அறுத்தான்' என்பர் பரிமேலழகர்; 'கெடுத்தான்' என்பர் அடியார்க்கு நல்லார்; 'ஒருமூன் றவித்தோன்' (சிலப்பதிகாரம் : 10 : 194 : உரை); அடியார்க்கு நல்லாரே' 'அடக்கலுமாம்' என்று குறிப்பிலுரைத்துள்ளார்.*

### பொறிவாயில் ஐந்து

*ஐம்பொறி, ஐம்புல நுகர்ச்சிக்கு வாயிலா யிருப்பவை; அதனால் 'பொறிவாயில் ஐந்து' என்றார்.[1]"மெய்வாய் கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற - ஐவாய வேட்கை அவாவினை * * * *'*

1. நாலடியார்.

வெறும் 'ஐந்தவித்தான்' என்று கூறாது, 'பொறி வாயில் ஐந்தவித்தான்' என்று கூறியதென்னை?

ஐம்பொறி - பஞ்சேந்திரியம்; ஐம்புலன் - பஞ்ச தன்மாத்திரை. இரண்டும் தனித் தனித் தத்துவங்கள். ஆனால் இரண்டுந் தொடர் புடையன. ஐம்புலன், ஐம்பொறிச் சார்பில் எழுந்து இயங்குவன. ஐம்பொறிச் சார்பின்றி ஐம்புலன் எழா; இயங்கா.

பொறி பருமை; புலன் நுண்மை. நுண்மைக்குப் பருமையின் துணை பொதுவாகத் தேவை. நுண்மை தனக்குரிய பருமையின் துணையின்றி நிகழ்வதில்லை. ஐம்புலனுண்மை அவைகட்குரிய ஐம்பொறிப் பருமையின் சார்பின்றி எழுவதில்லை.

பருமைப் பொறி வாயிலாகவே நுண்மைப் புலன் இயங்கும். வேறு வாயிலாகப் புலன் இயங்குவதில்லை. எவ்வெப் பொறிவழி எவ்வெப் புலன் எழுகிறதோ அவ்வப்பொறி வழியே அவ்வப் புலன் அடங்குதல் வேண்டுமாதலின், 'ஐந்தவித்தான்' என்று கூறாது, 'பொறி வாயில் ஐந்தவித்தான்' என்று கூறினர்.

பொறிவாயில் ஐந்தவித்தான் - 'மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாக வரும் ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை என்னும் ஐந்தின்கண்ணும் செல்லும் மன நிகழ்ச்சியை அடக்கினானது' என்பது மணக்குடவர் உரை.

**ஐந்தவித்தல்**

ஐம்புலனை அவித்தலாவது, ஐம்புலனையும் அடக்குவது; புலனை அறவே அழிப்பதன்று. புலன்களை அழித்தால் அவை அறிவற்ற பொருளாகும்.

நாவடக்கம், கையடக்கம் முதலிய வழக்குகளை நோக்குக. இவைகட்கு நாவழிவு கையழிவு என்னும் பொருளையா கொள்வது? 'நாவடக்கமா யிரு', 'கையடக்கமா யிரு' என்னும் வாசகங்கட்கு முறையே 'ஒன்றையுந் தின்னாதே' 'ஊமையாயிரு' என்றும், 'கையைவெட்டிக் கொள்', 'ஒன்றையுஞ் செய்யாதே' என்றும் எவரே பொருள் கூறுவர்? 'பொருந்திய உணவை உண்', 'நல்லன வற்றைப் பேசு', 'திருடாதே', 'நல்லனவற்றைச் செய்' என்பன வல்லவோ அவ்வாசகங்களின் பொருள்? இவ்வாறே 'புலனடக்கம்' என்பதற்கும் பொருள் கொள்க. புலன்களை நெறியல்லா நெறி யில் செலுத்தாமையே புலனடக்க மென்பது; புலன்களை அழித்துக் கொள்வதன்று.

புலன்கள் அழிக்கத் தக்கனவாயின், அவை படைப்பில் அமைய வேண்டுவதில்லை. அவை படைப்பில் அமைந்துள்ளன.

படைப்பில் அமைந்துள்ளவற்றை அழிக்கப் புகுவது இயற்கை நெறி பற்றி ஒழுகுவதாகுமோ? புலன்கள் அழிக்கப்படின் அவை அசேதனமாகும்.

***'அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்***
***அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை***
***அஞ்சும் அடக்கில் அசேதனம் ஆகுமென்றிட்டு***
***அஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே'***

என்றார் திருமூலர். ஆகவே, 'அவித்தல்' என்பது அறவே அழிப்பதன்று; புலன்கள் தீய வழியிலுழன்று கொடுமை செய்வதை அடக்கி அவற்றை நல்வழியில் செலுத்துவதென்க.

**அவித்தான்**

ஐந்தவித்தான் எவன்? இறைவன் என்று சிலர் கூறுப. இறைவனுக்கு ஐந்து உண்டோ?

இறைவன் பிறப்பிறப்பு இல்லாதவன்; உருவம் அருவம் அருவுருவம் முதலிய எல்லாவற்றையுங் கடந்தவன்; மாற்ற மனங்கழிய நின்றவன். அவனுக்கு ஐம்புலனேயில்லை. புலனே யில்லா ஒருவனைப் புலனை அவித்தவன் என்று எப்படிச் சொல்வது?

'ஐந்தவித்தான்' என்றமையால், ஒருபோது ஐம்புலக் குறும்புடையனாயிருந்து, பின்னை அக்குறும்பை அவித்தவன் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. இறைவனோ புலனில்லாதவன். புலனே இல்லாதபோது, குறும்புக்கு இடம் ஏது? ஆகவே, 'ஐந்தவித்தா'னை எல்லாங் கடந்த இறைவன் என்று சொல்லுதல் பொருந்தாதென்க.

'ஐந்தவித்தான்' இறைவனல்லனாயின், 'அவன்' கடவுள் வாழ்த்தில் புகுந்திருத்தலென்ன? என்னுங் கடா எழும். ஈண்டுக் கடவுளுக்குரிய மூன்று நிலையை உன்னின் உண்மை விளங்கும்.

**குரு நிலை**

மூன்று நிலையுள் ஒன்று, கடவுள் குருவினுடலைக் கோயிலாக் கொண்டு உயிர்கட்கு அருள் புரிவது. இக்குரு நிலையை உணர்த்துவது 'ஐந்தவித்தான்' என்பது.

ஐந்திலிருந்து ஐந்தவித்தவன் குருநாதன். குருநாதன் உடலைக் கோயில் கொண்டு கடனாற்றுவதுங் கடவுள் நிலைகளுள் ஒன்றாதலான், ஆசிரியர் 'ஐந்தவித்தானை' (குருநாதனை)க் கடவுள் வாழ்த்தில் வைத்து ஓதினரென்க.

குருநாதன் மனிதனா? ஆண்டவனா? குருநாதன் மனிதக் கோலமுடையவன். அவன் அகத்தில் வீற்றிருப்பவன் ஆண்டவன். குருநாதன் தனக்கென ஒன்றில்லாதவன்; கடவுளே விளங்கும் உள்ளமுடையவன்; கடவுள் இயக்க இயங்குவோன்.

மனமில்லாக் கடவுள் குருநாதன் வழி நினைப்பவனா கிறான்; மொழியில்லாக் கடவுள் குருநாதன் வழிப் பேசுவோனா கிறான்; மெய்யில்லாக் கடவுள் குருநாதன் வழிச் செயல் புரிவோனாகிறான். இறைவன் குருநாதன் வழிக் கடனாற்று வோனாகிறான் என்று சுருங்கச் சொல்லலாம். கடவுள் நிலை களுள், கடவுள் குருநாதன் வாயிலாகக் கடனாற்றுவதும் ஒன்று. இஃது எல்லாவற்றிற்கும் அடிப்படை.

கடவுள் எல்லாவற்றையுங் கடந்து விளங்குவது. இஃது உணர்வு கடந்த தனித்த தூய நிலை. இது வழிபாட்டுக்கு உதவாதது. கடவுள், இயற்கையை உடலாக் கொண்ட நிலையும் ஒன்று. இயற்கையுள் இறையிருத்தலை எப்படித் தெளிவது? இயற்கை வழிபாட்டால் அதனுள் விளங்கும் இறை பெரும் பான்மையோர்க்குப் புலனாவதில்லை. மிக மிகச் சிலர்க்கே அவ் வழிபாட்டால் இறையுண்மை விளங்கும். இது புறனடை. இயற்கை வழிபாடு மக்களைப் பண்படுத்துதற்குரியது. பண்புக்கு இயற்கை வழிபாடு இன்றியமையாததே.

இயற்கை வழிபாடு முதிர முதிரப் படிப்படியே இயற்கை யின் நானாபேதங்கள் மறையும்; எல்லாம் ஒலிமயமாகும். இந் நிலையில் குருநாதன் காட்சிளிப்பன்; காட்சியளித்து உண்மையை அறிவுறுத்துவன். அவன் அறிவுறுத்தலால் இயற்கையில் கோயில் கொண்டுள்ள இறையின் ஒளி விளங்கும்; மனம் ஒடுங்கும். பின்னே எல்லாவற்றையுங் கடந்த கடவுளின் தனிமையை உணரும் நிலை கூடும். இப் பேற்றிற்கெல்லாம் அடிப்படை குருமொழி என்பதை மறத்தலாகாது.

### குரு ஒருவரா? பலரா?

குரு ஒருவரா? பலரா? குருமார் உள்ளத்தில் ஒருவனே இருந்து கடனாற்றலால், அவரனைவரும் உணர்வில் ஒருவரே யாவர். வழிபாட்டில் முதல் முதல் புகுவோர், குருமாரைப் பலரென எண்ணுவர். அவர் தாம் விரும்பும் ஒரு குருவை வழி படலாம்; மற்றவரை நிந்தித்தலாகாது. தம்மைப் பண்படுத்திக் கொண்டவர்க்குக் குருநாதன் உண்மையை அறிவுறுத்தியதும், அவர்க்கு எல்லாக் குருமாரும் ஒருவராகவே தோன்றுவர். குரு நிலையைப் பற்றியும் வழிபாட்டு முறைகளைப் பற்றியும்

'சன்மார்க்க போதமும் திறவும்' என்னும் நூலில் விளக்கமாகவும் தெளிவாகவும் விரித்துக் கூறியுள்ளேன். விரிவு அந்நூலிற் காண்க.

குருமார்க்கு உலகில் வழங்கும் பெயர்கள் பல. அவற்றுள் சில வருமாறு: சித்தன், அருகன், புத்தன், கிறிஸ்து, நபி, மாஸ்டர், ஆச்சாரியன், தீர்த்தங்கரன், குமரன், மூர்த்தி முதலியன. இப்பெயர்களின் பொருள் ஒன்றே.

**குருநாதன் இயல்**

குருநாதனுக்கெனச் சிறப்பியல்கள் பல உண்டு. அவற்றைச் சொல்வது பாவம். ஆனால் இந்நாளில் போலிகள் தோன்றி உலகை வஞ்சிக்கின்றார்களாதலின், குருநாதன் இயல்களிற் சில கூறுதல் பாவமாகாது.

குருநாதன் மேனி பொன்வண்ணமாயிருக்கும். அவன் மேனியில் இளமை தவழும். நரை திரை மூப்பு அவனை அணுகா. அவன் நோய்வாய்ப் படான். ஞானக் கனல் அவனைச் சூழ்ந்து நிற்கும். பிறருடைய நோயும் அவன் முன்னிலையில் தானே நீங்கும். சில வேளைகளில் குருநாதன் நினைப்பாலோ, பார்வை யாலோ, தொடுதலாலோ நோய் தீர்ப்பன். உயிர்கள் அவன் உபதேசம் பெற்றதும் அவற்றின் காம குரோதம் முதலியன பொன்றும்.

**குருக்கோயில்**

கடவுள் நாமரூபமின்றி வாக்கு மனங்கட் கெட்டாத தாதலின், வாக்கு மனமுடைய யான் எப்படி அதனை வழி படுவேன்? கடவுளுக்கெனத் தனிவழிபாடு வேண்டுவதில்லை. வழிபாட்டையுங் கடந்தது கடவுள்.

வழிபாட்டுக் கென்று இருவித இறைக்கோயிலுள்ளன. ஒன்று இயற்கைக் கோயில்; மற்றொன்று குருக்கோயில். இயற்கைக் கோயிலையும் வழிபாட்டையும் இரண்டாம் பாட்டில் ஆசிரியர் அருளினர்; குருக்கோயிலையும் வழிபாட்டையும் இப்பாட்டில் நுட்பமாக அவர் தெளிவு செய்துள்ளனர்.

கடவுளுக்குரிய மூன்று நிலையை உன்னின், இப்பாடல் மூன்றாவதாகிய குரு நிலையைக் குறிப்பதென்பது இனிது விளங்கும். இப்பாட்டில் குருநாதன்வழிக் கடவுள் கடனாற்று வதை உணர்த்தியவாறாம்.

**பொய் தீர் ஒழுக்க நெறி நின்றார்**

பொய் - மெய்யல்லாதது.

தீர் - அற்ற, இல்லாத; அறுக்கும் எனினுமாம்.

*தீர் ஒழுக்கம் - வினைத்தொகை.*

*நெறி - வழி, மார்க்கம்.*

*பொய் ஒழுக்க நெறி - சன்மார்க்கம்.*

*நின்றார் - உறுதியாக நின்றார்; (நிற்றல் - உறுதியாக ஒன்றில் படிந்து நிற்றல்).*

**பொய்தீர் ஒழுக்கநெறி**

*பொய் எல்லாப் பாவங்கட்கும் அடிப்படை. அஃதொன் றழிந்தால் மற்றெல்லாந் தாமே ஒழியும்.*

***'பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற***
***செய்யாமை செய்யாமை நன்று'***

*என்றார் ஆசிரியர்.*

*பொய்யற்ற நெறியே ஒழுக்கமுடையது. பொய்யுள்ள நெறி ஒழுக்க முடையதாகாது. ஒழுக்க நெறிக்குப் பொய்யாமை இன்றியமையாத தென்று வலியுறுத்துவார், 'பொய் தீர் ஒழுக்க நெறி' என்றார்.*

*பொய்யை அறுக்கும் ஆற்றல் ஒழுக்கத்துக்குண்மையான், பொய்யை அறுக்கும் ஒழுக்கம் என்று கொள்ளலுமொன்று (தீர் - அறுக்கும்). ஒழுக்க நெறி நிற்க உறுதி கொண்டால் பொய் தானே படிப்படியாக அகன்றொழிதல் ஒருதலை.*

*எல்லாத் தீமைகட்கும் மூலமாயுள்ள பொய்யினின்றும் மக்கள் விடுதலையடைதல் இயலுமா என்னும் ஐயம் பிறத்தல் இயல்பு. பொய்மைகட் கெல்லாம் உயிராயுள்ள பொய்மை யொன்றுளது. அப்பொய்மை ஒழிந்தால் மற்றப் பொய்களும், அவற்றின் கூறுபாடுகளும் தாமே ஒழியும். அப்பொய்மை எது?*

**அடிப்படையான பொய்மை**

*இறை எங்குமுள்ளது. எங்குமுள்ள ஒன்றை, 'அங்கு இங்கு' என்று கொள்வது பெரும் பொய். இப்பொய்யே எல்லாப் பொய்மைகளுக்குந் தாயகம். இத் தாய்மைப் பொய் ஒழிந்தால் மற்றவையெல்லாம் தாமே ஒழியும். முதற்பொய்யை ஒழிக்கவே மக்கள் முயலல் வேண்டும்.*

*இறை அங்கிங்கெனாதபடி எங்குமுள்ளதை உணர்ந்து வாழ்வோர்க்கு எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகத் திகழும். அவர்க்கு ஒருவர் பகைவராகவும், மற்றொருவர் நண்பராகவும் தோன்றார்; எவ்வுயிருஞ் சகோதரமாகவே தோன்றும். இவ்வன்பு நிலை யடைந்தோர் உள்ளம் எவரைக் கொலை செய்ய எழும்?*

எவர் பொருளைக் களவாடத் துணியும்? எவரை - எதைக் காமுறும்? எதற்காகப் பொய்யில் புகும்? ஆகவே, பொய்களுக் கெல்லாம் உயிராயுள்ள ஒன்றை யொழிக்கவே மக்கள் உளங் கொளல் வேண்டும்.

***'ஐவகை..... பொய் வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே***
***பொய்யிலா மெய்ய றிவில்***
***போதபரி பூரண அகண்டிதா காரமாய்ப்***
***போக்குவர வற்ற பொருளே'***

என்பது தாயுமானார் திருவாக்கு.

பொய் தீர் ஒழுக்க நெறியே கடவுள் நெறி என்பது. பொய் தீர் ஒழுக்க நெறியே நடந்தால் கடவுள் திருவடி சேரலாம். இந் நெறி: நன்னெறி, அறநெறி, செந்நெறி, திருநெறி, அருள்நெறி, முதலிய பெயர்களால் அழைக்கப்படுகிறது. சன்மார்க்கம் என்பதும் இதுவே.

பொய் தீர் ஒழுக்க நெறி, குருநாதன் வழிக் கடவுள் உணர்த்துவதாதலின், 'ஐந்தவித்தானது பொய் தீர் ஒழுக்க நெறி' என்றார்.

***'அறிவினால் குறைவில்லா அகல்ஞாலத் தவறிய***
***நெறியெல்லாம் எடுத்துரைத்த நிறைஞானத் தொருமூர்த்தி'***

எனவரூஉம் ஆழ்வார் திருவாய்மொழியை நோக்குக.

**சமயங்களின் அகம்**

எச்சமயப் பெயரையுங் குறியாது, 'பொய் தீர் ஒழுக்க நெறி' என்றது உன்னத் தக்கது. மெய்யான ஒழுக்க நெறியே வாழ்வுக்கு வேண்டற்பாலது. இவ்வொழுக்க நெறியையே சமயங்க ளெல்லாம் அறைகூவுகின்றன. சமயங்களின் அகத்தில் ஒழுக்க நெறி ஒன்றே ஒளிர்கிறது. இந்நுட்பந் தேறாது சமயவாதிகள் பிணங்கிப் பூசலிடுகிறார்கள். சமயப் பூசலுள்ள வரை 'பொய்தீர் ஒழுக்க நெறி' புலனாகாது. பொய்தீர் ஒழுக்கநெறிக்குச் சமரச ஞானம் வேண்டற்பாலது.

***'எங்குவந் துறுகோ என்னையாள் வானே ஏழுல கங்களும் நீயே***
***அங்கவர்க் கமைந்த தெய்வமும் நீயே அவற்றவை கருமமும் நீயே'***

என்று நம்மாழ்வாரும்,

***'வாது செய்து மயங்கு மனத்தராய்***
***ஏது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள்***
***யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்***
***மாதே வனலால் தேவர்மற் றில்லையே'*** என்று அப்பரும்,

*'ஒன்றது பேரூர் வழியா றதற்குள*
*என்றது போல இருமுச் சமயமும்*
*நன்றிது தீதிது என்றுரை மாந்தர்கள்*
*குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே'*

என்று திருமூலரும்,

*'சமயபே தத்தவர்க் கணுகொணா மெய்ப்பொருள்'*

என்று அருணகிரியாரும்,

*'வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கில்*
*விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்*
*மாறுபடுங் கருத்தில்லை'*

என்று தாயுமானாரும்.

*'பெருகியபே ரருளுடையார் அம்பலத்தே நடிக்கும்*
*பெருந்தகையென் கணவர்திருப் பேர்புகலென் கின்றாய்*
*அருகர்புத்த ராதியென்பேன் அயயென்பேன் நாரா*
*யணனென்பேன் அரனென்பேன் ஆதிசிவ னென்பேன்*
*பருகுசதா சிவமென்பேன் சத்திசிவ மென்பேன்*
*பரமமென்பேன் பிரமமென்பேன் பரப்பிரம மென்பேன்*
*துருவுசுத்த பிரமமென்பேன் துரியநிறை வென்பேன்*
*சுத்தசிவ மென்பனிவை சித்துவிளை யாட்டே'*

என்று இராமலிங்கரும் அருளியுள்ள சமரச மொழிகளை நோக்குக.

### என்றும் உள்ளது

'பொய்தீர் ஒழுக்கநெறி' இன்று தோன்றியதன்று; நேற்றுத் தோன்றியதன்று. அதைக் காலத்தால் அறுதியிட்டுக் கூறுதல் இயலாது. அஃதென்றும் இருப்பது. அது குருநாதன் அறிவுறுத்திய வழி விளங்குவது.

என்றும் உள்ள 'பொய்தீர் ஒழுக்கநெறி' மிகச் சிலர்க்கு இயல்பாகவே விளங்கும். பெரும்பான்மையோர்க்கு அஃது இயல்பில் விளங்குவதில்லை. இவர்க்குக் குருநாதன் துணை வேண்டும். உண்மையைக் குருநாதன் காட்டக் காணும் நீர்மையே பெரும்பான்மையோர்க்கு உண்டு.

### ஐந்தவித்தான் அருள்

ஒருவர், பிறந்து வளர்கிறார்; கற்பன கற்கிறார்; கேட்பன கேட்கிறார்; கற்றல் கேட்டலை வாழ்வில் தெளிவு பெற மண வாழ்வில் தலைப்படுகிறார்; பிள்ளைப்பேறு முதலியன பெறு கிறார். தமக்கு உண்மையெனத் தோன்றும் ஒரு நெறியில் நிற்க

முயல்கிறார்; அந்நெறிக்குரிய நூல்களை ஓதுகிறார்; கோயிலுக் குப் போகிறார்; முறைப்படி வழிபாடு செய்கிறார்; இன்ன பிறவும் நிகழ்த்திய வண்ணமிக்கிறார். அவர்தம் வாழ்வு கழிந்து கொண்டே போகிறது. மரணம் நெருங்குகிறது.

அந்தோ! இறப்பதற்கா பிறப்பது? இறப்பை ஒழிப்பதற்கே பிறப்பு உண்டாகிறது. பிறந்தபின் இறவாத வழிதேடுதல் வேண்டும். அஃது எது? அதுவே 'பொய்தீர் ஒழுக்கநெறி.' அஃது 'ஐந்தவித்தான்' (குருநாதன்) அருளால் விளங்குவது.

## அருள் பெறும் வழி

'ஐந்தவித்தான்' அருளைப் பெறுவது எப்படி? அதற்குரிய உழைப்பில் தலைப்பட்டால் அவன் அருளைப் பெறலாம். உழைப்புக்குரிய முறைகளை அறிவுறுத்துவது திருவள்ளுவர் நூல்.

கல்வி, திருமணம், பிள்ளைப்பேறு, கோயில் வழிபாடு இன்னபிற 'பொய்தீர் ஒழுக்கநெறி'க்கு வழிகோலுவன. இவை, நிலயம் எழுப்புதற்குரிய சாரம் போன்றன. இவற்றின் வாயிலாகப் பாவத்துக்கு அஞ்சும் நெஞ்சம் பெறுதல் வேண்டும். பாவத்துக்கு அஞ்சும் நெஞ்சம், பழைய பாவங்களைக் குறித்துக் கசிந்து கசிந்து உருகும்; மேலும் மேலும் பாவங்களைச் செய்யத் துணியாது. இந்நிலையைக் குருநாதன் உணர்ந்ததும் 'பொய்தீர் ஒழுக்க நெறி'யை உணர்த்துவன்.

## குருமாருட் சிலர்

குரு ஒருவரா பலரா என்பது மேலே விளக்கப்பட்டது. குருமார் பலர் என்னும் உணர்வே தொடக்கத்தில் தோன்றும். குருவருளால் 'பொய்தீர் ஒழுக்க நெறி' விளங்கிய பின்னர்ப் பன்மை யுணர்வு நீங்கும்.

குருமார் திருக்கூட்டம் ஒன்றுண்டு. அவர் உள்ளத்தில் ஒளிரும் பொருள் ஒன்றேயாதலின் அவரனைவரும் ஒருவரே யாவர். அவருள் இங்கே குறிக்கத் தக்கவர் எண்மர். அவர்: முகம்மது, இயற்கை அன்னை, கிறிஸ்து, விருஷபதேவர், புத்தர், கண்ணபிரான், குமரன், தட்சிணாமூர்த்தி. இவரனைவரும் உணர்வில் ஒருவரே என்பதை மறத்தலாகாது. (சிலர்க்கு இயற்கை வழிபாட்டளவில் உண்மை விளங்குதலான், இயற்கை அன்னையையும் குருமார் கூட்டத்தில் சேர்த்துக் கூறுவது மரபு.)

## ஆரம்பர் கடமை

குருமார் எவரையேனும் ஒருவரைத்தொடக்கத்தில் வழிபட்டு, அவர் வழி நின்று ஒழுகி வரலாம். இவ் வழிபாட்டால்

பாவத்துக்கு அஞ்சும் நெஞ்சம் உண்டாகும்; உண்டானதும் அவர்தங் கோலமே குருவாகத் தோன்றும். குருநாதன், 'பொய் தீர் ஒழுக்க நெறி'யை உணர்த்துவன். 'பொய்தீர் ஒழுக்க நெறி' விளங்கியதும், எல்லாக் குருமாரும் ஒருவராகவே காட்சியளிப்பர். பிறர் நிந்தனையின்றி ஒருவரை உறுதியாகப் பற்றுவது ஆரம்பர் கடமை.

**ஒருமைக் கூற்று**

குருமார் அனைவரும் ஒருவரே என்னும் நுட்பமும், இறைவன் ஒருவனே அவர் வாயிலாக உயிர்களுக்கு அருள் செய்கிறான் என்னும் நுட்பமும் தோன்றவே குருநாதனை 'ஐந்த வித்தான்' என்று ஆசிரியர் ஒருமையால் கூறினர் என்க.

'ஐந்தவித்தான்' என்னுங் குருநாதனது உள்ளங்கோயில் கொண்ட இறைவனையே 'ஐந்தவித்தான்' என்று ஆசிரியர் உலகுக்கு உணர்த்துகிறார். 'ஐந்தவித்தான்' வாயிலாக இறைவன் கடனாற்றுகிறான் என்பது கருத்து.

கடவுளுக்குரிய மூன்று நிலையுள், மூன்றாவதாகிய குரு நிலை ஈண்டுக் குறிக்கப்பட்டதெனக் கொள்ளின் எவ்வித ஐயப் பாட்டுக்கும் இடமிராது.

**நின்றார்**

'பொய்தீர் ஒழுக்க நெறி'யை எண்ணுவதால் மட்டும், பேசுவதால் மட்டும் பயன் விளையாது. அந்நெறியில் நிற்றல் வேண்டும். செயலை வலியுறுத்த வேண்டி, 'நின்றார்' என்றார். வாசாஞானங் கூடாது என்பது கருத்து.

'நின்றார்' என்பதே நன்னெறியில் நிற்பதைக் குறிக்கும். அவ்வளவில் ஆசிரியர் நில்லாது, 'நெறி நின்றார்' என்றனர்; அவ்வளவிலும் நில்லாது, 'ஒழுக்க நெறி நின்றார்' என்று மேலும் கூறினர்; அதற்கு மேலும் சென்று, 'பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார்' என்று அருளினர்; அந்நெறி இன்னதென்பார், 'ஐந்த வித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார்' என்று விளக்கிக் காட்டினர்.

இறை, குருநாதன் வழி அறிவுறுத்தும் 'பொய்தீர் ஒழுக்க நெறியே' உய்வளிக்க வல்லது என்பதையும், அதன் கண் உறுதியாக நின்றொழுகல் வேண்டும் என்பதையும் விளக்கியவாறாம்.

**நீடு வாழ்வார்**

நீடுவாழ்வார் - மரணமின்றி வாழ்வர்.

நீடு - அழியாமை.

'நீடு வாழ்வார்' என்பதன் குறிப்புரையில் 'இது சாவில்லை என்றது' என்று மணக்குடவர் கூறியுள்ளதும், அதற்கு, 'பிறப் பின்றி எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வார்' என்று பரிமேலழகர் உரை விரித்திருப்பதும் உன்னற்பாலன.

'பொய்தீர் ஒழுக்க நெறி' நிற்பதனாலாய பயன் 'நீடு வாழ்' தலாகும். இந்நெறி நின்று நீடு வாழ்ந்தவர் கதைகள் பல உண்டு. நீடு வாழ்தலாவது மரணமிலாப் பெருவாழ்வெய்தல்.

### மனிதப் பிறவியும் சாகா நிலையும்

உயிர் பலதிறப் பிறவி தாங்கித் தாங்கி மனிதப் பிறவி தாங்குகிறது. மனிதப் பிறவியில் பகுத்தறிவு விளங்குதற்குரிய கரணங்கள் அமைந்துள்ளன. குருவருளால் ஐந்தவிந்ததும் பகுத் தறி வென்னும் ஆறாவதறிவு விளங்கும். ஆறாவதறிவு விளங்கப் பெற்றோர், 'பொய்தீர் ஒழுக்க நெறி'யினின்றும் வழுவாத் திறம் பெறுவர். இது சாகா நிலை கூட்டும். சாகா நிலையாவது மீண்டும் பிறவாமை.

***'இக்காய நீக்கி இனியொரு காயத்தில்***
***புக்குப் பிறவாத போம்வழி தேடுமின்'***

என்றார் திருமூலர். மீண்டும் பிறவாமையே இறவாமை என்பது.

மூவகை உடலங்களுள் வினை சேர்தற்குரியது பருவுடல். பருவுடல் மீண்டும் தாங்கா நிலை எய்துவது மீண்டும் பிறவாமை என்க.

பருவுடலையும் ஞான ஒளி மயமாக்கிக் கொள்ளும் நிலை உண்டு. இந்நாளில் அந்நிலை கூடுதல் அரிது. அத்தகைய நிலை ஒன்றுண்டு என்பது உறுதி.

***'அஞ்ஞானம் போன்றுட லையறு மந்தியில்***
***வஞ்சக வாத மறுமத் தியானத்தில்***
***செஞ்சிறு காலையிற் செய்திடிற் பித்தறு***
***நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நாசமே'***
***'மூன்று மடக்குடைப் பாம்பிரண் டெட்டுள***
***வேன்ற வியந்திரம் பன்னிரண் டங்குலம்***
***நான்றவிழ் முட்டை இரண்டையுங் கட்டியிட்***
***டூன்றி யிருக்க உடலழி யாதே'***
***'நீல நிறனுடை நேரிழை யாளொடும்***
***சாலவும் புல்லிச் சதமென் திருப்பார்க்கு***

***ஞால மறிய நரைதிரை மாறிடும்***
***பாலனு மாவர் பராநந்தி யாணையே'***

*என்று திருமூலர் அருளியிருத்தலை ஓர்க.*

**நீடு வாழ்தல்**

*பருவுடலொழிந்த நுண்ணுடல், மீண்டும் பருவுடல் தாங்காதொழியும் நிலை கூடினாற் போதும். இதுவும் சாகா நிலையின் பாற்பட்டதே. மக்கள், பருவுடல் வாழ்வு பெற்றிருக்குங் காலத்தில், 'பொய்தீர் ஒழுக்க நெறி'யில் நிற்கும் பேறு பெறின் வினைகளெல்லாம் நசித்துப் போகும். வினைகள் நசித்து விடின் பருவுடல் மீண்டும் அமைதற்கு ஏதுவில்லை. நுண்ணுடல், பருவுடல் தாங்காது மேல்நிலையைப் படிப்படியே எய்தும். அதனால் உயிர் முழு விடுதலை அடையும். அழியா இன்பப் பேறே 'நீடு வாழ்தல்' என்பது.*

*மீண்டும் பிறவாமை என்னும் இறவாமையில் உறுதியில்லா தார், ஒழுக்க நெறி நிற்பதால் இவ்வுலகில் பிணி முதலிய கொடுமை கட்கு இரையாகாது, 'நீடு வாழ்தலாகும்' என்றாதல் கொள்வாராக.*

*ஐந்தவித்தானது பொய்தீர் ஒழுக்கநெறி என்றோ, ஐந்தவித் தான் அறிவுறுத்திய பொய்தீர் ஒழுக்கநெறி என்றோ கொள்க.*

*ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடு வாழ்த லாகிய சாகாநிலை பெறுவர் என்னும் உண்மையை இப் பாட்டால் தெரிவித்தவாறாம்.*

[1]***'ஐவரை வென்றோன் அடியிணை யல்லது***
***கைவரைக் காணினும் காணா என்கண்'***
[2]***'பொறிவாயில் ஐந்தவித்த புனிதன் நீயே'*** (3)

**4**

**(iv) திருவடி போற்றல்**

***மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்***
***நிலமிசை நீடுவாழ் வார்.***

**பொருள்**

*மலர்மிசை ஏகினான் - (குருநாதனின்) நெஞ்சத் தாமரை யில் எழுந்தருளினவனது, மாண் அடி - பெருமை பொருந்திய திருவடியை, சேர்ந்தார் - அடைந்தவர், நிலமிசை - நிலத்தின்மீது, நீடு வாழ்வார் - நெடிது வாழ்வர்.*

1. சிலப்பதிகாரம் : 10 : 198–9. 2. சீவ சம்போதனை : 1 : 29.

**கருத்து**

*குருநாதன் நெஞ்சத் தாமரையில் எழுந்தருளியுள்ள இறைவனது திருவடியை அடைந்தவர் நீண்ட காலம் வாழ்வர்.*

**விருத்தி**

*பொறிவாயில் ஐந்தவித்தானுக்கு அடையாளம் என்னை? அவன் நெஞ்சத்தாமரை இறை கோயிலாதல் அடையாளம் என்க. இஃது இப்பாட்டின் உள்ளுறை.*

*இதுமுதல் ஏழு பாட்டிலும் குருநாதன் திருவடி போற்றல் பேசப்பட்டிருத்தல் சிந்திக்கற்பாலது. வழிபாட்டுக்குரிய அடி அல்லது தாள் ஒவ்வொரு பாட்டிலும் திகழ்தல் காண்க. அடியில்லாத இறைவன் குருவைக் கோயில் கொண்ட நிலையில் அடி பெறுகிறான்.*

*வழிபாட்டுக்குரிய சிறந்த இடம் திருவடி என்பது மரபு. உலகில் தோன்றிய பெரியோர் அனைவரும் ஒருமுகமாக இறைவன் திருவடியையே போற்றியிருத்தல் வெள்ளிடைமலை. திருவடி இருபொருளுடையது. ஒன்று திருவருள்; மற்றொன்று பாதம். [1]இறை நினைவு தோன்றும்போது திருவடி திருவருளை உணர்த்தும்; குரு நினைவு தோன்றும்போது அது பாதத்தை உணர்த்தும்.*

*ஏழு பாட்டும் கடவுளின் குருநிலையைச் சிறப்பு முறையில் கூறுவன. குருவினுள்ளிருந்து வழிபாடுகளை ஏற்றுக் கொள் வோன் இறைவனே யாவன்.*

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**

*மலர் - தாமரை; 'பூவெனப்படுவது பொறிவாழ் பூவே'; இங்கே நெஞ்சத் தாமரை.*

*மிசை - ஏழனுருபு; மீது எனினுமாம்.*

*ஏகினான் - போந்தான், எழுந்தருளினான்; நடந்தான் என்னலுமொன்று.*

*'மலர்மிசை நடந்தோன் மலரடி' - சிலப்பதிகாரம்: 10 : 204.*

*இதயம் தாமரைபோலிருத்தலால் 'மலர்' எனப்பட்டது; (நெஞ்சத்தாமரை- இருதய புண்டரீகம் - ஹ்ருத் புண்டரீக்).*

---

1. 'காலுந் தலையும் அறியார் கலதிகள்
காலந்தச் சத்தி அருளென்பர்* * * *' – திருமந்திரம்

**மலர்மிசை**

*மின்சாரம் எங்குமிருப்பது; இருப்பினும் அஃது எங்கும் விளங்கித் தோன்றுவதில்லை. பொறி அமைத்துத் தொழிற் படுத்துமிடத்தில் அது விளங்கி ஒளி செய்கிறது. மின்சாரத்தைப் போலவே இறை நிலையையுங் கொள்க. இறை எங்குமிருப்பது; எங்குமிருப்பினும் அது விளங்கித் தோன்றுவதில்லை. ஆனால் 'பொய்தீர் ஒழுக்க நெறி'யில் நின்றவரது மலர்மிசை - நெஞ்சத் தாமரையில் - இதயத்தில் - இறை ஒளி செய்கிறது. இங்கே 'மலர்' என்றது குருநாதனது நெஞ்சத் தாமரையை என்க.*

**இதயம்**

*உயிர்கள் தாங்கும் பலதிற உடலங்களுள் சிலவற்றில் இதயமே புலனாவதில்லை; சிலவற்றில் இதயம் மிக நுண்மை யாக அரும்பி நிற்கிறது; சிலவற்றில் அது மலர்ந்திருக்கிறது. மக்கள் உடலில் மட்டும் பிறவி நோக்கத்தை நிறைவேற்றுதற்குரிய முறையில் இதயம் அமைந்திருக்கிறது.*

*'மக்களின் இதயத்துக்கும், மக்களையடுத்த வேறு சில அஃறிணை உயிர்களின் இதயத்துக்கும் வேற்றுமை என்னை? இரண்டையுஞ் சத்திரமிட்டுப் பார்த்தால் ஒவ்வொன்றிலும் இரத்தம் நிணம் முதலியன செறிந்த புலால் கொத்தையே காண் கிறோம்' என்று உலகியல் ஆராய்ச்சியாளர் கூறலாம். இஃது உன்னற்பாலதே.*

**மனிதப் பிறவி**

*விலங்கு முதலிய உயிர்களின் இதயத்தால் பகுத்தறிவுக் குரிய மூளை அமைவதில்லை. மக்கள் இதயம், பகுத்தறிவுக்குரிய மூளை கூர்ந்து விளங்குதற்குத் துணைபுரியும் இயல்பில் அமைந் திருக்கிறது. மக்கள் உடல், புற உறுப்புக்கள், அக உறுப்புக்கள், கிளை உறுப்புக்கள், மற்றக் கருவி கரணங்கள் யாவும் பகுத்தறிவு மலர்தற்குரிய வண்ணம் பொருந்தியிருக்கின்றன. இவ்வாய்ப்பு மக்கள் பிறவிக்கு மட்டும் உண்டு; மற்றப் பிறவிகட்கில்லை. அதனால் மக்கள் பிறவி விழுமியதென்று உண்மை கண்ட பெரியோர் அனைவரும் ஒருமுகமாகக் கூறிச் சென்றனர்.*

[1]***'குனித்த.... மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'***

[1]***'வாய்த்தது நந்தமக்கு ஈதோ பிறவி மதித்திடுமின்'***

*இவை போன்ற ஆன்றோர் மொழிகள் பல உண்டு.*

1. அப்பர்.

விழுமிய மனிதப் பிறவியில் வாய்த்துள்ள சிறப்பை நல்வழி யில் பயன்படுத்தப் புகுவது அறிவுடைமை. அதை நல்வழியில் பயன்படுத்தாது கிடத்தல் அறியாமை. பிறவியை நல்வழியில் பயன் படுத்தலாவது 'பொய்தீர் ஒழுக்க நெறி' என்னுஞ் செந்நெறியில் நிற்பது. பிறவியை நல்வழியில் பயன்படுத்தாமை என்பது அச் செந்நெறியில் நில்லாமை யாகும்.

## மனிதரில் மனிதர்

மனிதப் பிறவி தாங்கினோர் அனைவரும் மனிதராகார். மனிதரிலுங் கல்லுண்டு; புல்லுண்டு; மரமுண்டு; புழுவுண்டு; பாம்புண்டு; புள்ளுண்டு; விலங்குண்டு; பிற உண்டு. மனிதரில் மனிதராக முயல்வதே சிறப்பு. இது பற்றியே ஆசிரியர் தொல் காப்பியனார் மனிதப் பிறவி தாங்கினோரை ஈரினமாகப் பிரித்தனர். அவை மக்களினம் மாக்களினம் என்பன. அவர், 'மாவு மாக்களும் ஐயறி வினவே', 'மக்கள் தாமே ஆறறிவுயிரே' என்று கூறியது காண்க.

ஒழுக்க நெறி நின்று பகுத்தறிவென்னும் ஆறாவதறிவை மலரச் செய்வோர் மக்கள்; மற்றவர் மாக்கள். இவர் விலங்கனை யார். உலகில் தற்போது நாளுக்கு நாள் மக்கள் கூட்டம் அருகியும், மாக்கள் கூட்டம் பெருகியும் வருகின்றன. இதற்குரிய மூல காரணம் என்னை? மனிதர் ஒழுக்க நெறியில் நிற்கும் வாய்ப்புப் பெறாமையே யாகும். வாய்ப்பைக் கூட்டும். கல்வி, தொழில், அரசு, நாகரிகம், வாழ்வு முதலியன மறைந்து வருகின்றன. திருவள்ளுவர் நூலில் ஒழுக்க நெறிநிற்கும் வாய்ப்புக்குரிய கல்வி முதலியன ஒளிர்கின்றன.

## இயற்கை வழிபாடு

மனிதப் பிறவி தாங்கினோர் இயற்கை வாழ்வினின்றும் வழுக்கி வீழ வீழ அவர் மாக்களாகி மாள்வது ஒருதலை. இயற்கை வழிபாடு மனிதரை மக்களாக்கும் ஆற்றல் வாய்ந்தது. இவ்வழிபாடு உயிர்களைப் பண்படுத்துந் தகைமையுடையது. இயற்கை வழி பாட்டால் தம்மைப் பண்படுத்திக் கொள்வோர்க்குக் குருநாதன் காட்சி யளித்து அருள் புரிவன். குருநாதன் காட்சி பெறுதற்குரிய அரிய பிறவியைப் பாழ்படுத்தலாமோ? உலகீர்! நந்தமக்கு வாய்த்தது நற்பிறவி. இது விழுமியது. இப்பிறவியிலேயே உய்யு நெறி காண்டல் வேண்டும். இதற்கெனப் படியுங்கள்; இதற்கெனத் தொழில் புரியுங்கள்; இதற்கென அரசு கோலுங்கள்; இதற்கென வாழுங்கள்; பாழுக்கு உழையாதேயுங்கள்; நற்பிறவி பாழாகும்; இப் பிறவி மீண்டும் வாய்க்குமோ?

### இதயக் கோயில்

*மனிதப் பிறவியின் நோக்கம் நிறைவேற வேண்டின், இதயத்தை அழுக்காறு அவா வெகுளி முதலியன நிறைந்த - இரத்தம், நிணம், புழு முதலியன மலிந்த - புலால் கூடாக வைத்துக் கொண்டிருத்தல் கூடாது. அவ்வாறு அதை வைத்துக் கொண்டி ருந்ததால் அஃது ஊறுபடும்; இளகும்; அதனால் பலதிற நோய்கள் உண்டாகும்; முடிவில் மரணம் நேரும்.*

*மரணமடையவா நாம் பிறந்தோம்? அரிய மனிதப் பிற வியைப் பெற்றோம்? மரணமிலாப் பெருவாழ்வு பெறுதற் கன்றோ கடவுள் நமக்கு மனிதப் பிறவியைக் கொடுத்தார்? இப்பிறவியின் அமைப்புக்களெல்லாம் மரணமிலாப் பெரு வாழ்விற்குத் துணை செய்வனவல்லவோ? மனிதப் பிறவியில் இதயம் - பொன்னான இதயம் - அமைந்திருக்கிறதே! இதைப் பாழ்படுத்தல் நன்றோ?*

*புலால் கூடாயுள்ள இதயத்தைப் பொற்றாமரையாகச் செய்தல் வேண்டும். இத் தாமரை ஆண்டவன் கோயிலாதல் வேண்டும். இந் நல்வாய்ப்பு இதயத்தில் இயல்பாகவே அமைந் திருக்கிறது. இதைத் தெளிந் துணரவேண்டுவது நமது கடன். நமது கடனை ஒழுங்குபெற ஊக்கங்கொண்டு ஆற்றினால், இதயத் தாமரையில் ஏகியுள்ள இறைவன் புலனாவன். ஆசிரியர் இதை இத்திருக்குறளில் நன்கு விளக்கியுள்ளார்.*

### உள்ள மலர்

*ஆசிரியர்க்கு இதயம் புலால் கூடாகத் தோன்றவில்லை. அஃது அவர்க்கு மலராகத் தோன்றிற்று. அதனால் அவர் 'மலர்' என்றார். ஆசிரியர் தமது உள்ளத்தை மலராக்கிக் கொண்டவர். அவர் அதை மலராகக் கண்டவர். அக்காட்சி அவரை 'மலர்' எனச் சொல்வித்தது.*

*'மலர்' - இது சொன்மலரா? பொருண் மலரா? சொன் மலரை நோக்கி நோக்கி, அதன்கண் ஒன்ற ஒன்றப் பொருண் மலர் விளங்கும்.*

*நாண்மலரே மகிழ்ச்சி யூட்டுவது. வாடா உள்ள மலரோ எத்தகை மகிழ்ச்சி யூட்டும்? இது சொல்லுந் தகையதன்று.*

*மலர்த் தேனில் இனிமையுண்டு. இவ்வினிமை தெவிட்டுவது; நிலைபேறா யிருப்பதன்று. உள்ள மலர்த் தேனின் இனிமையோ தெவிட்டாதது; நிலைபேறாயிருப்பது.*

உள்ள மலர்த் தேனே அமிர்தம் என்பது. இவ்வமிர்தம் நாடி நரம்புகளிற் பாய்ந்து உயிரையும் உடலையும் ஆனந்தமயமாகச் செய்யும்.

***'தினைத்தனை * * * ***
***அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்***
***குனிப்புடை யானுக்கே * * *'***

என்பது மணிவாசகம்.

**சிறப்பு**

உள்ள மலர்க்கு இத்துணைச் சிறப்புண்மைக்குக் காரண மென்னை? ஈண்டு விரிவுரை வேண்டுவதில்லை. சுருங்கிய உரை சாலும்.

உடலின் உள்ளுறுப்புக்கள் பல. பலவற்றுள் சிறந்தன மூன்று. ஒன்று மூளை; மற்றொன்று உள்ளக் கமலம் (இதயம்); இன்னொன்று ஈரல். இம்மூன்றனுள் சிறந்தன மூளையும் உள்ளக் கமலமுமாகும். மூளையினுஞ் சிறந்தது உள்ளக் கமலம்.

சிறுபிராணி யொன்றைப் பற்றி அதன் மூளையைப் பரு ஊசியினால் குத்தினால், அது செயலற்று மயங்கிக் கிடக்கும். ஆனால் அது சாவதில்லை. ஊசியினால் அப்பிராணியின் இதயத்தில் குத்தினால், உடனே அஃது உயிர்துறக்கும். இவ்வாறு பலதிறச் சோதனை செய்து செய்து, 'உயிர் நிலையம் உள்ளக் கமலம்' என்னும் முடிவிற்கு வந்தனர் அறிஞர். இதனால் உள்ளக் கமலமெனும் இதயத்தின் சிறப்பு விளங்குதல் காண்க.

விழிப்பில் மூளை தொழில் புரிதல் உண்மை. உறக்கத்தில் அஃது என்ன தொழில் செய்கிறது? இதயம் விழிப்பிலும் உறக்கத் திலும் தொழில் புரிகிறது. இதயத்தின் இயக்கம் ஒடுங்கினால் உயிருக்கு இடம் ஏது? இதனாலும் இதயத்தின் மாண்பு புலனாகிறது.

நாம் உண்ணும் உணவு சத்தாகவும் சக்கையாகவும் பிரி கிறது. சக்கை கீழே கழிகிறது. சத்து இதயத்தில் புகுகிறது; இரத்த மாகிறது. இதய இயக்கத்தால் இரத்தம், நாடி நரம்புகள் வழியே உறுப்புக்களிலெல்லாம் பாய்ந்து உடலை ஓம்புகிறது. சத்து, மூளையின்வழி உடலை வளர்க்கிறதா? இதயத்தின் வழி உடலை வளர்க்கிறதா? ஓர்மின்.

சத்து, இரத்தமாக மாறி உடலை ஓம்புதற்குத் துணை புரியும் உயிர்ப்பு நிலவுவது எங்கே? (நுரையீரல் வழி) இதயத்திலன்றோ அது நிலவுகிறது?

உடம்பினுள் உயிருள்ள இடம் இதயம் என்பது பல வழியாலும் உறுதி செய்யப்பெற்ற ஓர் உண்மை. உயிர்வழி உடலை இயக்கும் இறைச் சக்தியுள்ள இடம் இதயமென்று சான்றோர் நன்கு விளக்கிப் போந்தனர். ஆகவே, உடலுயிர் இயக்கத்துக்குரிய உயிர்பொறி - ஆவி நிலையம் - சக்தி பீடம் - (Power House) இதயம் என்று கொள்க.

[1]*'என்னில் யாரும் எனக்கினி யாரில்லை*
*என்னி லும்மினி யானொரு வன்னுளன்*
*என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு*
*என்னுள்ளே நிற்கும் இன்னம்ப ரீசனே'*

## மலர் இருவிதம்

உள்ள மலர் என்னும் இதயம் இருவிதம். ஒன்று உடலுக் குரியது; மற்றொன்று உயிருக்குரியது. உடலுக்குரியது பருமை; உயிருக்குரியது நுண்மை. உயிரிருக்கும் இடம் உடலுள்ளம்; உயிர்க்குயிரிருக்கும் இடம் உயிருள்ளம். பெரியோர் பொதுவாக 'உள்ளமலர்' எனக் கூறிவிடுவர். அதன் நுட்பம் ஏட்டுப்படிப்பால் விளங்காது; குருவின் நோக்காலோ, மொழியாலோ, தீண்டலாலோ விளங்குவது. இதை வெற்றுரையால் விரித்துக் கொண்டு போதல் இயலாது; கயமையுமாகும்.

*'ஆகத்துளே மகிழ்ந்த சோதிப்ரகாச இன்பம்*
*ஆவிக்குளே துலங்க - அருள்வாயே'*

என்னுந் திருப்புகழில் கருத்தை இருத்தி ஒன்றுக.

பரிய உடலுள்ளத்தின் வளத்தைப் பொறுத்தே நுண்ணிய உயிருள்ளம் நிலவும். உயிரின் உள்ள வளத்துக்கு உடலின் உள்ள வளம் வேண்டற்பாலது. உடலுள்ளம் வளமிழந்தால் உயிருள்ளம் நிலவுதற்கே இடமின்றிப் போகும். அதனால் மரணமிலாப் பெருவாழ்வு கூடுதல் அரிதாகும். இன்னோரன்ன காரணம் பல பற்றி, உண்மை கண்ட பெரியோர் பலர், உடலுள்ளத்தை வளம்படுத்துமாறு உலகுக்கு அறிவுறுத்தினர்.

## ஏகினான்

உள்ளத்தில் எப்பொழுதும் எந்நிலையிலும் இறைவன் இருக்கிறான். உள்ளம் அழுக்காறு முதலிய தீமையும், புன்புலால் நாற்றமும் உடையதா யிருக்கும்போதும், இவையற்ற நிலையிலும் இறைவன் உள்ளக் கமலத்தில் வீற்றிக்கிறான். முன்னைய நிலையில் இறைவனுண்மை உயிரின் கண்ணுக்குப் புலனாவ

1. அப்பர்.

தில்லை; பின்னைய நிலையில் இறைவனுண்மை உயிரின் கண்ணுக்குப் புலனாகும்.

உள்ளம், நல்லியல்புகளால் பொன்மலராயதும், அதனிடத்தில் இறைவனுண்மை உயிரின் கண்ணுக்குப் புலனாகிறது. இந்நிலையில் தன் உள்ளத்தில் முன்னரே இறைவன் இருந்தமை உயிர்க்கு விளங்குகிறது. முன்னரே அகமலரில் இறைவன் இருந்தமையை 'ஏகினான்' என்று ஆசிரியர் இறந்த காலத்தால் எடுத்துக் காட்டினர். இதை விரைவு பற்றி வந்த காலவழுவமைதி என்று கூறுவோர் கூறுக. 'எனதாவி உள் கலந்த * * * ' என்று நம்மாழ்வார் அருளியதை ஈண்டு உன்னுக.

இறைவன், உயிரின் அஞ்ஞான நிலையில் புறத்தேயிருந்து, அதன் ஞானநிலையில் உள்ளே புகுவோன் என்று கொள்ளற்க. இறைவன் போக்குவர வில்லாதவன். இது பற்றி 'நினைப்பவர் மனம்' என்னும் நூலில் விளக்கியுள்ளேன்.

இறைவனது உண்மை: உயிர்க்கு விளங்கா நிலை ஒன்று; விளங்கும் நிலை ஒன்று. இவ்விளங்கல் விளங்காமை உயிரிடத்திருப்பன. இவை இறைவனிடத்திருப்பன அல்ல. இறைவன் என்றும்- எங்கும்- ஒரு பெற்றியாயிருப்பவன். உயிரின் அகக்கண் திறப்புக் கேற்றவாறு இறைவனது உண்மை புலனாகிக் கொண்டே போகும். திறப்புக்கு உறுகருவியாயிருப்பது உள்ளக் கமலம்.

[1]'என் மனமே சென்று புக்கனன் போந்த சுவடில்லையே' என்பது அப்பர் திருவாக்கு. 'போந்த சுவடில்லையே' என்பதை நோக்குக. இறைவன் உயிரின் உள்ளத்தில் புதிதாகப் புகுந்திருந்தால் போந்த சுவடிருக்கும். அவன் பண்டே உள்ளத்திலிருந்தமை விளங்கினமையால் 'போந்த சுவடில்லை' என்றார். இந்நுட்பத்தை, 'பூவினிற் கந்தம் பொருந்திய வாறு போல் - சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது' எனவரூஉந் திருமூலர் திருமந்திரம் நன்கு தெளிவுசெய்தல் காண்க.

## சமய நெறி

உள்ளக்கமலத் தெழுந்தருளியுள்ள இறைவனை உணர்தற் கென்றே உலக வாழ்வு கொடுக்கப்பட்டது. இவ்வாழ்வை இயற்கை நெறி என்னுஞ் சமய நெறியில் நின்று ஒழுங்கு பெற நடாத்துவோர் குருநாதன் காட்சி பெறுவர். குருநாதன் அருளால் உள்ளக் கமலத்துள்ள ஒருவன் விளங்குவன்.

1. 'பொன்மலைமேல்.....' என்னுந் தேவாரம்.

'சமய நெறிகள் பலவா யிருக்கின்றனவே. அவற்றுள் எதைப் பற்றி ஒழுகுவது?' என்னும் அச்சம் எவருங்கொள்ள வேண்டு வதில்லை. எவர்க்கு எச்சமயத்தில் விருப்பம் தோன்றுகிறதோ அவர் அச்சமயத்தில் நின்றொழுகலாம். சமய வாதத்தில் மட்டும் ஈடுபடலாகாது. அவ்வச் சமய வழி நின்றொழுகினால், முடிவில் எல்லாம் ஒன்றாகவே தோன்றும்.

மழை நீர் ஒன்றே ஒவ்வொருவர் நிலத்தில் நிற்கிறது. நிலத்தின் வரம்புகள் தோன்றுமட்டும், மக்கள் 'இஃது என்னிலத்து நீர் - இஃது உன்னிலத்து நீர்' என்று சொல்லிக் கொள்வார்கள். பெருமழை பொழிந்து வெள்ளம் பெருக் கெடுத்து வரம்புகளை மறைத்தால் எல்லா நீரும் ஒன்றாகும். அந்நிலையில் 'என்னீர் எங்கே? உன்னீர் எங்கே?' இவ்வாறே முன்னே தோன்றும் சமயபேதங்கள் பின்னே சமரசமாகத் தோன்றும்.

சமயபேதப் பேச்சும் வேண்டா; வாதமும் வேண்டா. வேண்டுவது சமய ஒழுக்கம் (வழிபாடு). எச்சமய ஒழுக்கத்தையுங் கடைப்பிடிக்கலாம். பெரு நிலை கூடும்வரை, சமயப் படிகளை வலிந்து வெறுத்துத் தள்ளுதல் கூடாது. அவரவர் அவ்வச் சமயப் படிகளில் நின்று ஒழுகிவருவது பெருநிலைக்கு வழிதேடுவதா கும். இல்லையேல், தீய எண்ணங்களால் உள்ளம் புன்புலாலாகிப் புழுத்து நாறி இளகி நோய்வாய்ப்பட்டு மரணத்தைக் கூட்டும். எச்சரிக்கை!

***[1]'புண்ணியம் செய்து நல்ல புனலொடு மலர்கள் தூவி***
***எண்ணுமின் எந்தை நாமம் இப்பிறப் பறுக்கு மப்பால்***
***திண்ணநாம் அறியச் சொன்னோம் செறிபொழில் அனந்தபுரத்து***
***அண்ணலார் கமல பாதம் அணுகுவார் அமர ராவார்.'***

***[2]'நாடு நகரமும் நற்றிருக் கோயிலும்***
***தேடித் திரிந்து சிவபெருமான் என்றென்று***
***பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்***
***கூடிய நெஞ்சத்துக் கோயில்கொள் வானே'***

***[3]'மூர்த்திதலந் தீர்த்தம் முறையால் தொடங்கி னர்க்கோர்***
***வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே'***

***[4]'நீங்கள் விசுவாச முடையவர்களாய் ஜெபத்தில் எவைகளைக்***
***கேட்பீர்களோ அவைகளை யெல்லாம் பெறுவீர்கள்.'***

---

1. நம்மாழ்வார். 2. திருமூலர் 3. தாயுமானார். 4. கிறிஸ்து (மத்தேயு : 21 : 45).

[1]'...ஜெபத்தில் உறுதி கொள்ளுங்கள்; ஜெபம் உண்மை யாகவே (ஒருவரைத் தீயொழுக்கத்தினின்றும் காக்கும்; அல்லா வைத் தியானிப்பது மிகப்பெரிது....'

இம் முதுமொழிகள் வழிபாட்டையும் ஜெபத்தையும் வலியுறுத்துவது காண்க. வழிபாடும் ஜெபமும் கரவற்றனவா யிருத்தல் வேண்டும்; நேரியனவா யிருத்தல் வேண்டும். நேர்மை ஒழுக்கத்தை ஓம்பும்.

## பெரியோர் மொழிகள்

இறைவன் உள்ள மலரில் வீற்றிருப்பதைப் பற்றிப் பெரியோர் வழிப் பிறந்த திருமொழிகளெல்லாம் ஒரே முகமாக முழங்கு கின்றன. அம்மெய்ம்மொழிகளை அவரவர் நூல்களிற் காண்க. இரண்டொரு மொழிகள் வருமாறு:-

***[2]'ஹ்ருத்பத்ம மத்யே ஸர்வம்த த்ப்ரஜ் ஞாநேத்ரம்***
***ப்ரஜ்ஞா நேப்ரதிஷ் டிதம்***
***ப்ரஜ்ஞா நேத்ரோ லோக: ப்ரஜ்ஞாப்ர திஷ்டா***
***ப்ரஜ்ஞா நம்ப்ரஹ்ம'***

***[3]'மனனக மலமற மலர்மிசை எழுதரும்***
***மனனுணர் வளவிலன்'***

***[4]'வானவன் காண்..... கருதுவார் இதயத்துக் கமலத்தூறும்***
***தேனவன் காண்'***

***[5]'மாவாதல் களிறாதல் ஏறாதல் ஏறா***
***மலர்த்தா மரைக்கே செலத்தாள் வைக்குந்***
***தேவாதி தேவா நமஸ்தே நமஸ்து'***

***[6]'பரலோக இராஜ்யம் உமது உள்ளத்தில் இருக்கிறது'***

[7]'சிலுவையையும் மாதா கோயிலையுந் தேடினேன்; ஒன்றுங் கண்டேனில்லை. உருவம் உள்ள கோயிலையும் இல்லாத கோயி லையும் பார்த்தேன். உண்மை விளங்கவில்லை. கடிவாளத்தைக் காபா பக்கந் திருப்பினேன். கடவுளைக் கிழவனுந் தேடினான்; இளைஞனுந் தேடினான். கடவுளைக் காணோம். என் உள்ளத்தை நோக்கினேன். அவ்விடத்தில் அவனைக் கண்டேன். மற்ற இடங் களில் அவன் கிடைக்கவில்லை.'

[8]'கோயிலைச் சுற்றுவதால் பயன் விளையாது. மனத்தைக் கோயிலாக் கொண்டு வழிபடு.'

---

1. திருக்குரான் : 29 : 45. 2. ஆத்மபோதோபநிஷத். 3. நம்மாழ்வார். 4. அப்பர், 5. தீபநாதர் நமோஸ்து, 6. கிறிஸ்து, 7. ஜலால், உத்தீன் ரூமி. 8. ஜாமி.

மலர்மிசை ஏகினான் எவன்? இறைவன். எவர் மலர் மிசை? குருநாதன் உள்ள மலர்மிசை. இறைவனை மலர் மிசை கொண்ட குருநாதனை வழிபடுவது இறைவனை வழிபடுவதேயாகும்.

### மாணடி சேர்ந்தார்

இறைவன் அடி திருவருளுக்கு அறிகுறி. அவன் குருநாதன் உள்ளங் கோயில்கொண்ட நிலையில் அவனது அடி திருவடி யாகிறது.

இறைவன் அருளினும் மாண்புடையது வேறொன்றில்லை. அது மக்களின் பிறவிநோயைப் போக்கவல்லது. அத்தகைய மாட்சிமை வாய்ந்த திருவருளை 'மாணடி' என்றது பொருத் தமே யாகும்.

குருநாதன் அடி புன்புலால் நாறும் புண்ணுடையதன்று. அது பொன்மலரென மிளிர்ந்து உள்ளத்தில் ஒளி கால்வது. அதன் ஒளி மாக்களை மக்களாக்குவது. அதனால் அது 'மாணடி' எனப் பட்டது.

சேர்ந்தார் - அடைந்தார், அடைதலை முக்கூறுபடுத்தலாம். ஒன்று உடலால் அடைதல்; மற்றொன்று மொழியால் அடைதல்; இன்னொன்று மனத்தால் அடைதல். மனத்தால் அடைதலில் ஏனை இரண்டும் அடங்கும். மனத்தால் அடைதலாவது இடை யறாது நினைத்தல். 'சேர்தல் - இடையறாது நினைத்தல்' என்றார் பரிமேலழகர்.

> [1]***'மற்றுப் பற்றெனக் கின்றிநின்றிருப் பாதமே***
> ***மனம் பாவித்தேன்'***

### தியான யோகம்

இடையறாது நினைத்தலே தியான யோகம் என்பது. யோகம் பலவிதம். முயன்று வலிந்து மூச்சைப் பிடித்தல், முகத்தைச் செக்கச் செவேலென ஆக்குதல் முதலியன யோகக் கூறுகளாகா. இவை களால் தீமை விளைதலுமுண்டு. உடல் நலங் கருதிச் செய்யப்படுஞ் சிறுயோகம் மலயோகத் தின்பாற்பட்டது. இதையுந் தெளிந்தார் மாட்டுக் கேட்டுச் செய்வது நல்லது.

பெரியோர் கூறியது அமலயோகம். இதற்கு, முயன்று வலிந்து மூச்சை ஈர்த்தல், நிறுத்தல், விடுத்தல் முதலியன வேண்டு வதில்லை. அமலயோகம் குருநாதன் அருளால் கூடுவது. இப் பேறு எளிதில் கிடைத்தல் அரிது. இதற்குப் படியாயிருப்பது ஒழுக்க நெறி. அறநெறி நின்று நெஞ்சை நிட்காமியமாகச் செய்

1. சுந்தரர்.

வோர்க்குக் குருவருளால் கூடுவது அமல யோகம். நிட்காமிய கர்ம யோகத்தைப் பகவத்கீதை நன்று அறிவுறுத்துகிறது.

*[1]'காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்*
*வீட்டிற் புகுதல் மிகஎளி தேவிழி நாசிவைத்து*
*மூட்டிக் கபாலமூ லாதார நேர்அண்ட மூச்சைஉள்ளே*
*ஓட்டிப் பிடித்தெங்கும் ஓடாமல் சாதிக்கும் யோகிகளே.'*

அமல யோகத்துக்கு உலகில் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. இவ் யோகத்துக்கு இடையறாத தியானம் வேண்டும். தியான யோகத்தின் விளைவே அமல யோகம் என்பது. இரண்டுந் தொடர்புடையன. முடிவில் இரண்டும் ஒன்றாகும். தியானயோகம் குருநாதன் அருட்பேற்றிற்கு முன்னரும் பின்னரும் நிகழ்வது. முன்னையதற்கும் பின்னையதற்கும் முறையில் வேறுபாடு உண்டு. இஃது அநுபவத்தில் விளங்குவது. பின்னையதே அமலயோகம்.

தியானயோகம் குருவின் காட்சிக்கு முன்னும் பின்னும் நிகழ்வது என்னும் உண்மை மாணிக்கவாசகர் அருளிய 'போற்றித் திருவகவ'லால் நன்கு விளங்குகிறது. அன்பர்கள் அப்பகுதியை ஊன்றி நோக்குவார்களாக.

*'* * * தழலது கண்ட மெழுகது போலத்*
*தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்*
*தாடியு மலறியும் பாடியும் பரவியும்*
*கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்*
*படியே யாகிநல் லிடையறா அன்பிற்*
*பசுமரத் தாணி யறைந்தாற் போலக்*
*கசிவது பெருகிக் கடலென மறுகி*

*அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்*
*சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப*
*நாணது வொழிந்து நாடவர் பழித்துரை*
*பூணது வாகக் கோணுத லின்றிச்*
*சதுரிழந் தறிமால் கொண்டு சாருங்*
*கதியது பரமா அதிசய மாகக்*
*கற்றா மனமெனக் கதறியும் பதறியும்*
*மற்றோர் தெய்வங் கனவிலு நினையா*
*தருபரத் தொருவன் அவனியில் வந்து*
*குருபர னாகி யருளிய பெருமையைச்*
*சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்*
*பிறிவினை யறியா நிழலது போல*

1. கந்தரலங்காரம்.

***முன்பின் னாகி முனியா தத்திசை***
***என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி***
***அன்பெனு மாறு கரையது புரள***
***நன்புல னொன்றி நாதவென் றாற்றி***
***உரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்***
***கரமலர் மொட்டித் திருதய மலரக்***
***கண்களி கூர நுண்டுளி யரும்பச்***
***சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்***
***தாயே யாகி வளர்த்தனை போற்றி'***

'நிலமிசை நீடுவாழ்வார்' என்பது கொண்டு அமலயோகர் என்று கூறலானேன். இங்கே 'சேர்ந்தார்' என்பது அமல யோகரைக் குறிப்பது.

ஐந்தவித்தானது பொய் தீர் ஒழுக்கநெறி நிற்றல் மேற் பாட்டில் பேசப்பட்டது. ஒழுக்கநெறி நிற்றல் என்பது பொது. நிற்றலுக்குரிய சிறப்புமுறை இதுமுதல் ஏழு பாட்டிலுஞ் சொல்லப்பட்டுள்ளது. திருவடி சேர்தல் சிறப்பு முறை. அதனால் 'மாணடி சேர்ந்தார்' என்றார்.

***[1]'பொய்யெல்லா * * * ****
***தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்***
***ஐயனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே'***

**நிலமிசை நீடுவாழ்வார்**

'நீடுவாழ்வார்' என்பதற்கு விளக்கவுரை மேற்பாட்டில் கூறப்பட்டது. அங்கே '................ நின்றார் நீடுவாழ்வார்' என்றார். இங்கே '.........சேர்ந்தார் நீடுவாழ்வார்' என்றார். நெறியில் நிற்றலும் அடியில் சேர்தலும் இயல்பல்லவோ? அங்கே 'நிலமிசை' இல்லை. இங்கே அஃதிருக்கிறது.

**நிலம்**

நிலம் என்பது மண்ணுலகத்தை மட்டுங் குறிப்பதன்று. அஃது எல்லாவற்றையுங் குறிப்பது. நிலம்: நில் என்னும் அடியாகப் பிறந்தது.

மண்டிலங்க ளெல்லாம் ஞாயிற்றின் ஆணை வழியினின் றும் வழுவாது நின்று, அஞ்ஞாயிறு பொழியும் ஒளியாலும் வெம்மையாலும் பிறவாற்றாலுங் கோட்டின் வழிச் சுழன்று வருகின்றன. ஞாயற்றின் ஆணைவழி நிற்றலால் மண்டிலங்களும் நிலம் என்னும் பெயர் பெற்றன.

1. திருவாசகம்.

*உயிர் பருவுடல் நீத்ததும் அதனதன் இயல்புக் கேற்ற ஒவ்வொரு நிலம் புகும். உயிர் அவ்வந் நிலமிசை நீடுவாழ்தல் ஈண்டுச் சொல்லப்பட்டது என்னலாம். இந்நிலமிசை நீடுவாழ்தல் என்று கூறினுமாம். இவ்வாறு கூறுவோர் 'நிலமிசையும் நீடுவாழ்வார்' என்று கொள்வர். மிசை நிலம் என மாற்றி மேல்நிலம் அதாவது வீடு என்று கூறுதலுமொன்று.*

*நீடு வாழ்தலையும், அதற்குரிய திருவடி சேர்தலையும், திருவடி விளங்குமிடம் மலர்மிசை என்பதையும் குறிப்பிட்டவாறு காண்க.*

***[1]'மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லதென்***
***தலைமிசை தானணிப் பொறாஅது'*** (4)

**5**

***கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்***
***நற்றாள் தொழாஅ ரெனின்.***

**பொருள்**

*வால் அறிவன் - தூய அறிவனாகிய இறைவனது, நல்தாள் - நல்ல திருவடியை, தொழஅ ரெனின் - (ஒருவர்) வணங்கிக் கொண்டிராராயின், கற்றதனால் ஆய - (அவர் பல நூல்களைக்) கற்றதனால் விளைந்த, பயன் என் கொல் - பயன் என்னையோ? (ஒன்றுமில்லை).*

**கருத்து**

*கற்றதனாலாகிய பயன் இறைவனை வணங்குவது.*

**விருத்தி**

*கற்றலின் பயனும், வாலறிவன் இயல்பும் இப்பாட்டின் உள்ளுறை. மேற்பாட்டிற் போந்த 'மலர்மிசை ஏகினா'னை உணர்தலே கல்வியின் பயன் என்றும், இறைவன் 'மலர்மிசை ஏகி'யிருத்தலைத் தெளிந்தால் அவன் 'வாலறிவ'னாயுள்ள இயல்பு இனிது விளங்கும் என்றும் அறிக.*

**வாலறிவன் நற்றான் தொழாஅ ரெனின்**

*வால் - தூய்மை; [2]'ஊர்தி வால்வெள் ளேறே.'*

*அறிவன் - அறிவுடையவன் ; இங்கே இறைவன்.*

*நற்றாள் - மாணடி.*

1. சிலப்பதிகாரம் : 10 : 204 – 5. 2. புறநானூறு : 1 : 3

*தொழாஅ ரெனின் - வணங்கிக் கொண்டிராராயின்; அளபெடை இடையறாமையைக் குறிப்பது.*

**வாலறிவன்**

*வால் அறிவன் - தூய அறிவன்; இறைவன்.*

*அறிவு இறைக்கும் உண்டு; உயிர்க்கும் உண்டு. இரண்டறிவுக்குமுள்ள வேற்றுமை என்ன? முன்னையது அறியாமையற்ற அறிவு; பின்னையது அறியாமை விரவிய அறிவு. அவ்வறிவு, இவ்வறிவின் அறியாமையைப் போக்கித் தன்னைப் போலாக்கத் துணைபுரிவது. குறள் : 2 : குறிப்புப் பார்க்க.*

**அறிவு – அறியாமை**

*அறிவின் பண்பு அன்பு. அறியாமையின் பண்பு அன்பின்மை (பகைமை). இவற்றை விளக்குதற்கு விரிவுரை வேண்டுவதில்லை. அவரவர் தத்தம் உள் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து உணரப் பயின்றுவரின் உண்மை விளங்கப் பெறுவர்.*

*வாழ்வில் சிலபோழ்து அன்பு எழுகிறது; சிலபோழ்து பகைமை எழுகிறது. எப்பொழுது அன்பு எழுகிறது? எப்பொழுது பகைமை எழுகிறது? அழுக்காறு அவா வெகுளி முதலியன கரணங்களில் தாக்குறாதபோது அன்பு எழுகிறது. அவை கரணங்களில் தாக்குறும்போது பகைமை எழுகிறது. இஃது அநுபவம். அழுக்காறு முதலியன எழாத போது, அறிவு ஆட்சி பெறுகிறதென்றும், அவை எழும் போது அறியாமை ஆட்சி பெறுகிறதென்றுங் கொள்க. அறியாமையே அழுக்காறு முதலிய அரக்கத் தன்மைகளுக்குத் தாய்வீடென்க.*

*இறை, அறியாமையே இல்லாத முழு அறிவாதலின், அது முழு அன்புடையதாயிருக்கிறது. உயிர், அறியாமை விரவிய அறிவாதலான், அது முழு அன்புடையதாக விளங்குவதில்லை.*

*அன்பின் சிறப்பியல் பென்னை? பிறர் துயரைக் காணும் போது அதைக் களைய விரைவது அன்பின் சிறப்பியல்பு. இறை முழு அன்பு. அஃதென்ன செய்கிறது? உயிரின் அறியாமை கண்டிரங்கி, அதன் கட்டையறுத்து, அதைத் தன்னைப் போலாக்கத் திருவுள்ளங் கொள்கிறது; கொண்டு உயிருக்குத் தனு கரண புவன போகங்களை வழங்குகிறது. இத்துணையால் உயிர் படிப்படியே அறியாமையினின்றும் விடுதலை அடைந்து அடைந்து அறிவாகிறது; அதாவது இறைநிலை எய்துகிறது.*

**அறிவும் உடலும்**

*உயிர், ஆண்டவனருளால் பலதிற உடலங்களைத் தாங்கத் தாங்க அறிவும் சிறிது சிறிதாக முகிழ்க்கப் பெறுகிறது. உயிர்*

தாங்கும் உடல்நிலைமைக்கேற்ற அளவில் அறிவும் முகிழ்க்கும். இதைக் கொண்டு, உயிர்களை - ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நான்கறிவுயிர், ஐந்தறிவுயிர், ஆறறிவுயிர் என்று முறை முறையே ஆன்றோர் வகுத்தனர் போலும். இவ்வாறு படிப் படியே அளவு விளங்கப்பெறும் உயிர், என்றாதல் ஒரு போது அறிவு மயமாகியே தீரும். இதுவே உயிரின் தூய அறிவு நிலை.

**தூய அறிவுநிலை**

உயிர், தூய அறிவு நிலையை எப்பொழுது எய்துகிறது? கருவி கரணங்கள் முற்றும் அற்ற நிலையில் என்க. கருவி கரணங் களைப் பெறுதற்கு முன்னர் உயிர் அறியாமை மயமாயிருந்தது (இருள்மயமாயிருந்தது). அது கருவி கரணங்களைப் பெற்ற போது (படிப்படியே) அறிவு விளங்கப் பெறுகிறது; பெற்ற கருவி கரணங்களை முற்றும் அற்ற நிலையில் தூய அறிவாகிறது. இடை யில் பற்றுங் கருவி கரணங்கள் அறியாமையைக் கழுவுவதற்குத் துணைபுரிவனவாம்.

இங்கே உயிருக்கு மூன்று நிலை உண்டாவது நோக்கற் பாலது. ஒன்று முழு அறியாமை நிலை; மற்றொன்று அறியாமை கழலும் அவ்வவ்வளவில் அறிவு விளங்கும் நிலை; இன்னொன்று முழு அறிவு நிலை.

**அறிவும் மூளையும்**

இடை நிலையில், அறிவு பெருகப் பெருகக் கருவி கரணங்கள் மென்மையுற்றுக் கொண்டே போகும். அறிவுக்கு நிலைக்களன் மூளை. மூளை மென்மை உறஉற அறிவு கூர்ந்து கூர்ந்து விளங்குவதாகும். இஃது ஆராய்ச்சியாளரால் காணப் பெற்ற உண்மை. எடுத்துக்காட்டாக இரண்டொரு குறிப்பு வருமாறு:-

மீன் மூளை கல்போலிருக்கிறது. அதன் கால் உறுப்புக்கள் கூராமல் (உள்ளது சிறவாமல்) கிடக்கின்றன. அது தரையில் நடமாடுவதில்லை. ஆமைக்கு ஐந்துறுப்பு உண்டு. அவ்வுறுப்புக் களைக் கொண்டு அஃது ஊர்கிறது. காரணம் என்னை? மீனின் மூளையினும் ஆமையின் மூளை மென்மைப் படுவதாகும். இன்னும் மூளை மென்மை உற உற உயிர் கட்குப் படிப்படியே சிறகு முதலியன முளைக்கின்றன; பின்னே நான்கு கால் முதலியன உண்டாகின்றன. மேலும் மூளை மென்மை உறஉற முன் காலிரண்டும் தரையில் படியாமல் கைகளாகி மேலெழுகின்றன. இந்நிலையில் உயிர்கள் இரண்டு கால் கொண்டு நடப்பனவா கின்றன.

இருகால் பெற்ற மனிதப் பிறவி பரிணமித்த காலம் பலவாறு சொல்லப்படுகிறது. இப்பொழுது முப்பது லட்சம் ஆண்டுக்கு முன்னர் மனிதப் பிறவி தோன்றியிருத்தல் வேண்டும் என்ற ஆராய்ச்சி பிறந்திருக்கிறது. இவ்வாராய்ச்சி என்றும் ஒரு பெற்றியாயிராது. கால அளவு மாறுபட்டுக் கொண்டு போகும். இதைப்பற்றிய கவலை இங்கே வேண்டுவதில்லை.

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் இருந்த மனிதருக்கும், இப்பொழுதுள்ள மனிதருக்கும், வேற்றுமை உண்டா இல்லையா என்பதே ஈண்டுக் கருதற்பாலது. மனிதர் தோன்றிய நாள்முதல் இன்றுவரை ஒரு தன்மையராயிருந்ததில்லை. மனிதருக்குக் கோரைப் பற்களும், மிகப் பருத்த நீண்ட குடர்களும் இருந்த காலமும் உண்டு. அவை, மூளை மென்மை உறஉறத் தேய்ந்துங் குறைந்தும் போயின. தேய்வு குறைவுக்கேற்ப அறிவு விளங்கிக் கொண்டு போதல் இயல்பு. முற்கால - இடைக்கால - மனிதரைப் பார்க்கிலும் இக்கால மனிதர் எவ்வளவு அறிவு விளக்கம் பெற்றுள்ளனர் என்பது வெள்ளிடை மலை. இவ்வறிவு சிற்சில சமயம் நேரிய வழியில் இயங்காதொழிவது ஒருவித குறைபாடு. நாளடைவில் குறைபாடு நீங்கும். குறைபாடே போராட்டத்துக்குக் காரணம். போராட்டம் என்றும் நிலவுவதன்று. போராட்டம் ஒருவித நிலை. (இது பொது முறை. முற்கால - இடைக்காலங்களில் தோன்றிய பெரியோர் தன்மைகளை உயிர் வளர்ச்சி ஆராய்ச்சி யில் நுழைத்துப் பார்ப்பது தவறு. இதுபற்றி இடம் நேர்ந்துழி விளக்குவன்.)

இயற்கை நூல் ஆராய்ச்சியாளர் தற்கால மனிதன்வரை போந்துள்ளனர். அவர்தம் ஆராய்ச்சி வளர வளரப் பலதிற நுட்பங்கள் வெளியாகும். அவ்வாராய்ச்சி மனிதப் பிறவிக்கு மேலும் போகும்.

மூளை மென்மை உறஉற அறிவு விளங்குதல் ஈண்டு உன்னற் பாலது. மூளைக் கேற்றவாறு கருவி கரணங்கள் அமைந்து வருகின்றன. மூளை மென்மை உற்று உற்றுப் போவதைக் கொண்டு, கருவி கரணங்களே இல்லாத ஒருநிலை உண்மையை ஊகித்து உணரலாமன்றோ? அதுவே தூய அறிவு நிலை.

## முழு அறிவு மயம்

உயிர், கருவி கரணமற்றுத் தூய அறிவாகும் பொழுது அதற்கொரு நிலைக்களன் ஏற்படுதல் வேண்டும். அந்நிலைக் களன் தூய அறிவாகிய இறை. முழு அறியாமையுடனிருந்த உயிர், இடையில் கருவி கரணங்கள் பெற்றுப் பெற்று, அறியாமை

யினின்றும் விடுதலை அடைந்து அடைந்து, முடிவில் கருவி கரணம் முற்றும் இழந்து, முழு அறிவாகிய இறையுடன் ஒன்றி முழு அறிவாகிறது.

***'அறிவி லணுக அறிவது நல்கிப்***
***பொறிவழி யாசை புகுத்திப் புணர்ந்திட்***
***டறிவது வாக்கி அருளது நல்கும்***
***செறிவொடு நின்றார் சிவமாயி னாரே'***

எனவரூஉந் திருமந்திரத்தை ஓர்க.

உயிர் அறியாமை மயமா யிருத்தலால், அதன் அறியாமையை நீக்குதற்பொருட்டுக் கருவி கரணங்களுடைய உடலை, அதற்கு வழங்குதற்குத் துணைபுரியும் இறை எத்தன்மையதா யிருத்தல் வேண்டும்? அஃது, அறியாமையே இல்லாததாய், கருவி கரண உடல் தாங்காததாய், முழு அறிவு மயமா யன்றோ இருத்தல் வேண்டும்? இறை அறியாமையே இல்லாதது; கருவி கரண உடல் தாங்காதது; முழு அறிவு மயமாயிருப்பது. அத்தகைய இறையைக் குரு நிலையில் 'வாலறிவன்' என்றார் ஆசிரியர்.

வாலறிவன் ஒருவன். அவன் நிலையடைவோர் பலர். அவர் அறிவரெனப்படுவர். அறிவனையடைந்து அறிவன் நிலை அடைவோர் அறிவராதல் இயல்பு. அறிவர், தூய்மையில்லாத அறியாமையினின்றும் விடுதலையடைந்து, தூய அறிவனாகிய இறைவன் துணையால் தூய அறிவுப்பேறு பெறுதலால், இறைவனை அவரினின்றும் வேறுபடுத்தற் பொருட்டு 'வாலறிவன்' என்றார்.

இறைவன் அறிவு என்பதையும், அறிவன் என்பதையும், கருவி கரணம் அற்றவன் என்பதையும் விளக்கும் அநுபூதி மான்கள் மெய்யுரைகள் பல. இரண்டொன்று வருமாறு:-

[1]***'அறிவே ஆலங்காடா'***

[2]***'அறிவான தெய்வமே'***

[3]***'அறம் பகர்ந்த அறிவன் நீயே'***

[4]***'கரணங்க ளெல்லாங் கடந்து நின்ற கறை மிடற்றன்'***

[5]***'கடவுள் ஆவியே'***

**நற்றாள்**

வாலறிவன் தாளே நற்றாள். ஏனையோர் தாள்கள் நற்றாள்களல்ல. வாலறிவன் இயற்கையாகவே கட்டில்லாதவனா

1. சுந்தரர். 2. தாயுமானார். 3. சீவசம்போதனை. 4. மாணிக்கவாசகர். 5.கிறிஸ்து (யோவான் : 4 –24.)

தலானும், அவன் தாள் கட்டுடையார்க்கு நலஞ்செய்ய அவர்தங் கட்டறுக்குந் தன்மையுடையதாகலானும், அத்தாள் 'நற்றாள்' என்னப்பட்டது. "பிறவிப் பிணிக்கு மருந்தாகலின் 'நற்றாள்' என்றார்" என்று பரிமேலழகர் கூறியதும் ஈண்டு நோக்கத்தக்கது. வாலறிவனவல்லாத ஏனையோர் கட்டுடையாராகலானும், அன்னார் வாலறிவன் 'நற்றாள்' பற்றிக் கட்டறுக்க வேண்டு மாதலானும் அவர் தந் தாள்கள் நற்றாள்களாகா.

முன்னே 'மாணடி' என்றார்; இங்கே 'நற்றாள்' என்றார். 'மாண்' 'நல்' இரண்டும் ஒரு கருத்துடையனவே. 'மாண்' 'நல்' என்னும் அடைமொழிகள், பிறர் அடியினும் இறைவன் அடி அல்லது தாள் சிறந்தது என்பதை வலியுறுத்துவன. இரண்டு பாக்களில் அடியை அல்லது தாளை அடை மொழியால் அணி செய்தமையால் கீழ்வரும் பாக்களில் வரும் அடியை அல்லது தாளை அவ்வடையால் அணி செய்யாது விடுத்தனர். பொருள் கொள்ளும்போது, 'மாண்' அல்லது 'நல்' என்னும் அடை மொழியைச் சேர்த்துக் கொள்வது பொருத்தமாகும்.

## தொழாஅ ரெனின்

தாளே தொழுதற் குரியதாதலின், 'தாள் தொழாஅ ரெனின்' என்றார். 'தொழாஅ ரெனின்' என்னும் அளபு கொண்ட எதிர்மறைக் கூற்றில் ஒருவித ஆணையும், இன்றியமை யாமையும், ஆர்வமும், இரக்கமும், இன்ன பிறவும் கிளர்ந்து நிற்றல் புலனாகிறது. அக்கூற்றில், 'இறைவன் தாளைத் தொழுதே தீரல் வேண்டும். இல்லையேல் வாழ்வு என்னாம்! அந்தோ!' என்னும் உள்ளுறையும் பொலிவது காண்க.

## அளபெடை

இசை நிரப்புவது அளபெடை என்று கூறுவோர் கூறுக. இலக்கண வரம்பு எதுவாயினுமாக. இலக்கிய இலக்கணம் முறையாகப் பயின்ற பின்னர், இயற்கையில் ஒன்றி, அறிவை விடுத்துத் துழவும் பயிற்சியும் பெறுதல் வேண்டும். ஈண்டுப் போந்துள்ள அளபெடை வெறும் இசையை மட்டும் நிரப்பி நிற்பதன்று. அது பொருளும் உடையது.

திருவள்ளுவர் நூல், குறள் வெண்பாக்களால் ஆக்கப் பட்டது. ஒவ்வொரு குறளிலும் ஒவ்வொரு கடலுண்டு என்று கூறல் மிகையாகாது. ஒவ்வொரு பாவில் ஒவ்வொரு கடலைப் புகுத்த வந்தவர் வெறும் இசை நிரப்புதற் பொருட்டு வெற்றொலி யையும், வெற்றெழுத்தையும், வெற்றுச் சொல்லையும் பெய் வரோ? ஒருபோதும் பெய்யார். அவர்தம் வாய்மை யினின்றும்

பிறந்துள்ள ஒவ்வோர் ஒலியும், ஒவ்வோர் எழுத்தும், ஒவ்வொரு சொல்லும் பொருளுடையனவாகவேயிருக்கும். அவற்றை வெறும் இலக்கிய இலக்கணக் கண் கொண்டு பார்த்தல் மட்டும் போதாது. இயற்கைக் கண்கொண்டும் அவற்றை உற்று நோக்கல் வேண்டும். இயற்கை நோக்குக்கு நுண்பொருள் புலனாகும். அளபெடை, அசைநிலை என்று பிறரால் கூறப்படுவன வெல்லாம், திருவள்ளுவர் மொழியில் பொருளுடையன வாகவே திகழும்.

'தொழாஅர்' என்பதிலுள்ள அகர அளபெடையை நோக்குக; அதனுடன் ஒன்றுக; ஒன்றித் திளைக்க. எழுத்து மறையும். எழுத்து இயற்கை ஒலியாகும். அங்கே நுண் பொருள் விளங்கும்.

'தொழாஅர்' என்பது இடையறாது தொழுது கொண்டி ருத்தலை உணர்த்துவது. தினைப் பொழுதுந் தொழுகையை மறத்தலாகாதென்பது அதன் நுண்பொருள்.

***'பனைக்கை * ** ****
***தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ'***

என்றார் அப்பர்.

இக் குறட்பாவில் 'இடையறாது' என்னுங் குறிப்பு யாண்டு மில்லை. அஃது அளபெடையிலேயே மிளிர்கிறது. இடையறாத் தொழுகை, அழுக்காறு முதலியனவும் புன்புலால் முதலியனவும் பொதிந்த இதயத்தைப் பொன் மலராக்கி, அதன் மிசை ஏகி யுள்ள இறைவனை உணர்த்தவல்லதென்க.

**தொழுகை**

தொழுகை வாழ்வுக்கு இன்றியமையாதது. தொழுகையற்ற வாழ்வு சிறை நீர் போன்றது. தொழுகையால் 'ஆவி சாவி' ஆகாது. ஆவிக்கு ஆக்கமளிப்பது தொழுகையே. உடல் நலத்துக்கு உணவு. உயிர் நலத்துக்குத் தொழுகை.

எவரைத் தொழுவது? மலக்கட்டால் தொடக்குண்டு கிடப் போரையா தொழுவது? இவரைத் தொழுவதால் மலக்கட்டு எப்படி அறும்? குருடனைக் குருடன் பற்றி நடந்தால் என்னாகும்? மலக்கட்டே இல்லாத வாலறிவன் நற்றாளே தொழுகைக்கு உரியது. அதனால் 'வாலறிவன் நற்றாள் தொழாஅ ரெனின்' என்றார்.

***'தம்மையே * * ****
***பொய்மை யாளரைப் பாடாதே எந்தை***

*புகலூர் பாடுமின் புலவீர்காள்'*

என்றார் வன்றொண்டரும்.

'வாலறிவன் தாளைத்' தொழாதார் 'என்னாவரோ' என்பார், 'தொழாஅ ரெனின்' என்றார். அவர் பிறவி நோக்கத்தை இழந்தவராவராதலின், அவரை 'என்னாவரோ' என்று குறித்த ஆசிரியர்க்கு மனமெழவில்லை. இரக்கம் காரணம் போலும்!

**தன்னல அழிவு**

தொழுகையால் விளையும் நலன்கள் என்னை? தொழுகை யால் விளையும் நலன்களைப் பலபடக் கூறலாம். அவைகளுள் விழுமிய ஒன்றை ஈண்டுக் குறிப்பிடுவது சிறப்பு. அது தன்னல அழிவு.

தொழுகை என்னுஞ் சொல்லே நெஞ்சைக் கவர்கிறது. அதில் தாழ்மையும், பணிவும், அமைதியும், அன்பும் பொலி கின்றன. இவ்வியல்புகளைத் தொழுகையால் பெறுதல் உறுதி. இவை தன்னலத்தை அழித்தல் ஒருதலை.

தொழுகை, மனம் மொழி மெய்களால் நிகழ்தல் வேண்டும். மனம் மொழி மெய் மூன்றுந் தொடர்புடையன. அவை அரும்பு மலர் காய் போன்றன.

மனத்தொழுகை, தியானம்; மொழித் தொழுகை, இயற்கை - இறைவனை வாழ்த்தலும் பரநலப் பேச்சுமாகும்; மெய்த் தொழுகை, இயற்கை - இறை வழிபாடும், உயிர்ப் பணியுமாம்.

உயிர்கட்குச் செய்யப்படும் பணி இருவிதம். ஒன்று தன்ன லத்தை அடிப்படையாகக் கொண்டது; மற்றொன்று பரநலத்தை அடிப்படையாகக் கொண்டது. பரநலத்தை அடிப் படையாகக் கொண்டது தெய்வ வழிபாடாகும். தொண்டில் ஈடுபடப்படத் தன்னலம் படிப்படியே கெட்டுக்கெட்டு முறைமுறையே பரநலம் உறும். இதை விரித்துக் கூறுவது திருவள்ளுவர் நூல். தன்ன லத்தை எப்படி அழிப்பது என்பதும், பரநலத்தை எப்படி வளர்ப்பது என்பதும் திருவள்ளுவர் நூலில் செவ்வனே அறிவுறுத்தப் பெற்றிருக்கின்றன.

மனத்தால் இறைவனை உன்ன உன்ன இறைவன் இயல்பு களாகிய அன்பு முதலியன படியும். அன்பு முதலியன படியப் படிய அவைகளுக்கு மாறுபட்ட இகல் முதலியன மடிந்து போகும். இகல் மடிந்து அன்பு படிந்த உள்ளத்தினின்றும் பிறக்கும் மொழி எத்தகையதாயிருக்கும்? செயல் எத்தகையதா யிருக்கும்? அம்மொழி இறையினுடையதாகும்; அச்செயலும் இறையினுடையதாகும்.

இறைவன் எத்தகையன்? அன்பாய், தன்னல மற்றவனாய், பரநலமே உடையவனா யிருப்பவன். அவன் இயல் படிந்த மனத்தினர் பேச்சையுஞ் செயலையும், அவன் பேச்சு- அவன் செயல் - என்று கூறுதல் தவறாகாது.

உயிரின் இயல்பு, சார்ந்ததன் வண்ணமாவது. அஃது ஆணவத்தோடிருக்கும்போது ஆணவ மயமாயிருக்கும்; இறை யோடிருக்கும்போது இறை மயமாயிருக்கும்.

***'ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்***
***தாணுவினோ டத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ'***

என்றார் தாயுமானார்.

உயிர் ஆணவத்தினின்றும் விடுதலையடைந்து தாணுவா தற்குத் துணை செய்வது தொழுகை.

தொழுகை முதலாவது மனத்தைத் தூய்மை செய்கிறது. தூய நெஞ்சம் தன்னலத்துக்கு இடந்தராது. அதன் கண் பரநலமே நிலவும். இந்நெஞ்சுடையார் செய்யுந் தொண்டே தொண்டாகும்.

மனமாசகன்ற அறவோர் நெஞ்சத் தாமரையில் இறைவன் விளங்கலால், அவர் என்றும் ஒப்புரவாளராய்ப் பயன் கருதாத் தொண்டு நிகழ்த்தியவண்ணமிருப்பர். அவர் இறை போன்றவர் என்பது மேலே சொல்லப்பட்டது.

உயிர்க ளெல்லாம் தன்னைப் போலாதல் வேண்டுமென்று இயற்கையின் வாயிலாகவும், குருவின் வாயிலாகவும் இறைவன் தொண்டு செய்து கொண்டே யிருக்கிறான். அவனுக்கு ஓய்வு என்பதே கிடையாது. அவனே பெருந்தொண்டன். அத் தொண்டனைத் தொழுது தொழுது தொண்டராவோரும் என்றும் உயிர்கட்குத் தொண்டு செய்து கொண்டேயிருப்பர்.

மேன்மக்கள் தொண்டே செய்து கொண்டிருப்பார்கள். அவர்கள் (இயற்கை கடந்த தனி இறையைத் தெளிந்து அதனுடன் ஒன்றுபடும்வரை) ஓய்வை விரும்பமாட்டார்கள். அவர்கட்கு வீடுபேறு தொண்டே; ஓய்வு வீடு பேறன்று. இதுபற்றியே 'தொழாஅ ரெனின்' என்பதற்கு 'வணங்கிக் கொண்டிராராயின்' என்று பொருள் சொல்லப்பட்டது. அளபெடையின் நுட்பம் செவ்வனே விளங்குதல் காண்க. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனவரூஉம் அப்பரெம் பெருமான் திருவாக்கை ஓர்க; சிறப்பாகக் 'கிடப்பதே' என்பதை ஓர்க. இத் தலைப்புக் கொண்ட ஒரு நூலும் என்னால் இயற்றப் பட்டது.

*உயிர்கட்குப் பயன் கருதாப் பரநலத் தொண்டு செய்யும் பேறு, தொழுகையாலேயே கூடும். தொழுகையால் மனம் தூய்மையுறுகிறது. தூய மனத்தில் இறையின் இயல்புகள் படிகின்றன. இவ்வியல்புகளால் தன்னலம் அழிந்து பரநலம் எழுகிறது. எல்லாவற்றிற்கும் அடிப்படை தொழுகை. அதன் பெற்றி நோக்கியே 'வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்' என்றார்.*

*இறைவன் தாள், திருவருளுக்கு அறிகுறி என்பது முன் பாட்டில் விளக்கப்பட்டது. வாலறிவன் நற்றாளைத் தொழு தலாவது அவன் திருவருளை உன்னி உன்னி அதுவாகிப் பயன் கருதாச் சேவை செய்வதென்க. சேவைக்கு அடிப்படை அருளன்றோ? இது, சமயம் நேர்ந்துழி நன்கு விளக்கப்படும்.*

**கற்றதனா லாய பயன் என்கொல்?**

*கற்றதனால் ஆய - கல்வி பயின்றதனால் ஆகிய; கற்றதனால் விளைந்த; நூல்களைக் கற்றதனால் விளைந்த; ஞானத்தைக் குருவாயிலாகக் கற்றதனால் விளைந்த என்னலுமாம்.*

*ஆய - ஆகிய : பெயரெச்சம்.*

*என் - எவன் : தொகுத்தல் விகாரம்.*

*'எவன் என்னும் வினாப்பெயர் என்னென்றாய் ஈண்டின்மை குறித்து நின்றது'- பரிமேலழகர்.*

*'எவனென்பதோர் பெயருமுண்டு; அஃதிக்காலத்து என்னென்றும் என்னை யென்றும் நிற்கும். ஈண்டுக் கூறப்பட்டது வினைக் குறிப்பு முற்றென்க' - சேனாவரையம்; 'படுத்த லோசை யால் எவன் என்பது பெயருமாம். அஃது இக்காலத்து என் னென்றும் என்னை யென்றும் மருவிற்று'- நச்சினார்க்கினியம். (தொல்காப்பியம் - சொல் - வினையியல் : 22).*

*கொல் : ஈண்டு அசை என்பர். கொல் என்னும் இடைச் சொல்லை ஐயப்பொருளில் கூறுவதும் அசைநிலையாகக் கொள்வதும் மரபாகிவிட்டன. 'கொல்லே ஐயம்' என்பது தொல்காப்பியச் சூத்திரம் (இடையியல் : 2).*

*திருக்குறள் நூலில் வெற்றுச் சொல் காண்டல் அரிது என்பதற்குக் காரணம் இப்பாட்டின் விருத்தியில் மேலே சொல்லப்பட்டது. 'கொல்' பெரிதும் வினாக் குறிப்பைத் தொடர்ந்து வருவது இயல்பு. இதுபற்றியே 'என்சொல்' என்ப தற்கு என்னை என்று மட்டும் பொருள் கூறாது, என்னையோ என்று பொருள் கூறப்பட்டது. ஆகவே, 'கொல்'லும் ஈண்டுப் பொருளுடையதென்க.*

**கற்றதனால்**

கற்றதனால் என்பதுடன் அதன் இனமாகிய 'கேட்ட தனால்' என்பதையுஞ் சேர்த்துக் கொள்க. கற்றலினாலுந் தெளிவு விளைதலுண்டு; கேட்டலினாலுந் தெளிவு விளைத லுண்டு. தெளிவுக்கு இரண்டும் வேண்டற்பாலன. [1]'கற்றல் கேட்டலுடையார் பெரியார் கழல் கையால் தொழுதேத்த ......' என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு. 'கற்றிலனாயினுங் கேட்க அஃதொருவன் - ஒற்கத்துக் கூற்றாந் துணை' என்பது ஆசிரியர் திருவாக்கு. 'கற்றதனால்' என்பதற்குப் பல நூல்களைக் கற்றதனாலும் கேட்டதனாலும் என்று கொள்க.

கல்வி - அறியாமையைக் கல்வி அறிவை விளக்கஞ் செய்வது. கல்வி மூவிதம். அவை ஏட்டுக் கல்வி, இயற்கைக் கல்வி, இறைக் கல்வி என்பன. ஏட்டுக் கல்வியைத் தொடர்ந்து இயற்கைக் கல்வி பெற முயல்வது நல்லது. இயற்கையின் வாயிலாக, அதன் உயிராகிய இறையை உணருங் கல்வி பெற முயல்வது அதனினும் நல்லது.

முக்கல்வியுடையராலும் நூல்கள் இயற்றப்படுவதுண்டு. இயற்கைப் பல்கலைக் கழகத்தில் பயின்றோர் தங்கூர்த்த மதி யால் நூல்களின் திறங்களை அளந்து கூறுதல் கூடும். இவர்க்கு, இறையருள் மாந்தோரால் அருளப்பெற்ற நூல்கள் இவை என்பதும், இயற்கை இன்பம் நுகர்ந்தோரால் யாக்கப் பெற்ற நூல்கள் இவை என்பதும், ஏட்டளவில் நின்றோரால் இயற்றப் பெற்ற நூல்கள் இவை என்பதும் நன்கு புலனாகும்.

இறைவன் இயலுணர்ந்து அவன்தாள் தொழுவதே பயனுடையதாகும். இறைவன் இயலுணர்ந்து அவன் தாள் தொழுதற்குக் கல்வி வேண்டும். இதுபற்றியே 'கற்றதனால்' என்றார். இங்ஙனமாயின் 'கல்லார் நிலை என்னாம்' என்று சிலர் கருதலாம். கல்லாரும் இறைவன் தாளைத் தொழுகின்றனர். ஆனால் இவர் இறைவன் இயலுணர்ந்து அவன் தாளைத் தொழுகின்றாரில்லை. கற்றவரோ இறைவன் இயலுணர்ந்து அவன் தாளைத் தொழுகின்றனர். இதுவே கல்லார் தொழுகைக் கும் கற்றார் தொழுகைக்கும் உள்ள வேற்றுமை. இறைவன் இயல் கலையளவிலாதல் அறிவில் விளங்க அவன் தாளைத் தொழுவதே நேரியதாகும். இறைவன் இயல் உணர்தற்குக் கல்வி வேண்டற்பாலதே.

1. 'முற்றலாமையிள * * * ' என்னுந் தேவாரம்.

[1]***'கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்'***

என்றும்,

[2]***'கற்றவ ருண்ணுங் கற்பகக் கனியை'***

என்றும்

தமிழ்மறை முழங்குதல் காண்க.

**ஆய பயன்**

ஆசிரியர் 'கற்றதனால்' என்ற அளவுடன் நின்றாரில்லை; மேலுஞ் சென்று 'ஆய பயன்' என்றார். இதனால் கற்பது மட்டும் போதாது என்பது விளங்குகிறது. கற்றதனால் 'ஆய பயன்' ஒன்றிருக்கிறது. அஃதென்னை? அது தொழுகை. தொழுகையற்ற கல்வி கல்வியாகாது.

கற்றுஞ் சிலர் இறைவன் தாள் தொழாது கிடக்கின்றனர். அவர் கல்வியாலாய பயனை இழந்தவரே யாவர். 'ஆடித் திரிந்து நான் கற்றதுங் கேட்டதும் அவலமாய்ப் போதல் நன்றோ' என்று தாயுமானார் இரங்குதல் காண்க. கற்றுங் கடவுளைத் தொழாதார் கல்லாரே யாவர்.

நூல்களைக் கற்றதனால் மட்டும் பயன் விளையாது. நூல்களைக் கற்று, வாலறிவன் நற்றாளைத் தொழுதல் வேண்டும். அத்தொழுகை கற்றதனாலாகிய பயனை விளைவிக்கும்.

ஏட்டுக் கல்வி பயின்று இறைவனைத் தொழாது கிடப்போர் மேலும் மேலும் விளக்கம் பெறா தொழிவர். அவர் வழுக்கி வீழினும் வீழ்வர். உயிர்கள் மேலும் மேலும் விளக்கம் பெறுதற்கும், அவை வழுக்கி வீழாமல் காப்புப் பெறுதற்கும் தொழுகை கொழுகொம்புபோல் துணை புரியும்.

தொழுகை, மக்களை ஏட்டுக்கல்வியினின்றும் உயர்த்தி, இயற்கையில் நாட்டத்தைச் செலுத்த உந்தும்; மேலும் இறையின் உண்மையை அவர்கள் உணரவும் துணை புரியும். ஆகவே, மக்கள் தொழுகையின்றி ஏட்டுக்கல்வி யளவில் நிற்றல் தங்கள் வாழ்வுக்கு இழுக்குத் தேடுவதாகும்.

**என்கொல்?**

என்கொல் என்பதிலுள்ள விரைவைச் சிந்திக்க. இது தொழுகையின் இன்றியமையாமையை உணர்த்துவது. தொழுதல் வேண்டும் என்பார் 'என்சொல்' என்றார். 'கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாளைத் தொழுவது; இல்லையேல் கற்றதனாலாய பயன் என்கொல்' என்றபடி.

1. திருஞானசம்பந்தர். 2. சேந்தனார் திருவிசைப்பா.

கற்றதன் பயன் என்னை? வாலறிவன் உண்மையை உணர்ந்து, அதனால் தெளிவுபெற்று, மற்றவர்க்குச் சேவை செய்வது. இதற்குத் துணைபுரிவது தொழுகை. தொழுகை கற்றதனாலாகிய பயனை விளைவித்தலால் 'வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின், கற்றதனாலாய பயன் என்கொல்' என்றார்.

**6**

***வேண்டுதல் வேண்டாமை [1]இலானடி சேர்ந்தார்க்***
***கியாண்டும் இடும்பை இல.***

**பொருள்**

வேண்டுதல் வேண்டாமை இலான் - விருப்பு வெறுப்பு இல்லாத இறைவனது, அடி சேர்ந்தார்க்கு - திருவடியை அடைந் தவர்க்கு, யாண்டும் - எவ்விடத்தும், இடும்பை இல- துன்பங்கள் இலவாம்.

**கருத்து**

துன்பமொழிக்க விருப்பு வெறுப்பில்லா இறைவனடி சேர்தல் வேண்டும்.

**விருத்தி**

வாலறிவன் நற்றாளைத் தொழுதற்குக் கல்வி வேண்டு மென்பது மேற்பாட்டின் நுட்பம். அக்கல்வியால் வேண்டுதல் வேண்டாமை விளையும் என்பது இப்பாட்டின் நுட்பம்.

**வேண்டுதல் வேண்டாமை இலான்**

வேண்டுதல் வேண்டாமை - விருப்பு வெறுப்பு; ராகத்வேஷம்.

'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்பதற்கு, 'இன்பமும் வெகுளியும் இல்லாதானது' என்று மணக்குடவர் பொருள் கூறியுள்ளார். அவரே, "பொருளுங்காமமும் ஆகா என்பதற்கு 'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்று பெயரிட்டார்" என்று விளக்கஞ் செய்திருக்கிறார்.

இலான் - இறைவன்.

**வேண்டுதல் வேண்டாமை**

வேண்டுதல் உள்ள இடத்தில் வேண்டாமையுமிருக்கும். இஃதுள்ள இடத்தில் அஃதுமிருக்கும். ஒன்றுள்ள இடத்தில் மற்றொன்றுமிருத்தலால் இரண்டும் இங்கே குறிக்கப் பெற்றன.

1. பாட பேதம் : இல்லா னடிசேர்ந்தார் – யாண்டும் இடும்பை இலர்.

*விருப்பு வெறுப்பு நிகழ்ச்சிகளின் அடிப்படையான காரணம் அறியாமை (அவித்தை); அதனின்றும் பிறக்கும் காம வெகுளி மயக்கம் முதலியன தொடர் காரணம்.*

*எக்காரணம் பற்றியோ ஒரு பொருளினிடத்து விருப்போ வெறுப்போ தோன்றுகிறது. அதை நிறைவேற்றிக் கொள்ளப் பலவகைச் செயல்களில் - கர்மங்களில் - தலைப்படல் நேர்கிறது. அச்செயல்களின் பயன் யாண்டுச் செல்லும்? பயன், தான் பிறந்த இடத்தையே நோக்கிச் செல்லும். மண்கட்டியை எறிந்தால் அஃது எங்கே விழும்? அது மண்ணிலேயே வந்து விழும். நெருப்பு, தன்னைத் தீண்டுவோரைச் சுடுவது இயற்கை.*

*ஒரு வினை எத்தனையோ கான்முளைகளை ஈனும். கான் முளைகள் புற்றீசல்போலப் பெருகும்; கொடி கொடியாய்ப் படரும்; வினைக்கொடிகள் வலைபோலாகும். வலையில் உயிர் சிக்கிக் கொள்ளும். சிக்கல் இடும்பை (துன்பத்தை) விளைத்தல் இயல்பு. இடும்பைகள் பல; பலதிறத்தன.*

*வினைகளெல்லாந் திரண்டு திரண்டு துன்பங்களின் விளை வாகின்றன. துன்பங்களின் பாகுபாடு பலவிதம். அவற்றைப் பிறப்புத் துன்பம் இறப்புத் துன்பம் என்னும் இரண்டில் அடக்கலாம். பிணி மூப்பு முதலியன இடைப்பட்டன. பிறப்பிறப்புத் துன்பம் ஒழிந்தால் மற்றத் துன்பங்களெல்லாம் தாமே ஒழியும். ஆதலால், பிறப்பிறப்புத் துன்பத்தை ஒழிக்க முயல்வதே சிறப்பு. இரண்டும் எப்படி ஒழியும்? 'வேண்டுதல் வேண்டாமை' அற்ற நிலையில் இரண்டும் ஒழியும்.*

*அறியாமையினின்றும் 'வேண்டுதல் வேண்டாமை' பிறக்கின்றன. இவற்றினின்றும் எண்ணற்ற வினைகள் தோன்று கின்றன. எல்லாவற்றிற்கும் மூலம் அறியாமை. அறியாமை வேரை அறுப்பதற்கு 'வேண்டுதல்' வேண்டாமை' எழாதவாறு காத்தல் வேண்டும்.*

*'வேண்டுதல் வேண்டாமை' அறியாமைக்கும், பல வினை களின் விளைவிற்கும் நடுவண் சிங்கநோக்கா யிருப்பன. அவை எழாதவாறு காக்கப்படுமேல் மூலமும் அழியும்; விளைவும் ஒழியும்.*

**இலான்**

*இறைவன் வாலறிவனாதலால் அவனிடத்தில் அறியா மையே கிடையாது. அறியாமை யில்லாத இடத்தில் வேண்டுதலும் இராது; வேண்டாமையும் இராது. இது பற்றியே இறைவனை, 'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்றார். இறைவனிடம்*

அறியாமை இன்மையான் அவன்மாட்டு வேண்டுதல் வேண்டாமை நிகழ்தற்கு ஏதுவில்லை. 'இலான்' என்பது, இறைவன் இயல்பாகவே வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன் என்பதை உணர்த்துவது.

இறைவன் எல்லாவற்றாலும் நிறைவுற்றவனாதலின், எதைக் குறித்தும் அவனிடம் வேண்டுதல் வேண்டாமை எழுதல் அருமை. குறைவுள்ள இடத்தில் அவை எழுதல் இயற்கை. குறைவு உள்ளத்தை அறிவால் நிறைவாக்கிக் கொண்டால் 'வேண்டுதல் வேண்டாமை' எழுதற்கு இடமிராது.

**அடி சேர்ந்தார்க்கு**

'அடி சேர்தல்' என்பதைப் பற்றி, 'மலர்மிசை ஏகினான்' என்னுங் குறளின் விருத்தியில் சில கூறப்பட்டன. ஈண்டைக் கேற்பச் சில கூற விரும்புகிறேன்.

விருப்பு வெறுப்பு இல்லாதவன் இறைவன். அவனடி சேர்ந்தவரும் விருப்பு வெறுப்பற்றவராவர். உயிர் சார்ந்ததன் வண்ணமாவது இயற்கை.

இறைவன் இயல்பாகவே விருப்பு வெறுப்பு இல்லாதவன். அவனடி சேர்ந்தோரும் அவனது சேர்க்கையால் விருப்பு வெறுப்பை அறுத்துக் கொண்டவராவர். ஆகவே, இறைவனை விருப்ப வெறுப்பு இல்லாதவன் என்றும், அவனடி சேர்ந்தவரை விருப்பு வெறுப்பு அற்றவர் (அறுத்துக் கொண்டவர்) என்றுங் கொள்க.

**வழி**

விருப்பு வெறுப்பை அறுத்துக் கொள்ளுதற்குரிய வழி என்ன? வழி ஆசிரியரே காட்டுகிறார். 'வேண்டுதல் வேண்டாமை இலான் அடிசேர்ந்தார்க்கு' என்பதில் ஆசிரியர் காட்டும் வழி யிருத்தல் காண்க. 'வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்தல்' உற்ற வழியாகும்.

'வேண்டுதல் வேண்டாமை'யை ஒழிக்க இறைவன் திருவடி சேருமாறு ஆசிரியர் அறிவுறுத்துகிறார். திருவடியைச் சேர்தலா வது, திருவடியை இடைவிடாது நினைத்தல். இவ்வாறு பரிமே லழகர் உரை கண்டுள்ளனர். இறைவன் திருவடியை இடையறாது நினைத்தலால் 'வேண்டுதல் வேண்டாமை' அறும்நிலை எய்தல் ஒருதலை.

நினைத்தல் அதினும் இடையறாது நினைத்தல் கூடுதற்கு முயற்சி தேவை. அம் முயற்சிக்குரிய துறைகளைக் கொண்டதே திருவள்ளுவர் நூல். ஈண்டுப் பொதுப்பட இரண்டொன்று குறித்தல் நலம்.

## உடல் - பொறி - புலன் - மனம்

*உயிர் நலனுக்கென்று உடலும் உலகமும் வழங்கப்பட்டன. உடல் தாங்கிய உயிர் உலகிடை வாழ்ந்து, 'வேண்டுதல் வேண்டாமை' அறும் நிலை எய்தல் வேண்டும். இதற்குத் தடைகள் பல இருக்கின்றன. தடைகள் எங்கே இருக்கின்றன? உடலிலா? உலகிலா? உடலும் உலகும், உயிர் நலனுக்கென்று ஏற்பட்டவை. நலனுக்கென்று ஏற்பட்டனவற்றுள் அந்நலனைக் கெடுத்தற்கென்று தடைகள் எங்கிருந்து தோன்றின?*

*உயிருக்கும் உலகுக்கும் இடையிலிருப்பது உடல். உடல் இல்வழி உயிர் உலகை உணராது; இன்பம் நுகராது. உணர்வுப் பேற்றுக்கும் இன்ப நுகர்ச்சிக்கும் கருவியாயிருப்பது உடல்.*

*உடலில் ஐம்பொறி அமைந்திருக்கின்றன. ஐம்பொறி வழி எழுவன ஐம்புலன்.*

*ஐம்புலனுக்கும் ஊற்றாயிருப்பது மனம். மனத்தை இயற்கை வழிச் செலுத்தினால் புலன்களும் அவ்வழிச் செல்லும். மனத்தை வேறுவழியிற் செலுத்தினால் புலன்களும் அவ்வழியே செல்லும். மனம் எவ்வழி அவ்வழியே புலன்களும் உழலும்.*

## பொய்யறிவு

*மனம் குரங்கு என்று சொல்லப்படுகிறது. அது குரங்கா? அதைக் குரங்காக்குவது ஒன்று. அஃது எது? அது பொய்யறிவு. பொய்யறிவு என்பதும், அறியாமை என்பதும் ஒன்றே. உயிர்களைப் பாழ்படுத்துவது அறியாமை.*

***[1]'பேதைமை யென்னும் வித்திற் பிறந்தபின் வினைகளென்னும்***
***வேதனை மரங்கள் நாறி வேட்கைவேர் வீழ்த்து முற்றிக்***
***காதலுங் களிப்பு மென்னுங் கவடுவிட் டவலம் பூத்து***
***மாதுய ரிடும்பை காய்த்து மரணமே கனிந்து நிற்கும்'***

*பொய்யறிவைப் போக்கினால் மெய்யறிவு முகிழ்க்கும். மெய்ம்மையை மறைத்திருப்பது பொய்ம்மை. பொய்ம்மை எப்படிப் புகுந்தது? புலன்களைச் செயற்கையிற் செலுத்தச் செலுத்தப் பொய்ம்மை புகுந்து கொண்டே யிருக்கும். பொய்ம்மை, மனத்தைக் குரங்காக்குகிறது. மனக் குரங்கு புலங்களைப் பேயாக்குகிறது. பேய்ப் புலன் 'வேண்டுதல் வேண்டாமை'யை எழுப்புகிறது. அதனால் இடும்பை விளைகிறது.*

1. சீவகசிந்தாமணி.

மனமும் புலனும் பொய்ம்மைக்கு ஆளாதலால் நல்லன வெல்லாம் தீயனவாகும்; இன்பமெல்லாம் துன்பமாகும்; வாழ்வே தீய - துன்ப - மயமாகும். தீயன, நல்லனவாதல் வேண்டும்; துன்பமெல்லாம் இன்பமாதல் வேண்டும். இதற்கென் செய்வது?

உலகையும் மனத்தையும் ஒன்றுபடுத்தும் புலன்களைச் செம்மை செய்தல் நல்லது. புலன்களைச் செம்மை செய்தலாவது அவற்றை அவித்தல்; அவித்தலாவது நிர்மூலமாக்குவ தன்று. விரிவு 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்னுங் குறளின் விருத்தியிற் பார்க்க. புலன் செம்மையுறின் மனமுஞ் செம்மையுறும். மனச் செம்மையால் பொய்ம்மை பொன்றும்; மெய்ம்மை முகிழ்க்கும்.

**துக்க நிவாரணம்**

புலன்களுள் சிறந்தது கட்புலன். இப்புலனால் எதையும் நல்லனவாகக் காணப் பயிலுதல் வேண்டும். கட்புலன் நல் வழிப்பட்டால், மற்றப் புலன்களும் படிப்படியே அவ்வழிப்படும். இப் புலப்பயிற்சி துக்க நிவாரணத்துக்கு வழி காட்டும்.

துக்க நிவாரண மார்க்கம் பல துறைகளை யுடையது. அவற்றை எட்டாகச் சில பெரியோர் தொகுத்துள்ளனர். முதலாவது நற்காட்சி. இதனுடன் மற்றுமுள்ள ஏழும் வருமாறு:-

[1]***'நற்காட்சி நல்லொழுக்க நல்வாய்மை நல்வாழ்க்கை***
***நற்செய்கை யோடைந்து நாடு'***

[1]***'நன்முயற்சி நன்காங் கடைப்பிடிநல் லோர் தம்பால்***
***செல்கையிட னெட்டனைத்துந் தேறு'***

இவ்வெட்டையும் வாழ்வில் கடைப்பிடித் தொழுகினால், சீலக் கதவு திறந்துகொள்ளும்.

**சீலம்**

சீலம் ஐந்து என்றும், எட்டு என்றும், பத்து என்றும் சொல்லப்படும். இவைகளில் நூறு, ஆயிரம் முதலிய எல்லாச் சில வகைகளும் அடங்கும். தொடக்கத்தில் பஞ்ச சீலத்தைப் பற்றி யொழுகுதல் சாலும். கொல்லாமை, களவாடாமை, கள்ளாமை, பிறர்மனை விழையாமை, பொய்யாமை என்பன பஞ்ச சீலம். இவ்வைந்தும் வாழ்வில் ஊன்றினால் மற்றச் சீலங்கள் தாமே படியும்.

**சீல சமாதி**

சீலம் முதிர முதிரச் சமாதி கூடும். இது சீல சமாதி எனப் படும். சீல சமாதியால் பழம்பிறப் புணர்வு தோன்றும்; பழம்பிறப்

1. பரமத திமிரபானு.

புணர்வு. 'வேண்டுதல் வேண்டாமை'யால் விளைந்த இடும்பை களை நன்கு உணர்த்தும். அவ்வுணர்வால் பொய்யறிவு மறையும்; மனம் நன்னிலை எய்தும்; புலன்கள் இயற்கைவழி நடக்கும்; இயற்கை இறைவடிவாகத் தோன்றும்; இறைவன் குருவழியாகக் காட்சியளிப்பன்; அவனடியில் மனம் படிந்து ஒன்றும். அந்நிலை யில் இடும்பைகள் இலவாகும்; உலக மெல்லாம் நல்லனவாக - இன்பாக - விளங்கும்.

கீழ்நிலையில் இறையடி நினைத்தலென்று ஏதாயினும் ஓர் உருவை மட்டும் நினைத்தல் போதாது. அதனுடன் நற்காட்சி முதலிய மார்க்கத்துறைகளிலும், கொல்லாமை முதலிய சீலங்களிலும் நின்றொழுகப் பயிலுதல் வேண்டும். இப்பயிற்சி களும் இறைவனடி நினைத்தலின் கூறுபாடுகளாகும்.

உயிர்கள், வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாத இறைவனடியைச் சேரச் சேர, அவைகளிடத்துள்ள வேண்டுத லும் வேண்டாமையும் படிப்படியே அற்றுப் போகும்; மற்றவர் களைச் சேர்தலால் அவை அறா. கண்ணில்லாதானுக்குக் கண்ணுள்ளான் வழிகாட்டுவதே ஒழுங்கு. ஆதலால், உயிர் களின் வேண்டுதல் வேண்டாமை நீக்கத்துக்கு, வேண்டுதல் வேண்டாமை இல்லாத ஒருவனது அடிச் சேர்க்கை வேண்டற் பால தென்க. இதுபற்றியே, 'வேண்டுதல் வேண்டாமை இலான் அடிசேர்ந்தார்க்கு' என்றார்.

**யாண்டும் இடும்பை இல**

யாண்டும் - எவ்விடத்தும் என்பர் மணக்குடவர்; 'எப்பொழுதும்' என்பர் பரிமேலழகர்.

இடும்பை - துன்பங்கள்; வேண்டுதலாலும் வேண்டாமை யாலும் நேரும் துன்பங்கள்.

எவ்விடத்தும் - எப்பொழுதும் - இடும்பையில்லை என்றபடி.

வேண்டுதல் வேண்டாமை இல்லாத இறைவன் இடும்பை இல்லாதவன் - என்றும் இயற்கையாகவே இடும்பை இல்லாதவன். அவனடி சேர்ந்தோரும் இடும்பை அற்றவராவர். அவரை இடையில் எவ்விடத்தும் - எப்பொழுதும் - எக்காரணம் பற்றியும் இடும்பை பற்றாது. இதுபற்றியே ஆசிரியர் 'யாண்டும் இடும்பை இல' என்று அருளினர்.

## இன்பமும் துன்பமும்

*இறைவன் இன்பமயமா யிருப்பவன். அவனை இன்ப மென்றே அநுபூதிமான்கள் போற்றியுள்ளார்கள். 'மாறி நின்று.... ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே' என்றார் மணிவாசகனார்.*

*இறைவன் ஓரிடத்திருந்து மற்றோரிடத்தில்லாதவனல்லன். அவன் அங்கிங் கெனாதபடி எங்குமிருப்பவன். அவனே எல்லாம். அவனையன்றி யொன்றில்லை. இன்பமாயுள்ள இறைவன் எங்கு முள்ள ஒருவனாய், எல்லாமாயிருத்தலான், துன்ப இருப்புக்கு இடம் ஏது? எங்கும் இன்பம் - எல்லாம் இன்பம்.*

*வேண்டுதலும் வேண்டாமையும் இயற்கை இன்பத்தை மறைத்துக் கொண்டிருக்கின்றன. இறைவனடிச் சேர்க்கையால் வேண்டுதலும் வேண்டாமையும் அற்றதும் துன்பம் பாழ்படும். அந்நிலையில் எல்லாம் இன்பமாகும். எங்குமிருப்பது இறை அல்லது இன்பந்தானே.*

*இறைவனடி சேர்ந்தார்க்கு எவ்விடமும் இன்பமாகும்; எப்பொழுதும் இன்பமாகும். அவர்க்கு நரகம் - சுவர்க்கம் என்பன இல்லை.*

*இவ்வுலகந் துன்பமய மென்றும், வேறோர் இன்பமயமான உலகம் இருக்கிறதென்றும் நினைப்பது அறியாமை. அறியாமை யினின்றும் பிறக்கும் வேண்டுதல் வேண்டாமை அற்றால், எல்லா உலகமும் - அதாவது எவ்விடமும்- இன்பமயமாகும்.*

***[1]'துன்பமும் இன்பமும் ஆகியசெய்வினை யாய்உல கங்களுமாய்***
***இன்பமில் வெந்நர காகி இனியநல் வான்சுவர்க் கங்களுமாய்***
***மன்பயில் உயிர்களு மாகிப் பலபல மாய மயக்குக்களால்***
***இன்புறும் இவ்விளை யாட்டுடையானைப் பெற்றேதும் அல்லலிலனே'***

***[1]'யானுநீ தானே யாவதோ மெய்யே அருநர கவையும்நீ ஆனால்***
***வானுயர் இன்பம் எய்திலென் மற்றை நரகமே எய்திலென்'***

***[2]'நாமார்க்கும்....எந்நாளும் இன்பமே துன்பமில்லை'***

*எவ்விடமும் இன்பமயம் என்பதை, எவ்விடத்தும் துன்ப மில்லை என்னும் பொருள்பட 'யாண்டும் இடும்பையில்' என்று*

1. நம்மாழ்வார். 2. அப்பர்.

ஆசிரியர் கூறினர். இவ்வாறு கூறியதன் நோக்க மென்னை? உயிர் பொய்யறிவால் அதாவது அறியாமையினால் இடும்பையுள் மூழ்கிப் பின்னே மெய்யறிவு விளக்கத்தால் இடும்பையினின்றும் விடுதலையடைந்ததும், அதற்கு இடும்பையிலாமையே தோன்றும். நோயினின்றும் விடுதலை பெறுவோர் 'நோயொழிந்தது' என்று கூறுவது வழக்கம். இடும்பையின் கொடுமையை உணர்த்த வேண்டி, 'இடும்பையில' என்றார். முழு விடுதலை, யாண்டும் இன்பமயமாயிருத்தலை விளங்கச் செய்தலால், 'யாண்டும் இடும்பையில' என்றார்.

**அற நிலை**

விருப்பு வெறுப்பின்றி உலகில் வாழ்தல் இயலுமா என்று சிலர் கருதலாம். துக்க நிவாரணமார்க்கத்தில் நிற்பதாலும், சீல சமாதியாலும் விருப்பு வெறுப்பற்ற இன்ப வாழ்வு நடாத்தல் கூடும் என்று மேலே சுருங்கச் சொல்லப்பட்டது. இப்பயிற்சியில் ஈடுபட்டோர்க்கு விருப்பு வெறுப்பற்று வாழ்வதில் அருமைப் பாடு தோன்றாது; மற்றவர்க்கு அருமைப்பாடு தோன்றலாம். விருப்பு வெறுப்பற்ற நிலையே அறமென்பது. இதுபற்றி 'அறன் வலியுறுத்த'லில் விரித்துக் கூறுவன். இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை, பிள்ளைபேறு, அன்புடைமை, விருந்தோம்பல் முதலியன மனமாசினை அகற்றுவன. 'மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறம்' என்பது ஆசிரியர் திருமொழி.

ஒப்புரவில் (Social Service) ஈடுபடப்பட விருப்பு வெறுப்பு அற்றுப்போகும்; பொது நோக்கு உண்டாகும்; எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் உணர்வு மலரும். அந்நிலையில் விருப்பு வெறுப்புக்கு இடம் ஏது?

வேண்டுதல் வேண்டாமைக்கு அடிப்படை அறியாமை என்பதும், அறியாமையினின்றும் எழும் வேண்டுதல் வேண்டாமை இடும்பை விளைக்கும் என்பதும், அறியாமை அகன்றதும் அறிவு விளங்கும் என்பதும், அறியாமை பொய்யறிவு என்றும் அறிவு மெய்யறிவு என்றும் வழங்கப்படுகின்றன என்பதும், இறைவன் அறியாமை இல்லாதவன் என்பதும், அதனால் அவனை இடும்பை அணுகுவதில்லை என்பதும், இறைவனை அடைந் தோரும் அறியாமையினின்றெழும் வேண்டுதல் வேண்டாமை யின் விளைவாகிய இடும்பை அற்றவராவர் என்பதும் சுருங்கிய முறையில் விளக்கப்பட்டன.

**இன்னொரு முறை**

இதுகாறும் அறியாமையினின்றும் பிறக்கும் விருப்பு வெறுப்பும், அவற்றின் விளைவும், அவற்றை ஒழிப்பதற்குரிய

வழியும் பேசப்பட்டன. இனி இன்னொரு முறை கொண்டு விருப்பு வெறுப்பைப் பற்றியும் அவற்றின் விளைவைப் பற்றியும் சிறிது பேசுவோம்.

இறைவன் அறியாமையே இல்லாதவன்; அறிவு மய மாயிருப்பவன். ஆகவே, இறைவன்பால் அறியாமையை அடிப் படையாகக் கொண்ட வேண்டுதல் வேண்டாமை இருத்தற்கு இடமில்லை. அறிவு மயத்தினின்றும் வேண்டுதல் வேண்டாமை எழுதற்கு இடமுண்டா? இல்லையா? என்பது உன்னற்பாலது.

அறியாமையின் விளைவு, அழுக்காறு அவா வெகுளி முதலியன. அறிவின் விளைவு, அன்பு அருள் பொறுமை முதலியன. இவற்றுள் இறை இயல்புகள் எவை? பின்னையன. என்னை? இறைவன் அறிவு மயமாக விளங்கலின் என்க.

அறியாமையினின்றும் எழும் வேண்டுதல் வேண்டாமை, அழுக்காறு முதலியவற்றை ஈனுகின்றன. அதேபோல அன்பு முதலியவற்றை ஈனுதற்கு அறிவினின்றும் வேண்டுதல் வேண்டாமை எழுதல் வேண்டுமன்றோ? ஆதலின், வேண்டுதல் வேண்டாமை என்னும் வெறுஞ் சொற்களை மட்டுங் கொண்டு வாதத்தி லிறங்குவது தவறு. அவற்றின் நிகழ்ச்சிகளைக் கொண்டு பொருளுணர்தலே சால்பு.

இந்நியாயங் கொண்டு, 'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்பதை நோக்குவோம். நோக்கினால் அதற்கு, அறியாமையை முதலாகக் கொண்ட விருப்பு வெறுப்பு இல்லாதவன் என்று பொருள் விரித்தலே பொருத்தம் என்பது நனி விளங்கும். இதனின்றும் அறிவை முதலாகக் கொண்ட வேண்டுதல் வேண்டாமை உடையவன் இறைவன் என்று ஊகஞ் செய்யலா மன்றோ?

வேண்டுதல் வேண்டாமை என்பன, இறைவனுக்குரிய மூன்று நிலைகளுள், முதலாவதாகிய மாற்ற மனங் கடந்ததில் விளங்குதல் அரிது; இரண்டாவதாகிய இயற்கையை உடலாக் கொண்டதில் ஒரோவழி விளங்கும்; மூன்றாவதாகிய குருநிலையில் நன்கு விளங்கும். எப்படி?

## குரு நிலையில்

இறைவனது குருநிலையே இவ்வதிகாரத்தில் பெரிதும் அறிவுறுத்தப்படுகிறது. குருநாதன் உள்ளத்தில் விளங்குவது இறையொன்றே. இறையாவது அன்பு. அன்பாவது பிறர் துன்பங் கண்டிரங்கி நலஞ்செய்ய எழுவது.

அன்பாகிய இறைவன் குருவினுள் வீற்றிருந்து என்ன நினைக்கிறான்? உயிர்களெல்லாம் என்றே அறியாமை யினின்றும் விடுதலையடைந்து அறிவாகப் போகின்றன என்று நினைந்த வண்ணமிருக்கிறான். இறைவன் உயிர்களின் நலங் கருதுவதில் விருப்பும், தீமை கருதுவதில் வெறுப்பும் உடைய வனாயிருக்கிறான். இவ்விருப்பு வெறுப்பே இறைவன்றன் வேண்டுதல் வேண்டாமை என்பன. இவை, அன்பு - அருள் - பொறுமையினின்றும் பிறப்பன என்பதையும், அழுக்காறு - அவா - வெகுளி முதலியவற்றினின்றும் பிறப்பனவல்ல என்பதையும் மறத்தலாகாது.

இறைவனடி சேர்ந்து இடும்பை நீங்கப் பெற்ற பெரியோர் உள்ளமும் உலகநலத்தில் விருப்பும், அதன் தீமையில் வெறுப்புங் கொள்ளும்.

**அன்புள்ளம்**

அன்பேநிலவும் உள்ளம் எதை விரும்பும்? எதை வெறுக்கும்? அவ்வுள்ளம், 'உயிர்களின் துன்பம் வீழ்க; வறுமை, பிணி முதலிய கொடுமைகள் நில்லாதொழிக; நலம் பெற்றிருப் போர் மேலும் மேலும் நலம்பெறுக; தீமையுற்றிருப்போர் தீமையினின்றும் விடுதலையடைந்து நலமுறுக; உயிர்களிடை வேற்றுமை அழிக; எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க' என்று விரும்பிய வண்ணமிருக்கும்; இவைகளுக்கு மாறுபட்டவைகளை வெறுத்த வண்ணமிருக்கும்.

இந்நிலையினரும் உலகில் வாழ்ந்தார்; வாழ்கிறார்; வாழ்வார். ஆதலால், வேண்டுதல் வேண்டாமையின்றி உலகில் எங்ஙனம் வாழ்தல் கூடும் என்று எவரும் ஐயுறவேண்டுவதில்லை. வெறுஞ் சொல்லையும் ஏட்டையும் கட்டி அழாது, இறைவனடி நினைந்து, ஒப்புரவில் ஈடுபட உறுதி கொள்ளுதல் வேண்டும்; கொண்டால் பொய்யறிவு வழி 'வேண்டுதல் வேண்டாமை' எழுவது தொலைந்து, மெய்யறிவு வழி அவையெழும். அதனால் இடும்பை அருகும்; இன்பம் பெருகும்.

'வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு - யாண்டும் இடும்பை இல்'; 'மற்றவர்க்கு யாண்டும் இடும்பை யுள' என்றபடி. யாண்டும் இடும்பையிலவாதற்கு இறைவனடி சேர்தல் வேண்டும் என்று அறிவுறுத்தியவாறாம்.

[1]***'வேண்டுதல் வேண்டாமை யிலாத வீரனடி'***
[2]***'காய்தல் உவத்த லிலானை'***

1. திருக்கலம்பகம் : 58, 2. திருவாய்மொழி

*[1]'இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே'*
*[2]'உவத்தல் காய்தலா லுன்றிரு வடித்தலத் தெழுந்தோர்க்*
*குவத்தல் காய்தலுன் திருவுளத் தொன்றுநீ யிலையேல்*
*சுவர்க்க மாநர கத்தவர் துன்னுவ துனது*
*தவத்தின் தன்மையோ தம்வினைத் தன்மையோ அருளே'* (4)

**7**

*தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்*
*மனக்கவலை மாற்ற லரிது.*

### பொருள்

தனக்கு உவமை இல்லாதான் - தனக்கு ஒப்பு இல்லாத இறைவனது, தாள் சேர்ந்தார்க்கு அல்லால் - திருவடியை அடைந்தவர்க்கு அல்லாமல், மனக்கவலை மாற்றல் அரிது - (ஏனையோர்க்கு) மனக்கவலையை அழித்தல் இயலாது.

### கருத்து

இறைவன் திருவடியே மனக் கவலையை அழிக்க வல்லது.

### விருத்தி

முற்பாட்டில் இறைவன் 'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்றும், இப்பாட்டில் 'தனக்கு உவமை இல்லாதான்' என்றும், அதில் 'யாண்டும் இடும்பையில்' என்றும், இதில் 'மனக்கவலை மாற்றலரிது' என்றும் சொல்லப்பட்டனவற்றி லுள்ள தொடர்புகள் உன்னற்பாலன. வேண்டுதல் வேண்டாமை இல்லாத ஒருவனே தனக்கு உவமை இல்லாதவன். யாண்டும் இடும்பை இலவாதலே மனக்கவலை மாற்றுவது.

#### தனக்கு உவமை இல்லாதான்

தனக்கு என்னுங் குறிப்பு, தனிமையைப் புலப்படுத்துவது.

உவமை - ஒப்பு; ஒப்புடன் உயர்வையுங் கொள்க.

'தனக்கு உவமை இல்லாதான்' என்பது, இறைவனிலும் ஒப்பானதும் உயர்வானதும், ஒப்பானவரும் உயர்வானவரும் முறையே ஒன்றும் ஒருவரும் இல்லை என்பதை உணர்த்துவது.

#### தனக்கு

'தனக்கு' என்பது தனிமையைப் புலப்படுத்துவது. தனிமை யாவது ஒப்பற்றது. 'தனக்கு' என்பதை உன்னி உன்னிச் சொல்லிச் சொல்லிப் பார்த்தால், அதன்கண் உவமையின்மை ஒலித்தலை

1 திருவாசகம் – சிவபுராணம் : 70, 2. மேருமந்தர புராணம்.

*உணரலாம். 'தனக்கு' என்பதைத் தொடர்ந்து நிற்கும் 'உவமை யில்லாதான்' என்பது, அத் 'தனக்கு' என்பதிலேயே ஒலித்தலைத் தேர்க. 'தனக்கு' என்பதன் விரிவு, 'உவமையில்லா தான்' என்று தொனிப் பொருள்களில் கொள்க.*

**உவமை இல்லாதான்**

*இறைக்கு உவமையாக எதைக் கொள்வது? உலகைக் கொள்ளலாமா? உயிரைக் கொள்ளலாமா? உலகு, உயிர், இறை என்னும் மூன்றனுள் எல்லாம் அடங்கும். அவற்றில் அடங்காத பிற இல்லை. உலகும் உயிரும் இறைக்கு உவமையாகுமா என்பதை நோக்குவோம்.*

**உலகு - உயிர் இறை**

*உலகு உயிர் இறை என்னும் மூன்றனுள், இறை எல்லா வற்றினும் உயர்ந்தது. மற்ற இரண்டும் அதற்கு ஒப்பான வையு மல்ல; உயர்வானவையு மல்ல. (உலகு - மாயா காரியமாகவுள்ள எல்லாவகை உலகங்களையுங் கொண்டது. உயிர் - எல்லா வகை உயிர்களையும் (மக்கள் தேவரையும்) கொண்டது.)*

*உலகு அறிவற்றது; என்றும் ஒருபெற்றியா யிராதது; மாறுந் தகையது அதாவது காரியப்படுந் தன்மையது.*

*உயிர் அறியாமை விரவிய அறிவுடையது; அறியாமையால் பொய்யை மெய்யாகவும் மெய்யைப் பொய்யாகவுங் கருதிப் பிறப்புத் துன்பங்களால் இடர்ப்படுவது; குருநாதன் துணையால் அறியாமை நீங்கப் பெற்றுத் துன்பத்தினின்றும் விடுதலை யடையும் இயல்புடையது.*

*இறை என்றும் ஒரே பெற்றியாயிருப்பது; மாறுதலில்லா தது; முற்றறிவுடையது; அறியாமையே இல்லாதது; அறிவில்லா உலகையும், அறியாமை விரவிய அறிவாகிய உயிரையும் இயக்குவது.*

*மாறுந் தகையதாகிய உலகும் - அறியாமையுடைய உயிரும் - இயல்பாகவே இவ்விரண்டுமில்லாத இறைக்கு எங்ஙனம் உவமையாகும்?*

**ஆராய்ச்சி**

*உலகும் உயிரும் ஆராய்ச்சிக்கு எட்டுவன. இறை ஆராய்ச்சிக்கு எட்டாதது.*

*பலதிற உலகங்களும், அவற்றின் கூறுகளும் அவ்வவற்றி லுள்ள சக்திகளும், பிறவும் ஆராய்ச்சிக்கு எட்டுவனவாம். இவ் வாராய்ச்சியினின்றும் விஞ்ஞானக் கலைகள் பிறத்தல் கண்கூடு.*

*உயிர் நுண்ணியதாயினும், அதன் உண்மையை உலகைக் கொண்டும் - உடலைக் கொண்டும் - வேறு பல ஏதுக்களைக் கொண்டும் நிறுவலாம். ஆதலால், உயிரும் ஆராய்ச்சிக்கு ஒரோ வழி எட்டுவதாகும்.*

*இறையை ஆராய ஆராய அஃது ஆராய்ச்சிக்கு எட்டாது கடந்து கொண்டே போகும். அஃது எல்லையின்றிக் கடந்து கொண்டே போகும். இறை எல்லையற்றதன்றோ? அகண்டமான தன்றோ?*

*எல்லையற்ற ஒன்றை, எல்லையுள் நிற்போர் எப்படி ஆராய்வது? அகண்டத்துக்கு அகலமேது? நீளமேது? வடக்கு - தெற்கு ஏது? கிழக்கு - மேற்கு ஏது?*

*கருவி கரணங் கடந்த ஒன்றைக் கருவி கரணமுடையார் அளந்து காண்டல் எளிதோ?*

*மரக்கால் ஆழாக்கில் அடங்குவதில்லை. கடல் கேணியில் அடங்குவதில்லை.*

*கருவி கரணங் கடந்து, குருநாதன் அருளால் அறிவுக்கு அறிவாய் நிற்கும் பேறுபெற்று, இறை நுட்பத்தைத் தெளிந் தோரும், இறையின் அளக்கப்படாத தன்மையைப் பலபட உலகுக்கு அருளியுள்ளார். அவற்றுள் சில வருமாறு:-*

[1]***'ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்***
***சோதிக்க வேண்டாஞ் சுடர்விட்டுளன் எங்கள் சோதி'***

[2]***'நற்பதத்தார்.......***
***சொலற்கரிய சூழலாய் இதுஉன் தன்மை'***

[3]***'சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க***
***சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க.***

[3]***'உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்***
***கண்முதற் புலனாற் காட்சியும் இல்லோன்'***

[4]***'இன்றெனக்கு.... யாருன்னை அறிய கிற்பாரே'***

[4]***'பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்***
***போதார் புனைமுடியும் எல்லாப் பொருண் முடிவே'***

[4]***'கீத மினிய குயிலே கேட்டியே லெங்கள் பெருமான்***
***பாத மிரண்டும் வினவிற் பாதாள மேழினுக் கப்பால்***

1. ஞானசம்பந்தர், 2. அப்பர், 3. மாணிக்கவாசகர் – திருவண்டப்பகுதி; 40–41; 113–114.

4. மாணிக்கவாசகர் – திருவண்டப்பகுதி.

***சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்றதொன்மை***
***ஆதிகுண மொன்று மில்லான் அந்தமில்லான் வரக்கூவாய்'***

[1]***'யார் அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை***
***யார் அறிவார் அந்த அகலமும் நீளமும்***
***பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்***
***வேரறி யாமல் விளம்புகின் றேனே'***

[2]***'அல்லையீது அல்லையீது என மறைகளும் அன்மைச்***
***சொல்லினால் துதித்திளைக்குமிச் சுந்தரன்'***

*ஆராய்ச்சிக்குப் பொருளாகாத ஒன்றற்கு ஆராய்ச்சிக்குப் பொருளாகும் உலகும் உயிரும் உவமை யாகுங்கொல்?*

**மூன்று நிலையும் உவமையும்**

*'வாக்கு மனங் கடந்த இறைநிலை உவமை யற்றது. மற்ற இயற்கை நிலையும், குருநிலையுங் கூடவா உவமையற்றன' என்னுங் கேள்வி பிறக்கலாம். இறைவனுக்குரிய மூன்று நிலையும் உவமையற்றனவேயாம். வாக்கு மனங்கடந்த ஒன்று உவமை யற்றது என்பது மேலே காட்டப்பட்டது.*

**இயற்கை நிலை**

*இயற்கை, இறையின் உடல். இயற்கையுடலின் உயிர் இறை. உடலாகிய இயற்கை பலபல வடிவமாகக் காரியப்படுதற்கு உயிராகிய இறை துணைபுரிகிறது.*

*இயற்கை நானாவிதமாகத் தோன்றும்; நிற்கும்; ஒடுங்கும். இத் தோற்ற நிலை யொடுக்கம் உடலாகிய இயற்கைக்கே உண்டு; உயிராகிய இறைக்கு இல்லை.*

[3]***'நுரையுந் திரையும் நொட்புறு கொட்பும்***
***வரையில் சீகர வாரியுங் குரைகடற்***
***பெருத்துஞ் சிறுத்தும் பிறங்குவ தோன்றி***
***எண்ணில வாகி யிருங்கடல் அடங்கும்***
***தன்மை போலச் சராசரம் அனைத்தும்***
***நின்னிடைத் தோன்றி நின்னிடை யடங்குமநீ***
***ஒன்றினுந் தோன்றாய் ஒன்றினும் அடங்காய்***
***வானோர்க் கரியாய் மறைகளுக் கெட்டாய்'***

*எனவரூஉம் பட்டினத்தாரது அநுபவ மொழியை ஓர்க. மாறுதல், உடலாகிய இயற்கைக்கே உண்டு என்பதும், உயிராகிய இறைக்கு இல்லை என்பதும் ஈண்டுச் சிறப்பாகக் கருதற்பாலன.*

---

1. திருமூலர், 2. பரஞ்சோதி முனிவர் – திருவிளையாடல் : 29.
3. பட்டினத்தார் – கோயில் நான்மணிமாலை : 24.

தோற்ற ஒடுக்கமில்லாத ஒன்றற்கு உவமை சொல்ல அத் தோற்ற ஒடுக்கமில்லாதனவல்லவோ வேண்டும்? அவ்வியல்பு டையன உண்டோ? இல்லை. அவ்வியல்புடையது ஒன்றே. அஃது இறை. அதற்கு எதை உவமையாகக் கூறுவது?

### குருநிலை

இறையின் குருநிலை, வாழ்த்து வணக்கத்துக்குப் பெரிதும் உரியதாய்ப் பயன்பட்டு வருதலின், அதற்காதல் எதையேனும் அல்லது எவரையேனும் உவமை கூறலாமா? அஃதும் எவ்வுவமை யிலும் அடங்காது.

குருநாதன் உடலுடையனாயினும் அவனுடலுக்கும் மற்றவருடலுக்கும் வேற்றுமையுண்டு. குருநாதன் உள்ளத் தாமரை தோற்றக்கேடில்லாத இறைவனது மூலட்டானம். அவன் உடல் அவ்விறைவனது கோயில். குருநாதன் உடல் பொன்மயமாக மிளிரும். அதற்கு அழிவில்லை.

அழுக்காறு அவா வெகுளி முதலியன நெளியும் உள்ளங் களைக் கொண்ட உடலங்கள் அழிதன்மாலையன. அழுக்காறு முதலியன தீய எண்ணங்களை எழுப்புகின்றன. அவை, நஞ்சாகிக் குருதியில் - நரம்புகளில் - என்புத்துளைகளில் - பாய்ந்து, மயிர்க்கால்தொறுங் கசிகின்றன; கொலைப் பூச்சிகளை ஈனுகின்றன; நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காட்டை விளைக் கின்றன. தீய எண்ணங்கள் இவ்வாறு உடலை அரித்து அரித்துக் கேடு சூழ்தலால், பிறப்பிறப்புத் துன்பங்கள் வளர்ந்து கொண்டே போகின்றன.

குருநாதன் உள்ளத் தாமரையில் இறையுண்மை விளங்கித் தோன்றலால், அங்கே அன்பு, அருள், பொறுமை முதலிய நல்லியல்புகள் எழுகின்றன. அவை அமிழ்தாகிக் குருதி, நாடி, நரம்பு, என்புத்துளை முதலியவற்றிற் பாய்ந்து, மயிர்க் கால்களில் தேங்கி நிற்கும். அதனால் உடலுக்கு, நரை - திரை - பிணி - மூப்பு - சாக்காடு - நேர்வதில்லை. (பக்கம் 75 பார்க்க.)

**'உவாக்கட னள்ளுநீ ருள்ளகந் ததும்ப**
**வாக்கிறந்து அமுத மயிர்க்கால் தோறுந்**
**தேக்கிடச் செய்தனன் கொடியே னூன்றழை**
**குரம்பை தோறு நாயுட லகத்தே**
**குரம்பைகொண் டின்றேன் பாய்த்தி நிரம்பிய**
**அற்புத மான அமுத தாரைகள்**
**எற்புத் துளைதொறு மேற்றின னுருகுவ**
**துள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்**

***கள்ளு றாக்கை யமைத்தன னொள்ளிய***
***கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை***
***என்னையும் இருப்ப தாக்கினன் என்னிற்***
***கருணை வான்றேன் கலக்க***
***அருளொடு பராவமு தாக்கினன்'***

என்று மாணிக்கவாசகர் திருவண்டப் பகுதியில் விளக்கி யிருத்தல் காண்க. இதனை,

***'உருவண்டப் பெருமறையென் றுலகமெலாம் புகழ்கின்ற***
***திருவண்டப் பகுதியெனுந் திருவகவல் வாய்மலர்ந்த***
***குருவென்றப் பெருந்தவருங் கூறுகின்ற கோவேநீ***
***இருவென்ற தனியகவல் எண்ணமெனக் கியம்புதியே'***

என்று இராமலிங்க சுவாமிகளும் வியந்து போற்றியுள்ளனர்.

குருநாதன், பசி, நீர்வேட்கை, அச்சம், சினம், அவா, மயக்கம், நினைப்பு, மறப்பு, வியர்வை, களைப்பு, மதம், மோகம், பகைமை, உறக்கம், துக்கம், பிணி, மூப்பு, இறப்பு, பிறப்பு முதலிய குற்றங்களைக் கடந்து நிற்பவன். இக்குற்றங்கள் குருநாதனை அணுகவும் அணுகா.

இறையுளங் கொண்ட குருநாதனிடம் இன்னோரன்ன இயற்கை கடந்த குணங்களிருக்கின்றன. இத்தகைய இறையின் குருநிலைக்கு எதை அல்லது எவரை உவமையாகக் கொள்வது? உவமை காணோம்.

**தன் பெருமை உணராமை**

தனக்கு உவமை இல்லாதானிடத்து வேண்டுதலும் இராது; வேண்டாமையும் இராது. 'வேண்டுதல் வேண்டாமை' இல்லா தானிடத்துத் தற்பெருமை நாட்டம் எழாது. தற்பெருமை, பிறர் பெருமையைக் காணும்போது எழும் பொறா மையினின்றும் பிறப்பது. பொறாமை இல்லாத இடத்தில் தற்பெருமை எழாது. பொறமைக்கு அடிப்படை அறியாமைச் செருக்கு. அறியாமை யினின்றும் பிறப்பன வேண்டுதல் வேண்டாமை என்பது முற்பாட்டில் விளக்கப்பட்டது. வேண்டுதல் வேண்டாமை இல்லானே தற்பெருமை அற்றவன் என்க.

தற்பெருமை அறியாமையின் விளைவாதலான் அதற்குக் கட்டு உண்டு; எல்லை உண்டு. தற்பெருமையற்ற நிலை கட்டற்றது; எல்லையற்றது. இறைவன் 'வேண்டுதல் வேண்டாமை' இல்லாத வனாதலின், அவன்பால் தற்பெருமை எழுதற்கே இடமில்லை. தற்பெருமையற்ற இறைவன் கட்டும் எல்லையும் அற்றவனாத

லின், அவன் தனக்குவமை யில்லாத தனியனா யிருக்கிறான். அவனே பெரியன்.

உற்றுஉற்று நோக்கினால் இறைவன் ஒருவனே பெரியன் என்பது நனி விளங்கும். என்னை? இறைவன் தற்பெருமை யற்றவனாதலின் என்க. இறைவன் ஒருவனே பெரியன் என்பதை நபிகள் நாயகம் நன்கு அறிவுறுத்தியுள்ளனர். 'இறைவனே பெரியன்'.

இறைவனிலும் பெருமையுடையார் ஒருவருமில்லை. இறைவன் முற்றறிவால் - கறையற்ற முழு அன்பால் - எல்லா உலகங்களையும், உயிர்களையும் இயக்கி வருகிறான். அவன் தொண்டுக்கு ஒப்பானதும், உயர்வானதுமில்லை. ஒப்புயர்வற்ற தொண்டு செய்யும் ஒருவனே எல்லாப் பெருமையுமுடையவன். அவன் பெருமைக்குமேல் பெருமை யின்மையால் அவனிடம் தற்பெருமை எப்படி எழும்? அவனுக்குத் தன் பெருமையே விளங்காது. 'தன்பெருமை தானறியாத் தன்மையன் காண சாழலோ' என்றார் மாணிக்கவாசகனார்.

தன்பெருமை யுணரா ஒருவன் உவமையுடையவனா யிருப்பானா? உவமையில்லாதவனா யிருப்பானா? தன்பெருமை யுணரா ஒருவனே உவமை இல்லாதவன் என்க.

இன்ன பலவற்றை உளங்கொண்டே ஆசிரியர், 'தனக்கு உவமை இல்லாதான்' என்று அருளினர்.

இறைவனுக்கு உவமை உலகினுமில்லை; உயிரினுமில்லை. இறைவன் உவமை யில்லாதவன் என்பதைப் பல பெரியோர் பலவாறு விளக்கிச் சென்றனர். அவருள் குறிக்கத்தக்கவர் சிலர். இறைவன் சொல்லொணாதவனாதலால், அவன் உவமை யில்லாதவன் என்பதை ஆலமர் செல்வனும், அரசமர் செல்வனும் மோனத்தால் உணர்த்தினர். அந்நிலையைப் போதனையினாலும், சாதனையினாலும் விளங்கச் செய்தவர் கிறிஸ்து பெருமானும், நபிகள் நாயகமுமாவர். இறைக்கு ஒப் பாகவோ உயர்வாகவோ, ஒன்றையும் ஒருவரையும் நினைத்தலுங் கூடாது.

### தாள் சேர்ந்தார்க்கு அல்லால்

'தனக்கு உவமையில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்' என்பது, சேரத்தக்கது இறைவன் தாளே என்னும் உண்மையை உணர்த்துவது. மற்றவர் தாளைச் சேர்ந்தால் என்ன? மனக் கவலை மாறாது. மனக் கலையை மாற்றும் ஆற்றல் உவமை யில்லாத ஒருவன் தாளுக்கே உண்டு. 'சேர்தல்' என்னுஞ்

சொற்பொருள் விளக்கத்தை மேற்பாட்டிற் பார்க்க. 'அல்லால்' என்பது தாளைச் சேர்ந்தே தீரல் வேண்டும் என்னும் ஆணையை உளங்கொண்டது.

**மனக் கவலை மாற்றல் அரிது**

மனம் எது? அஃதொரு பொருளா? அன்றா? இஃதொரு பெரிய வாதம். மனத்தைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் வளர்ந்து கொண்டே போகிறது. மனத்தின் இயலை நன்கு தெரிந்தோர் கவலையற்றிருக்கும் வழியை எளிதில் உணர்வர் என்பதில் ஐய மில்லை. மனத்தைச் செலுத்தும் வழி அவர்க்கு நன்கு புலனாகும். மனத்தின் இயலை உணர்தற்கு முயற்சி வேண்டற்பாலது. முயற்சி, வழியைப் புலப்படுத்தும்.

**மன இயல்**

அகத்திணை என்றும், புறத்திணை என்றும் நந்தமிழ் நூல் களில் சொல்லப்பட்டிருக்கின்றன. திணை என்பது ஒழுக்கம். (அகவொழுக்கம் - அகத்திணை; புறவொழுக்கம் - புறத்திணை). அகத்திணை நூல்களில் மன இயல்களின் கூறுபாடுகளைக் காணலாம். அகநானூறும் கலித்தொகையும் திருக்கோவை யாரும் அகநூல்களிற் சிறந்தன.

நமது நாட்டில் நாளடைவில் அகநூல் வளங் குன்ற லாயிற்று. அகநூல் மொழிப்புலமைக்கே பெரிதும் பயன் படுத்தப்பட்டது. மொழிவளம் நூலின் ஒரு சிறு கூறு. நூலின் உயிர் மன இயல். இதை முன்னியுணரும் பெற்றியை நாடு இழந்தது. இதனால் கவலை பெருகலாயிற்று. நமது நாட்டு அகநூல்கள் மனக்கவலையை மாற்றும் வழியை யுணர்த்துவன என்னும் அளவுடன் இங்கே நின்றுவிடுகிறேன். இது பற்றிக் காமத்துப் பாலுக்கு உரை காணும் வாய்ப்பு நேர்ந்துழி விளக்கஞ் செய்வன்.

மேல்நாட்டில் அகத்திணை (Psychology) ஆராய்ச்சி நாளுக்குநாள் பெருகி வருகிறது. காதல் துறை ஒன்றை மட்டும் அந்நாட்டார் ஆராய்வதில்லை. அன்னார் வேறு பல துறை களையும் அகத்திணை வழி ஆராய்கின்றனர். அவர்தம் அக ஆராய்ச்சித் திறன் புறத்தை நன்கு பயிலத் துணை செய்கிறது. அகத்திணை ஆராய்ச்சி குன்றிய இடங்களில் ஆண்மை அற்றுப் போகும்.

இந்நூலாசிரியர் அகப்புற ஆராய்ச்சியில் கைபோனவர் என்பது இவர்தம் நூலால் தெரிகிறது. திருக்குறள் ஒரு சிறந்த அகப்புற நூல். இத்தகைய நூலை ஈன்ற பெருமைவாய்ந்த

தமிழ்நாடு இந்நாளில் எந்நிலை உற்றிருக்கிறது? தற்காலத்தில் தமிழ்நாடு, திருவள்ளுவரின் சொல்லையும் சொற்றொடரையும் உருட்டிக் கொண்டிருக்கிறது. பின்னாளில் தமிழுலகில் நுழைந்த கதை நூல்கள் பலவும் போலித்துறவு நூல்கள் பலவும் நாட்டின் அகக்கண்ணைத் தூர்த்துவிட்டன. அதனால் புறக் கண்ணொளியும் மங்கலாயிற்று.

மனிதர் மனத்தால் ஆக்கப்பட்டவர். அவர் மனத்தை யன்றோ பயிலுதல் வேண்டும்? மனத்தைப் பயிலப் பயில அவர் தம்மையும் உணர்வர்; தம்மைச் சூழ்ந்துள்ள உலகையும் உணர்வர். இவ்வுணர்ச்சி கவலையறுக்குங் கருவியாகும்.

மனம் பொருளாகும் நிலையும் உண்டு; பொருளாகா நிலையும் உண்டு. அது பொருளாகா நிலையில் அதைப்பற்றிய பேச்சே எழாது. மனம் அறிவுக்கும், பொறிபுலனுக்கும் இடையில் நிற்பது. மனம், புலனாய், பொறியாய், உறுப்பாய், உடலாய், உலகாய்க் காட்சியளிப்பது. அண்ட பிண்டங்களெல்லாம் மனமேயாகும். எண்ணமே எல்லாம் என்பது தத்துவம்.

ஒரு நிலையத்தை எடுத்துக் கொள்வோம். அது கல் மண் சுண்ணம் முதலியவற்றால் ஆக்கப்பட்டது என்று சொல்லப்படு கிறது. நிலையம் அழிந்தால் கல் மண் சுண்ணம் முதலியனவே காணப்படுகின்றன: அதனால் நிலையத்தைக் காணோம். கல் மண் சுண்ணம் மட்டுமா நிலையம்?

கல்லுக்குக் கல்லென்று பெயர்; மண்ணுக்கு மண்ணென்று பெயர்; சுண்ணத்துக்குச் சுண்ணம் என்று பெயர். இவற்றால் ஆக்கப்பட்ட ஒன்று, நிலையம் என்னும் புதுப் பெயரால் அழைக்கப்படுகிறது. நிலையம் எது? கல்லா? மண்ணா? சுண்ணமா? பிறவா? இவைமட்டுமல்ல. பின்னை என்னை? நிலையம் எழுப்பப்படுதற்கு முன்னர், 'இவ்வண்ணம் நிலையம் எழுப்பப்பெறல் வேண்டும்' என்று சிற்பன் மனத்தில் ஓர் உருவம் முகிழ்க்கிறது. அந்நுண்ணிய உருவம் கல் மண் சுண்ணம் முதலிய கருவிகளின் துணை கொண்டு ஒரு நிலையமாகக் காட்சியளிக் கிறது. ஆகவே, நிலையத்துக்குப் பிறப்பிடம் மனமாதல் காண்க. பிறவற்றையும் இவ்வாறே கொள்க.

உலகிலுள்ள எப்பொருளை ஆராய்ந்தாலும், அது மனத்தி னின்றும் அரும்பி முகிழ்ப்பதென்பது நன்கு புலனாகும். பொருள்களுக்கும், அவைகளைத் தாங்கும் உலகுக்கும், எல்லா வற்றையும் உணர்தற்குக் கருவி கரணங்களாக உள்ளனவற்றிற்கும் மூலமாயிருப்பது மனமே. இயற்கை - செயற்கை யுலகங்க

ளெல்லாம் மனத்தினின்றுமே பிறக்கின்றன என்று சுருங்கச் சொல்லலாம். மனமிறந்தால் இவை யாவும் மறையும்.

மனத்தின் மூலத்தை ஈண்டு ஆராய வேண்டுவதில்லை. இடம் நேர்ந்துழி அதை ஆராய்வோம். ஈண்டு மனத்தளவில் நிற்பது சாலும்.

**கவலை**

மனத்துக்கு இருமுகம் உண்டு. ஒன்று புறமுகம் அல்லது மேன்முகம்; இம்மனம் நினைப்பு மறப்பு உடையது. இன் னொன்று அகமுகம் அல்லது கீழ்முகம்; இம்மனம் நினைப்பு மறப்பு அற்றது.

மனம் உடுக்கை போன்றது. உடுக்கையைத் தலைகீழாகப் பிடித்தால் அஃது எப்படி யிருக்குமோ அப்படியிருப்பது மனம்.

மனத்தின் மேல்நோக்கில் எல்லா உலகமுந் தோன்றும்; அதன் கீழ்நோக்கில் எல்லாம் மறையும். கீழ்நோக்கில் மனம் ஒடுங்கிச் செயலற்று அறிவின்வாய்ப்படுகிறது. அப்பொழுது மனோ விகாரத்துக்கு இடமில்லை. இதுவே நினைப்பு மறப்பு அற்ற நிலை.

மனத்தின் மேல்நோக்கில் எல்லாம் தோன்றலால், அத் தோற்றத்தினின்றும் நினைப்பு மறப்பு வழியே சுகதுக்கங்கள் பிறக்கின்றன. அவைகளால் கவலை யுண்டாகிறது. 'இன்ப முண்டேல் துன்பமுண்டு ஏழைமனை வாழ்க்கை' என்றார் வன் தொண்டர்.

கவலையற்றால் எல்லாத் துன்பங்களும் அறுதல் ஒருதலை. கவலை பிறக்குமிடம் மனமாதலால், 'மனக்கவலை' என்றார் ஆசிரியர். மனத்துக்குங் கவலைக்குந் தொடர்புண்டு.

[1]***'அவலக் கவலை கையா றழுங்கல்***
***தவலா உள்ளந் தன்பா லுடையது***
***மக்கள் யாக்கை * * *'***

மனோ விகாரத்தால் கவலை பிறக்கிறது. கவலையால் நரை திரை பிணி முப்பு சாக்காடு முதலிய துன்பங்கள் தோன்று கின்றன. மூலமாகிய மனமிறந்தால் எல்லாம் இறந்துபடும்.

[2]***'இறப்பும் பிறப்பும் பொருந்த***
***எனக்கெவ்வண்ணம் வந்ததென் றண்ணியான் பார்க்கில்***
***மறப்பும் நினைப்புமாய் நின்ற***
***வஞ்ச மாயா மனத்தால் வளர்ந்தது தோழி.'***

1. மணிமேகலை : 4 : 119 – 20 2. தாயுமானார்.

## மாற்றல்

*மனம், கீழ் நோக்கித் தனக்கு அடிப்படையாயுள்ள ஒன்றில் ஒன்றாது, மேல் நோக்கித் தன்னிடத்திருந்து விரியும் புலன் பொறி உலகம் முதலியவற்றில் உழன்று கொண்டிருக்கு மட்டும், கவலை பெரிதாகி நோய் செய்து கொண்டிருக்கும். கவலையால் உடல் நலமுங் கெடும்; உயிர் நலமுங் கெடும். கவலையை மாற்றுதல் வேண்டும். எப்படி?*

*கவலைக்கிடமாயுள்ள மனத்தைப் பண்படுத்தல் வேண்டும். மனம் கவலை வழியில் ஓடி ஓடி உழன்று கவலை மயமாகியிருக்கிறது. அதைக் கீழ்முகத்தில் திருப்ப முயல்வது சிறப்பு. அஃது எளிதில் திரும்புமா? அதன் வழியே சென்று அதைத் திருப்ப முயல்வது நன்முறை.*

*முரட்டுக் குதிரை நேரிய வழியில் போகாது குறுக்கு வழியில் பாயும்போது, அதைச் செலுத்துவோன் என்செய்கிறான்? அவன் அதை மருட்டுகிறானில்லை; அதைத் தட்டிக் கொடுக்கிறான்; அதன் வழியாகவுஞ் சிறிது செல்கிறான்; பின்னே தன் வழியே அதைச் செலுத்திப் பார்க்கிறான். இவ்வாறு அவன் குதிரையைப் பண்படுத்திப் பண்படுத்தித் தன் வயப்படுத்துகிறான். நாளடைவில் குதிரை தானே நேரிய வழியில் செல்வதாகும். மனத்தையும் இவ்வாறு பண்படுத்துவது முறை. சில ஞானிகள் மனத்தை முன்னிலைப்படுத்தி, அதை வேண்டுதல் செய்யுமாபோலப் பாடல்கள் அருளியுள்ளது ஈண்டுக் கருதற்பாலது.*

*மனம் நல்லதே. ஆனால் அது மேல்நோக்கும்போது சஞ்சலம் விளைகிறது. 'பொன்போன்ற என்மனம் சஞ்சலத்தால் குரங்காம்' என்றார் பெரியோர்.*

*மனத்தைக் கீழ் முகத்தில் திருப்பிப் பண்படுத்து முறைகள் பலபடக் கிடக்கின்றன. அவற்றுள் சிறந்தது, அதை இறைவன் தாளில் சேர்க்க முயல்வது. இம்முயற்சி நாளடைவில் மனக் கவலையை மாற்றி நலஞ்செய்யும்.*

## அரிது

*அரிது - இல்லை; " 'உறற்பால, தீண்டா விடுதல் அரிது' என்றாற்போல ஈண்டு அருமை இன்மைமேல் நின்றது"- இது பரிமேலழகர் குறிப்புரை.*

*'......தாள் சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது' என்றார். இது, மனக்கவலையை மாற்றவல்ல மருந்து இறைவன் தாள் ஒன்றே என்பதை வலியுறுத்துவது. இறைவன் தாளைச்*

சேர்ந்தால் மனக்கவலை எளிதில் மாறும் என்று சொல்வதைப் பார்க்கிலும், இறைவன் தாளைச் சேராதொழிந்தால் மனக் கவலை மாறுதல் அரிது என்று சொல்வது பொருட் செறிவுடை யதாகும். அருமைப்பாட்டை உணர்த்தினால் கவலை தீர்க்க மனம் விரைந்தெழும். அதற்குரிய உணர்வும் ஊக்கமும் பிறக்கும். இதுபற்றியே 'அரிது' என்றார்.

இறைவன் வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன்; தனக்குவமை இல்லாதவன். இவ்வியல்புடைய இறைவனுக்குக் கவலை ஏது? வேண்டுதல் வேண்டாமையும், உவமையும் இல்லாத இறைவன் தாளை மனம் சேரச் சேரக் கவலை அறுந்து கொண்டே போகும். மனக்கவலைக்கு மருந்து இறைவன் திருத் தாளே யாகும். 'தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால் - மனக்கவலை மாற்றல் அரிது' என்பது, தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்து மனக்கவலையை மாற்றுக என்று அறிவுறுத்துவதாகும்.

***[1]'ஈடுமெடுப்புமிலீசன்'***
***[2]'மைப்படிந்த * ** ** ஒருவமனில்லி'***
***[3]'அருகனீ* **ஒருவனாயினை ஒப்பவ ரின்மையால்'***
***[4]'பூரணை * **இணையாரு மில்லாப் பெரியோர்க்கு'*** (7)

**8**

***அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்***
***பிறவாழி நீந்த லரிது.***

**பொருள்**

அற ஆழி அந்தணன் - தரும சமுத்திரமாகிய இறைவனது, தாள்சேர்ந்தார்க்கு அல்லால் - திருவடியை அடைந்தவர்க்கு அல்லாமல், பிறஆழி நீந்தல் அரிது - (மற்றவர்க்குப்) பிற கடல் களைக் கடத்தல் இயலாது.

**கருத்து**

பாவக்கடல்களைக் கடத்தற்கு இறைவன் திருவடியே துணை.

**விருத்தி**

வேண்டுதல் வேண்டாமை இல்லாத இடத்தில் அந் தண்மை சுரத்தல் இயல்பு. தனக்குவமையில்லாத இறைவன்றன்

1. நம்மாழ்வார். 2. அப்பர், 3. மேருமந்தர புராணம், 4. திருநூற்றந்தாதி,
(பா—ம்) தாள்சேர்ந்தா ரல்லர்.

அந்தண்மை அளவற்றது. அளவற்ற அந்தண்மை வாய்ந்த இறைவன், இங்கே 'அறவாழி அந்தணன்' என்று சொல்லப் பட்டான். அவன் தாளே மனக்கவலையை நீக்கி அறமல்லாத பிறவாழிகளை நீந்தத் துணைபுரிய வல்லது.

### அறஆழி அந்தணன்

அறம் - தருமம்; தீமையை அறுத்து நன்மையை விளைப்பது; மாசற்றது.

ஆழி - ஆழமுடையது; சமுத்திரம்.

அந்தணன் - அம் தணன், அம்தண்மையுடையவன், அழகிய தண்மையுடையவன், அருளாளன், அருளறமுடையோன்; இறைவன். (தண்மை - தண்ணளி; அருள்.)

அறஆழியாகிய அந்தணன் என்றோ, அறஆழி என்னும் அந்தணன் என்றோ கொள்க.

### அறம்

'அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் - இழுக்கா வியன்ற தறம்' என்றும், 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம்' என்றும் ஆசிரியரே 'அறன் வலியுறுத்த'லில் அறத்தின் இயல்பை விளக்கியிருத்தல் காண்க.

மாசற்ற ஒன்றே அறம் என்பது ஆசிரியர் கருத்து. 'இறை மாசற்ற ஒன்று' என்று மேலோர் பலருங் கூறியுள்ளனர். ஆகவே, அறமும் இறையும் ஒன்றெனக்கொள்க.

மாசில்லாதது தூய்மை; தூய்மையே அறம்; அறமே இறை.

[1]***'நன்றுடையானைத் தீயதில்லானை'***

[2]***'அறமே மறங்கள் * * * *அறமே சிவனுக்கொருவடிவம்'***

[3]***'அறத்தகை முதல்வன்'***

[3]***'முரணாத் திருவற மூர்த்தியை'***

[4]***'என்பி லதனை வெயில்போலக் காயுமே***
***அன்பி லதனை அறம்'***

### ஆழி

ஆழமுடையது ஆழி. ஈண்டு ஆழி என்றது அளவற்ற ஆழமுடைய ஒன்றைக் குறிப்பது.

அளவுள்ள ஆழமுடையது சமுத்திரம்; அளவற்ற ஆழமுடையது இறை.

---

1. ஞானசம்பந்தர், 2. காஞ்சிப் புராணம், 3. மணிமேகலை : 29 : 120; 20 : 6.
4. குறள்.

சமுத்திரத்தின் ஆழத்தை அளவிடுதல் கூடும். இக்காலக் கணக்கர் சமுத்திரத்தின் ஆழத்தை அளவிட்டுக் கூறுதல் கண்கூடு. இந்நாளில் ஆராய்ச்சியின் பொருட்டுக் கருவிகளால் சமுத்திரத்தின் அடியிலுள்ள உயிர்கள் பிடிக்கப்படுகின்றன; மணல்கள் எடுக்கப்படுகின்றன; பிறவுஞ் செய்யப்படுகின்றன.

இறையின் அகலம் நீளம் உயர்வு ஆழம் முதலியவற்றை அளந்து கூறல் அரிது. இறை எல்லையற்ற ஒன்று. எல்லையற்ற ஒன்று அளவுக்கு எட்டுங்கொல்?

இறை உவமையற்றது; அதாவது எல்லையற்றது. எல்லையற்ற ஒன்றை எல்லையுற்ற பொருள்களில் மிகப் பெரிய ஒன்றைக் குறித்து உணர்த்துவது தொன்றுதொட்ட வழக்கு. அப்பொழுதே எல்லையற்ற ஒன்றை உயிர்கள் மனத்திற் பற்றி ஒருவாறாதல் நினைத்தல் கூடும்.

உலகில் ஆழமுடையது எது? கடல். கடலினும் ஆழமுடையது இறை. அஃது அடியுடையது; இஃது அடியற்றது. அடியற்ற ஆழமுடைய ஒன்றை உலகுக்கு எப்படி உணர்த்துவது? அதை உலகில் ஆழமுடைமையில் ஈடும் எடுப்பும் அற்ற ஒன்றைச் சுட்டி உணர்த்தினால், அதன் மாண்பு ஒருவாறு புலனாகும். இதுபற்றியே 'ஆழி' என்னுஞ் சொல் ஆளப்பட்டது போலும்.

**அறவாழி**

அறவாழி - கடவுளுக்குரிய பெயர்களுள் ஒன்று; அறத்தில் ஆழமுடையது என்பது பொருள். கடவுளை அருளாழி என்றும், கருணைக்கடல் என்றும், கிருபாசமுத்திரம் என்றும் சொல்வது மரபு. இஃது இறைவனது அருளின் - கருணையின் - கிருபையின் - அளவற்ற ஆழத்தை உணர்த்துவது; எல்லையுடைய நீர்க்கடலை உணர்த்துவதன்று.

முழு அருள், மருண் மாசு கலப்பற்ற அறம். இதனால் அறத்தை அருளறம் (தயா தருமம்) என்று அறத்திறனுணர்ந்த ஆன்றோர் கூறிச்சென்றனர்.

***'அருளறம் பூண்ட ஒருபே ரின்பத்து'***
***'அந்நாட் பிறந்தவர் அருளறங் கேட்டார்'***
***'அருளறம் பூண்டங் காருயி ரோம்புவர்'***
***'அருளற மொழியாய்'***

எனவரூஉம் ஆட்சிகளை நோக்குக. (மணிமேகலை)

**அந்தணன்**

முழு அருளறமுடையவன் இறைவன் ஒருவனே. அதனால் அவன் அந்தணன் என்று போற்றப்படுகிறான்.

[1] 'இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்': இங்கே 'அந்தணன்' என்பதற்கு 'இறைவன்' என்று ஆசிரியர் நச்சினார்க் கினியர் பொருள் கண்டிருத்தலை ஓர்க.

இறைவன் முழு அருளறமுடையவனாதலின், அவன் 'அறவாழி அந்தணன்' என்னப்பட்டான். இறைவன் அருளறத்தில் ஆழியாயுள்ளவன் என்பது கருத்து.

### இறையும் கடலும்

ஆறு ஏரி முதலியன ஒருபோது வற்றுந் தன்மையன; கடலோ வற்றாக் தன்மையுடையது. கடல்நீர் வற்றினால் உலக இருப்புக்கு இடம் எது?

கடலிடைப் புதுநிலப் பரப்பு எழுவதுண்டு. அப் பரப்பள வில் நீர் வேறொரிடம் புகும். நீர் அறவே வற்றாது. வற்றாமையு டையது கடல். (இந்து மகா சமுத்திரத்தின் பெரும் பகுதி நிலமா யிருந்த காலம் உண்டு. வடஆப்பிரிக்கா வனாந்திரம் கடலா யிருந்த காலமும் உண்டு. இமயம் கடலிடைக் கிடந்த காலமும் இந்நாளில் குறிக்கப்படுகிறது).

அளவுடைய கடல் நீருக்கே வற்றுதல் இல்லை எனில், அளவில்லாக் கடலாகிய இறைவனது அருளறத்துக்கு வற்றுத லிருக்குமோ? இறைவன் என்றும் வற்றாத அறவாழி என்க. அவ்வாழி நீராழியினும் பெரியது; ஆழமுடையது.

இவ்வுலகிலும், மற்ற உலகங்களிலும் வாழும் உயிர்களின் தொகை எண்ணற்றது. அவ்வுயிர் ஒவ்வொன்றினும் உயிராக நின்று ஈசன் அருள் சுரக்கிறான். அவ்வருள் எல்லையுடையதா குமோ? அதன் ஆழத்தை அளந்து கூறல் எவரால் இயலும்? அதை அளக்க அளக்க அஃது ஆழ்ந்து ஆழ்ந்து கொண்டே போகும்; எல்லையின்றி ஆழ்ந்து கொண்டே போகும். அதன் ஆழங் காண்டல் அரிது. இவ்வியல்புடைய இறைவனை, 'அறவாழி' என்று கூறாது, வேறென்னென்று கூறுவது? இறைவன் 'அறவாழி' யாதலின், அவன் வரையாதருளும் 'அந்தணன்' என்று போற்றப்படுகிறான்.

### வேறு பொருள்

அறவாழி என்பதற்குத் தரும சக்கரம் என்றும் பொருள் கூறலாம். அறம் - தருமம்; ஆழி - சக்கரம், வட்டம்.

தருமம் எல்லார்க்கும் பொது. அஃது ஒரு சார்பில் ஒரு விதமாகவும், மற்றொரு சார்பில் மற்றொரு விதமாகவும் பயன்

1. கலித்தொகை : 38 : 1..

படுவதன்று. எல்லார்க்கும் பொதுமையில் பயன்படும் ஒன்றைச் 'சக்கரம்' என்று உருவகப்படுத்திச் சொல்வது மரபு. இதனால் தருமம், தரும சக்கரம் என்று வழங்கப்படுகிறது போலும்.

தரும சக்கரத்தைப் பொதுமைப்பட உருட்டுவோன் அருளறமுடையவனாயிருத்தல் வேண்டும்; இல்லையேல் தரும சக்கரத்தை உருட்டுவதில் காய்தல் உவத்தல் நேரும். தரும சக்கரம் காய்தல் உவத்தலைக் கடந்தது.

முழு அருளறமுடையவன் இறைவன் ஒருவனே யாதலின், அவன் உருட்டும் அறவாழி ஞாயிற்றொளிபோல் எல்லார்க்கும் பொதுவாகப் பயன்படுவதாகும். அவ்வறவாழியை இறைவன் தாங்கி நிற்றலான், அவன் அந்தணன் என்று ஓதப்படுகிறான்.

[1]*'களிசேர் கணையுடை காமனையுங் காய்ந்த*
*அளிசே ரறவாழி அண்ணல் இவனென்ப'*

[1]*'உலக மூன்றும் உடையோய்நீ * s* * **
*கொலையி லாழி வலனுயர்த்த குளிர்முக் குடையின் நிழலோய்நீ'*

[2]*'அறக்கதி ராழி திறப்பட உருட்டிக்*
*காமற் கடந்த வாமன் பாரம்'*

[2]*'தரும சக்கரம் உருட்டினன் வருவோன்'*
[2]*'ஆதி முதல்வன் அறவாழி யான்வோன்*
*பாத பீடிகை பணிந்தனள்'*

[3]*'அருளோ டெழும் அறவாழியப்பா'*
[3]*'ஆண்டுகொண்டா யறவாழிகொண்டே*
*வென்ற அந்தணனே'*

**அந்தணர்**

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தோரும் அந்தணரே யாவர்; அருளாளராவர் என்றபடி. 'அந்தண ரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் - செந்தண்மை பூண்டொழு கலான்' என்றார் ஆசிரியரும். அறவாழி அந்தணனைச் சேராதர் வன்கண்ணராவர்.

**தாள் சேர்ந்தார்க் கல்லால்**

தாள் சேர்தலைப் பற்றிப் பலதிறக் குறிப்புக்கள் மேற்பாக் களில்பொறிக்கப்பட்டன.'அறவாழி அந்தணன்தாள்' திருவருளுக்கு அறிகுறி. திருவருளாகிய தாளை நினைக்கும் வகைகள் பல உண்டு.

1. சிந்தாமணி. 2. மணிமேகலை : 5 : 76 ; 10 : 26; 6:11–2. 3. திருநூற்றந்தாதி : 5, 27.

*மனம் உள்ளவரை உருவங் கடந்த ஒன்றை நினைத்தல் இயலாது. உருவம் என்று, காலம் முழுவதும் ஏதேனும் ஒரு செயற்கைக் குறியையே நினைந்து கொண்டிருத்தலுந் தவறு. செயற்கைக் குறியை இயற்கை வழியில் பெருக்கிக் கொண்டு தியானப் பயிற்சி செய்வது அருட்பேற்றுக்கு வழி காண்பதாகும். செயற்கைச் சிறு குறியினின்றும், பரந்து விரிந்த மரம் காடு மலை ஆறு கடல் முதலியவற்றை நினைக்கும் பயிற்சி பெறுதல் வேண்டும். இப் பயிற்சி அந்தண்மையை வளர்த்துக் கொண்டே போகும்.*

*அழகிய காட்சி வழங்கும் இயற்கைக் கூறுகளுள் ஆழியும் ஒன்று. ஆழியை நினைப்பதும் இயற்கை இறையை வழிபடும் துறைகளில் ஒன்றாகும். நீராழி நினைப்பும் அளவற்ற அந்தண்மைக்கு வழிகாட்டும். இயற்கை நீராழி வழிபாட்டின் சிறப்பை உணர்த்த வேண்டி, 'ஆழி' என்னுஞ் சொல் பெய்யப் பட்டதென்க.*

*'அல்லல்' என்பது தாளைச் சேர்தலின் இன்றியமையா மையை அறிவுறுத்துவது.*

**பிற ஆழி நீந்தல் அரிது**

*பிற - அறத்துக்கு வேறாகிய பிற; மறம், பாவம்.*

*ஆழி - கடல்.*

*பிறஆழி - பிறகடல்கள்; பாவக் கடல்கள்.*

*அறத்துக்கு மாறுபட்டது மறம். மறம் - நன்மையை மறுத்துத் தீமையை விளைப்பது; பாவம்.*

*'மறத்துறை நீங்குமின் வல்வினை யூட்டுமென்று - அறத் துறை மாக்கள் திறத்திற் சாற்றி' - சிலப்பதிகாரம்: 14 : 27 - 8. (மறம் - அகிதம்; அறம் - இதம் - அடியார்க்கு நல்லார்).*

*'அறந்தரு சால்பும் மறந்தரு துன்பமும்' - மணிமேகலை: 21 : 20.*

**பிற ஆழி**

*அறம் அல்லாத பிற என்னை? மறம் அல்லது பாவம் என்று எவருங் கூறுவர். மக்கள் அறநெறி நின்றொழுக முயல்கிறார்கள். இம்முயற்சி பெரிதும் வெற்றி அளிப்பதில்லை. எவ்வழியிலாதல் பாவம் வாழ்விடைப் புகுந்துவிடுகிறது. மிகச் சிறுபாவம் வாழ் விடைப் புகினும் வாழ்வு கேடுறும். ஒரு கலப்பாலில் ஒரு சொட்டு நஞ்சு வீழினும் அக் கலப்பாலும் நஞ்சாகிறதன்றோ? சிறுபாவம் விரைந்து பரவிப் பெருகிக் கடலாகி உயிரை ஆழ்த்தும். பாவம் கடலாகி உயிரை ஆழ்த்தி வருத்தலால் அதையும் ஆசிரியர் 'ஆழி' என்றார்.*

## நீந்தல் அரிது

'ஆழி' என்றதற்கேற்ப 'நீந்தல்' என்றார். கடலில் அகப் பட்ட ஒருவன் கடலிலேயே ஆழ்ந்து சாக எண்ணுவனோ? எண்ணான். அவன் கடலைக் கடக்கவே விரைவன். கடக்கும் முயற்சி இயல்பாதலின், 'நீந்தல்' என்றார்.

கடலோரத்தில் அகப்பட்ட ஒருவன் தன் கையால் நீந்திக் கரை நண்ணுதல் கூடும். நடுக்கடலில் அழுந்தும் ஒருவனுக்குக் கை நீண்ட நேரம் துணைபுரியாது. அவனுக்கு வேறு துணை தேவை. அவனுக்கு ஒரு சிறு மரத்துண்டாவது புணையாய்த் துணை செய்தல் வேண்டும்.

பாவக் கடல்களை எப்படிக் கடப்பது? இதற்கு ஆசிரியர் குறிக்கும் புணை என்னை? அதை உறுதியாகப் பற்றினால் மறக் கடல்களெல்லாவற்றையுங் கடத்தல்கூடும்.

### பாவம்

உலகில் பாவத்தைப் பற்றிய பேச்சு அதிகம்; ஆராய்ச்சி - இவை போன்ற ஆராய்ச்சிகள் நீண்டகாலமாக நிகழ்ந்த வண்ண மிருக்கின்றன. இவ்வாராய்ச்சிகளால் விளையும் பயன் மிகமிகச் சிறியது. இவை கலைஞானிகளின் பொழுது போக்குக்கு ஒரோ வழி துணைபுரியும். ஆராய்ச்சியுடன் முயற்சியும் வேண்டும்.

பாவம் உள்ளதாயினுமாக; இல்லதாயினுமாக; ஆதியா யினுமாக; அநாதியாயினுமாக. பாவம், வாழ்வில் நிகழ்தல் உண்மை. அது நிகழ்ந்து நிகழ்ந்து பெருகுதலும் உண்மை. அதைப் பெருகாதவாறு தடுத்து, அறவே ஒழிக்க வழி தேடுவது அறிவுடைமை.

பாவத்தில் வீழ்வோர் எளிதில் எழுதல் இயலாது. பாவம் நாளுக்குநாள் வளர்ந்தே போகும் ஒரு பாவத்தினின்றும் ஓராயிரம் பாவம் பிறக்கும். அவை கடலெனப் பெருமை. அவற்றின் பெருக்கைக் குறிக்கவே 'பிறஆழி' என்றார் ஆசிரியர். பாவம் ஒரு கடலாக அன்றிப் பல கடலாகப் பெருகுந் தன்மை யுடையது என்றபடி.

மேலும் மேலும் பெருகுந் தன்மைவாய்ந்த பாவம் எங்கே முடிவடையும்? அதற்கு முடிவுண்டா? இல்லையா? முடிவுண்டா யின், அம் முடிவுகாண எவ்வழியைக் கடைப்பிடிப்பது?

### வழி

பற்றிய பாவத்தைப் பெருகவிடாது குறைக்கவும், அறவே குலைக்கவும் வழிகள் உள்ளன. வழிகள் பலபடச் சான்றோர்

களால் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றுள் அரியனவும் உண்டு; எளியனவும் உண்டு.

கடும் விரதங்கள், அருந் தவங்கள், பெருஞ் சீலங்கள், கொடும் யோகங்கள் முதலியனவும்; வீட்டைத் துறத்தல், காட்டுக்கேகல், பட்டினி கிடத்தல், உடலை வருத்தல், கனலிடை நிற்றல், புனலிடை மூழ்கல், மூக்கைப் பிடித்தல், மூச்சை அடக்கல் முதலியனவும் அரியன. இவற்றின் அருமைப்பாடுகளை இங்கே விளக்க வேண்டுவதில்லை. மனையுடன் வாழ்தல், மக்களை ஈனல், விருந்தோம்பல், தானஞ்செய்தல், சீலங்காத்தல், ஆண்டவனை வழிபடல், உயிர்கட்குத் தொண்டு செய்தல் முதலியன எளியன.

எளியனவற்றுள்ளும் எளியதொன்றிருக்கிறது. அஃது எது? அஃதே ஆசிரியர் குறிப்பது. அஃது அறவாழி அந்தணன் தாளைச் சேர்வது. சேர்தல், நினைத்தல் என்பது மேலே விளக்கப் பட்டது.

இறைவன் தாளை நினைப்பதால் பாவக்கடல்களைக் கடத்தல் கூடுமா என்று எவரும் ஐயுற வேண்டுவதில்லை; சிறிதும் ஐயுறவேண்டுவதில்லை.

மக்கள் எப்படியோ பாவத்துக்கு ஆளாகிறார்கள். அதற்கு ஆளாகும் எளிமை மக்களிடம் இருக்கிறது. எளிய மக்கள் தங்கள் வல்லமையால் மட்டும் பாவங்களினின்றும் விடுதலை யடைதல் அருமை. செய்த பாவங்களை ஒழிக்கவும், இனிப் பாவங்கள் செய்யாத ஆற்றலைப் பெறவும் தங்கள் வல்லமையைக் காட்டி லும் மேலான வல்லமையுடைய ஒருவன் துணையை நாடுதல் வேண்டும். அவன் எத்தன்மையனா யிருத்தல் வேண்டும்? அவன் பாவமே இல்லாதவனாய், இரக்கமே யுடையவனாய், முறை யீட்டுக்குச் செவிசாய்த்து எளிவந்து மன்னிப்பருள்வோனா யிருத்தல் வேண்டும். இந்நீர்மையன் எவன்? ஆண்டவன் ஒருவனே. அவன் ‘அறவாழி அந்தணன்’.

**கசிந்தழுகை**

அறவாழி அந்தணனை நினைந்து நினைந்து, செய்த பாவங்குறித்து உண்மையாக வருந்திக் கசிந்து கசிந்து உருகி உருகி அழுது நிற்பவர் மனம் மீண்டும் பாவத்தில் நாட்டஞ் செலுத்தவும் அஞ்சும். பாவத்தில் அச்சம் தோன்றப்பெற்ற மனம் மீண்டும் பாவஞ் செய்ய ஒருப்படாது. மீண்டும் பாவஞ்செய்ய ஒருப்படாத மனத்தினர் பாவக்கடலைக் கடத்தற்கு இறைவன்

*திருவடியாகிய திருவருட்டுணை என்னும் புணை வந்தே தீரும்- மக்களின் அழுகைமட்டும் உண்மையுள்ளதாயிருத்தல் வேண்டும். அழுகை உண்மையா போலியா என்பது எங்குமுள்ள ஆண்ட வனுக்குத் தெரியும். அவனை ஏமாற்றல் எவராலும் இயலாது. இறைவன் திருவடிப்புணை பாவக்கடலைக் கடத்தற்கு வேண்டற் பாலது. இதுபற்றியே, 'அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தாற் கல்லால் - பிறவாழி நீந்தல் அரிது' என்றார் ஆசிரியர். அறவாழி அந்தணன் தாளைச் சேர்ந்தோர் பிறவாழிகளை எளிதில் கடப்பர் என்றபடி.*

*பாவக்கடல்களைக் கடப்பதற்குத் துணைசெய்யும் புணை எது? அறவாழி அந்தணன் தாள்.*

*அறவாழி அந்தணன் தாளைச் சேர்ந்தோர் பாவக் கடல் களை நீந்துவர். மற்றவர் பாவக்கடல்களை நீந்த இயலாதவராய் அழுந்துவர்.*

*'பிறவாழி' என்பதற்குப் பரிமேலழகர் 'பிறவாகிய கடல் களை' என்று பொருள்கூறி, "அறம் பொரு ளின்பமென உட னெண்ணப்பட்ட மூன்றனுள் அறத்தை முன்னர்ப் பிரித்தமை யான், ஏனைப் பொருளும் இன்பமும் 'பிற' என்னப்பட்டன" என்று விரிவுரை கூறியுள்ளார்.*

*'பிறவாழி நீந்தலரிது' என்பதற்கு, 'பிறவாழியை நீந்தலா காது. அது பெறுதலரிது' என்று பொருள் கண்டு, 'இது காமமும் பொருளும் பற்றிவரும் அவலங் கெடு மென்றது' என்றொரு குறிப்பும் பொறித்தனர் மணக்குடவர்.*

**வேறு பொருள்**

*'பிறவாழி' என்பதைப் பிறவு ஆழி என்று கொண்டு, அதற்குப் 'பிறவிக்கடல்' என்று பொருள் கூறுவோருமுளர். பிறவு - பிறப்பு.*

***[1]'மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவினோ டிறவு மானான்
அருந்தவ முனிவரொ டானிழற்கீழ்
இருந்தவன் வளநக ரிடைமருதே'***

***[2]'கார்ப்படைத்த நிறத்தோனைக் கைதொழுவார்
பிறவாழிக் கரைகண் டாரே'*** (8)

1. தேவாரம். 2. பாரதம். (பா–ம்)

**9**

***பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்***
***[1]இறைவ னடிசேரா தார்.***

**பொருள்**

*இறைவன் அடி (சேர்ந்தார்) - இறைவன் திருவடியைச் சேர்ந்தவர், பிறவி பெருங்கடல் - பிறவியாகிய கரைகாணாக் கடலை, நீந்துவர் - கடப்பர், இறைவனடி சேராதார் - இறைவன் திருவடியைச் சேராதவர், நீந்தார் - (பிறவிப் பெருங்கடலைக்) கடவார்.*

**கருத்து**

*இறைவனடி சேர்ந்தோர் பிறவிக்கடலை நீந்துவர்.*

**விருத்தி**

*முன்னே 'பிறவாழி' என்றார்; இங்கே 'பிறவிப் பெருங் கடல்' என்றார். பாவத்தின் விளைவே பிறவி. பாவக்கடல்கள் (பிறவாழி) திரண்டே பிறவிப் பெருங்கடலாதலால் இங்கே 'பிறவிப் பெருங்கடல்' என்றார். இறையடிச் சேர்க்கையால் பிறவாழி நீந்தினோர் பிறவிப் பெருங்கடலில் வீழார். பிறவிப் பெருங்கடலை நீந்தினோர் பிறவாழியில் மீண்டும் வீழார்.*

*'இறைவனடி சேராது ஆர் பிறவிக்கடலை நீந்துவர்? (எவரும்) நீந்தார்' என்று கொண்டும், 'இறைவனடி சேராதார் பிறவிப் பெருங்கடல் நீந்துவரோ நீந்தார்' என்று கொண்டும் பொருள் கூறுவோருமுளர். (ஆர் - யார் என்பதன் மரூஉ. செய்யுளோசையின் பொருட்டு ஓகாரம் தொக்க தென்பர்.)*

**இறைவனடி – சேர்ந்தார் – சேராதார்**

*இறைவன் : இரண்டாம் பாட்டுக் குறிப்பைப் பார்க்க.*

*அடி - திருவடிப்புணை ; திருவருள்.*

*சேர்ந்தார் : சொல்லெச்சம் (சொற்குறைவு.)*

**சேர்ந்தார் – சேராதார்**

*'பிறவிப் பெருங்கடலை நீந்துவர்'- யார்? ('பிறவிப் பெருங் கடலை) நீந்தார்'- யார்? முன்னையதற்குப் பாட்டில் வெளிப் படையாக ஒன்றுங் காணோம். பின்னையதற்கு, 'இறைவனடி சேராதார்' என்பது விடையாக நின்று கொண்டிருக்கிறது.*

1 இறைவனடி சேரா தவர்.

*இறைவனடி சேராதார் பிறவிப் பெருங்கடலை நீந்தாரெனில், இறைவனடி சேர்ந்தார் பிறவிப் பெருங்கடலை நீந்துவர் என்பது சொல்லாமலே விளங்கும். பாட்டில் 'சேர்ந்தார்' என்னுஞ் சொல்லில்லை. 'சேராதார்' என்பதையும், 'நீந்துவர்' என்பதையும் ஊன்றி நோக்கினால் 'சேர்ந்தார்' என்னுஞ் சொல் எஞ்சி நிற்றல் விளங்கும். அச்சொல் சேர்ந்தாலன்றிப் பாட்டின் பொருள் நிறைபெறாது குறைபட்டுக் கிடக்கும். பொருள் கூறுங்கால் எஞ்சி நிற்குஞ் சொல்லை வருவித்துக் கொள்ளல் வேண்டும். அச் சொல்லை வருவித்துப் பொருள் கூறும் முறையிலேயே பாட்டின் மற்றச் சொற்கள் அமைந்துள்ளன. ஆகவே, இறைவனடி சேர்ந்தார் பிறவிப் பெருங்கடல் நீந்துவர் என்றும், இறைவனடி சேராதார் அக்கடல் நீந்தார் என்றுங் கொள்க.*

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் – நீந்தார்**

*பிறவி : பேதைமை காரணமாக வருவது.*

*பெருங்கடல் - கரைகாணாக் கடல் ; "கரைகாணாக் கடலென்பார் 'பெருங்கடல்' என்றார் "- அடியார்க்கு நல்லார் (சிலப்பதிகாரம் : 15 : 28 : உரை).*

**பிறவி**

*பிறவிகள் பலதிறத்தன. அவற்றுள் சிறந்தது மனிதப் பிறவி. என்னை? மனிதப் பிறவியில், உயிர் தன்னைப் பற்றியுள்ள பேதைமையின் இருப்பைத் தெரிதற்கும், தன்னையறிதற்கும், தனக்காதாரமாயுள்ள தலைவனை யுணர்தற்கும் உரிய கருவி கரணங்கள் வாய்த்திருத்தலின் காண்க.*

*பேதைமை காரணமாக உயிர் உடலைத் தாங்கியதும் அதற்குச் செய்கை முகிழ்க்கிறது. அச்செய்கை இறைவழி நிகழின் பிறவியொழியும். இல்லையேல் பிறவி பெருகிக் கொண்டே போகும்.*

*பிறவி பெருக நேரினும், அப்பொழுதும் என்றாதல் இறைவனடித் துணையாலேயே அப்பிறவியை யொழித்தல் வேண்டும். பிறவி நோய்க்கு உரிய மருந்து இறைவனடியன்றி வேறொன்றில்லை.*

*பிறவி எப்படிப் பெருகுகிறது? பிறவிக்கு வித்து, பேதைமை (அவிச்சை). பேதைமையிலிருந்து செய்கை (கர்மம்) பிறக்கிறது. செய்கையிலிருந்து உணர்வும் (விஞ்ஞானமும்), உணர்விலிருந்து அருவுருவமும் (ரூபாரூபமும்), அருவுருவத்திலிருந்து வாயிலும் (ஞானேந்திரியமைந்தும் மனமும்), வாயிலிலிருந்து ஊறும்*

*(ஸ்பரிஸமும்), ஊற்றிலிருந்து நுகர்வும் (சுகதுக்க அநுபவமும்), நுகர்விலிருந்து வேட்கையும், வேட்கையிலிருந்து பற்றும், பற்றிலிருந்து பவமும் (கருமத் தொகுதியும்), பவத்திலிருந்து தோற்றமும், தோற்றத்திலிருந்து வினைப்பயனும் (கர்மபலமும்) பிறக்கின்றன.*

***[1]'பேதைமை செய்கை உணர்வே அருவுரு***
***வாயி லூறே நுகர்வே வேட்கை***
***பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்***
***இற்றென வகுத்த இயல்பீ ராறும்***
***பிறந்தோர் ரறியிற் பெரும்பே றறிகுவர்***
***அறியார் அறியின் ஆழ்நர கறிகுவர்'***

*கருமத் தொகுதி, பிறவி (தோற்றம்) ஆதல் கருதற்பாலது. 'பவமெனப்படுவது கரும ஈட்டம்' 'கருமத்தொகுதி காரணமாக - வருமே ஏனை வழிமுறைத் தோற்றம்'- மணிமேகலை : 30 : 93 : 113.*

*பிறவி, காரண காரியம் ஆகி ஆகி இடையீடின்றித் தொடர்ந்து தொடர்ந்து பெருகிக் கொண்டே போகிறது. ஒரு பிறவியை எடுத்துக் கொள்வோம். அதனை ஆராய்ந்தால் அது காரண காரியமாய்த் தொடர்ந்து வருதலை உணரலாம். அது முற் பிறவியின் காரியமாகவும், வரும் பிறவிக்குக் காரணமாகவும் நிற்றல் விளங்கும். காரண காரியத் தொடர்ச்சியாவது வித்து முளை போன்றது.*

### பெருங்கடல்

*காரண காரியமாய்த் தொடர்ந்து பெருகும் பிறவியைக் கடலென்று சொல்வது மரபு. ஈண்டுக் கடல் என்றது பரப்புக்கும் ஆழத்துக்கும் அறிகுறி. கடலின் கரை காணக்கூடியது. கருமப் பிறவிப் பெருக்கோ கரை காணாதது. இரண்டுக்கும் உள்ள வேற்றுமை தோன்றவே 'பிறவிப் பெருங்கடல்' என்றார் ஆசிரியர். 'பிறவி என்னும் பெருங்கடல்' என்றார் சாத்தனாரும் (மணிமேகலை : 11 : 24).*

### நீந்துவர் - நீந்தார்

*பிறவிப் பெருங்கடலை நீந்த முயல வேண்டுமா? வேண்டாவா? துன்பத்திலுள்ளோர் அதை நீக்க முயல்வது இயற்கை; முயலாதார் துன்பத்தினின்றும் விடுதலையடையார். பிறவிப் பெருங்கடலை நீந்த முந்துவதே அறிவுடைமை.*

---

1. மணிமேகலை : 30 : 45 – 50; (105 –114 பார்க்க).

அகன்று பரந்து ஆழ்ந்து கிடக்குங் கடலில் - ஒருவர் அகப்பட நேர்ந்தால் அவர் எப்படிக் கரையேறுவர்? அவர்க் கொரு புணைத்துணை வேண்டுமன்றோ? அஃதின்றி அவரால் கரையேறுதல் இயலுங்கொல்? கரையுடைய கடலைக் கடத்தற்கே புணை வேண்டுமெனின், கரைகாணாப் பிறவிப் பெருங்கடலைக் கடத்தற்கு ஒரு புணை வேண்டுமென்று சொல்லத் தேவையில்லை. அப்புணை எது? அதுவே இறைவனடி. இறைவனடி சேர்ந்தார் நீந்துவர்; மற்றவர் நீந்தார் (நீந்தா தழுந்துவர் என்றபடி).

[1]'***தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்***
***தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்***
***கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலால்***
***கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்***
***டினியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி***
***அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை***
***முனைவனே முதலந்தம் இல்லா மல்லற்***
***கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே'***

[2]'***சொற்றுணை * * ****
***கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்***
***நற்றுணை யாவது நமச்சி வாயவே'***

[3]'***சூழ்கதிர் மதிய மன்ன சுடர்மணிப் பூணி னானும்***
***வீழ்தரு கதியி னீங்கி விளங்குபொன் னுலகத் துய்க்கும்***
***ஊழ்வினை துறத்த லானும் உணர்வுசென் றெறித்த லானும்***
***ஆழ்கடற் புணையி னன்ன அறிவரன் சரணடைந் தான்'***

[4]'***நீப்பரும் பிறவிநீர்க் கடலை நீந்துநற்***
***றேப்பையாந் திருவுரு வென்றி றைஞ்சிடா'***

எனவரூஉம் ஆன்றோர் மொழிகளை நோக்குக.

### குருநாதன் வழி

பிறவிப் பெருங்கடலில் உயிர் அமிழும் இயல்புடையது. அதற்குப் புணையாகத் துணைபுரியும் ஒன்று அக் கடலிடை அமிழாததா யிருத்தல் வேண்டும். அப்பொழுதே அஃது அமிழும் ஒன்றற்குத் துணைபுரிதல் கூடும்.

இறை, பிறவிப் பெருங்கடலில் வீழாதது; அக்கடலிடை வீழ்ந்து தவிக்கும் உயிர்களைக் கருணையினால் (திருவடியால்)

1. திருவாசகம். 2. அப்பர். 3. சிந்தாமணி. 4. மேருமந்தர புராணம் : 1201.

கரையேற்றுவது. இவ்வியல்புடைய இறையின் அடியையே பிறவிப் பெருங்கடலிடை வீழ்ந்து கிடக்கும் உயிர் பற்றுதல் வேண்டும். தன்போன்ற உயிரை அது பற்றினால் இரண்டும் அமிழ்ந்து அழிந்து போகும்.

இறை பிறப்பிறப்பில்லாதது; உருவம் முதலியன இல்லாதது. இத்தகைய ஒன்று நேரேபோந்து உயிர்கட்கு அருள்வதில்லை. ஆனால் இறை குருவாயிலாக உயிர்கட்கு அருள்புரிவது வழக்கம். ஈண்டோர் ஐயம் நிகழலாம். அது, குருநாதன் இறையைப் போலப் பிறப்பிறப் பற்றவனா என்பது.

குருநாதன் தனக்கென்று ஒன்றும் இல்லாதவன்; இறையே விளங்கப் பெற்ற உள்ள முடையவன். அவன் செயல் இறை செயலேயாகும். நாமரூப மில்லாத இறை, குருநாதன் உள்ளத்தைக் கோயிலாக்கொண்டே உயிர்கட்கு அருள்புரியும். குருநாதன் பொன்னுடல் இறைக்கு ஆலயமாக மட்டும் பயன்படும். பிறப் பிறப்பில்லா இறை யொன்றேயொளிரும் உள்ளமுடைய குரு நாதனுக்கும் பிறப்பிறப்புத் துன்பம் கிடையாது. இது பற்றியே குருநாதனை இறையாகக் கொண்டு வழிபடும் மரபுகளும் உலகில் ஏற்பட்டுள்ளன.

குருநாதனை இறைவனாகக் கொள்வது தொன்று தொட்டு வரூஉம் ஒரு பெருஞ் சம்பிரதாயம். இச் சம்பிரதாயம், இறைவனுக்குப் பிறப்புக் கூறுதற்கு இடைநாளில் துணை நிற்க நேர்ந்தமையான், இதற்கு மாறுபட்ட சம்பிரதாயமும் தோன்ற லாயிற்று. இதுபற்றி இவ் விருத்தியுரைக்கண் பல இடங்களிலும், யான் இயற்றியுள்ள வேறு நூல்களிலும் விரித்துக் கூறியுள்ளேன்.

பிறவிப் பெருங்கடலை நீந்துதற்கு இறைவனடியின் சேர்க்கை இன்றியமையாதது. அச்சேர்க்கை பெறாதார் பிறவிப் பெருங்கடலைக் கடத்தல் அரிது.

[1]***'ஆதி வேதம் பயந்தோய்நீ யலர்பெய்ம் மாரி யமைந்தோய்நீ***
***நீதி நெறியை யுணர்ந்தோய்நீ நிகரில் காட்சிக் கிறையோய்நீ***
***நாத னென்னப் படுவோய்நீ நவைசெய் பிறவிக் கடலகத்துன்***
***பாத கமலந் தொழுவேங்கள் பசையாப் பவிழப் பணியாயே'***

[2]***'இப்பிறவி என்னுமோர் இருட்கடலில் மூழ்கிநான்***
***என்னுமொரு மகர வாய்ப்பட்***
***டிருவினை எனுந்திரையின் எற்றுண்டு புற்புதம்***
***எனக்கொங்கை வரிசை காட்டுந்***

1. சிந்தாமணி. 2. தாயுமானார்.

*துப்பிதழ் மடைந்தையர் மயற்சண்ட மாருதச்*
*சுழல்வந்து வந்த டிப்பச்*
*சோராத ஆசையாங் கானாறு வான்நதி*
*சுரந்ததென மேலும் ஆர்ப்பக்*
*கைப்பரிசு காரர்போல் அறிவான வங்கமுங்*
*கைவிட்டு மதிம யங்கிக்*
*கள்ளவங் கக்காலர் வருவரென் றஞ்சியே*
*கண்ணருவி காட்டும் எளியேன்*
*செப்பரிய முத்தியாங் கரைசேர வுங்கருணை*
*செய்வையோ சத்தாகி என்*
*சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே*
*தேசோ மயானந் தமே.’* (9)

**10**

***கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்***
***தாளை வணங்காத் தலை.***

**பொருள்**

எண்குணத்தான் தாளை - இறைவனது திருவடியை, வணங்கா தலை - வணங்காத தலைகள், கோள் இல் பொறியின் - புலன்களைப் பெறாத பொறிகளைப்போல, குணம் இலவே - பயன் இல்லாதனவேயாம்.

**கருத்து**

இறைவனடியை வணங்காத் தலைகள் பயனற்றனவாம்.

**விருத்தி**

திருவடி போற்றலை யுணர்த்தும் பாக்கள் ஏழு. இவைகளுள் மேற்போந்த ஆறு பாட்டிலும் பெரிதும் தியானமே பேசப்பட்டது; உறுப்பு வணக்கம் சிறப்பாகப் பேசப்படவில்லை. இப்பாட்டில் சிறந்த உறுப்பு வணக்கம் குறிக்கப்பட்டுளது. தலை வணக்கம் முனைப்பின்மையை உணர்த்துவது. முனைப் பறுந்தால் பிறவிப் பெருங்கடலை நீந்துதற்குரிய புணை கிடைக்கும்.

**எண்குணத்தான் தாளை வணங்காத் தலை**

எண்குணத்தான் - எண்ணுங் குணத்தான்; அன்பன் எண்ணுங் குணங்களையுடையவன்.

எண்குணத்தான் என்பதற்கு எட்டுக் குணங்களை யுடையவன் என்றுங் கூறலாம்.

தலை - உறுப்பிற் சிறந்தது; இடமுமாம்.

**எண்குணத்தான்**

*இறைவன் குணமில்லாதவன் என்றும், நிர்க்குணன் என்றும், குணாதீதன் என்றுஞ் சொல்லப்படுகிறான்.*

***[1] 'குலமி லான்குணங் குறியிலான் குறைவிலான் கொடிதாம்***
***புலமி லான்தனக் கென்னவோர் பற்றிலான் பொருந்தும்***
***இலமி லான்மைந்தர் மனைவியில் லான்எவன் அவன்சஞ்***
***சலமி லான்முத்தி தரும்பர சிவனெனத் தகுமே.'***

*இறைவன் குணமில்லாதவனெனில், எக்குணமில்லாதவன்? இராசதம், தாமதம், சாத்விகம் ஆகிய மாயாகுண மில்லாதவ னென்க. இக்குணமல்லாத வேறு குணம் இறைவனுக்கு உண்டு. அஃது அருட்குணம். அருட்குணம் சின்மயமா யிருப்பது.*

**சகுணன்**

*உயிர்களெல்லாம் தன்னைப் போலாதல் வேண்டுமென்று இறைவன் இடையீடின்றி நினைந்த படியே இருக்கிறான். அந்நினைவு இறைவனது அருட்குணத்தினின்றும் பிறப்பது. அருட்குணம் இறைவனிடத்தில் என்றும் இயல்பாக அமைந் திருப்பது. அக்குணம் உயிர்கட்கு நலஞ்செய்ய எழுந்த வண்ணமி ருக்கும். அதற்கு ஓய்வே கிடையாது. அருட்குணமுடைய இறைவன் உலகில் சகுணன் என்று போற்றப்படுகிறான். (சகுணன் - குணத்தோடு கூடியவன்). இறைவனது சகுண நிலையே வழி பாட்டுக்கு வேண்டற்பாலது. சகுணம் அருளாலாவது.*

***[2] 'உருவருள் குணங்க ளோடும் உணர்வருள் உருவிற் றோன்றும்***
***கருமமும் அருள ரன்றன் கரசர ணாதி சாங்கம்***
***தருமரு ளுபாங்க மெல்லாம் தானருள் தனக்கொன் றின்றி***
***அருளுரு உயிருக் கென்றே ஆக்கினன் அசிந்த னன்றே.'***

*சகுணநிலை குருநிலை என்பது ஒருவித மரபு. இதுபற்றி யுள்ள கருத்து வேற்றுமைகள் பல. அக் கடையை ஈண்டுப் பரப்புவது அநாவசியம்.*

**குணமும் பெயரும்**

*இறைவன்றன் அருட்குணங்களின் கூறுபாடுகள் பலப்பல; எண்ணிறந்தன என்றுங் கூறலாம். ஒவ்வொன்றற்கும் ஒவ்வொரு பெயர் வழங்கப்படுகிறது. 'பொருள் ஒன்று; பெயர் பல' என்பதை மறத்தலாகாது.*

1. தாயுமானார். 2. சிவஞானசித்தியார்.

***'ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலாற் காயிரம்***
***திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ'***

*என்றார் மாணிக்கவாசகனார்.*

*இறைவனது அருட்குணத்தின் கூறுபாடுகளுக்கு வழங்கப் படும் பெயர்கள் பலவற்றைத் திரட்டிச் சிலர் ஆயிரமாகவும், சிலர் நூறாகவும், சிலர் பத்தாகவும், சிலர் எட்டாகவும், சிலர் ஆறாகவும், சிலர் ஐந்தாகவும், சிலர் மூன்றாகவும் தொகுத்து உலகுக்கு உதவியுள்ளனர். இவை எல்லாவற்றிற்கும் அடிப்படை யாக நிற்பது ஒன்றே. அஃது அருள்; அருட்சக்தி.*

*இறைவன் ஒருவனே. அவன் பல தன்மைகளையுடையவனா யிருக்கிறான். அத்தன்மைகளை யெல்லாம் விரித்தல் அரிது. தாலிபுலாக நியாயம் பற்றி ஈண்டு இரண்டொன்றை எடுத்துக் காட்டுதல் சாலும். அவை: பெருமை, எங்குமிருத்தல், தூய்மை, வண்மை, அழகு முதலியன. இவை ஒவ்வொன்றும் ஒன்றன் கூறுபாடேயாம்.*

*பெருமையுடைய ஒருவனே எங்குமிருப்பவன்; எங்குமிருப்ப வனே தூயன்; தூயனே வள்ளல்; வள்ளலே அழகன். பிற இயல்பு களுக்கும் இத்தகைப் பெயர்களுண்டு. ஒவ்வோரியல்பையும் ஒவ்வொரு தெய்வமாகக் கொள்வது அறியாமை. ஒருவனே எல்லா மாயிருக்கிறான்.*

*ஆண்டவன் ஒருவனே பெரியவன் என்பதற்கு அல்லா என்றும், எங்குமிருப்பவன் என்பதற்கு விஷ்ணு என்றும், தூயன் என்பதற்குச் சிவன் என்றும், வண்மையுடையவன் என்பதற்குத் தியாகேசன் என்றும், அழகன் என்பதற்கு முருகன் என்றும் சொல்லப்படுகின்றன. இவ்வாறு ஆயிரம் பெயர், நூறு பெயர் முதலிய கணக்கற்ற பெயர்கள் வழங்கப்படுகின்றன. இப்பெயர் களையெல்லாம் பூண்டுள்ளவன் ஒரே இறைவன் என்பதை மறந்த இடத்திலேயே பன்முகச் சமயநெறி தோன்றி இடர்ப் படுத்தும்.*

**அன்பன் எண்ணுமாறு**

*அன்பன் ஆண்டவனை எப்படி எப்படி நினைக்கிறானோ அப்படி அப்படியெல்லாம் ஆண்டவன் தோன்றி அவனுக்கு அருள் செய்வன். உலகில் இதுகாறும் தோன்றிய அன்பர் பலர் ஆண்டவனை எவ்வெவ்விதமாகவோ எண்ணி எண்ணி வழி பட்டனர். அவரவர் எண்ணத்தின்படியே ஆண்டவன் அருள் சுரந்துள்ளான். இதுபற்றிய கதைகள் பல உண்டு.*

***[1]'அப்பனை நந்தியை ஆரா அமுதினை***
***ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை***
***எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்***
***அப்பரி சீசன் அருள்பெற லாமே'***

*அன்பன் எண்ணும் வழி ஆண்டவன் அருள் புரிதலால், ஆண்டவன் எண்குணத்தனாகிறானென்க. அன்பன் எண்ணு மாறு ஆண்டவன் குணமுடையவனாகிறானென்பது நுட்பம்.*

## எட்டுக் குணம்

*இறைவனது பல்வகைக் குணங்களில் எட்டுக்குணங்கள் சிறப்பாக இந்நாட்டுப் பெரியோர் சிலரால் கொள்ளப்பட்டன. அக்கொள்கையை உட்கொண்டு, 'எண்குணத்தான்' என்பதற்கு எட்டுக் குணமுடையான் என்று பொருள் கூறுவோருமுளர். இஃதும் இயைந்த ஒன்று. பலவகையில் ஆயிரம், நூறு, பத்து அடங்குவதுபோல எட்டும் அடங்குமன்றோ?*

*[2]'எண் குணங்களாவன:- தன்வயத்தனாதல், தூய வுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடி விலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என இவை. இவ் வாறு சைவாகமத்திற் கூறப்பட்டது. [3]அணிமாவை முதலாக வுடையன வெனவும், [4]கடையிலா அறிவை முதலாக வுடையன வெனவும் உரைப்பாருமுளர்.'*

***[5]'பண்ணவன் எண்குணன்'***

***[6]'பூத்தொழியாப் பிண்டிக்கீழ்ப் பொங்கோத வண்ணனை***
***நாத்தழும்ப வேத்தாதார் வீட்டுலக நண்ணாரே***
***வீட்டுலக நண்ணார் வீனைக்கள் வராறலைப்ப***
***ஓட்டிடுப எண்குணனுங் கோட்பட் டுயிராவே'***

***[7]'இறைவனீ ஈசனீ எண்குணத் தலைவனீ'***

***[8]'எட்டு கொலாமவர் ஈறில் பெருங்குணம்'***

## தாளை

*தாளைப் பற்றிய பலதிறக் குறிப்புக்கள் மேற்பாக்களிற் பொறிக்கப்பட்டுள்ளன.*

---

1. திருமூலர், 2 பரிமேலழகர்,
3. அணிமா முதலிய எட்டு : அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்.
4. கடையிலா அறிவு முதலிய எட்டு : – கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா இன்பம், கடையிலா வீரியம், நாமமின்மை, ஆயுவின்மை, கோத்திரமின்மை, அழியா இயல்பு.
5. சிலப்பதிகாரம் : 10 : 188. 6. சிந்தாமணி, 7. மேருமந்தரம் : 1000, 8. அப்பர்.

இறைவனது ஒரு தாள், யான் என்னுஞ் செருக்கை அறுத்து அருள்வது; மற்றொரு தாள், எனது என்னுஞ் செருக்கை அறுத்து அருள்வது: 'யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க் - குயர்ந்த உலகம் புகும்' என்றார் ஆசிரியர்.

**வணங்கா**

வணங்கா - வணங்காத, வளையாத, பணியாத, வணக்கம் - வளைவு. என்ன வளைவு? முனைப்பின் வளைவு; முனைப்பறுதல். முனைப்பற்ற விடத்தில் தாழ்மை தானே அரும்பும்.

'நான்' என்னும் முனைப்பு வளைந்தால் கருவி கரணவுறுப்புக் களெல்லாம் தாமே வளையும். முனைப்பற்ற வணக்கமே வணக்கமாகும். முனைப்பறாத வெறும் புறவணக்கம் வணக்கமாகாது.

எண்குணத்தான் தாளை வணங்க வணங்கச் செருக்கு அற்று அற்று முறைமுறையே எண்குணம் படியும். எண்குணத் தில் மூழ்குவது இறைவனடியில் இன்புற்று வாழ்வதாகும். 'நாவார * * * * எண் குணத்துளோமே' என்றார் அப்பரும்.

**தலை**

தலை, உறுப்புக்களில் தலைமையுடையது. இனம்பற்றித் தலையுடன் பிற வுறுப்புக்களையுங் கொள்க. அப்பர் திருஅங்க மாலை பார்க்க.

தலை வணங்கினால் மற்ற உறுப்புக்களெல்லாம் தாமே வணங்கும். அதனால் தலையை ஈண்டுச் சிறப்பாகக் குறிப்பிட்ட வாறாம்.

உறுப்புக்களெல்லாம் திரிகரணத்தில் அடங்கும். திரி கரணம்: மனம் மொழி மெய். தலை, மெய்யிற்கு அறிகுறி. தலையைக் கொண்டு மற்ற மனமொழிகளையுங் கொள்க.

***'வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்***
***தாழ்த்த சென்னியுந் தந்த தலைவனை'***

'* * * தாளை வணங்காத் தலை' என்றது தலை வணக்கத் துக்குரிய தென்பதை வலியுறுத்துவது.

தாளையும் தலையையும் உறுப்பாக் கொண்டு வழிபாடு செய்வது ஒரு முறை; உறுப்பாக் கொள்ளாது வழிபாடு செய்யும் முறையும் உண்டு. இது சொல்லால் சொல்லுந் தகையதன்று; குருநாதன் திருமுன்னே விளங்கும் ஒருவித நுட்பம்.

தலையால் தாளை வணங்குதல் செருக்கறுத்தலை அறிவுறுத்துவது. தலைநிமிர்வு முனைப்புக்கு அறிகுறி. அதன் வணக்கம் தாழ்மைக்கு அறிகுறி. மேலேயுள்ள தலை, கீழேயுள்ள

தாளில் விழுவது, முனைப்புச் சாய்ந்து விழுந்து ஒடுங்குதலைத் தெரிப்பது.

தலை - இடத்து என்று பொருள் கூறுவோரும் உளர்.

**கோளில் பொறியின் குணமிலவே**

கோள் - கொள்ளுதல், கொள்கை : முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

கோள் இல் - கொள்ளுதல் இல்லாத.

கோளில் என்பதற்கு 'அறிவில்லாத' என்று மணக்குட வரும், 'தத்தமக் கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத' என்று பரிமேலழகரும் உரை கண்டுள்ளனர்.

பொறியின் - ஐம்பொறி போல; பாவைபோல.

இன் - ஐந்தாம் வேற்றுமை யுருபு ; உவமப் பொருளின் மேலது.

'கோளில் பொறியின்' என்றமையான், 'பொறியின்' என்பதைக் கொண்டே, 'கோளில்' என்பதற்குப் பொருளு ரைத்தல் பொருத்தம்.

குணம் இலவே - ஏகாரம் தேற்றம்.

**கோளில் பொறியின்**

பொறி - ஐம்பொறி ; பாவை (பதுமை).

ஐம்பொறி : மெய், வாய், கண், மூக்கு, செவி.

பொறி மக்களுக்கும் உண்டு ; பாவைக்கும் உண்டு இரண்டுக்கு முள்ள வேற்றுமை என்னை? மக்களது பொறியில் புலன் (அறிவு) உண்டு; பாவையினது பொறியில் புலனில்லை.

புலன் ஐந்து; அவை : சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

ஐம்பொறியில் ஐம்புலன் பொருந்தியுள்ள முறை: மெய்க்கு - ஊறு, வாய்க்கு - சுவை, கண்ணுக்கு - ஒளி, மூக்குக்கு - நாற்றம், செவிக்கு - ஓசை.

பொறிவாயிலாகவே புலன் இயங்கும். புலனற்ற பொறி உயிரற்ற உடல் போன்றது.

புலனில்லாத மக்களின் பொறி பாவையின் பொறி போன்றதே யாகும். இருவிதப் பொறிக்கும் எவ்வித வேற்றுமையும் இல்லை. இதனால் புலனற்ற பொறியுடையவரைப் பாவை என்று கூறலாமன்றோ? ஆகவே, ஈண்டுப் 'பொறியை' ஐம்பொறி என்றோ பாவை என்றோ கொள்ளலாம். இரு பொருள்படும் முறையில் 'பொறி' திகழ்கிறது.

*பொறியின் இயல்பு புலன்களைக் கொண்டிருப்பது. பொறியின் கோள் புலன். இதைக் கொண்டு பொறியை இருவித மாகக் கொள்ளலாம். ஒன்று கோள் பொறி; மற்றொன்று கோளில் பொறி.*

*கோள் பொறி புலனைக்கொண்ட பொறி; கோளில் பொறி - புலனைக் கொள்ளாத பொறி.*

*ஈண்டுப் பொறியுடன் போந்துள்ள கோள் என்பதே புலனை யுணர்த்துவதாகும். கோள் என்பதற்கு வேறாக புலன் என்றொரு சொல்லை வருவித்துப் பொருளுரைத்தல் வேண்டுவதில்லை. கோள் என்பதே ஆகுபெயராக நின்று புலனை உணர்த்துகிறது.*

*'கோளில்' என்பதற்கு 'அறிவில்லாத' என்று மணக்குடவர் பொருள் கூறியிருத்தலும் ஈண்டு உன்னற்பாலது.*

*எண்குணத்தான் தாளை வணங்காத தலை பயனற்றது எப்படி? புலனற்ற பொறிபோல என்றபடி.*

**புலனடக்கம்**

*தலை மூளைக்கு நிலைக்களன்; மூளை மனத்துக்கு நிலைக்களன்; மனம் புலன்களுக்கு நிலைக்களன்; புலன்கள் பொறிகளுக்கு நிலைக்களன்கள். பொறிகள் யாண்டு மலர்ந்து நிற்கின்றன? தலையிலல்லவோ?*

*மனத்துக்கும் பொறிகளுக்கும் இடையில் இயங்குவன புலன்கள், புலன்களே பொறிகள் வாயிலாக எல்லாவற்றையும் மனத்துக்கு அறிவிக்கும் பண்பு பெற்றிருக்கின்றன. மனத்துக்கு ஆக்கந்தேடும் பொறுப்பும், அதற்குக் கேடு செய்யும் பொறுப்பும் புலன்களுடையன என்பதை விளக்க வேண்டுவதில்லை. இதுபற்றியே புலன்கள்மீது சான்றோர் கருத்துச் செலுத்தி, அவற்றைத் தீயவழி உழலச் செய்யாமல் ஒடுக்கி, நல்ல வழியில் இயங்கச் செய்யவே பெரிதும் முயன்றனர்.*

*அம் முயற்சித் திறங்கள் பல. அவற்றுள் சிறந்ததும், இயற்கையின் போக்குக்கு உரியதுமா யிருப்பது ஒன்று. அஃது இறையை வணங்குதல் என்பது. ஆசிரியர் இறையைத் தலையால் வணங்குவதை அறிவுறுத்தியிருத்தல் சிந்திக்கற்பாலது. தலை வணங்கினால், பொறியும், புலனும், மனமும், மூளையும், பிறவும் வணங்குதல் இயல்பு.*

*உலகுக்கும் மனத்துக்கும் நடுநின்று, அவற்றை ஒன்று படுத்தும் புலன்கள், இறைவழி இயங்கின், உலகமும் மனமும் இறைவண்ணமாகும். இவ்விரண்டும் இறைவண்ணமாயின்,*

முனைப்புக்கு இடம் ஏது? முனைப்பு அறுதற்குத் தலைவணக்கம் இன்றியமையாதது. தலை வணக்கமாவது புலன் வணக்கம் அல்லது அடக்கம் என்று கொள்க.

புலனடக்கமாவது புலன்களின் இருப்பையே அழித்துக் கொள்வதன்று. புலன் இருப்பு அழிந்தால், மகன் தலை வெறுஞ் செயற்கைப் பொறிகளைத் தாங்கும் பாவையின் தலைபோன்ற தாகும். ஆகவே, புலனடக்கமென்பது புலனை முனைப்பறுக்கும் வழியில் இயக்குவதென்க. இது, ‘பொறிவாயில் ஐந்தவித்தான்’ என்னும் பாட்டில் விளக்கப்பட்டது.

புலனை முனைப்பறுக்கும் வழியில் இயக்குதற்கு முனைப்பே யில்லாத இன்ப அன்பாயுள்ள இறைவணக்கம் வேண்டும். ஒவ்வொரு புலனும் இறையினிடம் ஈடுபடுதல் வேண்டும்; அவ்வீடுபாட்டால் புலன்கள் இறை மயமாகும். புலன்கள் இறை மயமானால், அவைகட்கு உலகம் இறை மயமாகவே புலனாகும். இறை மயமான உலகை, இறை மயமாயுள்ள புலன்கள், மனத்துடன் தொடர்புபடுத்தி, மனத்தையும் அம்மயமாக்கும். இந்நிலையில் முனைப்பு, தான் இருத்தற்கு இடம் பெறாது அகன்று ஒழியும்.

***‘சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்***
***கண்ணினைநின் திருப்பாதப் போதுக் காக்கி***
***வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்***
***மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்க ளார***
***வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை***
***மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்***
***தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்***
***தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே’***

இத்திருவாசகத்தை உற்று நோக்குக; புலன்கள் இறை வனிடம் ஆர்ந்து கிடத்தலையோர்க; காண்டல் கேட்டல் உண்ணல் உயிர்த்தல் உறுதல் எல்லாம் இறைவன் அருட்குணங்களில் தோய்ந்து தோய்ந்து இன்புறுதலை உன்னுக.

இறையிடம் ஆரும் புலன்களையுடைய பொறிகளே பொறிகள். ஏனைய கல் - மரம் - பாவை - என்றபடி.

‘கோளில் பொறியின்’ என்று குறித்து, ‘தாளை வணங்காத் தலை’ என்றமையான், இறையிடம் ஈடுபட்ட புலன்கள் அமைந்த பொறிகளையுடைய தலையே தலை என்பது நன்கு விளங்குதல் காண்க. இறைவனை வணங்குந் தலையே புலன் பொறி யுடையது என்பதும், இறைவனை வணங்காத தலை அவையற்றது என்பதும்

ஆசிரியர் உள்ளக்கிடக்கை. எனவே, மக்கள் கோளில் பொறித் தலையாராய் வாழாது, கோளுடைப் பொறித்தலையராய் வாழ்வது சிறப்பு.

இறைவனை வணங்காத் தலை புலனற்ற பொறிபோல ஆசிரியர் உள்ளத்துக்குப் பொருளானமைால், 'கோளில் பொறியின் * * * *' என்றார்.

### குணமிலவே

இறைவனை வணங்குதற்கென்று உறுப்புக்கள் படைப்பில் அமைந்துள்ளன என்றும், இறைவனை வணங்கும் உறுப்புக்கள் குணமுடையன என்றும், பிற குணமில்லாதன என்றும் விளக்கும் பொருட்டு, 'எண்குணத்தான் தாளை வணங்காத்தலை * * * குணமிலவே' என்றார்.

'குணமிலவே' என்பது உயிரற்ற தன்மையை உணர்த்துவது.

குணமிலவே : பன்மை. இதற்கேற்பத் தலைகள் என்று பொருள் கொள்ளப்பட்டது. உலகிலுள்ளார் தலைகளெல்லாம் எண்குணத்தான் தாளை வணங்கிக் குணம்பெறுதல் வேண்டு மென்பது ஆசிரியர் கருத்து. அதனால் பன்மை ஒலிக்க 'வணங்காத் தலை(கள்) குணமிலவே' என்றார். 'வணங்காத்தலை கள் குணமிலவே' என்பது, தலைகள் எண்குணத்தானை வணங்கிக் குணம்பெறல் வேண்டுமென்னும் உண்மையை அறிவுறுத்துவது.

பிறவிப்பயன் இத் திருக்குறளில் பேசப்பட்டிருக்கிறது. பிறவிப்பயன் யாண்டுளது என்னும் உண்மையை இத்திருக்குறள் விளங்கச் செய்கிறது. பிறவிப்பயன் இறைவன் திருவடியை வணங்கலில் இருத்தலை ஆசிரியர் இக்குறள் வாயிலாகத் தெரிவிக்கிறார். வணக்கத்தின் மாண்பு இக்குறட்பாவில் புலனாதல் காண்க.

***[1]'மருவார் குழலி ********
********ஈசன் கழல்களை***
***மருவா தவர்மேல் மன்னும் பாவமே'***

***[2]'சிவனடியார்க் கன்பிலாச் சிந்தையே***
***இரும்பு, ஏவல் செய்து நாளும்***
***அவனடியார் திறத்தொழுகா ஆக்கையே***
***மரம், செவிகண் ணாதியைந்தும்***
***பவனடியா ரிடைச்செலுத்தாப்***
***படிவமே பாவை'*** (10)

1. ஞானசம்பந்தர், 2. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம்.

# 2. வான் சிறப்பு

*வான் - மழை; 'வான்தருங் கற்பினாள்' - கலித் தொகை : 16 : 20.*

*சிறப்பு - தலைமை ; 'வளமைசா லுயர்சிறப்பி னுந்தை தொல் வியனகர்' - கலித்தொகை : 57 : 6.*

*'மழையினது தலைமை கூறல்' என்றார் மணக்குடவர்.*

**மழை**

*வான் சிறப்பு, கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து நிற்கிறது. இத்தொடர்ச்சி இரண்டுக்குமுள்ள உறவை உணர்த்துவதாகும்.*

*மாற்ற மனங் கடந்த கடவுள், இயற்கையை உடலாக் கொண்டு உயிர்கட்குக் காட்சி வழங்குவது. உடலாகிய இயற்கை, தன் உயிராகிய கடவுளை உணர்த்துதற்குக் கருவியாக நின்று துணை செய்வது. இவ்வியற்கைக் கூறுகளுள் சிறந்த ஒன்றாகிய மழையின் சிறப்பு இவ்வதிகாரத்தில் ஓதப்படுகிறது. மழையால் இயற்கை உலகம் நடைபெற வேண்டுமாதலால், இயற்கைக் கூறுகளுள் அஃது ஈண்டுச் சிறப்பாகக் கொள்ளப்பட்டது.*

**கருணை மழை**

*இறைவன் இயற்கை வாயிலாகவே உயிர்கட்கு நலஞ் செய்கிறான். இறைவன் இயற்கை அன்னையுடன் கூடியுள்ளமை யால் அவன் கருணையுடையவனாகிறான். அவனது கருணை மழையே உலகை ஓம்பி வருகிறது. 'தானே மழைபொழிதையலு மாய்நிற்பன்' எனவரூஉந் திருமந்திரத்தின் நுட்பத்தை ஓர்க. இறைக்கும் மழைக்கும் உள்ள தொடர்பை உன்னுக. இறைவனது கருணை மழையை 'வான் சிறப்பு' நினைவூட்டுவதென்க.*

**கடவுளும் வானும்**

*இயற்கை, கடவுளின் உடலாதாலால், கடவுள் வாழ்த் துக்குப் பின்னை இயற்கையை வாழ்த்துவது அறம். இவ்வறம் ஈண்டுக் கடைப்பிடிக்கப்பட்டிருத்தல் காண்க. வான் இயற்கைக் கூறுகளுள் சிறந்த ஒன்று.*

*ஈண்டு 'வான்' என்றது இயற்கையை உணர்த்துவது, அதனால் 'வான் சிறப்பு' கடவுளுக்கு அடுத்தபடியில் வைக்கப்*

*பட்டிருக்கிறது. என்னை? கடவுளைப் போல மழையும் உலகை ஓம்பி வருதல் என்க. மழை இல்லையேல் உலகம் ஏது? வாழ்வு ஏது? இன்னோரன்ன பல காரணம்பற்றியே ஆன்றோர் பலரும் மழையைச் சிறப்பித்துக் கூறுவதை ஒரு மரபாகக் கொண்டனர்.*

*'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் - நாம நீர் வேலி யுலகிற் கவனளிபோன் - மேனின்று தான் சுரத்தலான்' - சிலப்பதிகாரம்: வாழ்த்து: 7 - 9.*

**உள்ளுறையும் அமைவும்**

*இவ்வதிகாரம், (வானால்) உணவு, விளைவு, கடலாக்கம், ஒழுக்கம், தான தவ பூசை, கெடுத்தல் எடுத்தல் எல்லாம் என்னும் ஆறு பொருளை அகங்கொண்டது.*

*வாழ்வுக்கு உணவு வேண்டும். உணவுக்கு விளைவு தேவை. விளைவுக்கு மேகம் பிறக்கும் கடலாக்கம் இன்றியமையாதது. இவையெல்லாம் பெறும் உலகுக்கு ஒழுக்கம் வேண்டற்பாலது. ஒழுக்க மேம்பாட்டால் தான தவ பூசை நடைபெறுதல் சிறப்பு. எல்லாவற்றிற்கும் மூலமாயிருப்பது மழை.*

*முதல் மூன்று பாட்டில் உணவும், நான்காம் ஐந்தாம் பாட்டில் விளைவும், ஆறில் கடலாக்கமும், ஏழில் ஒழுக்கமும், எட்டு ஒன்பதில் தான தவ பூசையும், பத்தில் மழை எல்லாஞ் செய்தலும் பேசப்பட்டுள்ளன.*

**(i) உணவு**

**11**

***வானின் றுலகம் வழங்கி வருதலான்***
***தானமிழ்த மென் றுணரற் பாற்று.***

**பொருள்**

*வான்நின்று - மழையினின்று, உலகம் வழங்கி வருதலான் - உலகம் நடைபெற்று வருதலால், தான் - அம்மழை, அமிழ்தம் என்று உணரற்பாற்று - அமுதமென்று தெளிந்து உணரும் பான்மையுடைது.*

**கருத்து**

***உலகுக்கு அமுதம் மழை.***

**விருத்தி**

**வானின்றுலகம் வழங்கி வருதலான்**

*வான் - ஆகாயம் ; மேகம் ; மழை.*

ஆகாயத்தில் மேகம் தவழ்கிறது ; மேகத்தினிடமிருந்து மழை பொழிகிறது.

'வானூர் மதியம்' - சிலப்பதிகாரம்: மங்கல வாழ்த்து : 50 ; 'வான் முகந்தநீர் மலைப் பொழியவும்' - பட்டினப்பாலை : 126. 'வானினிலங்கு அருவித்தே'- கலித்தொகை : 41 : 19.

வான் - மழை : ஆகுபெயர்.

நின்று - இடைச்சொல்; ஐந்தாம் வேற்றுமைப் பொருளுணர்த்துவது.

திருக்கோவையார் முப்பத்து நான்காம் பாட்டின் இரண்டாம் அடியிலுள்ள 'புணர்ந்தாங் ககன்ற பொருகரி' என்பதற்குப் பேராசிரியர், 'கூடி அவ்விடத்து நின்று மகன்ற பொருகரியை நினைந்து' என்று பொருளுரைத்து, 'ஆங்ககன்ற என்புழி நின்றென ஐந்தாம் வேற்றுமைப் பொருளுணர நிற்பதோரிடைச்சொல் வருவித்துரைக்கப்பட்டது' என்று விளக்கங் கூறியிருத்தல் காண்க.

நின்று என்பதை ஐந்தாம் வேற்றுமைப் படுத்தி ஈண்டுப் பொருள் கூறியிருப்பது சிலரை மயக்கும். இலக்கண நூல், உணர்விலே இயற்கையாம்போது மயக்கந்தீரும்.

உலகம் - பல பொருள் ஒரு சொல்; இங்கே அது சராசரத்தை யுணர்த்தி நிற்கிறது.

வழங்கி - நடைபெற்று; இயங்கி; 'வழங்காப்பொழுதுநீ' - கலித்தொகை: 112 : 12.

வழங்கி வருவதலாவது உயிர்கள் உடலுடன் கூடி வாழ்ந்து வருவது.

'வானின்று உலகம் வழங்கி வருதலான்' - 'மழைவளம் நிலைநிற்றலானே உலக நடை தப்பாது வருதலான்' - மணக்குடவர்; 'மழை யிடையறாது நிற்ப உலகம் நிலைபெற்று வருதலான்' 'நிற்ப என்பது நின்றெனத் திரிந்து நின்றது'- பரிமேலழகர்; 'வானால் உலகம் நின்று வழங்கி வருதலால்' என்று கொண்டு பொருள் விரிப்போருமுளர்.

**வான் நின்று உலகம்**

வானின் பெருமை நோக்கி, 'வான்' என்று தொடங்கினர் போலும்.

வானில்லையேல் உலகம் ஏது? அதனால் 'வான் நின்று' என்றார்.

உலகம் சரம் அசரம் என்று இரண்டையுங் கொண்டது. சரம் - இயங்குவது; அசரம் - இயங்காது நிற்பது. உயிர் சரத்துக்கும் உண்டு; அசரத்துக்கும் உண்டு. சர உலகம் அசர உலகம் இரண்டும் மழையால் வாழவேண்டுமாதலால், ‘வானின்று உலகம்’ என்றார்.

**வழங்கி வருதலான்**

உலகம் எதனால் இயங்கி வருகிறது? பல கூறலாம். மூலத்தை ஆராயின் ‘மழை’ என்றே விளங்கும். உயிர் உடலுடன் கூடி வாழ்தற்கு மழைத்துணை வேண்டற்பாலதாயிருக்கிறது. மழையில்லையேல் வாழ்வு என்னாம்? வாழ்வின் இயக்கத்துக்கு மூலம் மழையாயிருத்தலான், ‘வானின்றுலகம் வழங்கி வருதலால்’ என்றார். உலகம் வானின் கொடையால் நடைபெறுவதென்பது கருத்து.

‘வருதல்’ என்பது, வாழ்வு வாழையடி வாழையாக வளர்ந்து வருவதை உணர்த்துவது.

**தானமிழ்தம் என்றுணரற் பாற்று**

தான் - வானின் சிறப்புணர்த்தும் தனிமைச் சொல்.

அமிழ்தம் - அம்ருதம் ; மருந்து; சாக்காட்டை யொழிப்பது.

என்று - என்று தெளிந்து.

உணரற்பாலது - உணரும் பான்மை (தன்மை) யுடையது.

**தான் (வான்) அமிழ்தம்**

மழைக்கு வானமிழ்தம் என்றொரு பெயருண்டு. மழை, உயிர்களின் சாக்காட்டைப் போக்கி, அவற்றை வாழச் செய்வதால் அஃது அமிழ்தாகிறது. சாதலாவது உயிர்கள் பருவுடலை விடுத்துப் பிரிவது. உயிர் உடலுடன் கூடி இன்புடன் இயங்குவது வாழ்வாகும். அவ்வாழ்வு மழையைப் பொறுத்து நிற்பது. வாழ்வுக்கு உயிர்ப்பு வழங்கும் ஆற்றல் மழையினிடம் அமைந்திருக்கிறது. அதனால் மழை அமிழ்தம் எனப் போற்றப்படுகிறது.

சராசரமெல்லாம் சேர்ந்த ஒன்றே உலகம் என்பது. உலகில் பலவித உயிர்கள் வாழ்கின்றன. அவை ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ளன. அவை யாவும் மழையையே எதிர்நோக்கி வாழ்தல் இயற்கை. எல்லா வகை உயிர்கட்கும் வாழ்வு நல்குதல் மழையாதலின், அஃது ‘அமிழ்தம்’ என்னப்பட்டது.

**புல் முதலியன**

*கண்ணுக்கும் மனத்துக்கும் பசிய இனிமைக் காட்சியைப் புல்லும், பயிரும், செடியும், கொடியும், மரமும், இன்ன பிறவும் வழங்குகின்றன. பசிய இனிமை, கண்ணின்வழி மனத்துக்கும், மனத்தின்வழி நாடி நரம்புகட்கும் நலஞ் செய்கிறது. இத்தகைய பசிய இனிமை தாங்கியுள்ள புற்களும், பயிர்களும், செடிகளும், கொடிகளும், மரங்களும் மழை யுணவைப் பருகாதொழியுமேல் அவற்றின் நிலை என்ன ஆகும்? அவை நாளுக்குநாள் பசுமை இழக்கும்; உலரும்; வற்றும்; வாடும்; எரியுமிழும்; சாயும். அந்நிலையில் புல் முதலியவற்றின் எண்ணம் எங்கே செல்லும்? எதன்மீது படியும்? அவை மழையையே எண்ணிய வண்ண மிருக்கும். வேறு எண்ணம் அவற்றிடைப் புகாது.*

*அவ்வேளையில் வானிலிருந்து சிறு துளி வீழ்கிறது. அத்துளியை உண்ணப் புல்லும் பயிரும் செடியும் கொடியும் மரமும் விரையும் ஆர்வத்தை எவ்வெழுத்தால் எழுதிக் காட்டல் கூடும்? மழை பொழியும்போது புல் முதலியன உறும் மகிழ்ச்சி அவற்றில் ஒன்றுவோர்க்கு நன்கு புலனாகும்.*

*சாய்ந்த புல்லும் பிறவும் மழையால் நலமுற்றெழுகின்றன; மீண்டும் பசுமை ஏற்றுக் கண்ணுக்கும் மனத்துக்கும் இனிமை யூட்டுகின்றன. சாகக் கிடந்த பச்சைகளை உயிர்பித்த மாண்பு டைய மழையன்றோ அமிழ்தம்?*

**புழு முதலியன**

*புழு, நண்டு, ஓணான், பாம்பு முதலியன நன்றாக ஓடி ஆடிக் கொண்டிருக்கின்றன. மழை பொய்க்கிறது வறட்சியுண்டாகிறது. ஏழை உயிர்களின் கதி என்ன? அவை நிழலுள்ள இடங்கட்கும் குளிர்ச்சியுள்ள இடங்கட்கும் ஓடப்பார்க்கின்றன. நிழல் ஏது? குளிர்ச்சி ஏது? எல்லாம் வறண்டு கிடக்கின்றன. பசுமை உமிழ்ந்த புல் பயிர் செடி கொடிகள் நெருப்பை உமிழ்கின்றன.*

*எளிய உயிர்கள் என்ன செய்யும்! அவை ஓட்டமின்றி, ஆட்டமின்றி, உணவின்றி வாடி வதங்கி மடியப்போகின்றன. அத்தறுவாயில் மழை பொழிகிறது; உயிர்கட்குத் தண்மை வழங்குகிறது. உணவாகிறது. வாடிய உயிர்கள் பிழைத்துப் பழையபடி வாழ்வு பெறுகின்றன. மழையின் பெற்றி என்னே! என்னே! இப்பெற்றி வாய்ந்த மழையை என்னென்று கூறுவது? அதைச் சாவா மூவா மருந்தாகிய அமிழ்தம் என்றே கூறுதல் வேண்டும்.*

### பறவை இனம்

அழகிய பறவை இனங்களை நோக்குவோம். பறவை என்றால் என்ன? பறவையே பாட்டு: பாட்டே பறவை. பாட்டோ மகிழ்ச்சியின் பொங்கல். பறவைகள் பாட்டின் மயம்; மகிழ்ச்சியின் படிமம்.

பாட்டு, பறவைகளின் குரலில் மட்டுமில்லை; அவற்றின் போர்வையிலுமிருக்கிறது. பறவைகளின் அகமும் பாட்டு; புறமும் பாட்டு. பாட்டாக விருந்தூட்டும் அழகுப் பறவைகளின் வாழ்க்கைக்கு இயற்கை வளம் வேண்டும். இயற்கை வளத்துக்கு மழை வேண்டும்.

மழையில்லையேல் இயற்கைவளஞ் சுருங்கும். எங்கணும் அனல் வீசும். பாட்டுப் பறவைகள் அங்கும் இங்கும் ஓடும்; தவிக்கும்; வதையும்; அவற்றின் கண்கள் பஞ்சடையும். மெலிய பறவைகள் என்செய்யும்! பாவம்! அப்போது மழை வருகிறது. பாட்டுருவங்கள் கண் திறக்கின்றன; தண்மை பெறுகின்றன; உலவுகின்றன; பின்னே கிளம்பிப் பாட்டை முழக்குகின்றன. பறவைகளை மீண்டும் பாடச் செய்த மழை எத்தகையது? அதுவே அமிழ்தம்! அமிழ்தம்!

### புலி முதலியன

புலி கரடி யானை சிங்கம் முதலியன காடுகளிலே தங்கள் அரசு செலுத்துகின்றன; வீறுடன் வாழ்கின்றன. காலமழை பெய்யவில்லை. காடுகள் பசுமை இழந்தன; ஆறு குளங் குட்டைகள் வறண்டன; கொதிப்பு எழுகிறது; புகை எழுகிறது; பொரிகள் எழும்புகின்றன. எங்கணும் அனல்; எங்கணும் கனல்; எங்கணும் தழல்! அரச விலங்குகள் படுகின்ற பாடு! அவை பருகப் புனலில்லை; தங்க இடமில்லை! அவற்றின் கொடுமை ஒடுங்கியது; கோபம் ஒழிந்தது; வீறடங்கிற்று. அவற்றால் ஓடல் இயலவில்லை; உலவலும் இயலவில்லை; அவற்றைச் சுற்றிலும் தீ; எரி. மிடுக்கிழந்த பெரு விலங்குகள் மழையே மழையே என்று ஓலமிட்டுச் சாய்கின்றன. திடீரென வான் அருள் சுரந்தது. விலங்கினங்களின் ஆனந்தம் என்னே! காடுகள் அவற்றுக்குப் பழையபடியே வீடாயின. இவ்வாறு விலங்குகட்கு உயிர்ப் பிச்சை அளிப்பதன்றோ அமிழ்தம்? வேறு என்ன?

### மக்கள்

மக்கள் வாழ்கிறார்கள்; உண்கிறார்கள்; உறங்குகிறார்கள்; பாடுகிறார்கள்; ஆடுகிறார்கள்; களிக்கிறார்கள். மழை, காலத்தில் பெய்யவில்லை. புல், பயிர், செடி, கொடி முதலியனவெல்லாம்

பசுமையை இழந்தன; எரிந்து கரிந்து போகின்றன. பறவைகளின் இனிய பாட்டுக்களைக் காணோம். கால்நடைகள் அசைய வில்லை. உலகம் நெருப்பு மயமாகிறது. எங்கணும் வெம்மைமாரி சொரிகிறது. நோய் சூறையாடுகிறது. மக்களின் உண்ணல், உறங்கல், ஆடல், பாடல், களித்தலெல்லாம் பறந்து போயின. பசியும், பட்டினியும், பிணியும் அவர்களை அரிக்கின்றன. மக்கள் வதைகிறார்கள். இந்நிலையில் அவர்கள் மனம் எதை நினைக்கும்? கண்கள் எதை நோக்கும்? மக்கள் மனம் மழையை நினைக்கும்; அவர்கள் கண்கள் வானை நோக்கும். ஆண்டவன் அருள் சுரக்கிறான். வானத்தில் கருமேகம் எழுகிறது; சூழ்கிறது; இடியிடிக்கிறது; மின்னல் மின்னுகிறது; மழை பொழிகிறது. கேணி குளம் ஏரி எல்லாம் நிரம்புகின்றன. அருவிகள் கலித்து ஓடுகின்றன. ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன. எங்கணும் நீரோட்டம்; நீர்மயம்; வெள்ளம்; வெள்ளக்காடு. வெம்மை உமிழ்ந்த இடமெல்லாம் தண்மை உமிழ்கின்றன. புலன் களெல்லாம் பசுமையுறுகின்றன. மக்கள் மனங் குளிர்கிறது. அவர்கள் நெஞ்சில் மகிழ்ச்சி பொங்குகிறது. மக்கள் வதைந்து மடியும்போது அவர்கட்கு உயிரை வழங்கவல்ல ஒன்றே அமிழ்தம் அமிழ்தம் ஆகும்.

இவ்வாறு நானாவித உலகை உயிர்ப்பிக்கும் பெருமை வாய்ந்த மழையின் தன்மையை விளங்கச் செய்தற்கு அமிழ்தம் என்னுஞ் சொல்லே ஆசிரியர்க்குக் கிடைத்தது; வேறுசொல் கிடைக்கவில்லை. பொருந்திய சொல். வேறொன்றுண்டோ? சொல்லினும் பொருளையே பெரிதுங் கவனித்தல் வேண்டும். அமிழ்தம் என்னும் சொல்லும் இனிக்கிறது; பொருளும் இனிக்கிறது.

**என்று உணரற்பாற்று**

'மழை அமிழ்தம்' என்பதை ஆழச் சிந்தித்துத் தெளிவு பெறுதல் வேண்டும். இது மக்கள் கடமை. இதுபற்றியே ஆசிரியர், 'என்று உணரற்பாற்று' என்று சாற்றிப் போந்தனர். உயிர்களின் சாக்காட்டைப் போக்கிக் காப்பதில் மழையினுஞ் சிறந்ததொன்றில்லை என்று தெளிதற்பாலது என்பது அதன் கருத்து.

'என்று' என்பது, 'என்று தெளிந்து' என்னும் பொருளை உட்கொண்டது. உணர்தலுக்கும் தெளிதலென்னும் பொருளுண்டு. தெளிந்து தெளிதல் ஈண்டுத் தெளிந்து உணரல் என்னப்பட்டது. ஒன்றன் தன்மையை முதலில் ஆழ்ந்து உன்னி உணர்ந்து, மேலும்

*அதை ஆழ்ந்து முன்ன உணர்வது தெளிதல் என்பது. ஆழ்ந்து முன்னி உணர்தலே தெளிந்து உணர்தலாகும். உணர்தல் - விழிப்பு; உணராமை- உறக்கம்.*

*மழையை அமிழ்தெனத் தெளிந்து உணர்தலின் சிறப்பை 'உணரற்பாற்று' என்று வலியுறுத்தியவாறு காண்க.*

*பாற்று - பான்மையுடையது; பகுதியது.*

*வாழ்வில் உணரத்தக்க பகுதிகளுள் மழையை அமிழ்தம் என்று உணர்வது மூலப்பகுதி என்பார் 'பாற்று' என்றார். (1)*

**12**

***துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்***
***துப்பாய தூஉ மழை.***

**பொருள்**

*துப்பார்க்கு - (ஐம்புலனால் இன்பம்) நுகர்வோருக்கு, துப்பு ஆய துப்பு ஆக்கி - நல்ல நுகர்வுப் பொருள்களை உண்டாக்கி, துப்பார்க்கு - அந்நுகர்வோருக்கு, துப்பு ஆயதூஉம்- (தானே) நுகர்வு ஆவதும், மழை - மழையாகும்.*

**கருத்து**

*பிற நுகர் பொருள்களை உண்டாக்கித் தானும் நுகர் பொருளாய் நிற்பது மழை.*

**விருத்தி**

*முன்னைக் குறளில் மழை அமிழ்தம் என்னப்பட்டது. அவ்வமிழ்தம் துப்பு ஆக்கியும், துப்பு ஆகியும் உயிர்கட்குப் பயன்படுதல் இக்குறளால் விளக்கப்படுகிறது.*

*'பிறிதொன் றுண்பார்க்கு அவருண்டற்கான உணவுகளை யும் உண்டாக்கித் தன்னை உண்பார்க்குத் தானே உணவாவதும் மழையே' - இது மணக்குடவர் உரை.*

*'உண்பார்க்கு நல்ல உணவுகளை உணவாக்கி, அவற்றை உண்கின்றார்க்குத் தானும் உணவாய் நிற்பதூஉம் மழை' - இது பரிமேலழகர் உரை.*

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி**

*து - துப்பு - துய்ப்பு.*

*துப்பு - பலபொருள் ஒருசொல். இங்கே நல்ல, தூய, வலி என்னும் பொருளிலும்; நுகர்வு, நுகர்ச்சி, உணவு என்னும் பொருளிலும் வந்துள்ளது.*

*‘அரக்கும் பவளமும் ஆயுதப் பொதுவும் - துணையும் வலியும் பொலிவும் நெய்யும் - அனுபவமும் தூய்மையும் துப்பென லாகும்’ -பிங்கலந்தை : 3656.*

*‘துப்புத் துவர் போகப் பெருங்கிளை யுவப்ப’- பதிற்றுப் பத்து: 32 : 5.*

*துப்பார்க்கு - நுகர்வோருக்கு, ஐம்புலனால் இன்பம் நுகர்வோருக்கு.*

*துப்பு - நல்ல; தூய.*

*துப்பு ஆய - நல்லனவாகிய, தூய்மையான.*

*துப்பு ஆக்கி - நுகர்வுப் பொருள்களை உண்டாக்கி.*

**துப்பார்க்கு**

*துப்பார்க்கு - ஐம்புலனால் இன்பம் நுகர்வோருக்கு.*

*இன்பம் ஐம்புலனால் நுகரப் பெறுதலின், ஐம்புலனால் இன்பம் நுகர்வோருக்கு என்று பொருள் விரிக்கப்பட்டது.*

*ஐம்பொறி வாயிலாக ஐம்புலனும் இன்பம் நுகர்கின்றன. அவை: நாவால் சுவைத்தல், கண்ணால் பார்த்தல், மூக்கால் முகரல், செவியால் கேட்டல், மெய்யால் உறுதல் (பரிசித்தல்).*

**நா**

*நாவால் சுவைத்தலெனில், உணவுப் பொருள் எல்லாவற்றி லுஞ் சுவை உண்டா என்னும் ஐயம் பிறக்கும். நம்முன்னோர் சுவையை அறுவகையாகப் பிரித்தனர். அவை: கைப்பு, கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பு என்பன. இவ்வாறிலுஞ் சுவையுண்டு. தித்திப்பில் மட்டுஞ் சுவையுண்டு என்று நினைப்பது தவறு.*

*சுவை பொது. அது தித்திப்பில் மட்டும் இருப்பதன்று; அறுவகையிலும் இருப்பது. ‘அறுவகைச் சுவை’ என்னும் ஆட்சியை நோக்குக.*

*கைப்பு முதலியவற்றையுடைய பொருள்களெல்லாம் (நன்றாக மெல்லப்பட்டு) உள்புகுந்து, இனிப்பாகவும் மாறு கின்றன. இனிப்பு, சத்தாகி இரத்தம் முதலியவற்றிற் புகுந்து கலந்து உடலை ஓம்புகிறது. இனிப்பு, இரத்தத்திற் புகாது, மூத்திர வாயிலாக இறங்கினால், உடல் மெலிவுறுதல் கண்கூடு.*

*எவ்வகை உணவும் செரித்த பின்னர்ப் பலவகைப் பொருளாக மாறும். அப் பலவகையை அசத்து, சத்து என*

இருவகைப்படுத்தலாம். அசத்து - மல மூத்திரம் வியர்வை முதலிய இனம்; சத்து - இனிப்பு முதலிய இனம்.

கைப்பு முதலியவெல்லாம் இனிப்புச் சத்தாகவும் மாறுதல் ஈண்டுக் கருதற்பாலது. இவ்வுண்மையுணர்ந்தே ஆன்றோர் கைப்பு முதலிய அறுவகையையும் பொதுவாகச் சுவை என்றனர். கைப்பு முதலிய எல்லாவற்றின் பயனுஞ் சுவையேயாகும்.

நாவுக்கு அறுவகைச் சுவையுடைய நல்லுணவு தேவை. உணவு வகைகள்: தானியம், காய், கனி, கீரை, கிழங்கு, பால், தயிர், நெய், நீர் முதலியன. இவை உண்ணல், தின்னல், நக்கல், பருகல் என்று நான்கு கூறுசெய்யப்பட்டன. உணவுப் பொருள் விளைவுக்கு மழை இன்றியமையாதது. உணவுப் பொருளைத் தரும் பயிர், செடி, கொடி, மரம், பசு முதலியன வெயிலால் உலர்ந்து வாட்டமுற்றுச் சாயும் வேளையில், மழை பெய்து, அவைகட்குச் சத்தூட்டி, அவைகளை விளையச் செய்கிறது. உணவுப் பொருளை உதவ மழை கருவியாகிறது. இவ்வேதுக் களைக் கொண்டு, நாவின் நுகர்வுக்கு மூலம் எது என்பதைச் சிந்தித்துப் பார்க்க. மழை என்பது நனி விளங்கும்.

**கண்**

கட்புலன், இனிய பசுமையை அல்லது தண்மையை நுகர்ந்து இன்புறல் இயல்பு. பசுமை, கண்வழி மூளைக்கும் மூளைவழி மனத்துக்கும், மனத்தின்வழி மற்ற உறுப்புக்கட்கும் நலஞ் செய்வது. இத்தகைப் பசுமை மழை இல்வழி எதனுடைய கட்புலன் நிலவும்? பசுமைக்கு மழை உயிர் போன்ற தென்பதை விளக்க வேண்டுவதில்லை. ஆகவே, கட்புல நுகர்வுக்கும் மழை தேவையாகிற தென்க.

**மூக்கு**

மூக்குப் புலன் மணத்தை வேட்டல் இயல்பு. மணம் உறையும் மலர் முதலியன மழை இல்லாவிடத்தில் எங்ஙனம் உண்டாகும், எங்ஙனம் மணங் கமழும்? இதற்கு விரிவுரை வேண்டுங்கொல்? எனவே, மூக்குப் புலநுகர்வுக்கும் மழை வேண்டுவதா யிருக்கிறது.

**செவி**

செவிப்புலன் இசைக்கென இருப்பது. இசை பலவிதம். தலையாயது இயற்கை இசை. இயற்கை இசையே செயற்கை யிலும் அமைந்து இனிமை பயக்கும். இயற்கை இசை மரம், செடி, கொடி, வளை, தும்பி, வண்டு, குயில், நாகணவாய், கிள்ளை,

வானம்பாடி முதலியவற்றிலும், மக்களினத்திலும் அமைந்திருப்பது. இவை உணவின்றி இசை முழக்கஞ் செய்யுமா? உணவு மழையாலன்றோ கிடைத்தல் வேண்டும்? ஆதலால், செவிப் புலன் நுகர்வும் மழையைப் பொறுத்து நிற்றல் கருதற்பாலது.

**மெய்**

மெய்யுறுதலுக்கு நறுங்காற்று முதலியன இன்பம் பயக்கும். காற்றில் குளிர்மை இருந்தாலன்றி இன்பம் பிறவாது. சுற்றிலும் பசுமை சூழ்ந்திருப்பின் காற்றுக் குளிர்மையுடையதாகும். பசுமைச் சூழலில்லையேல் காற்றே வெம்மையாகித் துன்பு செய்யும். பசுமைச் சூழ்வு மழையாலாவது என்பது எவரும் அறிந்த ஒன்று. இதனால் மெய்ப்புல நுகர்வுக்கும் மழை முதலாக இருத்தலைத் தெளிக.

**துப்பாய துப்பாக்கி**

ஐம்புலன்வழி இன்பம் நுகர்வோருக்கு அவ்வந் நுகர்வுப் பொருளை மழை உண்டாக்குதலால் 'துப்பாக்கி' என்றும், அப் பொருள்களைச் சத்துடையனவாக ஆக்குதலால் 'துப்பு ஆய துப்பு ஆக்கி' என்றுங் கூறினர். சத்துடைய துப்பே (நுகர்வுப் பொருளே) துப்புடையது (நல்லது - தூயது). இதனால் துப்பு ஆய என்பதற்கு நல்லனவாகிய - தூய்மையான - என்று பொருள் சொல்லப்பட்டது.

**துப்பார்க்குத் துப்பாயதூஉம் மழை**

துப்பார்க்கு - அத் துப்பார்க்கு.

ஆயதூஉம் : இயற்கை பற்றியும், தெளிவு பற்றியும் எதிர்காலத்தை இறந்த காலமாகக் கூறுதல் மரபு.

**துப்பார்க்கு**

'துப்பார்க்கு' என்னுஞ் சொல் இருமுறை பெய்யப் பட்டிருத்தல் என்னை? முதலைச் சுட்டுவது இரண்டாவது. 'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி (அத்) துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை' என்று கொள்க. இது 'துப்பாயதூஉம்' என்பதி லுள்ள அளபெடையாலும் உம்மையாலும் விளங்குதல் காண்க.

துப்பார்க்கு என்பது உயர்திணையுலகைக் குறிப்பது. இதனுடன் அஃறிணை யுலகையுஞ் சேர்த்துக் கொள்க.

**ஆயதூஉம்**

ஆயதூஉம் என்பதிலுள்ள உகர அளபெடை இசை நிறைக்க வந்ததென்பர். அவ்வளவில் திருவள்ளுவர் ஒலி நின்று

விடாது. இதுபற்றி முன்னரும் என் கருத்தை வெளியிட்டுள்ளேன். திருக்குறளிலுள்ள அளபெடைகள் வெறும் இசை நிறைவுக்கு மட்டும் வருவனவல்ல. அவை பொருளுணர்த்தவும் பொலிந்து நிற்பன. ஈண்டு மழை இரண்டு வழியிலும் பயன்படும் பெற்றி அளபெடையில் ஒளிர்கிறது. அளபெடையை ஒலித்து ஒலித்துப் பார்க்கப் பொருள் விளங்கும். திருக்குறள் அளபெடைக்கெல்லாம் ஒலிப் பொருள் காண முயல்க. இயற்கை துணை செய்யும்.

**மழை**

மழைநீர், பிறபொருள் வாயிலாகவும் தானே நேராகவும் உயிர்கட்குப் பயன்பட்டு, உயிர்களின் வெம்மை போக்கித் தண்மை வழங்கலால் ஈண்டு 'மழை' என்றார். மழை = குளிர்ச்சி; 'அரிமதர் மழைக் கண்ணீர்'- கலித்தொகை: 77: 4.

மழை, பிற நுகர்வுப் பொருள்களை உண்டாக்கி, உயிர்கட்கு நலஞ் செய்வதோடு நில்லாது, தானே நுகர்வுப் பொருளாகவும் நின்று துணை செய்வதென்பார், '* * * துப்பார்க்குத் துப்பாயதூஉம் மழை' என்றார். மழை துப்பாதல் அது தண்ணீராக அருந்தப்படுதலென்க.

மழை, இரண்டு வழியில் உயிர்கட்குப் பயன்படுகிறது. ஒன்று பிறவாயிலாகப் பயன்படுவது; மற்றொன்று தானே நேரே பயன்படுவது.

நுகர்வுப் பொருள்களை ஆராய்ந்தால் அவற்றில் நீர் பெருமிதமிருத்தல் நன்கு புலனாகும். நீர் வற்றியவிடத்துப் பொருள்கள் சத்தற்றவனவாகும். சத்தே ஜீவாதாரம். மழை பொருள்களை வளரவைப்பதோடு தானும் அவற்றில் ஒன்றிச் சத்தாகி அவைகளை உயிர்கட்குப் பயன்படுத்துகிறது. இது பிற பொருள் வாயிலாக மழை துப்பாகிப் பயன்படும் முறை.

உயிர்கள் எவ்வளவு பொருளை விதவிதமாக நுகரினும், நீரருந்தல் இல்லையேல், பொருளை நுகர்ந்ததனாலாய பயன் அவைகட்கு விளையுமா? அவைகள் நீர் அருந்தா தொழியின் அவைகட்குக் கேடும் விளையும். உயிர்கட்கு நுகர்வுப் பொருள் மட்டும் போதா; நீரும் வேண்டும். நீர் அருந்துவது, மழை தானே நேரே துப்பாகிப் பயன்படும் முறை.

மழை, துப்பார்க்குத் துப்பு ஆக்கியும் துப்பு ஆகியும் பயன்படுவதால், துப்பு விளைதற்குரிய நிலத்துக்கும், துப்பாரது உடற்கூறுகட்கும் அது நலன் செய்வதாகிறது. ஆகவே, மழை எல்லாவற்றிற்கும் நலஞ் செய்வதென்க.

## பிற குறிப்பு

*நுகர்வுப் பொருள் பலவற்றுள்ளுஞ் சிறந்தது உணவாத லால், அதன் சிறப்பையுணர்த்தச் சிலர், துப்பு என்பதற்கு உணவுப் பொருள் என்று கூறுப. இப்பொருளும் பொருந்திய தொன்றே. இப்பொருள் கூறுவோர் உபலட்சணம் பற்றி உணவுப் பொருளுடன் பிற நுகர்வுப் பொருளையுங் கொள்வாராக.*

*மழை நுகர்வுப் பொருளை உண்டாக்கி, அவற்றை நுகர்வோருக்கு அவற்றின் வாயிலாக வலிமை யூட்டுவதால், துப்பு என்பதற்கு வலிமை என்று பொருள் கூறுவோருமுளர்.(2)*

**13**

***விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்***
***துண்ணின் றுடற்றும் பசி.***

### பொருள்

*விண் நின்று பொய்ப்பின் - மழை (பெய்யாது) நின்று பொய்த்தால், விரிநீர் வியன் உலகத்து உள் - கடல் சூழ்ந்த அகன்ற உலகத்துயிர்களை, பசி நின்று உடற்றும் - பசி நிலைத்து வருத்தும்.*

### கருத்து

*மழை பொய்த்தால் உயிர்கள் பசியால் வருந்தும்.*

### விருத்தி

*முதலிரு பாக்களில் மழையை அமிழ்தம் என்றும், துப்பு என்றும் முறையே விளக்கி, அத்தகைய ஒன்று பொய்த்தால் விளையுங் கேட்டை இப்பாட்டால் உணர்த்தியவாறாம்.*

## விண்ணின்று பொய்ப்பின்

*விண் - ஆகாயம் ; இங்கே மழை (ஆகுபெயர்.)*

*நின்று - பெய்யாது நின்று; நெடுங்காலந் தொடர்ந்து பெய்யாது நின்று.*

*பொய்த்தல் - தவறுதல்; 'தன் தொழில் மறுத்தல்' என்பர் மணக்குடவர்.*

*விண் நின்று என்று பிரியாது, விண் இன்று என்று பிரித்துப் பொருள் கூறலுமாம். இப்பொருள் கூறுவோர் இன்றி என்பது இன்று எனத் திரிந்ததென்று இலக்கணங்காட்டுவர். 'இன்றி என்னும் வினையெஞ் சிறுதி - நின்ற இகரம் உகர மாதல்*

*- தொன்றியன் மருங்கிற் செய்யுளுள் உரித்தே'- தொல்காப்பியம்; எழுத்து; 237.*

*'விண் நின்று பொய்ப்பின்' என்று கொண்டு 'வான மானது, நிலைநிற்கப் பொய்க்குமாயின்' என்று மணக்குடவர் பொருள் கண்டனர்.*

*'விண் இன்று பொய்ப்பின்' என்று கொண்டு 'மழை வேண்டுங் காலத்துப் பெய்யாது பொய்க்குமாயின்' என்று பரிமேலழகர் பொருள் கண்டனர்.*

**விண்**

*'விண்' இங்கே ஆகுபெயராய் மழையை உணர்த்தி நிற்கிறது. 'மழை' காலமழையைக் குறிப்பது. 'விண்' என்பதற்குக் கால மழை என்று கொள்க.*

**நின்று**

*'நின்று' என்பது, கால மழை என்றும் நின்று விடுவதை உணர்த்துவதா? இடையிடை இரண்டொரு முறை நிற்பதை உணர்த்துவதா? நெடுங்காலம் தொடர்ந்து நிற்றலை உணர்த்துவதா? அஃது இறுதியதை உணர்த்துவதென்றே தோன்றுகிறது. எப்படி? பின்னே 'பொய்ப்பின்' என்பது தொடர்ந்து நிற்றலான் என்க.*

**பொய்ப்பின்**

*'பொய்ப்பின்' என்றமையால் பொய்த்தல் அருமை என்றபடி. கால மழை பெரிதும் பொய்ப்பதில்லை. கால மழை இரண்டொருமுறை பொய்ப்பதால் பெருங்கேடு விளையாது. முன்னைய மழையின் ஈரமும், இயற்கைக் கூறுகளில் இயல் பாயமைந்துள்ள ஈரமும் உயிர்கட்கு ஒரோவழியாதல் துணை புரியும். மழை என்றும் பொய்த்தாலோ உலக நிகழ்ச்சிக்கே இடமிராது; உலகம் எரிந்தே போகும். நெடுங் காலம் தொடர்ந்து மழை பெய்யாது நின்று பொய்த்தால் எல்லாவித ஈரமும் பொன்றும்; நிலம் அனல் உமிழும்; அதனால் உயிர் கட்குத் துன்பம் பெருகும்.*

*ஈண்டு ஆசிரியர் குறிப்பிட்ட 'பொய்த்தல்' நெடுங்காலந் தொடர்ந்த தொன்றை யென்க; இரண்டொரு முறையோ, என்றுமோ பொய்த்தலை அன்றென்க. இந்நுட்பம், 'உலகத்துள் பசி நின்று உடற்றும்' என்பதனால் உணரக் கிடக்கிறது. 'உலகத்துள்' என்பதும், 'பசி நின்று உடற்றும்' என்பதும் உலக அழிவை உணர்த்துவனவல்ல; அவை உலக இருப்பையும், மழை பொய்த்தலால் விளையுந் துன்பத்தையும் உணர்த்துவன.*

*மழையின் சிறப்பை விளக்க ஈண்டுப் 'பொய்த்தல்' எடுத்துக்காட்டுக்கென்று பெய்யப்பட்டது.*

**விரிநீர் வியனுலகத்துள்**

*விரிநீர் - பரவை; கடல் (வினைத்தொகை).*

*வியன் - அகன்ற; 'வியனென் கிளவி அகலப் பொருட்டே' - தொல்காப்பியம் : உரி : 364.*

*வியன் உலகம் - அகன்ற, பரந்த, நில உலகம்.*

*அத்து - ஏழனுருபின்கண் வந்த சாரியை.*

*உள் -உயிர்களை (ஆகுபெயர்).*

*உலகத்துள் என்பதற்கு உலகத்தினிடத்தில் என்றும், உலகத்தினுள்ளே என்றும் பொருள் கூறலுமாம்.*

**விரிநீர் வியன் உலகத்து**

*கடலினும் விரிந்த நீரின்மையால், அது 'விரிநீர்' என்னப் பட்டது. 'திரை விரிகின்ற கடல்' என்பர் நச்சினார்க்கினியர்.*

*வியன் உலகினுங் கடல் பெரிதாதலின் 'விரிநீர்' என்றார்.*

*'விரி' 'வியன்' என்னும் அடைகள் பெருமையின் வியப்பைப் தெரிப்பன. விரியும் வியனும் மழை யில்வழி என்னாம் என்றபடி.*

*விரிநீர் சூழ்ந்த வியனுலகமாயினும் மழைநீர் பொய்த்தால் அவ் வியனுலகம் துன்புறுமன்றோ? மழைநீர் இல்வழி விரிநீரால் வியனுலகுக்கு என்ன பயன் என்றபடி.*

**உள்**

*உள் அஃறிணை உயர்திணையாகிய எல்லா உயிர்களையுங் குறிப்பது.*

*உயிர்கள் விரிநீர் சூழ்ந்த வியனுலகிலேயே வாழ்கின்றன. கால மழை நெடுநாள் பொய்த்தால், வியனுலகத்துள்ள உயிர்கள் விரிநீர் கொண்டு வாழ்தல் இயலுமோ? மழை அற்றபோது விரிநீரால் வியனுலகத்துள்ள உயிர்கட்கு என்ன பயன்? விரிநீர் சூழ்ந்த வியனுலகில் உயிர்கள் வாழினும் அவைகட்கு மழைநீரே இன்றியமையாதது என்றவாறாம்.*

*'விரிநீர் வியனுலகத்துள்' என்றமையான், உலகம் என்பது இம் மண்ணுலகத்தையே உணர்த்துவ தெனக்கொள்க. என்னை? மற்ற உலகங்கள் விரிநீரால் சூழப் பெற்றின்மையால் என்க.*

உலகங்கள் பல உள. அவையெல்லாம் ஐம்பெரும் பூதங் களால் ஆக்கப்பட்டனவே. ஆனால் ஒவ்வோர் உலகில் ஒவ்வொரு பூதம் மிகுந்தும் ஏனைய பூதங்கள் குறைந்தும் விளங்குகின்றன. நாம் வாழும் இவ்வுலகம் பெரிதும் மண்ணால் ஆக்கப்பட்டது. இதன்கண் ஏனைய பூதங்கள் சிறிது சிறிதே விரவி நிற்கின்றன. எல்லாப் பூதங்களும் அற்றவிடம் இறையுலகம்.

இந்நிலவுலகம் நெருப்புமயமாயிருந்து தணிந்து தணிந்து செல்வது. நெருப்புத் தணியத் தணிய மண் மிகுதல் இயல்பு. இப்பூமியைத் தோண்டித் தோண்டிப் பார்த்தால், எறக்குறைய நாற்பது கல் தூரத்தில் நெருப்புப் பிழம்பைக் காணலாம்.

**பசி நின்று உடற்றும்**

பசி - உணவு வேட்கை.

நின்று - நிலைத்து; நிலைபெற்று.

உடற்றல் - வருத்தல்; மூண்டு மூண்டு வருத்தல்.

**பசி**

பசி, தீ என்றும், பிணி என்றும் பலவாறு சொல்லப்படு கிறது. பசித்தீ பசிப்பிணி முதலிய வழக்காறுகளை நோக்குக.

வயிற்றினுள் ஒருவிதத் தீ இருக்கிறது. அத் தீ, உணவைச் சீரணிக்கச் செய்வது. அது, பசித்தீ - உதராக்கினி - சாடராக்கினி முதலிய பெயர்களால் வழங்கப்படுகிறது.

உண்ணும் உணவு சீரணித்த பின்னர் இருவகையாகப் பிரிகிறது. ஒருவகை இனிமைச் சத்தாதியன; மற்றொரு வகை மலமாதியன. முன்னையன இரத்தம் நாடி நரம்பு முதலிய வற்றுக்குச் செல்லும்; பின்னையன வெளியே கழிந்து போகும். இந்நிகழ்ச்சி தடையின்றி நடைபெறுதல் வேண்டும்; நடை பெற்றால் வேளைக்கு வேளை பசியெழும். வேளைக்கு வேளை பசியெழும் உடலே பிணியற்றதாகும்.

உண்ணும் உணவு நன்றாகச் செரியாது, போதிய அளவு இனிமைச் சத்தாதியன மேலெழாமலும் மலமாதியன கீழிறங்காம லும் தடைபடின் மலம் சிக்குறும். மலச்சிக்கல் உதராக்கினியை ஒடுக்கும்; கல்லீரலைச் சவலைப்படுத்தும். அதனால் பித்தச்சுரப்புக் குன்றும்; வேளைக்கு வேளை பசியெடுத்தல் நின்று போகும். சிக்கியமலம் தேங்கிக் கருகி நஞ்சாகும். நஞ்சு உடலுறுப்புக்களில் நுழைந்து பிணி செய்யும். பிணி நோயைப் பெருக்கும்.

உதராக்கினி மந்தப்பட்டுள்ள வேளையில் மேலும் மேலும் உணவு கொள்வது தவறு; பெருந் தவறு. அது காலனை விரைந்து

கூவி அழைப்பதாகும். ஆகவே, பசித்தபின் உண்ணப்புகுவது பொருத்தம்.

நல்லுடலில் பசித்தீ எழும்போது பொருந்திய உணவு கொள்ளுதல் வேண்டும். அவ்வேளையில் உணவு கொள்ளா தொழியின் பசித்தீ பெருகிப் பெருகி ஈரலின் இயக்கத்தைக் கெடுக்கும்; மற்ற உறுப்புக்களையும் அரிக்கும். உறுப்புக்கள் அரிக்கப்படுங்கால் விளையுந் துன்பம் தாங்கரியதாகும். பசித்துன்பம் தாங்கரியது.

***[1]'குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்***
***பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்***
***நாணனி களையும் மாணெழில் சிதைக்கும்***
***பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்***
***பசிப்பிணி யென்னும் பாவி'***

***[2]'மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை***
***தானந் தவமுயற்சி தாளாண்மை - தேனின்***
***கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்***
***பசிவந் திடப்போம் பறந்து'***

**நின்று உடற்றும்**

பசிநோய் மூண்டு மூண்டெழுந்து வருத்தும். அது நிலையாக நின்று உயிர்களை வருத்தும். அதுபற்றியே ஆசிரியர், 'பசி நின்று உடற்றும்' என்றார்.

பசிநோய் பெருகப் பெருக இறப்பு நேருமன்றோ? பசி நோயைப் போக்கி உயிர்களை இறவாமற் காக்கும் ஆற்றல் வியனுலகைச் சூழ்ந்துள்ள விரிநீருக்குண்டா? இல்லை; அவ்வாற்றல் மழைநீருக்கே உண்டு. மழைநீர் துப்பாய துப்பாக்கித் தானுந் துப்பாகும். அதனால் அஃது அமிழ்தம் என்று போற்றப்படுகிறது. அம்மழை பொய்த்தால் உயிர்களைப் பசி நின்று உடற்றியே தீரும்.

பசி பொது, அது தாவரம் முதல் மக்கள் ஈறாக உள்ள எல்லா உயிர்களையும் பீடிப்பது. "இது, 'பசி' என்று பொதுப்படக் கூறிய வதனான் மக்களும் விலங்கும், பொருளுங் காமமுந் துய்க்க லாற்றாது துன்பமுறுமென்று கூறிற்று" என்பது மணக்குடவர் குறிப்புரை.

**பொதுமை**

மழைவளஞ் சுரந்துள்ள காலத்திலும் சிலவிடங்களில் சில உயிர்கள் பசிப்பிணியால் பீடிக்கப்படுவதுண்டு. அப்பிணி மற்ற

1 மணிமேகலை : 11 : 76 – 80. 2. நல்வழி.

இடங்களிலுள்ள உயிர்களால் நீக்கப்படும். இடுக்கண் நேர்ந்துழி ஒருவருக்கொருவர் துணை புரிந்து கொள்வது இயல்பு. செல்வம் ஏழைகள் உழைப்பால் திரள்வது. ஏழைகள் பொருட்டே சில இடங்களில் பலதிறப் பொருள்கள் செறிகின்றன. செல்வர் பொருளில் எழை மக்கட்கு உரிமை உண்டு. இஸ்லாத்தில் 'ஜக்காத்' என்றொரு வரியிருக்கிறது. அது, செல்வரிடத்துள்ள பொருளில் ஏழைக்கும் உரிமை உண்டு என்பதைப் புலப்படுத்துவது. 'செல்வன் ஏழையின் கடன்காரன்' என்று அன்பர் பவுல் அருளி யுள்ளனர். உலகில் தோன்றிய சான்றோர் அனைவரும் 'ஏழைகட் குதவல் கடவுளை வழிபடுவதாகும்' என்றே கூறிச்சென்றனர். செல்வர் வறியர் என்றும் வேற்றுமையில்லாத இடத்தில் உயிர் களைக் காக்கும் பொறுப்பு அரசினுடையதாகும். என்னை? மக்கள் உழைப்பின் பயன் அரசினிடத்தில் (State) சேர்ந்து வருதலான் என்க. விளக்கம் சமதர்ம நூல்களிற் பார்க்க.

### ஒரே செல்வம்

உலகில் மழைவளஞ் சுரவா தொழியின், பசி, செல்வர் வறியர் எல்லாரையுந் தாக்குமன்றோ? அப்பசியைப் போக்கல் எவரால் இயலும்? எச்செல்வரால் இயலும்? எவ்வரசால் இயலும்? பொன் வெள்ளி முதலிய பொருள்களிருப்பினும் அவை கல் மண் போலவே கிடக்கும். பசி தீர்க்கத் தானிய மணி களல்லவோ வேண்டும்? தானியமணிகள் மழையின்றி விளையுங் கொல்? ஆகவே, உலகப் பசி போக்கும் ஆற்றல் மழைக்கே உண்டென்க. மழையே உயிர்ச் செல்வம். செல்வத்துட் செல்வம் மழைச் செல்வமேயாகும். அத்தகைய மழை பொய்த்தால் உலகத்து உயிர்களைப் பசி நின்று உடற்றியே தீரும்.

### மழைநீரின் மாண்பு

பசியைப் போக்கும் ஆற்றல் மழைக்கே உண்டு என்பதை வலியுறுத்த ஆசிரியர் எதிர்மறை முகத்தான், 'விண்ணின்று பொய்ப்பின் * * * * உலகத்துள் பசி நின்று உடற்றும்' என்று கூறலானார். விரிநீர் வற்றாது வியனுலகைச் சூழ்ந்து நிற்பினும், அதனால் பசிப்பிணியைப் போக்கும் ஆற்றல் இல்லை என்பார், 'விரிநீர் வியனுலகத்துள் பசி நின்று உடற்றும்' என்றார். இதனால் விரிநீரின் பயன் இன்மையும், மழைநீரின் பயன் உண்மையும் விளக்கப்பட்டன.

கடல் நீரிலுள்ள உப்பைப் போக்கினால், அந்நீர் உயிர் கட்குப் பயன்படாதோ என்று இக்காலத்தவர் கருதலாம். கடல் நீரின் உப்பைப் போக்கியாளுதல் அருமையன்று. அம் முயற்சி

*மிக மிகச் சிறிதே பயன்படும்; எல்லா உயிர்கட்கும் பயன்படாது. இயற்கை மழைநீரே பசி நோயைத் தீர்க்கும் மருந்தென்க.*

**எடுத்துக்காட்டு**

*நெடுங்காலம் மழை பொய்த்தலும், அவ்வளவு காலம் உலகம் பசியால் வருந்தலும் நேர்வது அரிது. கருணையுடைய இயற்கை - இறை உயிர்கட்கு அந்நிலையை ஒரு போதுங் கூட்டாது. அத்தகைய நிலை நேர்வதாக உலகத்துக்கு எடுத்துக் காட்டி, அதனால் இத்தகைய துன்பம் விளையும் என்று அறிவுறுத்தும் முகத்தான், மழையின் இன்றியமையாமையையும், மாண்பையும் ஆசிரியர் விளக்கஞ் செய்தவாறு காண்க. (3)*

**(II) விளைவு**

**14**

***விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே***
***பசும்புற் றலைகாண் பரிது.***

**பொருள்**

*விசும்பின் துளி வீழின் அல்லால் - மேகத்தினின்றும் மழைத் துளி விழுந்தால் (தாவர வர்க்கத்தைக் காண்பது) அல்லாமல், மற்று - (மழைத் துளி) வீழா தொழியின், ஆங்கே - அப்பொழுதே, பசும்புல் தலை காண்பு அரிது - பசும்புல்லின் தலையையுங் காண்டல் இல்லை.*

**கருத்து**

*மழைத் துளி விழுந்தா லல்லது புல்லுந் தலைகாட்டாது.*

**விருத்தி**

*மழை இன்மையால் நேரும் பசியின் கொடுமை மேற் பாட்டில் சொல்லப்பட்டது. பசிக்கு உணவு வேண்டும். உணவுக்கு விளைவு வேண்டும். விளைவு இப்பாட்டிலும், வரும் பாட்டிலுங் குறிப்பாகச் சொல்லப்பட்டுள்ளது.*

*'வானின்று துளி வீழி னல்லது அவ்விடத்துப் பசுத்த புல்லினது தோற்றமுங் காண்டல் அரிது' - மணக்குடவர்.*

**விசும்பிற் றுளிவீழி னல்லால்**

*விசும்பு - ஆகாயம்; இங்கே மேகம் : ஆகுபெயர்.*

*இன் - ஐந்தனுருபு ; நீக்கப்பொருள்.*

துளி - மழைத்துளி.

'விசும்பின் துளி' என்றமையான் 'மழைத்துளி' என்னப் பட்டது.

துளி வீழ்தல் என்பது உலக வழக்கு.

'அல்லால்' என்பது, துளி வீழ்தலின் இன்றியமையாமை யைப் புலப்படுத்துவது.

**விசும்பின்**

ஆகாயத்தினின்றும் மழைத்துளி வீழ்வதில்லை. அங் கிருந்து அது வீழ்வதென்பது வெறுந் தோற்றமேயாகும். மழைத் துளி மேகத்தினின்றும் வீழ்வது. மேகத்தை விசும் பென்றது, ஆகுபெயர்ப் பொருளில் என்க.

மழை மேகத்தினின்று பெய்யினும், உலகோர் அதை வானத்தினின்று பெய்வதாகக் கூறுவது வழக்கம். 'வானம் பொய்த்தது' 'வானந் தயை புரிந்தால் * * * *' முதலிய வழக்காறு களை நோக்குக. வாக்கு மனத்துக் கெட்டாத ஒன்றன்மீது மக்கட்கு எப்பொழுதும் பற்று அதிகம். எங்குமுள்ள ஆண்ட வனைப் பொதுவாக மக்கள் எங்கிருப்பதாக நினைக்கிறார்கள்? வானத்திலிருப்பதாகவே நினைக்கிறார்கள். சேய்மைக்கு மதிப்புக் கொடுப்பது உலகின் இயல்பு போலும்! கடவுளுக்கு அடுத்த படியிலுள்ள மழையும் வானத்திலிருந்து வருவது என்று உலகம் கருதுவதாயிற்று. அவ்வுலக வழி நின்றும் ஆசிரியர் மழையின் மாண்பை உணர்த்த 'விசும்பின் துளி' என்றாரென்க.

**துளி வீழினல்லால்**

மழை பொழி நிலையில் பலதிறம் உண்டு. அவை: துளி, தூறல், ஆசாரம், சோனை, ஆலங்கட்டி முதலியன.

மழை நிலைகள் பல இருப்ப, அவற்றுள் துளியை ஈண்டுச் சிறப்பாகக் கூறியதென்னை? பெருமையுடைய ஒன்றன் இயலை விளக்குதற்கு அதன் சிறு கூறு ஒன்றே சாலும். கூறுகளெல்லாம் இயல்புடையனவாயின், அவற்றுள் எதை எடுத்து இயம்பினா லென்ன? சிறியதைச் சிறப்பித்தால் பெரியதன் மாண்பு தானே விளங்கும்.

வறுமையால் பீடிக்கப்பட்ட ஒருவன் பசிக் கொடுமை யால் வதைகிறான். அவன் தன் பசி தணிக்க ஒரு சிறு கவளமாதல் கிடைக்குமா என்று ஏங்கிக் கிடக்கிறான்; சிறு கவளங் கிடைத்த பின்னர் மேலுமொரு கவளத்தை விரும்புகிறான். இவ்வாறு வயிறார உணவு கிடைக்கும் நிலை அவனுக்கு நேர்ந்ததும்,

அவனது நெஞ்சம் எதை வேட்கும்? சுவையுணவை யன்றோ? வேட்கும்? பின்னே பிறவற்றை வேட்கும். இதே போல உலகமும் படிப்படியே ஒவ்வொரு துறையில் தனது வேட்கையைப் பெருக்கிச் செல்லும்.

வான் பொய்த்து, மண் வறண்டு, உயிர்கள் வருந்தும் போது, உயிர்கள் எதை நோக்கும்? என்ன நினைக்கும்? உயிர்கள் வானை நோக்கும்; 'துளியாதல் வீழாதா? பூமி நனையாதா' என்று நினைக்கும். துளி வீழ்ந்து பூமி நனைந்த பின்னர் உயிர் களின் நாட்டம் தூறல் மீது செல்லும்; பின்னே பெருமழை, விடா மழை முதலியவற்றிற் செல்லும். சிறியதினின்றும் பெரியதிற் செல்வது உலக இயற்கை. இவ்வியற்கை பற்றி ஆசிரியர் மழை நிலையை விரிக்கிறார். இங்கே 'துளி' என்றார்; பின்னே 'புயல்' என்கிறார்.

மழைத்துளிக்கும் ஒருவிதத் தனிச் சிறப்புண்டு. அச்சிறப்புப் பெருமழைக்குமில்லை. புல் உள்ளிட்ட தாவர வர்க்கத்துக்கு மழைத்துளி உணவாவதுபோலப் பெரு மழையும் ஆவதில்லை. பெரு மழை மண்ணில் நின்றும் ஊறியும் தாவரத்தின் வேர் வழிப் பெரிதும் சத்தூட்டும். மழைத்துளி தாவரத்தின் இதழ், கணு, நரம்பு முதலியவற்றில் நிலவி நல்லுணவூட்டும்.

மழைத்துளி வீழ்வதால் தாவர வர்க்கம் செழிப்புறலும், அத்துளி வீழாதொழியின் புல்லுந் தோற்றமுறாமையுஞ் சொல்லப்பட்டன. மழைத்துளியால் விளையும் நலனும், அஃதின்மையால் விளையுங்கேடும் உணர்த்தப்பட்டன. மழை யின் மாண்பை உடன்பாட்டானும், எதிர்மறையானும் விளக்கிய வாறு காண்க.

**மற்றாங்கே**

மற்று - வினைமாற்று; வீழாதாயின் என்னும் பொருளின் மேலது; அசையாகக் கொள்வோருமுளர்.

ஆங்கே - அப்பொழுதே; 'வனப்புறக் கொள்வன நாடி அணிந்தனள் ஆங்கே' - கலித்தொகை : 82 : 19 - 20 ; அவ்விடத்து' என்பர் மணக்குடவர்.

மழைத்துளி வீழ்ந்ததும் புல் பச்சைப் பசேலெனத் தலை காட்டலால் 'ஆங்கே (அப்பொழுதே) * * * *' என்றார்.

**பசும்புற்றலை காண்பரிது**

பசும்புல் - பசிய புல்; இளம்புல் என்னலுமாம்.

புல் தாவர வர்க்கத்தை உணர்த்துவது.

*தலை - தலையையும்.*

*உம்மை - இழிவு சிறப்பு ; இங்கே தொக்கது.*

*காண்பு - காண்டல்.*

*தலை காண்பு - முளைத்தல்.*

*அரிது - இன்மைப் பொருளின்மேலது.*

**பசும்புல்**

*மழைத்துளி வீழ்ந்ததும் தலைகாட்டுந் தாவரம் பசும்புல் ஆதலின், 'பசும் புல்' என்றார். 'மழைத் துளி' என்றதற்கேற்பப் 'பசும் புல்' என்றார். மழை நிலைகளில் சிறியது துளி. தாவரத்தில் சிறியது புல். புல் என்னுஞ் சொல்லே சிறுமைப் பொருளுடையது.*

*வெறும் புல் என்னாது 'பசும் புல்' என்றார். என்னை? மழைத்துளியால் புல் பசுமையுற்றெழலா னென்க. பசுமை மழையின் சத்து. 'மழைக்கவின் றெழுந்த வார்கொண்மணிநிற அறுகை' - சிந்தாமணி: 2416.*

**தலை காண்பு**

*விண்ணின்று பொய்க்கும்போது, உயிர்களைப் பசி நின்று உடற்றும். அவ்வேளையில் உயிர்கள் மழைத்துளியை யாதல் வேட்டு நிற்கும். துளி வீழ்ந்ததும் பூமியின் புகை தணியும்; புல் தலைகாட்டும்.*

*பசியால் வருந்தும் உயிர்கள் புல்லின் தலை கண்டதும் மகிழ்ச்சியுறும். பசும் புல் தலை காண்பு. மேலும் மேலும் மழையின் வருகைக்கு நற்குறியாதலின், அதன் காட்சி உயிர்கட்கு மகிழ்வூட்டுதல் இயல்பு. உயிர்களுள் மகிழ்ச்சி காண்பு, ஈண்டுப் 'பசும் புல்' தலை காண்பு என்னப்பட்டது.*

**அரிது**

*இன்று காலை பூமி வறண்டு கிடக்கிறது; மாலை மழைத் துளி வீழ்கிறது; அடுத்த நாள் காலை பூமி முழுவதும் பசுமை போர்த்திருத்தலைப் பார்க்கிறோம். பசும்புல்லின் எழுச்சி கண்ணைக் கவர்கிறது. என்னே மழைத் துளியின் மாண்பு! சிறு பொழுதில் பூமியை நனைத்துப் புல்லை அரும்பச் செய்தல் எவரால் இயலும்? பின்னே துளி தூறலாய்த் தூறல் பெரு மழையாய் விடாமழையாய்ப் பொழியும். தாவரமெல்லாந் தளிர்க்கும்; தழைக்கும்; செழிக்கும்; வளங்கொழிக்கும். மழைத் துளி வீழா தொழியின், சிறுமைப் புல்லுந் தலைகாட்டுங்கொல்? இதனால் 'அரிது' என்றார்.*

### தாவர மாண்பு

தாவரத்தின் நலம் மற்ற உயிர்களின் நலமுமாகும். அதன் கேடும் அவ்வுயிர்களின் கேடாகும். தாவர வர்க்க வாழ்வுக்கும் மற்ற உயிர்களின் வாழ்வுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஒன்றை ஒன்றைப் பொறுத்தே இரண்டின் வாழ்வும் இயங்கல் வேண்டும். ஒன்றின்றி ஒன்று வாழ்தல் இயலாது. இது பொதுமுறை.

உயிர்களின் வாழ்வு தாவர வர்க்கத்தைப் பெரிதும் பொறுத்திருக்கிறது. தாவர வர்க்கத்தில் மண்ணிலுள்ள இரும்பு முதலியவற்றின் சத்துக்களும், ஞாயிறு உமிழும் ஒளிச்சத்தும், பிறவும் அடங்கியிருக்கின்றன.

சத்துக்களெல்லாம் மழைத்துளி இல்வழி ஆக்கம் பெறா. தாவர வர்க்கத்தைச் செழிப்பிக்கும் ஆற்றல் மழை நீர்க்குப் பெரிதுமுண்டு. இத்தகைய ஆற்றல் வாய்ந்த மழையின் சிறப்பை என்னென்று கூறுவது? இவ்வதிகாரத்தில் வான் சிறப்பை ஆசிரியர் எவ்வெவ்விதமாக விளக்கிச் செல்கிறாரென்பது உன்னற்பாலது.

முற்பாட்டில் விண்ணின்று பொய்த்தாலும், உயிர்களைப் பசி நின்று உடற்றலுஞ் சொல்லப்பட்டன. இப்பாட்டில் விசும்பிற்றுளி வீழ்தலும், பசும்புற்றிலை காண்டலுஞ் சொல்லப் பட்டன. வரும் பாட்டில் மழை வாரியையும் உழவையுங் காண்க. மழையால் நலம் வளர்தலை உற்று நோக்குக.

[1]'* * * ***வானந் துளிமாறு பொழுதிவ் வுலகம் போலுநின்***
***அளிமாறு பொழுதினிவ் வாயிழை கவினே'***

2'***வானத் துளிநோக்கி வாழும் உலகம்'*** (4)

**15**

***ஏரின் உழா அர் உழவர் புயலென்னும்***
***வாரி வளங்குன்றிக் கால்.***

**பொருள்**

புயல் என்னும் வாரி - மழை என்னும் வருவாயின், வளம் குன்றிய கால் - வளப்பங் குறைந்த காலத்து, உழவர் - உழவுத் தொழில் செய்வோர், ஏரின் உழாஅர் - ஏரால் உழவே மாட்டார்.

---

1. கலித்தொகை : 25 : 27 – 29 2. நான்மணிக்கடிகை : 28

**கருத்து**

*உழவுக்கு மழை வேண்டும்.*

**விருத்தி**

*முன்னைப் பாட்டில் மழைத்துளி வீழ்தலும் பசும்புல் தலைகாட்டலுஞ் சொல்லப்பட்டன. இப்பாட்டில் மழை வாரியும் ஏருழவுஞ் சொல்லப்பட்டன. துளிப்பெருக்கு வாரியால் தோன்றும். பசும்புற் காட்சி உழவரை ஏர் கட்டத் தூண்டும்.*

*'புயல் என்னும் வாரிவளங் குன்றிக்கால்' என்பதற்கு, 'மழை என்னும் வருவாய் தன் பயன் குன்றின்' என்று பரிமேலழகர் பொருள் கண்டுள்ளனர். 'குன்றியக் காலென்பது குறைந்து நின்றது' என்பது அவர்தம் குறிப்புரை. 'புயலாகிய வாரியின் வளங்குறைந்த காலத்து' என்பது மணக்குடவர் உரை.*

**புயலென்னும் வாரி**

*புயல் - மழை.*

*'புயற் புனிறு போகிய பூமலி புறவின்' - மலைபடுகடாம்: 120. 'மாமேகம் பெய்த கொழும்புயல்' - சிந்தாமணி : 2476. 'வியன்மூவுலகு * * * புயல் மேகம்போல் திருமேனி' என்பது ஆழ்வார் திருவாக்கு.*

*புயல் - காற்று, இடி, மேகம், மழை முதலியவற்றிற்கு வழங்கப்படும் ஒருசொல். இவை சேர்ந்ததன் பயன் மழையே.*

*வாரி - வருவாய்; நீர், வெள்ளம் என்னும் பொருளுங் கூறலாம்.*

*'கடலும் வெள்ளமும் பகுதியும் விளைவும் - சுற்றும் கதவும் வருவாயும் நீரும் - வட்டையும் மதிலும் வாரியாமே'- பிங்கலந்தை: 4059.*

*'என்னும்' என்பதில் பாடபேதமிருத்தல் வேண்டுமென்று தோன்றுகிறது. 'என்னும்' என்பதற்குப் பதிலாகப் 'பொழியும்' என்னும் பொருளில் ஒருசொல் பெய்தால் 'புயல் (மேகம்) பொழியும் வாரி (நீர்)' என்று பொருந்திய பொருள் காணலாம்.*

*புயலென்னும் வாரி- மழையென்னும் வருவாய்; மழைநீர் என்றபடி.*

**வளங் குன்றிக் கால்**

*வளம் - வளப்பம்; வருவாய் என்று உரைத்தலுமொன்று; 'வளம் உடையார் ஆக்கம்போல்' (வருவாயுடையார் செல்வம் போல) - கார் நாற்பது : 22.*

வளத்துக்கு வருவாய் என்னும் பொருள் கொள்ளுங்கால், வாரிக்கு நீர் என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். மழைநீரின் வருவாய் என்று கொள்க.

குன்றிய - குறைந்த; அழிந்துபட்ட எனினுமாம்.

கால் - காலம் ; பொழுது.

'குன்றிக்கால்' குன்றியக்கால்; காலீறு பெற்ற வினையெச்ச மாகக் கொண்டு 'குன்றின்' என்று பொருள் கூறினர் பரிமேலழகர். மணக்குடவர், குன்றிய என்பதைப் பெயரெச்சமாகவும், கால் (காலம்) என்பதைப் பெயராகவுங் கொண்டு 'குறைந்த காலத்து' என்று பொருள் கூறினர்.

**உழவர் ஏரின் உழாஅர்**

உழவர் - நிலத்தை உழுவோர் ; (நிலத்தில் உழைப்போர்).

உழவு, உழப்பு, உழக்கு: இவற்றின் ஒருமைப்பாட்டை நோக்குக. 'உழப்பெருது பொன்றப் புடைத்துழுது' -சிந்தாமணி : 2783; 'உழுதல் மடித்தல் உழக்குதலாகும்'- பிங்கலந்தை : 2200 ஏர் - எழுச்சி, எழில், அழகு, பொலிவு: 'ஏர் தருசுடரின்' புறநானூறு: 155; 'மா வின் தளிர்ஏர் அன்னமேனி'- மதுரைக் காஞ்சி : 706 -7. 'சீயமன்னான் இம்மையும் வனப்பும் ஏரும்'- சிந்தாமணி : 1721. வாழ்வுக்கு எழுச்சி - பொலிவு - ஊட்டுவது என்பது கருத்து. இக்கருத்தை உள்ளுறையாக் கொண்டது ஏர். உழவன் ஏர் பூட்டுதலைக் காணும் உலகம் எழுச்சியும் பொலிவும் உறுவது இயல்பு.

உழா அர் : அளபெடை, உழமாட்டார் மாட்டார் என்னும் உறுதியை உணர்த்துவது.

**உழவு - உழைப்பு**

நல்லுடலுடையார் மனம் சாம்பிக் கிடவாது. அதன் கண் கிண்டுதல் இயல்பாக நிகழும். கிண்டுதலினின்றும் எழுச்சி பிறக்கும். எழுச்சியே ஊக்கம் என்பது. ஊக்கம் பலதிற முயற்சியாகும். முயற்சிக்கு அடிப்படை உள்ளக் கிண்டுதல்.

கிண்டல், கிளறல், கிளைத்தல் இவையாவும் ஒரு பொருட்சொற்கள். இக்கிண்டல் முதலியவற்றை உழவு - உழப்பு - என்று ஆன்றோர் வழங்கியுள்ளனர்; 'கேழலுழுத இருஞ்சேறு கிளைப்பின்' - புறநானூறு : 176: 'உழுது மாநிலத்தேன மாகி' - ஞானசம்பந்தர் தேவாரம்; 'உகிரி னுழுதாங் கணிந்தாரே; - சிந்தாமணி : 2692.

உழவு உழப்பு இரண்டும் ஒன்றே. இதனின்றும் வந்தது உழைப்பு. உழவு, உழைப்புக்குப் பொருளாதலை, 'மெய்யதுழவி னெதிர்புனன் மாறாடி' எனவரூஉம்[1] பரிபாடலானும், 'உழப்பின் வாரா உறுதிக ளுளவோ' எனவரூஉம்[2] பட்டினத்தார் பாடலானும் உணர்க.

## ஏர் உழவு

உழவு என்பது பொதுவாக முயற்சிகளெல்லாவற்றையும் உணர்த்துவது; சிறப்பாக ஏர் கொண்டு நிலத்தை உழுதலைக் குறிப்பது. என்னை? முயற்சிகளுள் உயிராயது - தலையாயது - உழவாதலின் என்க. திருக்குறள்: உழவு அதிகாரம் பார்க்க.

பிறவுழவுகளை நீக்கி ஏரால் நிலத்தை உழுதலைக் குறிக்க வேண்டி 'ஏரான்' என்றார்.

## உழவு மழை

கேணி, ஏரி, ஆறு முதலியன இருக்கின்றன. இவைகளிற் சில மழை நீராலும், சில ஊற்று நீராலும், சில இரண்டாலும் நிரம்புதலுண்டு. மழை நெடுங்காலம் பெய்யாதொழியின், ஊற்று நீரும் அற்றுப்போகும். எனவே, எல்லாவற்றிற்கும் வேண்டற் பாலது மழை நீரே யாகும். கேணி, ஏரி, ஆறு முதலியவற்றில் எஞ்சி நிற்கும் நீரை நம்பியும், ஊற்றை நம்பியும் உழவர் ஏர் கட்டப் புகார். மழையின் வருவாய் கண்டே அன்னார் ஏர் கட்டுவர். இக்கருத்து இக்குறட்பாவில் திகழ்தல் காண்க.

வரவு செலவு என்னும் வழக்காற்றை என்னுக. வரவின்றிச் செலவு செய்தல் இயலாது. செலவுக்குத் தக்க வரவு வேண்டும். ஒருமுறை மழை பெய்கிறது. நீர்நிலைகள் நிரம்புகின்றன. அவற்றிலுள்ள நிர் செலவாகிறது. செலவுக்கு வருவாய் வேண்டுமன்றோ? வருவாயின் வளங் குன்றினால் உழவர் எங்ஙனம் ஏர் பூட்டுவர்? அதனால், 'புயலென்னும் வாரி வளங் குன்றிக்கால் - உழவர் ஏரின் உழாஅர்' என்றார்.

பருவ மழைக்கு உழவு மழை என்றொரு பெயருண்டு. உழவுமழைக் குறி உழவருக்கு நன்கு தெரியும்.

## உழவின் மாண்பு

உலகிலுள்ள தொழில்களிலெல்லாம் சிறந்தது உழவே யாகும். உழவு இல்லையேல் வாழ்வேது? உலகமேது? உழவு நடந்தால் உலகம் வளம்பெறும்; வாணிபம் நிகழும்; அரசும்

1. 10 : 103. 2. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை : 10 : 1.

இயங்கும்; பிறவும் நலம் பெறும். உழவுக்கு ஒப்பாக எதைக் கூறுவது? உழவுக்கு உழவே ஒப்பாகும். இத்தகைய உழவுக்கு மழையின் வருவாய் இன்றியமையாததெனில் மழையின் மாண்பை என்னென்று கூறுவது?

தெய்வத் திருவள்ளுவர் மழையின் பெற்றியை எதைக் குறிப்பிட்டு விளக்குகிறார்? பாருங்கள்! உழவைக் குறிப்பிட்டு மழையின் மாண்பை விளக்கிறார்; மழைவளங் குன்றின் உழவு நடைபெறாதென்கிறார். உழவோ உலகின் உயிர்த் தொழில்! அத் தொழிற்கு மழைமுதல் வேண்டும். எதைக்காட்டி வான்சிறப்புக் கூறுகிறார் ஆசிரியர் என்பதை ஓர்க.

**உழவும் அமைதியும்**

மழையின் வருவாய் காணும் உழவர் புத்தமிர்தம் உண்டவர் போலாவர். புதுப்புனல் அவர்க்கு மகிழ்ச்சியூட்டுவது போல வேறெதுவும் ஊட்டாது. உழவர் மகிழ்வுடன் ஏர் பூட்டுவர்; மங்கலம் பாடுவர்; நிலத்தை உழுவர்; சேறு செய்வர்; விதை விதைப்பர்; நாற்று நடுவர்; களைபறிப்பர்; பைங்கூழ் பார்த்து இன்புறுவர்; கதிர் கண்டு இன்பத்தில் தோய்வர்; சாலியை அறுப்பர்; அடுக்குவர்; குன்றுசெய்வர்; தள்ளுவர்; பிணையடிப்பர்; தானியங்களைத் தூற்றுவர்; மணைகளைப் பிரிப்பர்; மலையாக்குவர்; பகிர்ந்து கொள்வர்; கொடுப்பர்; உண்டு களிப்பர். களிப்பினின்று என்ன எழும்? பாட்டன்றோ எழும்? மன்பதை பாட்டு மயமாம்போது, அதனிடை என்ன என்ன நிலவும்? அறம் நிலவும்; அன்பு நிலவும்; அமைதி நிலவும். ஏருழவின் முடிந்த விளைவு அமைதி அமைதியே யாகும். அவ்வேரின் உழவு குன்றினால் மக்களின் எண்ணங்கள் பலவாறு செல்லும்; அமைதி கெடும்.

மக்களுள் ஏரோட்டுவோர் பல்லோர். ஏருழுது மணி கொழிப்போர் உள்ளம் போர் கொழிக்க எழுங்கொல்? அவர்தம் பெரும்பொழுது இயற்கையில் ஈடுபட்டு உழைப்பில் செலவா கிறது. அதனால் அவர் சோம்பிக்கிடத்தற்குப் போதிய பொழு தில்லை. சோம்பிக் கிடப்போர் நெஞ்சமே பெரிதும் தீமைகளை நினைக்கும். தீய எண்ணங்களே பிணக்கு, போர் முதலிய கொடுமைகளாகப் பரிணமிக்கும். நற்றொழிலில் ஈடுபடும் நெஞ்சம் பிணக்கில் - போரில் - இன்ன பிறவற்றில் ஈடுபடுதல் அரிது.

பெரும்பான்மையோர் வழி உலகம் நடைபெறுதல் இயல்பு. பெரும்பான்மையோர் ஏர் பூட்டுவோரானால் உலகில் போர் மூட்டுதற்கு இடம் எது? ஏர் பூட்டுவோர் போர் மூட்டார்;

*வில் பூட்டார். இந்நிலைமையை ஒருபோழ்து தமிழ்நாட்டில் கண்ணுற்ற குறுங்கோழியூர்க் கிழார் என்னும் புலவர், 'திருவில் அல்லது கொலைவில் அறியார் - நாஞ்சில் அல்லது படையும் அறியார்' என்று பாடினர். [1]திருவில் - வானவில்; நாஞ்சில் - கலப்பை).*

*உலகில் அமைதியை நிலைபெறுத்த வல்லது ஏரின் உழவு. உழவுக்கு மழை முதன்மை வேண்டற்பாலது. இதனால் மழை மாண்பு ஏரின்வழி இப்பாட்டால் அறிவுறுத்தப்பட்டது. (5)*

**(iii) கடலாக்கம்**

**16**

***நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி***
***தானல்கா தாகி விடின்.***

**பொருள்**

*எழிலி தடிந்து - மேகம் மின்னி, தான் நல்கா தாகிவிடின் - தான் - (மழையை) வழங்கா தொழியின், நெடுங்கடலும் - நெடிய கடலும், தன் நீர்மை குன்றும் - தனது இயல்பிற் குறையும்.*

**கருத்து**

***மழை பெய்யாவிடின் கடல் வளமுங் குறையும்.***

**விருத்தி**

*மேற்போந்த பாக்கள், 'மழை, நிலத்துக்கு இன்றியமை யாதது' என்பதைத் தெரிவித்தன. இப்பாடல், 'மழை, கடலுக்குத் தேவை' என்பதைத் தெரிவிக்கிறது. மழை நிலத்துக்கன்றிக் கடலுக்குந் துணை செய்வது. கடல் கெடின், உலகமுங் கெடும். இரண்டின் நலத்துக்கும் மழை தேவை.*

**எழிலி தடிந்து தானல்கா தாகி விடின்**

*எழிலி - எழிலுடையது; மேகம். (எழில் - அழகு; எழுச்சி; 'துணைமல ரெழில்நீலத் தேந்தெழின் மலருண்கண்'; எழில் - எழுச்சி; எழில் - அழகு - கலித்தொகை 14 : 2).*

*தடிந்து - மின்னி என்பர் மணக்குடவர்; தடியுடை முகிற்கு லஞ்சலிப்ப' - கம்பராமாயணம்: தாடகை வதை: 37.*

*தடிந்து - குறைத்து என்பர் பரிமேலழகர். "ஈண்டுக் குறைத்த லென்றது முகத்தலை; அது, [2]'கடற்குறைபடுத்தநீர் கல்குறை*

1. புறநானூறு : 20. 2 பரிபாடல் 20 : 1.

*படஎறிந்து' என்பதனாலும் அறிக" என்று அவரெழுதிய குறிப்புரையை நோக்குக.*

*நல்காது - வழங்காது; அருளாது.*

*நல்கல் - வெளிப்பட்டுக் கொடுத்தல் என்பர் பரிமேலழகர்; 'நல்கினல்லது - வெளிப்பட்டுக் கொடுப்பினல்லது'- பரிபாடல் : 15: 15 பரிமேலழகர் உரை.*

*'எழிலிதான் தடிந்து நல்காதாகிவிடின்' என்பதற்கு 'மேகந்தான் அதனைக் (கடலைக்) குறைத்து அதன்கட் (கடலின்கட்) பெய்யாது விடுமாயின்' என்று பரிமேலழகர் பொருள் கூறியிருத்தல் காண்க.*

**எழிலி**

*எழிலி - மேகம்; இங்கே சூல்கொண்ட மேகம். இது, 'தடிந்து' 'நல்காது' என்பனவற்றான் அறியக்கிடப்பது சூல் கொண்ட மேகமே மின்னி மழை பெய்வது. ஆகவே, ஈண்டு எழிலி யைச் சூல்கொண்ட மேகமென்று கொள்க. 'கமஞ்சூல் எழிலி போல்' - பரிபாடல் : 18 : 2.*

**தடிந்து தான் நல்கா தாகிவிடின்**

*மேகம் சூல்கொண்டு பெய்வதை ஈண்டு ஆசிரியர் 'தடிந்து நல்கல்' என்று அருளியுள்ளார்.*

*எழிலியின் நல்கலே தலையாயது. என்னை? அதன் வழிப்பிற நல்கல்கள் நிகழவேண்டுமாதலின் என்க.*

*நல்கல் இருவிதம். ஒன்று பயன் கருதி நல்குவது; மற்றொன்று பயன் கருதாது நல்குவது. பின்னையது சிறந்தது. பகவத்கீதை என்னும் பெருநூல் அறிவுறுத்துவது பயன் கருதாத நல்கு தலையே யாகும். மேகம் மழையைப் பயன் கருதி நல்குவதில்லை. தற்பயன் கருதாமலே மேகம் மழையைப் பொழிகிறது. பயன் கருதாக் கொடைக்கு மேகம் பொழிவதை எடுத்துக்காட்டுவது புலவர் வழக்கம்.*

*'மாரி யன்ன வண்மையிற் சொரிந்து' - புறநானூறு: 397 : 16. 'மழைசுரந் தன்ன ஈகை நல்கி'- மலைபடுகடாம் : 580. 'அவன் வண்மைபோல் வானம் பொழிந்த நீர்'- பரிபாடல் : 22 : 7-8.*

*ஈண்டு ஆசிரியர், 'எழிலி தான் நல்கா தாகிவிடின்' என்றார். 'தான்' என்பதில் பயன் கருதாமை கரந்து ஒளிர்தல் காண்க.*

*'* * * * நல்கா தாகிவிடின்' என்பதில் எழிலியின் மாட்டு 'நல்குவதே' பெரிது முண்மை தொனித்தலை யுணர்க.*

### நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும்

*நெடுங்கடல் - பெரிய கடல்; ஆழிய கடல். கடலின் பெருமையையும், ஆழத்தையும், பிறவற்றையும் எளிதில் அளந்தறிதல் இயலாமையால், அதனை அளவற்றதெனக் கூறுவது மரபு.*

*'நெடுநெறி மருங்கின் நீர்தலைப் படுவோன்'- சிலப்பதிகாரம்: 13 : 43. (நெடுநெறி - பெருவழி: அடியார்க்கு நல்லார்). 'குறுங்கா ழூலக்கை யோச்சி நெடுங்கிணற்று வல்லூற்றுவரி தோண்டி' - பெரும்பாணாற்றுப்படை : 97-98. (நெடுங்கிணற்று - ஆழ்ந்த கிணற்றில் : நச்சினார்க்கினியர்).*

*உம்மை : உயர்வு சிறப்பு.*

*நீர்மை - இயல்பு (தன்மை); நீரின் தன்மை.*

*நீர்மை என்பதற்கு அழகு, ஒளி, நிலைமை முதலிய பல பொருளுண்டு. அவ்வளவையும் ஈண்டுப் போந்துள்ள 'நீர்மை'யில் பொருத்திப் பார்க்க, கடலின் இயல்பு குன்றின், அதன் அழகு, ஒளி, நிலைமை முதலியன குன்றும், 'இது நீர்த்தோ நினக்கென'- புறநானூறு: 43. (நீர்த்தோ - தன்மையதோ); 'நைவாய * * * *மெய்ந்நீர்மை தோற்றாயோ' (நீர்மை - அழகு); 'என்னீர்மை கண்டிரங்கி' (நீர்மை - நிலைமை) - திருவாய்மொழி; 'நெடுநீர் வார்குழை களைந்தென' -நெடுநல்வாடை : 139. (நீர்மை - ஒளி).*

### கடலும் மழையும்

*கடல்நீர், ஞாயிற்றின் ஒளியால் ஆவியாக மாறி, மேகமாகித் தடித்து, அதனூடே குளிர்மை ஏறும்போது மழையாய்ப் பெய்கிறது. இதனை உள்ளவாறே கூறுவது விஞ்ஞானக் கலை. காவியக்கலை அவ்வாறு கூறுவதில்லை. காவியம், காட்சிகளை அணிபெறக் கூறும். கடல் நீர், ஆவியாகி மேகமாகித் தடித்து மழையாய்ப் பெய்வதைக் காவியக் கலை, 'கடல் நீரில் மேகம் சென்று முகந்து மழை பொழிகிறது' என்று இசைக்கும். மேகஞ் செல்லல், நீரை முகத்தல், மழை பெய்தல் முதலியன பல வழியில் வருணிக்கப்படும். வருணனைகளைக் காவியக் கடலில் பார்க்க.*

***[1]'பாடிமிழ் பனிக்கடல் பருகிவல னேர்பு***
***கோடு கொண்டெழுந்த கொடுஞ்செல வெழிலி***
***பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை'***

***[2]'இலங்க லாழியி னான்களிற் றீட்டம்போற்***
***கலங்கு தெண்டிரை மேய்ந்து கணமழை***

1. முல்லைப்பாட்டு : 4 – 6. 2. சீவக சிந்தாமணி,

*பொலங்கொள் கொன்றையி னான்சடை போன்மின்னி*
*விலங்கல் சேர்ந்துவிண் ணேறிவிட் டார்த்தவே'*

[1]*'நீற ணிந்த கடவு ணிறத்தவான்*
*ஆற ணிந்துசென் றார்கலி மேய்ந்தகிற்*
*சேற ணிந்த முலைத்திரு மங்கைதன்*
*வீற ணிந்தவன் மேனியின் மீண்டதே'*

அணியெனும் அழகுத் திரையை நீக்கிப் பொருளைப் பார்த்தால் காவிய வருணனை மறைவுறும்; விஞ்ஞான உண்மை புலனாகும். காவிய வருணனைகளை மட்டும் பொருளாக் கொண்டு போரிடுவது அறியாமை.

'மழை பொழியா தொழியின், கடல் நீர்மை குன்றும்' என்னுங் கருத்து இத்திருக்குறளில் மிளிர்கிறது. இது கடல்நீர் ஆவியாக மாறுதலைத் தெரிப்பது. இதுபற்றியே, 'தடிந்து' என்பதற்கு 'மின்னி' என்று பொருள் விரிக்கப்பட்டது.

**ஞாயிற்றின் ஒளி**

மழை கடலிலும் பெய்கிறது; நிலத்திலும் பெய்கிறது. நிலத்தில் விழும் மழைநீரும் நிலத்துக்குப் பல வழியிலும் பயன்பட்டு மீண்டும் பல வடிவாய்ப் பெரிதுங் கடலையே சேர் கிறது. கடல்நீர் ஆவியாய் மழையாய்ப் பயன்பட்டு, மீண்டும் கடலிடத்தே புகுகிறது. இப்போக்கு வரவை நிகழ்த்துவது ஞாயிற்றின் பேரொளி.

ஞாயிற்றின் வெயிலால் கடல்நீர் ஆவியாக மாறி, மழை யாகப் பெய்யா தொழியின், கடலின் நிலை என்னாம்? கடலின் இயல்பு மாறும்; கடல்படு பொருள்களுந் தோன்றா. அதன் கண் ணுள்ள பல கோடி உயிர்களும் அழியும்; அழுகும். அந்நிலையில் நெடுங்கடல் எத்தகைய நாற்றம் வீசும்? நாற்றத்தால் உலகம் ஒரு நொடியில் சாய்ந்து மாளும். கடல்நீர் ஆவியாக மாறாதொழி யின் விளையும் கேட்டை உன்னுங்கள். கேடு, கடலுக்கும் விளையும்; அதன்வழி உலகுக்கும் விளையும்.

ஒரு சிறு கேணியின் நீர் சிறைப்பட்டு, அதன் இயல்பு குன்றின், அதனால் விளையுந் தொல்லையே பொறுத்தற் கரிய தாகிறது. ஒரு பெருங் கடல் தன்னியல்பு குன்றி நாறினால் உலகுக்கு எத்தகைத் தொல்லை நேரும்? அதை எச்சொல்லால் சொல்வது?

1. கம்ப ராமாயணம்.

ஞாயிற்றின் ஒளி என்றுங் கான்றிக் கொண்டிருக்கிறது. அக்காலுதலால் நிலத்திலும் கடலிலும் பற்பல மாறுதல்கள் உற்றுக் கொண்டிருக்கின்றன. மாறுதல்கள், சக்திகளின் போக்கு வரவை நிகழ்த்துகின்றன. பழைய ஜீவசக்திகள் குன்றக் குன்ற அவைகளிற் புதுச் சக்திகள் புகுந்து புகுந்து ஈடுபடுத்தும். இதற்குத்துணைபுரிவது ஞாயிற்றின் வெயில்.

மாறுதல் கடலிலும் நிகழ்தலால் கடலுக்குக் கேடு நிகழ்வ தில்லை. கேடு நிகழ்ந்தால் விளையுங் கொடுமை இத் திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கிறது.

'மழை பொழியா தொழியின் கடலின் நீர்மைகுன்றும்' என்றார். இஃது என்ன உணர்த்துகிறது? கடலுக்கும் மழைக்கு முள்ள தொடர்பை உணர்த்துகிறது. தொடர்பு என்ன? கடல்நீர் ஞாயிற்றின் வெயிலால் ஆவியாகி மழையாகப் பெய்து பயன் தருவது. கடல்நீரின் ஆவியே மழை என்பது.

**நெடுங்கடலும்**

நிலத்தினுங் கடல் பெரிதாதலின், 'நெடுங்கடலும்' என்றார். அந்நெடுங்கடலுக்கும் மழைத்துணை வேண்டும் என்றபடி.

**நீர்மை குன்றும்**

கடல்நீரின் தன்மை குன்றின், அதன் அழகு, ஒளி, நிலைமை முதலிய எல்லாம் குன்றும், இவை யாவுங் குன்றும் என்பார் பொதுப்பட 'நீர்மை குன்றும்' என்றார்.

மழை முற்றும் பொய்ப்பதில்லை. ஞாயிறு உள்ளவரை மழை பொய்த்தல் அரிது. சிற்சில காரணம் பற்றிச் சில இடங்களில் மழை பொய்ப்பதுண்டு. அதனாலும் வளஞ்சிறிது குன்றும். அதுபற்றியே ஆசிரியர் 'குன்றும்' என்றார். 'குன்றும்' என்பது முற்றும் பொய்த் தலின்மையை அறிவுறுத்துவது.

மழைக்கு மூலமாக உள்ளது கடல். அதற்கும் மழைத் துணை வேண்டுமெனில், மழையின் மாண்பை என்னென்று கூறுவது?

'மழைக்கு முதலாய கடற்கும் மழை வேண்டும் என்பதாம்'- பரிமேலழகர். (6)

**(iv) ஒழுக்கம்**

**17**

*நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்*
*வானின் றமையா தொழுக்கு.*

**பொருள்**

*நீர் இன்று - குணம் இன்றி, உலகு அமையாது எனின் - உலகம் அமைதி யுறாதெனில், யார் யார்க்கும் -எவர்க்கும், ஒழுக்கு - (அக்குணத்துக்குரிய) ஒழுக்கம், வான் இன்று - மழையின்றி, அமையாது - உண்டாகாது.*

**கருத்து**

*மழையால் உண்டாவது ஒழுக்கம்.*

**விருத்தி**

*முற்பாக்களில் நிலவளத்துக்கும் கடல் வளத்துக்கும் மழை வேண்டும் என்று சொல்லப்பட்டது. மக்கள் வாழ்வுக்கு வளம் மட்டும் போதாது. வளத்தின் பயனும் வேண்டும். வளத்தின் பயன் ஒழுக்கம். ஒழுக்கத்துக்கும் மழை தேவை என்பது இப் பாட்டால் விளக்கப்பட்டது.*

*'நீரையின்றி உலகம் அமையா தாயின், யாவர்க்கும் மழையை யின்றி ஒழுக்கம் உண்டாகாது' - இது மணக்குடவர் உரை.*

*'எவ்வகை மேம்பட்டார்க்கும் நீரையின்றி உலகியல் அமையாதாயின், அந்நீர் இடையறா தொழுகும் ஒழுக்கும் வானையின்றி அமையாது'- இது பரிமேலழகர் உரை.*

**நீரின்று உலகு அமையாதெனின்**

*நீர் - நீர்மை, தன்மை, குணம், 'நீர்த்தோர் நினக்கென' - புறநானூறு : 43 : 15; 'காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும் - அன்னநீ ரார்க்கே யுள' - குறள்: சுற்றந்தழால் ; 'புனலும் குணமும் பூராடமும் நீரே'- பிங்கலந்தை : 3733.*

*இன்று - இன்றி; இல்லாமல்; 'இன்றி என்னும் வினையெஞ் சிறுதி - நின்ற இகரம் உகர மாதல் - தொன்றியன் மருங்கிற் செய்யுளுள் உரித்தே' - தொல்காப்பியம்.*

*உலகு - உலகம்; மக்கள் (ஆகுபெயர்); உலகியல் எனினுமாம்.*

அமையாது - அமைதியுறாது (அமை- அமைதி; ‘கணங் களைப் பாணியால் அமைத்து’ -கந்தபுராணம்: அக்கினிமுகன் வதை : 67).

## இறை – இயற்கை – அமைதி

இறை அமைதி மயமாயிருப்பது. ‘சாந்தம் சிவம்’ என்பது வேதாந்தம். அமைதியான இறையாதற்கு உயிர்களும் அமைதி எய்தல் வேண்டும். உயிர்கட்கு அமைதி வழங்குதற்கென்று இறை வடிவாகிய இயற்கைக் கூறுகளெல்லாம் அமைதியாகவே மலர்ந்திருக்கின்றன. உயிர்கள் இயற்கை வழி நின்றொழுகின், அவை அமைதிப் பேறெய்தும். அமைதியே முடிந்தபேறு. மற்றவை அதற்குச் சாரம் போன்றன.

## அமைதிக்கு நீர்மை

வாழ்வுத் துறைகளை நோக்குக; அவை அமைந்துள்ள முறைமையையுங் கூர்ந்து நோக்குக. அவையெல்லாம் அமைதியை நிலைபெறுத்தவே ஏற்பட்டன என்பது நன்கு புலனாகும். அமைதிக்கு என்ன வேண்டும்? நீர்மை அதாவது குணம் வேண்டும். ‘குணமென்னுங் குன்றேறி நின்றார்’ என்னும் மெய்ம்மொழியின் உள்ளக்கிடக்கையை ஓர்க. (குன்று அமைதிக்கு அறிகுறி; குணமலை என்னும் வழக்கையும் நோக்குக). குணம் அமைதி கூட்டுதல் ஒருதலை. குணமின்றி அமைதிப் பேறெய்தல் அரிது.

## அமைதியும் அரசியலும்

உலகில் மக்கள் பலதிற வாழ்வுத் துறைகளில் தலைப்படு கிறார்கள். அத்துறைகள் குணம்பட நிலவுதற்குச் சிறப்பாக அரசி யற்றுறை வகுக்கப்பட்டது. அரசியல் பெரிதும் அமைதிக் காப்புக் கென்று ஏற்பட்டது.

அரசியல் முறைகள் பலவாய் அடிக்கடி மாறுபடுதல் கண்கூடு. மாறுபடுவதன் நுட்பம் என்ன? அமைதிக்கென்றே ஒரு முறை கோலப்படுகிறது. அஃது அமைதி காக்க இயலாததாயின், வேறு ஒரு முறை கொள்ளப்படுகிறது. அதுவும் பயன்படா தொழியின், இன்னொரு முறை வகுக்கப்படுகிறது. இவ்வாறு அரசியல் முறைகள் விழுந்தும் எழுந்தும், இயங்கிவரும். எம் முறையாலாதல் அமைதி காக்க வேண்டுமென்பது அரசியலின் உட்கிடக்கை.

அரசு எத்தகையதாயினுமாக. அஃது எம்முறையில் அமை யினும் அமைக. அது மன்பதையில் அமைதி என்னும் நிலை யத்தைக் கோலுவதா யிருத்தல்வேண்டும். இல்லையேல்

மன்பதை சிதறுண்டு போகும். அமைதியை நிலைபெறுத்த வல்லது குணம் குணமேயாகும்.

**அமைதியும் படையும்**

இந்நாளில் அமைதிக் காப்புக்கெனப் பலவித அமைப்பு களிருக்கின்றன. அவைகளிற் குறிக்கத்தக்கன. காவற்படை கருவிப் படை, நீர்ப்படை, வான்படை முதலியன. இவ்வளவும் அமைதி காக்கின்றனவா? இவைகளால் மட்டும் அமைதி காத்தல் இயலாது. படைகள் அமைதி காத்தலுக்குப் பதிலாக அமைதி குலைப்பதற்குப் பயன்படுதலுமுண்டு. படைச்செருக்கு ஆசைப் பேயை எழுப்பினும் எழுப்பும். ஆசைப்பேய் அமைதியை நிலை பெறுத்துந் தன்மையதா?

**அமைதியும் அச்சமும்**

அமைதி காக்கவல்லது குணம் ஒன்றே. ஒவ்வொருவரும் குணமுடையராயின், அவரால் ஆக்கப்படும் மன்பதையில் அமைதியே நிலவும். அமைதிக்குப் படைகளே வேண்டும் என் னும் அவசியமில்லை. படைகளாலும், சட்டங்களாலும், வேறு பல திறல்களாலும் உயிர்களை அச்சுறுத்திக் காக்கப்படும் அமைதி அமைதியாகாது. அது போலியேயாகும். அச்சத்தால் அமைதியை நிலைபெறுத்தல் இயலாது. அச்சத்தால் அடக்கப் படும் இடங்களில் திடீரெனப் போர் மூளும்; கொலைப்புரட்சி நிகழ்ந்துவிடும். ஆகவே, அச்சத்தால் அமைதி காத்தல் என்பது பேய்த்தேரேயாகும். அமைதிக்கு வேண்டுவது ஒன்றே. அது நீர்மை - தன்மை - குணம் - ஈர்ங்குணம்.

**அற ஆட்சி**

உலகில் குணம் பெருகும் முறையில் அறஆட்சி நடைபெறு தல் வேண்டும். அப்பொழுதே கல்வி, தொழில், வாணிபம் முதலியன குணமுடையனவாகும். இவை குணமுடையனவாயின், உலகில் குணம் மருவும்; மல்கும். இவ்வாறு அநுபவத்தில் முதிர்ந்த பல பெரியோர் கூறிச் சென்றனர். அவருள் இங்கே சிறப்பாகக் குறிக்கத்தக்கவர் பிளேட்டோ என்பவர். அவர் குணவான். அவர் உலகத்தைக் குணமாகக் காணவே விரும்பினர். 'குணமென்னுங் குன்றேறி' நிற்போர் வழி அரசு நிகழவேண்டுமென்று அப் பெரியோர் அறிவுறுத்தினர்.

திருவள்ளுவரும் அமைதிக்கு நீர்மை வேண்டுமென்கிறார். ஒவ்வொருவரும் நீர்மையுடையராயின், உலக நீர்மை வண்ண மாகும். நீர்மை யுலகம் அமைதி மயமாதல் திண்ணம். நீர்மை

இல்லாத இடத்தில் அமைதி எங்ஙனம் நிலவும்? அது பற்றியே, 'நீரின் றமையா துலகு' என்றார்.

**யார் யார்க்கும் ஒழுக்கு வானின்று அமையாது**

யார் யார்க்கும் - எவர் எவர்க்கும்; எத்திறத்தவர்க்கும்; எப்படிப்பட்டவர்க்கும்.

ஒழுங்கு- ஒழுகு - ஒழுக்கு - ஒழுக்கம் - நடை - நன்னடை.

'ஓதும் ஓத்தும் ஒழுக்கும் நின் உண்டியும்'- நீலகேசி : 558.

வான் - மழை : ஆகுபெயர்.

**குணத்தால் ஒழுக்கம்**

அமைதிக்குக் குணம் தேவை. குணத்துக்கு ஒழுக்கம் தேவை. குணத்தின் பரிணாமம் ஒழுக்கம். ஒழுக்கத்தின் மாண்பை விளக்கவே, 'ஒழுக்கமுடைமை' என்னும் ஒரு தனி அதிகாரம் திருவள்ளுவரால் ஓதப்பட்டது. அவர், 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' என்றும், 'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை' என்றும் அருளியிருத்தலை உன்னுக.

**ஒழுக்கத்துக்கு மழை தேவை**

ஒழுக்கத்துக்கு ஊற்று எது? கற்றவர் பலபடக் கூறுவர். கல்வி அறிவு ஒழுக்கத்தில் மேம்பட்டு அநுபவத்திற் சிறந்து அகக்கண் திறக்கப்பெற்ற திருவள்ளுவர், 'வானின்றமையா தொழுக்கு' என்கிறார். எப்படி?

உயிர்கள் நன்றாக ஒழுகுதற்கு வளம் வேண்டும். வளத்துக்கு மழை வேண்டும். மழையில்லையேல் வளமில்லை; வளமில்லை யேல் நல்வாழ்வு இல்லை. நல்வாழ்வு இல்லாத இடத்தில் நல் லொழுக்கம் இராது. வாழ்வுப் போராட்டம் எங்கு எழுகிறதோ அங்கு நல்லொழுக்கம் இடம்பெறாது. வறுமையால் பசியும் பிணியும் மக்களை வருத்தும் நிலையில் மக்கள் என் செய் வார்கள்? மக்கள் பொய் பகர்ந்தோ, களவாடியோ, கொலை செய்தோ, பிற இழிவுகளில் இறங்கியோ வாழ்வு நடாத்த முயல் வார்கள். வறுமையால் பசியும் பிணியும் வருத்தும் நாட்டில் பொதுவாகப் பொய்யும் களவும் கொலையும் மலிதல் இயல்பு. வறுமை நீங்கினால் மக்களிடைப் பொய் களவு கொலை முதலிய தீயொழுக்கக் கூறுகள் பெரிதும் அருகும்; நல்லொழுக்கக் கூறுகள் பெருகும்.

வறுமை போக்கி வளம் நல்கும் ஆற்றல் எதற்கு உண்டு? மழைக்கு உண்டு. இவ்வதிகாரத்தின் உள்ளக்கிடக்கை அதுவே. மழை பெய்து வளம் பெருகின் மக்களின் வாழ்வுப் போராட்டம்

தணியும். அது தணிந்தால் தீயொழுக்கம் அருகி நல்லொழுக்கம் பெருகும். ஆகவே நல்லொழுக்கத்துக்கு மழை இன்றியமையாத தென்பது வெள்ளிடைமலை. இதற்கு விரிவுரை வேண்டுவ தில்லை. இதைத் திருவள்ளுவர் 'மழையின்றியமையா தொழுக்கு' என்றார்.

மழை பெய்து வளம்பெருகின் மக்கள் பெரிதும் தொழில் களில் புகுவார்கள். தொழில்கள் முறை முறையே நடைபெறும் இடங்களில் மக்கள் மனம் வேறு வழிகளில் உழல்வதற்கு இடமில்லை. அதனால் தீயொழுக்கம் பெருகுதல் அரிதாகும். தீயொழுக்கம் எழாதவாறு காப்பதற்குப் பல துறைகள் ஆன் றோர்களால் கோலப்பட்டுள்ளன. அவை யாவும் மழை இல்வழி ஆக்கம் பெறா. ஆகவே, ஒழுக்கத்துக்கு மூலம் மழை என்பது உணரற்பாலது.

நீரின்றி உலகு அமையாது; அந்நீர்மைக்குரிய ஒழுக்கம் மழையின்றி அமையாது. ஈண்டு ஒன்றற்கும் ஒன்றற்கும் உள்ள தொடர்பை ஓர்க. உலகுக்கு அமைதி வேண்டும்; அமைதிக்கு நீர்மை வேண்டும்; நீர்மைக்கு ஒழுக்கம் வேண்டும்; ஒழுக்கத்துக்கு மழை வேண்டும். இம்முறையில் மழையின் சிறப்பை ஆசிரியர் விளக்கியவாறு காண்க.

ஒழுக்கம் எவர்க்குந் தேவை. ஆடவர் மகளிர் கற்றார் கல்லார் வறியர் செல்வர் அரசர் குடிகள் முதலிய எல்லார்க்கும் ஒழுக்கம் தேவை. ஒழுக்கம் பொது. அஃது இன்னார்க்குத் தேவை, இன்னார்க்குத் தேவையில்லை என்னும் நியதியில்லை. அஃது எல்லார்க்கும் எவ்வகையினர்க்குந் தேவை. அதனால், 'யார் யார்க்கும்' என்றார். (7).

**(V) தான தவ பூசை**

**18**

***தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்***
***வானம் வழங்கா தெனின்.***

**பொருள்**

வியன் உலகம் - அகன்ற உலகில், வானம் வழங்காது எனின் - மழை பெய்யாதெனில், தானம் தவம் இரண்டும்- தானமும் தவமும் ஆகிய இரண்டும், தங்கா - நிலைபெறா.

**கருத்து**

தானமும் தவமும் நடைபெறுதற்கு மழை தேவை.

**விருத்தி**

*முற்பாட்டில் மழையால் ஒழுக்கம் அமைதல் குறிக்கப் பட்டது. இப்பாட்டில் ஒழுக்கத்தின் கூறுபாடுகளுள் தானமும் தவமும் மழையால் நிகழ்தல் ஓதப்படுகிறது.*

**வியன் உலகம்**

*'வியன் உலகம்' சிங்கநோக்காக நிற்கிறது. வியனுலகில் வானம் வழங்கா தொழியின், அவ்வியனுலகில் தானந் தவம் இரண்டும் தங்கா.*

*உலகம் வியனுடையதே. வானம் வழங்காதொழியின் வெறும் வியன்மையால் உலகுக்கு என்ன பயன் விளையும்? வெறும் வியன்மை தானத்தையும் தவத்தையும் நிகழ்த்தவல்ல தாகுமா? தானத்துக்கும் தவத்துக்கும் மழை தேவை. மழையின் மாண்பை விளக்க 'வியன்' என்றார். வியன் உலகுக்கும் மழை வேண்டும் என்றபடி.*

**வானம் வழங்கா தெனின்**

*வானம் - மழை; 'வானம் வாய்க்க மண் வளம் பெருக'- மணிமேகலை: 19 : 149.*

*'வழங்காதெனின்' என்பதனால் வானம் மழைக்காயிற்று.*

*வழங்காது - நல்காது; கெடாது; இங்கே பெய்யாது; 'பரதர் மலிந்த பயங்கெழு மாநகர் - முழங்கு கடல் ஞான முழுவதும் வரினும் - வழங்கத் தவா வளத்ததாகி' - சிலப்பதிகாரம் : 2 : 2 : 4.*

*வழங்கல் - கைம்மாறு கருதாது தானே வலிந்து அன்புடன் அருளல். இத்தன்மை மழைக்கு உண்டு. அதனால் 'வானம் வழங்கல்' என்னப்பட்டது.*

*'வழங்காதெனின்' : இது வானம் வழங்கும் நீர்மையது என்பதை எதிர்மறைமுகத்தான் தெரிவிப்பது. வானம் வழங்கா நிலை நேர்வதாயின், இன்னது விளையும் என்று உலகுக்கு விளக்கியவாறாம். இது முன்னரும் விளக்கப்பட்டது.*

**தானம் தவம் இரண்டும் தங்கா**

*தானம் - ஈகை.*

*தவம் - நோன்பு.*

*'தானமாவது அறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு. உவகையோடுங் கொடுத்தல். தவமாவது மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கம் முதலாயின'- பரிமேலழகர் குறிப்புரை.*

தானம் பலவகை. அவற்றை நான்காகத் தொகுத்துள்ளனர். சிலர். அவை: ஆகார தானம், அபய தானம், ஒளஷத தானம், சாஸ்திர தானம் என்பன.

தவத்தையும் பலவகைப் படுத்திக் கூறுவோறுளர். அவை யாவும் 'நோன்பு' என்னும் ஒன்றில் அடங்கும்; 'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை - அற்றே தவத்திற் குரு' என்பது ஆசிரியர் திருவாக்கு.

தானம் (ஈகை) - தவம் இரண்டைப் பற்றியும் திருக்குறளில் தனித்தனி அதிகாரமுண்டு.

**தானம் தவம்**

ஒழுக்கத்தின் கூறுபாடுகள் பலபடச் சொல்லப்படு கின்றன. அவை யாவும் இரண்டினின்றும் பிரிந்து பெருகி நிற்பன. அவை புறவொழுக்கம், அகவொழுக்கம் என்பன. முன்னையது தானத்தின் பாற்படும்; பின்னையது தவத்தின் பாற்படும்.

'அகமே புறம்' என்பது மனோதத்துவர் கண்ட உண்மை. அகவொழுக்கம் தவம்; புறவொழுக்கம் தானம். அகத் தவம், புறத்தே தானமாக வெளிவருகிறது. தவம் நுண்மை; தானம் பருமை. தவமும் தானமும் தொடர்புடையன. அவை பிரிந்து நிகழா. தவமின்றித் தானமில்லை. இரண்டும் நீக்கமின்றி இருப்பன. அதனால் இரண்டையும் இணைத்துக் கூறுதல் தொன்றுதொட்ட வழக்காயிற்று. 'தானஞ் செய்திலம் தவமும் அன்னதே' - வளையாபதி; 'தானஞ் செய்மின் தவம்பல தாங்கு மின்' - சிலப்பதிகாரம்: 30 : 190: 'தானமும் தவமும் தாஞ்செய்வா ராயின் - வானவர் நாடு வழிதிறந் திடுமே' - தனிப்பாட்டு; 'ஈன மில்வளங்கள் நல்கும் இரும்புனல் மழை மறுத்துத் - தானமும் தவமும் குன்றி'- வே. திருவிளையாடல் : 44 : 4 ; 'நற்றானம் சீலம் நடுங்காத் தவம் அறிவர் சிறப்பிந் நான்கும்'- சிந்தாமணி : 1545; 'அருந்தவம் தானம் சீலம் அறிவனற் சிறப்பு நான்கும் - திருந்திய குணத்தினார்க்குச் சேதிக்கும் வீதி யாகும்' - மேருமந்தரம் : 729.

**இரண்டும்**

தவம் தானம் என்றும், தானம் தவம் என்றுங் கூறுப. அகத்திருந்து புறத்தே வருதல் ஒன்று; புறத்திருந்து அகம் போதல் இன்னொன்று. திருவள்ளுவர், காணும் புறத்திருந்து காணாத அகம் புகுந்து, 'தானம் தவம்' என்றார். இரண்டும் இணைந்து வருந் தன்மையனவாதலின், 'இரண்டும்' என்றார்.

**இடைக்காலக் கூற்று**

தானம் இல்லறத்துக்குரிய தென்றும், தவம் துறவறத்துக் குரிய தென்றுஞ் சிலர் கூறுப. இக்கூற்று இடைக்காலத்தில் எழுந்ததொன்று. பெண்ணடிமை உலகில் நுழைந்த காலந் தொட்டுச் சிலர் பெண்ணோடு வாழ்தலை இல்லறமென்றும், பெண்ணை வெறுத்துத் தனியே வாழ்தலைத் துறவறமென்றும் எண்ணலாயினர்.அவ்வெண்ணம் நாளடைவில் நூல்களாயிற்று; சம்பிரதாயங்களாயிற்று; பழக்க வொழுக்கங்க ளாயிற்று. இவைகட்குப் பலர் இரையாயினர்.

இயற்கையுடன் இயைந்து வாழ்ந்த பண்டைப் பெரியோர் பெண்ணை வெறுத்தல் துறவறமென்று அறைந்தாரில்லை. அவரனைவரும் பெண்ணுடன் வாழ்ந்தே பெருமை பெற்றனர். பண்டை முனிவரரெல்லாரும் பெண்ணுடன் வாழ்ந்த பெரி யோரே யாவர். அவர் இல்லறத்தாரா? துறவறத்தாரா? ஓர்மின். அவரை அறவோரென்று இன்னும் உலகம் போற்றுகிறது.

இதுபற்றிப் 'பெண்ணின் பெருமை' என்னும் நூலில் 'இயற்கையறம்' என்னும் பகுதியில் விரித்துக் கூறியுள்ளேன். திருக்குறள் - நீத்தார் பெருமை, துறவு, தவம் முதலிய அதிகாரங் கட்கு உரை காணும்போது சில உண்மைகளை விளக்கஞ் செய்வன்.

தவத்துக்கு இல்லறம் துறவறம் என்னும் வேற்றுமை இல்லை. தவத்துக்குக் காடும் ஒன்றே; வீடும் ஒன்றே. தவமாவ தென்ன? பிறர் தீங்கை அன்பால் பொறுத்துச் சிறிதும் இகல் கொள்ளாது, அவர்க்கும் நலம் புரிய விரையும் அருளுடைமை. இத்தவம் பெண்ணை மட்டுந் துறப்பதால் கூடிவிடுமோ? தவத்தின் அடிப்படை அருளொழுக்கம். அதற்குப் பெண் ஆண் சேர்ந்து வாழும் அன்பொழுக்கம் வேண்டற்பாலது.

**தன்னலமற்ற நிலை**

அருளுடைமை பிறர்க்கு உதவத் தூண்டும். பிறர்க்கு உதவுஞ் செயலே தானம். தானம் காரியம்; தவம் காரணம். தவமுடையோரே தானம் செய்வோராவர். மற்றவர் செய்வது தானமாகாது. அதனடியில் தன்னலம் நெளியும். தவம் தன்னல மற்றது. ஆண்டிருந்து பிறப்பதே தானம். தவமே தானமாக வெளிவரல் வேண்டும். இரண்டும் இடையறாத் தொடர்புடை யன. இத்தகைய தவத்தையும் தானத்தையும் வேறுபடுத்தி, அவை முறையே இல்லற துறவறங்கட்குரியன என்று நினைத்தற்கும் இடமில்லை.

**தங்கா**

*தானமும் தவமும் நிகழுமிடத்தில் வறுமை புகுதலாகாது. வறுமை மக்களை நல்லொழுக்கத்தினின்றும் வழுக்கச் செய்யும்; தீயொழுக்கத்தில் வீழ்த்தும். இது மேற்பாட்டுரையில் விளக்கஞ் செய்யப்பட்டது. ஒழுக்கம் இல்லாத இடத்தில் அதன் கூறு களாகிய தானமும் தவமும் எங்ஙனம் நிகழும்? அதுபற்றியே 'தங்கா' என்றார். ஆகவே, வறுமையுள்ள இடத்தில் தானமும் தவமும் நிகழ்தல் அருமை யென்க.*

*வறுமை நீக்கத்துக்கு மழை வேண்டுமென்று இவ்வதி காரமே அறை கூவுகிறது. மழை பெய்து வறுமை யொழிந்து வளம் சிறக்கின் தானமும் தவமும் தடையின்றி நடைபெறும். தானத்துக்கும் தவத்துக்கும் மழை வேண்டும் என்றபடி.*

*தானத்துக்கும் தவத்துக்கும் முதலாவது நல்லுடல் தேவை. நல்லுடலுக்குப் பொருந்திய உணவு முதலியன தேவை. உணவு முதலியவற்றிற்கு வளம் தேவை. வளத்துக்கு மழை தேவை. அம்மழை குன்றின் தானமும் தவமும் எங்ஙனம் நிலைக்கும்? தானத்துக்கும் தவத்துக்கும் மழை தேவை என்பதை இப் பாட்டால் வலியுறுத்தியவாறு காண்க. (8)*

**19**

***சிறப்பொடு பூசனை செல்லாது வானம்***
***வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.***

**பொருள்**

*வானம் வறக்குமேல் - மழை பொய்த்தால், வானோர்க்கும் - உயர்ந்தோர்க்கும், ஈண்டு - இவ்வுலகில், பூசனை - பூசை, சிறப்பொடு செல்லாது - சிறப்புடன் நடைபெறாது.*

**கருத்து**

*மழை பொய்த்தால் பெரியோர்க்கும் பூசை நடைபெறாது.*

**விருத்தி**

*ஒழுக்கக் கூறுகளுள் இரண்டு மேற்பாட்டில் குறிக்கப் பட்டன. இப்பாட்டில் மற்றுமொன்று குறிக்கப்படுகிறது. அது பூசை. பூசைக்கு ஒழுக்கம் வேண்டும். ஒழுக்கத்துக்கு அறிகுறி தானமும் தவமும். ஒழுக்கமும் தானமும் தவமும் உடையாரே பூசைக்கு உரியர். இந்நுட்பத்தை உணர்த்துதற் பொருட்டு*

ஆசிரியர், ஒழுக்கம் உரைத்து, தானதவங் கூறி, அவற்றைத் தொடர்ந்து பூசனையைச் சொற்றனர்.

**வானம் வறக்குமேல்**

வானம்-மழை.

வறக்கும் ஏல்-பொய்த்தால், பொய்க்குமாயின்.

ஏல்: என்னில் என்பதன் மரூஉ.

வறல்-வறளல்,வற்றல்,உலரல்,நீரில்லாமற்போதல்; இங்கே (மழை) பெய்யாமை;'வறந்தென்னை செய்தியோவானம்'-கலித் தொகை:145:20;'மண்பரிய வானம் வறப்பினும்'-பரிபாடல் : 8:129.

வானம் வறல் - மழை பொய்த்தல்; மழை பெய்யா தொழிதல். 'வானம் வறண்டுபோச்சு' என்பது உலக வழக்கு. அவ் வழக்கை ஒட்டியே, 'வானம் வறக்குமேல்' என்றார்.

**வானோர்க்கும்**

வானோர்க்கும்-உயர்ந்தோர்க்கும்; மேலோர்க்கும்; பெரியோர்க்கும்; குருமார்க்கும்; 'தேவர்கட்கும்' என்பர் மணக்குடவரும், பரிமேலழகரும். பெரியோர்க்குத் தேவர் என்றொரு பெயருமுண்டு. திருவள்ளுவரே 'தேவர்' என்று சொல்லப்படுகிறார். மணக்குடவரும் பரிமேலழகரும் 'தேவர் கட்கும்' என்பதை எப்பொருளில் பெய்தனரோ தெரியவில்லை. தேவர் என்றொரு வகுப்பார் நூல்களில் சொல்லப்பட்டுள்ளனர். அவர்க்கு இடம் அந்தரமாம். அவர் குருமாரல்லர்.

உம்மை-சிறப்பும்மை.

**வானோர்**

கடவுள், வாக்கு மனங்கடந்த ஒன்று. வாக்கு மனங்கடந்த ஒன்றை வாக்கு மனமுடையார் நினைத்தலும் இயலாது. வழிபாட்டிற்கென்று கடவுள் இயற்கையையும், கருவி கரணங் கடந்த பெரியோர் உள்ளத்தையும் கோயில் கொண்டுள்ளது. கடவுளை இயற்கை வாயிலாகவோ பெரியோர் வாயிலாகவோ வழிபடுதல் கூடும். இதுபற்றிய விளக்கம் முதலதிகார விருத்தி யுரைகளில் பார்க்க.

ஈண்டு வானோர் என்றது, கருவி கரணம் ஒடுக்குற்று, இறையொளியன்றிப் பிறநிலவாத உள்ளமுடைய பெரியோரை என்க. பெரியோர்க்கே வழிபாடுகளெல்லாம் நடைபெறுகின்றன. கடவுள் தனித்து நின்று எவ்வழிபாட்டையும் ஏற்பதில்லை. பெரியோர் வழிபாடு கடவுளையே சாரும். இன்னோரன்ன காரணங்கொண்டே'வானோர்க்கு' என்றார்.

**வானில் உறைவோர்**

*பெரியோர் ஈண்டு 'வானோர்' எனப்பட்டனர். ஐந்து பூதங்களில் வான் ஒன்று. உடலும் உலகும் ஐந்து பூதங்களால் ஆக்கப்பட்டன. உயிர்கள் ஐந்து பூதங்களை இருப்பிட மாகக் கொண்டு வாழினும், அவ்வவ்வுயிரின் அறிவு வளத்துக்கேற்ப, அவ்வவ்வுயிர் ஒவ்வொரு பூதத்தில் உறைந்து நிற்கும்: உறைந்து நிற்கும் அவ்வவ்வளவில் அவ்வவ்வுயிர் விளக்கமுற்றுத் திகழும்.*

*சிலர் ஐம்பூதவுடலில் வாழினும் அவர் நான்கு பூதங்களில் தோயாது, வான் என்னும் ஆகாயத்தில் மட்டும் பெரிதும் தோய்ந்து நிற்பர். அவரே வானோர் எனப்படுவர்.*

**ஈண்டு**

*ஈண்டு-இவ்வுலகில்.*

*ஈண்டு என்றது மற்ற உலகங்களை நீக்கி இவ்வுலகைச் குறிப்பது. என்னை? வழிபாடு செய்து பேறுபெறுதற்கு இவ் வுலகமே சிறந்த கருவியாய்த் துணைசெய்தலின் என்க. இவ் வுலகில் மண் தத்துவம் அதிகம். மண்தத்துவமுள்ள இடத்தில் மற்றத் தத்துவங்களெல்லாம் இருக்கும். ஆன்மாவின் அறி யாமைக் கறையைக் கழுவுதற்குத் தத்துவங்களெல்லாம் சேர்ந்த ஒரு கருவி தேவை.அக்கருவியே இம்மண்ணுலகம். முள்ளை முள்ளால் எடுப்பதும், அழுக்கை அழுக்கால் கழுவுவதும் கண் கூடு. (மண்ணுலகம் என்பதில் உடலும் சேர்க்கை.)*

*மற்ற உலகங்கட்குத் தத்துவத் தொடர்பு இல்லையோ எனில் , உண்டு என்க. ஆனால் சில தத்துவம் ஒடுங்கிச் செயல் குன்றிக் கிடக்கும். வழிபாட்டுக்கு, எத்தத்துவமும் ஒடுங்காது, விளங்கியுள்ள இவ்வுலகமே சிறந்ததென்று அநுபவ ஞானி களால் கொள்ளப்பட்டது. இதுபற்றியே ஆசிரியர் 'ஈண்டு' என்றார்.*

*'வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் தனை அர்ச்சிப்பர்'- சித்தியார்: 2 : 92.*

**பூசனை சிறப்பொடு செல்லாது**

*பூசனை - பூசை, பூஜா, வழிபாடு, ஆராதனை.*

*பூசை இருவிதம். அவை அகப்பூசை, புறப்பூசை என்பன.*

*சிறப்பொடு- சிறப்புடன்,மேம்பாட்டுடன்,மேன்மையுடன். சிறப்புடன் செய்யப்படும் பூசை என்க.*

*'சிறப்பொடு' என்பதற்குத் 'திருவிழாவொடு' என்று பொருள் கோடலுமொன்று. 'கோயில்புக்கு நங்கைக்குச் சிறப்பயர்ந்த*

செங்குட்டுவற்கு'-சிலப்பதிகாரம் : 29 : உரைப்பாட்டு: 'சென்றுகை தொழுது சிறப்புச் செய்தலின்'-- மணிமேகலை : 10 : 72.

திருவிழா ஒவ்வொருபோது செய்யப்படுவது. அது நைமித்திகம் எனப்படும்.

சிறப்பொடு என்பதை நைமித்திகமாகக் கொள்வோர் பூசையை நித்தியமாகக் கொள்வது பொருத்தம். நித்தியம், நாடோறுஞ் செய்யப்படும் பூசை.

சிறப்பு-நைமித்திகம்.

பூசை-நித்தியம்.

செல்லாது-நடைபெறாது, நடவாது; ஆற்ற இயலாது என்றபடி.

**பூசை**

மக்களுக்குப் பூசை(வழிபாடு) இன்றியமையாதது. பூசையே மக்களை மேன்மைப் படுத்துவது. பூசையில்லா மக்கள் மாக்களாவார்கள்.

பூசை மக்களுக்கு இயற்கை. இயற்கையை விடுத்து வழுக்கி வீழ்வது கேட்டைத் தேடுவதாகும்.

உயிர் பலதிறப் பிறவிகள் தாங்கி மக்கட் பிறவி எய்துகிறது. ஆறாவதறிவு கடவுளுண்மையை உணரும் இயல்பினது. அவ் வியல்பைப் பண்படுத்தினாலன்றித் கடவுளுண்மையை உணர்தல் இயலாது. அதற்குப் பூசை வேண்டற்பாலது. பூசை யிலிறங்கா மக்களின் ஆறாவதறிவு சிறைப்பட்டு ஒளி குன்றும். ஆறாதறிவின் ஒளி குன்றினால் மக்கள் விலங்காதல் உறுதி.

ஆறாவதறிவு பண்பட்டால், மற்ற ஐந்தறிவும் சால்புறும். ஆறாவதறிவு பண்படா தொழியின், மற்ற ஐந்தறிவும் மக்கட் பிறவியை இடர்ப்படுத்தும். அதனால் உலகம் பெருந்துன்ப முறும்.

பூசை முறைகள் பலவகை. அவை அவரவர் அறிவாற்ற லுக்குத் தக்கவாறு அமைந்துள்ளன. மக்கள் பிறவி தாங்கி னோர்க்கு எவ்வகைப் பூசையாதல் இருத்தல் சிறப்பு.

பூசைக்குக் கவலை இருத்தல் கூடாது; மகிழ்ச்சி இருத்தல் வேண்டும். பூசைக்கு மகிழ்ச்சி அடிப்படை என்றுங் கூறலாம். மகிழ்ச்சியுள்ள இடத்திலேயே பூசை சிறப்புடன் நடைபெறும்; கவலையுள்ள இடத்தில் வழிபாடு சிறப்புடன் நடைபெறாது.

**சிறப்பொடு செல்லாது**

*பூசை சிறப்பொடு நடத்தப்பட வேண்டுமாதலால்,'சிறப் பொடு பூசனை' என்றார்.*

*பூசனை சிறப்பொடு செய்யப்பெறல் வேண்டும். அதுவே பயன் தருவது. சிறப்பில் பூசனை பயன் தாரது.அது போலியே யாகும்.*

*மனம் ஒன்றிச் செய்யப்படும் பூசை சிறப்புடையது. மனம் ஒன்றாது செய்யப்படும் பூசை சிறப்புடையதாகாது. பூசை நேரத்தில் உவகையுடையார் மனம் விரைவில் ஒன்றும்; கவலை யுடையார் மனம் விரைவில் ஒன்றாது; ஒன்றுதல் அரிதென்றுங் கூறலாம்.*

*உவகைக்கு வளம் வேண்டும். வளம் இல்லையேல் உவகை ஏது? உவகையைப் போக்குவது வறுமை. வறுமை கவலையைப் பெருக்கும். கவலையுள்ள இடத்தில் பூசை சிறப்புடன் எங்ஙனம் செல்லும்? வறுமை நீங்கி வளம் பெருக என்ன வேண்டும்? மழை வேண்டும். சிறப்பொடு பூசனை செல்வதற்கும் மழை தேவை என்று உணர்க. அதுபற்றியே 'வானம் வறக்குமேல் ....... சிறப்பொடு பூசனை செல்லாது' எனறார்*

*வானோர் பூசை என்று ஈண்டுக் குறிக்கப்படுவானேன் என்று சிலர் கருதலாம். தனித்த கடவுள் பூசையையும், மல முடையார் பூசையையும் விலக்கவேண்டி, வானோர் பூசை என்று ஈண்டுக் குறிக்கப்பட்டது. வாக்கு மனங் கடந்து நிற்கும் தனித்த கடவுளைப் பூசித்தல் வாக்குமன முடையாரால் இய லாது. மலமுடையாரைப் பூசித்தால் மலம் நீங்குதல் அரிது. குருடர்க்குக் குருடர் எங்ஙனம் வழிகாட்டுதல் கூடும்? வானோர் வாக்குமனங் கடந்த கடவுளுமல்லர்; மலமுடைய மனிதருமல்லர். அவர் கடவுள் ஒளி நீக்கமின்றி விளங்கும் உள்ளமுடைய குருமார். அவரைப் பூசித்தால் பூசனை அவர் வாயிலாகக் கட வுளைச் சேரும். அப்பூசனையால் மலம் அறுதற்கும் இடமுண் டாகும். அதனால் 'வானோர் பூசை' என்று ஈண்டுக் குறிக்கப்பட்டது.*

*ஒழுக்கத்துக்கும், தான தவத்துக்கும் மழை துணை செய்வதுபோல, வானோர் பூசைக்கும் அது துணைசெய்யும். மழை பொய்த்தால் ஒழுக்கம், தானம், தவம், பூசை முதலிய வற்றிற்கெல்லாம் ஊறுநேரும். இதைக் குறிக்கவே 'வானம் வறக்குமேல்....' என்றார். வானம் வறண்டால் வயிறு வறளும்; வயிறு வறண்டால் ஒழுக்கம், தானம், தவம், பூசை முதலிய யாவும் வறளும்.*

*வானோர் பூசைக்கும் மழை அவசியம் தேவை எனில் மழையின் மாண்பைச் சொல்லலும் வேண்டுமோ? (9)*

**(vi) எல்லாம்**

**20**

***கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே***
***எடுப்பதூஉம் எல்லாம் மழை.***

**பொருள்**

*எல்லாம் - எல்லாவற்றையும், கெடுப்பதூஉம் - அழிப்பதும், கெட்டார்க்கு-( அவை) அழியப்பெற்றார்க்கு, சார்வாய்-துணையாகி, மற்று - மீண்டும், ஆங்கே - அவ்விடத்தே, எடுப்ப தூஉம் - உண்டாக்குவதும், மழை - மழை.*

**கருத்து**

*அழிப்பதும் ஆக்குவதும் மழை.*

**விருத்தி**

மேற்போந்த பாக்கள் வகை. இப்பாடல் தொகை. மழை பெய்வதால் இன்னின்ன நலன் விளையும் என்பதும், மழை பெய்யாவிடின் இன்னின்ன கேடு விளையும் என்பதும் வகை முறையில் மேற்பாக்களில் சொல்லப்பட்டன. அவற்றைத் தொகைப்படுத்திச் சொல்வது இப்பாடல்.

எல்லாம் 'கெடுப்பதூஉம்', எல்லாம் 'எடுப்பதூஉம்' என்று கொண்டு பொருள் கொள்க.

'* * * * எல்லாம் வல்லது மழை' என்று பொருள் கூறி 'வல்லதென்பது அவாய்நிலையான் வந்தது' என்ற குறிப்பு வரைந்துள்ளனர் பரிமேலழகர்.

**எல்லாம் கெடுப்பதூஉம்**

எல்லாம் - எல்லாவற்றையும்; நிலவளம், கடல்வளம், ஒழுக்கம், தானம், தவம், பூசை முதலிய எல்லவற்றையும்.

கெடுத்தல் - அழித்தல்; வறுமைப்படுத்தல்.

எல்லாம் கெடுப்பதூஉம் - எல்லாவற்றையும் அழிப்பதும்; மழை பெய்யாது எல்லாவற்றையும் அழிப்பதும்.

மழை முற்றும் பெய்யாமலும், அகாலத்திற் பெய்தும், அதிகம் பெய்தும் கேடு விளைப்பதுண்டு.

**கெட்டார்க்குச் சார்வாய்**

*கெட்டார்க்கு - அவை அழியப்பெற்றார்க்கு; (அவை - எல்லாம் ).*

*மழையின்மையால் அஃறிணை யுலகுங் கெடும்; உயர் திணை யுலகுங் கெடும். ஈண்டுக் 'கெட்டார்க்கு ' என்று உயர் திணை யுலகை மட்டுங் குறித்ததென்னை என்று சிலர் ஐயுறலாம். ' கெட்டார்க்கு ' என்னுஞ் சொல்லின் தோற்றமே உயர்திணையைக் குறிப்பது; பொருள் இருதிணையையும் உணர்த்துவது. அஃறிணை யுலகையும், உயர்திணையுலகையும் ஒருங்கே எண்ணி, 'கெட்டார்க்கு ' என்று ஆசிரியர் கூறினர். 'விட்டாரோ * * * * உயர் திணையான் முடித்தார்' - சிலப்பதி காரம் : 8 : 33 : பழைய குறிப்புரை.*

*சார்வாய் - துணையாய் ; கெட்டவர்க்குச் சார்விடமாய்.*

*கேடுற்றவர்க்குத் துணை புரியக் கருணை எழுதல் இயல்பு. சார்வு கருணைக் குறிப்பு. மழை இறையின் கருணைக்கு அறிகுறி.*

**மற்றாங்கே**

*மற்று - மீண்டும்; ' * * * மயலாகும் மற்றும் பெயர்த்து ' -- திருக்குறள் : துறவு.*

*ஆங்கே- அவ்விடத்தே; கேடுற்ற இடத்தே என்றபடி.*

**எல்லாம் எடுப்பதூஉம்**

*எடுத்தல்: உண்டாக்குதல்; எழுப்புதல்; ஆக்கஞ் செய்தல்.*

*(எல்லாம்) : எடுப்பதூஉம் - எல்லாவற்றையும் உண்டாக்குவதும்; மழை பெய்து எல்லாவற்றையும் உண்டாக்குவதும்.*

*மழை காலத்திற் பெய்தும், அகாலத்திற் பெய்யாமலும், அளவாகப் பெய்வதும் கெட்டனவற்றை எடுக்கும்.*

*அளபெடைகளின் ஒலி, உறுதிப்பாட்டை உணர்த்துவது.*

**மழை**

*மழை கெடுத்தல் எடுத்தல் இரண்டையும் செய்யும் என்ற படி. கெடுதல் இன்னதென உணர்ந்தார்க்கே நலத்தின் தன்மை பெரிதும் விளங்குமாதலின் கெடுத்தலை முன்னரும், எடுத்தலைப் பின்னரும் அமைத்தனர் போலும். மேற்பாக்களில் எதிர்மறைக் குறிப்புகள் பலவும், உடன்பாட்டுக் குறிப்புகள் சிலவும் பொறிக்கப்பட்டிருத்தலால் கெடுத்தல் முன்னும், எடுத்தல் பின்னும் முறையே அமைக்கப்பட்டன என்றுங் கூறலாம்.*

*மழை கெடுக்கும்; எடுக்கும். இரண்டையுஞ் செய்யவல்லது மழை. இதனால் மழையினதாற்றல் விளங்குதல் காண்க (10)*

# 3. நீத்தார் பெருமை

*நீத்தார் பெருமை - நீத்தாரது பெருமை ; நீத்தாரது பெருமை கூறல்.*

**நீத்தார்**

*நீத்தார்- மனமாசுகளை விடுத்தவர்; துறந்தவர்; கட்டினின்றும் விடுதலையடைந்தவர் என்பது திரண்ட பொருள்.*

*நீத்தார்- விடுதல்; துறத்தல் .*

*இறை எங்குமிருப்பினும் அது மலக்கட்டற்ற இடத்திலேயே விளங்கித் தோன்றும். நீத்தார் மலக்கட்டினின்றும் விடுதலை யடைந்தவர். அவர்தம் நெஞ்சத் தாமரையில் மின்விளக்கென இறை விளங்கித் தோன்றும்.*

*வாக்கு மனங்கடந்த பரம்பொருள், வாக்கு மனமுடையார் வழிபாட்டை, நீத்தார் வாயிலாக ஏற்று அருள்புரியும். இது முன்னர்ப் பன்முறை சொல்லப்பட்டது. அதலின், இங்கே விளக்கம் வேண்டுவதில்லை.*

*நீத்தாருள் குருமார் நிலை எய்துவோருமுளர்.*

**பெருமை**

*பெருமை : இங்கே எல்லை கடந்த நிலையைக் குறிப்பது. கடவுளுக்குள்ள பெருமையெல்லாம் நீத்தாருக்கும் உண்டு.*

*'வான் சிறப்பை'த் தொடர்ந்து நிற்பது 'நீத்தார் பெருமை.' வான் இயற்கைக் கூறுகளுள் ஒன்று. இறைக்குரிய கோயில் இரண்டு. ஒன்று இயற்கை; மற்றொன்று நீத்தார் நெஞ்சத் தாமரை. ஒரு கோயிலுக்குப் பின்னை மற்றொரு கோயில் திகழும் முறையில் 'வான் சிறப்பு 'க்குப் பின்னை 'நித்தார் பெருமை' வைக்கப்பட்டது. பிற நுட்பங்கள் அதிகாரத்துள் விளக்கப்படும்.*

**உள்ளுறையும் அமைவும்**

*இவ்வதிகாரத்திலுள்ள பொருள் வகையை மூன்றாகத் தொகுக்கலாம். அவை வருமாறு:- 1. நீத்தார் பெருமைத் திறம்; 2. பெருமை ஐந்தழிக்கும் வழியே அமைதல்; 3. பெருமை ஐந்த வித்தமைக்கு அறிகுறிகள்.*

*நீத்தார் பெருமையுடையார். பெருமை அவர்க்கு எவ்வழியில் உண்டாகும்? ஐந்தவிக்கும் வழியிலேயே அவர்க்குப் பெருமையுண்டாகும். இன்னார் ஐந்தவித்தார் என்று எப்படி உணர்வது? இதற்கெனச் சில அறிகுறிகளுண்டு. அவற்றுள் ஐந்த வித்தாரின் குணம் மொழி செயல்கள் ஆகியவை சிறந்தன. குணா மவது வெகுளிக்கு இரையாகாமை; மொழி மறையாய் விளங்கிக் காட்டல்; செயல்கள் பிறரால் செயற்கரியனவாதல்; செயல் களுள் சிறந்தது எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகல்.*

*முதல் மூன்று பாக்களில் பெருமைத் திறமும், இடைப் பாக்கள் மூன்றிலும் பெருமை ஐந்தவித்தலில் அமைதலும், இறுதி நான்கிலும் ஐந்தவித்தமைக்கு அறிகுறிகளும் ஓதப் பட்டிருக்கின்றன.*

**(i) பெருமைத் திறம்**

**21**

***ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து***
***வேண்டும் பனுவற் றுணிவு.***

**பொருள்**

*ஒழுக்கத்து நீத்தார் பெருமை - ஒழுக்கத்திலே நின்று மனமாசுகளை விடுத்தவரது மாட்சிமையை, பனுவல் துணிபு- நூல்களின் முடிவு, விழுப்பத்து வேண்டும் - தன் சிறப்பின் பொருட்டு விரும்பும்.*

**கருத்து**

*நூல்களின் முடிவு நீத்தார் பெருமையை நாடுவதா யிருத்தல் வேண்டும்.*

**விருத்தி**

**ஒழுக்கத்து நீத்தார் பெருமை**

*ஒழுக்கம் - ஒழுகு - ஒழுக்கு - ஒழுக்கம்; (ஒழுகு- நட; ஒழுக்கு - நடக்கை; நன்னடக்கை.)*

*ஒழுக்கம் அத்து - ஒழுக்கத்து; அத்து ஏழாம் உருபின்கண் வந்த சாரியை.*

*ஒழுக்கத்து - ஒழுக்கத்தின் பொருட்டு என்பது மணக்குடவர் உரை.*

*நீத்தார் - மனமாசுகளை விடுத்தவர்; துறந்தவர்.*

மனமாசுகள் அழுக்காறு, அவா, வெகுளி முதலியன. அழுக்காறு முதலியவற்றிற்கு மூலம் மலம். மலக்கட்டி னின்றும் விடுதலை யடைந்தவர் நீத்தார்.

பெருமை - எல்லையற்றது.

**ஒழுக்கத்து நீத்தார்**

ஒழுக்கத்து நீத்தார் என்றதென்னை? ஒழுக்கத்தில் நிற்க நிற்க மனமாசுகள் அகலுமாதலின் என்க. மனமாசுகள் உயிர் களைத் தீயொழுக்கத்திலேயே உந்தும். மனமாசுகளை நீத்தற்கு ஒழுக்கநெறி நிற்கவேண்டுவது உயிர்களின் கடமை. இதுபற்றியே 'ஒழுக்கநெறி நிற்கவேண்டுவது உயிர்களின் கடமை. இதுபற்றியே 'ஒழுக்கத்து நீத்தார்' என்றார்.

நீத்தார் என்பதற்கு உலகை நீத்தாரென்றும், பெண்ணை நீத்தாரென்றும் பொருள் கூறுவோருமுளர். அக்கூற்று ஈண்டைக்கு ஏலாது. உலக வாழ்வையும், பெண்ணொடு வாழ்தலையும் நீப்பது துறவு என்னுங் கொள்கை எப்படியோ மக்களிடை நுழைந்துகொண்டது. அது மன்பதையில் நுழைந்த நாள் தொட்டு 'நீத்தல்' என்றதும், உலகையும் பெண்ணையும் துறத்தல் என்று பொதுமக்கள் கொள்ளலானார்கள். உலகையும் பெண்ணையுந் துறப்பது இயற்கை வாழ்வுக்கு அரண் செய் வதன்று. திருவள்ளுவர் அறிவுறுத்துவது இயற்கை வாழ்வு. இயற்கை வாழ்வை அறிவுறுத்தப் போந்தவர் உலகையும் பெண்ணையும் துறக்குமாறு ஒருபோதும் கூறார். ஆகவே, திருவள்ளுவர் நூலிற் போந்துள்ள நீத்தல் - துறத்தல் - என்னுஞ் சொற்களுக்கு மனமாசுகளை நீத்தல் - துறத்தல் என்று பொருள் கொள்க.

அறியாமைக் கட்டைப் போக்கவே ஆண்டவனால் உலகம் அளிக்கப்பட்டது. அதை நீத்தால் அறியாமை எங்ஙனம் அகலும்?

பெண் ஆண் சேர்க்கை, அன்பைப் பெருக்கித் தன்னலக் கட்டை அறுப்பது, அவ்வற வாழ்வை நீத்தால் தன்னலம் எங்ஙனம் அறும்?

மனமாசுகளை அகற்றுதற்கு உலகவாழ்வும், பெண் ஆண் சேர்க்கையும் இன்றியமையாதன. இது திருவள்ளுவர் உள்ளக் கிடக்கை. இவ்வுள்ளக்கிடக்கை திருக்குறளாக பரிணமித் துள்ளது.

மனமாசுகளை நீத்தற் பொருட்டு ஒழுக்கத்தில் நிற்க வேண்டுமே யன்றி, உலகையும் பெண்ணையும் நீத்தலாகாது.

உலகையும் பெண்ணையும் துறந்த தனிவாழ்வு, மக்களைத் தீயொழுக்கத்திற் செலுத்தும். உலக வாழ்வும், பெண்ணொடு வாழ்தலும் மக்களை நல்லொழுக்கத் துறையில் நண்ணச் செய்யும். இதுகுறித்துக் கூறுவது திருவள்ளுவர் நூல். நூற்கண் விரிந்த முறையில் விளக்கஞ் செய்யப்படும்.

### பெருமை

*நீத்தாரது பெருமை அடுத்த பாட்டில் விளக்கப்படும்.*

### பனுவல் துணிவு விழுப்பத்து வேண்டும்

*பனுவல் - நூல்; ஆகுபெயர்.*

*பனுவல் - சொல் (பனுவுதல் - சொல்லுதல்); 'மெய்யறி பனுவலின்' - தொல்காப்பியம் : சொல் : 96 ; சொல்லால் ஆக்கப் படுவது நூல் (சாஸ்திரம்) .*

*பனுவல் - பஞ்சு; சுகிர்ந்த பஞ்சு; 'பருத்திப் பெண்டிர் பனு வலன்ன' புறநானூறு: 125; பஞ்சால் ஆக்கப்படுவது நூல் (நாண்).*

*பஞ்சால் ஒழுங்காகச் செய்யபடுவது நூல். இப்பெயரே ஒழுங்காகச் சொல்லால் செய்யப்படுவதற்கும் வழங்கப்படு கிறது.'பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச், செஞ்சொற் புலவனே சேயிழையா - எஞ்சாத, கையேவா யாகக் கதிரே மதியாக, மையிலா நூன்முடியுமாறு' '- நன்னூல்; ' நொய்தி னொய்யசொல் நூற்கலுற்றேன் '- கம்பர்: சிறப்புப் பாயிரம்: 5.*

*தமது கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், அநுபவம் முதலியன பின் வருவோர்க்குப் பயன்படு முறையில் அறிஞரால் யாக்கப்படுவது பனுவல்; நுட்பங்களைப் பன்னுவது பனுவல்.*

*துணிவு- முடிவு, தெளிவு, நிச்சயம்; பயன் என்பது கருத்து.*

*விழுப்பம்- சிறப்பு, மேன்மை.*

*விழுப்பத்து- சிறப்பின் பொருட்டு.*

*வேண்டும்- விரும்பும்; இரந்து நாடும் எனினுமாம்.*

*பனுவலின் துணிவு, தன் விழுப்பத்தின் பொருட்டு. நீத்தாரது பெருமையை வேண்டும் என்று கொள்க.*

### பனுவல்

*இப்பாட்டுள் பனுவற் குறிப்பு நுழைந்துள்ளமை உன்னற் பாலது. மக்களுக்கு வழிகாட்டுவன பல. அவற்றுள் சிறந்த ஒன்று பனுவல். பனுவல், கல்வி கேள்வி அறிவு ஒழுக்கம் அநுபவம் முதலியன கனிந்த முதுமைப் புலவரால் செய்யப்படுவது. நற்புலவரின் கல்வி கேள்வி அறிவு ஒழுக்கம் அநுபவம் முதலியன*

அவருடன் மடிந்து விடலாகாது. அவை அவர் வழியில் பனு வலாகப் பரிணமித்தால், அவை என்றும் நின்று பின் வருவோர்க்குப் பயன் தந்துகொண்டிருக்கும். புலவோர் பனுவலாகி வழிகாட்டுகிறாரென்க. வழிகாட்டும் பனுவல் எத்தகையதா யிருத்தல் வேண்டும்?

நூற்பெயர் தாங்கின எல்லாம் நூலாகா. கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ? 'அறம்பொரு ளின்பம் வீடடைதல் நூற்பயனே' என்பது ஆன்றோர் திருவாக்கு. அறவழியில் நின்று, அறவழியிற் பொருளீட்டி, அறவழியில் இன்பந்துய்த்து, விடுதலையடைவதை அறிவுறுத்துவது நூலாகும்.

அறவழிநின்று பொருளீட்டி இன்பந்த துய்ப்பத் துய்ப்ப ஒழுக்கத்தின் விழுப்பம் புலனாகும்; ஒழுக்க நெறியில் நிற்க நிற்க மனமாசுகள் அகலும்; மனமாசுகள் அகலப் பெற்றோரே நீத்தாராவர். அறவழியிற் பொருளீட்டி இன்பந் தூய்த்து ஒழுக்க நெறிநின்று மனமாசுகளினின்றும் விடுதலையடைவதைக் கூறுவது பனுவல். நீத்தார்க்கும் பனுவலுக்கும் உள்ள தொடர்பு ஈண்டுச் சிந்திக்கற்பாலது. 'நீத்தாரே பனுவல் - பனுவலே நீத்தார்' என்று கூறுதல் மிகையாகாது. நீத்தார் எனினும் பனுவல் எனினும் ஒக்கும் என்றுங் கூறலாம்.

பனுவலென்னும் பளிங்கறையில் என்ன விளங்கும்? நீத்தார் பெருமையே விளங்கும்; நீத்தார் பெருமை விளங்கும் பனுவலே பனுவல்; ஏனைய பனுவ லாகா.

**துணிவு**

நூலின் உள்ளுறை எதுவாயினும் ஆக. அதன் துணிவு மட்டும் நீத்தார் பெருமையை உடையதா யிருத்தல் வேண்டும். 'யாதானும் ஒரு பொய்யைச் சொல்லும் நூலும் தன்னை எல்லாருங் கொண்டாடுதற்காகத் துறந்தார் பெருமையை நன்கு மதித்துக்கூறும்' என்று மணக்குடவர் விளக்கியுள்ளதை நோக்கு. எத்தகைய நூலாயினும் அதன் துணிவு நீத்தார் பெருமையை உடையதாயிருத்தல் வேண்டுமென்பது கருத்து. இதனை ஆசிரியர் அழகுபெற, 'பனுவல் துணிவு தன் விழுப்பத்தின் பொருட்டு ஒழுக்கத்து நீத்தார் பெருமையை வேண்டும்' என்று அருளிப் போந்தனர்.

நீத்தார் நூல் செய்யின், அதன்கண் நீத்தார் பெருமை மணம் எவ்வழியிலாதல் கமழும். மற்றவர் நூல் செய்யினும் அதன் கண்ணும் நீத்தார் பெருமையை எவ்வழியிலாதல் அவர் நுழைத்தல் வேண்டும். இல்லையேல் அந்நூல் மணம் பெறா

தொழியும். நீத்தார் பெருமை கூறுவதே நூல் எனப்படும். புலவர் எந்நூல் யாக்கப்புகினும் அந்நூல் உலகுக்குப் பயன்படும் பொருட்டு அதன்கண் நீத்தார் பெருமையை எப்படியாதல் அவர் விரும்பி நுழைப்பது சிறப்பு. அப்பொழுதே புலவர் புகழ் பொன்றாது நிற்கும். அப்புகழ் விழுப்பமுடையதாகும். புலவர் செயல் ஈண்டு நூல் மேல் ஏற்றப்பட்டது.

உடல் எத்தகைய வனப்புடையதாக அமையினும், அதன் கண் உயிர் நிலவவில்லையாயின் அதன் நிலை என்னாம்? அதே போல நூல் எத்தகைய வனப்புடையதாக யாக்கப்படினும், அதன் துணிவில் நீத்தார் பெருமை இல்லையெனில் அஃது உலகில் நிலவாதொழியும். நூலின்உயிர் நீத்தார் பெருமையுடைமை யென்க.

### விழுப்பத்து வேண்டும்

நூல், புலவரால் யாக்கப்படும்போது, உயிராகிய நீத்தார் பெருமை தன்பால் அமையுமாறு அதுவே விரும்பும் என்னுங் கருத்துப்பட ஆசிரியர் கூறியிருத்தலின் நுட்பத்தை ஓர்க.

நீத்தார் பெருமை நிலவாத நூல் தீண்டுவாரற்றுத் துச்சிற் கிடந்து துயருற்று அழியும். அந்நிலை எய்தாதவாறு தன்னைக் காத்துக் கொள்ள நூலின் துணிவு நீத்தார் பெருமையை வேண்டும். தன் விழுப்பத்தின் பொருட்டுப் பனுவலின் துணிவு நீத்தார் பெருமையை வேண்டும் என்பது கருத்து.

நீத்தார் பெருமை நிலவாத நூல்கள் மலியும் இடங்களில் மக்கள் மனமாசுடையவர்களாவார்கள். மனமாசுகள் வாளா கிடக்குமோ? அவை பலவிதப் போராட்டங்களைக் கிளப்பிக் கொண்டேபோகும். தற்கால நாகரிக நாடுகளை நோக்குங்கள். அவை என்றும் போராட்டத்துக்கு இரையாகிக் கொண்டு போதல் கண்கூடு. காரணம் என்னை? நீத்தார் பெருமை நிலவும் நூல்கள் மலியாமை யாகும். மக்கள் மனமாசகன்று நல்வாழ்வு பெற்று விடுதலையடைதற்கு நீத்தார் பெருமை நிலவும் நூல்கள் வேண்டற்பாலன.

மக்கள் ஒழுக்கத்தில் நின்று, மனமாசுகளை நீத்து, விடுதலையடைதல் வேண்டும். விடுதலைக்கு முதற்படியா யிருப்பது நூற்கல்வி. 'முதற்கோணல் முற்றுங் கோணல்' என்பது பழமொழி. முதற்படி கோணலா யிருத்தலாகாது. அது நேரியதாயிருத்தல் வேண்டும். நேரிய நூலாவது தன்னைப்படிப் போரை ஒழுக்கத்தில் நிறுத்தி மனமாசுகளை நீப்பதற்குக் துணை செய்வது.இதற்கு நீத்தார் பெருமை நூற்கண்அமைந்தே தீர்தல்

*வேண்டும். நூல் எத்துறையாயினும் ஆக. அஃது இயல் இசை நாடக வகையிலோ பிற வகையிலோ அமையினும் அமைக. அதன் துணிவு மட்டும் நீத்தார் பெருமையை விரும்புவதா யிருத்தல் வேண்டும்.*

**ஆசிரியரும் பனுவலும்**

*மன மாசை நீத்தற்கு முதற்கருவியாயுள்ளது நூலாதலின், அதன்குறிப்பை இப்பாட்டில் மிளிரவைத்தனர் ஆசிரியர். நீத்தார் பெருமை கூறுகையில் ஆசிரியர் மனம் நூல்மீது சென்றமை அவர்க்கு அதன்மீதுள்ள வேட்கையைப் புலப் படுத்துகிறது. நூற்றுணிவின்வழி ஆசிரியர் நீத்தார் பெருமை யைத் திறம்பட அருளியுள்ளதை ஊன்றி நோக்குக; நூலுக்கும் நீத்தார்க்கும் உள்ள தொடர்பை உன்னுக. (1)*

**22**

***துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்***
***திறந்தாரை எண்ணிக்கொண் டற்று.***

**பொருள்**

*துறந்தார் பெருமை - நீத்தாரது பெருமைக்கு, துணை கூறின் - அளவு கூறின், (அது) வையத்து இறந்தாரை - (அஃது) உலகத்தில் இறந்தவர்களை, எண்ணிக் கொண்டற்று - கணக்கிட் டறிவதை ஒக்கும்!*

**கருத்து**

*நீத்தார் பெருமை அளவுகடந்து நிற்பது.*

**விருத்தி**

*நீத்தார் பெருமை முற்பாட்டில் பனுவல்வழி விளக்கப் பட்டது; இப்பாட்டில் இறந்தாரை எண்ணுவதன் வாயிலாக விளக்கப்படுகிறது.*

**துறந்தார் பெருமை துணைக்கூறின்**

*துறந்தார் - நீத்தார்; மனமாசுகளை நீத்தார்.*

*துணை - அளவு.*

*கூறல் - கூறிட்டுச் சொல்லல்.*

*'பெருமை துணைக்கூறின்'- 'பெருமையை இவ்வளவென் றெண்ணாற்கூறி அறியலுறின்' என்பர் பரிமேலழகர்.*

**துறந்தார் பெருமை**

உலகில் 'பெருமை பெருமை' என்று பேசப்படுகிறது. ஆனால் 'பெருமை' எது என்று உலகம் பெரிதும் சிந்தித்துத் தெளிவடைகிறதா? ஒவ்வொருவர் ஒவ்வொன்றைப் பெருமை என்று கொண்டு அதை அடைய முயல்கிறார்; முயன்று அதை அடைந்த பின்னர் வேறொன்றில் பெருமை இருப்பதாகக் கருதி அதைப் பெற எழுகிறார்; பின்னே அதற்கு மேலும் வேட்கை செலுத்துகிறார். இவ்வாறு பெருமை நாடி நாடி மேலும் மேலும் சென்றுகொண்டிருப்பது உலக இயற்கையாய் விட்டது. ஆகவே, பெருமை எது என்பதைச் சிந்தித்துத் தெளிவது அறிவுக்கழகு.

'பெருமை' நாட்டத்துக்கு அடிப்படை அவா. அவாவுக்கு அடிப்படை மனமாசு. மனமாசால் எழும் அவாவால் நாடப் படும் பெருமை நிலையுதலில்லாதது. அது பெருமையுமாகாது. அதைப் பெருமை என்று கூறுவது உபசாரமேயாகும்.

பெருமை எது? மனமாசற்ற இடத்தில் விளங்குவது பெருமை. இப்பெருமை மேலும் மேலும் அவாவை எழுப்பாது இது நிலையுதலுடையது. நிலைபேறான பெருமை மனமாசற்ற இடத்தில் விளங்குதலால் 'துறந்தார் பெருமை' என்றார்.

துறந்தார் பெருமை விளம்பரமற்றது; மற்றவர் பெருமை' விளம்பரம் விரும்புவது. இதுபற்றி வரும் பாட்டிலும் விளக்கஞ் செய்யப்படும்.

**துணைக்கூறின்**

நிலைத்த பெருமை இது- நிலையாத பெருமை இது-என்று எப்படிக் கூறுவது? இதற்கு அறிவால் அளந்து பார்க்கும் தன்மை வேண்டும் என்பார், 'துணைக்கூறின் ' என்றார். 'கூறின் ' என்பது ஒவ்வொன்றையும் அளந்து அளந்து பாகுபடுத்திப் பார்ப்பதை உணர்த்துவது.

துறந்தார் பெருமையை எண்ணிப்பார்த்தால் அஃது எண்ணைக் கடந்து கடந்து போகும். எண் சென்று முட்டும் நிலைக்கும் மேற்பட்டு அப்பெருமை படரும். அது யாண்டுச் செல்லுமோ? அதற்கு முடிவுமுண்டோ?

துறந்தார் உள்ளத்தில் இறையொளியே மிளிர்தலால், அவர்தம் பெருமை இறையின் பெருமையோடொத்துநிற்கும். இறையின் பெருமை எல்லை கடந்தது. அதேபோலத் துறவோர் பெருமையும் எல்லை கடந்ததாகும்.

**வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று**

வையம்-பூமி; உலகம்; தங்குதலையுடையது(வைகுதல்-தங்குதல்); எல்லா வைப்பையும் உடையது என்னலுமாம்.

இறந்தாரை-வையந் தோன்றிய நாள்முதல் இன்று வரை இறந்தாரை;' பிறந்து இறந்தாரை' என்பது பரிமேலழகர் உரை.

எண்ணிக்கொண்டு-கணக்கிட்டறிதல்.

அற்று-ஒக்கும்;' புத்தே ளுலகத் தற்றென'--புறநானூறு : 22 : 35.

'எண்ணிக்கொண் டற்று' என்பதற்கு 'எண்ணி இத் துணைய ரென அறிய லுற்றாற் போலும்' என்னு பொருள் கண்டுள்ளனர் பரிமேலழகர். 'கொண்டால் என்னும் வினையெச்சம் கொண் டெனத் திரிந்தது' என்பது அவர்தங் குறிப்புரை.

**வையத்து இறந்தாரை**

விடுதலைக்குரிய பிறவி தாங்குதற்கும், பிறவியை நல்வழிப் படுத்தாதவர் இறப்பதற்கும், அதை நல்வழிப் படுத்துவோர் விடுதலை அடைதற்கும் நிலைக்களனா யிருப்பது அப்பூமியா தலின், 'வையத்து' என்றார்.

துறந்தார் பெருமைக்கு எதைத் துணைக்கூறுவது? நிலமும் எல்லையுடையது; கடலும் எல்லையுடையது; வானும் எல்லை யுடையது; இன்ன பிறவும் எல்லையுடையன. இவை எல்லா வற்றைவுங் கடந்து நிற்பது துறவோர் பெருமை.

துறந்தார் பெருமையின் அளவின்மையைக் குறிக்க ஈண்டு ஆசிரியர், 'வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று' என்று, 'வையத்து இறந்தாரை' எடுத்துக்காட்டியுள்ளனர். அளவின்மையை உணர்த்துதற்கு வேறு எடுத்துக்காட்டு களில்லாமலில்லை. கடல், மணல், வான உடுக்கள் முதலியன இருக்கின்றன. அவற்றை எடுத்தாளும் மரபும் உண்டு. அவற்றை விடுத்து, 'வையத்து இறந்தாரை' எடுத்தாண்ட தென்னை?

**பிறப்பும் இறப்பும்**

பிறவி தாங்குவது எற்றுக்கு? உயிரைப் பற்றியுள்ள மலக்கட்டினின்றும் விடுதலை அடைதற்கன்றோ? விடுதலைக்கு என் செய்தல் வேண்டும்? மனமாசுகளைத் துறத்தற்குரிய நெறியில் நின்றொழுகுதல் வேண்டும். இல்லையேல் மன மாசுகள் இறப்பையே கூட்டும். அரிய பிறப்பை இறப்புக்கு இரை யாக்குதல் அறிவுடைமை யாகாது. 'யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்' என்று மாணிக்கவாசகர் அருளி யதை நோக்குக. பிறப்பு, மலக்கட்டை அறுக்கவல்ல கருவியாகத்

துணை செய்வது. இத்தகைய பிறவி வேண்டற் பாலதே. இதுபற்றியே, 'யானேதும் பிறப்பஞ்சேன்' என்றார் பெரியார். பிறப்பை நல்வழிப்படுத்தா தொழியின் இறப்பு நேர்தல் ஒருதலை. இறப்பால் மீண்டும் பிறப்பு நேரும். மீண்டும் பிறத்தலாகாது. ஒரு பிறவியிலேயே விடுதலை எய்தல் வேண்டும். இம்முயற்சியில் தலைப்படாதார் இறப்பென்னுங் காலன் வாய்ப்படுவர். இறப்பு வேண்டா என்பார், 'இறப்பதனுக் கென்கடவேன்' என்றார்.

### மன மாசுகளைத் துறத்தல்

மூலமலக்கட்டை அறுத்தற்கென்று பிறவி நல்கப்படுகிறது. பிறவி தாவரத்தினின்றும் மானுடம் வரைத் தொடர்ந்துவரும். மானுடப் பிறவியில் பகுத்தறிவென்னும் மன அறிவு முகிழ்க் கிறது. இவ்வறிவு கொண்டு மன மாசுகளைப் பெருக்காது வாழ்க்கையை அறவழியில் நடாத்தல் வேண்டும். இல்லையேல் மனமாசுகள் பெருகிப் பலதிற வினைகளாகும். வினைகள், இறப்பு - பிறப்புக்களை வளர்த்துக் கொண்டே போகும். இறப்புக்கும், மறுபிறப்புக்கும் காரணமாகவுள்ள வினைகளை வளரவிடுதல் கூடாது. வினைகள் வளரா முறையில் வாழ்வோர் மீண்டும் பிறவி தாங்க இறவார். அவர் ஒரு பிறவியிலேயே விடுதலை அடைவர். இறவாமை அல்லது மீண்டும் பிறவாமை எய்துதற்கு மனமாசுகளைத் துறத்தல் அவசியம். இத்துறவு, ஈண்டுத் துறந்தார் பெருமைவாயிலாக அறிவுறுத்தப்படுகிறது. துறந்தார் பெருமை யாவது துறவின் பெருமையாகும்.

நல்ல பிறவியை இறவாமைக்குப் பயன்படுத்துதற்குரிய வழி, மனமாசுகளைத் துறந்து நின்றொழுகுவதாகும். அத்துற வொழுக்கம் இல்லாமை, இறப்பைக் கூட்டுதலை நினைவூட்ட வேண்டி, 'இறந்தாரை' ஆசிரியர் எடுத்துக்காட்டினர்போலும்.

'மன மாசுகளைத் துறத்தல் வேண்டும். இல்லையேல் இறப்பு நேரும்' என்னும் எச்சரிக்கை இத்திருக்குறளில் கரந்து மிளிர்தல் காண்க.

வையத்துப் பிறந்தார் விடுதலை அடைய முயல்வது சிறப்பு; இறக்க முயல்வது இழிவு. இவ்விழிவு, 'இறந்தாரை' என்பதில் விளங்குதலைக் கூர்ந்து நோக்குக. துறந்தார் பெருமையை, (துறவாது) இறந்தார் சிறுமையை எடுத்துக்காட்டும் முகத்தான் ஆசிரியர் விளக்கினர் என்று கூறலாம்.

### எண்ணிக் கொண்டற்று

இந்நாளில் வையத்தில் பிறப்பிறப்புக் கணக்கு எடுக்கப் படுகிறது. ஓராண்டுக் கொருமுறையோ சில ஆண்டுக்கொரு

முறையோ இடத்துக்கேற்றபடி அக்கணக்கு வெளியிடப்படு கிறது. அக்கணக்கால் இறந்தார் தொகை இவ்வளவினது என்பது கிடைக்கிறது. அத்தொகை எண்ணிறந்ததென்று சொல்வதை இக்காலம் ஏற்குமா என்று சிலர் கருதலாம். பிறப்பிறப்புக் கணக்கு எடுக்கப்படும் இக்காலத்துக்கும் அஃதெடுக்கப்படாத அக்காலத்துக்கும் (எக்காலத்துக்கும்) பெரிதும் பொருந்திவரும் முறையிலேயே எம் மறைமொழியும் பிறத்தல் இயல்பு. காலப் போக்குகளில் பலதிற மாறுபாடுகளும், வேறுபாடுகளும், ஐயப் பாடுகளும் தோன்றுமென்பது பெரியோர்க்குத் தெரியும்; தெரிந்தே பொதுமுறையில் மறைகளை அருளிச் செய்வது அவரது வழக்கம்.

வைய முழுவதும் பிறப்பிறப்புத் தொகை கணக்கெடுக்கப் படினும், அத்தொகை சில ஆண்டுக்கணக்கில் மட்டும் அளவு பட்டுக் கிடக்கும். வையந் தோன்றிய நாள் முதல் இன்றுவரை இறந்தார் தொகை இவ்வளவினது என்று எண்ணி அளவு படுத்திக் கூறுதல் இயலுமா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அத்தொகை எண்ணில் அடங்காததாகும். அது பற்றியே 'வையத் திறந்தாரை எண்ணிக் கொண் டற்று' என்றார். வையந் தோன்றிய நாள்முதல் இன்றுவரை இறந்தாரை* * *' என்று பொருள் விரிக்க.

மற்றுமொன்று ஈண்டுக் கருதற்பாலது. அது, பிறப்பிறப்புக் கணக்கு எவ்வுலகில் எடுக்கப்படுகிறது என்பது. அக்கணக்கு உயர்திணை உலகிலேயே எடுக்கப்படுகிறது. உயர்திணை உயிர் களின் தொகையையே திறம்படக் கணிக்கும் ஆற்றல் வாய்க்கப் பெறாத உலகம், அஃறிணை உயிர்களின் தொகையை எங்ஙனம் கணிக்க வல்லதாகும்? ஈண்டு ஆசிரியர் உயர்திணை அஃறிணை என்னும் இரண்டையும் உளங்கொண்டு 'இறந்தாரை' என்று அருளியுள்ளனர். அஃறிணை உயர்திணை இரண்டையுஞ் சேர்த்துக் குறிக்க நேரும்போது உயர்திணையாற் குறிப்பது மரபு. இது முன்னரும் விளக்கப்பட்டது.

**நகை**

வையந் தோன்றிய நாள்முதல் இன்றுவரை இருதிணை உலகில் இறந்த உயிர்களின் தொகையை அளவுபடுத்திக் கூற எண்களுண்டா? எண்களின்மையை ஆசிரியர், 'இறந்தாரை எண்ணிக்கொண் டற்று' என்று நகைபடக் கூறுகிறார். 'எண்ணிக் கொண் டற்று' என்பது, எண்ணில் அடங்காமையை உணர்த்து வது. 'துறந்தார் பெருமையை அளவிட்டுக் கூறப்புகுவது,

இறந்தார் தொகையைக் கணக்கிடப்புகுவதை ஒக்கும்' என்பது, 'இறந்தார் தொகை அளவிறந்து நிற்பதுபோலத் துறந்தார் பெருமையும் அளவிறந்து நிற்பது' என்னும் உண்மையை விளங்க வைப்பது. எண்ணிலடங்காதனவற்றை எண்ணப் புகுவது மடமை என்பது குறிப்பு. அம் மடமையை, 'எண்ணிக்கொண் டற்று' என்று ஆசிரியர் நடைபட எள்ளுவது காண்க.

இறந்தவர் தொகை எண்ணிலடங்காது. அதேபோலத் துறந்தவர் பெருமையும் எண்ணிலடங்காது என்பது தெளிவு.

### தொகுப்பு

துறவோர் பெருமை கூறப்புகுந்த ஆசிரியர், அதன் வாயிலாகத் துறவாது இறத்தலின் இழிவு விளங்குமாறும், அவ்வழிவுக்கு உலகம் ஆளாகாவாறும், துறவு பூண்டு பெருமை யுறுமாறும் சுருங்கிய மொழியால் அருளியிருத்தலை ஓர்க.

துறந்தார் பெருமைக்கு அளவுகூறப் புகுவது, வையத்து இறந்தார் தொகை இவ்வளவினது என்று கணக்கிடுவதை ஒக்கும் என்றபடி; கணக்கிட்டுக் கூறல் இயலாது என்பது கருத்து. (2)

**23**

***இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்***
***பெருமை பிறங்கிற் றுலகு.***

**பொருள்**

இருமை வகை தெரிந்து - இம்மை மறுமை எனும் இரண்டின் கூறுபாடுகளை ஆராய்ந்து தெளிந்து, ஈண்டு அறம் பூண்டார் - கூடி வாழும் அறத்தை மேற்கொண்டாரது, பெருமை - பெருமையே, உலகு பிறங்கிற்று - உலகில் உயர்ந்தது.

**கருத்து**

உலகில் உயர்ந்தது அறவோர் பெருமையே.

**விருத்தி**

மேற்பாக்களில் பொதுப்பட நீத்தார் பெருமை எடுத்துக் காட்டுக்களால் விளக்கப்பட்டது. இப்பாட்டில் சிறப்பாக நீத்தார் பெருமைப் பேற்றிற்குரிய வழி குறிக்கப்படுகிறது.

### இருமை

இருமை - இரண்டு; "தெரிமாண்டமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' என்புழிப்போல இருமை என்பது ஈண்டு எண்ணின்

*கண் நின்றது" என்று பரிமேலழகர் விளக்கியிருத்தல் காண்க.*

*இருமை - இம்மை மறுமை; 'இருமை என்பது இம்மையும் மறுமையும்' என்றார் பிங்கலந்தையார் (325).*

*இருமையை இப்பிறப்பு மறுபிறப்பு என்றுங் கொள்ளலாம். 'மை' - பிறப்பு; 'மைஅறு சிறப்பின் தெய்வம் சேர்த்திய...........' - பட்டினப்பாலை : 159.*

*இப்பிறப்பு இவ்வுலகில் எய்தலால் அதைப்பற்றிப் பலதிறக் கருத்துவேற்றுமைகள் பெரிதும் இல்லை. அதனால் இம்மை என்பதன் பொருள் இப்பிறப்பு, கண்கூடாக நிகழ்வதன்றா கலான், அதைப்பற்றிப் பலதிறக் கருத்துக்கள் வெளிவந்துள்ளன. மறுமை, நரகத்திலோ சுவர்க்கத்திலோ மீண்டும் இவ்வுலகிலோ இவையற்ற வீடுபேறாகவோ உறுதல் கூடும்.*

*நரகமும், சுவர்க்கமும் நிலையுதலில்லாதன. அவைகளி னின்றும் உயிர்கள் நிலைமைக் கேற்றபடி மீண்டும் இவ்வுலகு நோக்கினும் நோக்கும்; அல்லது வீடுபே றெய்தினும் எய்தும். வீடுபேற்றைப் பற்றியும் உலகில் ஒருமைக் கருத்து உலவவில்லை. ஒவ்வொரு சமயத்தார் ஒவ்வொரு விதமாக வீடுபேற்றைப் பற்றிக் கூறியுள்ளனர்.*

***அரிவையரின் புறுமுத்தி கந்த மைந்தும்***
***அறுமுத்தி திரிகுணமும் அடங்கு முத்தி***
***விரிவுவினை கெடுமுத்தி மலம்போம் முத்தி***
***விக்கிரக நித்தமுத்தி விவேக முத்தி***
***பரவுமுயிர் கெடுமுத்தி சித்தி முத்தி***
***பாடாண முத்திஇவை பழிசேர் முத்தி***
***திரிமலமும் அகலஉயிர் அருள்சேர் முத்தி***
***திகழ்முத்தி இதுமுத்தித் திறந்த தாமே.***

*எனவரும் உமாபதிசிவத்தின் திருவாக்கை ஓர்க (சிவப்பிரகாசம்).*

*மறுமை நிலைகள் பலவிதம் என்பதே ஈண்டு அறியத் தக்கது.*

*மறுமை, இம்மைப் பயனை யொட்டி விளைவதாதலின், அது பலவிதப்பட்டு நிற்கிறது. இம்மை மறுமை என்று சொல்வதிலுள்ள சிக்கல்களை நோக்கியே, 'இருமை' என்பதற்கு மணக்குடவரும் பரிமேலழகரும் 'பிறப்பு - வீடு என்னும் இரண்டு' என்று பொருள் விரித்தனர் போலும்! அவர் கூறிய பிறப்பு இம்மையை உணர்த்துவது. வீடு மறுமையை உணர்த்துவது. (பிறப்பு -பந்தம்; வீடு - முத்தி).*

'இம்மையே மறுமை தானும் நல்கினை' - கம்பர்: உருக்காட்டுப் படலம்: 71.

'இம்மைக் கின்பமும் மறுமைக் கின்பமும் - இம்மையும் மறுமையும் இரண்டு மின்றியோர் - செம்மையில் நிற்பதுஞ் செப்புமின்' - சிலப்பதிகாரம்: காடுகாண் : 112-114.

**வகை தெரிந்து**

வகை - கூறுபாடு. (வகு : தாது)

தெரிந்து - ஆராய்ந்து ; தெளிந்து; ஆராய்ந்து தெளிந்து; ஆராய்ந்தே தெளிதல் வேண்டுமாதலின் என்க.

தெரிதலில், ஆராய்தல் தெளிதல் என்னும் இரண்டு பொருளும் உண்டு. இதுபற்றியே ஆராய்ந்து தெளிந்து என்று பொருள் கூறப்பட்டது.

'தெருளுற நோக்கித் தெரியுங்கால்'- கலித்தொகை: 140 : 31. (தெரியுங்கால் - ஆராயுங்காலத்து)

'தோய்ந்த தியாதெனத் தேறித்தெரிய உணர்நீ' - பரி பாடல்: 6 : 92. (தெரிய - தெளிய)

**இருமை வகை தெரிந்து**

பலவகைகளைப் பற்றி ஆராய்ச்சிகள் நிகழ்ந்த வண்ண மிருக்கின்றன. அவை யாவும் இம்மை மறுமை ஆராய்ச்சியில் அடங்குவனவாம். அதனால், 'இருமை' என்றார்.

இருமையைப் பருமையாக ஆராயப் புகுந்தால், ஆராய்ச்சி, நுண்மையில்தானே புகும். நுண்ணிய ஆராய்ச்சியில் வகைகள் புலனாகும். வகைகளை ஆராய்ந்தால் நுட்பங்கள் விளங்கு மாதலின், 'இருமை வகை' என்றார்.

வகைகளின் நுட்பங்களைக் கூர்ந்து ஆராய ஆராய உண்மை புலப்படும். இதனை, 'தெரிந்து' என்பதால் ஆசிரியர் குறித்தனர்.

இம்மை வகைகளை ஆராய ஆராய மறுமை வகைகள் தோன்றும். இவைகளை ஆராய ஆராய வாழ்வுப் பேறு விளங்கும். இத்தகைய ஆராய்ச்சி வேண்டற்பாலதே.

**ஆராய்ச்சி**

கல்வி கேள்வி அநுபவம் முதலியவற்றால் முகிழ்க்கும் அறிவு கொண்டு ஆராய்ச்சியில் நுழைதல் வேண்டும். நுழைந் தால் பிறப்பு வகை, நில வகை, நீர் வகை, லோக வகை, தாவர வகை, பிராணி வகை, மண்டில வகை முதலியன வாளா இரா. அவைகள் தங்களை ஆராய்ந்து தெளிய அறிவைத் தூண்டும்.

*தூண்டுஞ் சக்தி அவைகளில் இயல்பாகவே அமைந்திருக்கிறது. அச்சக்தியின் தூண்டுதலுக்குத் துணைப்படுந் தன்மை நல் லறிவுக்கு உண்டு. இரண்டும் ஒன்றும் போது சீரிய நேரிய ஆராய்ச்சிக் கண் திறக்கும். ஆராய்ச்சிக் கண் கொண்டு நோக்க நோக்க முறை முறையே தெளிவு நிகழ்ந்து கொண்டு போகும். தெளிவால் நிலைப்பு இது - நிலையாமை இது - என்பது விளங்கும்; நிலைப்பில் உறுதியும், நிலையாமையில் உறுதியின்மையுந் தோன்றும்.*

**நிலைப்பு நிலையாமை**

*நிலைப்பின் பொருள் என்ன? நிலையாமையின் பொருள் என்ன? மாறுதல் உறாதிருப்பது நிலைப்பு; மாறுதல் உறுவது நிலையாமை. இறை ஒன்றே மாறுதல் உறாதது; ஏனைய வெல்லம் மாறுதல் உறுவன. மாறுதல் உறுவனவற்றைச் சூந்யம் என்றுஞ் சொல்வதுண்டு. 'யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலின்' என்பது சிவஞானபோதம்.*

*ஆராய்ச்சியால் இம்மை வகைகள் நிலையுதலில்லாதன என்னுந் தெளிவு உண்டாகும். இத்தெளிவுடன் ஆராய்ச்சி நில்லாது. மேலும் மேலும் பொருள்கள் உண்மையான் ஆராய்ச்சி எங்ஙனம் நிற்கும்? மெய்யுணர்வு தோன்றும்வரை - நிலைபேறான பொருள் இன்னது என்று விளங்கும் வரை - ஆராய்ச்சி நில்லாது. இம்மை வகைகளைத் தெளியச் செய்த ஆராய்ச்சி மேலும் எழுகிறது; எழுந்து மறுமையில் நாட்டஞ் செலுத்துகிறது. நாட்டம் பல துறைகளில் உழலும்; உழன்று உழன்று நரக சுவர்க்கங்களில் புகும்; மீண்டும் பிறவியுண்டா என்பதில் நுழையும்; இவையும் நிலையுதலில்லாதன என்னும் முடிவைப் பெறும். பின்னே நிலைபேறான இன்பம் உண்டா என்னுஞ் சிந்தனை பிறக்கும். சிந்தனை முதிர முதிர அஃதொரு நிலையை உணர்த்தும். அதுவே இறையின்பம் என்னும் வீடுபேறு என்பது. மறுமையின் முடிவு வீடுபேறு என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாகும். இத்துணை ஆராய்ச்சி வேண்டுமா வேண்டாவா என்று கூர்ந்து நினைந்து பாருங்கள்; பார்த்தால் வேண்டுமென்றே தோன்றும். அப்பொழுதே தெளிவு ஏற்படும். தெளிவுக்குரிய ஆராய்ச்சியின் இன்றியமை யாமையை அறிவுறுத்தவே, 'இருமை வகை தெரிந்து' என்றார்.*

**ஈண்டறம் பூண்டார்**

*ஈண்டு - கூடும்; செறியும்; 'கூளியுங் கூட்டமும்... ஈண்டலும்...'- பிங்கலந்தை : 223; 'ஈண்டகன் கிடக்கை' - புறநானூறு : 19 : 1. (அறிதோறு.... செறி தொறுஞ் சேயிழை மாட்டு - திருக்குறள்).*

*அறம் - 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம்' (ஆசிரியர்).*

*ஈண்டு அறம் - ஈண்டும் அறம்; கூடும் அறம்; கூடி வாழும் அறம்.*

*ஈண்டறமாவது இயற்கையுடன் கூடிவாழும் அறம் அதாவது இயற்கையோடு இயைந்து வாழும் அறம். பெண் ஆண் ஒன்றல், பிள்ளைப்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், மனமாசொழித்தல், செந்தண்மை பூண்டொழுகல் முதலியன இயற்கையுடன் இயைந்து வாழும் அறக்கூறுபாடுகள்.*

*'ஈண்டறம்'- 'இவ்விடத்தில் துறவறத்தை' என்றனர் மணக்குடவர்; 'இப்பிறப்பின்கண் துறவறத்தை' என்றனர் பரிமேலழகர்.*

*பூண்டார் - மேற்கொண்டார்.*

*பூணல் - மேற்கொள்ளல், கடைப்பிடித்தல், வாழ்க்கையில் ஒன்றச்செய்தல்.*

**ஈண்டறம் பூண்டார்**

*இருமை வகை தெரிந்த பின்னர் என் செய்தல் வேண்டும்? தெரிந்த அளவில் நின்றுவிடுவதா? அவ்வவ்வளவில் நின்று விடுதற்கு ஆராய்ச்சி எற்றுக்கு? கல்வி கேள்வி ஆராய்ச்சியால் விளங்குந் தெளிவை நடையில் - ஒழுக்கத்தில் - வாழ்வில் - அநுபவத்தில் - பெற முயல்வது சிறப்பு. இதுபற்றியே 'இருமைவகை தெரிந்து ஈண்டறம் பூண்டார்' என்றருளினர்.*

*தெளிவு இருவிதம். ஒன்று கல்வி கேள்வி ஆராய்ச்சியால் விளங்குவது; மற்றொன்று நடையில் - ஒழுக்கத்தில் - வாழ்வில் - அநுபவத்தில் - பெறுவது. 'இருமை வகை தெரிந்து' என்பது முன்னையதைக் குறிப்பது; 'ஈண்டறம் பூண்டார்' என்பது பின்னையதை உணர்த்துவது.*

*கலை ஆராய்ச்சியால் விளங்குந் தெளிவு, மக்களை நன்னெறியில் நின்றொழுகுமாறு உந்தும். இவ்வுந்துதலில் ஈடுபடுவோர் விடுதலையடைவர்; ஈடுபடாதார் விடுதலை யடையார். ஆகவே, நடைவேண்டற்பாலதென்க. நடையை வலியுறுத்தவே 'ஈண்டறம் பூண்டார்' என்றார்.*

*ஆராய்ச்சி எழாத இடத்தில் நன்னெறித் தோற்றமே அரிதாகும். ஆராய்ச்சித் தெளிவால் நன்னெறி புலனாகும்; புலனாய வழி நின்றொழுக வேண்டுவது மக்கள் கடமை. இதனால் ஆசிரியர் இருமை வகை தெரிதலையும், ஈண்டறம் பூணலையும் ஒருசேர வைத்தோதினர்.*

ஈண்டறம் பூணலாவது கூடிவாழும் அறத்தைக் கடைப் பிடித் தொழுகுவது.

இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டு வாழ்வோரே துறவோராவர். கூடி வாழ்வதே உயிர்களின் இயற்கை. இயற்கைக்கு மாறுபட்டு நடப்போரது மனமாசுகள் எங்ஙனம் அகலும்? இயற்கைவழி நின்றொழுகுவோரது மனமாசுகள் அகலும். இயற்கைவழிக் கூடி வாழாது தனித்து வாழ்வோரது மனமாசு கள் அகலா. இவர் துறவோராகார். மனமாசகலப் பெற்றாரே அறவோர் - துறவோர் நீத்தாராவர்.

**பெருமை பிறங்கிற்று உலகு**

பெருமை - பெருமையே ; ஏகாரம் தொக்கது.

பிறங்கிற்று - உயர்ந்தது; மிக்கது; பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கி'- பட்டினப்பாலை: 285; 'பிறங்குவெள் ளருவி வீழும் சாரல்' - சிறுபாணாற்றுப்படை : 90.

பிறங்கிற்று என்பதற்குப் பெருகிற்று - விளங்கிற்று - சிறந்தது முதலிய பல பொருள் கூறலாம் : பரிமேலழகர் 'உயர்ந்தது' என்றனர்; மணக்குடவர் 'மிக்கது' என்றனர்.

உலகு - உலகில். இந்த 'உலகு', 'ஈண்டு' என்பதற்கு இவ் விடம் என்று பொருள் கூறுவதைத் தடுத்து நிற்கிறது. இது பற்றியே 'ஈண்டு' என்பதற்கு வேறு பொருள் கூறப்பட்டது.

**பெருமை உலகில் பிறங்கிற்று**

'இருமை வகை தெரிந்து ஈண்டறம் பூண்டாரே' நீத்தாராவர். அவர்தம் பெருமையே பெருமை. அப்பெருமையே உயர்ந்தது. ஏனைய பெருமைகளெல்லாம் உயர்ந்தனவாகா. அவை வீழ்ந்துபடுவன. '**** ஈண்டறம் பூண்டார் பெருமை(யே) பிறங்கிற்று உலகு' என்று ஆசிரியர் அருளியிருத்தலை ஆய்க. 'இதனால் திகிரி யுருட்டி உலக முழுதாண்ட அரசர் முதலா யினார்பெருமை பிரிக்கப்பட்டது.' என்று பரிமேலழகர் பொறித் துள்ள குறிப்புரை போற்றத்தக்கது. உள்ளத் துறவிக்கு வேந்தனும் துரும்பே.

நீத்தார் பெருமையே என்றும் நிலவுதலாதலின் 'பிறங்கிற்று' என்றார். உலகை நோக்குவோம். உலகம் - இக்கால உலகம் - பெருமைக்கு என்ன பாடுபடுகிறது! அந்தோ! எத்துணை விளம்பரம்! இக்கால உலகம் விளம்பரத்துக்கு அடிமைப் பட்டுக் கிடக்கிறது! உலகில் எத்தனையோ பேர் எத்தனையோ முறை யில் தம் பெருமையை நிலைபெறுத்தத் தம்மை விளம்பரப்

படுத்துகிறார்; விளம்பரத்தால் பெரியவராகவே முயல்கிறார். விளம்பரத்தில் நாட்டஞ் செலுத்துவன மனமாசுகளேயாம். விளம்பரத்தால் பெருமை நிறுவ முயல்வது அறியாமையே. விளம்பரப் பெருமை எத்துணை நாள் நிலவும்? அது நீடூழி நிலவுமா? அஃது அவர்தம் வாழ்விலேயே வீழ்ந்துபடினும் படும்; அல்லது அவர் மறையும் போது அவருடன் மறையினும் மறையும்.

ஈண்டறம் பூண்டு, மனமாசுகளினின்றும் விடுதலை அடைந்த அறவோர் - துறவோர் - நீத்தார் - தம்மை விளம்பரப் படுத்த விழையார். விளம்பரம் விழைவோர் நீத்தாராகார். விளம்பரம் அறியா நீத்தாரது பெருமை என்றும் உலகில் தானே விளம்பரமாகும். உலகில் எத்துணைச் சுழற்சி புரட்சிகள் நேரினும், அவற்றால் நீத்தார் பெருமை நீறாகாது. அவர்தம் பெருமை, சுழற்சி புரட்சிகளையெல்லாம் கடந்து கடந்து பிறங்கியே நிற்கும். தட்சிணாமூர்த்தி, குமரன், கண்ணன், விருஷப தேவர், புத்தர், கிறிஸ்து, மகம்மது முதலியோர் பெருமை என்றாதல் பொன்றுங்கொல்! உலகில் என்ன நேரினும் இவர்தம் பெருமை பிறங்கிக் கொண்டேயிருக்கும்.

நீத்தார் தம்மைப் பெருமைப்படுத்திக் கொள்வதில்லை. அவரை உலகம் பெருமைப்படுத்தும்; என்றும் பெருமைப் படுத்தும். ஊழி ஊழி கடந்தும் ஈண்டறம் பூண்டொழுகி நீத்தாராகிய பெரியோர் பெருமையே பிறங்கும். அவர்தம் பெருமை வாழ்க; வெல்க. '** ஈண்டறம் பூண்டார் பெருமை(யே) பிறங்கிற்று உலகு' என்னும் பொன் மொழியை - மணி மொழியை - உலகுக்கு அருளிய நீத்தார் வாழ்க; வாழ்க. அவர்தம் பெருமை வெல்க; வெல்க. (3)

### (II) பெருமை ஐந்தவித்தலில்

**24**

***சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்***
***வகைதெரிவான் கட்டே யுலகு.***

**பொருள்**

உலகு - உலகம், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின் - ரசம் ரூபம் ஸ்பரிசம் சப்தம் கந்தம் என்று சொல்லப் படும் ஐம்புலனின், வகை தெரிவான் கட்டே - கூறுபாடுகளை யெல்லாம் ஆராய்ந்து தெளிந்தவன் கண்ணதே.

### கருத்து

*ஐம்புலன் வகைகளைத் தெளிந்தவன்வழி உலகம் இயங்கும்.*

### விருத்தி

*மனமாசைத் துறத்தற்குரிய வழி 'ஈண்டறம் பூணல்' என்று தொகைமுறையில் மேற்பாட்டிற் சொல்லப்பட்டது. இப் பாட்டில் அவ்வழி சிறிது வகைமுறையில் சொல்லப்படுகிறது.*

**உலகு**

*உலகு - உலகம்; எல்லாஞ் சேர்ந்த ஒன்று.*

*உலகு பல பொருள் ஒரு சொல். 'உலகம் பலவிதம்' என்பது பழமொழி. அஃறிணை உயர்திணை, சரம் அசரம், சொல் பொருள், சித் அசித் முதலியன உலகத்தின் பாற்பட்டனவே. இவ்வளவிலாதல் உலகம் அடங்கிவிடுமோ? உலகம் எண்ணில் அடங்காதது. ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு போது ஒவ்வோர் உலகம் புலனாகும். ஒவ்வோர் எண்ணமும் ஒவ்வோர் உலக மாகும். நினைவு உலகங்கட்கும், கனவு உலகங்கட்கும் ஓரளவும் உண்டோ? ஒவ்வொருவர்க்கு ஒவ்வோர் உலகம் உண்டு என்று சுருங்கச் சொல்லலாம்.*

*ஈண்டு 'உலகு' என்றது, உலகுக்கு என்னென்ன பொருள் உண்டோ அவை யெல்லாவற்றையுங் கொண்ட ஒன்றை யென்க.*

**சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்**

*சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின் - ஐம்புலனின்.*

*சுவை முதலியவற்றைப் பஞ்ச தன்மாத்திரை என்று தத்துவர் கூறுவர்; வேறுவகையில் சொல்வோருமுளர்.*

**வகை தெரிவான் கட்டே**

*வகை - கூறுபாடு; தன்மை; விவரம் எனினுமாம்.*

*தெரிவான் - ஆராய்ந்து தெளிந்தவன்; நீத்தான்.*

*'தெரிவான்' என்பது நீத்தாரினத்தைக் குறிப்பது; இன ஒருமை. ஒவ்வொருவரும் நீத்தாராதற்கு உரிமை உண்டு என்பதைத் தெளிவுபடுத்தற்குத் 'தெரிவான்' என்று ஆசிரியர் ஒருமையாற் கூறினர். ஒருமையின் ஈட்டமே பன்மை.*

*கட்டே - கண்ணதே; இடத்ததே; கண் ஏழனுருபு. கண்ணே என்பது கட்டே எனத் திரிந்தது. திரிவு ஓசையின் பொருட் டென்க.*

*'கட்டே' என்பதற்குக் கட்டுதலே என்று பொருள் கொள்ளினுமாம். (கட்டு-கட்டே-கட்டுதலே). இருவகைப்*

பொருளினும் வேற்றுமை பெரிதுமில்லை. கூர்ந்துநோக்கின் இரு பொருளும் ஒன்றாகவே தோன்றும். ஐந்தின் வகை தெரிவான் ஆணைவழி இயங்குவது உலகு என்பது கருத்து.

கட்டு என்பது புதிதாக உலகை உண்டுபண்ணுவதைக் குறிப்பதன்று. உலகம் அநாதியாயிருப்பது. அதன் காரணம் மாயை. மாயையே உலகமாகக் காரியப்படுகிறது. காரணம் காரியப்படுவதையே 'படைப்பு' என்று உலகம் கூறும். அக்கூற்று உபசாரமேயாகும். ஆகவே, ஈண்டுக் 'கட்டு' என்பது புதிதாக உண்டுபண்ணுதலைக் குறிப்பதன்று.

'கட்டே' என்று கூறின், 'படைப்பு' என்னும் மயக்கம் உண்டாகுமென்று, மணக்குடவரும் பரிமேலழகரும் 'கண்ணதே' என்று விளக்கப்பொருள் கூறினர் போலும்.

'தெரிவான் கட்டே' என்பது, தெரிவான் ஆணைவழி இயங்குவதை உணர்த்துவது.

தெரிவான் கட்டே - 'ஆராய்வான் அறிவின் கண்ணதே' என்பது பரிமேலழகர் உரை. ஆராய்வான் அறிவின் கண்ணதே என்பதும், ஆராய்வான் கண்ணதே என்பதும் ஒன்றே.

**உலகம் எவரிடத்தது?**

உலகம் எவரிடத்தது? இக்கேள்விக்குச் 'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்றைந்தின் வகை தெரிந்தவன் இடத்தது' என்று இத் திருக்குறள் பதில் இறுக்கிறது.

சுவை முதலிய ஐந்தின் வகை தெரிந்தவன்வழி மனம் இயங்கலால் அம் மனம் மாசற்றதாகும். மாசற்ற மனம் அடக்க முடையதாகும். மனமடங்கப்பெற்றோரே உயர்ந்தோராவார். அவர்வழி உலகம் எளிதில் இயங்கும். 'உலகமென்பது உயர்ந் தோர் மாட்டே'.

**ஆராய்ச்சியில் தலைப்படல்**

மனமாசினின்றுந் துறத்தற்கு அறம் பூண்டொழுகும் போது உயிரில் ஒருவித விளக்கம் உண்டாகும். அறம் பூணாதார்க்கு அவ்விளக்கம் தோன்றுவதில்லை. விளக்கம் தோன்றாமைக்குக் காரணமென்னை? மனத்தின்கண் மாசு படர்ந்திருப்பதே யாகும். மனத்தில் மாசு படர்வதன் மூலத்தை ஆராய்ந்து தெளிதல் வேண்டும். அதற்குரிய ஆராய்ச்சியில் தலைப்படுமாறு ஆசிரியரே தூண்டுகிறார். அது, 'சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின் வகை தெரிவான்' என்பதால் நனிவிளங்கும்.

*தத்துவங்கள் பல கிடப்ப, அவற்றைச் சுவை முதலிய ஐந்தின் வகையை மட்டும் ஆராய்தற்கென்று ஆசிரியர் அருளிய தென்னை? இதற்கு விரிந்த ஆராய்ச்சி வேண்டும். விரிந்த ஆராய்ச்சி இவ்வுரைக்கண் எற்றுக்கு? சுருங்கிய முறையே சாலும்.*

**சுவை முதலியன**

*சுவை முதலிய நிகழ்ச்சியிலிருப்பன. அவற்றை ஆராய ஆராய அவற்றினின்றும் [1]ஐம்பூதம் தோன்றுதல் விளங்கும்; ஐம்பூதத்தினின்றும் உடம்பு பிறத்தல் விளங்கும்; உடம்பில் [2]அறி கருவி (ஞானேந்திரியம்) ஐந்தும், [3]தொழிற்கருவி (கன்மேந்திரியம்) ஐந்தும் முகிழ்ந்துள்ளமை விளங்கும்.*

*சுவை முதலிய ஐம்புல ஆராய்ச்சியால் ஐம்பூதமும், அறி கருவியாகிய ஐம்பொறியும், தொழிற்கருவி ஐந்தும் பெற்றோம். இவ்விருபதளவில் ஆராய்ச்சி முட்டி நிற்கவில்லை ஆராய்ச்சி மேலுஞ் செல்கிறது.*

**மனச் சேர்க்கை**

*ஒரு புலன் ஒரு பொருளில் ஒன்றிப் படிந்து கிடக்கும் போது, மற்றப் புலன்கள் நிகழ்ச்சியின்றிக் கிடத்தல் அநுபவம். கட்புலன், ஒன்றில் நன்று படிந்து கிடக்கும் வேளையில் ஓசை கேட்பதில்லை. காரணமென்ன? அல்லது செவிப் புலன் அழிந்தா போயிற்று? இரண்டும் இருக்கின்றன. பின்னை ஏன் ஓசை கேட்க வில்லை? மனம் கட்பொறியிடைப் புகுந்து நின்றமையே ஓசை கேளாமைக்குக் காரணம்.*

*மனம் செவிப் பொறியில் நிற்கும்போது எதிரே செல்வோர் தெரிவதில்லை. இவ்வாறே பிறவும். புலன், பொறியிடங் கொண்டு இயங்கினும் அதற்கு மனத்தின் கூட்டுறவு இன்றியமை யாது வேண்டப்படுகிறது. எனவே, முற்போந்த இருபதுடன் மனம் என்னும் மற்றொன்று சேர்தல் காண்க.*

**மனத்தின் கூட்டாளிகள்**

*மனம் தனிப்பட்டதன்று. அதற்குத் தொடர்புயை கூட்டாளிகளுண்டு. அவை புத்தி, அகங்காரம், சித்தம் என்பன.*

---

1 மண் (பிருதிவி), புனல் (அப்பு), தீ (தேயு), வளி (வாயு), வெளி (ஆகாயம்).

2 மெய் (தொக்கு), நா (சிங்நுவை), கண் (சட்சு), மூக்கு (ஆக்கிராணம்), செவி (சுரோத்திரம்).

3 வாய் (வாக்கு), கால் (பாதம்), கை (பாணி), எருவாய் (பாயுரு – குதம்), கருவாய் (உபத்தம்). (ஐம்புல – ஐம்பூத விரி முறை வருமாறு: நாற்றம் – மண்; சுவை – நீர்; ஒளி – நெருப்பு; ஊறு – காற்று; ஓசை – வான்.

ஐம்புல – ஐம்பொறி முறை : ஓசை – காது; ஒளி – கண்; நாற்றம் – மூக்கு; சுவை – நா; ஊறு – மெய்.)

இருபத்தொன்றுடன் இம்மூன்றுஞ் சேரத் தத்துவங்கள் இருபத்து நான்காகின்றன.

சுவை முதலிய ஐந்தின் வகைகளை ஆராயப் புகுந்தால், அவைகளுடன் பத்தொன்பது வேறு கருவிகள் தொடர்புடையனவாக இருத்தல் தெரிகிறது.

**தெரிவான்**

இருபத்து நான்கும் தொழிற்படுவது எற்றுக்கு? தொழிற்படுவதால் விளைவதென்னை? விளைவு யாண்டுச் செல்கிறது? இன்னோரன்ன வினாக்களுக்குத் 'தெரிவான்' என்பது விடையிறுக்கும். இருபத்து நான்குடன் 'தெரிவானை'யுஞ் சேர்த்துக் கொள்க.

'தெரிவான்' ஆன்மா என்பதை விளக்க வேண்டுவதில்லை; சொல்லே பொருட்டன்மையைக் குறிக்கும். 'தெரிவான் ' சடமன்று; அறிவுப் பொருள்.

'தெரிவான்' என்பது, தெரியும் நிலை - தெரியாநிலை- என்றிரண்டையும் அடக்கியிருத்தல் கருதற்பாலது. தெரியாமையினின்றுந் தெரிதலைப் பெறுவோனே 'தெரிவான்' ஆகிறான்.

உயிர் அறிவுப்பொருள். ஆனால் அது முழுஅறிவுப் பொருளாயில்லை. அஃது அறியாமையோடு கூடிய அறிவுப் பொருளாயிருக்கிறது. அறியாமைக்கு வழங்கப்படும் பெயர்கள் பல. அவை ஆணவம், அவித்தை, மலம்,கட்டு, அழுக்கு முதலியன. உயிர் அறியாமைக் கட்டினின்றும் விடுதலை யடைந்து முழு அறிவு மயமாதல் வேண்டும். கட்டை அறுக்கக் கருவி தேவை. அறியாமைக் கட்டை அறுப்பதற்கென்றே ஒரு பெருங் கருவி இருக்கிறது. அதுவே 'மாயை ' என்பது.

**தெரிவான் – புருடன்**

மாயை, தனு கரண புவன போகங்களாகி உயிரின் அறியாமையைப் படிப்படியே நீக்கி, அறிவை விளங்கச் செய்கிறது. மாயை, பலப்பல கருவிகளாக (தத்துவங்களாக)க் காரியப் பட்டே தனு கரண புவன போகங்களாகிறது. அக்கருவிகளின் விவரத்தை ஈண்டு முறைப்படி விரித்தால் விருத்தியுரை பெருகும்; மிகவும் பெருகும். பெருக்கத்தை மாபாடியங்களிலும் தத்துவ ஞான நூல்களிலும் பார்த்துக்கொள்க.

மாயை மூவிதம். அவை: சுத்தம், அசுத்தம் , பிரகிருதி என்பன.

சுத்த மாயை ஐந்து தத்துவமாகக் காரியப்படும். அவை: சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், விந்து, நாதம்.

அசுத்த மாயை ஏழு தத்துவமாகக் காரியப்படும். அவை: காலம், கலை , நியதி, வித்தை, அராகம்,(காரிய) மாயை, புருடன்.

பிரகிருதி மாயை இருபத்து நான்காவன: ஐம்பூதம், ஐம்புலன், ஐம்பொறி (அறிகருவி - ஞானேந்திரியம்), தொழிற் கருவி ஐந்து (கன்மேந்திரியம்), அந்தக்கரணம் நான்கு. இவை மேலே விளக்கப்பட்டவை.

இம் முப்பத்தாறு தத்துவத்தில் ஆசிரியர் குறித்த 'தெரிவான்' இடம் பெற்றுள்ள தெங்கே? 'புருடன்' என்னும் தத்துவத்தில் என்க.

### புருட தத்துவம்

உயிர், அறியாமையால் விழுங்கப்பட்டு அறிவு விளக்க மின்றி இருண்மயமாயிருப்பது. அதன் அறிவை விளக்கித் தன்னைப்போ லாக்கவே இறைவன் அதனுடன் மாயா காரியத் தத்துவங்களைப் புணர்த்துகிறான். அத்தத்துவங்களால் உயிரின் அறிவு சிறிது விளங்கப்பெறுகிறது. அச்சிறு விளக்கம் புருட தத்துவத்தில் உறுகிறது. புருடன் + தத்துவம் = புருடதத்துவம்.

உயிர், தத்துவங்களைப் படிப்படியே பெற்றுப் பெற்று வரும்போது, கலை நியதி காலம் வித்தை அராகம் என்னும் ஐந்தில் ஒன்றும்வேளையில்'புருடன்' ஆகிறது. இவ்வைந்து தத்துவத்துக்கும் கலாதி பஞ்ச கஞ்சுகம் என்னும் பெயருண்டு. இப்பஞ்ச கஞ்சுகத்தை உயிர் பெறும்போது, ஆணவ இருள் சிறிது அகன்று, அவ்வளவில் அறிவு சிறிது விளக்கம் பெற்றுத் தன்னைச் சீவன்- புருடன் - என்று உணரும் நிலை பெறுகிறது. (ஆணவத்தைச் சிறிது விளக்கும் ஆற்றல் வாய்ந்தது கலை அதாவது கலாதத்துவம். இது பஞ்ச கஞ்சுகத்துள் ஒன்று.) உயர், புருடனாகிய நிலையிலேயே மனத்தின் வாயிலாக எதையும் அறிவதாகிறது. மேலே சொல்லிய பிரகிருதி மாயாதத்துவம் இருபத்து நான்குடன் புருடனையுஞ் சேர்த்துக் கொள்க. இப் 'புருடனை'யே ஆசிரியர் 'தெரிவான்' என்றனர்.

ஐம்பூதம், ஐம்பொறி, தொழிற்கருவி ஐந்து, அந்தக்கரணம் நான்கு ஆகிய தத்துவங்களையும் புருடனையும் ஆராய்ந்து தெளிதற்குச், சுவை முதலிய ஐந்தும் நிலைக்களனாக நின்று துணை செய்தலால், இவ்வைந்தை மட்டுஞ் சிறப்பாக ஆசிரியர் குறிப்பிட்டனர்.

### இருபத்தைந்தாந் தத்துவம்

தத்துவம் முப்பத்தாறா யிருப்ப, இங்கே புருட தத்துவத் தளவில் நிறுத்திவிட்டதன் நோக்கம் என்னை என்று சிலர்

கருதலாம்; வினவலாம். இருபத்தைந்தில் ஒருவிதச் சிறப்புண்டு. இதுபற்றிச் சிறிது கூறிச் செல்வது நலம்.

தத்துவங்களைப் பொருளாகக் கொள்வதில் மக்கள் பல திறப் படுகிறார்கள். சிலர் ஐந்தே பொருளென்றும், சிலர் பத்தே என்றும், சிலர் இருபதே என்றும், சிலர் இருபத்தைந்தே என்றும், சிலர் இருபத்தேழே என்றும், சிலர் முப்பதே என்றும், சிலர் முப்பத்தாறென்றுங் கூறுப. இவரனைவரும் பேரறிஞரே யாவர்; உண்மை காண முயன்றவரேயாவர்.

பழைய உரையாசிரியருள் பேர் பெற்று விளங்கும் பரிமேலழகர் இருபத்தைந்தில் நின்றே விளக்கவுரை பகர்ந் துள்ளனர். அது வருமாறு:-

'* * * அவற்றின் கூறுபாடாவன:- பூதங்கட்கு முதலாகிய அவை தாமைந்தும், அவற்றின்கட் டோன்றிய அப்பூ தங்களைந்தும், அவற்றின் கூறாகிய ஞானேந்திரியங்களைந்தும், கன்மேந்திரியங்களைந்தும் ஆக விருபதுமாம். 'வகைதெரிவான் கட்டு' என உடம்போடு புணர்த்ததனால் தெரிகின்ற புருடனும், அவன் தெரிதற்கருவியாகிய மான் அகங்கார மனங்களும், அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற்றாம். தத்துவ மிருபத் தைந்தினையுந் தெரிதலாவது மூலப்பகுதி யொன்றிற்றோன்றிய தன்மையிற்பகுதியே யாவதல்லது விகுதியாகாதெனவும், அதன் கட்டோன்றிய மானும், அதன்கட்டோன்றிய அகங்காரமும், அதன்கட் டோன்றிய தன்மாத்திரைகளுமாகிய எழுந்தத்தமக்கு முதலாயதனை நோக்க விகுதியாதலும் தங்கட்டோன்றுவன வற்றை நோக்கப்பகுதியாதலு முடையவெனவும், அவற்றின் கட் டோன்றிய மனமும், ஞானேந்திரியங்களும், கன் மேந்திரியங் களும், பூதங்களுமாகிய பதினாறும் தங்கட்டோன்று வன வின்மையின் விகுதியே யாவதல்லது பகுதியாகாவெனவும், புருடன் தானொன்றித் றோன்றாமையானும் தங்கட்டோன்று வன வின்மையானும் இரண்டும் அல்லனெனனவும் சாங்கிய நூலுளோதியவாற்றா னாராய்தல். இவ்விருபத்தைந்து மல்லது உலகெனப் பிறிதொன்றில்லையென உலகின் துண்மை யறிதலின், அஃதவ னறிவின்கண்ணதாயிற்று,'

பரிமேலழகர் எடுத்துக்காட்டியுள்ள சாங்கியம், தத்துவ ஆராய்ச்சி யுலகுக்கே தாயகம். சாங்கியத்தை அடிப்படையாகக் கொண்டே பல பெரியோர் அறிவுக் கோட்டைகள் கட்டினர். அக் கோட்டைகளுக்குள் நுழைந்து பார்த்தால் உண்மையின் பலவகைகள் காட்சியளிக்கும். எல்லாப் பெருமையும் சாங் கியத்தை நிறுவிய கபிலர்க்கே ஆக.

இருபத்தைந்துக்கு மேலுந் தத்துவங்க ளிருத்தல் உண்மை. இருப்பினும் இருபத்தைந்தை மட்டுஞ் சிறப்பாகக் கொள்ளும் வழக்கு தொன்றுதொட்டு வருகிறது. முப்பத்தாறைப் பொருளாக் கொள்வோரும் இருபத்தைந்தைச் சிறப்பாகக் கொள்ளும் வழக்கும் உண்டு.

### அப்பர் திருவாக்கு

'ஐயைஞ்சின் அப்புறத் தானும்' என்பது அப்பர் திருவாக்கு. அப்பரே[1] 'முப்பது முப்பத் முப்பதும்' என்று அருளி யுள்ளார். முப்பத்தாறு தத்துவத்தைப் பொருளாக் கொண்ட ஒருவரே இருபத்தைந்தைச் சிறப்பித்திருக்கிறார். இஃது உன்னற் பாலதே.

### அறிவு விளக்கமும் புருட தத்துவமும்

இருபத்தைந்தாம் தத்துவத்தில் உயிர் புருடனாகிச் சிறிது அறிவு விளக்கம் பெறுவதே சிறப்புக்குரியதாகிறது. அறிவு விளங்கப்பெறாது, அறியாமை இருளில் மூழ்கிக்கிடந்த உயிர், விடுதலையடைந்து முழு அறிவு விளக்கம் பெறுதற்குச் சிறிது அறிவு விளக்கத்தை இருபத்தைந்தாம் தத்துவம் நல்குதலால் அத்தத்துவம் சிறப்புடையாதகிறது.

வறியவர்க்கு முதல் முதல் கிடைக்கும் பொருளினிடத் திலேயே பெரும் பற்றிருக்கும். பின்னே எவ்வளவு பொருள் பெறினும் நாட்டம் மட்டும் முதற் பொருளினிடத்திலேயே படிந்துகொண்டிருக்கும். அதேபோல முப்பத்தாறு தத்துவத்தை யும் கடந்து இறையுடன் ஒன்றுபடும் நிலையிலிருப் போரும் தமது பேற்றிற்கு முதல் முதல் ஒளி வழங்கிய ஒன்றனிடத்தில் கருத்துச் செலுத்துவது இயற்கை. முதலில் இருளை நீக்கிய ஒளிசிறிதாயினும், அது வழிகாட்டியாயிருத்த லான், அது ஞானிகள் மனத்தில் நின்றே தீரும். அவ்வொளி கண்டதும் பெரியோர்க்குக் கடவுள் ஒளி கண்டது போன்ற மகிழ்ச்சி யுண்டாகும். மகிழ்ச்சியால் எந்நிலையிலும் அதை அவர் போற்று வர். அப்பரும் அந்நிலையில் நின்றே 'ஐயைஞ்சின் அப்புறத் தானும்' என்றருளினர்.

தத்துவ தரிசனத்திலிறங்கி இறையொளி காண முயல் வோர்க்குச் சிக்கல், புருட தத்துவம் வரையே நிகழும். புருட தத்துவக் காட்சிக்கு முன்னர் வீழ்ச்சி நேர்வதும் உண்டு. புருட தத்துவங் கடந்தால் வீழ்ச்சி பெரிதும் நேராது. அங்கே சுத்த

1 முப்பாத்தாறு உட்கருவி; அறுபது புறக்கருவி.

தத்துவத்தின் துணை கிடைக்கும். சுத்த தத்துவம் இறை யொளியை விரைந்து காட்டுந் தன்மையது. புருட தத்துவத்துக்கு மேல் சிக்கலின்மையானும் வீழ்ச்சியின்மையானும் அத்தத்துவம் பெரியோரால் சிறப்பிக்கப்படுகிறது. அத்தத்துவம் வரை துணை புரிந்த கபிலர் எல்லா விதப் போற்றலுக்கும் உரியவராகிறார். அவர் வாழ்க.

**மனத்தூய்மை**

சுவை முதலியவற்றின் நிகழ்ச்சி மனத்தைப் பொறுத்தி ருத்தலான் மனத்தை நிலைபெறுத்தல் வேண்டும். சுவை முதலியவற்றின் ஆராய்ச்சியாற் போதருந் தெளிவு மனத்தை ஒருமைப்படுத்தத் துணை செய்யும். மனம் ஒருமைப்பட்டா லன்றிச் சுவை முதலிய ஐந்தும் நல்வழியில் இயங்கா. அவற்றை வழிப்படுத்துதற்கு மனத்துணை வேண்டும். மனம் நல்வழிப் பட்டால் புலன்களும் நல்வழிப்படும்.

புலன்களின் தூய்மைக்கும் மனத்தின் தூய்மைக்கும் நன்னூற் பயிற்சி, நல்லோர் கூட்டுறவு, இயற்கை வாழ்வு, அறம் பூணல் முதலியன வேண்டற்பாலன. மூக்கைப் பிடித்தல், காட்டுக் கோடல் முதலியன அநாவசியம்.

மனத் தூய்மையால் புருடதத்துவ தரிசனம் உண்டாகும். அத்தத்துவ தரிசனம் நாதம் வரை துணை நின்று, அதைக் கடந் தொளிரும் இறையொளியை யுணர்த்தும்.

**வகை**

ஆராய்ச்சிக்குச் சுவை முதலிய ஐந்தையும் பற்றினால் அவை, தம் காரியமாய ஐம்பூத வகையையும், அவை கூடிய உடலின் கூறுகளாகவுள்ள அறிகருவி ஐந்தின் வகையையும், தொழிற்கருவி ஐந்தின் வகையையும், அந்தக்கரணம் நான்கின் வகையையும் தெளிவுபடுத்தும்; பின்னே புருடனை விளங்கச் செய்யும்; பின்னும் மேலுந் தெளிவுபெறச் செய்யும். தெளி விற்குத் துணை செய்வனவாகச் சுவை முதலியன நிற்றலால், அவை இப்பாட்டில் குறிக்கப்பட்டன.

கூறுபாடுகளை ஆராய ஆராயத் தெளிவு ஏற்படலான் 'வகை' என்றார்.

### தெரிவான் கட்டே உலகு

'தெரிதல்' என்பதில் ஆராய்ச்சியும் தெளிவும் விரவி வருதலான் 'தெரிவான்' என்றார்.

சுவை முதலிய தத்துவங்களைத் தெளிந்தவன் தன்னைத் தெரிந்தவனாவன்; தன்னைத் தெரிந்தவன் தலைவனைத் தெரிந்த வனாவன். தன்னைத் தெரிதலும் தலைவனைத் தெரிதலும் சொல்லப்பட வேண்டுவதில்லை. தத்துவங்களைத் தெளிந்த வனுக்கு மற்றிரண்டையும் தெரியும் நிலை இயல்பாகவே கூடும். ஆதலின் சுவை......... வகை தெரிவான்' என்று மட்டுங் கூறி விடுத்தார்.

வாழைத் தண்டை மட்டைகள் மூடி யிருப்பதுபோல உயிரைத் தத்துவங்கள் மூடியிருக்கின்றன. தத்துவங்களை ஆய்ந்து தெளியத் தெளிய அவை பட்டைகள் போல் கழன்று கழன்று தாமே போகும். தண்டென்னும் உயிர் விளங்கும். இதனால், தத்துவ விசாரத்தின் அவசியம் விளங்குதல் காண்க. 'வகை தெரிவான்' என்பது அவ்வவசியத்தை உணர்த்துவது.

சுவை முதலியவற்றின் வகைகளை ஆராய்ந்து தெளிந்த வன்வழி, மனம் இயங்கி அடக்கமுறுதலான், அவன் மனத்தில் மாசுகள் படிவதில்லை. மாசுகளினின்றும் அவன் விடுதலை யடைகிறான். அவனே நீத்தான். அவன்வழி உலகம் இயங்கும் என்பார், 'தெரிவான்கட்டே உலகு' என்றார். உலகை நடாத்து வோர் நீத்தார் என்பது கருத்து.

**முற்காலம்**

உலகத்தின் பழைய சரித்திரங்களை ஆராய்ந்தால் உலகை நடத்தியவர் நீத்தார் என்பது நன்கு விளங்கும். பண்டை மன்னர் முன்னிலைச் சுட்டாகவே நிற்பர். அவர் வாயிலாக நீத்தாரே ஆட்சி செலுத்துவர். ஆட்சித்துறைகளும், கலைத்துறைகளும், பிற வாழ்வுத் துறைகளும் நீத்தாரால் கோலப்படும். அவை வழி நின்று மன்னர் ஆட்சி புரிவர். அந்நாளில் அறஆட்சியே யாண்டும் நிலவியிருந்தது; மக்கள் அறநெறியில் நின்று வாழ்வு நடாத்தித் தத்துவ விசாரஞ் செய்து மனமாசுகளைத் துறந்து விடுதலை எய்தி வந்தார்கள்.

**இக்காலம்**

பிற்றைநாளில் நீத்தார் கோலிய அறவழியில் ஆட்சி நடவாமையால், உலகில் கொலை - கொள்ளை - முதலியன பெருகி வருகின்றன. உலகம் இப்போது நீத்தாரை மறந்து கிடக்கிறது. அதற்கு நல்லறிவு கொளுத்தவே கொலைப் புரட்சிகளும், கடும் போர்களும், இன்ன பிறவும் நிகழ்ந்து வருகின்றன. இவை யாவும் மக்கட்கு நீத்தார் பெருமையை உணர்த்த எழுவனவாம்.

எந்நாளும் உலகம் நீத்தார் வழியே இயங்குந் தன்மையது. இறைவன் நேரே உலகை நடத்துவதில்லை. அவன் நீத்தார் வாயிலாகவே உலகை நடாத்துகிறான். இந்நாளிலும் உலகம் நீத்தார் வழியே இயங்குகிறது. அதை இக்கால ஆட்சி முறைகள் மறைத்திருப்பதால், போராட்டம் தோன்றியிருக்கிறது. போராட்டம், '......வகைதெரிவான் கட்டே உலகு' என்பதை நாளடைவில் நன்கு விளங்கச் செய்யும்.

***'மண்ணாதி ஐந்தொடு புறத்திலுள கருவியும்***
***வாக்காதி சுரோத்ரா தியும்***
***வளர்கின்ற சப்தாதி மனமாதி கலையாதி***
***மன்னுசுத் தாதி யுடனே***
***தொண்ணூற்றொ டாறுமற் றுள்ளவும் மௌனியாய்ச்***
***சொன்னவொரு சொற்கொண் டதே***
***தூவெளிய தாயகண் டானந்த சுகவாரி***
***தோற்றுமதை என்சொல்லு வேன்'*** - தாயுமானவர். (4)

**25**

***உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்***
***வரனென்னும் வைப்புக்கோர் வித்து.***

**பொருள்**

உரன் என்னும் தோட்டியான் - மனஉறுதி என்னும் கதவால், ஓர் ஐந்தும் காப்பான் - ஐந்து புலனையும் காப்பவன், வரன் என்னும் வைப்புக்கு - மேன்மை என்று சொல்லப்படும் செல்வத்துக்கு, ஓர் வித்து - ஒரு வித்தாவன்.

**கருத்து**

ஐம்புலனைக் காக்கும் மனஉறுதியுடையவன் மேலான செல்வத்தை யுடையவன்.

**விருத்தி**

ஐம்புலவகை தெரிதலும் அதன் பயனும் மேற்பாட்டில் சொல்லப்பட்டன. இப்பாட்டில் ஐம்புலக் காப்பும் அதன் பயனும் உணர்த்தப்பட்டன. ஐம்புல வகை தெரிந்தவன் ஐம்புலனைக் காக்கும் ஆற்றல் பெறுவன் என்றபடி. இரண்டுக்குமுள்ள தொடர்பை உன்னுக.

**உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்**

உரம் - உரன்.

*உரன் - உறுதி; இங்கே மனஉறுதி; பின்னுள்ள 'ஓரைந்தை'க் கொண்டு மன உறுதி என்னப்பட்டது. (மனஉரன் - மனஉறுதி; மனவலி; மனத்திட்பம்; மனத்திண்மை; மனத் திடம்; மனோ சக்தி). 'நறுநுதல் நீத்துப் பொருள்வயிற் செல்வோய் - உரனுடை உள்ளத்தை'- கலித்தொகை 12 : 9 - 10 ; 'ஓட்டை மனவன் உரமிலி என்மரும்' - பரிபாடல் : 12 : 51; 'உள்ளியது முடிக்கும் உரனுடைய யுள்ளத்து'- புறநானூறு : 206 : 3 ; 'மூட இந்தி யங்கள்தமை மோக விடய நிலைதன்னில் - ஓடவொட்டா துரனர்எவ்வ மொழிந்த புந்தி யால்தடுப்பர்'- ஞானவாசிட்டம்; உபசாந்திப் பிரகரணம் : 66.*

தோட்டி - *கதவு; காவல்; 'குண்டுக ணகழிய குறுந்தண் ஞாயில் - ஆரெயிற் றோட்டி வெளவினை' - பதிற்றுப்பத்து: 71 : 12 : 13; 'நாடுடை நல்லெயில் அணங்குடைத்தோட்டி'- மதுரைக் காஞ்சி: 693.*

ஓர் ஐந்தும் - *ஒரு மூன்று என்பதுபோல ('ஒருமூன்றவித் தோன்' : சிலப்பதிகாரம் : நாடுகாண் : 194).*

*உம்மை : முற்று.*

*காப்பான் - ஓரைந்தையும் அடக்கிக் காப்பவன்; மன மாசுகளினின்றும் நீங்கியவன்; நீத்தான்.* ஆண்மகன் ஒவ்வொரு வனும் உரன் என்னுந் தோட்டியான் ஓரைந்தையுங் காத்தால், பெண்ணுலகில் தீமை நிகழ்தற்கே இடமில்லாமற் போகும். *திருந்த வேண்டுவது ஆணுலக மாதலின், 'காப்பான்' என்று ஆண் பாலாற் கூறினர்.*

*'உரன் என்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்' என்பதற்கு 'அறிவாகிய தோட்டியானே (அங்குசத்தானே) பொறியாகிய யானை ஐந்தினையும் புலன்களிற் செல்லாமல் மீட்பவன்' என்று மணக்குடவரும், 'திண்மை என்னுந் தோட்டி யால் (அங்குசத்தால்) பொறிகளாகிய யானை ஐந்தினையும் தத்தம் புலன்கள்மேற் செல்லாமல் காப்பவன்' என்று பரிமேலழ கரும் பொருள் கூறியிருத்தல் காண்க.*

*உரன் என்பதற்கு 'அறிவு' என்று மணக்குடவர் பொருள் கூறினர்; 'திண்மை' என்று பரிமேலழகர் கூறினர். பரிமேலழகர் 'திண்மை' என்னும் அளவில் நில்லாது, 'திண்மை ஈண்டறிவின் மேற்று' என்றொரு குறிப்பும் பொறித்தனர். இக்குறிப்பு மணக்குடவர் உரையினின்றும் பிறந்தது போலும்!*

**உரன் என்னுந் தோட்டி**

*தத்துவக் காரியங்களால் ஆவது உடல். உடலில் பல உறுப்புக்கள், கருவிகள், கரணங்கள் முதலியன அமைந்துள்ளன.*

அவற்றுள் சிறந்தன ஐம்புலன். இது மேலே, 'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்றைந்தின்' என்று ஆசிரியராலேயே தெளிவு செய்யப்பட்டது. புலன்களைப் பொறிவழி இயக்குவது மனம். மனம் எவ்வழிச் செல்கிறதோ அவ்வழியே புலன்களுஞ் செல்லும். புலன்களை நல்வழியிலோ தீ வழியிலோ உய்க்கும் பொறுப்பு மனத்தினுடையது. மனத்தை எவர் தம்வயப்படுத்துகிறாரோ அவர் வழி அஃது அடங்கி நடக்கும். அடங்கிய மனத்துக்குப் புலன்களும் அடங்கி நடக்கும். புலனடங்கப் பெற்றோரே நீத்தாராவார்.

புலன்களைத் தன்வயப்படுத்தும் ஆற்றல் மனத்துக்கண் இயல்பாகவே அமைந்திருக்கிறது. அவ்வாற்றலைப் பண்படுத்து வோரிடம் அது கூர்ந்து எழுந்து மனத்தைத் தன்வழி நிறுத்தும். அவ்வாற்றலே மன உரன் என்பது. அது, மன உறுதி, மனவலி, மனத்திட்பம், மனத்திண்மை, மனத்திடம், மனோசக்தி முதலிய பெயர்களால் வழங்கப்படுகிறது. அதை 'இச்சா சக்தி' (Will Power) என்பர் தத்துவ நூலார். அச்சக்தியே 'உரன் என்னுந் தோட்டி' என்று இத் திருக்குறளில் சொல்லப்பட்டது.

ஓரழகிய வீடு. அதன்கண் அறைகள் வகுக்கப்பட்டிருக் கின்றன. அறைகளில் பொருள்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. காப்புக்கெனக் கதவும் அமைக்கப்பட்டிருக்கிறது. கதவின்றி வாயில் மட்டும் இருப்பதால் என்ன பயன்? கதவில்லா வீடு சூறையாடப்படுமன்றோ? எதற்கும் கதவிருத்தல் வேண்டும். (கதவு - காப்பு).

உடல் ஒரு வீடு. அதன்கண் பொறி அறைகளிருக்கின்றன. அவைகளில் புலப் பொருள்கள் திகழ்கின்றன. மனமாகிய வாயிலுமிருக்கிறது. மனத்திண்மை என்னும் தோட்டி- கதவு - இல்லாவிடின் என்னாம்? புலப்பொருள்கள் பலவழியிலுஞ் சூறையாடப்படும். ஆதலின், ஓரைந்தையுங் காப்பதற்கு 'உரன் என்னும் தோட்டி' தேவையே.

'உரன் என்னுந் தோட்டி'யை அமைக்க எத் தச்சனும் வேண்டுவதில்லை. அஃது இயற்கையிலேயே ஒரு பெருந்தச் சனால் அமைக்கப்பட்டது. அதைக் காணவேண்டுவது மக்கள் கடமை. அதற்குரிய முயற்சி எழுதல்வேண்டும்.

ஈண்டுத் தோட்டி - கதவு - என்று சொல்லப்படுவது வடிவம் உடைய ஒன்றன்று. அது காவலைக் குறிக்கும் ஒரு குறி. தோட்டி - கதவு - என்பது உருவகம்.

### ஓரைந்துங் காப்பான்

மனத்தின்கண் ஒருவித சக்தி அடங்கியிருக்கிறது. அதுவே உரன் என்பது. மனத்தை நன்முறையில் பண்படுத்தினால் அதன்பால் அடங்கியுள்ள உரன் கூர்ந்தெழும். அவ்வுரன் 'தோட்டி' என்று இத்திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கிறது. அஃது ஐந்தையுங் காக்கும் ஆற்றல் வாய்ந்தது.

### தோட்டியின் இயல்பு

உரன் என்னுந் தோட்டியினிடம் ஒரு சிறந்த இயல்பிருக்கிறது. அது தீமையைத் தடுத்து நன்மையை ஏற்பது.

இயந்திரங்களில் இயங்குஞ் சில உறுப்புக்களுக்கென்று சிறு சிறு கதவுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. உறுப்புக்களின் நலத்துக்கென்று வரும் பொருள்களை அக்கதவுகள் திறந்து ஏற்றுக்கொள்ளும். உறுப்புக்களுக்குக் கேடு செய்யும் பொருள்கள் வரும்போது அவை திறவாது உரமாக நிற்கும். இத்தகைய நீர்மை, 'உரன் என்னுந் தோட்டி'யினிடம் இருக்கிறது.

### மனமும் பொறிபுலனும்

பொறிபுலன்கள் தீயன தீயன என்று பொதுவாகச் சொல்லப்படுகின்றன. நுணுகி ஆராய்ந்தால் அவைகளில் எவ்விதத் தீமையும் புலப்படாது. பொறிகளுடன் புலன்களை ஒன்றச் செய்து, அவைகளைப் புறவுலகுடன் உறவு கொள்ளச் செய்வது மனம். மனத்தின் தீமை எழும்போது பொறிபுலன்கள் தீமைவழி யுழல்வனவாகும். மனத்தில் நன்மை எழும்போது பொறி புலன்கள் நன்மைவழிச் செல்வனவாகும். மூலமாயுள்ள மனம் ஒழுங்குபட்டால் எல்லாம் ஒழுங்குபட்டுவிடும். மனத்தில் உரன் கூர்ந்து எழும்வரை, மனம் பலவழியிலும் உழன்று கொண்டேயிருக்கும். 'உரன் என்னுந் தோட்டி' எழுந்து நின்றால் அது நன்மையை ஏற்றுத் தீமையைத் தகையும். உரனைப் பெற்ற மனமே நல்லதாகும். மனம் நல்லதானால் பொறி புலன்களில் எங்ஙனம் தீமை நுழையும்? ஆதலின், பொறிபுலன் களைத் தீயன என்று சொல்வது தவறு என்றே கூறலாம். மன நிகழ்ச்சியைப் பொறி புலன்கள் மீது சுமத்திக் கூறுவது உலக வழக்கு.

### உரனை எழுப்புவது

மனத்துக்கண் 'உரன் என்னுந் தோட்டி'யை எப்படி எழுப்புவது? அதைக் கொண்டு ஓரைந்தையும் எப்படிக் காப்பது? முறைகளென்ன? இவ்வினாக்களுக்குரிய விடைகளை நூற்கண் பரக்கக் காணலாம். இது பாயிரத்திலுள்ள ஓர் அதிகாரம்.

பாயிரம் விதை போன்றது. விதையை மட்டுங் கொண்டு, மன்றெங்கே கவடெங்கே கோடெங்கே என்று கேட்டால் என் சொல்வது? விதை மரமானால் அப்பொழுது அது மன்றையும் கவட்டையும் கோட்டையுங் காட்டும். பாயிரத்துள் ஓர் அதிகார மாக விளங்கும் இதன்கண் நீத்தார் பெருமை மட்டும் பேசப்படு கிறது. பெருமையில் சிற்சில கூறுகளே திகழ்கின்றன.

'உரன் என்னுந் தோட்டியான்' ஓரைந்தையுங் காக்கக் காக்க மெய்யறிவு விளக்கம் உண்டாகும். மனோசக்தியைப் புலன்களிடை ஒன்றச் செய்யாதாரிடம் மெய்யறிவு அரும்புவ தில்லை. மனத்திண்மைக்கும் மெய்யறிவுக்கும் தொடர்பு உண்டு. இதை அடுத்த அதிகாரத்தில் சிறிது விளக்க எண்ணியுள்ளேன்.

### மனிதர்

'உரன் என்னுந் தோட்டியான்' ஓரைந்தையுங் காக்கும் முயற்சியில் இறங்குவோரே மனிதப் பிறவியிலுள்ள நுட்பத்தை உணர்பவராவர். மற்றவர் அவ்வுணர்வே பெறாதொழிவர். அவருக்கு ஆண்டவன் நல்லறிவுச்சுடர் கொளுத்துவானாக.

### வழுக்கலும் முயற்சியும்

ஓரைந்தையுங் காக்கப் புகும் முயற்சியில் வழுக்கல் நேரலாம். வழுக்கி வீழ்வது மனித இயற்கைக் கூறுகளில் ஒன்று. வழுக்கி வீழ்ந்தவர் கதைகள் பல புராணங்களிற் சொல்லப்பட்டிருக் கின்றன. வழுக்கி வீழினும் 'உரன்என்னுந் தோட்டி'யைக் கொழு கொம்பாக் கொண்டு மீண்டும் எழவே முயலுதல் வேண்டும். வீழ்வு நேர்ந்ததே என்று சோர்வுற்று நின்றுவிடுவது முயற்சியா காது. மேலும் மேலும் முயன்றே போதல் வேண்டும். 'உரனி'ல் உரமாக ஊன்றி நிற்க நிற்க இயற்கை இறையினிட மிருந்து துணை வரும். உரனில் ஊன்றி நில்லாது, 'இயற்கை - இறையின் துணை வரவில்லையே' என்று, இயற்கை - இறையைக் குறை கூறுவதோ, அதன் உண்மையை மறுக்கப் புகுவதோ அறியாமை.

### வரனென்னும் வைப்புக்கோர் வித்து

வரம் - வரன்.

வரன் - மேன்மை; எல்லாவற்றிலும் மேன்மையுடையது; 'வரங்கள் வண்புகழ் எந்தை..... சாய்க்காடே' - ஞானசம்பந்தர் ; 'வரமுடைச் சொக்கன் தன்னை'- திருவாலவாயுடையார் திருவிளையாடல் : 13 : 12.

வைப்பு - செல்வம் ; நிதி. 'எய்ப்பினில் வைப்பு' என்னுந் தொடர், கற்றவர் வாயில் தொன்று தொட்டு உலவி வருவது. அப்பர் உள்ளிட்ட பல பெரியோர் அத்தொடரை ஆண்டுள்ளனர்.

வைப்புக்கு, இடம் - நிலம் என்னும் பொருளும் உண்டு.

'வரன் என்னும் வைப்புக்கு'- 'மேலாகிய இடத்தேயாதற்கு' என்பது மணக்குடவர் உரை; 'எல்லா நிலத்தினும் மிக்கதென்று சொல்லப்படும் வீட்டு நிலத்துக்கு' என்பது பரிமேலழகர் உரை.

ஓரைந்தையுங் காக்கவல்லவனே மனமாசுகளினின்றும் விடுதலை யடையும் நெறியில் நிற்பவனாவன். அவனே மேலான செல்வமென்னும் வீடுபேற்றுக்குரிய விதையை வாழ்வில் விதைப்பவனாவன். இவ்வுண்மையை, '....ஓரைந்துங் காப்பான் வரன் என்னும் வைப்புக்கு ஓர் வித்து' என்கிறார்.

**வரன் என்னும் வைப்புக்கு**

வீடுபேறே மேலான செல்வமாதலின், அதனை 'வான் என்னும் வைப்பு' என்றார். உலகில் எத்துணையோ செல்வங் களிருக்கின்றன. அவை கல்வி, பொருள், புகழ் முதலியன. அவை யாவும் பொன்னுதல் வெள்ளிடைமலை. ஆசிரியரே நிலை யாமையைப் பற்றிப் பலபட ஓதியிருக்கிறார். தனக்கு மேல் ஒன்றில்லாததாய், அழியாததாய், என்றும் நிலைபேறாய் இருப்பது வீடுபேறாதலின், அதுவே 'வரன் என்னும் வைப்' பாயிற்று.

வைப்பாவது அழியாச் செல்வம் - சேமநிதி. 'செல்வநெடு மாடல்... செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே' என்று ஞானசம்பந்தரும், 'காலமுண் டாகவே.... மூலபண்டாரம் வழங்கு கின்றான்வந்து முந்துமினே' என்று வாதவூரடிகளும் அருளிய மெய்ம்மொழிகளை நோக்குக.

வீடுபேறு என்பதைப்பற்றி வெளிவந்துள்ள கருத்துக்கள் பலதிறத்தன. ஆணவக் கட்டினின்றும் விடுதலை யடைவதே வீடுபேறென்பது. அந்நிலை யெய்தியவர் எவ்வுலகிலுமிருப்பர்; எவ்வுடலிலுமிருப்பர்; உலகு உடலங்களின்றியுமிருப்பர். உலகு உடலங்களின் தாக்குதல் அவர்க்கில்லை. எத்தாக்குமின்றி யிருப்பதே வீடுபேற்றின் நிலை.

**நீத்தாரும் வைப்பும்**

நீத்தார் சிலர் சில காரணம்பற்றி இம்மண்ணுலகில் உடல் தாங்கியும் நிற்பர். அவர் விடுதலையின் பொருட்டு உடல் தாங்கியவரல்லர். அவர்க்கு ஆணவக் கட்டுங் கிடையாது;

வினையுங் கிடையாது. இவை இல்லாதவர் விடுதலையின் பொருட்டு உடல் தாங்க வேண்டுவதில்லை. அவர் முன்னரே விடுதலையடைந்தவர். அவர் உலக நலங்கருதியே பொன்னுடல் தாங்குகிறார். அவர் மனத்தில் எக்காரணம் பற்றியும் எவ்வித மாசும் படியாது. ஆதலால், வீடுபேறென்பது ஒரு குறிப்பிட்ட இடம் என்று கொள்ளற்க. இதுபற்றியே 'வைப்பு' என்பதற்குச் 'செல்வம்' என்னும் பொருள் கூறப்பட்டது. விடுதலைச் செல்வமே வைப்பு என்பது. ஈண்டைக்கு இவ்வளவு சாலும்.

**ஓர்வித்து**

உரன் என்னுந் தோட்டியான் ஓரைந்தையுங் காப்பவன், வரன் என்னும் வைப்புக்கு வித்தாகிறான். எங்கே வித்தாகிறான்? இவ்வாழ்வில் - இவ்வுலகில் - வித்தாகிறான். வாழ்வை விடுத்தோ - உலகை விடுத்தோ வித்தாதல் இயலாது என்பது குறிப்பு. விடுதலைக்கென்றே தனு கரண புவன போகங்கள் இறைவனால் வழங்கப்படுகின்றன. அவற்றைத் தள்ளி விடுதலையடைவது இயலாது. விடுதலைக்கு அவை கருவிகளாகத் துணை செய்வன. ஆதலின், தனு கரணங்களிலிருந்தே, புவனத்தில் போகந் துய்த்துக் கொண்டே, உரன் என்னுந் தோட்டியான் ஓரைந்தையுங் காத்து வந்தால், வரன் என்னும் வைப்புக்கு வித்துண்டாகும். போகம் நுகரும்போது அதில் வீழாது ஓரைந்தையுங் காத்து வரல் வேண்டுமென்பது பெரியோரின் எச்சரிக்கை.

**இயற்கை – செயற்கை**

தனுகரண புவன போகங்கள் இயற்கை வைப்புக்கள், அவ் வைப்புக்களை நேரிய முறையில் பயன்படுத்தி வாழ்வு நடாத் தினால் அவ்வாழ்வே மேலான வைப்புக்கு வித்தாகும். இயற்கை வைப்புக்களினின்றும் இறை வைப்பு அரும்பும். இந்நுட்பம், 'உரன் என்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான் - வரன் என்னும் வைப்புக்கோர் வித்து' என்னும் இத்திருக்குறளில் விளங்குதல் காண்க.

தனு - உடல்; கரணங்களில் சிறந்தது மனம்; புவனம் - உலகம்; போகம் - நுகர்ச்சி. இவ்வமைப்புக்கள் இயற்கையின் பாற் பட்டன. இவை உயிரைப் பற்றியுள்ள அறியாமைக் கழிவுக் கென்று ஏற்பட்டுள்ள கருவிகள்.

தனுவும் மனமும் ஒன்றி நிற்பன; புவனமும் போகமும் ஒன்றி நிற்பன. புவனபோகங்களில் நாட்டஞ் செலுத்தி அவற்றில் ஒன்றுபடுவது மனம். அவ்வொன்றல் இயற்கை; செயற்கையன்று. அவ்வொன்றுதலே உயிரின் அறியாமையை நீக்கி அறிவை

விளக்குவது. அவ்வொன்றலில் நேர்மை இருத்தல் வேண்டும். நேர்மையில் எழுவதே உரன் என்னுந் தோட்டி. நேர்மை இன்றேல் ஒன்றல் செயற்கையாகி நரகச் சேறாகும். நரகச் சேற்றில் உரன் எழாது.

உரன் யாண்டிருந்து எழுகிறது? மனத்தினின்றும் எழுகிறது. மனம் தனுவில் ஒன்றிப் புவனபோகங்களை நுகர்விப்பது. நேரிய நுகர்வால், உரன் என்னுந் தோட்டி எழுந்து, ஓரைந்தையுங் காக்கும். இக்காவல் பெறுவோன் வரன் என்னும் வைப்புக்கு வித்தாகிறான்.

வைப்பென்னும் வித்தை உதவுவது உரன் என்பதை மறத்தலாகாது. இவ்வுரனுக்குப் பிறப்பிடமாகிய நிலைக்களன் மனம். மனம் தனுவில் ஒன்றிப் புவனபோகங்களை நுகர்விக்குங் கருவி. ஆகவே, தனுகரண புவனபோகங்கள், வரன் என்னும் வைப்புக்கு, வைப்புக்களாக நின்று துணை செய்வதை உன்ன உன்ன அவற்றின் பெற்றி புலனாகும். இயற்கை வைப்புக்களாகிய தனுகரண புவன போகங்களை வெறுத்தல் தீச்செயல்களுக்கு வீதை விதைப்பதாகும். இதைச் சிந்தித்து உலகம் இயற்கை யோடியைந்து வாழ்ந்து பேறு பெறுவதாக. (5)

**26**

***ஐந்தவித்தான் ஆற்றற் ககல்விசும்பு ளார்கோமான்***
***இந்திரனே சாலுங் கரி.***

**பொருள்**

ஐந்து அவித்தான் ஆற்றற்கு - ஐந்து புலனையும் அடக்கினவனது வல்லமைக்கு, அகல் விசும்பு உளார் கோமான் - அகன்ற வானத்தில் வாழ்வோரின் இறைவனாகிய, இந்திரனே சாலுங் கரி - இந்திரனே அமையும் சான்று.

**கருத்து**

ஐந்தவித்த சான்றோனது ஆற்றலே பெரிது.

**விருத்தி**

ஐந்தவித்தவன் வீடுபேற்றிற்கு வித்தாவன் என்பது மேற் பாட்டின் உள்ளுறை; வீடுபேறு இந்திரன் பதவியன்று என்பது இப்பாட்டின் கருத்து.

**ஐந்தவித்தான் ஆற்றற்கு**

ஐந்து - ஐந்தும் ; உம்மை தொக்கது.

*ஐந்தும் - ஐம்புலனையும்.*

*அவித்தான் - அடக்கினவன்; அழித்தவன் என்று கோடலாகாது. 'ஐந்தின்வகை தெரிவான்' என்பதும், 'ஓரைந்துங் காப்பான்' என்பதும் அழித்தலைக் குறியாது, அடக்கலையே குறித்து நிற்றலான், 'அவித்தான்' என்பதற்கு 'அடக்கினவன்' என்று பொருள் கூறப்பட்டது. 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்னுங் குறளில் 'ஐந்தவித்தானுக்கு' உரைத்துள்ள விருத்தியை நோக்குக.*

*ஆற்றற்கு - (ஐந்தவித்தல் வழியாகப் பெற்ற) வல்லமைக்கு; உரனுக்கு.*

**அகல் விசும்புளார் கோமான்**

*அகல் விசும்பு - அகன்ற வானத்தில்; 'அகலிரு விசும்பில்' - 'தன்னையொழிந்த நான்கு பூதமும் தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமாகிய பெரிய ஆகாயத்திடத்தே'- பெரும் பாணாற்றுப்படை : 1 : உரை; 'அகலிருவானத்து' - 'தன்னை யொழிந்த பூதங்கள் விரிதற்குக் காரணமாகிய பெருமையை யுடைய ஆகாயத்தே' - மதுரைக்காஞ்சி : 267 : உரை; 'அகலிரு வானத்து'- 'ஏனைய பூதங்கள் விரிதற்குக் காரணமான கரிய ஆகாயத்திடத்தே'- குறிஞ்சிப்பாட்டு: 48: உரை; 'அகலிரு விசும்பின்' - 'ஏனைப் பூதங்கள் தோன்றுதற்குக் காரணமான பெரிய ஆகாயத்தில்' - மலைபடுகடாம் : 100 : உரை.*

***விசும்பு – வான்; இங்கே வானுலகு; தேவருலகு.***
***உள்ளார் – இருப்போர் ; வாழ்வோர் ; வானோர்.***
***விசும்பிலுள்ளார் இயலை,***

***'திருவிற்போற் குலாய தேந்தார்த் தேவர்தந் தன்மை செப்பிற்***
***கருவத்துச் சென்று தோன்றார் கானிலந் தோய்தல் செல்லார்***
***உருவமே லெழுத லாகா ஒளியுமிழ்ந் திலங்கு மேனி***
***பருதியி னியன்ற தொக்கும் பன்மலர்க் கண்ணி வாடா'***

*எனவரூஉஞ் சிந்தாமணி செய்யுளால் உணர்க.*

*கோ - இறை, மான் - மகன்; பெயர் விகுதியுமாம். கோமான் - இறைவன்.*

**இந்திரனே சாலுங் கரி**

*இந்திரன் - வானவர் தலைவன்.*

*இந்திரனே - ஏகாரம் உயர்வு சிறப்பு. (வேறு சான்று வேண்டுவதில்லை என்றபடி).*

சாலும் - அமையும்; பொருந்தும்.

கரி - சான்று; 'அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கில்லை'- குறுந்தொகை : 184 : 1.

**ஐந்தவித்தானும் இந்திரனும்**

இப்பாட்டில் இருவித ஆற்றல் மிளிர்கின்றன. ஒன்று ஐந்தவித்தான் ஆற்றல்; மற்றொன்று இந்திரன் ஆற்றல். ஐந்தவித்தானுடையதை 'ஆற்றல்' என்ற சொல்லான் ஆசிரியரே குறித்துள்ளனர். இந்திரனுடையதை அவர் 'ஆற்றல்' என்னுஞ் சொல்லால் குறியாது, வேறு சொற்களால் அப்பொருள் படக் குறித்தள்ளனர். ஏன்?

**இந்திரன் திறம்**

இந்திரன் திறத்தை ஆசிரியர் உணராதவரல்லர். அதை அவர் நன்கு உணர்ந்தவரென்றே தெரிகிறது. இல்லையேல், 'அகல் விசும்புளார் கோமான்' என்று இந்திரனை அவர் சிறப்பித்திரார். இந்திரனது திறத்தை நன்கு உணர்ந்தே அவனை ஆசிரியர் எடுத்துக்காட்ட உளங்கொண்டிருத்தல் வேண்டும்.

இந்திரன், 'கோமான்' என்றும், 'விசும்புளார் கோமான்' என்றும், 'அகல் விசும்புளார் கோமான்' என்றும் சிறப்பிக்கப் பட்டிருக்கிறான். இச்சிறப்பால் இந்திரன், உலகிலுள்ள கோ மக்களுள் ஒருவனல்லன் என்பதும், அவர்கட்கெல்லாம் மேம்பட்ட விசும்புளார்கோமான் என்பதும் விளங்குகின்றன. விசும்பை 'அகல்' என்னும் அடையால் அணி செய்தது, விசும் பின் பெருமையை யுணர்த்தி, அதன் வாயிலாக விசும்புளார் பெருமையையுணர்த்தி, அவ்விசும்புளார்க்குக் கோமான் இந்திரன் என்று, இந்திரன் பெருமையை உணர்த்துதற்கென்க.

இந்திரனை இருக்குவேதம் தெய்வம் என்றும், வரந்தரும் ஆற்றலுடையவன் என்றும், ஆற்றலுக்கு அறிகுறியாகிய வச்சிரத்தைத் தாங்கி யிருப்பவன் என்றும் போற்றுகிறது; தொல்காப்பியம், 'வேந்தன் மேய தீம்புனல் உலகம்' என்று புகழ்கிறது. உலக மன்னர் தமது நலங் கருதி இந்திரனுக்கு விழா எடுத்த கதைகள் பல வழங்கப்படுகின்றன. இன்னும் பல சிறப்புக்கள் இந்திரனுக்கு உண்டு.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த இந்திரன் திறத்தைத் திருவள்ளுவர் வெவ்வேறு சொற்களால் புலப்படுத்துகிறாரே யன்றி, நேரே 'ஆற்றல்' என்னுஞ் சொல்லால் புலப்படுத்து கிறாரில்லை. ஐந்தவித்தான் ஆற்றலுக்கு முன்னே இந்திரன தாற்றல் ஆற்றலாகவே அவர்க்குத் தோன்றவில்லை போலும்!.

### இந்திரன் வணக்கம்

*'ஐந்தவித்தான் ஆற்றலுக்கு * * *இந்திரனே சாலுங்கரி' என்று ஆசிரியர் இந்திரனை மட்டுங் குறித்ததென்னை? வேறு ஒருவர்மீது அவர்தங் கருத்து ஏன் செல்லவில்லை? என்று சிலர் வினவலாம். ஐந்தவித்தான் ஆற்றலைக் கூறப்புகுந்த ஆசிரியர்க் குச் சான்று தேவையாயிற்று. அவரது உள்ளத்தில் எத்தனையோ பேர் ஆற்றல்கள் தோன்றியிருக்கும். அவற்றுள் இந்திரன தாற்றலே சிறப்பாகத் தோன்றியிருக்கலாம். அவனது ஆற்றலில் ஆசிரியர் கருத்துப் படிந்தது. அந்நாளில் ஆற்றலுக்குத் தெய்வம் இந்திரன் என்று பேசப்படும் வழக்கமும் இருந்தது போலும்! ஆசிரியர் முன்னே ஐந்தவித்தான் ஒரு பக்கமும் இந்திரன் இன்னொரு பக்கமும் தோன்றினர். இந்திரன் ஐந்தவித்தானுக்கு வணக்கஞ் செய்கிறான். அக்காட்சி கண்ட ஆசிரியர், 'ஐந்த வித்தான் ஆற்றலுக்கு இந்திரனே சாலுங் கரி' என்றார். இந்திரன தாற்றலை வியந்தே அவர் சான்று காட்டுகிறார்; எப்படி வியக்கிறார்? 'அகல் விசும்புளார் கோமான்' என்று வியக்கிறார். வியப்பிலுள்ள நுட்பம் என்னை?*

### காற்றும் வானும்

*ஆற்றலுக்குப் பெரிதுங் காற்றைச் சொல்வது வழக்கம். ஈண்டு விசும்பு சொல்லப்பட்டது. காற்றிலும் விசும்பு ஆற்றல் வாய்ந்தது. காற்றுக்கு அளவு உண்டு; போக்கு வரவு உண்டு. விசும்போ அளவு கடந்தது; போக்குவரவற்றது; காற்றும் மற்ற மூன்று பூதங்களும் நிலவுதற்கு இடந்தந்து தான் விரிந்து நிற்பது. இன்னோரன்ன சிறப்புக்களை நோக்கியே 'அகல்விசும்பு' என்றார். இத்தகைய விசும்பில் உள்ளவர் எத்தகை ஆற்றலுடைய வராயிருப்பர்? அவர்க்குக் கோமானாயுள்ளவன் எத்தகை ஆற்றல் வாய்ந்தவனாயிருப்பன்? இது பற்றி, 'இந்திரனே' என்றார். ஏகாரத்தின் பொருளை உன்னுக. தொனி இந்திரன தாற்றலைப் புலப்படுத்துவது காண்க. ஆகவே, இந்திரன் திறத்தை நன்கு உணர்ந்தே ஆசிரியர் அவனைச் சான்றாக எடுத்துக்காட்டின ரென்க.*

*ஈண்டு ஆசிரியர், ஆற்றலுக்கு இந்திரனை ஒரு அறிகுறி யாகவே எடுத்தாண்டனர். ஆற்றலுக்கு அறிகுறியாயுள்ள இந்திரனைச் சான்றாகக் கொண்டது, ஐந்தவித்தான் ஆற்றலின் விழுப்பத்தை விளக்கவேண்டி என்க. ஐந்தவித்தான் ஆற்றலுக்கு இந்திரன தாற்றல் அடங்குவதெனில் அவ்வாற்றலுக்கு ஒப்பா கவோ உயர்வாகவோ பிறிதோர் ஆற்றல் இல்லை என்று விளக்கி யவாறாம்.*

### பலதிறக் கூற்று

*'இந்திரனே சாலுங்கரி' என்று ஆசிரியர் அருளியதைக் கொண்டு பலர் பலவாறு கூறுப. ஆசிரியர் கருத்தை உணர வல்லார் யாவர்? அஃது அவர்க்கே தெரியும்.*

*மணக்குடவர் ஒன்றைச் சொல்கிறார்; பரிமேலழகர் வேறொன்றைச் சொல்கிறார். அவை முறையே வருமாறு:-*

*'இந்திரன் சான்றென்றது, இவ்வுலகின்கண் மிகத் தவஞ் செய்வாருளரானால், அவன் தன்பதம் இழக்கின்றானாக நடுங்குமாதலான் இது தேவரினும் வலியன் (ஐந்தவித்தான்) என்றது'- இது மணக்குடவர் குறிப்பிலுள்ளது.*

*"தான் ஐந்தவியாது சாபமெய்தி நின்று அவித்தவன தாற்றல் உணர்த்தினானாகலின், 'இந்திரனே சாலுங்கரி' என்றார்"- இது பரிமேலழகர் குறிப்பிலுள்ளது.*

*மற்றுமொன்று வழங்கப்படுகிறது. அஃது அருகி வழங்கு தலால் அதை ஈண்டுச் சுருங்கச் சொல்ல விரும்புகிறேன்.*

*தேவர் என்பவர் தவத்தால் உயர்ந்தவர். அதனால் அவர் வானவர் எனப்படுகிறார். அவர்தம் உடல் நுண்ணியது; ஒளிர் வது. உலகில் நடைபெறுவன எல்லாம் அவர்க்குப் பளிங்கென விளங்கும். அவர்க்குத் தலைவனே இந்திரன் என்பவன். உலகில் ஒருவர் அறம் பூண்டு, ஐம்புல வகைகளை ஆய்ந்து, தெளிந்து, உரன் என்னுந் தோட்டியான் புலன்களைக் காத்து, அடக்கி, வென்று, மன மாசுகளினின்றும் விடுதலையடைந்து நீத்தா ராயின், அவரது நிலை தேவர்க்கும், அவர்தந் தலைவனுக்கும் நன்கு புலனாகும். புலனாயதும் இந்திரன் தேவர் சூழ எழுந்து அந்நீத்தாரை வழிபடுவன். இது பேருமந்தர புராணம் முதலிய நூல்களிற் காணப்படுவது.*

*இந்திரன், ஆற்றலுக்கு அறிகுறியா யிருப்பவன். அவன் வழிபடும் 'ஐந்தவித்தான் ஆற்றல்' எத்தகையதா யிருக்கும்? அஃது இந்திரனுடையதினும் விழுமியதா யிருக்குமன்றோ? இதனால் ஐந்தவித்தான் ஆற்றலை விளக்க 'இந்திரனே சாலுங்கரி' என்றார்.*

### ஆற்றலும் ஆயுதமும்

*ஐந்தவித்தானும் ஆற்றல் வாய்ந்தவன்; இந்திரனும் ஆற்றல் வாய்ந்தவன். முன்னவனிடம் ஆயுதமில்லை; பின்னவனிடம் 'வச்சிரம்' என்னும் ஆயுதமிருக்கிறது. அவன் ஆற்றல் ஆன்மா வில் மிளிர்கிறது; இவன் ஆற்றல் ஆயுதத்தில் நிற்கிறது.*

ஆயுதம் அச்சத்தின் பரிணாமம். அச்சமுள்ள இடத்தில் பகைமை யுண்டு. பகைமை புலன்களின் குறும்பால் விளைவது. புலன்கள் வெல்லப்படின் அவற்றின் குறும்பு அற்றுப்போகும். குறும்பு அற்றதும் அச்சமும் பகைமையும் இடம் பெறாதொழியும். அச்சமும் பகைமையும் அற்றவர்க்கு ஆயுதம் எற்றுக்கு? ஆதலால், ஐம்புலன்களை வெல்கை வேண்டற்பாலது.

**உள்ளொளி**

புலன்களின் குறும்பு அடங்கப் பெற்றதும் உள்ளத்தில் ஒரு பெரும் மாறுதல் நேரும்; இருண்மயமாய்க் கிடந்த உள்ளத்தில் ஓரொளி எழும். அவ்வொளி அச்சத்தையும் பகைமையையும் நீறுபடுத்தும். அச்சமும் பகைமையும் அறியாமை ஈனுங் குழவிகள். உள்ளொளி, குழவிகளையும் அழித்து அவற்றின் தாயகத்தையும் அழிக்கும்.

அறியாமை, வேற்றுமை யுணர்வை எழுப்பிச் சகோதர நேயத்துக்குக் கேடு சூழ்வது. உள்ளொளியால் அறியாமை அகலும்; வேற்றுமை யுணர்வு பட்டுப்போகும். அந்நிலையில் எல்லா வுயிருஞ் சகோதரம் என்னும் உண்மை விளங்கும். இந் நேயமுடையார்க்கு ஆயுதம் ஏன்? எல்லா உயிரும் அவர் உயிராகவும், அவர் உயிர் எல்லா உயிராகவும் விளங்கும்.

இப்பாட்டால் உணரக்கிடப்பது ஐந்தவித்தான் ஆற்றலே ஆற்றல் என்பது; அதாவது ஆத்மசக்தியே சிறந்ததென்பது.

ஆத்ம சக்திக்கு அறிகுறி ஐந்தவித்தான் ஆற்றல்; தேச சக்திக்கு அறிகுறி இந்திரனதாற்றல். தேக சக்தி, ஆத்ம சக்திக்கு அடங்கி வணங்குவதை இப்பாட்டு அறிவுறுத்துகிறது. (6)

**(III) ஐந்தவித்தமைக்கு அறிகுறிகள்**

**27**

***குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி***
***கணமேயுங் காத்த லரிது.***

**பொருள்**

குணம் என்னும் குன்று ஏறி நின்றார் - குணம் என்னும் மலை ஏறி நின்றவர், வெகுளி - (தம்முள்) கோபத்தை, கணமேயும் காத்தல் அரிது - ஒரு நொடிப் பொழுதேனும் பாதுகாத்தல் இல்லை

**கருத்து**

குணக் குன்றுகட்குக் கோபம் பிறப்பதில்லை.

### விருத்தி

*மேலே மூன்று பாவிலும் பெருமை ஐந்தவித்தலில் பொலிவது சொல்லப்பட்டது. இப்பாட்டிலும் தொடர்ந்து வரும் மூன்று பாட்டிலும் ஐந்தவித்தான் குணம் மொழி செயல் முதலியன சொல்லப்படுகின்றன. இவை பெருமையின் அறிகுறிகளென்க.*

### குணமென்னுங் குன்றேறி நின்றார்

*குணம் - அருட் குணம்; முக்குணத்தில் சேராத ஒன்று; ஒழுக்கக் கூறுகளுக்கெல்லாம் அடிப்படையாக நிற்கும் ஒன்று.*

*குணம் மனத்துக்கண் மாசில்லாத ஒரு நிலை. குணத்தின் இயலை ஆய்ந்தால் அஃது அறமாதல் விளங்கும். ஈண்டுக் குணம் அறத்தின் மேலது. அதுபற்றியே அருட்குணம் என்னப்பட்டது.*

*குன்று - மலை; ‘விலங்கல் சயிலம்..... குத்திரங்குவடு கோத்திரங் குன்று.... மலைப்பெயர்’; ‘வருணநாளும் மலையுங் குன்றே’- பிங்கலந்தை; 495 ; 3414.*

*மலை இருவிதம். ஒன்று பெருமலை; இன்னொன்று சிறுமலை.*

*குன்று பொதுவாக மலையை உணர்த்தினுஞ் சிறப்பாகச் சிறு மலையை உணர்த்தும். ‘குன்று பொற்றை குவடு குறும்பொறை - என்றிவை சிறுமலை இறும்பு மாகும்’- பிங்கலந்தை : 496. ‘குன்று மலை காடு நாடு’; ‘அஞ்சு வருமரபின் வெஞ்சினப் புயலேறு - அணங்குடை அரவின் அருந்தலை துமிய - நின்று காண் பன்ன நீண்மலை மிளிரக் - குன்று தூவெறியும் அரவம் போல’- புறநானூறு : 17 : 3 ; 211 : 1 - 4.*

*பெருமலை ஏறுதல் அரிது; சிறுமலை ஏறுதல் அரிதன்று. அதனால் ‘குன்று’ என்றார் போலும்!*

*ஏறி - சீலக்கால் கொண்டு ஏறி.*

*நின்றார் - உறுதியில் நின்றார் ; அமர்ந்தார் என்றபடி.*

*நிற்றல் - நிலைத்திருத்தல்; உறுதியில் நிலைத்திருத்தல்.*

*வெகுளி - முக்குற்றங்களில் ஒன்று என்று தத்துவர் கூறுப; முக்குற்றம் : காமம் வெகுளி மயக்கம்.*

*கணம் - க்ஷணம் ; நொடி.*

### குணமென்னுங் குன்று

*குணம் என்னுங் குன்று - குணமாகிய குன்று. குணக்குன்று - குணமலை என்னும் வழக்குகளை நோக்குக.*

குணமலை என்னும் வழக்காறு பிறந்தமைக்குக் காரணம் எதுவாயிருக்கும்? ஒவ்வொருவரும் கூர்த்தமதியால் சிந்தித்தல் வேண்டும். ஆழ்ந்த சிந்தனையில் பல தோன்றும். இதுகாறும் புலவர்கள் கூறியுள்ள காரணங்கள் பலபடக் கிடக்கின்றன.

மலை, அமைதிக்கு அறிகுறி, அமைதியில் விளங்குவது அருட்குணம், அதனால் குணம், மலை என்று சொல்லப்படுகிற தென்று சுருங்கிய முறையில் ஊகிக்கலாம்.

### மலையும் குணமும்

மலையொன்று நிற்கிறது. அதற்கு அடியும் உண்டு; முடியும் உண்டு. (நடுவின் ஒரு பகுதி அடியில் அடங்கும்; மற்றொரு பகுதி முடியில் அடங்கும்).

மலையின் அடிநிலை ஒருவிதம்; முடிநிலை வேறுவிதம். அடியில் காடுகள் சூழ்ந்திருக்கின்றன. அவற்றுள் விலங்குகள் வசிக்கின்றன. முடியை அடைதற்குப் படிகளும் அமைந்திருக் கின்றன.

ஒருவர் முடியை அடைதற்குப் புறப்படுகிறார்; அவர்படி ஏறுகிறார்; காடுகளைக் கடக்கிறார்; இடையிடையே விலங்கு களைக் கண்டு அஞ்சி அஞ்சி மிக எச்சரிக்கையாக நடக்கிறார்; உச்சியை அடைகிறார்; அங்கே அமர்ந்து நானா பக்கமும் நோக்குகிறார். காடு பசுமை அமைதியைக் காட்டுகிறது. கடல் கருமை அமைதியை வழங்குகிறது. வான் நீல அமைதியைப் பொழிகிறது. இவையெல்லாம் ஒன்றி, உச்சியிலிருப்போரை அமைதி மயமாக்கி, அமைதியின்கண் அவரைத் திளைக்கச் செய் கின்றன. அடியிற்றோன்றிய அச்சங்களெல்லாம் எங்கேயோ பறந்தோடின.

குணத்துக்கும் மலையைப் போலவே கீழ்நிலையுமுண்டு; மேல்நிலையுண்டு.

காடுகள் - புறத் தத்துவக் காரியங்கள். விலங்குகள் - முக் குணக் காரியங்கள். படிகள் - உள்தத்துவக் காரியங்கள்.

உச்சி - அமைதி. அமைதியில் விளங்குவது அருளறம்; அதுவே குணம் என்பது.

காடு, விலங்கு, படி, உச்சி எல்லாஞ் சேர்ந்த ஒன்றே மலை யென்பது. அதன் அடி அச்சமூட்டுகிறது; முடியோ அமைதி யூட்டுகிறது.

மேல்நிலையின் அடைவு, கீழ்நிலையின் தீமைகளையும் நல்லனவாகவே உணர்த்தும்.

**மலையும் நீத்தாரும்**

*நீத்தார் புறவுலகில் வாழும்போதும் அவர் அடிக்கடி மலையின் உச்சி நண்ணித் திரும்புவது வழக்கம். அகமலையின் உச்சியிலுள்ள சாந்தத் தெய்வத்துடன் உறவுகொண்டுள்ள அவர்க்கும், புறமலை அமைதியில் விருப்பம் எழும்போலும். உல கோர்க்கு மலையின் மாண்பை அறிவுறுத்த வேண்டுமென்பதும் அவர்தங் கருத்தா யிருக்கலாம்.*

*பொதுவாக மக்கள் உடல்நலங் கருதியும், மன அமைதி விரும்பியும் மலைக்குச் செல்வது கண்கூடு. மலைவாழ்வில் பலதிற நலன்கள் விளையும். மலையின் சிறப்பைப் பற்றி, 'இமய மலை அல்லது தியானம்' என்னும் நூலில் விரித்துக் கூறி யுள்ளேன். விளக்கம் அந்நூலிற் பார்க்க.*

*சாந்தமே வடிவாயிலங்குந் தட்சணாமூர்த்தி பனிமால் வரையில் வீற்றிருப்பதும், குமரன் குறிஞ்சிக் கிழவன் என்று சொல்லப்படுவதும், கண்ணபிரான் கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடித்துத் திருவிளையாடல் புரிந்ததும், அருகர் கயிலையில் தவங்கிடந்து பேறு பெற்றதும், கிறிஸ்து பலமுறை மலைவாசத்தை விரும்பியதும், மகம்மது மலையுடன் தொடர்பு கொண்டதும், இன்ன பிறவும் ஈண்டுச் சிந்திக்கற்பாலன.*

**ஏறி**

*தத்துவங்கள் என்னும் படிகளை ஏறும்போது, முக்குணக் காரியங்களாகிய விலங்கு பறவை பாம்பு முதலியவாற்றான் மருட்சி அச்சம் முதலியன நேரலாம். அச்சத்தால் படிகளிலேயே தயங்கி வழுக்கி வீழாது இவர்ந்து நடக்க உரம் வேண்டும். அவ்வுரமே சீலம் என்பது. அது குறித்தே 'ஏறி' என்பதற்குச் 'சீலக்கால் கொண்டு ஏறி' என்று விளக்கஞ் செய்யப்பட்டது.*

***'நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏறத் தாழும்
பேணுதத் துவங்க ளென்னும் பெருகுசோ பானம் எறி
ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போல ஐயர்
நீள்நிலை மலையை ஏறி நேர்படச் செல்லும் போதில்'***

***'திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அங்கணார் கருணை கூர்ந்த அருள்திரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில்அன் புருவம் ஆனார்'***

*எனவரூஉம் பெரிய புராணச் செய்யுட்களின் கருத்துக்களை நோக்கின் சில நுட்பங்கள் புலனாகும்.*

மண் பரலாகிப் பரல் கல்லாகிக் கல் பாறையாகிப் படிப் படியே அடுக்கலாகி ஓங்கலாகி மலையாகும். அதுபோலச்சீலம் ஐந்தாகி எட்டாகிப் பத்தாகி நூறாகி ஆயிரமாகிப் பலவாகிப் படிப்படியே விரிந்து பெருகி வளர்ந்து ஓங்கிக் குணமலையாகும்.

### நின்றார்

மலை ஏறி இடையிலும் திரும்புதலாகாது; உச்சியிற் சென்றதும் திரும்புதலாகாது; உச்சி நண்ணி ஆங்கே அமர்தல் வேண்டும்; நன்றாக - உரமாக - அமர்தல்வேண்டும்; அமர்ந்து, இயற்கை அன்னை வழங்கும் அமைதிக் காட்சிகளைப் புலனாரப் பருகி மன அமைதி பெறுதல் வேண்டும். அவ்வாறே தத்துவப் படிகளைக் கடந்தேறும்போதும் இடையில் நின்று வீழ்தலா காது. சீலக் கால்கொண்டு நடந்து நாதாந்த உச்சி நண்ணிச் சாந்தத்தில் உறைந்து உரமாக நிற்றல் வேண்டும். இந்த நுட்பங்கள் 'நின்றார்' என்பதில் விளங்குகின்றன.

நின்றார் - இங்கே நீத்தார்; புலன்களை வென்று உரனில் உறைந்து நின்றவர்; மனமாசுகளினின்றும் விடுதலையடைந்து நின்றவர்; தத்துவங்களைக் கடந்து நின்றவர்.

'சலியாமையும் பெருமையும் பற்றிக் குணங்களைக் குன்றாக உருவகித்தார். குணம் சாதியொருமை' என்பது பரிமேலழகர் குறிப்புரை.

### வெகுளி கணமேயும் காத்தலரிது

திருவள்ளுவர் காலத்தில் சமணமும் பௌத்தமும் ஆக்கம் பெற்றிருந்தன. அது காரணமாகப் பகவன், கணம் முதலிய சொற்கள் கற்றவர் நாவில் உலவி வந்தன. கற்றவர் நாவில் உலவுவன இலக்கியங்களிற் புகுதல் இயற்கை. பௌத்தரின் கணபங்க நியாயத்தினின்றும் கணம் என்னுஞ் சொல் புலவர் நாவில் பெரிதும் உலவி யிருக்கும்.

காத்தல் - பாதுகாத்தல்; தாங்குதல்; பேணுதல்; வைத்திருத்தல்.

அரிது, ஈண்டு இன்மைப் பொருளின் மேற்று.

### அறிகுறி

குணமென்னுங் குன்றேறி நின்றார்க்கு அறிகுறி என்னை? அவர்மாட்டு வெகுளி எழாமை என்க. இது பற்றியே, 'குண மென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்தல் அரிது' என்றருளினர்.

## வெகுளி

'வெகுளி கணமேயுங் காத்தல் அரிது' என்பது வெகுளி எழாமையை உணர்த்துவது. குணமென்னுங் குன்றேறி நின்றார்க்கு வெகுளி எங்கிருந்து பிறக்கும்? அவர்கட்கு வெகுளி ஏது? வெகுளியினின்றும் விடுதலையடைந்தவரே குண மென்னும் குன்றேறி நின்றவர். அவரே நீத்தார். இவ்வதிகாரம் நீத்தார் பெருமை கூறுவது என்பதை மறத்தலாகாது.

இக்குறட்பாவிற்குப் பண்டை உரையாசிரியர் கூறியுள்ள பொருள், பெரிதும் சில புராணக் கதைகளை உளங்கொண்டு திகழ்கிறது. இருடிகள் வெகுண்டு சபித்த கதைகள் சில புராணங் களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அக்கதைகள் உரையாசிரியன் மாரைத் தங்கள் வயப்படுத்திவிட்டன.

'குணமாகிய மலையை மேற்கொண்டு நின்றார்மாட்டு உளதாகிய வெகுளியால் வருந் தீமையைச் சிறிது பொழுதாயி னும் வாராமற் காத்தலரிது' என்று மணக்குடவர் உரை கண் டுள்ளனர். 'நகுஷன் பெரும் பாம்பாயினான். இது வெகுளியால் பொறுத்தலரிதென்றது' என்றொரு குறிப்பும் அவரால் பொறிக் கப்பட்டது. நகுஷன் கதை புராணேதிகாசங்களி லிருப்பது.

மணக்குடவர் உரையைத் தழுவியே பரிமேலழகரும், 'துறவு மெய்யுணர்வு அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய குன்றின் முடிவின்கண் நின்ற முனிவரது வெகுளிதானுள்ள அளவு கணமேயாயினும் வெகுளப்பட்டாரால் தடுத்தல் அரிது' என்று பொருள் விரித்தனர்.

'நீத்தார் பெருமை' கூறப் புகுந்து, அதன்கண் நீத்தாரை, 'ஐந்தின் வகை தெரிவான்' என்றும், 'ஓரைந்துங் காப்பான்' என்றும், 'ஐந்தவித்தான்' என்றும், 'நின்ற மொழி மாந்தர்' என்றும், 'அந்தணர்' என்றும் ஓதி அருளிய திருவள்ளுவர், இப் பாட்டில் அவரை, 'குணமென்னுங் குன்றேறி நின்றார்' என்று சொல்லி, அவர்க்கு வெகுளி ஓரோவழியிலாதல் எழுவதைக் கூறுவரோ என்பது ஆராயத்தக்கது.

'வெகுளாமை' என்றோர் அதிகாரம் நூற்கண் உளது. அதிற் போந்துள்ள 'தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால் - தன்னையே கொல்லுஞ் சினம்' என்னும் பாட்டை நோக்குக. இஃது ஆசிரியரின் உள்ளக்கிடக்கையை இனிது விளக்கும்.

'சினத்தை நிந்தனை செயுமுனி வரர்தொழ' எனவருந் திருப்புகழில் முனிவரியல் விளங்குதல் காண்க. 'ஆறுவது சினம்'

என்னும் ஔவை மொழியை ஓர்க. விரிவு ஈண்டைக்கு வேண்டுவதில்லை.

தீக்குணங்கள் பலகிடப்ப, அவைகளை விடுத்து, வெகுளியை மட்டும் ஈண்டுச் சிறப்பாக ஆசிரியர் குறித்த தென்னை? 'இவர் நீத்தார் - இவர் நீத்தாரல்லர்' என்பதை உணர்தற்கு வெகுளியே சோதனைக் கருவியாக நின்று துணை செய்தலான், அதை ஆசிரியர் சிறப்பாகக் குறித்தனரென்க. வெகுளியுடையார் நீத்தா ராகார். வெகுளியில்லாரே நீத்தாராவர். வெகுளி சிறிதுடையாரும் ஒரோவழி எழுதலுடையாரும் நீத்தாராகார். வெகுளி முற்றிலும் அற்ற ஒருவரே நீத்தாராவார்.

வெகுளி தத்துவக் காரியங்களில் ஒன்று. அஃதுள்ள வரை தத்துவச் சேட்டையும் புலக்குறும்பு மிருக்கும். 'நீத்தார் பெருமை'யில் புலக்குறும்புக்கு இடமேது? ஆகவே, வெகுளிக்கும் இடமில்லை யென்க.

வெகுளி பொல்லாதது. அது மூலமலவேர் அறும்வரை தலைகாட்டுந் தன்மையுடையது. காமமற்ற இடத்திலும் வெகுளி எழுதலுண்டு. வெகுளியின்மை தத்துவச் சேட்டைகள் முற்று மின்மையை உணர்த்துவது. வெகுளியுண்மை தத்துவச் சேட்டை களுண்மையைக் குறிப்பது. தத்துவங்கடந்தவரே குணமென்னுங் குன்றேறி நின்றவர். இவர் தத்துவச் சேட்டையைக் கடந்தவர் என்பதை விளக்கவே, 'வெகுளி கணமேயுங் காத்தலரிது' என்றார்.

வெகுளி யுடையார், சுவையொளி யூறோசை நாற்ற மென்றைந்தின் வகை தெரிந்தவராகார்; உரன் என்னுந் தோட்டி யான் ஓரைந்துங் காப்பவராகார்; ஐந்தவித்து ஆற்றல் பெற்றவராகார்; நிறைமொழி மாந்தராகார்; குணமென்னுங் குன்றேறி நின்றவராகார்; அந்தணராகார்; நீத்தாராகார். அவர் குறையுடையாரே யாவார். வெகுளி முற்றும் அற்றவரே நீத்தாராவார்; முனிவராவர்; கறை கடந்தவராவர்.

**கணமேயும்**

குணமென்னுங் குன்றேறி நின்றார்மாட்டு வெகுளி ஒரு நொடிப் பொழுதும் எழாதென்பதை வலியுறுத் தற்பொருட்டுக் 'கணமேயும்' என்றார்.

**காத்தல் அரிது**

நினைவளவிலும் இருத்தலாகா தென்பார், 'காத்தல் அரிது' என்றார். அரிது, அறவே - முற்றும் - இன்மையை உணர்த்துவது.

**சாபமிடுவோர் முனிவராகார்**

*குணமென்னுங் குன்றேறி நின்றார்க்கு வெகுளி எழுதல் என்பதும், அது சாபமாகப் பிறர்பால் பாய்தல் என்பதும், இன்ன பிறவும் பொருந்துவனவாகா. இவை குணமென்னுங் குன்றேறி நின்றரைப் பழிப்பனவாகும். வெகுளி எழுதலும் மிகுதலும் நீத்தார் நீர்மையல்ல. வெகுண்டெழுந்து சாபமிட்டவரை முனிவர் என்று கொள்ளற்க.*

*ஐந்தவித்துக் குணமென்னுங் குன்றேறி நின்றவர் சாந்தத் தெய்வத்தைச் சார்ந்து நிற்பவர். அவர் பொறுமை பூமிக்கும் இராது. தமக்குத் தீங்கு செய்வோரையும் அவர் முனிந்து கடிவ தில்லை. தீயரைச் சபியாது அவரிடத்தும் கருணை காட்டி அவரைத் திருத்தவே முயல்வது குணமென்னுங் குன்றேறி நின்றாரியல்.*

**சான்றுகள்**

*கிறிஸ்து பெருமான் வரலாற்றை நோக்குங்கள். கிறிஸ்துவை மாற்றார் என்னென்ன செய்தனர்? அவருக்கு முள்முடி சூட்டினர்; அவரை நகையாடினர்; அவர் முகத்தில் துப்பினர்; கன்னத்தில் அறைந்தனர்; அவரை அடித்தனர்; கடையில் சிலுவை யில் அறைந்தனர். பெருமான் வெகுண்டனரா? சபித்தனரா? மனமிரங்கி, ‘பிதாவே! இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே’ என்றார். இவரல்லரோ குணமென்னுங் குன்றேறி நின்ற பெரியார் - நீத்தார் - முனிவர்?*

*மெய்ப் பொருள் நாயனார் வரலாறும் ஈண்டு நினைவுக்கு, வருகிறது. தம்மைக் கொலைசெய்த ஒருவனிடத்தும் நாயனார் அருள் சுரந்ததைச் சிந்தியுங்கள். குணமென்னுங் குன்றேறி நின்றவர்க்கு அருளன்றோ பெருகிப் பெருகி வழிந்து கொண்டி ருக்கும்?*

*நபிகள் நாயகம், மக்காவில் தம்மைத் துன்புறுத்தியவரைத் தமக்குச் சமயம் நேர்ந்தபோது அவரைத் துன்புறுத்தாது, கனிவுடன் அவரை மன்னித்ததும், கரவுக் கூட்டத்துக்குத் தலைவனாகிக் கடைசிவரை தமது இயக்கத்துக்கு இன்னல் விளைத்த ஒருவன் மரணமடைந்தபோது, அவன் மகன் போந்து தந்தையின் உடலுக்கு அணிய ஒரு சட்டையைக் கேட்டதுடன், மரணச் சடங்கை ஆற்றுமாறுங் கேட்ட நேரத்தில், நாயகம் சிறிதுங் காழ்ப்புக் கொள்ளாது அன்புடன் சட்டை ஈந்து சடங்கு செய்ததும், இன்ன பிறவும் இங்கே சிந்திக்கத்தக்கன.*

*பிரகலாதன், அப்பர், சோக்ரதர் முதலியவரின் சரித்திரச் சான்றுகள், சான்றோர்க்கு வெகுண்டு மொழிதல் என்னும் சபிக்கும் இயல்பு இல்லை என்பதை அறிவுறுத்துவன.*

*இன்னோரன்னோர் இயல்புகளை யெல்லாம் இந்நாளில் வளர்க்க வந்தவர் காந்தியடிகள். அவர்தம் வரலாற்றை நோக்குக.*

**பெரியோரியல்**

*குணமென்னுங் குன்றேறி நில்லாத சிறியோர், அக்குன்றேறி நின்ற பெரியோரை ஏசி, இன்னல் விளைக்கப் புகுந்தால் பெரியோர் என் செய்தல் வேண்டும்? சிறியோர் அறியாமைக் கிரங்கி அவரிடம் அன்பு பூண்டு, அவரைத் திருத்தவே பெரியோர் முயலல் வேண்டும். காழ்ப்புக் கொண்டு வெகுண்டு பழிக்குப் பழிவாங்கப் புகுவது பெரியோர் செயலாகாது. அது சிறியோர் செயலேயாகும். பெரியோர்க்குரிய பூண்பொறுமை; பொறாமை மற்றையோர் உடைமை.*

*சோதனை பெரிதுஞ் சிறியோர் வாயிலாகவே நிகழும். அதற்கு இரையாவோர் பெரியோராகார். அதில் தேர்ச்சி பெறுவோரே பெரியோராவர்.*

*'சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப - நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை - பூணது வாக....' என்றும், 'நாட்டார் நகை செய்ய நாமேலை வீடெய்த' என்றும் வரும் மணிவாசகரின் பொறுமைப் பூணை அணிந்து பார்க்க.*

*'செத்தாரைப் போலே திரி' என்பது பட்டினத்தடிகளின் பொன்மொழி. செத்தாரைப் போலத் திரிவது குணமென்னுங் குன்றேறி நின்றாரின் இலக்கணம். அது வெகுளியின்றி வாழ்வது.*

*'* * * தீமையை எதிர்த்து நிற்கவேண்டாம்; உன்னை வலது கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டு...... உங்கள் சத்துருக்களில் அன்பு கூருங்கள். உங்களை இம்சைப் படுத்துகிறவர்களுக்காக ஜெபஞ் செய்யுங்கள். இப்படிச் செய்தால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் பிள்ளைகளா யிருப்பீர்கள்...'*

*இத் திருமொழிகள் கிறிஸ்துவின் மலைப்பொழிவில் உள்ளன. இவை இக்குறட்பாவில் விரிவுரை போன்றிருத்தலைக் காண்க.*

*குணமென்னுங் குன்றேறி நின்றாரியல் வெகுளியற்றிருத்தல் என்பது பாட்டின் உள்ளுறை. (7)*

**28**

***நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து***
***மறைமொழி காட்டி விடும்.***

**பொருள்**

*நிறைமொழி மாந்தர் பெருமை - நிறைமொழியுடைய மக்களின் மாண்பினை, நிலத்து - உலகத்தில், மறைமொழி காட்டி விடும் - (அவர்தம்) வேதவாக்கு (வெளிப்படையாகப்) புலப்படுத்திவிடும்.*

**கருத்து**

*நீத்தார் பெருமை அவர்தம் மொழியால் விளங்கும்.*

**விருத்தி**

மேலே ஐந்தவித்தார் குணத்திறன் கூறப்பட்டது. இங்கே அன்னார் மொழித்திறன் கூறப்படுகிறது. குணமென்னுங் குன்றேறி நின்றார் மொழியே நிறையுடைய மறையாகும்.

**நிறைமொழி மாந்தர் பெருமை**

*நிறை - நிறுத்தல்; அடக்கம்: 'நிறை யருந்தானை'- சிலப்பதிகாரம் : காட்சி : 178 (நிறுத்தலரியதானை : உரை); 'நிறை நிறுவுதல்' 'நிறுத்தல்' - நாநார்த்த தீபிகை : 1027; 'சிந்தையும் நிறைவும்......'-கம்பர்: மிதிலை : 36; (நிறை - அடக்கம்).*

*மொழி - வாக்கு; முக்கரணங்களில் ஒன்று.*

*மாந்தர் - மக்கள்; ஆறறிவுடையார்.*

**நிறை மொழி**

நிறை (நிறுத்தல், அடக்கம்) ஈண்டு மனத்தின் மேற்று. மனம் ஒருவழியில் நிற்பின் புலன்களும் அவ்வழியில் நிற்கும். இவ்வதி காரம் நீத்தார் பெருமை கூறுவது. நீத்தார் பெருமைக்குப் புலனடக்கம் இன்றியமையாதது. இதனை, 'சுவை..... ஐந்தின் வகை தெரிவான்' உரன்... ஓரைந்துங் காப்பான்' 'ஐந்தவித்தான்' எனவரூஉம் இவ்வதிகாரப் பாக்கள் நன்கு விளக்குகின்றன. இவற்றைத் தொடர்ந்து நிற்கும் இப்பாட்டிலுள்ள நிறை, மனநிறையை உணர்த்துவதென்று கொள்ளுதல் பொருத்தம். எனவே, நிறை என்பது, மனநிறுத்தத்தை - அடக்கத்தை - பொருளாக் கொண்டதென் றுணர்க. பழைய உரையாசிரியர் களாகிய நக்கீரர், பேராசிரியர், மணக்குடவர், நச்சினார்க்

கினியர், பரிமேலழகர் முதலியோர் தாம் தாம் கண்ட உரைகளில் நிறை என்பதற்கு, 'காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம்' என்றும், 'ஐம்பொறியடக்கம்' என்றும், 'மனத்து அடக்கற்பாலனவற்றை அடக்குதல்' என்றும், 'மனத்தை நிறுத்தல்' என்றும் பொருள் விரித்திருத்தலை உன்னுக.

**உண்மை - வாய்மை - மெய்ம்மை**

மனத்தில் இருவித நிலையுண்டு. ஒன்று அலைவது; மற்றொன்று அலையாதது. அலையும் மனம் உரன் (சக்தி) அற்றது; அலையா மனம் உரன் உற்றது. சத்தியம் முன்னைய தால் விளங்காது; பின்னையதால் விளங்கும்.

அலையா மனமே அடங்கியது. அடங்கிய மனத்தில் சத்தியம் விளங்கும் வாய்ப்புண்டு.

சத்தியம் மனத்தளவில் அரும்புவதால் பயன் விளையாது. அது வாக்கிலும் மலர்தல் வேண்டும்; காயத்திலும் காய்த்தல் வேண்டும். சத்தியம் வாழ்வில் கனிதல் வேண்டும் என்று தொகுத்துக் கூறலாம்.

மனம் - உள்ளம்; வாக்கு - வாய்; காயம் - மெய்.

மூன்று கரணத்திலும் சத்தியமே திகழ வேண்டுமென்று எண்ணித் தமிழ்ப் பெரியோர்கள் சத்தியச் சொற்களைக் கரணங்களை ஒட்டியே வகுத்துள்ளார்கள். அவர்களது வகுப்பு முறை போற்றற்குரியதே. அவர்கள் கண்ட சத்தியச் சொற்கள் உண்மை, வாய்மை, மெய்ம்மை என்பன. மூன்றற்கும் பொருள் ஒன்றே. உள்ளத்தில் நிகழ்வது உண்மை (உள் மை); வாயில் நிகழ்வது வாய்மை; மெய்யில் நிகழ்வது மெய்ம்மை.

உள் எழுவனவெல்லாம் உண்மையாகவும், வாயில் வருவனவெல்லாம் வாய்மையாகவும், மெய்யில் உறுவனவெல்லாம் மெய்ம்மையாகவும் இருத்தல் வேண்டும் மென்பது தமிழ்ச் சான்றோர்களின் வேட்கை. அவ்வேட்கைப்படி முக்கரணமும் சத்திய மயமாயின் சத்தியப் பொருள் விளங்குதல் ஒருதலை.

உண்மைக்கென்றே உள்ளமும், வாய்மைக்கென்றே வாயும், மெய்ம்மைக்கென்றே மெய்யும் அமைந்திருத்தலை உணர்ந்து வாழ்வு நடாத்துவது அறிவுடைமையாகும். முதலாவது உண்மை எழும் உள்ளம் பெறுதல் வேண்டும். இதற்கு அலையாது அடங்கிய ஒருமை உள்ளந் தேவை. ஒருமை உள்ளத்தினின்றும் எழும் உண்மை, வாய்மையையும் மெய்ம்மையையும் தானே நல்கும்.

*ஒருமை உள்ளமே, நிறை (நிறுத்தல் - அடக்கம்) உடையது. உள்ளத்தினின்றும் அதாவது ஒருமையில் நின்ற உள்ளத்தினின் றும் பிறப்பது உண்மை. இதனால் நிறையை உண்மை என்றுங் கூறலாம்.*

*நிறை - மனநிறை; மன அடக்கம்; மன ஒருமை.*

**வாய்மை – மொழி**

*உள்ளத்தெழும் உண்மை வாயின்வழி வரும்போது வாய்மையாகிறது. வாய்மையே மொழி என்பது. வாயில் வருவது வாய்மையாகவே இருத்தல் வேண்டுமென்பது நுட்பம். வாய்மை யல்லாத பிற வாயில் வருதல் கூடாதென்பது கருத்து.*

**தொடர்பு**

*நிறை மொழி எது? உண்மையால் நிறைந்த மொழி; உண்மையால் நிறைந்த மனத்தினின்றும் வெளிவருவது. ஒருமை யில் நின்று அடங்கிய மனத்தினின்றும் வாய் வழியாக வருவது நிறைமொழி.*

*கூர்ந்து நோக்கின் நிறைக்கும் மொழிக்கும் உள்ள தொடர்பு புலனாகும். நிறையுளத்தில் நிகழ்வது உண்மை. வாயில் வருவது (வாய்மை) மொழி. நிறை - உண்மைக்கும், மொழி - வாய்மைக்கும் குறிகளாய்த் தொடர்பு கொண்டு நிற்றல் காண்க. இத்தொடர்பு உள்ளும் புறமும் ஒத்து நிற்றலை உணர்த்துவது.*

*மனம் மொழி மெய் என்னும் மூன்றில் ஈண்டு இரண்டு சொல்லப்பட்டிருக்கின்றன. இனம்பற்றி மெய்யையுங் கொள்க. நிறையில் குறிப்பாக 'மனம்' திகழ்கிறது. 'மொழி' வெளிப்படை யாகத் திகழ்கிறது. மொழி நடுநின்று இரண்டையுங் சேர்த்து நிற்கும் பெற்றியுடைமையான் அது வெளிப்படையாகப் பெய்யப்பட்டது.*

**மாந்தர் பெருமை**

*மாந்தர் - மக்கள்; ஆறறிவுடையவர். மனவுணர்வே ஆறாவ தறிவு. புலனடங்கப் பெற்ற நிறை மனத்திலேயே ஆறாவதறிவுக் குரிய உணர்வு எழும். மற்ற மனத்தில் அவ்வுணர்வு எழுவதில்லை. ஆறாவதறிவெனும் மனவுணர்வு பெற்றவரே மாந்தரென்னும் மக்கள். மற்றவர் மாக்கள், மாக்கள் ஐயறிவுடையவர். இவர் மனவுணர்வற்றவர். புலனடங்கிய நிறைமனமுடையாரே மாந்த ராவர். இதுபற்றியே 'நிறை மொழி மாந்தர்' என்றார்.*

*நிறைமொழி மாந்தர் யாவர்? ஐந்தின் வகை தெரிந்தவர்; ஓரைந்துங் காப்பவர்; ஐந்தவித்தவர்; மனநிறையுடையார்; நீத்தார்.*

'நிறைமொழி மாந்த ரென்பது சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டுங் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையார் என்றவாறு' - இது பேராசிரியம் - (தொல் காப்பியம் : பொருள் உரை : 490).

மாந்தர் - பன்மைப் பெயர்; பன்மைச் சொல்லாகவே வருவது. நிறைமொழியாளர் பலராக இருத்தல் வேண்டும் மென்பதே ஆசிரியர் எண்ணம் போலும்.

நீத்தார் பெருமை இவ்வதிகாரத்தில் பலவாறு சொல்லப் பட்டுள்ளது. ஈண்டு நிறைமொழி மாந்தரும் அப்பெருமை யுடையார் என்று உணர்த்தப்படுகிறது.

### நிலத்து மறைமொழி காட்டிவிடும்

நிலம் - நிற்றலையுடையது; ஞாயிற்றின் பாரிப்பால் நிற்றலையுடையது.

அத்து : சாரியை; ஏழாம் வேற்றுமைப் பொருளுடையது.

மறை - மறைபொருள் (இரகசியம்) ; வேதம்

மறைமொழி - மந்திரம்.

காட்டுதல் - 'பயனான் உணர்த்தல்' என்பர் பரிமேலழகர்.

### நிலத்து

இந்நிலத்தில் மயக்கமும் உண்டு; தெளிவும் உண்டு. இதன் கண் நிறைமொழி மாந்தர் இன்னாரன்று எவ்வழியில் உணர்ந்து, அவர்தம் பெருமையை விளங்கிக் கொள்வது என்னும் மயக்கம் உண்டாகிறது. ஆராய்ச்சியால் நிறைமொழி மாந்தர் அருளிய மறைமொழி அவர்தம் பெருமை காட்டல் தெளிவாகிறது. மயக்கமும் தெளிவுமுடையது நிலமாதலின்'நிலத்து' என்றார் நிறைமொழி மாந்தரது பெருமையைஅவரால் சொல்லபட்டு 'நிலத்தின்கண் வழங்கா நின்ற மந்திரங்களே(மறைமொழி) காட்டும் என்று மணக்குடவர் கண்ட உரையும் ஈண்டு கருதற்பாலது.

### மறைமொழி

மறைந்த பொருளுடையது மறை. வேதம் மறைவா யிருத்தா லான், அது மறை என்று வழங்கப்படுகிறது. இந்நுட்பத்தைச் சிறிது ஆராய்வோம்.

### நாதம்

தத்துவங்களெல்லாம் தோன்றுமிடம் நாதம். அவையா வும் ஒடுங்குமிடமும் அதுவே. நாதத்துக்கு மேல் ஒளிர்வது இறை.

நாதம் இறைக்கு அணித்தாய், இறையைத் தழுவியதாயிருத் தலான், அது நாதபிர்மம் என்றும் போற்றப்படுகிறது. 'ஓசை யொலியெலாம் ஆனாய் நீயே' என்றும், ஏழிசையாய் இசைப் பயனாய்' என்றும் அப்பரும் வன்றொண்டரும் அருளியுள்ளதை நோக்குக.

நாதம் : சப்தம் - ஒலி - ஓசை.

நாதம் ஆகாசத்தில் மருவுவது. ஆகாசம் இருவிதம். ஒன்று சடாகாசம்; மற்றொன்று சிதாகாசம். முன்னையது ஐம்பெரும் பூதங்களில் ஒன்றாயிப்பது; பின்னையது தத்துவங் கடந்து நிற்பது; அதாவது மாயா காரியங்களை யெல்லாங் கடந்து நிற்பது.

சடாகாசம் தனித்தும் மற்றப் பூதங்களில் கலந்தும் நிலவுவது. சிதாகாசம் தனித்தும், சடாகாசம் உள்ளிட்ட பூதங்களிலும், அவைகளுக்கு மேலுள்ள தத்துவங்களிலும் கலந்து நிலவுவது.

இருவித ஆகாசங்கட்கும் நாதம் உண்டு. சடாகாச நாதம் மாயா சம்பந்தமுடையது. அதனால் அது மாயாநாதம் என்று சொல்லப்படுகிறது. சிதாகாச நாதம் மாயா சம்பந்த மில்லாதது. அதனால் அஃது அருணாதம் என்று வழங்கப்படுகிறது.

மாயாநாதம் எல்லார்க்குங் கேட்கும் அருணாதம் எல்லார்க்குங் கேளாது இது மிகச் சிலர்க்கே கேட்கும். இம் மிகச்சிலராவர் ஐந்தடங்கிய ஒருமை மனத்தினர்; இவரே நிறைமொழி மாந்தர்.

மனத்துக்கும் அகம் புறம் உண்டு. அகமனத்தை அடிமன மென்றும், புறமனத்தை மேல்மனமென்றுஞ் சொல்வ துண்டு. அகமனம் புலன்களடங்கியதும் விளங்குவது. அகமன விளக்கம் பெற்றவரே ஒருமை மனத்தினர். அவர்க்கே அருணாதம் பொருளாகும். ஏனையோர்க்கு மாயா நாதமே கேட்கும்.

அருணாதம், ஐந்தடங்கிய அகமனத்தார்க்கன்றி மற்றை யோர்க்கு மறைந்திருப்பதால் அது மறையென்று சொல்லப் படுகிறது.

**அருள் நாதம்?**

நாதம் பிரகிருதி சம்பந்தம் பெறும்போது மாயாநாத மாகிறது. அச் சம்பந்தம் அறப்பெறும்போது அஃது அருணாத மாகிறது. அலையும் புறமனத்துக்குப் பிரகிருதி மாயாநாதமே பொருளாகும். திரையற்ற நீர்போலச் சிந்தை தெளியப்பெற்ற

அகமனத்தார்க்குப் பிரகிருதி மாயையின் தோற்றமே பொன்றி விடும். அவர்க்குப் பொருளாவது சுத்த நாதம். சுத்தமாயா தத்துவம். அதன்கண் அருள் என்னும் இறையின் சக்தி படிந்து கலக்கி மற்றத் தத்துவங்களைத் தோற்றுவித்தலால் அஃது அருணாதம் என்னப்படுகிறது. அந்நாதங் கேட்கப் பெறுவோரே அருளாளர். இவ்வருளாளரே அகநோக்க ரெனப்படுவர்.

**மறைநூல்**

புறநோக்கர்க்கு மறைந்து, அகநோக்கர்க்குப் பொருளாகி, ஒலியாய், எழுத்தாய், சொல்லாய், கலையாய் உருக்கொள்வது மறை. புறநோக்கர்க்குப் பொருளாகும் நாதம் பிரகிருதி சம்பந்தம் பெற்ற தொன்றாதலின், அதன்வழி எழும் ஒலியால் - எழுத்தால் - சொல்லால் - ஆக்கப்பெறும் நூல் மறையாகாது.

**வேதம்**

மறையை வேதம் என்பதென்னை? வேதம் 'வித்' என்னும் தாதுவை யுடையது . வித் - அறிவு. அறிவு, மெய் பொய் என்னும் இருவகைத்து. மெய்யறிவு அலையற்ற அக மனத்தில் பொலிவது. அலையும் புறமனத்தில் மெய்யறிவு பொலியாது. புறமனத்தில் தோன்றுவது பொய்யறிவு. மறைபொருள் மெய்யறிவுடைய அகமனத்தர் வாயிலாக வெளி வருவதால் அது வேதமாகிறது. வேதமாவது அறிவு உறையுள்.

**ஆக்கியோர்**

வேதத்தை அருள்வது இறை என்றொரு வழக்குண்டு. மெய் வாய் இல்லா இறை எங்ஙனம் வேதத்தை அருளுதல் கூடும்? இறையொளி சிறந்து விளங்கும் இடங்களில் பெரியோர் உள்ளமும் ஒன்று. பெரியோர் தமக்கென ஒன்றில்லாதவ ராதலால், அவர்தம் நினைவு-பேச்சு-செயல்களெல்லாம் இறையின் நினைவு-பேச்சு-செயல்களாகின்றன. அவர்வழித் தோன்றும் வேதத்தை இறைவழித் தோன்றுவதாக உலகம் கொள்கிறது. வாக்கு மனம் கடந்தொளிரும் இறை எதையும் பெரியோர் வாயிலாகவே நிகழ்த்தும்.

**ஆதியா? அநாதியா?**

மறை ஆதியா அநாதியா என்றொரு வாதம் நிகழ்ந்து வருகிறது. மறை என்றுமிருப்பது; அது புதிதன்று. மனிதர் ஐந்தவித்துச் சான்றோராயதும், மறை அவர்க்குப் பொருளாக விளங்கும். அவர் அதைத் தத்தம் மொழியில் காலதேச வர்த்த மானங்கட்கேற்ற முறையில் வெளியிடுவர். ஆதலால், மறை புதிதாக ஒவ்வொருபோது தோறுவதன்றென்க. மறை அநாதியே.

ஒரு கல்லை மேலே எறிந்தால் அது கீழ்நோக்கியே வந்து மண்ணில் விழும். இஃது இயற்கை. கல் கீழ் நோக்கி வருவதற்குரிய காரணம் ஒரு விஞ்ஞானியால் உணரப்பட்டது. இயற்கை நிகழ்ச்சி என்றுமுள்ளது. அஃது ஒருவரால் உண்டாக்கப்பட வில்லை. அஃது ஒருவரால் ஒருபோது தெளியப்படுகிறது. அவரை இயற்கை நிகழ்ச்சியை உண்டாக்கினவர் என்று கூறலாமா? அதேபோல மறை ஒருவரால் உண்டாக்கப்பட வில்லை. அருணாதமாய் என்றுமுள்ள மறையை ஒருமை மனத்தால் தெளிந்து தம் மொழியில் பெரியோர் இறக்குவர். இவர் எங்ஙனம் மறைக்கு ஆக்கியோ ராவர்?

**எம்மொழியில்?**

மறை இன்னின்ன மொழியில் இறங்குதல் வேண்டும் என்னும் நியதியில்லை. மறை நாதமா யிருப்பது. நாதம் வடிவைக் கடந்தது. அஃதொலியாய், எழுத்தாய், சொல்லாய்ப் பரிண மிக்கும்போது, தட்பவெப்ப நிலைமைக்கேற்றபடி பல மொழி யாகத் தடிக்கிறது. ஆகவே, எம்மொழியிலும் மறை இறங்கு மென்க. எம்மொழியிலாதல் மறை சான்றோர் வாயிலாக வெளிவரும் என்பதொன்றை மட்டும் மறத்தலாகாது. இதுபற்றி என் நூல்களில் 'சன்மார்க்க போதமும் திறவு'ம் என்னும் நூலிலும், என் பதிப்புப் 'பெரிய புராணம் - முதற்பாட்டு' உரையிலும் விரித்துக் கூறியுள்ளேன்.

இதுகாறுங் கூறியவற்றைத் திரட்டிப் பார்த்தால், ஐந்தவித் தடங்கிய அகமனத்தார்க்கே அருணாதம் பொருளாகுமென்ப தும், மற்றவர்க்கு அந்நாதம் மறைந்து நிற்றலால் அது மறை யென்று சொல்லப்படுகிற தென்பதும், அம் மறை ஐந்தவித்த சான்றோர் வாயிலாக வெளிவருவதென்பதும் ஒருவாறு தெளிவாகும்.

ஐந்தவித்த சான்றோர் இப்பாட்டில் 'நிறைமொழி மாந்தர்' என்று சொல்லப்பட்டிருக்கிறார். அவர்வழி வெளி வருவதே மறை என்பது. அது மொழியாக வெளிவருதலான் 'மறைமொழி' என்னப்பட்டது.

**மந்திரம்**

மறை, மறைந்து நின்ற சான்றோர் மனத்தில் விளங்கப் பெற்று அவர்வழி மொழியாயிறங்குவது. அது புலனடங்கிய மனத்தில் நின்று வெளிவருதலால் மந்திர மெனப்படும். 'ஆணையாற் கிளக்கப்பட்டுப் புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லுஞ் சொற்றொடரெல்லாம் மந்திரமெனப் படும்' என்பது பேராசிரியம் (தொல் - பொருள் - 490 உரை).

அநாதியாயுள்ள அருணாதமாகிய 'மறை' சான்றோர் மனநிறையில் விளங்குவது. அது சான்றோர் மனத்தில் விளங்கி நிற்றலால் மந்திரமாகிறது. (மந்திரம் - மனம்- எண்ணம்). மந்திரம் எழுத்தற்றது; உபதேசப் பொருளாக நிலவுவது; தெளிவுடைய குருவினால் அறிவுறுத்தப்பெறும் பெருமை வாய்ந்தது; எல்லா மொழிகட்கும் வித்தாயிருப்பது.

### அருணூல்

மந்திரம் உலகோர் பொருட்டுச் சான்றோர் வாயிலாக மொழியாகி நூலாவதுண்டு. அஃது அருணாத மந்திர மொழி யால் ஆக்கப் பெறுதலான், அருணூலெனப்படும். அருணூலுக் கும் மற்ற நூலுக்குமுள்ள வேற்றுமை பெரிது. அருணூலின் அடியில் மந்திரம் நிலவும். மற்ற நூலின் அடியில் மந்திரம் நிலவுவதில்லை. குருவின் திருநோக்கம் பட்டதும் அருணூலின் மந்திரம் பொருளாகும். மந்திரத்தை அடிப்படையாக் கொண்டு தோன்றிய நூல்களே வேதங்கள் என்று வழங்கப் படுகின்றன. உபநிஷத், பரமாகமம், திரிபிடகம், பைபில், திருக்குரான், தேவார திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம், கந்தரநுபூதி முதலியன வேதங்களாகும். 'இது வேதம்; இது வேதம் அன்று' என்னும் நுட்பம், மெய்ஞ்ஞான நாட்டங் கொண்டு வாழுங் கலைஞானி கட்கும் ஒரோவழிப் புலனாதல் உண்டு.

ஈண்டு மறைமொழி என்பது, மறைவாயுள்ள அருணாதத்தை அடிப்படையாக்கொண்டு, மந்திரமாகி, மொழியாகி இறங்கு வதை என்க. அம்மொழி 'நிறைமொழி மாந்தர்' வழியே தோன்று வதென்பதை மறத்தலாகாது.

### காட்டிவிடும்

'இன்னார் நிறைமொழி மாந்தர், இன்னார் நிறைமொழி மாந்தரல்லர்' என்று எப்படி உணர்வது? அவரவர் மொழியைக் கொண்டு உணர்தல் கூடும். இதுபற்றியே 'மறைமொழி காட்டிவிடும்' என்றார்.

'நிறைமொழி மாந்தர் இவர்; மற்றவர் இவர்' என்பதை வடிவத்தாலும் ஒரோவழி உணர்தல் கூடும். நிறை மொழி மாந்தரிடத்தில் ஒருவித அறிவு ஒளிகாலும். மற்றவரிடத்தில் அவ்வொளி காலாது. நிறைமொழி மாந்தருடலில் நரை திரை, மூப்பு உறா. மற்றவருடலில் அவையுறும். இன்ன பிறவாற்றால் நிலைமையை உணர்வதினும் 'மறை மொழி கொண்டு உணரும் முறை சிறந்ததாலின் மறை மொழி காட்டிவிடும்' என்றார். என்ன? நரை திரை மூப்பு முதலியன உறாதவாறு, மருந்து வகை

களாலும் மலயோக முதலியவற்றாலும் காப்பவர் இருக்கின்றனர். அதனால் ஆசிரியர் உடல் தோற்றத்தை நீக்கி,'மறைமொழி காட்டிவிடும்' என்றாரென்க. வடிவத்தினும் மறைமொழி கொண்டு உண்மை உணர்தல் சிறப்பு என்றபடி.

மறைமொழியைப் பயிலப் பயில, அதன்கண் கருத்து ஊன்ற ஊன்ற அறத்தில் நாட்டஞ் செல்லும். பிறமொழி அந்நாட்டத்தை நல்குவதில்லை. மறைமொழியல்லாத பிற, பேரசையைக் கிளப்பிப் போராட்டத்திற் செலுத்தும். இவ்வேற்றுமை, மறைமொழி இன்னதென்று விளங்கச் செய்யும்.

'நிறைமொழி மாந்த ராணையிற் கிளக்கும்-மறைமொழி தானே மந்திர மென்ப'- இத் தொல்காப்பியச் சூத்திரமே, இக் குறளுக்குத் தாயகம் என்று கூறலாம். இதற்குப் பேராசிரியர் கண்ட உரை முன்னே காட்டப்பட்டது. (8)

**29**

***செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்***
***செயற்கரிய செய்கலா தார்.***

**பொருள்**

செயற்கு அரிய செய்வார் பெரியர்-செய்தற்கு அரியன வற்றைச் செய்ய வல்லவர் பெரியரென்று சொல்லப்படுவர்; செயற்கு அரிய செய்கலாதார் சிறியர்-செய்தற்கு அரியன வற்றைச் செய்யமாட்டாதவர் சிறியரென்று சொல்லப்படுவர்.

**கருத்து**

செயற்கருஞ் செயல் செய்வோர் பெரியர்; மற்றவர் சிறியர்.

**விருத்தி**

முன்னே ஐந்தவித்தார் குணமும் மொழியும் சொல்லப் பட்டன. இங்கே செயல் சொல்லப்படுகிறது. குண மொழி யின்றும் பிறப்பது செயல்.

**செயற்கரிய.................சிறியர்**

செயற்கு - செய்தற்கு ; வினை எச்சம்.

அரிய-அரியன;வினைப்பெயர்.

பெரியர்-பெருமையுடையார்; நீத்தார்; மனமாசு களினின்றும் விடுதலை யடைந்தவர்.

சிறியர் - சிறுமையுடையார்; பெரியரல்லாதார்; நீத்தா ரல்லாதார்; மனமாசுடையோர்.

### பெரியர் - சிறியர்

*இப்பாட்டில் பெரியர் இன்னாரென்றும், சிறியர் இன்னா ரென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. இருவர்க்கும் இடையில், 'செயற்கரியன' நின்றுகொண்டிருக்கிறது. செயற்கு அரியன செய்வார் பெரியர் என்பதும், அவை செய்கலாதார் சிறியர் என்பதும் ஆசிரியர் உள்ளக்கிடக்கை. செயற்கரியன எவை என்பது ஆராய்ச்சிக் குரியது.*

### அருமை - எளிமை

*உலகியலில் இன்ன செயற்கரியன, இன்ன செயற்கெளியன என்று அறுதியிட்டுக் கூறுதல் அருமை. ஒருவர்க்கு அரியன வாகத் தோன்றுவன இன்னொருவர்க்கு எளியனவாகத் தோன்றும் . மற்றும் ஒருவர்க்கு எளியனவாகத் தோன்றுவன வேறு ஒருவர்க்கு அரியனவாகத் தோன்றும். முதியர் செயல் பல, குழந்தைகட்கு அரியனவாகவே புலப்படும். குருவின் மொழி மாணாக்கருக்கு எளிதில் விளங்குவதில்லை. ஒரு கலை ஒருவர்க்கு அரியதாய்த் தொல்லை விளைக்கும். அதுவே மற்றொருவர்க்கு எளியதாய் இன்பூட்டும். இன்னோரன்ன உலகியல் நிலைகளை நோக்குழி, அருமை எளிமை என்பன, அவரவர் உடல் அமைப்பு, கரண அமைப்பு, மூளை அமைப்பு முதலியவற்றைப் பொறுத்தன என்னும் உண்மை நன்கு புலனாகும். சில சமயம் முயற்சியால் அருமை எளிமை யாதலுங்கூடும்.*

### விஞ்ஞான உலகம்

*இக்கால விஞ்ஞான உலகைச் சிறிது நோக்குவோம். அவ் வுலக நிகழ்ச்சிகள் அருமைப்பாடுகளாகவே தோன்று கின்றன. மின் கதிர்கள் என்னென்ன செய்கின்றன? அவற்றின் திருவிளை யாடல்களைச் சொல்லலும் வேண்டுமோ? பொறி பாடுகிறது; படம் பேசுகிறது; கருவி ஒலி பரப்புகிறது; கம்பி யின்றித் தந்தி, செய்தி தெரிவிக்கிறது. பிறர் நெஞ்சறிதல், தொலைவி லுணர்தல், நுண்ணுடற் படம் எடுத்தல், ஆவியுடன் பேசல், ஆணைப் பெண்ணாக்கல், பெண்ணை ஆணாக்கல், உயிர்ப்பூட்டல் முதலியன நிகழ்கின்றன. வானுர்தி, நீர்மூழ்கி, அணுகுண்டு முதலியனவும் காணப்பட்டிருக்கின்றன. இவை யெல்லாம் அரியனவா? எளியனவா? இவை மக்களால் ஆற்றப்படுவன.*

*விஞ்ஞானம் இயற்கை ஆராய்ச்சியினின்றும் கலையாகப் பிறப்பது.கூர்த்த மதிகொண்டு இயற்கையை ஆராய ஆராய, ஆராய்ச்சித் திறத்துக்கேற்ப, இயற்கை தன்பாலுள்ள சக்திகளைப் புலப்படுத்திக்கொண்டே போகும். இன்னும் இயற்கையிலுள்ள*

சக்திகளெல்லாம் உணரப்படவில்லை. அவைகளெல்லாம். முற்றும் - விஞ்ஞானிகட்குப் புலப்படுமா என்பது ஐயம்.

### விஞ்ஞானிகளும் பெரியோரும்

விஞ்ஞானிகள் புறநோக்கால் கருவிகொண்டு இயற்கைச் சக்திகளை ஆராய்ச்சி செய்கிறார்கள். புறநோக்குக்கும் கருவி கட்கும் எட்டாத இயற்கை நுட்பங்கள் எவ்வளவோ இருக்கும். அவை விஞ்ஞானிகட்குப் புலப்படுதல் அரிது. அவை, புலனடங்கி, மனமொடுங்கி, கருவி கரணத் தாக்கற்ற பெரியோர்க்கே இனிது விளங்குமென்று தெரிகிறது.

சில யோகிகளைச் சில விஞ்ஞானிகள் சோதனை செய்தது சிறியேனுக்குத் தெரியும். யோகிகளின் நிலை தங்களுக்குப் புலனாகவில்லை என்றே விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். நாளேற நாளேற விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி ஓரெல்லையில் அடங்கி நின்றுவிடுமென்று கூறலாம். அவ்வெல்லை கடந்து விளங்கும் நுட்பங்களை உணர்தற்குக் கருவிகரணத் தாக்கற்ற அகநோக்கு வேண்டற்பாலது. இதற்குப் புலனடக்கமும் மன ஒருமைப்பாடும் அடிப்படை.

விஞ்ஞானிகளெல்லாரும் புலனடக்கம் பெற்றவரல்லர்; மனமாசுகளினின்றும் நீத்தவரல்லர்; கொலை களவு கள் காமம் பொய் முதலிய பாவச் செயல்களினின்றும் விடுதலையடைந்தவ ரல்லர். அவர்களது ஆராய்ச்சி சில வேளைகளில் போராட்டங் கட்கும் துணைபோவதாகும். ஆகவே, விஞ்ஞானிகட்கும் மெய்ஞ்ஞானிகட்கும் வேற்றுமை உண்டென்க. அவ்வேற்றுமை பெரிது; மலை அணுபோன்றது.

### அகக் கண்ணர்

புலனடக்கம் பெற்று, மனமாசுகளை நீத்து, கொலை முதலிய பாவச் செயல்களினின்றும் முற்றும் விடுதலையடைந் தவர் அகக்கண் திறக்கப் பெறுகிறார். அவர் தம் உள்ளத்தில் இறை ஒளியே திகழும். இறை, இயற்கையின் உயிர். உயிர் விளங்கப்பெறுவோர்க்கு உடற்கூறுகள் நன்கு புலனாதல் இயல்பே. இறையின் உடலாகிய இயற்கையின் நுட்பங்க ளெல்லாம் உள்ளொளியார்க்கு எளிதில் பொருளாகும். அவர் கருவித்துணை யின்றி எல்லாவற்றையும் உணரும் ஆற்றல் பெறுவர். புறநோக்குக்குக் கருவித்துணை வேண்டும். அக நோக்குக்கு அத்துணை வேண்டுவதில்லை. அகநோக்குக்குப் புலப்படும் நுட்பங்கள் புறநோக்குக்கும் கருவி ஆராய்ச்சிக்கும் எட்டாதன.

அகக்கண்ணர் இறையொளியில் நிற்றலால், அவர்க்கு இயற்கைச் சக்திகளின் வரம்புகள் இனிது விளங்கும். இயற்கைச் சக்திகள் அவர்வழியே இயங்கும். காற்று, நெருப்பு, நீர் முதலிய எல்லாம் அவர்க்கு ஏவல் செய்யும். கிறிஸ்துபெருமான் ஆணைக்குக் கடல் முதலியன அடங்கி நடந்ததை ஈண்டு விரித்துக் கூற வேண்டுவதில்லை.

*திக்கொடு திகந்தமும் மனவேக மென்னவே*
*சென்றோடி யாடி வருவீர்*
*செம்பொன்மக மேருவொடு குணமேரு என்னவே*
*திகழ்துருவம் அளவ ளாவி*
*உக்ரமிகு சக்ரதர னென்னநிற் பீர்கையில்*
*உழுந்தமிழும் ஆச மனமா*
*ஓரேழு கடலையும் பருகவல் லீரிந்த்ரன்*
*உலகுமயி ராவ தமுமே*
*கைக்கெளிய பந்தா யெடுத்துவிளை யாடுவீர்*
*ககனவட் டத்தை யெல்லாங்*
*கடுகிடை யிருத்தியே அஷ்டகுல வெற்பையுங்*
*காட்டுவீர் மேலும் மேலும்*
*மிக்கசித் திகளெலாம் வல்லநீ ரடிமைமுன்*
*விளங்கவரு சித்தி இலையோ*
*வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற*
*வித்தகச் சித்தர் கணமே.*

*பாட்டளி துதைந்துவளர் கற்பகநல் நீழலைப்*
*பாரினிடை வரவ ழைப்பீர்*
*பத்மநிதி சங்கநிதி இருபாரி சத்திலும்*
*பணிசெயுந் தொழிலாளர் போல்*
*கேட்டது கொடுத்துவர நிற்கவைப் பீர்பிச்சை*
*கேட்டுப் பிழைப்போ ரையும்*
*கிரீடபதி யாக்குவீர் கற்பாந்த வெள்ளமொரு*
*கேணியிடை குறுக வைப்பீர்*
*ஓட்டினை எடுத்தா யிரத்தெட்டு மாற்றாக*
*ஒளிவிடும் பொன்னாக் குவீர்*
*உரகனும் இளைப்பாற யோகதண் டத்திலே*
*உலகுசுமை யாக வருளால்*
*மீட்டிடவும் வல்லநீ ரென்மனக் கல்லையனல்*
*மெழுகாக்கி வைப்ப தரிதோ*
*வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற*
*வித்தகச் சித்தர் கணமே.*

*பாரொடுநன் னீராதி யொன்றோடொன் றாகவே*
*பற்றிலய மாகு போழ்து*
*பரவெளியின் மருவுவீர் கற்பாந்த வெள்ளம்*
*பரந்திடி னதற்கு மீதே*
*நீரிலுறை வண்டாய்த் துவண்டுசிவ யோகநிலை*
*நிற்பீர் விகற்ப மாகி*
*நெடியமுகி லேழும் பரந்துவரு ஷிக்கிலோ*
*நிலவுமதி மண்டல மதே*
*ஊரென விளங்குவீர் பிரமாதி முடிவில்விடை*
*ஊர்தியரு ளாலுல வுவீர்*
*உலகங்கள் கீழ்மேல வாகப் பெருக்காற்*
*றுலாவின்நல் தாரணையி னால்*
*மேருவென அசையாமல் நிற்கவல் லீருமது*
*மேதக்க சித்தி எளிதோ*
*வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற*
*வித்தகச் சித்தர் கணமே.*

*கெசதுரக முதலான சதுரங்க மனமாதி*
*கேள்வியி னிசைந்து நிற்பக்*
*கெடிகொண்ட தலமாறு மும்மண்ட லத்திலுங்*
*கிள்ளார்க்கு செல்ல மிக்க*
*தெசவிதம் தாய்நின்ற நாதங்க ளோலிடச்*
*சிங்காச னாதிபர்க ளாய்த்*
*திக்குத் திகந்தமும் பூரண மதிக்குடை*
*திகழ்ந்திட வசந்த காலம்*
*இசையமலர் மீதுறை மணம்போல ஆனந்தம்*
*இதயமேற் கொள்ளும் வண்ணம்*
*என்றைக்கு மழியாத சிவராச யோகமாய்*
*இந்த்ராகி தேவர்க ளெலாம்*
*விசயசய சயவென்ன ஆசிசொல வேகொலு*
*இருக்குநும் பெருமை எளிதோ*
*வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற*
*வித்தகச் சித்தர் கணமே*

எனவரூஉந் தாயுமானாரின் மெய்ம் மொழிகளை நோக்குக. இவை யாவும் விஞ்ஞான உலகையுங் கடந்தோர் செயல்கள். மனம் ஒருமை யெய்தி அகநோக்குப் பெற்றவர்க்கு இச் செயல்கள் அரியனவல்ல. மனமடங்கி ஒருமையில் நிற்பதே அருமைப்பாடு. இதையும் தாயுமானார் ஓரிடத்தில் உலகுக்கு அறிவுறுத்துகிறார். அது வருமாறு:-

*கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்*
*கரடிவெம் புலிவா யையுங்*
*கட்டலாம் ஒருசிங்கம் முதுகின்மேற் கொள்ளலாம்*
*கட்செவி எடுத்தாட் டலாம்*
*வெந்தழலின் இரதம்வைத் தைந்துலோ கத்தையும்*
*வேதித்து விற்றுண் ணலாம்*
*வேறொருவர் காணாமல் உலகத்து லாவலாம்*
*விண்ணவரை ஏவல் கொளலாம்*
*சந்ததமும் இளமையொ டிருக்கலாம் மற்றொரு*
*சரீரத்தி னும்புகு தலாம்*
*சலமேல் நடக்கலாம் கனல்மே லிருக்கலாம்*
*தன்னிகரில் சித்தி பெறலாம்*
*சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற*
*திறமரிது சத்தாகி என்*
*சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே*
*தேசோ மயானந் தமே.*

மனமடங்கப்பெறாத விஞ்ஞானிகட்கு இயற்கையினிடத்துள்ள சக்திகள் சிலவே விளங்குமென்றும், மனமடங்கப் பெற்ற மெய்ஞ்ஞானிகட்கு இயற்கைச் சக்திகளெல்லாம் விளங்குமென்றும் கொள்க.

## ஆசிரியர் உலகம்

ஆசிரியர் எவ்வுலகில் நின்று, 'செயற்கரியன' கூறுகிறார் என்பதை உன்னுக. ஆசிரியர் நீத்தாருலகில் நின்று, 'செயற்கரியன' கூறுகிறார் என்பது வெள்ளிடைமலை. அதற்கென்று அவரால் அருளிச் செய்யப்பெற்ற அதிகாரம் இது. இவ்வதிகாரம் நீத்தார் பெருமையைச் சொல்வது. அதிகார அமைவை உளங்கொண்டே இக் குறட்பாவுக்குப் பொருள் விரிப்பது ஒழுங்கு. இல்லையேல் வழி விடுத்துக் கவட்டைகளில் புகுந்து இடர்ப்படல் நேரும்.

அதிகார அமைவை நோக்குவோம். நீத்தாரின் பெருமையைப் பற்றிய பொதுமைக் குறிப்புக்கள் போக, எஞ்சி நிற்பன ஈண்டறம் பூண்டு ஐந்தவித்தல், குணமென்னுங் குன்றேறி நிற்றல், நிறைமொழி மாந்தராதல், அந்தணரென்னும் அறவோராதல் முதலியன. இவை யாவும் செயற்கரியன என்பது ஆசிரியர் உட்கிடக்கை.

## ஐந்தவித்தவர்

எல்லாவற்றிற்கும் அச்சாணியாக நிற்பது ஐந்தவித்தல். இதுபற்றியே ஐந்தவித்தலுக்கென்று மூன்று பாட்டு ஆசிரியரால்

அருளப்பட்டன. அவை, 'சுவை யொளி.... உலகு', 'உரனென்னும்... வித்து', 'ஐந்தவித்தான் .... கரி' என்பன. ஐந்தவித்தவரே, குண மென்னுங் குன்றேறி நின்றவர் - நிறைமொழி மாந்தர் - அறவோர் - என்று இவ்வதிகாரம் தெளிவு செய்துள்ளது. ஆதலின், ஐந்தவித்தவரே 'செயற்கரிய செய்வார்' என்பது ஆசிரியர் கருத்தெனக் கொள்க.

'செயற்கரிய செய்வார் பெரியர்' என்றும், 'செயற்கரிய செய்கலாதார் சிறியர்' என்றும் ஆசிரியர் அருளியுள்ளனர். அதிகார அமைவை நோக்குழிச் செயற்கரிய செய்வோர் ஐந்த வித்தவரே என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கு கிறது. இதனால் ஐந்தவித்தவரே பெரியர் என்பதும், ஐந்தவியா தார் சிறியர் என்பதும் தெளிவாதல் காண்க.

புலன்கள் மக்களிடத்திலேயே இருப்பன. அவை வேறிடத் தில் இல்லை. தங்களிடத்திலேயே உள்ள புலன்களை வயப் படுத்த இயலாதவர்கள் ஆகாயத்தில் பறந்தாலென்ன? கடலடி யைக் கண்டாலென்ன? மண்ணை விண்ணாக்கினா லென்ன? விண்ணை மண்ணாக்கினாலென்ன? இவை செயற்கருஞ் செயல்களாகா என்பது ஆசிரியர் கருத்து. ஐந்தவித்து வாழ்தலே செயற்கருஞ் செயல் என்பதும், அவ்வருஞ் செயல் புரிவோரே பெரியர் என்பதும் ஆசிரியர் உள்ளக்கிடக்கை, ஆகவே, பெரியர் எவர்? சிறியர் எவர்? பெரியர் ஐந்தவித்தா ரென்க; சிறியர் ஐந்தவியாதாரென்க.

### ஒரே கருத்து

'செயற்கரிய செய்வர் பெரியர்' என்று ஓதும் அளவில் நில்லாது, 'செயற்கரிய செய்கலாதார் சிறியர்' என்று மீண்டும் அக்கருத்தையே வேறு முறையில் ஆசிரியர் ஓதியதன் நோக்கம் என்னை? செயற்கரிய செய்வர் பெரியரெனில் அவை செய்கலா தார் சிறிய ரென்பது சொல்லாமலே விளக்கு வதென்று. இதை எற்றுக்கு ஆசிரியர் மீண்டும் அறைந்தனர்? ஒவ்வொருவர்க்கு ஒவ்வொருவிதக் காரணம் தோன்றும். காரணம், இலக்கணர்க்கு ஒருவிதமாகவும், தருக்கர்க்கு வேறுவிதமாகவும், மற்ற மற்றவர்க்கு மற்ற மற்ற விதமாகவும் முறைமுறையே தோன்றும். அம் மல்லாடல் ஈண்டைக்கு வேண்டுவதில்லை. அதிகார அமைவை ஒரு பக்கமும், இக்குறட்பாவை மற்றொரு பக்கமுங் கொண்டு உன்ன உன்ன உண்மை புலனாகும். உன்னும் அளவிற்கு உண்மை விளங்கும்.

விஞ்ஞானிகள் முதலியோர் எவ்வளவோ வியக்கத்தக்க செயல்களை நிகழ்த்துகின்றனர். அச்செயல்கள் மற்றவர்க்கு

அரியனவாகவே தோன்றும். அத்தோற்றம் அவரைப் பெரிய ரென்றுங் கருதச் செய்கிறது. அவ்வாறு கருதல் தவறு என்பதை உணர்த்தவே ஆசிரியர், 'பெரியர்' என்றும், 'சிறியர்' என்றும் பிரித்து ஓதியிருத்தல் வேண்டும். பிரிவால் தெளிவே விளங்குகிறது.

ஐந்தவித்தவரே பெரியர்; மற்றவர் சிறியர். ஐந்தவித்த பெரியோர் செய்வனவே அரியன; மற்றவை எத்தகையன வாயினும் அவை அரியனவாகா. ஐந்தவித்த பெரியோர் செயற்கரியன செய்வர்; மற்றவர் அவை செய்கலாதார். இவர் சிறியர் என்றபடி.

### எல்லாஞ் செய்தல்

செயற்கருஞ் செயல் செய்யும் ஆற்றல் ஒருவர்க்கு வாய்த்தால் அவரால் நல்லன தீயன எல்லாஞ் செய்தல் இயலுமன்றோ? அவர் புலனடங்காச் சிறியராயின் எல்லாஞ் செய்யப் புகுவர்; புலனடங்கிய பெரியோராயின் எல்லாஞ் செய்யப் புகார். அது பற்றி, 'பெரியர்' 'சிறியர்' என்னும் பாகுபாடு செய்யப்பட்டது.

தவத்தால் வரம் பெற்ற அரக்கர் சிலர் திமிரால் கொடுமைகள் செய்த கதைகள் பலவற்றை நாம் படிக்கிறோம் சிறிது அதிகாரம் பெற்றதும் சிலர் கொடுமை செய்யப் புகுவதை நாம் பார்க்கிறோம். இவர் திருவள்ளுவர் சொல்லும் பெரியரா வரோ? ஆகார். திருவள்ளுவர் சொல்லும் 'பெரியர்' ஐந்தவித்த சான்றோர். அவர்தஞ் சிறப்புச் செயல் வரும்பாட்டில் குறிக்கப் படுகிறது. (9)

**30**

***அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்***
***செந்தண்மை பூண்டொழுக லான்.***

**பொருள்**

மற்று எவ்வுயிர்க்கும் - தாமல்லாத பிறவாக உள்ள எவ்வுயிர்க்கும், செந்தண்மை பூண்டு ஒழுகலான் - செவ்விய அருளைப் பூண்டு ஒழுகலால், அந்தணர் என்போர் - அந்தணர் என்று சொல்லப்படுவோர், அறவோர் - அறவோராவர்.

**கருத்து**

தமது நலமற்றுப் பிற உயிர்களிடத்து அருள் தாங்கி நிற்பவர் அந்தணர்; அறவோர்.

**விருத்தி**

*முன்னைக் குறட்பாவின் விளக்கமே இக்குறட்பா. புலனடங்கிய பெரியோர் செய்யுஞ் செயற்கருஞ் செயல்களுள் சிறந்தது இன்னது என்று இப்பாட்டில் அறிவுறுத்தப்படுகிறது. அஃதென்னை? அஃது எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண் டொழுகுவது.*

**மற்றெவ்வுயிர்க்கும்**

*மற்று - பிற; 'வேண்டாது மற்று நீ மாணா செயினும்'- கலித்தொகை : 91 : 21 - 2.*

*எவ்வுயிர்க்கும் - எந்த உயிர்க்கும்; எவ்வகை உயிர்க்கும் ; எல்லா உயிர்களிடத்தும்; எவ்வுயிரிடத்தும் வேற்றுமை பாராட்டாத வகையில் என்றபடி.*

**மற்றெவ்வுயிர்க்கும்**

*தம் நல நாட்டம் பிறர்க்குச் செந்தண்மை பூண்டொழுக இடந்தாராது. தம் நலம் அற்றவராலேயே தாமல்லாத பிற உயிர்கட்குச் செந்தண்மை பூண்டொழுகுதல் கூடும். இதனை இக்குறளில் 'மற்று' என்னுஞ் சொல் விளக்கா நிற்கிறது. 'மற்று' என்பதன் உள்ளுறை நோக்கியே, "அதற்குத் 'தாமல்லாத பிறவாக உள்ள' என்று பொருள் கூறப்பட்டது. 'எவ்வுயிருக்கும்' என்று கூறாது, 'மற்றெவ்வுயிர்க்கும்'" என்று ஆசிரியர் அருளியதை உன்னிப் பார்க்க.*

*நமது நலன் நாடா தொழியின், தமதிருப்புக்கே கேடு வருமென்றும், அந்நிலையில் மற்ற உயிர்கட்கு எங்ஙனம் நலஞ் செய்தல் கூடுமென்றுஞ் சிலர் ஐயுறலாம். பிற உயிர்க்கு நலஞ் செய்தற்கென்று உடலோம்பல் முதலியன செய்துகொள்ளுதல் தவறாகாது; தம்பொருட்டு உடலோம்பல் முதலியன செய்து கொள்ளுதல் தவறு. இவர் அரக்கராய்ப் பிற உயிர்க்குக் கேடு சூழ்ந்து வாழவே முற்படுவர். பிற உயிர்பொருட்டு வாழ்வு நடாத்துவோர் சமயம் நேரும்போது தம் உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் தியாகஞ் செய்யச் சித்தமாவர். மற்றவர் அத்தகையத் தியாகஞ் செய்ய ஒருப்படார். புலனடங்கிய பெரியோர் பிறஉயிர் பொருட்டே வாழ்வர். இதனால் ' மற்றெவ்வுயிர்க்கும்' என்றனர்.*

*'தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்'; 'பிறர்க்கற முயலும் பெரியோய்'; 'பிறர்க்கறம் அருளும் பெரியோன்'; 'தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயி ரோம்பு - மன்னுயிர் முதல்வன்' - மணிமேகலை: 5 : 73 : 11 : 63 : 21 : 178; 25: 116 -7.*

**செந்தண்மை பூண்டு ஒழுகலான்**

*செந்தண்மை - செம்மை தண்மை.*

*செம்மை - நேர்மை ; மனக்கோட்ட மின்மை; செவ்வை; நல்ல.*

*தண்மை - தட்பம்; குளிர்ச்சி; அருள் (அருள் தண்மை யுடையதாய்க் குளிர் செய்தலின்).*

*செந்தண்மை - செவ்விய அருள்; நேரிய முறையில் செலுத்தப்படும் அருள் ; நல்லருள்.*

*செந்தண்மை, ஜீவகாருண்யத்தை அறிவுறுத்தும் ஒரு சிறந்த செந்தமிழ்த் தொடர்.*

*பூண்டு - மேற்கொண்டு, தாங்கி, உடைத்தாகி,*

*பூணுதல் - 'விரதங் கோடல்' என்பர் பரிமேலழகர்.*

*ஒழுகலான் - நடத்தலான்.*

*எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான் - எவ்வுயிர்க்கும் நல்லருள் தாங்கி நடத்தலான்; 'அனைத்துயிர்கும் அருள்தாங்கி * * *'- பெரியபுராணம் : திருநாவுக்கரசர் : 34.*

**செந்தண்மை பூண்டு ஒழுகலான்.**

*செந்தண்மை மனமாசுள்ள இடத்தில் அரும்பாது. மனமாசற்ற இடத்திலேயே அஃதரும்பி மலரும். செந்தண்மை அரும்பி மலர்தற்கு உயிரின் முயற்சி வேண்டும். சிறந்த முயற்சி ஐந்தவித்தல். ஐந்தவித்த பெரியோர் உள்ளம் மாசற்றதாகலின் அதன்கண் வன்கண்மை நிலவாது; செந்தண்மையே நிலவும். 'பூண்டு' என்பது செந்தண்மைக்குரிய முயற்சியைக் குறிப்பால் உணர்த்துவது. ஒருவர் உள்ளத்தில் மட்டும் செந்தண்மை பூண்பதால் என்ன பயன்? செந்தண்மையை ஒழுக்கத்தில் - நடையில் - செயலில் - கொணர்தல் வேண்டும். அப்பொழுதே அது மற்ற உயிர்க்குப் பயன் படுவதாகும். இதுபற்றியே 'ஒழுகலான்' என்றார்.*

**கட்டுப்பாடு**

*செந்தண்மை பூண்டொழுகலில் எவ்விதக் கட்டுப்பாடும் இருத்தல் கூடாதென்பது ஆசிரியர் உள்ளக்கிடக்கை. அது பற்றியே அவர்,'எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்'என்றார்.*

*எவ்வுயிர்க்கும் என்றமையால் அஃறிணை உயிர், உயர் திணை உயிர், சிறிய உயிர்,பெரிய உயிர் முதலிய எல்லா உயிர்*

களையும் கொள்க; சாதி மதம் நிறம் மொழி நாடு முதலிய வற்றைத் தனித்தனியே கொண்டு, தனித்தனி முறையில் செந் தண்மை பூணல் கூடாதென்றுங் கொள்க.

தனித்தனிக் கூட்டத்துக்கு மட்டுஞ் செந்தண்மை பூண் டொழுகுவதென்பது மற்ற மற்றக் கூட்டத்துக்கு இடுக்கண் செய்வதாக முடியும். ஓரினத்தை வதைத்து இன்னோரினத்துக்கு நலஞ் செய்வது சிறந்த செந்தண்மையாகாது. அதனால் எரி பகை முதலிய தீமைகளே பெருகும். கண்டப்பட்ட முறையில் செந் தண்மை பூணல் கூடாதென்று தெளிவு செய்யவே ‘எவ்வுயிர்க் கும் செந்தண்மை பூண்டொழுகலான்’ என்றார்.

**அந்தணரென்போர் அறவோர்**

அந்தணர்-அழகிய தட்பமுடையார்; நல்லருளுடை யார்; (அம்-தண்மை-அர்).

அறவோர்-மனமாசுகளை அறுத்தவர்; மனமாசுகளைத் துறந்தவர்; முனிவர்; நீத்தார்.

**அந்தணர்-அறவோர்**

அந்தணர் என்னுஞ் சொல்லே அருளாளர் என்னும் பொருளுடையது.

அறமாவது மனமாசற்ற நிலை; அழுக்காறு அவா வெகுளி முதலியன அற்றநிலை. மாசற்ற உள்ளத்தில் அருளே மலர்ந்து நிற்கும். அறமுள்ள இடத்தில் அருள் நிலவுதல் இயல்பு. இதனால் அறவோரும் அருளாளரும் ஒருவரே என்பது விளங்குதல் காண்க.

அந்தணரும் அருளாளர்; அறவோரும் அருளாளர். அந்தணர் யார்? அறவோர் யார்? இருவரும் ஒருவரே. இது பற்றியே,‘அந்தணர் என்போர் அறவோர்’ என்றார்.

திருவள்ளுவர் காலத்தில் எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகுவோரே அந்தணரென்றும் அறவோரென்றும் போற்றப்பட்டனர். அந்தணரே அறவோர்-அறவோரே அந்தணர் என்பது திருவள்ளுவர் கருத்து. அந்தணரும் அறவோரும் ஒருவரே என்னும் உண்மை இக் குறட்பாவால் நன்கு விளங்கு கிறது. பின்னாளில் இவ்விரண்டு சொல்லுக்கும் பொருள் வெவ்வேறு வழியில் திரிக்கப்பட்டது. காரணம் பல வகுப்பு, பல மதம் முதலியன தமிழுலகில் புகுந்தமையேயாகும்.

பொருள் படிப்படியே மாறுபட்டமை நோக்கற்பாலது. அந்தணர்: எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகுவோர்-திருவள்ளுவர்.

'அந்தணர் என்பது, அழகிய தட்பத்தையுடையார் என ஏதுப் பெயராகலின், அஃது அவ்வருளுடையார் மேலன்றிச் செல்லாதென்பது கருத்து'- பரிமேலழகர்.

'அந்தத்தை அணவுவார் அந்தணர் என்றது, வேதாந் தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பாரென்ற வாறு'- (கலித்தொகை : கடவுள் வாழ்த்து : 4 : உரை; திருமுரு காற்றுப்படை : 96 : உரை ; 'அந்தணர் - வேதாந்தத்தை எக்கால மும் பார்ப்பார்'- மதுரைக் காஞ்சி : 474 : உரை) நச்சினார்க்கினியர்.

'அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச் - சிந்தை செய் யந்தணர்'- திருமூலர் : அந்தணர் ஒழுக்கம்.

'அந்தண ரென்போர் அறவோர்'- திருவள்ளுவர்.

'அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய'; 'அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும் - துறவோர்க் கெதிர்தலும் * * * *'- சிலப்பதிகாரம் : அடைக்கலக் காதை : 115 - கொலைக்களக் காதை : 71 - 2 ('அறவோர் - துறவாது விரதங்காத்தார்' - பழைய குறிப்புரை ; 'அறவோர் - சாவக நோன்பிகள்' - அடியார்க்கு நல்லார்).

**அந்தணர்**

அஃறிணை உயர்திணை வேற்றுமை, பெருமை, சிறுமை வேற்றுமை, சாதி மதம் நிறம் மொழி நாடு ஆகிய வேற்றுமைகள் முதலியவற்றைக் கடந்து, எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண் டொழுகுவோரே அந்தணராவர். சிறுசிறு வேற்றுமைகளில் பற்றுக் கொண்டு வாழ்வோர் அந்தணராகார்.

எவ்வித வேற்றுமையுங் கருதாது எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகுவது எளிதன்று. அஃது அரிது; அரிது: செயற் கரிது. இச் செயற்கருஞ் செயலுக்கு அழுக்காறு அவா வெகுளி முதலியன சிறிதும் இருத்தலாகாது. இவை சிறிதிருப்பினும் எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகுதல் இயலாது. தீக் குணங்கள் அறவே - முற்றும் - ஒழிந்த மனமுடைய வரால் அதாவது மனமாசற்றவரால் எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகு தல் இயலும். ஏனையோரால் அஃதாற்றல் இயலாது.

**அறவோர்**

மனமாசு எப்பொழுது அகலும்? புலனடங்கி மனம் ஒருமைப்பட்ட நிலையில் மாசு முற்றும் அகலும். அப்புலனடக் கமே இவ்வதிகாரத்திற் பெரிதும் பேசப்பட்டுள்ளது. புலனடங் கிய பெரியோரே - குணமென்னுங் குன்றேறி நின்றவரே -

செயற்கருஞ் செயல் செய்வோரே - எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர் என்று இப்பாட்டிற் போற்றப்பட் டுள்ளனர். இவ்வந்தணரே அறவோர். அறவோர் மனமாசகன்ற நீத்தாராதலின் அவர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணராகிறார்.

**அறவோரது செயல் அந்தண்மை**

இவ்வதிகாரம் நீத்தார் பெருமை கூறுவது. மேற் பாட்டில் 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்று ஆசிரியர் அருளினர். அச்செயற்கருஞ் செயல் இன்னது என்று இப்பாட்டில் அவர் விளக்கியுள்ளனர்.

செயற்கருஞ் செயலாவது மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகுவது. எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகு வோர் அந்தண ரென்பவர். அவரே அறவோர் - நீத்தார் - என்றபடி. அறவோரது செயற்கருஞ் செயல் எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தண்மை என்று விளக்கிய வாறு காண்க. (10)

## 4. அறன் வலியுறுத்தல்

'அறன் வலியுறுத்தலாவது அறம் வலிமையுடைத் தென்பதனை அறிவித்தல்' -- மணக்குடவர்.

'அறன் வலியுறுத்தல்: அஃதாவது(அம்) முனிவரான் உணர்த்தப்பட்ட (அம்) மூன்றனுள், ஏனைப் பொருளும் இன்பமும் போலாது, அறன் இம்மை மறுமை வீடென்னும் மூன்றனையும் பயத்தலான், அவற்றின் வலியுடைத்தென்று கூறல்'-- பரிமேலழகர்.

**அறன்**

அறம் - அறன்; தீக்குணங்களை அறுப்பது; மனமாசற்ற நிலை; எல்லா நற்குணங்களுஞ் சேர்ந்த ஒன்று.

அறன் ஒரு மரம் போன்றது. இல்வாழ்க்கை, பிள்ளைப் பேறு, அன்பு, விருந்தோம்பல், ஒழுக்கம், பொறை, ஒப்புரவு, ஈகை, அருள், தவம், மெய்யுணர்வு, அரசு, கல்வி, தொழில் முதலியன, அறமாகிய மரத்துக்கு வேர், பட்டை, மன்றம், கவடு, கோடு, விளார், தளிர், இலை, அரும்பு, மலர், காய், கனி, முதலியன உறுப்புக்களெனத் திகழ்கின்றன.

**வலியுறுத்தல்**

வலி - வலிமை; ஆற்றல்.

உறுத்தல் - அறிவுறுத்தல்; தெரியச் செய்தல்.

வலியுறுத்தல் - வற்புறுத்தலுமாம்.

அறன் வலியுறுத்தல் - அறத்தின் வலிமையை அறிவுறுத்தல்; அறனை வற்புறுத்தல் எனினுமாம்.

**அடிப்படை அறம்**

அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றனுள் இடையி லுள்ள பொருள் சிறந்தது என்று சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம் பொருட்டுணை கொண்டே அறமும் இன்பமும் நிகழ்தல் குறிக்கப்படுகிறது. பொருளற்ற இடத்தில் அறநிகழ்ச்சி யும் இன்ப நுகர்ச்சியும் நேரியமுறையில் உறுதல் அரிதென்பது உலகம் ஒப்ப முடிந்த உண்மை.

பொருள் பெற்றியுடையதே. எப்பொருள் பெற்றியு டையது? பொருளெல்லாம் பெற்றி யுடையனவாகுமா? அறவழி யில் ஈட்டப் பெறும் பொருளே பெற்றியுடையது. மற்றப் பொருள்கள் பெற்றியுடையனவாகா.

பொருள் எது? இன்பம் எது? அறவழியில் ஈட்டப் பெறுவதே பொருள். அப்பொருள் வழி நுகரப் பெறுவதே இன்பம். பொருளீட்டலுக்கும், இன்ப நுகர்தலுக்கும் அடியில் அறம் நிலவுதல் வேண்டும். அறம் அற்ற பொருள் பொருளா காது; அஃதற்ற இன்பமும் இன்பமாகாது. அறம் தனித்து மட்டும் நிற்பதன்று. அது தனித்தும், பொருளின்பத் துடன் விரவியும் நிற்பது. இவ்விருவித இயக்கம் அறத்துக்கும் உண்டு.

இன்றியமையாத பொருட்கு அறிகுறியாக 'வான் சிறப்பு'ம், இன்பத்துக்கு அறிகுறியாக 'நீத்தார் பெருமை'யும் பாயிரத்துள் முறையே அமைக்கப்பட்டன. இரண்டுக்கும் அடியில் நிலவும் 'அறம்' இங்கே வைக்கப்பட்டது. முறை மாற்றம் அறத்தின் வலிமையை அறிவுறுத்துவது. இது பற்றியே 'அறன்' என்று தலைப்பிடாது 'அறன் வலியுறுத்தல்' என்று தலைப் பிடப்பட்டது. இவ் வைப்புமுறை தோற்றுவாயிலும் விளக்கஞ் செய்யப்பட்டது. அறன் வலியுறுத்தல் ஒன்றிய உள்ளத்துடன் அறத்துப்பாலை மக்கள் பயிறல் வேண்டுமென்பது ஆசிரியர் உள்ளக்கிடக்கை போலும்!

**உள்ளுறையும் அமைவும்**

இவ்வதிகாரத்தில் விளங்கும் பொருளை நான்கு கூறிடலாம். (1) அறத்தின் விழுப்பம் (2) அறத்தின் இயல் (3) அறச்செயல் (4) அறப்பேறு.

*ஒன்று விழுப்பமுடையதெனில் அதன்மீது சிந்தை செல்வது இயல்பு. அது விழுப்பமுடையதா என்று சிந்திக்கச் சிந்திக்க அதன் இயல் இனிது விளங்கும். இயல் விளங்கியதும் அதை வாழ்வில் - செயலில் - கொணரும் முயற்சி எழும். செயலால் பொருளின் பயன் - பேறு - விளையும். இம்முறை கொண்டு இவ்வதிகாரத்திலுள்ள நான்கு பொருளையும் நோக்கினால் அவற்றின் தொடர்பு புலனாகும்.*

*முதல் இரண்டு பாட்டிலும் அறத்தின் விழுப்பமும், மூன்று நாலில் அறத்தின் இயலும், ஐந்து ஆறில் அறச்செயலும், ஏழு முதல் பத்து வரை அறப்பேறும் சொல்லப்பட்டிருக்கின்றன.*

**(i) அறத்தின் விழுப்பம்**

**31**

***சிறப்பீனும் செல்வமு மீனும் அறத்தினூஉங்***
***காக்கம் எவனோ உயிர்க்கு.***

**பொருள்**

*சிறப்பு ஈனும் - சிறப்பைக் கொடுக்கும், செல்வமும் ஈனும் - செல்வத்தையும் அளிக்கும், அறத்தின் ஊங்கு - அறத்தினும் மேம்பட்ட, ஆக்கம் - ஆக்கம், உயிர்க்கு எவனோ- உயிர்களுக்கு யாதோ? (வேறில்லை).*

**கருத்து**

*உயிருக்கு ஆக்கம் விளைப்பது அறம்; அவ்வறத்தினுஞ் சிறந்த தொன்றில்லை.*

**விருத்தி**

*'முத்தியும் தரும்; செல்வமும் தரும்; ஆதலால் அறத்தின் மேல் உயிர்கட்கு ஆக்கமாவது பிறிதொன்றில்லை'- இது மணக்குடவர் உரை. இதைப் பெரிதுந் தழுவிப் பரிமேலழகரும், 'வீடுபேற்றையுந் தரும்; துறக்கம் முதலிய செல்வத்தையுந் தரும்; ஆதலான், உயிர்கட்கு அறத்தின் மிக்க ஆக்கம் யாது?' என்று பொருள் விரித்தனர்.*

*'சிறப்பையுங் கொடுக்கும் (அறத்தின்), செல்வத்தையுங் கொடுக்கும் அறத்தின்...' என்று கொண்டு பொருள் கூறலுமாம்.*

**சிறப்பீனும் செல்வமுமீனும் அறத்தின்**

*சிறப்பு - இம்மை மறுமைச் சிறப்புக்களை.*

*இம்மைச் சிறப்புப் பலவகை; மறுமைச் சிறப்பு வீடு பேறு.*

*"எல்லாப் பேற்றினுஞ் சிறந்தமையின், வீடு 'சிறப்பு' எனப்பட்டது." என்றனர் பரிமேலழகர்.*

*ஈனும்: பெயரெச்சம்; உம் - பெயரெச்ச விகுதி; ஈனும் செல்வமும்.*

*செல்வம் பலவகை. பலவகைகளைக் கல்வி, பொருள், அருள் என்று மூன்றாகத் தொகுத்துக் கொள்ளலாம். இம் மூன்றில் செல்வக் கூறுகள் பலவும் அடங்கும்.*

*செல்வமும்: உம் உயர்வு சிறப்பு.*

*ஈனும் : பெயரெச்சம்; ஈனும் அறத்தின்.*

*அறத்தின் - அறத்தினும்; அறத்தைக் காட்டினும்; இன் ஐந்தன் உருபு; உறழ் பொருவு.*

**சிறப்பினும் செல்வமுமீனும் அறத்தின்**

*பாட்டிற் போந்துள்ள சிறப்பு, செல்வம், அறம் என்னும் மூன்றற்குமுள்ள தொடர்பை நோக்குக. சிறப்பைக் கொடுப்பது செல்வம்; செல்வத்தை அளிப்பது அறம்; அறம் செல்வத்தை அளிப்பது; செல்வம் சிறப்பைக் கொடுப்பது; எல்லாவற்றிற்கும் தாயகம் அறம்.*

*நேரே சிறப்பையும் அறத்தையுந் தொடர்புபடுத்தாது இடையில் செல்வத்தைச் செருகியதென்னை?*

*உயிர், கட்டினின்றும் விடுதலை எய்தல் வேண்டும். உயிர், கட்டினின்றும் நேரே விடுதலை எய்தாது. கட்டு அறுபடுதற்கு ஒரு கருவி வேண்டும். அக்கருவியே வாழ்வு என்பது. வாழ்வாவது, உயிர் - மனம் முதலிய கரணங்களைக் கொண்ட உடலுடன்கூடி உலகில் இன்பந்துய்க்க அமைவது. இன்பந் துய்ப்பதற்குப் பொருள் தேவை. பொருளீட்டும் முயற்சிக்குக் கல்வி தேவை. நற்கல்வியும் பொருளும் வாழ்வை அருளொழுக்கத்திற் செலுத்தும், அருளொழுக்கம், படிப்படியே மனமாசினை அகற்றி, உயிரிடை அற ஒளியைக் காலச்செய்து, வீடுபேற்றை நல்கும். எனவே, வீடுபேற்றுக்கு (சிறப்புக்கு)க் கல்வி - பொருள் - அருள் - என்னுஞ் செல்வம் வேண்டப்படுதலை உன்னுக. இதுபற்றியே ஆசிரியர், 'சிறப்பீனும் செல்வமுமீனும் அறத்தின்' என்று அருளினர். அறம் நேரே சிறப்பையளியாது செல்வத்தின் வாயிலாக அதையளிக்கும் என்பது கருத்து. சிறப்புக்கும் அறமே மூலம் என்பதை மறத்தலாகாது.*

### வீடுபேறும் உலகியலும்

'சிறப்பை வீடு என்று கொள்ளும் அளவில் நில்லாது, அதனுடன் இம்மைச் சிறப்பையும் (உலகியற் சிறப்பையும்) கொண்டது என்ன?' என்று சிலர் கருதலாம். அறநெறி நிற் போர்க்கு உலகியற் சிறப்பும் உண்டு. அச்சிறப்பு வீடு பேற்றுக்குத் துணையும் புரியும். 'அந்தோ! உலகியற் சிறப்பா வீடு பேற்றுக்குத் துணைபுரியும்?' என்னும் மருட்சி சில இடங்களில் நிகழலாம்.

உலகச் சிறப்பு இருவிதம். ஒன்று மக்களே வலிந்து தேடுவது; மற்றொன்று உலகமே வரிந்து செய்வது. பெரியோர் பயன்கருதாது தொண்டு செய்வர். அவர் பேர் புகழ் ஒன்றும் நாடுவதில்லை. அவரை உலகமே சிறக்கச் செய்யும். அச்சிறப்பு, பயன் கருதாமையினின்றும் தோன்றி விளைவது. அஃது உயிரின் விடுதலைக்குத் துணையுஞ் செய்யும். பயன் கருதித் தொண டாற்றுவோர் உலகச் சிறப்பைத் தாமே வலிந்து தேடுவர். அஃது அவரை மேலும் மேலும் இருட்டிலேயே செலுத்தி வீழ்த்தும். அது விடுதலை வழியை அடைத்துவிடும்.

தம் நலன் கருதாது பிறர் நலன் கருதி வாழ்வோர்க்கு உலகம் வரிந்து செய்யும் சிறப்பே 'இம்மைச் சிறப்பு' என்பது. அச்சிறப்பு வீடுபேற்றுக்குத் துணை நிற்றலான், அது வீடு பேற்றுடன் சேர்த்து உரைக்கப்பட்டதென்க.

### கல்வி – பொருள் – அருள்

செல்வத்தின் வகைகள் பல. அவை இங்கே கல்வி என்றும், பொருள் என்றும், அருள் என்றும் முக்கூறுபடுத்தப்பட்டன. கல்விச் செல்வம், பொருட் செல்வம் அருட்செல்வம் எனவரும் வழக்கை நோக்குக.

கல்விச் செல்வமும் பொருட் செல்வமும், அருட் செல்வத்தை ஓம்புவனவா யிருத்தல் வேண்டும். அருளை ஓம்பாத கல்வியும் பொருளும் செல்வமாகா. அறத்தின் வழிப்பெறும் கல்வியும் பொருளுமே அருளை ஓம்பத்தக்கன.

செல்வத்துள் கல்வியும் பொருளும் உலகச் சிறப்பிற்கும், அவைகளின் அடைவாகிய அருள் வீடு பேற்றிற்கும் துணை செய்வன. கல்வி - பொருள் - அருள் என்னும் மூன்றையுங் கொண்ட செல்வம், அறத்தின் வழிப் பிறப்பதா யிருத்தல் வேண்டும் என்பார், 'செல்வமும் ஈனும் அறத்தின்' என்றார். அச்செல்வம் வீடுபேற்றை எய்துவித்தலான், 'சிறப்பீனும் செல்வமும்' என்றார்.

*சிறப்பை ஈனும் செல்வம் எத்தகையது? சொல்லலும் வேண்டுமோ? அச்செல்வத்தின் மாண்பைத் தெரிக்கவே, 'செல்வமும்' என்றார். உம்மைக்கணுள்ள உயர்வை ஓர்க.*

**(அறத்தின்) ஊஉங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு**

*ஊங்கு - மேம்பட்ட; மிக்க (ஊங்குதல் - மிகுதல்; ஊங்கு - ஊக்கு - ஊக்குதல்). 'கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை'- நீதிநெறி விளக்கம்: 2.*

*ஆக்கம், விருத்தி, பெருக்கம்; பேறுமாம். 'தம்மாலாம் ஆக்கம் இலரென்று' - நாலடி : 301 ; 'அண்ணலதற் கருள் புரிந்த ஆக்கப்பாட் டருள் செய்தார்' - பெரியபுராணம் : திருஞான சம்பந்தர் : 77.*

*"ஆக்கந் தருவதனை 'ஆக்கம்' என்றார். ஆக்கம் மேன் மேலுயர்தல்' என்பது பரிமேலழகர் குறிப்பு.*

*எவன் - யாது.*

*உயிர்க்கு - மக்களுயிர்க்கு.*

**(அறத்தின்) ஊஉங்கு ஆக்கம்**

*சிறப்பு என்னும் வீடுபேற்றிற்கு மேம்பட்ட நிலை வேறொன்றில்லை. அத்தகைச் சிறப்பைச் செல்வத்தின் வாயிலாக அளிப்பது அறம். அறத்தின் பெற்றி என்னே! உயிரின் ஆக்கத்துக்கு அவ்வறத்தினும் மேம்பட்டதொன்றிருக்குமோ? இருத்தற்கு இடமில்லை. உயிருக்கு ஆக்கந் தருவது அறம் ஒன்றே. அதை, 'அறத்தின் ஊஉங்கு ஆக்கம்' என்று ஆசிரியர் உலகுக்கு உணர்த்தினர். அறத்தின் விழுப்பம், 'அறத்தின்' என்பதில் விளங்குதல் காண்க.*

**ஊஉங்கு**

*'ஊங்கு' என்பது ஈண்டு மேம்பாடு என்னும் பொருளின் மேலது. வெறும் 'ஆக்கம்' என்று கூறாது, 'ஊங்கு' என்னும் அடையால் அதை அணிசெய்தனர் ஆசிரியர். என்னை? அறத்தினும் மேம்பட்ட ஆக்கம் உயிருக்கு இல்லை என்பதை விளக்கவேண்டி என்க. 'ஊங்கு' என்பது, ஆக்கத்துக்கு அடை யாக இருப்பினும், அஃது அறத்தின் விழுப்பத்தையே உணர்த்தி நிற்றலைக் கூர்ந்து நோக்குக.*

*அளபெடை அறத்தின் விழுப்பத்தை உணர்த்தும் ஒலி.*

**ஆக்கம்**

*'ஆக்கம்' என்பதற்கு, 'மேன்மேலுயர்தல்' என்று பரிமேலழகர் பொறித்த குறிப்புப் போற்றுந்தகையது. அறத்தான் உயிர்*

*கட்டினின்றும் படிப்படியே விடுதலை அடைந்து அடைந்து, மேன் மேல் உயர்ந்து உயர்ந்து செல்வதை, 'ஆக்கம்' என்னுஞ் சொல் விளக்கிக் கொண்டிருக்கிறது.*

**எவனோ உயிர்க்கு?**

*ஈண்டு உயிர் மக்களுயிரைக் குறிப்பது. உயிர், மக்களுடல் பெறும்போதே, அது மன உணர்வு என்னும் பகுத்தறிவு விளங்கு தற்குரிய கரணங்கள் அமையப் பெறுகிறது. அக்கரணங்களைக் கொண்ட மனத்தினின்றும் முகிழ்க்கும் பகுத்தறிவே அறம் நிலவுதற்குரிய நிலைக்களமாகும். இப்பேறு மக்களுடல் தாங்கிய உயிர்கட்கே வாய்க்கும். மற்ற உடல் தாங்கிய உயிர்கட்கு வாய்ப்பதில்லை. இதுபற்றியே, 'உயிர்க்கு' என்பதற்கு 'மக்களு யிர்க்கு' என்று பொருள் கூறப்பட்டது.*

*ஆசிரியர் 'மக்களுக்கு' என்னாது, 'உயிர்க்கு' என்றது என்னை? அறம் சிறப்பாக உயிரையே தூய்மை செய்து செய்து, அதை ஒளிபெறச் செய்தலான், ஆசிரியர் நாட்டம் உயிர்மேல் சென்றதென்க.*

*எவனோ என்பதிலுள்ள வினா பிற இல்லை என்பதைத் தெரிப்பது.*

*புத்தர் பெருமான் உயிரின் ஆக்கத்துக்கு அறத்தையே சிறப்பாக அறிவுறுத்திச் சென்றனர். அவர்தம் போதனை களெல்லாம் அறத்தையே குறிக்கொண்டு நிற்கின்றன. பௌத்த சீலங்களை ஆய்ந்தால், அவை ஒவ்வொன்றும் அறத்தின் கூறுபாடாகவே திகழும். சீலங்களின் ஈட்டமே அறம். 'புத்தம் சரணங்கச்சாமி, சங்கம் சரணங்கச்சாமி, தர்மம் சரணங்கசாமி' எனவரூஉம் முத்திற மணிகளுள் 'தர்மம் சரணங்கச்சாமி' என்னும் அறமணி மிளிர்தலை உன்னிப்பார்க்க. (1)*

**32**

***அறத்தினூஉங் காக்கமு மில்லை அதனை***
***மறத்தலி னூங்கில்லை கேடு.***

**பொருள்**

*அறத்தின் ஊங்கு - அறத்தினும் மேம்பட்ட, ஆக்கமும் இல்லை- ஆக்கமும் இல்லை, அதனை - அவ்வறத்தினை, மறத்தலின் ஊங்கு - மறப்பதிலும் மேம்பட்ட, கேடு இல்லை - கேடும் இல்லை.*

**கருத்து**

*அறச்செயல் ஆக்கந் தரும்; மற்றையது கேடு தரும்.*

### விருத்தி

*இப்பாட்டின் கருத்து மேற்பாட்டின் கருத்துக்கு அரண் செய்வது. ஒரு கருத்தையே விளக்கத்தின் பொருட்டு மீண்டும் [1]வழி மொழிந்து கூறுவது மரபு.*

**அறத்தினூஉங்கு....கேடு**

*ஆக்கம் - விருத்தி, பெருக்கம், மேன்மே லுயர்தல்.*

*மறத்தல் - நெஞ்சில் இலதாகச் செய்தல்.*

*கேடு - அழிவு, நாசம், சென்று சென்றிறுகல்.*

*ஆக்கத்தைச் செல்வ மென்றும், கேட்டை வறுமை யென்றுங் கூறலுமாம்; 'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்' - பெரிய புராணம் : திருக்கூட்டச் சிறப்பு : 8.*

*ஆக்கத்திலுள்ள உம்மையைக் கேட்டிலுஞ் சேர்த்துக் கொள்க.*

*அளபெடை எழுச்சியையும் உயர்ச்சியையும் உணர்த்துவது.*

**ஆக்கமும் கேடும்**

*வாழ்வில் ஆக்கஞ் செய்வன பல உண்டு. அவற்றுள் உயிர் போன்றது அறம். மற்றவை யெல்லாம் அதன் உறுப்புக்கள். ஒவ்வோர் உறுப்பு ஒவ்வொரு வித ஆக்கத்தை அளிக்கும். அவற்றின் உயிராகிய அறம் முழு ஆக்கத்தையும் நல்கும். அதனால், 'அறத்தினூஉங்கு ஆக்கமுமில்லை' என்றார்.*

*அறம் முழு ஆக்கத்தை நல்குவதெனில், அதன் மறப்பு முழுக் கேட்டை விளைப்பதென்பது சொல்லாமலே விளங்கும். அதனால், 'அதனை மறத்திலினூங் கில்லை கேடு' என்றார்.*

*அறச்செயலால் ஆக்கம் விளையும். அச்செயலை மறந்த விடத்து ஆக்கம் விளையாதென்று மேற்போக்கிற் கூறலாம். ஆசிரியர் அதை எவ்வாறு கூறுகிறார்? அவர், அறச்செயல் நிகழு மிடத்து ஆக்கம் விளையுமென்றும், அச்செயலை மறந்த விடத்துக்கேடு விளையுமென்றுங் கூறுகிறார். இது சிந்திக்கத் தக்கது. ஆக்கம் விளையாமைக்கும், கேடு விளைவுக்கும் பொருளில் வேற்றுமையுண்டு.*

---

1. வழி மொழிதல் – அநுவாதம். "ஒரு பொருளை முன்னரெடுத்துக் கூறுவது புரோவாதம்: அதனை ஒரு நிமித்தத்தால் பின்னரும் எடுத்துக் கூறுவது அநுவாதம்; உதாரணம் : 'அறத்தினூஉங் காக்கம் எவனோ உயிர்க்கு' 'அறத்தினூஉங் காக்கமு மில்லை' எனவரும்" – பிரயோக விவேகம்.

**அறமும் நெஞ்சும்**

*அறம் கிளருநெஞ்சு ஆக்கத்தில் ஈடுபடும். அறம் கிளராத நெஞ்சின் நிலை என்ன? அஃது ஆக்கத்தில் ஈடுபடாது வாளா கிடக்குமா? அல்லது கேட்டில் ஈடுபடுமா? என்பது கேள்வி. இதற்கு ஆசிரியர் விடை என்ன? கேட்டில் ஈடுபடும் என்பது. இஃது, 'அதனை மறத்தலி னூங்கில்லை கேடு' என்பதால் விளங்குகிறது.*

*அறம் நிலவா நெஞ்சு ஆக்கத்தை விளைவியா அளவில் நில்லாது. அது வாளாகிடத்தல் அரிது. அஃது என்செய்யும்? அது கேட்டை விளைக்கவே முந்தும். இந்நுட்பம் அகஒழுக்க இயலை உணர்ந்தோர்க்கு இனிது புலனாகும்.*

*'அதனை மறத்தலினுங் கில்லை கேடு' என்பது ஆசிரியர் திருவாக்கு. அறத்தை மறத்தலாவது அதை நெஞ்சில் இலதாகச் செய்வது. அறம், நெஞ்சில் நிலவாதபோது, அதன்கண் அறமல்லாத வேறொன்று நிலவும். நெஞ்சு ஒடுங்கும்வரை அது வெறும் பாழாயிராது. அதன்கண் ஏதாவதொன்று ஊர்ந்து கொண்டேயிருக்கும். நெஞ்சில் அறம் வளரும் போது உயிர் ஆக்கம் உறும்; அது வளராத போது அதற்கு மாறுபட்ட வேறொன்று வளரும். அதனால் உயிர்க்குக் கேடு நேரும். நெஞ்சின் நிகழ்ச்சியுள்ளவரை இரண்டும் அற்றநிலை அதற்கு நேராது.*

*கேட்டுக்கு மூலமாயுள்ளதை, ஆசிரியர் அறத்தை மறத்தல் என்று அருளியுள்ளார். அதை வெளிப்படையாகக் குறிக்க ஆசிரியர் மனம் எழவில்லை. தீயதைப் பெரியோர் மனத்திலும் நினையார். அவையல் கிளவி நல்லாசிரியர்பால் எழுதல் அரிது. ஒருவனைக் கெட்டவன் என்று சொல்வதற்குப் பதிலாக நல்லவனல்லன் என்று சொல்வதே நல்லது. அறத்தை 'மறத்தல்' என்றதனால், 'அறத்தை மறத்தல் கூடாது; அது மறக்குந் தகைய தன்று' என்பதை அறிவுறுத்தியவாறாம்.*

*அறம் வளரு நெஞ்சில் மாசு படிதல் அரிது. மாசற்ற நெஞ்சு உயிரின் ஆக்கத்துக்கு (உயர்ச்சிக்கு)த் துணை செய்யும் உயிரின் ஆக்கமாவது அது மேலும் மேலும் ஒளிபெறுவது உள்ளொளி பெருகப் பெருக உயிர் முழு விடுதலையடையும்.*

**அறநெறி**

*இப் பெருநிலையைக் கூட்டுவது அறநெறி. அறநெறி, மனமாசகற்றி, ஒளிபெருக்கி, இறுதியில் விடுதலை நல்குவதாவது.*

அச்செந்நெறியால் உலகில் போராட்டம் நிகழ்தற்கு வாய்ப்பு நேராது.

உலகில் பேராட்டத்தை எழுப்பாது, அமைதியை நிலை பெறுத்தி, உயிர்கட்கு ஆக்கந் தரவல்லது அறமேயாகும். அவ் வறத்தை மறந்த இடத்தில் போராட்டம் எழுந்து, அமைதியைக் குலைத்து, உயிர்கட்குக் கேடு செய்யும். இவ்வுண்மை இக்குறளில் குன்றின் மேலிட்ட விளக்குப்போல் ஒளிர்கிறது. ஆதலால், உயிரின் ஆக்கத்துக்கு அறவாழ்வு வேண்டற்பாலதென்க.

**ஆக்கத்துக்குச் சாதனம்**

அறவாழ்வு உயிருக்கு எங்ஙனம் ஆக்கமளிக்கும்? அதற்குச் சாதனம் வேண்டுமன்றோ? எம் முயற்சிக்குஞ் சாதனம் வேண்டப் படுவது இயற்கை. இங்கே எச்சாதனம் வேண்டற்பாலது? பொது வாக வாழ்வுக்குரிய தேவைகளை ஆராய்ந்தால் அறவாழ்வுக் குரிய சாதனம் இன்னது என்பது விளங்கும்.

வாழ்வின் தேவைகள் பல. அவற்றுள் சிறந்தன இரண்டு. ஒன்று இன்பம்; மற்றொன்று பொருள். இன்பம் பொருளைப் பொறுத்து நிற்பது. பொருளில்லா இடத்தில் இன்பத்துக்கு ஆக்கம் ஏது?

[1]***'வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்***
***நடுவண தெய்த இருதலையும் எய்தும்'***
[2]***'பொய்யில் பொருளே பொருள் மற்றல்ல பிறபொருளே'***
[2]***'பின்னை யாகும் பெரும்பொருள் அப்பொருள்***
***துன்னுங் காலைத் துன்னாதன இல்லையே'***

பொருள் உலகில் எவ்வழியில் ஈட்டப்படுகிறது? இருவழி யிலும் ஈட்டப்படுகிறது; அறவழியிலும் ஈட்டப்படுகிறது; வேறு வழியிலும் ஈட்டப்படுகிறது.

அறவழியில் ஈட்டப்படும் பொருள் மன்பதையில் போராட்டத்தை எழுப்பாது. அஃது அன்பை - அமைதியை இன்ன பிறவற்றை நிலைபெறுத்தும். ஒவ்வொருவரும் அறவழியில் பொருளீட்டப் புகுந்தால் உலகம் அன்பில் இயங்கும்; அமைதியில் பொலியும். அன்பு அமைதி முதலிய அறக்கூறுகள், உயிரை அறவாழ்வில் ஈடுபடுத்தி உயிரின் ஆக்கத்துக்குத் துணை நிற்கும்.

வேறு வழியில் ஈட்டப்படும் பொருள் போராட்டத்தை எழுப்பியே தீரும். போராட்டம் மன்பதையைச் செவ்விய முறை யில் வாழவிடுமா? அஃது உலகை அன்பில் இயங்கச் செய்யாது;

1. நாலடியார் : 114. 2. சிந்தாமணி : 497 : 1923.

அமைதியில் நிலைபெறச் செய்யாது. அது வாழ்வை அரித்து அரித்துக்கேடு செய்யும்; அறவாழ்வை நல்காது.

உலகில் நடைபெறும் போராட்டங்களின் அடிப்படை யான காரணம் என்னை? அதை ஆய்ந்தால் அது பெரிதும் பொருளைப் பற்றியதாகவே யிருக்கும். அறநெறி விடுத்து ஈட்டப்படும் பொருள் பொதுமையில் மக்களுக்குப் பயன்படுவ தில்லை. அப்பொருள் ஒருபால் பெருகியும் மற்றொருபால் அருகியும் நிற்கிறது. பெருகல் அருகல் போராட்டத்தின் விதை களாகின்றன. போராட்டத்தின் விளைவு என்ன? ஆக்கமா? கேடா? கேடு என்று சொல்லலும் வேண்டுமோ? அதுபற்றியே ஆசிரியர் அறம் ஆக்கந் தருமென்றும், அதனை மறத்தல் கேடு தருமென்றும் மன்பதைக்கு அறிவு கொளுத்துகிறார்.

உலகில் போராட்டம் ஒழிய வேண்டுமானால் பொருள் ஒருபால் பெருகியும், மற்றொருபால் அருகியும் போகும் முறை ஒழிதல் வேண்டும். பொருள் எல்லார்க்கும் பொதுவில் (அறவழியில்) பயன்படும் முறை ஓங்கி வளர்தல் வேண்டும். பொதுமை என்பது அறவழியை உணர்த்துவது. பொருள் அறவழியில் ஈட்டப்பட்டால் அஃது அறவழியிற் பயன்பட்டு அறவாழ்வைக் கூட்டும். அதனால் மன்பதைக்குக் கேடு விளையாது. வாழ்வுக்கு இன்றியமையாத பொருளை அறவழி யில் ஈட்டும் முறையும், அவ்வழியிற் பயன்படும் முறையும் கோலப்பெறல் வேண்டும். அதனால் போராட்டம் அருகியே போகும்.

அறத்தால் உயிர் ஆக்கமுறுதற்குப் பொருள் பெருஞ் சாதனம். அஃது இங்கு வருவித்து உரைக்கப்பட்டது. அஃது இக் குறட்பாவில் தொக்கி நிற்கிறது.

அறத்தில் திளைக்கும் உள்ளம் போராட்டத்துக்குரிய பொறாமை முதலியவற்றைத் தவிர்க்கும். பொறாமை முதலியன உறாத உள்ளம் அகப்போரையும் கெடுக்கும்; புறப்போரையுங் கெடுக்கும். அவ்வுள்ளம் உயிரை மேன்மேல் உயர்த்தும். மேன் மேலுயர்தலே ஆக்கமென்பது.

அறத்தில் திளையாத உள்ளம் போராட்டத்துக்குரிய பொறாமை முதலியவற்றிற்குப் பிறப்பிடமாகும். பொறாமை முதலியன அகத்திலும் புறத்திலும் பெரும் பெரும் போராட்டங் களை எழுப்பும். அகப்புறப் போராட்டம் இரு வழியிலும் கேடு செய்யாது வேறென் செய்யும்?

*ஆதலால், அறத்தைச் செய்து ஆக்கம் பெறல் வேண்டு மென்றும், அதைச் செய்யாது கேடடைதல் கூடாதென்றும் இக் குறள் அறைகூவுகிறது. எத்தகைய ஆன்ற அநுபவம் இக்குறளில் செறிந்து கிடக்கிறது 'அறத்தினூஉங் காக்கமு மில்லை; அதனை மறத்தலினூங்கில்லை கேடு.'*

**அளபெடை**

*இக் குறட்பாவின் முதலடியில் அளபெடை உண்மையை யும், இரண்டாம் அடியில் அஃதின்மையையும் ஓர்க. அள பெடையில் எழுச்சியும் உயர்ச்சியும் இருத்தலை ஊன்றி ஊன்றிப் பார்க்க; பார்க்கப் பார்க்க அறத்தில் எழுச்சியும், அதன் நிகழ்ச்சியில் உயர்ச்சியும் கிளர்ந்து நிற்றல் (அளபெடையில் திகழ்வது) இனிது விளங்கும். அளபெடை, 'ஊங்கு' என்று எழுதலையும் உயர்தலையும் உணரலாம். அளபெடை, அறத்தில் எழுச்சிவேண்டும் என்று அறிவுறுத்துகிறது. அளபெடை யின்மை, அறத்தை மறந்தால் வளஞ் சுருங்கிக் கேடு விளைத்து இன்மை புகுத்தலைத் தெரிப்பது. முதலடியில் அளபெடை அமைத்த அறநெஞ்சம் வாழ்க.*

*உலகம் அறத்தில் நின்று ஆக்கம் பெறுவதாக. (2)*

**33**

**(ii) அறத்தின் இயல்**

***மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்***
***ஆகுல நீர பிற.***

**பொருள்**

*மனத்துக்கண் - மனத்தினிடத்திலே, மாசு இலன் ஆதல்- அழுக்கு இல்லாதவனாதல், அனைத்து அறம் - அவ்வளவே அறமாவது, பிற - மற்றவையெல்லாம், ஆகுலநீர - ஆரவாரத் தன்மையுடையன.*

**கருத்து**

*அறமாவது மன மாசற்ற நிலை.*

**விருத்தி**

*மேற்பாட்டிரண்டிலும் அறத்தின் விழுப்பம் சொல்லப் பட்டது. அறம் விழுப்பம் உடையதா என்பதற்கு அதன் இயல் தெரிதல் வேண்டும். அறத்தின் இயல் இப்பாட்டிலும் வரும் பாட்டிலுஞ் சொல்லப்படுகிறது.*

இப்பாட்டுக்குப் பலவகையில் பொருள் விரிக்கப்படுகிறது. அப்பொருளெல்லாம் ஏறக்குறைய ஒரே கருத்துடையன. 'மனத்துக் கண் மாசில னாதல் அனைத்தறம்' என்பதற்கு, 'ஒருவன் தன் மனத்தின்கண் குற்றமில னாதலே எல்லா அறமுமாம்' என்று மணக்குடவர் பொருள் கண்டுள்ளனர்; 'அறஞ்செய்வான் தன் மனத்தின்கண் குற்றமுடையன் அல்லனாக; அவ்வளவே அற மாவது' என்று பரிமேலழகர் பொருள் விரித்துள்ளனர்; 'மனத்துக் கண் மாசிலனாதலாகிய அதுவே அறம்' என்று கூறலுமொன்று.

அறமாவது மனத்தினிடத்திலே அழுக்கில்லாதவனாதல்; 'அவ்வளவே' என்று கோடலும், 'அறன்' என்னுஞ் சொல்லை உள்ளத்தினிடத்தில் வைத்து, 'மனத்தினிடத்தில் அழுக்கில்லாத வனாதல் அவ்வளவே அறமாவது' என்று கோடலும் ஒன்றே, 'அனைத்து' என்பதற்கு அதுவே எனினுமாம்.

**மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்**

மனம் - அந்தக்கரணங்களிலொன்று.

மாசு - அழுக்கு, குற்றம்; 'மனத்தகத் தழுக்கு...' என்றார் சிவவாக்கியர்.

ஆதல் - தொழிற் பெயர்; பரிமேலழகர் கொண்ட பொருள் வியங்கோளின் மேலது; (ஆதல் - ஆக).

அனைத்து - அளவு; அதுவுமாம். 'குறும்பூழ்ப்போர் கண்டேம் அனைத்தல்லது யாதும் - அறிந்ததோ இல்லை'- கலித்தொகை : 95 : 6 - 7; 'ஆங்கு யான் கூறிய அனைத்திற்கு' - குறுந்தொகை : 217 : 4.

**மனத்துக்கண்**

மனத்தைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் முற்றுப்பெற வில்லை. உலகம் உள்ளவரை அவ்வாராய்ச்சி நிகழ்ந்து கொண்டேயிருக்கும். மனம் நினைப்பது என்று மட்டும் எவருங் கூறுவர்.

மனம் பருமையா? நுண்மையா? மனம் பருமையதாயின் ஆராய்ச்சி ஒரு வழியில் முற்றுப் பெற்றிருக்கும். அது நுண்மையதா யிருத்தலான், அதைப் பற்றிய ஆராய்ச்சி வளர்ந்து கொண்டே போகிறது.

மனம் நுண்மையதாயினும் அது தனித்து நின்று வினை யாற்றுவதில்லை. அது பருமையைச் சார்ந்தே வினையாற்றும். அதன் நிகழ்ச்சிக் கேற்றபடியே பருமையும் அமையும்.

கலைகளும், கலைகளின் காரியப்பாடுகளும் கருக் கொள்ளும் இடம் மனமே யாகும். அவை முதலில் மனத்திற் கருக்கொண்டே பின்னரே அறிஞர்வழிப் பருமையில் உருக்கொள்ளும். பருமைக்கு மூலமாகியிருப்பது மனம்.

**மூவகை உடல்**

மூவகை உடலில் மனமும் ஒன்று என்று சொல்லப்படு கிறது. நுண்ணுடல் மனம் என்று சொல்வது ஒரு வகைச் சித்தாந்தம். நுண்ணுடல் (சூக்கும சரீரம்), பருவுடலுக்கும் (தூல சரீ ரத்துக்கும்) முதலுடலுக்கும் (காரண சரீரத்துக்கும்) இடையிலிருப்பது.

பருவுடல் அமைவு, மனத்தின் நிலையைப் பொறுத்து நிற்பது. எண்ணத்துக்கு ஏற்றவண்ணம் பருவுடல் அமைவ தென்பது ஒருசாரார் கொள்கை. எண்ணத்தின் தடிப்பே பருவுடல் என்பது அவர்தம் ஆராய்ச்சியிற் போந்த உண்மை.

மனத்துக்கும் பரு உடலுக்கும் உள்ள தொடர்பை நிறுவிக் காட்டுதற்குப் பல சான்றுகள் தேவையில்லை. ஒன்றே சாலும். மனத்தின் உண்மை (இருப்பு) எதைக்கொண்டு நிறுவப்படுகிறது? பரு உடல் இல்லையேல் - மனத்தின் உண்மையை நிறுவிக்காட்டல் இயலாது. நுண்ணிய மன உண்மை, பருவுடல் கொண்டே நிறுவப் படுகிறது. இதனால் இரண்டுக்கும் உள்ள தொடர்பு நனி விளங்கும். இத் தொடர்பால் மாசு படிதற்கும் நீங்குதற்கும் நிலைக்களனாக மனம் நிற்க நேர்தலால் ‘மனத்துக்கண்’ என்றார்.

**மாசிலனாதல்**

மனத்துக்கு இருகூறு உண்டு. அவை புறம் உள் என்பன. மனத்தின் புறமும் உள்ளும், வீட்டின் புறக்கதவு உட்கதவு போன்றன.

புறமனம் பொறிகளின் வழிப் புறஉலகில் ஈடுபடுகிறது. அவ் வீடுபாட்டால் அதன்கண் பெரிதும் மாசு படிகிறது. புறமனத்தில் மாசு படிந்து கொண்டிருக்கும் வரை உள்மனம் சூம்பியே கிடக்கும். மாசு படியாத முறையில் புறமனம் பொறிகளின்வழிப் புறஉலகில் ஈடுபடுதல் வேண்டும். புறமனமாசு அற அற, உள் மனக்கட்டு அவிழ்ந்து அவிழ்ந்து மலர்ந்துகொண்டே போகும்.

புறமனத் தூய்மை பருவுடலுக்கு ஆக்கஞ் செய்யும். உள்மனத் தூய்மை முதலுடலுக்கு ஆக்கஞ் செய்யும். எதற்கும் மனத்தூய்மை வேண்டும்.

*மனம் பெரிதும் மாசுபடியும் இயல்பினதாதலால், மாசின் மீது கருத்திருத்தி, அதை இலதாகச் செய்தல் வேண்டும் என்பதை வலியுறுத்த, 'மாசில னாதல் ' என்றார்.*

**அனைத்தறம்**

*புறமனத் தூய்மையால் உள்மனம் மலரும். இம்மலர்ச்சியில் விளங்குவது அறம். மனமாசற்ற இடத்தில் அறம் விளங்கும் என்பது. அதுபற்றியே, 'மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறம்' என்றார் ஆசிரியர்.*

*மனம் மாசற்றதாயின், முதலுடலும், பருவுடலும், பொறிகளும், மாசற்றனவாகும்; வாழ்வும் மாசற்றதாகும். மாசற்ற மனத்துக்கு உலகமும் மாசற்றதாகவே இலங்கும்.*

**திருவள்ளுவர் அறம்**

*அறத்தைப் பற்றி உலகிடை எழுந்த மொழிகள் பலப்பல. அவை மலையென உயர்ந்து கிடக்கின்றன; கடலெனப் பரந்து கிடக்கின்றன. அத்துணை மொழிகளைப் பயின்றாலும் அறத்தின் நுட்பம் தெள்ளிதில் விளங்குவதில்லை. அவற்றில் நிலைத்த உறுதியும் ஏற்படுவதில்லை. நந்தமிழ்ப் பெருமான் மிகச் சுருங்கிய மொழியில் சில சொற்களால் அறம் இன்னதென்று திறம்பட விளங்கச் செய்துள்ளனர். சொல் சுருங்கிப் பொருள் பொதிய வைப்பதில் திருவள்ளுவருக்கு ஒப்பான வரும் மிக்கான வரும் இலர் என்று அறுதியிட்டுக் கூறலாம். அறமாவதென்ன? திருவள்ளுவர் எப்படிக் கூறுகிறார்? 'மனத்துக்கண் மாசில னாதல்' என்கிறார். எவ்வளவு சுருக்கம்! அறம் இன்னதென நன்கு புலனாதல் காண்க.*

*'அறமா! அது மலை போன்ற தாயிற்றே! கடல் போன்ற தாயிற்றே' என்று மலைதல் வேண்டா, மருளுதல் வேண்டா என்று ஆசிரியர், 'மனத்துக்கண் மாசில னாதல்; அனைத்தறம்' என்று அருள்கிறார். 'அனைத்தறம்' என்பதிலுள்ள எளிமையை எண்ணுக. 'அறமாவது, மனமாசறல்; அவ்வளவே' என்கிறார். எவ்வளவு சுருங்கியமொழி! மொழி சுருங்கியது - பொருளோ ஆழமுடையது; ஆழியினும் ஆழமுடையது.*

*அறத்தைப் பற்றிப் பலதிறக் கருத்துக்கள் உலகில் உலவுகின்றன. ஈகையை அறமென்போரும் உளர். ஈகை அறத்தின் ஒருகூறு. அறம் முதல். ஈகை ஒரு சினை. ஈகை முழு அறமாகாது. முழு அறமாவது மனமாசற்ற நிலை என்று ஆசிரியர் வழிகாட்டுகிறார். அவ்வழியைக் கண்ணுள்ளோர் காண்பாராக.*

**பிற ஆகுல நீர**

*பிற - மற்றவை; மனமாசினின்றும் பிறப்பவை; அற மல்லாதன; வெளி வேடம் முதலியன; '................. அஃதொழிந்த சொல்லும் வேடமும் அறமெனப்படா' என்றனர் பரிமேலழகர்.*

*ஆகுலம் - ஆரவாரம், ஆடம்பரம், இடம்பம்.*

*நீர - தன்மையன; நீர்மையி னடியாகப் பிறந்த பலவின்பால் முற்று.*

**பிற ஆகுல நீர**

*மனத்துக்கண் மாசின்றிச் சொல்லப்படுவனவும் செய்யப் படுவனவும் அறத்தின்பாற்படுவன. மனமாசுடன் சொல்வனவும் செய்வனவும் அறத்தின்பாற்பட்டனவாகா.இவை ஆடம்பரத் தின் பாற்பட்டன. இன்னோரன்ன கருத்துக்கள் பொதுள, 'பிற ஆகுல நீர' என்றார்.*

*மனத்தின் மாசினைப் போக்க முயலாது வெளிக்கு அறவோர் போல நடிப்போரது செயல் போலியே யாகும். அது. கபட நாடகம்; வெளிவேடம்; "பிறர் அறிதல் வேண்டிச் செய் கின்றனவாகலின், 'ஆகுல நீர' என்றார்" என்பது பரிமேலழகர் குறிப்பு.*

*மனத்தில் மாசுள்ளமட்டும் தன்னலமிருக்கும்; மாசற்றால் தன்னலம் அறும். தன்னலமற்றவர் செயலே அறவினை யாகும். பிற அறவினையாகா. அவை ஆடம்பரங் கருதிச் செய்யப் படுவன.*

**34**

***அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்***
***இழுக்கா இயன்ற தறம்.***

**பொருள்**

*அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும் - பொறாமை ஆசை கோபம் கடுஞ்சொல் ஆகிய நான்கையும் இழுக்கா இயன்றது அறம் - அழித்து நடப்பது அறமாகும்.*

**கருத்து**

*அறமாவது பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கையும் ஒழித்து இயங்குவது.*

**விருத்தி**

*இப்பாட்டு முற்பாட்டினது விளக்கம். அது தொகை: இது வகை, கருத்தில் இரண்டும் ஒன்றே. அங்கே 'மனத்துக்கண்*

மாசில னாதல் அனைத்தறம்' என்றார்; இங்கே அம் மாசுகள் இன்ன இன்ன என்று விளங்கும் முறையில், 'அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் - இழுக்கா இயன்ற தறம்' என்கிறார்.

**அழுக்காறு.... அறம்**

அழுக்காறு - பொறமை ; 'அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம் - பேணாது அழுக்கறுப் பான்' என்பது குறள். 'அழுக்கறுத்த லெனினும் அழுக்காறெனினும் ஒக்கும்'; 'அழுக்கா றென்பது ஒரு சொல்'; 'பிறராக்கம் பொறாமை'- பரிமேலழகர்.

அழுக்கறு (பகுதி); அழுக்காறு, முதனிலை திரிந்த தொழிற் பெயர். அழுக்கு ஆறு என இரண்டு சொல்லாகக் கொண்டு அழுக்குவழி என்று பொருள் கூறுவோருமுளர். (அழுக்கு வழியாவது பொறாமையை எழுப்புவது).

அவா - ஆசை, காமம்.

வெகுளி - கோபம்.

இன்னாச்சொல் - இன்னாத சொல்; இனிமை பயவாத சொல்; கடுஞ்சொல்.

இழுக்கா - கடிந்து, ஒழித்து, நீக்கி, அழித்து; 'இளைசூழ் படப்பை இழுக்கிய ஏனத்து' (காவல் சூழ்ந்த கொல்லைத் தோட்டத்தை அழித்த பன்றியினது)- சிலப்பதிகாரம் : 12 : 24.

இயன்றது - செய்வது, நடப்பது; செய்யப்படுவது, நடத்தப் படுவது என்றுங் கூறலுமாம். 'செம்பு இயன்றன்ன செஞ்சுவர் புனைந்து ('செம்பாற் செய்தாலொத்த செவ்விய சுவர்களைச் சித்திரமெழுதி') - மதுரைக்காஞ்சி: 485.

அழுக்காறு முதலியன அழிந்த இடத்தில் அறம் தானே இயங்கி நடக்குமாதலின் 'இயன்றது' என்பதற்கு நடப்பது என்று பொருள் கொள்ளப்பட்டது. இவ்வாறே மணக்குடவரும் பரிமேலழகரும் பொருள் கொண்டனர்.

**அழுக்காறு....நான்கும்**

மனமாசு பலவகை. அவை இங்கு அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் என்று வகைப்படுத்தப்பட்டிருக் கின்றன. இன்னாச்சொல் மனமாசின்பாற்பட்டதா, மொழி மாசின்பாற்பட்டதா என்னும் ஐயம் பிறக்கலாம். மனமின்றி மொழியுண்டோ? மொழிக்கும் மூலமாக நிற்பது மனமன்றோ? சொல்லும், மனத்தினின்றும் மொழி (வாக்கு) வழிப் பிறப்பதே.

வெகுளியுள்ள இடத்தில் இன்னாச்சொல் இயல்பாகவே பிறந்து கொண்டிருக்கும். அதுபற்றி வெகுளிக்குப் பக்கத்தில் இன்னாச்சொல் வைக்கப்பட்டது.

இன்னாச் செயல் ஏன் குறிக்கப்படவில்லை? வெகுளியால் இன்னாச் சொல் பிறப்பது போல இன்னாச் செயல் பிறப்ப தில்லை. சில இடங்களில் வெகுளி கனன்றுகொண்டிருக்கும்; கடுஞ்சொல் ஒழுகிக் கொண்டிருக்கும்; செயல்மட்டும் எழுவ தில்லை. மனமாசுடைய எல்லாரிடத்தும் கடுஞ்செயல் வெளிப் படையாக எழுவதின்மையான், 'இன்னாச் செயல்' விடப் பட்டது போலும்.

'அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல்' ஆகிய இந்நான்கில் பிற மாசுகளெல்லாம் அடங்கும்.

அழுக்காறு முதலியவற்றைப் பற்றி இங்கே விரித்துக் கூறவேண்டுவதில்லை. இவற்றின் புன்மைகளை விளக்க ஆசிரிய ராலேயே தனித்தனி அதிகாரங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. 'அழுக் காறாமை'யில் அழுக்காற்றின் புன்மையும், 'அவா வறுத்த'லில் அவாவின் இழிவும், 'வெகுளாமை'யில் வெகுளி யின் சிறுமையும், 'இனியவை கூற'லில் இன்னாச் சொல்லின் கடுமையும் விளக்கப்பட்டிருக் கின்றன. ஒரோ வழி நிகழற்பால தாகிய இன்னாச் செயலின் கொடுமை, 'இன்னாச் செய்யாமை' யில் சொல்லப்பட்டிருக்கிறது.

மனமாசுடைய ஒருவர், பிறர் கல்வி செல்வம் முதலிய ஆக்கப்பேறுகளைக் காணும்போது அவரிடம் பொறாமை எழு கிறது; அப்பொருளை அடைய அவா எழுகிறது; அடைதல் இயலாதபோது வெகுளி எழுகிறது; வெகுளி இன்னாச் சொல்லைத் தோற்றுவிக்கிறது; சொல் செயலாக நிகழ்தலும் உண்டு; நிகழாமல் கிடப்பதும் உண்டு. இவை யாவும் அறம் வளர் நெஞ்சில் தலைகாட்டா.

### இழுக்கா இயன்றதறம்

மனத்தில் அழுக்காறு முதலிய மாசுகள் அற்றுவிட்டால், அங்கே அறம் தானே விளங்கி இயங்கும். அம்மனமுடையார் எண்ணுவனவும், பேசுவனவும், செய்வனவும் எல்லாம் அறமய மாகும். அற எண்ணமும், அற உரையும், அறவினையும் வாழ்வுக்கு நலஞ் செய்யும்.

### உடலும் உலகும்

வாழ்வுக்கு உடல் நலனும் வேண்டும்; உலக நலனும் வேண்டும். மனமாசுகள் உடல் நலனுக்குங் கேடு சூழும்; உலக நலனுக்குங் கேடு சூழும்.

அழுக்காறு முதலிய மாசுகள் மனத்துக்கண் படிந்து கிடத்தல் கூடாது. ஏன்? அவை நஞ்சாய் மனத்தை அரிக்கும்; எரிக்கும். அரிப்பும் எரிப்பும் இரத்த ஓட்டத்தைத் தடுக்கும்; நரப்புக் கட்டுக்களைத் தளர்த்தும்; பிணியைப் பெருக்கும்; உடல் நலனுக்கு ஊறு செய்யும்; வாழ்வைப் பாழ்படுத்தும். பாழ்பட்ட வாழ்வினர் எங்ஙனம் இன்பம் நுகர வல்லவராவர்? அன்னார் பிறவிப் பேற்றை இழந்தவராவர். ஆதலால், அழுக்காறு முதலிய மாசுகளை ஒழிக்கவே முயலுதல் வேண்டும்.

அழுக்காறு முதலிய மாசுகள் அற்ற மனத்தில் அற அமிழ்தம் தேங்கும். அஃது இரத்த ஓட்டத்துக்குத் துணை செய்யும்; நரம்பைக் கட்டுப்படுத்தும்; உடலை வளஞ் செய்யும்; நோயற்ற வாழ்வை நல்கும். நோயற்ற வாழ்வினர் இன்பத்தை எளிதில் நுகர வல்லவராவர். இன்ப நுகர்ச்சி பிறவிப்பேற்றை வழங்குவதாகும்.

ஒவ்வொருவரும் மனமாசற்ற அறவோராயின் உலகம் அறமயமாகும்; உலகில் துன்பம் இராது; இன்பம் நிலவும்; உலகம் பலவழியிலும் நலமுறும் என்று சொல்லலும் வேண்டுமோ? உலகம் அற அமிழ்தையுண்டு நலம் பெறின் புத்தர் பெருமான் கண்ட கனவெல்லாம் நினைவாகும்.

### புறத்துக்குப் பொருள் - அகத்துக்குச் சீலம்

இப்பெருநிலையை உலகம் என்று பெறும்? எப்படிப் பெறும்? என்று எவரும் மலைவுற வேண்டுவதில்லை. உலகி லுள்ள அரசுகளெல்லாம் அறவழி இயங்கின், உலகம் அறமய மாதல் ஒருதலை. அரசுகள் அறவழி இயங்காமையான், அழுக்காறு முதலிய மாசுகள் உலகை அரித்துத் தின்கின்றன.

அழுக்காறு முதலியவற்றை எழுப்புவது எது? பொது வாகப் பொருள் என்று கூறலாம். பொருளுடையார் இன்பம் நுகர்தலும், பொருளில்லார் இன்பத்துக்கு இடர்ப்படுதலுங் கண்கூடு. இடர்ப்பாடு அழுக்காறு முதலியவற்றை எழுப்புகிறது. அறவழியில் பொருளைப் பெற்று இன்புறுதற்கு அரசு நன்முறை கோலிவிடின், மன்பதையில் அழுக்காறு முதலிய மாசுகள் படிதல் அரிதாகும். அற ஆட்சியினின்றும் அறவாழ்வு அரும்பும்.

'பொருள் நிலையை அரசுகள் ஒழுங்கு செய்துவிடுவதால் மட்டும் அழுக்காறு முதலியன அறவே ஒழிந்து போகுமா' என்று சிலர் வினவலாம். பெரிதும் ஒழியும் என்று விடையிறுக் கலாம். எஞ்சியவற்றைச் சீலங்கள் ஒழிக்கும். புறஉலக அற வொழுக்கத்தைப் பொருள் நிலைச் செம்மை ஓம்பும் என்பதில்

ஐயமில்லை. அதனால் அகஉலகம் சீலங்களை நாடி ஒழுகுவ தாகும். இது பற்றிய விரிவுரை இங்கே வேண்டுவதில்லை.

### அறமும் தற்பெருமையும்

அழுக்காறு முதலிய மாசுகள் அற்ற இடத்தில் அறம் விளங்கித் தானே நடக்கும் என்று ஆசிரியர் அருளியுள்ளமை யால், அவ்விடத்தில் கரவு இடம் பெறாதொழியும். அறம் மல்குமிடத்திலும். அறவோர் மலியுமிடத்திலும் கரவுக்கு இடம் ஏது? கரவற்ற அற மனம் தற்பெருமையை- ஆரவாரத்தை- விரும்புமா? விரும்பாது. அங்கே அறத்துக்கென்றே அறம் நடைபெறம்.

> [1]'மனுஷர் காண வேண்டுமென்று முன் உங்கள் தர்மத்தை நிறைவேற்றாதபடி எச்சரிக்கையாயிருங்கள்; நிறைவேற்றினால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை.
>
> ஆகையால், நீ தான தர்மம் செய்யும்போது மனுஷர் புகழ வேண்டுமென்று மாயக்காரர் ஆலயங்களிலும் தெருக்களிலும் செய்வது போல உனக்கு முன் தாரை ஊதுவியாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்தா யிற்றென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன். நீயோ தான தர்மம் செய்யும்போது உன் தர்மம் மறைந் திருக்கும்படி, உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கடவது. அப்பொழுது மறைந்திருக்கிறதைப் பார்க்கிற உன் பிதாவே உனக்குப் பதிலளிப்பார்'

எனவரூஉம் கிறிஸ்துபெருமான் திருமொழியைச் சிந்திக்க.

பேர் புகழ் கருதிச் செய்யப்படுவது அறமாகாது. அஃது ஆரவாரமேயாகும். அறமாவது அழுக்காறு முதலிய மாசுகள் அற்றநிலை; அதாவது 'மனத்துக்கண் மாசிலனாதல்'

### அறமே கடவுள்

அறமாவது என்ன? மாசற்ற ஒன்று. அறம் மாசற்ற மனத்தில் விளங்குவது. மாசற்ற ஒன்றையே கடவுள் என்று கடவுள் நெறியினர் கூறுகின்றனர். கடவுளாவது மாசுகளை யெல்லாம் கடந்து நிற்கும் ஒன்று. கூர்ந்து உன்னினால் அறமும் கடவுளும் ஒன்றே என்னும் முடிவிற்கு வரலாம். இம் முடிவிற்கு வந்த பெரியோரும் உளர். புத்தர் பெருமான் அறத்தைக் கடவுளாக வலியுறுத்திச் சென்றார். அழுக்காறு முதலிய மாசு

1. மத்தேயு : 6 : 1–4.

*களைச் சீலங்களால் போக்கி, அறமென்னுஞ் செம்பொருளைப் பெற முயல்வது அறிவுடைமையாகும். மேற்பாட்டிலும் இப் பாட்டிலும் அறக்கடவுள் விளங்குதல் காண்க. (4)*

**(iii) அறச் செயல்**

**35**

***செயற்பால தோரும் அறனே ஒருவற்***
***குயற்பால தோரும் பழி.***

**பொருள்**

*ஒருவற்கு - ஒருவனுக்கு, செயற்பாலது - செய்யற்பான்மை யது, ஓரும் அறனே - ஆராய்ந்து உணரும் அறமே, உயற்பாலது - விடற்பான்மையது, ஓரும்- பழி - ஆராய்ந்து உணரும் பழியே.*

**கருத்து**

*செய்யத்தக்கது அறமே; விடத்தக்கது பழியே.*

**விருத்தி**

*ஒன்றன் இயல் உணர்ந்த பின்னரே அதன்கண் ஈடுபடுதல் சிறப்பு. அவ்வீடுபாடே வாழ்வுக்கு நலஞ் செய்யும். ஈண்டு அறஇயலைத் தொடர்ந்து அறச்செயல் நிற்றல் காண்க.*

**செயற்பாலது.....பழி**

*செயல் - செய்யல், செய்தல்.*

*பாலது - பான்மையது, தன்மையது, தக்கது.*

*அறனே - அறவினையே, நல்வினையே; அறச்செயலே, நற்செயலே.*

*உயல் - உய்யல், தப்புதல், நீங்குதல், விடல்; 'ஈங்கிவணுறைத லும் உய்குவ மாங்கே' 'தெரிதீங்கிளவி தெருமரலுயவே' - குறுந்தொகை: 11 : 2; 250 : 6. 'உய்த்தோர் பூசலுடனிட்டன வன்றே' - சிந்தாமணி : 2481*

*பழி - பழியே; அறனே என்பதைக் கொண்டு பழியுடன் ஏகாரத்தையுங் கூட்டுக.*

*ஓரும் - ஆராய்ந்துணரும்; 'மின்ஒருங் கண்ணாக'- கலித்தொகை : 49 : 12.*

*'ஒரும்' இரண்டையும் அசைநிலையாக் கொண்டனர் பழைய உரையாசிரியர். சுருங்கிய குறட்பா ஒன்றில் ஒரே அசை*

நிலையை இரண்டு முறை பெய்ய ஆசிரியர் உளங்கொள்வரோ என்பது சிந்திக்கத்தக்கது.

## செயற்பாலதோரும் அறனே

செயல், முக்கரணங்களில் மெய்யினின்றும் அரும்புவது. மனம் நினைக்கிறது. நினைவு மெய்யின் வழிச் செயலாக முகிழ்க் கிறது. நினைவின்றிச் சொல்லோ செயலோ மருவாது. செயலுக்கு அடிப்படை நினைவே. நினைவின் பருமையே செயல். நினைவி னின்று எழுந்த செயலே ஈண்டுக் குறிக்கப்பட்டது. செயலை மட்டும் ஏன் சிறப்பாகக் குறிப்பிடல் வேண்டும்?

சிலர் ஒன்றை நினைப்பர்; பேசுவர்; ஆனால் அதைச் செயலில் நிகழ்த்தாதொழிவர். செயலின்றியும் நினைவும் பேச்சும் நிகழ்வதுண்டு. நினைவின்றிப் பேச்சோ செயலோ நிகழ்வதில்லை. செயலில் நினைவும் பேச்சும் அடங்கும். நினைவும் பேச்சும் அடங்கிய செயலே ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கப்பட்டது. மன மொழி மெய் மூன்றும் ஒன்றிய செயல் என்றபடி.

## மெய்ம்மையும் செயலும்

முக்கரணமும் அறத்தின்வழி இயங்கல் வேண்டுமென்பது இயற்கை இறையின் நோக்கு. அந்நோக்குடன் கரணங்கள் அமைக்கப்பட்டன. முக்கரணமாவன : உள்ளம் - வாய்-மெய் என்பன. அவைகளினின்றும் உள் மை (உண்மை), வாய்மை, மெய்மை பிறத்தல் வேண்டும். பிற பிறத்தல் இயற்கையாகாது. இது முன்னரும் விளக்கப்பட்டது.

மெய்யினின்றும் முகிழ்க்கும் மெய்ம்மையே செயல் என்பது. ஆகவே, செயலெல்லாம் எத்தன்மையனவாயிருத்தல் வேண்டும்? மெய்ம்மையாகவே இருத்தல் வேண்டும். மெய்ம்மை, அறக்கூறுகளெல்லாம் விளங்கும் ஒன்று. 'பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற - செய்யாமை செய்யாமை நன்று' எனவரூஉம் ஆசிரியர் திருவாக்கை ஓர்க.

மெய்யினின்றும் மெய்ம்மையே பிறத்தல் வேண்டும். மெய்யினின்றும் பிறப்பது செயல். இதனால் மெய்ம்மையும் செயலும் ஒன்றே என்பது பெறப்படுகிறது. மெய்ம்மை அறக்கூறு அறக்கூறுகளெல்லாம் அடங்கும் ஒன்று. ஆகவே, மெய்யினின் றும் முகிழ்க்கும் செயலெல்லாம் அறத்தின் தன்மையனவா யிருத்தல் வேண்டுமென்க. எனவே, செயற்பாலது எது? அறமே என்று விளக்கலும் வேண்டுமோ? இதை, 'செயற்பால தோரும் அறனே' என்றார் ஆசிரியர்.

### உயற்பாலதோரும் பழி

'செயற்பால தோரும் அறனே' என்றருளிய ஆசிரியர் அவ்வளவில் நில்லாது, 'உயற்பால தோரும் பழி' என்றும் அருளினர். இஃது உன்னத்தக்கது.

செய்யத் தக்கது அறமெனில் செய்யத் தகாதது ஒன்றிருத்தல் வேண்டுமன்றோ? அஃது எது? அது பழி என்பது. பழியாவது அறமல்லாதது.

உலகில் நலமும் உண்டு; தீமையும் உண்டு. இரண்டிற் கொள்ளற்பாலது எது? தள்ளற்பாலது எது? கொள்ளற்பாலது நலம்; தள்ளற்பாலது தீமை. நலம் - அறம்; தீமை- பழி. பழியை நீக்கி அறத்தைச் செய்யவேண்டுமென்பது கருத்து. 'செயற்பாலது அறனே; உயற்பாலது பழியே.'

### மக்களின் குறைபாடு

மக்கள் குறைபாடு உடையவர்கள். அவர்களிடை அறவினை மறக்கப்படும் நிலையும் உறலாம். அவ்வேளையில் அவர்கள் நெஞ்சு அறமல்லாத பழியில் விழுதலும் நேரலாம். அறம் நிலவாத இடத்தில் பழி சூழ்வது இயல்பு. பழியுடன் போராடி அதை விடுத்து அறக் கரையேற முயலல்வேண்டும்.

பழி சூழாதவாறு மக்கள் வாழ்வது சிறப்பு. அறியாமை காரணமாகப் பழி சூழநேரின், அது கால்கொள்ளாதவாறு, அதைத் தடுத்து விடுத்து நீங்குதல் வேண்டும்.

'உய்யல்' என்னுஞ் சொற்பொருளை நோக்குக. அது, பழி செய்யாது தப்பி நிற்றல், பழி சூழநேரின், அதனை விடுத்து நீங்கல் என்னும் இரண்டு பொருள் உளங்கொண்ட ஒரு சொல்.

### ஓரும்

வெறும் அறனெனக் கூறாது - வெறும் பழியெனக்கூறாது -'ஓரும் அறன்' என்றும், 'ஓரும் பழி' என்றும் கூறியுள்ளமை உன்னற்பாலது. அறன் இன்னதென்றும், பழி இன்னதென்றும் ஓராது நடப்பது அறிவுடைமையாகாது. இரண்டையும் நன்கு ஆராய்ந்து தெளிந்து நடப்பது அறிவுடைமை யாகும்.

ஒவ்வொருவர்க்கும் மனச்சான்று உண்டு. அம் மனச்சான்று பண்பட்டதாயிருத்தல் வேண்டும். கற்றல் கேட்டலானும், ஆராய்ச்சியானும், சீலத்தானும், இன்ன பிறவாற்றானும் தெளிவுற்ற அறிவால் விளங்குவது பண்பட்ட மனச்சான்று. மற்றையது பண்படாதது. பண்படாத மனச்சான்றால் பிறழ்வு நேரினும் நேரும்.

தெளிவுற்ற அறிவு, 'இன்னது செய்யத்தக்கது; இன்னது செய்யத்தகாதது' என்று மனச்சான்று வழி உயர்த்தும். அம் மனச் சான்று வழி நின்றொழுகிச் செயல் புரிவது அறத்தின்பாலதாம்; மற்றையது பழியின்பாலதாம்.

ஆராய்ந்து உணர்ந்து செயற்பாலது அறம்; ஆராய்ந்து உணர்ந்து உயற்பாலது பழி. இரண்டுக்கும் ஆராய்ந்துணரும் பான்மை வேண்டும் என்பார் 'ஓரும்' 'ஓரும்' என்றார்.

**ஒருவற்கு**

ஒவ்வொருவரும் அறவினை புரிதல் வேண்டும் என்பார் 'ஒருவற்கு' என்றார். ஒவ்வொருவரும் அறவினை புரிந்ததால் அவ்வொவ்வொருவரால் ஆக்கப்பட்ட உலகம் அறமயமாகும். பண்டை நாளில் ஒவ்வொருவரும் தனித்தனியே அறவினையில் கருத்துச் செலுத்தி வந்தனர். அக்கருத்துச் செலுத்தல் இடை நாளில் வீழ்ந்துபட்டது. வீழ்ந்துபட்டமைக்குக் காரணம், இக் கால நாகரிகம், இக்காலக் கல்வி, இக்கால வழக்கவொழுக்கம் முதலியவற்றைக் கூறலாம். அடிப்படையான காரணம், வேறொன்றுண்டு. அஃது, உலகியல்கள் பெரிதும் கட்சி வழி களில் நடைபெறுவ தென்பது. கட்சி, தனிப்பட்டவர் நிலையை மறக்கவும் மறைக்கவும் செய்கிறது. அதனால் தனித்தனி மனிதர், அறங் காப்பது ஒழிந்தது, தனித்தனி மனிதர் அறங்காவா தொழிந்தால், உலகம் எங்ஙனம் அறவண்ணம் ஆதல்கூடும்? உலகம் அறவண்ணமாகப் பொலிய வேண்டுமானால் ஒவ் வொருவரும் அறச் செயலில் ஈடுபடுதல் வேண்டுமென்னுங் கருத்துடையவர் திருவள்ளுவர். ஆகவே, 'ஒருவற்கு' என்பது, தனித்தனி மனிதர் அறஞ்செய்தலில் ஈடுபடுதல் வேண்டு மென்பதை வலியுறுத்துவதென்க. 'அறஞ்செய விரும்பு' என்னுந் தாய்மொழி தனித்தனி மனிதரை உணர்த்துவதை ஓர்க.

வாழ்வில் பலதிறச் சோதனைகள் நிகழ்வதுண்டு. சோதனை களை எழுப்பும் பேய்கள் பல. அவற்றுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கன இரண்டு. ஒன்று செல்வம்; மற்றொன்று அதிகாரம். இரண்டும் பொதுவாக அறவினைக்குக்கேடு சூழ்வனவாம். இரண்டும் உடையாருள் மிகச் சிலர் பழிக்கு அஞ்சுவோராகவுமிருப்பர். எதற்கும் புறனடை உண்டன்றோ? பொதுவாகச் செல்வமும் அதிகாரமும் அறவினைக்குக் கேடு சூழ்ந்து பழிபாவங்களைப் பெருக்குவனவாம். செல்வமும் அதிகாரமும் ஒரே பக்கம் பெருகாதவாறு காக்கப்படின், அறவினைக்குக் கேடு நேராது; பழி பாவங்களும் பெருகமாட்டா.

*'ஒருவற்கு' என்பது பொதுமை அறத்தைக் குறிக்கொண்டு நிற்பது.*

*செயலெனில் அஃது அறச் செயலாயிருத்தல் வேண்டுமென்பதும், தப்புதலெனில் அது பழியினின்றுந் தப்புதலென்பதும் இத்திருக்குறளின் உள்ளக்கிடக்கை. செயல், அறவழியில் நிகழாதொழியின், அங்குப் பழி குடிபுகுந்து இடர் விளைக்கும். ஆதலால், செயல் அறவழியில் நிகழுமாறு வாழ்வு நடாத்தல் வேண்டுமென்க.* *(5)*

**36**

***ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே***
***செல்லும்வா யெல்லாஞ் செயல்.***

**பொருள்**

*அறவினை - அறச் செயலை, ஒல்லும் வகையான் - இயலும் விதத்தால், ஓவாதே - ஒழியாதே, செல்லும் வாய் எல்லாம் - செய்யும் இடங்களிலெல்லாம், செயல் - செய்க.*

**கருத்து**

*இயலும் அளவில் அறவினை செய்க.*

**விருத்தி**

*மேலே செயற்பாலது அறனே என்னப்பட்டது. இங்கே அச் செயல் நிகழ்த்தும் வகையும் முறைமையும் சொல்லப்படுகின்றன.*

**அறவினை**

*அறம் - மனமாசற்ற நிலை.*

*வினை - செயல்.*

*அறவினை - அறத்தினை அடிப்படையாகக் கொண்ட வினை; அறத்தினின்றும் முகிழ்க்கும் வினை; அறச்செயல்.*

**அறவினை**

*அறம் ஒரு நிலை. அதனையடைதற்குரிய செயல் அறவினை என்பது. அறவினைகள் பலதிறத்தன. அவற்றிற் சில குறிக்கத் தக்கன. அச்சில: இல்லறம் நடாத்தல், பிள்ளைகளை வளர்த்தல், அன்பு செலுத்தல், விருந்தோம்பல், ஒப்புரவு, ஈகை, அழுக்காறாமை, அவாக்கொள்ளாமை, வெகுளாமை, இன்னாச் சொல்லாமை - செய்யாமை, கொல்லாமை, பொய்யாமை முதலியனவும், இன்ன பிறவுமாம்.*

**ஒல்லும் வகையான் ஓவாதே**

*ஒல்லும் - இயலும்; 'அவ்வரைத் தாங்கல் ஒல்லுமோ' - குறுந்தொகை : 256 : 5.*

*ஒல்லும் - பொருந்தும் எனினுமாம் : 'நீளிடைப்படுதலும் ஒல்லும்' - கலித்தொகை : 36 : 22.*

*வகையான் - விதத்தால் ; முறையால்.*

*ஒல்லும் வகையான் - இயலும் விதத்தால், இயன்றவரை, கூடியமட்டும்; பொருந்தும் முறையால், தக்கவாறு என்னலுமாம்.*

*'ஒல்லும் வகையான்' என்பதற்கு, 'இயலுந் திறத்தானே' என்று பொருள் கூறி, 'இயலுந் திறம் என்பது மனமொழி மெய்களும், பொருளும்' என்ற குறிப்பும் பொறித்துள்ளனர் மணக்குடவர்.*

*ஓவாதே - ஒழியாதே, இடைவிடாமல், நாடோறும்.*

**ஒல்லும் வகையான்**

*மக்களெல்லாரும் ஒரே வாய்ப்புடையவரா யிரார். எல்லாரிடத்திலும் ஒரேவித அறவினையை எதிர்பார்த்தலா காது. அதுபற்றியே, 'ஒல்லும் வகையான்' என்றார்.*

*அறவினையைச் சிலர் மனத்தளவிலும், சிலர் சொல்லளவி லும், சிலர் செயலிலும் நிகழ்த்தும் வாய்ப்புடையவராயிருப்பர். அவரவர் தத்தம் வாய்ப்புக்கேற்ற அளவில் அறவினை நிகழ்த்து வது முறைமை. அஃதே அறக் கடவுளுக்கு ஏற்கும். அறவினையை வாழ்வில் நிகழ்த்தும் வாய்ப்புடையார் மனத்தளவிலும், சொல்லள விலும் நின்று விடுவது கரவாகும். கரவு அறவினையாகாது. வாழ்வில் அவரவர் தத்தம் அளவுக்கேற்ற முறையில் அறவினை நிகழ்த்துவது பொருத்தம். வாய்ப்பின் அளவுக்குக் குறைந்து நிகழ்த்தும் வினை அறத்தின்பாலதாகாது. வஞ்சனையின்றி அவரவரர் தத்தம் வாய்ப்புக்கேற்ற அளவில் வினைபுரிவது அறத்தின்பாலதாகும். 'ஒல்லும் வகையான் அறவினை செய்க' என்பது ஆசிரியர் ஆணை.*

*'ஒல்லும் வகையான்' என்பதற்குப் 'பொருந்தும் முறை யால்' என்ற பொருளும் பொருத்தமுடையது என்று சொல்லப் பட்டது. அதைப்பற்றி விரிவுரை வேண்டுவதில்லை. உலகில் பொருந்தும் முறை பொருந்தா முறையில் செய்வது நல்லது. எண்ணம் நல்லதாயினும் கைக்கொள்ளும் முறை பொருந்தாத தாயின், அதனால் கேடு நேரினும் நேரும். முறை பெரிதும் கவனிக்கற்பாலது. ஒருவர் அறவினையாற்ற அவாக் கொள்ள லாம். அவா மட்டும் போதாது. அதை நிறைவேற்றுதற்குப்*

பொருந்தும் முறை காண முயல்வது அறிவுக்கழகு. பொருந்தும் முறை கண்டு அறவினை புரிவது நலம்.

**ஓவாதே**

ஒல்லும் வகையான் அறவினை நிகழ்த்தல் வேண்டும். அதற்கெனக் காலவரையறை ஏற்படுத்திக் கொள்ளலாகாது. அறவினை எப்பொழுதும் நடைபெறல் வேண்டுமென்பது ஆசிரியர் கருத்து. 'ஓவாதே' என்பது இடைவிடாமையை உணர்த்துவது.

அறவினை ஏன் ஓவாது நிகழ்தல் வேண்டும்? இடைவிட்டு நிகழ்ந்தாலென்ன? 'ஓவாமை' மனமாசை அகற்றத்துணை செய்யும்; இடையீடு அத்துணை செய்யாது.

மனமாசற்ற நிலை அறம் என்பது. அறவினை அந்நிலை யைக் கூட்டவல்லது. அதற்கு அறவினை இடையீடின்றி நிகழ்தல் வேண்டும்.

மனத்துக்கு இருவித இயல்புண்டு. ஒன்று, மனம் ஒன்றில் ஈடுபட்டால் அதன் வழியே சென்று சென்று அதன் வண்ணமா வது; மற்றொன்று, அதன் இடையிடை வேறு ஏதேனும் நுழைந் தால் அதன் நிலை கலங்கப் பெறுவது. ஆதலால், மனத்தை ஒருவழியில் நடத்திப் பண்படுத்துவது சிறப்பு.

மனம் அறவினையில் ஈடுபட்டு, மாசின்மை பெற்றுவரும் போது, அதனிடை வேறொன்று கலக்க நேர்ந்தால், அதன் மாசு கழிவது அரிதாகும். பன்னெடுநாள் அறவினையில் ஈடுபட்ட மனமும், சிறிது நேரம் வேறொன்றில் ஈடுபடுமாயின், அதன் நிலை குலைந்து போகும். ஒருகலப் பாலைக் கெடுப்பதற்கு ஒரு துளி நஞ்சு சாலுமன்றோ? மனத்தின் இயலை நன்குணர்ந்தே ஆசிரியர், 'ஓவாதே அறவினை செய்க' என்றார்.

**செல்லும் வாயெல்லாம் செயல்**

செல்லும் - செய்யும்; செய்தற்குரிய; எய்தும்; போகும் என்னலுமாம்.

வாய் - இடம்; வழியுமாம்.

செயல் - செய்க: வியங்கோள்.

செல்லும் வாய் எல்லாம் - செய்யும் இடங்களிலெல்லாம், அறஞ் செய்தற்கு எதிர்ப்படும் இடங்களிலெல்லாம், அறவினை நிகழ்த்தற்குரிய இடங்களிளெல்லாம்; 'செய்யல் ஆம் இட மெல்லாம்' என்றனர் மணக்குடவர்; 'செல்லும் வாய்' என்பது அறஞ் செய்தற்கு இடமாகிய பல இடங்களும்' என்பது அவர்தங் குறிப்பு; 'எய்து மிடத்தானெல்லாம்' என்று

பரிமேலழகர் பொருள் கண்டு, 'எய்துமிடமாவன; மனம் வாக்கு காயம் என்பன. அவற்றாற் செய்யும் அறங்களாவன: முறையே நற்சிந்தையும், நற்சொல்லும், நற்செயலும் என இவை' என்று விளக்கமுஞ் செய்து காட்டினர். செல்லும் (போகும்) இடங்களிலெல்லாம் என்று நேர் பொருள் கொள்வோருமுளர்.

### செல்லும் வாயெல்லாம் செயல்

அறவினை 'ஒல்லும் வகையான்' 'ஓவாது' 'செல்லும் வாயெல்லாம் செயல்' என்று ஆசிரியர் அருளியிருத்தல் கருதற்பாலது. அறவினை நல்லது நல்லது என்று அதை வழி துறையின்றிச் செய்யப் புகுதல் கூடாது. அதைச் செய்தற்குரிய இடங்களிலேயே செய்தல் வேண்டும். இதனையே ஆசிரியர் ஈண்டு வலியுறுத்தியுள்ளனர்.

அறவினையைச் செய்தற்குரிய இடங்களில் செய்யின் அதனாலாய பயன் விளையும்; மற்ற இடங்களில் செய்யின் அதனாலாகும் பயன் விளையாது. மருந்து எவர்க்கு வேண்டும்? நோயாளிக்கா? நோயில்லாதார்க்கா? நோயாளிக்கே மருந்து வேண்டும். அதேபோல் அறவினை, வேண்டப்படும் இடத்திலேயே செய்யப்பெறல் வேண்டும்; மற்ற இடங்களில் செய்யப் பெறலாகாது.

செய்யத்தக்க இடங்களில் அறவினை செய்வது அறிவுடைமையாகும்; தற்பயன் கருதாமையுமாகும். மற்ற இடங்களில் அறவினை செய்வது அறியாமை; அறிவுடன் அவ்விடங்களில் அறவினை செய்யப்படின், அச்செயல் தற்பயன் கருதியதாகும். ஆதலால், அறவினை செய்யத்தக்க இடங்களிற் செய்யப்பெறல் வேண்டும்.

அறம் ஓவாமே செய்யப்பெறல் வேண்டுமென்றும், அஃது ஒல்லும் வகையான் செல்லும்வாயெல்லாம் செய்யப் பெறல் வேண்டுமென்றுங் கொள்க. (6)

## (iv) அறப்பேறு

**37**

***அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது***
***பொன்றுங்கால் பொன்றாத் துணை.***

**பொருள்**

அன்று அறிவாம் என்னாது - அன்றைக்குப் பார்த்துக் கொள்வோம் என்று சொல்லாது, அறம் செய்க - (இன்றே) அறத்தைச் செய்க, மற்று அது - பின்னே அவ்வறச் செயல்,

பொன்றுங்கால் பொன்றாத் துணை - இறக்குங் காலத்து அழியாத் துணையாகும்.

**கருத்து**

அறநினைவு தோன்றும்போதே அறஞ் செய்யத் தொடங்குக; அஃது அழியாத் துணையாகத் தொடர்ந்து வரும்.

**விருத்தி**

அறச் செயல் ஏன் ஆற்றுதல் வேண்டும்? அடைவு ஒன்றிருத்தல் வேண்டுமன்றோ? அடைவே பேறு என்பது. பேறு இது முதல் நான்கு பாட்டானுஞ் சொல்லப்படுகிறது.

**அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க**

அன்று - அன்றைக்கு, இறக்கும்போது, முதுமையில், பின்னே; சேய்மையைக் குறிப்பது.

அறிவாம் என்பது ஈண்டுப் பார்த்தலின் மேற்று; உலக வழக்கு.

'அன்றறிவாம்' என்பது, 'அன்றைக்குப் பார்த்துக் கொள்ள லாம்' என்ற உலக வழக்கினின்றும் பிறந்தது.

அறவோர் ஒருவர் ஓர் இளைஞரைப் பார்த்து, 'அறஞ் செய்க' என்று கூறுங்கால், அவ்விளைஞர், 'இப்பொழுதா? அப் பொழுது (பின்னே) பார்த்துக் கொள்ளலாம்' என்று பதிலி றுப்பது பொது வழக்கு. இவ்வழக்கு ஈண்டு ஆசிரியர் வாக்கில், 'அன்றறிவாம்' என்று போந்தது.

என்னாது - என்று சொல்லாது; என்று நினையாது என்னலுமாம்.

சொல் எண்ணத்தினின்றும் பிறப்பது. சிலர் உள்ளதை வெளிப்படையாகச் சொல்லாது, அதை எண்ணத்தளவில் நிறுத்திக் கொள்வதுண்டு.

அறம் - அறத்தை, அறவினையை, அறச்செயலை.

அறஞ் செய்க; அறத்தை இன்றே செய்க. 'அன்று' என்பதைக் கொண்டு 'இன்றே' என்பது வருவிக்கப்பட்டது.

**அன்றறிவாம் என்னாது**

நீண்டகாலம் வாழப்போவதாகக் கருதிக் கொண்டு, 'அன்றறிவாம்' என்று சொல்வது மடமை. மரணத்தின் வருகைக் குக் காலக் குறிப்பில்லை; கால எல்லையுமில்லை. அஃது எப் பொழுதேனும் வரும்; திடீரென வரும்; முன்னறிக்கை யின்றியும்

வரும். [1]'நெருந லுளனொருவன் இன்றில்லை யென்னும் - பெருமை யுடைத்திவ் வுலகு', [2]'இன்றுளேன் நாளை யில்லேன்' என்பன ஆன்றோர் அநுபவ மொழிகள்.

ஒவ்வொருவரும் முதுமை எய்தியே இறத்தல் வேண்டும் என்னும் நியதியில்லை. பலவற்றிற்கு நியதி உண்டு; மரணத்துக்கு மட்டும் நியதியில்லை. மரணம் எவர்மீதும் எச்சமயத்திலுங் செல்லும்.

'மற்றறிவாம் நல்வினை யாம்இளையம் என்னாது, கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்மின், முற்றியிருந்த கனியொழியத் தீவளியால், நற்காய் உதிர்தலும் உண்டு' என்று நாலடியார் கூறுவது காண்க.

### அறஞ் செய்க

கூற்றுவன் எப்பொழுதேனும் வருவன். அவன் குழந்தை யென்றும் பாரான்; இளைஞரென்றும் பாரான்; வறிஞரென் றும் பாரான்; செல்வரென்றும் பாரான்; தோட்டியென்றும் பாரான்; தொண்டைமா னென்றும் பாரான். அவன் நினைத்த போது உடலையும் உயிரையும் பிரித்துவிடுவன். ஆதலால், 'அன்றறிவாம் என்னாது', என்றும் அறஞ் செய்த வண்ண மிருத்தல் வேண்டும். இதுபற்றியே 'அன்றறிவாம் என்னாது அறஞ் செய்க' என்று ஆசிரியர், உலகுக்கு அறிவு கொளுத்தலானார்.

***[3]'தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்***
***ஈற்றினம் பெண்டிர் ஆற்றாப் பாலகர்***
***முதியோ ரென்னான் இளையோ ரென்னான்***
***கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பஇவ்***

***வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்***
***கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து***
***மிக்க நல்லறம் விரும்பாது வாழும்***
***மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ'***

***[4]'இளமையு நில்லா யாக்கையு நில்லா***
***வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா***
***புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்***
***மிக்க அறமே விழுத்துணை யாவது'***

### மற்றது பொன்றுங்கால் பொன்றாத்துணை

மற்று - பின்னே.

---

1. வள்ளுவர். 2. அப்பர். 3. மணிமேகலை : 6 : 97 : 104. 4. மணிமேகலை : 22 : 125 – 381. 11

*அது - அவ்வறம், அறச்செயல், செய்த அறம்.*

*கால் - காலம், பொழுது.*

**மற்றது**

*அறவினை ஒரு பிறவியளவில் நின்றுவிடுவதன்று. அதற்குக் காலவரையறை முதலியன இல்லை. அது மாயுந் தன்மையது மன்று. அஃதென்றும் உயிர்ப்புடன் நிலவுவது. அது பிறவி தோறும் தொடர்ந்து தொடர்ந்து சூழ்ந்து வருவது. அறத்தின் முழுமையே வீடுபேறென்பது. அது முழு மனமாசற்ற நிலை. ஆதலால், அறநிலை அடைய அறவினையை என்றும் ஆற்றிக் கொண்டிருத்தல் வேண்டும். அறவினை தொடர்ந்து தொடர்ந்து சூழ்ந்து வரலால் அதனை, 'அது' என்னாது, 'மற்றது' என்றார். 'மற்று' என்பது, பின்னே தொடர்ந்து சூழ்ந்து வருதலை உளங் கொண்டது.*

**பொன்றுங்கால் பொன்றாத்துணை**

*அறம் உயிரைப் பற்றியது; உடலைப் பற்றியதன்று, உடல் அழிதன்மாலையது; உயிர் அழிதன்மாலையதன்று. உயிரைப் பற்றிய அறமும் அழிதன்மாலையதன்று. இவற்றை ஆசிரியர் 'பொன்றுங்கால்' என்பதிலும், 'பொன்றா' என்பதிலும் பெய்துள்ள பெற்றமை வியக்கத்தக்கது. 'பொன்றுங்கால்' என்பது உடலழிவைக் குறிப்பது. 'பொன்றா' என்பது உயிரைப் பற்றிய அறத்தின் அழியாமையை உணர்த்துவது. அறம் உயிரொடு தொடர்ந்து தொடர்ந்து சூழ்ந்து போதலால், அதைப் 'பொன்றாத் துணை' என்றார்.*

*மக்களுக்கு எது வேண்டும்? பொன்றுவது வேண்டுமா? பொன்றாது துணை செய்வது வேண்டுமா? பொன்றாது துணை செய்வதே வேண்டும். அத்துணையைப் பொன்றுங்கால் பெற முயன்றால் அது கிட்டுமா? உணர்வு அரும்பிய நள் தொட்டுப் பொன்றத் துணையாகிய அறிவினையை ஆற்றிக் கொண்டி ருப்பது அறிவுடைமை. மக்கள் அழியா அறத்தை என்றுங் கடைப்பிடித் தொழுகுவது சால்பு.*

**நிலையாமையும் நிலைபேறும்**

*இப்பாட்டில் நிலையாமையும் நிலைபேறும் சொல்லப் பட்டுள்ளன. யாக்கை முதலியன நிலையாதன. அறம் உயிர் முதலியன நிலைபேறுடையன. யாக்கை நிலையாமையும், அறத்தின் நிலைபேறும் ஈண்டுச் சிறப்பாக வலியுறுத்தப்பட்டுள்ளன. 'பொன்றுங்கால்' என்பது யாக்கை நிலையாமையையும், 'பொன்றாத்துணை' என்பது அறத்தின் நிலைபேற்றை யுங்குறிப்பன.*

ஒருவர் பிறந்தார்; வளர்ந்தார்; கல்வி பயின்றார்; தொழில் செய்தார்; பொருளீட்டினார்; மணஞ் செய்து கொண்டார்; மக்களை ஈன்றார். அவரது வாழ்வில் அறவினை மட்டும் நிகழ வில்லை. கூற்றுவன் அவரைத் தாக்கினன். உயிர், உடலை விடுத்துப் பிரிந்தது. அவர்தம் உயிர்ச்சார்போ பொருட்சார்போ அவரது உயிரைத் தொடர்ந்து செல்லவில்லை; உயிருடன் பிரிவின்றி யிருந்த உடலும் உடன்போகவில்லை. அவ்வுயிர் என்ன நினைக் கிறது? [1]'ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ கால மெல்லாம் - பாழுக்கு உழைத்தேன்' என்று எண்ணுகிறது; வருந்துகிறது.

வேறு ஒருவர் பிறந்தார்; வளர்ந்தார்; கல்வி பயின்றார்; தொழில் செய்தார்; பொருளீட்டினார்; மணஞ் செய்து கொண் டார்; மக்களை ஈன்றார். அவர்தம் வாழ்வுக்கூறு ஒவ் வொன்றி லும் அறவினை இடம் பெற்றே வந்தது. அவருக்கு இறுதிநாள் உற்றது. உடல் பிரிந்தது. உயிரை அறவினை சூழ்ந்து கொண்டது. அறவினை அவ்வுயிருக்கு ஆக்கமளித்தது; பொன்றாத்துணை யாக நின்றது.

***[2]வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்...***
***தாழாதறஞ் செய்மின்....***

***[3]அத்தமும் வாழ்வும் அகத்துமட் டேவிழி யம்பொழுக***
***மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு***
***கைத்தலை மேல்வைத் தழுமைந் தருஞ்சுடு காடுமட்டே***
***பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே.***

அறவினையால் உயிர் ஆக்கம் பெறுதற்கென்று வாழ்வு நல்கப்படுகிறது. அவ்வாழ்வு அறவினையை அறியாதொழியின், உயிர் எங்ஙனம் நலம் பெறும்? உயிர்க்கு உறுதுணை செய்வது அறவினையே. அதனை ஆற்றவேண்டுவது மக்கள் கடமை. அது பொன்றுங்கால் பொன்றாத் துணையாகும்.

***[4]திருந்திய நல்லறச் செம்பொற் கற்பகம்***
***பொருந்திய பொருளொடு போகம் பூத்தலால்***
***வருந்தினு மறத்திற மறத்த லோம்புமின்***
***கரும்பெனத் திரண்டதோட் கால வேற்கணீர்.***

***[5] நாளைச் செய்குவ மறமெனி லின்றே***
***கேள்வி நல்லுயிர் நீங்கினு நீங்கும்***
***இதுவென வரைந்து வாழுநா ளுணர்ந்தோர்***
***முதுநீ ருலகின் முழுவது மில்லை.***

---

1 மாணிக்கவாசகர், 2. சுந்தரர், 3. பட்டினத்தார். 4 சிந்தாமணி,
5. சிலப்பதிகாரம் : 28 : 179 – 82,

*[1]பொருளைப் பொருளாப் பொதிந்தோம்பல் செல்லா*
*தருளைப் பொருளா அறஞ்செய்தல் வேண்டும்*
*அருளைப் பொருளா அறஞ்செய்து வான்கண்*
*இருளியல் பெய்தாத தென்னோ நமர்காள்.*

*[2]இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது*
*பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி*
*ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையான்*
*மருவுமின் மாண்டா ரறம்.* (7)

**38**

***வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்***
***வாழ்நாள் வழியடைக்கும் கல்.***

### பொருள்

*வீழ்நாள் படாஅமை - சாநாள் உண்டாகாமல், ஒருவன் நன்று ஆற்றின் - ஒருவன் அறவினை செய்யின், அஃது ஒருவன் - அவ்வினை அவ்வொருவனது, வாழ்நாள் வழி - வாழ்நாளின் வழிக்கு, அடைக்கும் கல்- அமைக்கப்படுங் கல்லாகும்.*

### கருத்து

*அறவினை, மரணத்தை உண்டாக்காத வாழ்நாளைக் கூட்டும்.*

### விருத்தி

*அறஞ் செய்யின், அது 'பொன்றுங்கால் பொன்றாத் துணை'யாகும் என்பது முற்பாட்டின் கருத்து. 'நன்றாற்றின்', அது 'வாழ்நாள் வழியடைக்குங் கல்'லாகும் என்பது இப்பாட்டின் கருத்து. அறஞ்செய்தல் என்பதும், நன்றாற்றல் என்பதும் ஒன்றே. அங்கே 'பொன்றாத் துணை' என்றது, இங்கே 'வழியடைக்குங் கல்'லாக விளங்குகிறது. அறவினை எங்ஙனம் பொன்றாத் துணையாகும்? வாழ்நாள் வழியடைக்குங் கல்லாய்த் துணை செய்யுமென்று விளக்கியவாறாம்.*

*'ஒருவன் ஒருநாள் இடைவிடாமல் நன்மையைச் செய்வானாயின், அச்செயல் அவனது பிறப்பும் இறப்புமாகிய நாள் வருகின்ற வழியை அடைப்பதொரு கல்லாம்'- இது மணக்குடவர் உரை. 'இது வீடுதரு மென்றது'- இஃது அவர்தங் குறிப்பு.*

1. வளையாபதி, 2. நாலடியார்.

'செய்யாது கழியுநாள் உளவாகாமல், ஒருவன் அறத்தைச் செய்யுமாயின், அச்செயல் அவன் யாக்கையோடு கூடுநாள் வரும் வழியை வராமல் அடைக்கும் கல்லாகும்'- இது பரிமேலழகர் உரை.

**வீழ்நாள் படாஅமை**

*வீழ்நாள் - சாநாள், இறக்கும் நாள், உடலினின்றும் உயிர் பிரியுங் காலம்; (வீழ்கதிர் போன்ற ஆட்சி). வீழ்நாள் : வினைத் தொகை.*

*படாமை - உண்டாகாமை, உண்டாகாமல்: 'உளவாகாமல்' என்றனர் பரிமேலழகர்.*

*படுதல் - உண்டாதல்; படாமை - உண்டாகாமை; 'தண் கடற் படுதிரை'- குறுந்தொகை : 166 : 1*

*படாஅமையிலுள்ள அளபெடை சாதல் கூடாது என்று வலியுறுத்தும் ஒலிக்குறிப்பு.*

*வீழ்நாள் படாமை - மரணமிலாப் பெருவாழ்வு பெறுகை.*

**வீழ்நாள் படாமை**

வீழ்நாள் படாமை என்பது, மரணமிலாப் பெரு வாழ்வைக் குறிப்பது. இப் பெருவாழ்வை அடைதல் வேண்டுமென்று பெரியோர் பலரும் ஒருமுகமாக அருளிப் போந்தனர்.

'மரணம் அஃறிணை உலகிலும் உயிர்திணை உலகிலும் நிகழ்ந்து வருவது கண்கூடு. அங்ஙனமாக மரணமிலாப் பெரு வாழ்வு என்பது என்னை' என்று சிலர் கருதலாம்.

**பிறப்பு இறப்பு**

[1]'தோற்ற முண்டேல் மரணமுண்டு' என்பது ஆன்றோர் மொழி. தோன்றுவதும் ஒடுங்குவதும் இயல்பு. நாமரூபங்கள் அழிதன்மாலையன. உயிர், நாம ரூபங்களுடன் தோன்றுவதைப் பிறப்பு என்றும், அவைகளின் மறைவை இறப்பு என்றும் உலகஞ் சொல்கிறது. எங்ஙனமாதல் தோன்றிய ஒன்று மறைவது உண்மை. மறைவதை மரணமில்லாதது என்று சொல்வதென்ன? மறைவனவெல்லாம் மரணமிலாப் பெருவாழ்வைப் பெறுவன வாகா. மறைவனவற்றுள் மரணமிலாப் பெருவாழ்வைப் பெறுவனவும் உண்டு. இந்நுட்பத்தை விளக்குதற் பொருட்டும் இத்திருக்குறள் எழுந்ததென்க.

1. சுந்தரர்.

*பிறப்பு இறப்பு என்னும் இரண்டும் உலகிடை நிகழ்ந்து வருகின்றன. பிறப்பும் இறப்பும் உயிருக்கு உண்டா? உயிர் பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை. பின்னைப் பிறப்பாவ தென்னை? இறப்பாவ தென்னை? பிறப்பாவது, உயிர் உடலைத் தாங்குவது; இறப்பாவது, உயிர் உடலை விடுத்து நீங்குவது. இங்கே உயிர், உடல் தாங்கல் தாங்காமை என்பனவற்றைச் சிறிது சிந்தித்தால் மரணமிலாப் பெருவாழ்வின் நுட்பம் விளங்கிவிடும். உயிர் உடலை இருவகையில் தாங்குகிறது. ஒருவகை, இயற்கை வழியில் தாங்குவது; இன்னொரு வகை, செயற்கை வழியில் தாங்குவது. இரண்டுக்கும் வேற்றுமை உண்டு.*

**இயற்கை – செயற்கை**

*கட்டிலுள்ள உயிருக்கு விடுதலையருளவேண்டி இயற்கை யன்னை அதற்குப் படிப்படியே பலதிற உடலங்களை நல்கு கிறாள். இறுதியில் அவளால் அருளப் பெறுவது மனிதப் பிறவி. மனிதப் பிறவியில் பகுத்தறிவு முகிழ்த்தற்குரிய கருவி கரணங்கள் இயற்கையன்னையின் அருளாலேயே அமைகின்றன. அவ்வறிவு கொண்டு விடுதலை எய்திப் பிறப்பை அறுத்துக்கொள்ள முயல வேண்டுவது மக்கள் கடமை. மனிதப் பிறவிவரை பிறவிகள் நிகழ் வது இயற்கையின்பாற்பட்டது. மனிதப் பிறவியில் விடுதலைக் குரிய முயற்சியில் தலைப்படாது, வெவ்வேறு முயற்சிகளில் மட்டுந் தலைப்படுவோர், மேலும் மேலும் பிறவியை வளர்த்துக் கொள்வோராவர். இப்பிறவி வளர்ச்சி செயற்கையின்பாற் பட்டது. விடுதலைக்குரிய முயற்சியே வீழ்நாள் படாமைக் குரியது.*

*விடுதலை முயற்சி மனமாசுகளை நீக்கி உயிரை அறமயமாக் கும். அறமாகிய உயிரின் பருவுடல் நீங்கின் மீண்டும் அவ்வுயிர் அவ்வுடலைத் தாங்காது. மற்ற உயிரின் பருவுடலைத் தாங்கும். விடுதலை முயற்சி இயற்கைக் கோட்டின் வழி நிகழ்வது; பிற, இயற்கைக் கோட்டினின்றும் வழுக்கி வீழ்ந்த செயற்கை வழி நிகழ்வன. ஆகவே, உயிர் உடல் தாங்குதல் இயற்கை வழியிலும், செயற்கை வழியிலுமாக இருவகையில் நிகழ்தலை உணர்க.*

**பிரிவின் வகை**

*உடலினின்றும் உயிர் பிரிவது பலர்க்கும் நேர்வது. இது பொது. பிரிவை இங்கே இருவிதப்படுத்திக் கொள்ளலாம். ஒன்று விடுதலைக்குத் துணைபுரிவது; மற்றொன்று மீண்டும் பிறவி தாங்கத் துணைபுரிவது. முன்னைய பிரிவை இறவாமை என்றும், பின்னைய பிரிவை இறப்பு என்றும் சொல்வது உலக வழக்கு.*

*என்னை? அதனால் விடுதலையும், இதனால் மீண்டும் பிறத்தலும் நேர்தலான் என்க.*

*இறவாமை மரணமிலாப் பெருவாழ்வு என்று சொல்லப் படுவது. அப்பெருவாழ்வு ஈண்டு, 'வீழ்நாள் படாமை' என்று சொல்லப்பட்டது.*

*'வீழ்நாள்' மரணத்தையும், 'வீழ்நாள் படாமை' மரண மிலாப் பெருவாழ்வையும் உணர்த்துவன. மீண்டும் உயிர் பருவுடல் தாங்காது செல்வதே மரணமிலாப் பெருவாழ்வெனும் 'வீழ்நாள்படாஅமை' என்று தெளிக.*

### அளபெடை

*'வீழ்நாள்', 'வீழ்நாள் படாஅமை' என்னும் இரண்டில் எதைப் பெற மக்கள் முயலல்வேண்டும்? பின்னைய பேற்றைப் பெறவே மக்கள் முயலல் வேண்டும். முன்னையது மேலும் மேலும் உடல் தாங்கலை - பிறவியை - வளர்த்துச் செல்லுந் தகைய தாகலின், பின்னையதைப் பெற முயல்வது அறிவுக்கழகு. இதுபற்றியே, ஆசிரியர் 'வீழ்நாள் படாஅமை' என்றார். 'படா அமை' என்பதிலுள்ள அளபெடையை நோக்குக; அதனிடை ஒன்றி உறைந்து பார்க்க; 'வீழ்நாள் உண்டாகாமல் வாழ்க வாழ்க' என்று ஒலித்தல் காண்க. அளபெடை வீழ்நாள் படாமல் வாழு மாறு வலியுறுத்துவது.*

### ஒருவன் நன்று ஆற்றின்

*நன்று - அறவினை, நல்லது, நற்செயல்.*

*'ஒருவன்' என்பதை நன்றுக்கு முன்னர்க் கூட்டிக் கொள்க.*

*ஆற்றின் - திறம்படச் செய்யின்.*

### நன்றாற்றின்

*வீழ்நாள் படாமல் வாழ்தற்குரிய முயற்சித்துறை எது? அதனை ஆசிரியர் 'நன்று' என்றார். நன்றாவது அறவினை.*

*அறவினை என்று நினைப்பதாலோ பேசுவதாலோ வீழ்நாள் படாமை கூடிவிடாது. எதற்குஞ் செயல் வேண்டு மன்றோ? செயல் வேண்டுமென்பதை ஆசிரியர், 'ஆற்றின்' என்பதால் அறிவுறுத்துகிறார். அறவினையை நினைப்பளவில்-பேச்சளவில் - நிறுத்தாது, செயலில் செவ்வனே ஆற்றல் வேண்டு மென்பது கருத்து.*

*நன்று ஆற்றின் வீழ்நாள் படாது (உணடாகாது) ; நன்று ஆற்றாதொழியின் வீழ்நாள் படும் (உண்டாகும்).*

**அஃதொருவன் வாழ்நாள் வழி அடைக்குங் கல்**

*வாழ்நாள் - உயிர் உடலுடன் ஒன்றி வாழுங் காலம்; வாழ்நாள்: வினைத்தொகை.*

*அடைக்கும்- அமைக்கப்படும்; 'கழனிக்கு அடைத்த மகளிர்'- திவாகரம் : 2 : 140.*

*அடைக்குங்கல் என்பது அடைகல் என்றும் வழங்குவதுண்டு; 'ஆமையாய் மேருத் தாங்கி அடைகலாய்க் கிடந்த போது'- சிவஞானசித்தியார் : பரபக்கம் : பா - ம : 11. 'அடைகலான ஆமையாக்கி'- தக்கயாகபரணி: 663 உரை.*

*வாழ்நாள் வழி அடைக்குங்கல் - வாழ்நள் வழியைத் தாங்குதற்குரிய அடைகல் - ஆதாரச்சிலை - என்றபடி.*

**வாழ்நாள் வழி அடைக்குங் கல்**

*உயிர் உடலைவிட்டுப் பிரிந்ததும் அது விடுதலை எய்தல் வேண்டும்; அல்லது மீண்டும் உடலில் நுழைதல் வேண்டும். இரண்டும் உயிர் உடலோடு கூடி வாழும் வாழ்க்கையைப் பொறுத்து நிகழ்வனவாம். வாழ்வில் அறவினை செய்வோர் விடுதலையடைவர்; ஏனையோர் மீண்டும் பிறவி தாங்குவர்.*

*அறவினை, உயிர் உடல் தாங்கியுள்ளபோதே விடுதலைக் குரிய நிலையை உண்டுபண்ணும். அதனை ஆசிரியர் மிக உரமாகக் கூறுகிறார்; 'கல்' என்கிறார்; 'அடைக்குங் கல்' என்கிறார்; 'வழி அடைக்குங் கல்' என்கிறார்; 'வாழ்நாள் வழி அடைக்குங் கல்' என்கிறார். ஒவ்வொரு சொல்லும், சொற் றொடரும் பாட்டின் பொருட்செறிவை உணர்த்துதல் காண்க.*

**வாழ்நாள்**

*வாழ்நாளாவது உயிர் உடல் தாங்கியுள்ள காலம். அந் நிலையை ஆசிரியர் மங்கலமாக 'வாழ்நாள்' என்றார். 'வீழ்நாள் படாமைக்கு அறவினை யோம்பி வாழும் நாள்' என்பது 'வாழ்நாள்' என்பதன் உட்பொருள். அவ்வாழ்நாளை வீழ் நாளாக்குவது அறியாமை. உயில் உடலைத் தாங்குமாறு இயற்கை செய்வதன் நோக்கம் என்ன? உடலாங் கருவியால் உயிரின் குறைபாடு நீங்குதல் வேண்டுமென்பதன்றோ? அந்நன்னோக்கத்தை நிறைவேற்றுதற்குக் கிடைத்த நாளை 'வாழ்நாள்' என்று ஆசிரியர் அருள்கிறார்.*

**வழி**

*எதற்கும் வழி வேண்டுமன்றோ? இல்லையேல் நிகழ்ச்சிகள் பலவாறு சிதறி முதலுக்கு ஊறு செய்யும். அதுபற்றியே,*

*ஆசிரியர் 'வாழ்நாள்' என்னும் அளவில் நில்லாது 'வாழ்நாள் வழி' என்று அருளலானார்.*

**அடைக்குங் கல்**

*அறவினை, வாழ்நாளுக்குரிய வழியை அமைக்கிறது. எப்படி அமைக்கிறது? கல்லென அமைக்கிறது. கல்லைப் போன்றதைக் கல் என்றார்; சிதையாத ஒன்று - உரமான ஒன்று - என்பது பொருள். வழியைத் தாங்கும் - வழிக்கு ஆதாரமான - கல் என்பார், 'அடைக்குங் கல்' என்றார். அறவினை, வாழ்நாள் - வழியைத் தாங்குங் கல்லென - வழிக்கு ஆதாரக் கல்லென - அமைகிற தென்க. இக்காரணம் பற்றி 'அடைக்கும்' என்பதற்கு 'அமைக்கப்படும்' என்று பொருள் கூறப்பட்டது. 'அடைக்கும்' என்பதற்கு, மூடும் - தடுக்கும் என்று பொருள் கூறுவோருமுளர். உண்மை காண அறிஞர் முயல்வாராக.*

**ஒருவன்**

*ஒருவன் அறவினையை ஆற்றின், ஒருத்திக்கும் அவ்வினை ஆற்றும் அவசியம் ஏற்படும். வழுக்கல் பெரிதும் ஆணினிடம் நேர்வதால், அவனை எச்சரிக்கை செய்யவேண்டி 'ஒருவன்' என்றார்.*

*வீழ்நாள் படாமல் ஒருவன் நன்றாற்றின் அஃது அவன் வாழ்நாள் வழி அடைக்குங் கல்லாகுமென்க.*

*அறவினை, வாழ்நாள் வழியைத் தாங்குஞ் சிலையென - வழிக்கு ஆதாரச்சிலையென - அமைந்து, வீழ்நாள் படாமையை உயிருக்குக் கூட்டும் பெற்றி வாய்ந்ததென்றபடி. (8)*

**39**

***அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்***
***புறத்த புகழு மில.***

**பொருள்**

*அறத்தான் வருவதே இன்பம் - அறத்தால் வருவதே இன்பம், மற்று எல்லாம் - பிற எல்லாம், புறத்த - புறம்பாவன, புகழும் இல - புகழுமில்லாதன.*

**கருத்து**

*அறத்தின் வழி வருவதே இன்பம்; பிற இன்பமாகா.*

**விருத்தி**

*முன்னே அறப்பேறு, 'பொன்றாத் துணை' என்றும், 'வாழ் நாள் வழி அடைக்குங் கல்' என்றும் சொல்லப்பட்டது; இங்கே*

*இன்பமென்று வெளிப்படையாகச் சொல்லப்படுகிறது. அத் துணையும் வழியும் இன்பத்தை விளங்கச் செய்வனவாம்.*

**அறத்தான் வருவதே இன்பம்**

*அறத்தான் - அறத்தால்; அற ஒழுக்கத்தால் என்று கொள்ளினுமாம்.*

*ஆன் - மூன்றாம் வேற்றுமை உருபு. 'உடனிகழ்ச்சிக் கண் வந்தது.'*

*வருவதே: ஏகாரம் தேற்றம்.*

**அறத்தால் வருவதே இன்பம்.**

*அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றனுள் அறம் தனித்தும், பொருளினும் இன்பத்திலும் விரவியும் நிற்குந் தகையது என்பது அதிகாரத்தின் தலைப்பிலும் வேறிடங் களிலும் விளக்கப்பட்டது. பொருள் எனில் அதனடியில் அறம் நிலவுதல் வேண்டும்; அங்ஙனே இன்பம் எனில் அதனடியிலும் அறம் நிலவுதல் வேண்டும். இதுபற்றியே,*

*'அறத்தான் வருவதே இன்பம்' என்றார்.*

*வாழ்வுக்கு இன்பம் வேண்டும். இன்பத்துக்குப் பொருள் வேண்டும். பொருள் இல் வழி இன்பமில்லை. பொருளுக்கும் இன்பத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. 'பொருளில்லான் இளமைபோல்' என்றார் கலித்தொகையாரும் (38: 15).*

*பொருளுக்கு அறம் வேண்டப்படுவதுபோல இன்பத்துக் கும் அறம் வேண்டப்படும்.[1]பொருளறம் அற்றவிடத்தில் எங்ஙன் போராட்டம் எழுந்து கேடு விளைக்குமோ, அங்ஙனே இன்ப அறம் அற்றவிடத்திலும் போராட்டம் எழுந்து கேடே விளைக்கும்.*

**தாய்மை**

*இன்பத்திடை அறம் இல்லையெனில் முதலாவது தாய்மை கெடும்; தாய்மை கெட்டால் பெண்மை கெடும்; அதனால் ஆண்மையுங் கெடும். பெண்மையும் ஆண்மையும் கெட்ட இடம் பேய்மைக்கு இரையாதல் திண்ணம்; அங்கே பல வித நோய்கள் தாண்டவம் புரியும்; நோய்கள் நல்ல பிள்ளை களை ஈனச் செய்யுமோ? வளமில்லாப் பிள்ளைகளைப் பெறு வதால் என்ன பயன்? அப் பேற்றால் மன்பதை வளருமா? தேயுமா?*

1. 'அறத்தினூஉங் காக்கமில்லை....' என்னுங் குறளின் விருத்தியுரையை நோக்குக.

ஒரு நாட்டின் நிலை தாய்மையின் பண்பைப் பொறுத்து நிற்கும். தாய்மையின் பண்பு அழிந்தால் நாடு அழிந்து போகும். தாய்மைப் பண்பைக் காப்பது - காக்கவல்லது - இன்ப அறமே யாகும். அறத்தின்வழி இன்பம் நுகருமிடத்தில் தாய்மைப் பண்புக்குக் கேடு நேராது.

தாய்மை நலத்தை அறிவுறுத்தாத பெரியோரில்லை; நூல் களில்லை. அந்நலத்துக்கென்று உலகிடை எழுந்த ஆராய்ச்சிகள் எத்துணை! கழகங்கள் எத்துணை! அரசுகள் எத்துணை! சட்டங் கள் எத்துணை! இவைகளெல்லாம் தாய்மை நலத்துக்கென்று ஏற்பட்டன. தாய்மைத் தூய்மையைக் காத்தாலன்றி உலகம் ஆக்கம் பெறாது. தாய்மைத் தூய்மைக்கு என்ன வேண்டும்? அற இன்பம் வேண்டும். உலகத்தை - உலக நலத்தை - உளங் கொண்டே நம் பேராசிரியர் 'அறத்தான் வருவதே இன்பம்' என்றருளினர். உலக ஆக்கத்தின் வேர் இத்திருவாக்கி லிருத்தலை உன்னுக.

### அகப்பொருள் நூல்கள்

அற இன்பம் எது? மற்றையது எது? இவைகளைப் பற்றி விரிந்த ஆராய்ச்சி இங்கே வேண்டுவதில்லை. உலகின் பல பகுதிகள் அற இன்பம் இன்னது என்று உணருமுன்னர் நந்தமிழ் நாடு அதன் பெற்றியை நன்கு உணர்ந்து தெளிந்து, அதை உலகுக்கு அறிவுறுத்தியது. அதன் அறிவுறுத்தல்கள் அகப் பொருள் நூல்களில் மலிந்து கிடக்கின்றன. அந்நூல்கள், அற இன்பம் இன்னது என்றும், மற்றையது இன்னது என்றும் உணர்த்திக் கொண்டிருக்கின்றன. பண்டை மக்களின் வாழ்வி னின்றும் முகிழ்த்த அச்சீரிய நூல்களின் உள்ளுறை, இக்கால மக்களின் வாழ்வில் பெரிதும் ஒன்றாமேலே கிடக்கிறது.

### ஐந்திணை இன்பம்

அகப்பொருள், ஏழு திணைகளைக் கொண்டது. அவை கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்பன. கைக்கிளை ஒருதலைக்காமம்; பெருந்திணை பொருந்தாக் காமம்; ஐந்திணை: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன. கைக் கிளையும் பெருந்திணையும் இன்பத்தை அறவழியில் ஊட்டு வனவல்ல. அவையொழிந்த ஐந்திணையும் இன்பத்தை அறவழி யில் ஊட்டுவன.

> ***'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்***
> ***முற்படக் கிளந்த எழுதிணை என்ப'***

***'அவற்றுள்,***
***நடுவ ணைந்திணை நடுவண தொழியப்***
***படுதிரை வையம் பாத்திய பண்பே'***

***'இன்பமும் பொருளும் அறமுமென் றாங்கு***
***அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்....'***

*எனவரூஉந் தொல்காப்பியச் சூத்திரங்களை நோக்குக.*

*ஐந்திணை, 'அன்பொடு புணர்ந்த' என்று சிறப்பிக்கப் பட்டிருக்கிறது. என்னை? பிற அன்புக்குரியனவல்லவாகலின். இக்கூற்றுக்கு, 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை என்றதனால் கைக்கிளை பெருந்திணையை ஒழித்து நின்ற முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் எனக் கொள்ளப்படும். அவை அன் பொடு புணர்ந்தவாறு என்னை யெனின், கைக்கிளை பெருந் திணையைப் போலாமை, ஒத்த அன்பினராகிப் புணர்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும் இரங்கலும் நிகழ்த்துப வாகலானும், அவை நிகழுங்கால் அத்திணைக்கு உறுப்பாகிய இடமும் காலமும் கருப்பொருளும் துணையாகி நிகழுமா கலானும், இவை அன்பொடு புணர்ந்தன என்க' எனவரூஉம் இளம்பூரணர் உரையுந் துணைசெய்தல் காண்க.*

*'அன்பொடு புணர்ந்த ஐந்திணை' என்பது, 'அறத்தால் வருவது இன்பம்' என்று வேற்றுருவில் திருவள்ளுவர் திரு வாக்கிற் பிறந்தது என்று கூறலாம். அறத்துக்கும் அன்புக்கும் விரவிய தொடர்புண்டு. அத்தொடர் புணர்ந்தே சான்றோரும் [1]'அறத்தினுள் அன்புநீ' என்றும், [2]'அன்புகொள் அறத்திற்கு' என்றும் அருளிப் போந்தனர்.*

*அறத்தின் கூறுகளுள் அன்பும் ஒன்று; அன்பு பெருங்கூறு. அன்பில் பிறப்பது இன்பம் - அறத்தின் விளைவு அன்பு - அன்பின் பயன் இன்பம் - என்று தெளிவுபடுத்திக் கொள்ளலாம். அன்பால் வரும் இன்பத்தை, 'அறத்தால் வருவது' என்றார் ஆசிரியர்.*

*அறத்தால் வரும் இன்பமாவது, ஐந்திணை வழி வருவது. காதலின்பமென்பதும் இதுவே.*

**காதல் இன்பம்**

*காதலால் ஒன்றுபட்ட உள்ளமுடைய ஒருத்தி - ஒரு வன்மாட்டுப் பிறப்பது இன்பம். அவ்வின்பத்துக்கு ஈடாகவோ எடுப்பாகவோ பிறிதொன்று அவர்க்குத் தோன்றாது. அத் தகைய ஒன்றே அறத்தால் வருவது.*

1. பரிபாடல் : 3 : 65. 2. மணிமேகலை : 28 : 96.

*காதலால் விழுங்கப்பட்ட ஒருத்தியினதுள்ளமும், ஒருவன துள்ளமும் பிறரிடத்தில் அம்முறையில் நுழையா; நுழையுமேல் அவ் விருவருங் காதலால் விழுங்கப்பட்டவராகார். அவர் நுகர்வதும் இன்பமாகாது; போலியே யாகும்.*

**மற்றெல்லாம் புறத்த புகழுமில**

*மற்றெல்லாம்- பிற எல்லாம்; அறமல்லாத வழியில் வரும் பிற எல்லாம்.*

*புறத்த - புறத்தன; புறம்பாவன; அறத்துக்குப் புறம்பாவன; நீக்கத்தக்கன; துன்பந் தருவன.*

*அறத்தான் வருவதே இன்பமாயின், அறமல்லாத பிற வாற்றான் வருவனவெல்லாம் துன்பமாகும் என்பது வெளிப் படை. இதை ஆசிரியர் 'புறத்த' என்று குறிப்பிட்டனர். இவ்வள வில் அவர் நில்லாது, 'புகழுமில' என்றுங் கூறினர்.*

*துன்பம் பயப்பன புகழிலவாயின், இன்பம் பயப்பது புகழுடையதா மன்றோ? ஆகவே, அறத்தால் வருவதில் இன்பமும் புகழும் உண்டெனக் கொள்க. இன்பத்துடன் புகழையுஞ் சேர்த்துப் பொருள் கூறுக.*

*'அறத்தால் வருவது யாதொன்று, அதுவே இன்பமும் புகழுமாம்; அதனாலன்றி வருவன வெல்லாம் துன்பமாம்; புகழுமிலவாம்' எனவரூஉம் மணக்குடவர் உரையை நோக்குக.*

**மற்றெல்லாம்**

*மற்றெல்லாம் என்றது அன்பின் வழிப் பிறவாத பிறவற்றை. அவை கைக்கிளை, பெருந்திணை, வரைவின் மகளிர் சேர்க்கை, பிறனின் விழைவு முதலியன. இவைகளால் துன்பமே வரும். "பாவத்தான் வரும் பிறனில் விழைவு முதலாயின அக்கணத்துள் இன்பமாய்த் தோன்றுமாயினும் பின் துன்பமாய் விளைதலின் 'புறத்த' என்றார்" என்பது பரிமேலழகர் குறிப்புரை.*

**புறத்த புகழுமில**

*ஒரு மகள் பல ஆடவரைக் கூடுவதும், ஓர் ஆடவன் பல மகளிரைக் கூடுவதும் அறமாகா. அக்கூட்டுறவால் நிலைத்த இன்பந் தோன்றாது; துன்பமே தோன்றும்; பிணியே பெருகும். அவர் அறத்தால் வரும் இன்பத்தை நுகர்வோராகார். அவர் அறத்துக்குப் புறம்பாவர்; புகழும் அற்றவராவர்.*

*அறவழி நின்று ஒருத்தி ஒருவனுடனும், ஒருவன் ஒருத்தியுடனும் வாழ்வதிலேயே நிலைத்த இன்பம் விளையும்; இன்பமட்டுமன்று; புகழும் விளையும். 'ஒருத்தி - ஒருவன்'*

என்னும் இன்ப அறவொழுக்கத்தில் நிற்போரை உலகம் புகழ்தல் கண்கூடு. அவ்வழி விடுத்து, அதற்குப் புறம்பாகி, 'பலர் கூட்டம்' என்னுங் கொள்ளைக்கு இரையாவோர் இன்பமிழந்து துன்பம் உறுவர்; அவருக்குப் புகழ் ஏது? தீயொழுக்கமுடையாரை ஏசி இகழ்வது உலகியல்பு.

அறத்தால் ஒருத்தியும் ஒருவனும் கூடிவாழ்தல் இன்பமும் புகழுமாம். அதற்கு மாறுபட்டன புறம்பும் இகழுமாம்.

ஒருத்தியும் ஒருவனும் காதலால் கூடி வாழ்வதில் பிறப்பதே அற இன்பம் என்பதும், புகழ் என்பதும், காதலின்றிப் பலருடன் கூடி வாழ்வது அற இன்பம் ஆகாதென்பதும், அஃது அறத்துக்குப் புறம்பாகித் துன்பம் பயப்பதென்பதும், புகழும் அற்ற தென்பதும் இப்பாட்டால் அறிவுறுத்தப்பட்டன.

**தொடர்பு**

அறஞ்செய்யின் அது பொன்றுங்கால் பொன்றாத் துணையாகும் என்றும், நன்றாற்றின் அது வாழ்நாள் வழி அடைக்குங் கல்லாகும் என்றும் மேற்பாக்களிற் சொல்லப் பட்டன. அறப்பேறு என்பதன் கீழ் அப்பாக்களுடன் இப்பாவும் தொடர்பு படுத்தப்பட்டுளது. இங்கே 'அறத்தால் வருவதே இன்பம்' என்பதற்கு ஒருத்தியும் ஒருவனுங் கூடுங் காதலின்பம் என்னுங் கருத்துப்படப் பொருள் விரிக்கப்பட்டது. 'பொன்றாத் துணை', 'வாழ்நாள் வழியடைக்குங்கல்' என்பனவற்றிற்கும், காதலின்பத்துக்கும் என்ன தொடர்பு? என்று ஐயுறுவோரு மிருப்பர். இவர், அறத்துப்பால், பொருட்பால், இன்பப்பால் என்று முப்பால் அருளி, வீட்டுக்கென்று தனிப்பால் அருளாது ஆசிரியர் விடுத்தமையைக் கூர்ந்து சிந்திப்பாராக. வீட்டுக் கென்று தனிப்பால் ஆசிரியர் அருளாமைக்குக் காரணம் தோற்றுவாயிலும் பிற இடங்களிலும் சொல்லப்பட்டது.

அறமாவது மாசற்ற நிலை. மாசற்ற அறவழி நின்று பொருளீட்டி அவ்வறவழி நின்று இன்ப நுகர்வோர் வீடு பேற்றிற்கென்று தனி முயற்சி செய்ய வேண்டுவதில்லை. அவ்வறவோர்க்கு விடுதலை காதல்வழித் தானே உண்டாகும். விடுதலையாவது கட்டறுவது; கட்டறுவதாவது மாசு நீங்குவது.

கட்டறுந்ததும் எல்லாம் இன்பமாகவே விளங்கும். இன்பத்தை மறைத்திருப்பது கட்டு. கட்டு, அறவொழுக்க மென்னும் இல்வாழ்க்கையால் அற்றுபோகும். இது முன்னர்ச் சில இடங்களில் விளக்கப்பட்டது; இனியும் 'இல்வாழ்க்கை இயலில்' விளக்கப்படும்.

இன்பத்துக்கு வேண்டப்படுவது அறவொழுக்கம். இதனை ஆசிரியர் 'அறத்தால் வருவதே இன்பம்' என்று அருளினர். ஈண்டு 'இன்பம்' என்றதும், ஆண்டுப் 'பொன்றாத் துணை' 'வாழ்நாள் வழி அடைக்குங்கல்' என்றனவும் கருத்தில் ஒருமைப் பாடுடையனவே.

காதல் இன்பம் என்பது வெறும் பெண் ஆண் சேர்க்கையை மட்டும் உளங்கொண்டதன்று. அது விடுதலைக்குரிய பிள்ளைப் பேறு, அன்பு, விருந்தோம்பல், ஒழுக்கம், ஒப்புரவு முதலிய பல அறக்கூறுகளையுங் கொண்டதென்க. அறக்கூறுகள் விளங்கி மாசற்ற நிலை கூட்டுதற்குத் துணை புரிவது ஒருமைக் காதலென்க. (9)

**40**

***அறத்தா றிதுவென வேண்டா சிவிகை***
***பொறுத்தானோ டூர்ந்தா னிடை.***

**பொருள்**

அறத்து ஆறு - அறநெறி, இது என வேண்டா - இத்தன்மையது என்று ஆராய்ந்து சொல்ல வேண்டுவதில்லை, சிவிகை பொறுத்தானோடு - (அந்நெறி) பல்லக்கைச் சுமந்து செல்வானோடு; ஊர்ந்தான் இடை - (அதில்) ஏறிச் செல்வோனிடம் (கண்கூடு).

**கருத்து**

அறநெறி இத்தன்மையதென்று ஆராய்ந்து கூற வேண்டுவதில்லை.

**விருத்தி**

அற வொழுக்கத்துக்கு அறநெறி இன்னது என்னுந்தெளிவு வேண்டும். தெளிவு இப்பாட்டில் இருத்தலால் இஃது அறப் பேற்றுத் தலைப்பின்கீழ் இறுதியில் வைக்கப்பட்டது. இப்பாட்டு இவ்வதிகாரத்திலுள்ள எல்லாப் பாக்கட்கும் பொதுமை வழங்கிக் கொண்டிருப்பது. இதனாலும் இஃது இறுதியில் வைக்கப்பட்டது.

**அறத்தா றிதுவென வேண்டா**

அறத்து - ஆறு - அறநெறி, அறநெழி; அறத்தின் பயன் எனினுமாம்.

ஆறு - அறுந்து சென்று ஒழுங்குபட்டது; நெறி; (நெறி - வழி, மார்க்கம்; பயனுமாம்).

இது - இத்தன்மையது; இன்னது நெறி.

என - என்று சொல்ல, என்று ஆராய்ந்து சொல்ல.

வேண்டா - வேண்டுவதில்லை.

**அறத்தாறு**

அறம் நுண்மை; ஒரு நிலை. அதை அடைதற்கு நெறி வேண்டும். நெறியற்ற எதுவும் வாழ்வுக்குப் பயன்படுவதில்லை. நெறியற்றது இருத்தலும் இல்லாததும் ஒன்றே. அடைவுக்கு நெறி இன்றியமையாதது. நெறியே நடந்து சென்றால் குறிப்பிலுள்ள இடத்தை அடைதல் கூடும். சிவநெறி, இஸ்லாம் மார்க்கம் முதலிய வழக்காறுகளை நோக்குக. அறத்துக்குரிய நெறி அறநெறி எனப்படும். அஃது ஈண்டு அறத்தாறு என்னப்பட்டது.

அறம் பொதுவானது. அஃது எல்லா உயிர்க்கும் அரியது. அஃது ஒரு கூட்டத்தவர்க்கு மட்டும் உரியதன்று. அறம், மண் நீர் காற்று ஒளி போன்று எல்லா உயிர்க்கும் பொதுவகையில் பயன்படுவது. அறநெறியும் அத்தகையதே.

அறநெறியில் எவ்வுயிரும் செல்லலாம். அந்நெறியில் இவ்வுயிர் செல்லலாம், இவ்வுயிர் செல்லலாகாது என்னும் நியதி இல்லை. அது சில வுயிர்க்கு விரிந்தும் சில வுயிர்க்குச் சுருங்கியும் நிற்பதன்று. அஃது எவர்க்கும் பொதுமையில் இடந் தருவது. அறநெறி,

***'கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே***
***காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்கும் கண்ணே***
***வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே***
***மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே***
***நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே***
***நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே***
***எல்லார்க்கும் பொதுவில்நட மிடுகின்ற சிவமே***
***என்னரசே யான்புகலு மிசையுமணிந் தருளே'***

எனவரும் இராமலிங்க சுவாமிகள் பொன்மொழிக்கு இலக்கிய மென விளங்குவது.

**வாழ்வும் தொழிலும்**

அறத்தாறு உயிர்களின் வாழ்வின் ஒவ்வொரு கூறிலும் ஒன்றியிருப்பது. அது நிலவாத வாழ்வே இல்லை என்று கூறலாம். அதையுணர்ந்து அதன் வழியே நடக்க உயிர்கள் கடமைப்படல்

வேண்டும். அறவழியே நடந்தால் அழுக்காறு அவா வெகுளி முதலிய தீக்குணங்களினின்றும் விடுதலை எய்தல் கூடும்; குணமென்னுங் குன்றேறி நிற்றல் கூடும்.

வாழ்வுக்கூறுகள் என்பன தொழின்முறைகளை யொட்டி அமைவன. தொழின் முறைகளுக் கேற்றவண்ணம் வாழ்வுக்கூறு கள் அரும்பி மலர்தல் இயற்கை. வாழ்வுக்குரிய தொழின் முறைகளெல்லாம் முகிழ்த்து நிற்பன. தொழின் முறைகள் அறவழி நடைபெறின், உலகில் வாழ்வுக் கூறுகள் இயற்கை வழி வளரும்; வளர்ந்து பண்படும்; பண்பட்ட வாழ்வுக் கூறுகள் உலகிடை அமைதியை நிலைபெறுத்தும் . தொழின் முறைகள் அறவழியில் நிகழா தொழியின், வாழ்வுக் கூறுகள் இயற்கை வழியில் வளராது குலைத்துப் போராட்டத்தைப் புகுத்தும்.

உலகம் அறநெறியில் இயங்குதற்கென்று மக்களிடை நானாவித இயல்புகளும், அவ்வியல்புகளுக்கேற்ற நானாவிதத் தொழின் முறைகளும் இயற்கைவழி அமைந்துள்ளன. அவ்வவ் வியல்பினர் அவ்வத் தொழின்முறையில் ஈடுபடுதல் வேண்டும்; மாறுபட்ட ஈடுபாட்டால் மன்பதை குலைவுறும்.

**உயர்வு தாழ்வு**

தொழின் முறைகளைப் பொறுத்தவரை, அவைகளிடை உயர்வு தாழ்வு கிடையா. தொழின் முறைகளில் உயர்வு தாழ்வு கற்பிக்கப்படின் மன்பதையின் அமைதி கெட்டே பொகும் . ஒருவர் தம் இயல்புக்கேற்றபடி உழவராகிறார்; மற்றொருவர் வாணிபராகிறார்; இன்னொருவர் மன்னராகிறார். அவ்வத் தொழிலின் அடியில் அறநெறி பொதுவாகவே இலங்குகிறது. ஒவ்வொருவரும் அவ்வற நெறியினின்றும் வழுவாது தொழில் புரிந்தால் எல்லாரும் அறவோராகலாம். அறவோராகும் வாய்ப்பு எவர்க்கும் உண்டு. அறவழி நடப்போர்க்கு வாய்ப்புப் பயன் தரும். அறவழியில் நடவாதார்க்கு வாய்ப்புப் பயன் தராது. அறவோராகும் வாய்ப்புப் பிறப்பையொட்டி நிற்பதன்று. பிறப்பில் உயர்வு தாழ்வில்லை. அவரவர் தத்தம் இயல்புக்கேற்ற வண்ணம் ஏற்கும் தொழின் முறையை அறநெறியில் நின்று நடாத்தி வரின் எவரும் அறவோராகலாம்.

உலகில் சிலச்சில சமயம் புரட்சி உண்டாகிறது. காரணம் என்ன? காரணம் பலபடக் கூறலாம். தொழின் முறைகளில் உயர்வு தாழ்வு கற்பித்தல், பிறப்பில் உயர்வு தாழ்வு கொள்ளல், தொழின் முறைகள் அறநெறியினின்றும் பிறழ்தல் முதலிய வற்றைச் சிறப்பாகக் குறிக்கலாம். புரட்சி இயற்கையின்

*ஆணைப்படி எழுந்து, கற்பிதங்களை யொழித்து, அறநெறியை விளக்கி அடங்கிவிடும். அறநெறி மறக்கப்பட்ட இடங்களிலேயே புரட்சி எழும். மற்ற இடங்களில் அஃது எழாது. புரட்சி ஏழாத வாறு காப்பதே அறிவுடைமை; அதற்கு அறநெறி நடக்கை வேண்டும். அவரவர் தத்தம் இயல்புக் கேற்ற தொழின் முறை களில் ஈடுபட்டால் அறநெறி நடக்கை தானே கூடும்; வாழ்வு அறக்கோட்டினின்றும் வழாது நின்றியங்கும்; மன்பதையில் அமைதி நிலவும். எல்லாவற்றிற்கும் அடிப்படை அறநெறி.*

**இதுவென வேண்டா**

*அறநெறி எங்கும் என்றும் ஒரே தன்மையதா யியங்குவது. அந்நெறி ஓரிடத்தில் ஒரு தன்மையதாகவும், மற்றோரிடத்தில் மற்றொரு தன்மையதாகவும் இயங்குவதன்று. அதனிடத்தில் காழ்ப்பில்லை; கரவில்லை; இகலில்லை. அது பொதுமையது. அத்தகைய ஒன்றை எத்தன்மையதென்று கூறுவது? அதை இத்தன்மையது அத்தன்மையது என்று கூற வேண்டுவதில்லை. அதற்கென்று பெரிய ஆராய்ச்சித் துறையில் இறங்கவேண்டு வதுமில்லை. ஆசிரியர் 'அறத்தாறு இது எனவேண்டா' என்று உலகுக்கு அறிவுறுத்திய அருமைப்பாட்டை நோக்குக. 'அறநெறி இதுவா அதுவா' என்று ஆராய்ந்து சொல்லவேண்டுவதில்லை. அறநெறி 'அது'வாகவும் 'இது'வாகவும் விளங்கி, எங்கும் என்றும் பொதுவாக நிற்கும் தன்மை வாய்ந்தது.*

**சிவிகை பொறுத்தானோ டூர்ந்தா னிடை**

*பொறுத்தல் - கவாவுதல் , தாங்குதல், சுமத்தல்.*

*இடை - இடம் ; இடத்தில்.*

**சிவிகை... இடை**

*அறநெறியின் பொதுமையை விளக்குதற்கு ஆசிரியர் ஒன்றை எடுத்துக்காட்டுகிறார். அவ்வெடுத்துக்காட்டு உன்னற் பாலது. அது, 'சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தானிடை' என்பது.*

**எடுத்துக்காட்டு**

*பாதைகளில் செல்லும்போது பலபொருள் காட்சியளிக் கின்றன. அவற்றில் கண்ணைக் கவர்வன ஊர்திகள். ஊர்திகளில் மனிதரை மனிதர் சுமக்கும் ஒன்று விரைந்து கருத்தை ஈர்க்கும்.*

*ஆசிரியர் காலத்தில் பலதிற வண்டிகள் இருந்தன. அந் நாளில் செல்வர் பெரிதும் சிவிகையில் ஊர்ந்து செல்வது வழக்கம். ஆசிரியர் கருத்தில் அது படிந்திருக்கும். அஃது அற*

நெறிக்கு எடுத்துக்காட்டாக அவர்தம் உள்ளத்தினின்றும் உதித்தது.

ஆசிரியர் தங் காலத்தில் கண்டதை எடுத்துக்காட்டாகக் கொண்டனர். எடுத்துக்காட்டின் நிலையை ஆராய வேண்டுவது அநாவசியம். எதன் பொருட்டு அவ்வெடுத்துக்காட்டு ஆளப் பட்டதோ அதன் வழிநின்றே பொருளுண்மை காணச் சிந்தித்தல் வேண்டும். ஆசிரியன்மார் தாங் காண்பதை எடுத்துக் காட்டாகக் கொள்வது மரபு. அவ்வெடுத்துக்காட்டுகள் காலப் போக்கில் சிலபோது பொருந்துவனவாகவும் சிலபோது பொருந்தாதனவாகவும் தோன்றும்.

மோட்டார் வண்டிகள் மலிந்துள்ள இந்நாளில் சிவிகை யூர்தலும், மனிதரை மனிதர் சுமத்தலும் நகைக்கற்பாலனவாக வும் அநாகரிகமாகவும் தோன்றலாம். திருவள்ளுவர் காலத்தில் மோட்டாரில்லை; மோட்டார் இருந்தால் அவர்தங்கருத்து அதன்மீது சென்றிருக்கும். இப்பொழுது சிவிகையை மோட்டா ராகவும், சிவிகையில் செல்வோரை மோட்டாரிற் செல்வோராக வும், சிவிகையைத் தாங்கிச் செல்வோரை மோட்டார் ஓட்டு வோராகவும் கொள்ளலாம். எடுத்துக்காட்டுகளைக் கால நிலைக்கேற்ற முறையிற் கொண்டு, பொருள்மீது கருத்துச் செலுத்துவது சிறப்பு.

இங்கே இரு சார்பினர் உளர்; ஒருவர் பல்லக்கைத் தாங்கிச் செல்வோர்; மற்றொருவர் பல்லக்கில் ஏறிச் செல்வோர். இவ்விருவரிடை 'அறத்தாறு' எங்ஙனம் நிலவுகிறதென்பது ஈண்டைக்குரிய ஆராய்ச்சியாகும்.

**ஊழ்**

'அறத்தாறு' என்பதற்கு அறத்தின் பயன் என்று பொருள் கொண்டு, ஊழைக் கருத்திருத்திப் பல்லக்கைத் தாங்குவோர் தீவினை செய்தோ ரென்றும், பல்லக்கில் ஏறிச் செல்வோர் நல்வினை செய்தோ ரென்றும் விளக்க உரை கூறுவோருளர். 'அறத்தின் பயன் இஃது என்று சொல்ல வேண்டுவதில்லை. ஏன்? அது பல்லக்கைச் சுமப்பவரிடத்தும், பல்லக்கில் ஏறிச் செல்வோரிடத்தும் வெளிப்படையாக விளங்குவது' என்று அவர் சொல்வர்.

ஊழை உளங்கொண்டு பொருள் கூறுவதில் உயர்வு தாழ்வு தோற்றத்துக்கு இடம் நேரும். அது போராட்டத்தை எழுப்பு வதாகும்.

ஆசிரியர் ஊழில் உறுதி யில்லாதவரல்லர். அவர்க்கு அதன்கண் உறுதியுண்டு. ஊழுக்கெனத் தனி அதிகாரம் ஒன்று அவரால் அருளப்பட்டுளது. ஊழ் இப்பாட்டில் இடம் பெற வில்லை என்பது எனது கருத்து. விளக்கம் 'ஊழ்' அதிகாரத்தில் செய்யப்படும்.

ஊழிற் கருத்திருத்தாது, 'அறத்தாறு' என்பதற்கு அறநெறி என்றே நேர்பொருள் கொண்டு, அறநெறி இருசாராரிடத்தும் பொதுமையாக விளங்குவது என்று விளக்க உரை பகர்வது ஏற்புடைத்தாகும்.

**பொதுமை**

தொழின் முறைகள் ஒழுங்காக நடைபெற்றாலன்றி உலகில் அமைதி நிலவாது. அத்தொழின் முறைகளை யொட்டிப் பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பிப்பது அமைதி காப்பதாகாது. தொழின்முறை எதுவாயினும் ஆக. தொழில் புரிவோரிடை உயர்வுமில்லை; தாழ்வுமில்லை. எத்தொழின் முறையிலும் அறநெறி பொதுவாக நிலவிக் கொண்டிருக்கும். பொதுவில் நிலவும் அறநெறியில் நடைபெறும் தொழின் முறைகளில் உயர்வு ஏது? தாழ்வு ஏது?

பல்லக்கைத் தாங்கிச் செல்வோரும் மனிதரே. அதில் ஏறிச் செல்வோரும் மனிதரே. இருவரும் ஒரு வழியில் பிறந்தவரே யாவர். இருவரும் தொழின் முறையில் ஈடுபட்டவரே யாவர். அறநெறி தொழிலிடைப் பொதுவாயிலங்குவது. அறநெறி, பல்லக்கைத் தாங்கலில் சுருங்கியும், அதில் செல்கையில் பெருகியும் நிற்பதோ? இல்லை. பல்லக்கைச் சுமந்து செல் வோரும் அறநெறி நின்றால் அறவோராகலாம். பல்லக்கில் ஊர்ந்து செல்வோரும் அறநெறி நின்றால் அறவோராகலாம். அறவோராகும் வாய்ப்பு இருவர்க்கும் உண்டு. ஒருவர்க்கு மட்டும் அவ்வாய்ப்பில்லை. 'அறத்தாறு' ஒரு சாரார் பக்கஞ் சாயுந் தன்மையுடையதன்று. ஆகவே, 'அறத்தா றிதுவென வேண்டா' என்றார். என்னை? அது, 'சிவிகை பொறுத்தானோடு ஊர்ந் தானிடை' வெளிப்படையாக விளங்கலான் என்க. 'அறநெறி எத் தன்மையதென்று ஆராய வேண்டுவதில்லை. அந்நெறி வழாத நடைவேண்டும்' என்பது கருத்து (10)

***திருக்குறள் பாயிர மூலமும்***
***திரு.வி.க. இயற்றிய விரிவுரையும்***
***முற்றுப் பெற்றன.***

# பாட்டு முதற் குறிப்பு


| | | | |
|---|---|---|---|
| அகரமுதல | 21 | சிறப்பொடு | 166 |
| அந்தணரென் | 236 | சுவையொறி | 190 |
| அழுக்காறவா | 256 | செயற்கரிய | 229 |
| அறத்தாறிது | 284 | செயற்பால | 261 |
| அறத்தான்வரு | 278 | தனக்குவமை | 92 |
| அறத்தினூஉங் | 247 | தானந்தவம் | 162 |
| அறவாழி | 103 | துப்பார்க்கு | 133 |
| அன்றறிவாம் | 268 | துறந்தார் | 179 |
| இருமைவகை | 184 | நிறைமொழி | 221 |
| இருள்சேர் | 36 | நீரின்றமையா | 158 |
| உரனென்னு | 200 | நெடுங்கடல் | 153 |
| ஏரின் | 148 | பிறவிப்பெருங் | 112 |
| ஐந்தவித்தான் | 207 | பொறிவாயில் | 46 |
| ஒல்லும்வகை | 265 | மலர்மிசை | 57 |
| ஒழுக்கத்து | 174 | மனத்துக்கண் | 252 |
| கற்றதனா | 70 | வானின்று | 127 |
| குணமென்னும் | 213 | விசும்பல் | 144 |
| கெடுப்பதூஉம் | 171 | விண்ணின்று | 138 |
| கோளில் | 117 | வீழ்நாள் | 273 |
| சிறப்பீனும் | 243 | வேண்டுதல் | 82 |


❖❖❖❖